# பிரிவு - 1

## கூறு: 1 – வெட்சித்திணை:

**நோக்கம்: வெட்சித்திணையின் இலக்கணத்தையும் அவற்றின் வகைகளையும் கற்று அறிதல்**



தமிழர் வாழ்வியல் அகம், புறம் என்னும் இருபெரும் பிரிவுகளைத் தன்னுள்- கொண்டமைந்ததாகும்.அவற்றுள் ஒத்த தலைவன் தலைவரிடையே ஏற்படும் உள்ளத்தின் அன்பாய், பிறருக்கு இத்தன்மையது என கூற இயலாததாய் தலைமக்கள் தமக்குள்ளே உணர்ந்து இன்புறும் தன்மை உடையதாய் அமையும் வாழ்க்கை அகம் எனப்பட்டது. இத்தகைய அகத்திற்கு புறனாய் அமைவதும் பிறருக்கு இத்தன்மைத்து எனக் கூறி இன்புறும் தன்மை உடையதாய் அமைவதும் ஆகிய வாழ்வியல் முறைமை புறப்பொருள் எனப்படும். இத்தகைய புறப்பொருளினைத் தொல்காப்பியம் ஏழுதிணைகள் கொண்டது என எடுத்துரைக்கும். தொல்காப்பியத்தை அடியொற்றித் தோன்றிய புறப்பொருள் வெண்பாமாலை என்னும் இந்நூல் புறப்பொருளினை பன்னிரண்டு என விரித்துரைக்கின்றது.

## 1. கடவுள் வாழ்த்து:

புலவர்கள் தாம் எடுத்துக் கொண்ட செயல் இனிது நிறைவுறுவதற்கு வேண்டி இறைவனை வாழ்த்தித் தொடங்குதல் என்பது தமிழர்தம் மரபாம். அம்மரபினை அடியொற்றி புறப்பொருள் வெண்பாமாலையின் ஆசிரியரான ஐயனாரிதனார் ஆனைமுகன், சிவபெருமான், கலைமகள் ஆகிய மூவருக்கும் தனித்தனியே இறைவாழ்த்துப் பாடியுள்ளார்.

## 1.1 ஆனைமுகன் வாழ்த்து:

நடையூறு சொன்மடந்தை நல்குவது நம்மேல்
இடையூறு நீங்குவது மெல்லாம் -புடையூறும்
சேனைமுகத் தாளிரியச் சீறுமுகத் தூறுமதத்
தானைமுகத் தானை நினைத் தால்.

போர்க்களத்தில் இடைவிடாமல் எதிர்த்து வருவது மாற்றாரின் படைகள் ஆகும். அவற்றை எதிர்த்துப் போர் செய்து அஞ்சி ஓடச் செய்யும் ஆற்றல் பெற்றவர் ஆனைமுகன்.இத்தகைய பெருமான் பெருக்கெடுத்து வரும் மதநீரினை உடையவன்.அவனுடைய திருவடிகளை மனத்துள் கொண்டு துதித்தல் வேண்டும்.அவ்வாறு செய்வோமானால் அவ்இறைவன்

கலைமகள் வழியே கவிபாடும் ஆற்றலைத் தந்தருள்வான்.மேலும் இடையூறுகள் அனைத்தையும் நம்மைவிட்டு நீங்கும் படிச் செய்வான்.



## 1.2 சிவபெருமான் வணக்கம்:



கண்ணவனைக் காண்கவிரு காதவனைக் கேட்கவாய்ப்
பண்ணவனைப் பாட பதஞ்சூழ்க- எண்ணிறைந்த
நெய்யொத்து நின்றானை நீலமிடற்றானையென்
கையொத்து நேர் கூப்புக.

எள்ளினுள் எண்ணெய் எல்லா இடத்தும் நீக்கமற நிறைந்து இருப்பதுபோல் அனைத்துப் பொருள்களிலும் கலந்து நிற்பவன் சிவபெருமான்.இவ் இறைவன் நஞ்சுண்டதால் கரிய மிடற்றினை உடையவன்.என்னுடைய கண்கள் அத்தகைய இறைவனின் தோற்றப் பொலிவினைக் காண்பதற்காகவே உள்ளன. என்னுடைய காதுகள் அவ்விறைவனின் திருப்புகழைக் கேட்பதற்காகவே உள்ளன.என் வாயினின்று தோன்றும் சொற்கள் அவனுடைய புகழைப் போற்றுவதற்காகவே உள்ளன.என் கைகள் குவிந்து மனத்தோடு அவ் இறைவனை வணங்குவதற்காகவே செயல்படுகின்றன.

## 1.3 கலைமகள் வணக்கம்:

தவளத் தாமரைத் தாதர் கோயில்
அவளைப் போற்றுதும் அருந்தமிழ் குறித்தே

மகரந்தம் நிறைந்து விளங்கும் சிறப்பினைத் தன்னுள் கொண்டு அமைந்தது வெண்தாமரை மலர். அதனைத் தான் இனிதுறையும் கோயிலாகக் கொண்டிருப்பவள் கலைமகள்.அவளை, இப் புறப்பொருள் வெண்பாமாலை நிறைவுறும் பொருட்டு வாழ்த்தி வணங்குவோம்.

## 1.4 சிறப்புப் பாயிரம்:

மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை இருந்த சீர்சால் முனிவரன்
தன்பால் தண்டமிழ் தாவின்று உணர்ந்த
துன்னரும் சீர்த்தித் தொல்காப் பியன்முதல்
பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த
பன்னிரு படலமும் பழிப்பின்று உணர்ந்தோன்
ஓங்கிய சிறப்பின் உலகமுழுது ஆண்ட
வாங்குவில் தடக்கை வானவர் மருமான்
ஐய னாரிதன் அகலிடத் தவர்க்கு
மையறு புறப்பொருள் வழாலின்று விளங்க

வெண்பா மாலை எனப்பெயர் நிறீஇப்

பண்புற மொழிந்தனன் பான்மையிற் தெரிந்தே.

என்பது பாயிரம்.

**விளக்கம்**:தேவர்கள் வேண்டிக்கொள்ளப் பொதியின் மலையிலிருந்த அழகமைந்த இருடி அகத்தியன் இடத்துக் குளிர்ந்த தமிழை வருத்தமின்றி அறிந்த கிடைத்தற்கரிய மிகுந்த புகழினையுடைய தொல்காப்பியன் எனப்படும் ஆசிரியன் முதலான பன்னிருவரான பேரும் பகுதியில் மிகச் சொன்ன பன்னிருபடலமென்னும் நூலினைக் குற்றமின்றியே அறிந்தோன், உயர்ந்த மேம்பாட்டினையுடைய பூவுலகை முழுதும் ஆண்ட வளைந்த வில்லைப் பெருத்த கையிலேயுடைய சேரமான்கள் வழியினுள்ளான். ஐயனாரிதர் என்னும் பெயரினையுடையவன், பரந்த நிலத்திலுள்ளவர்க்குக் குற்றமற்ற புறப்பொருளை வழுவுதலின்றியே தெளிய வெண்பாமாலையென்னும் பெயரினை நிறுத்தி முறைமையாலே ஆராய்ந்து நன்மை மிகச் சொன்னான் என்பதாம்.

**ஆக்கியோன் பெயர்**: ஐயனாரிதனார்

**வழி**: பன்னிரு படலம்

**எல்லை**: வடவேங்கடம் தென்குமரி அகத்தது

**நூற்பெயர்**: புறப்பொருள் வெண்பாமாலை

**யாப்பு:** தொகைவிரி

**நுதலிய பொருள்**: புறப்பொருள்

**கேட்போர்**: கற்றறிந்தோர்

**பயன்:** விளங்க உணர்த்துதல்

**காலம்**: ஐயனாரிதனாரின் காலம்

**களம்**: அவைக்களம்

**காரணம்**: புறப்பொருளுக்கு ஏற்புடைய இலக்கணத்தை அறிந்து குற்றமற்ற இலக்கணத்தை அறிதல்.

## 1.5 வெட்சிப் படலம் - துறைகள்:

புறத்திணைகளுள் முதலாவதாய் அமையும் திணை வெட்சித்திணை ஆகும்.வெட்சிப்பூவினைச் சூடிய மறவர்கள் மன்னனின் ஆணையினை ஏற்றோ அல்லது அவனின் உளக்குறிப்பினை அறிந்தோ பகைவர் தேயத்துச் சென்று அவர்களின் ஆநிரைகளைக் கவர்ந்து வருதலால் இத்திணை வெட்சித்திணை எனலாயிற்று.

**வெட்சிப் படலத்தின் - துறைகள்:**



வெட்சி வெட்சி அரவம் விரிச்சி செலவு
வேயே புறத்திறை ஊர்கொலை ஆகோள்
பூசல் மாற்றே புகழ்சுரத் துய்த்தல்
தலைத்தோற் றம்மே தந்துநிறை பாதீடு
உண்டாட்டு உயர்கொடை புலனறி சிறப்பே
பிள்ளை வழக்கே பெருந்துடி நிலையே
கொற்றவை நிலையே வெறியாட்டு உளப்பட
எட்இரண்டு ஏனை நான்கொடு தொகைஇ
வெட்சியும் வெட்சித் துறையும் ஆகும்.

என்னும் இச்சூத்திரம், வெட்சித்திணையும் உணர்த்திற்று.

வெட்சிச்திணை,வெட்சியரவம், விரிச்சி, செலவு, வேய், புறத்திறை, ஊர்கொலை, ஆகோள், பூசன்மாற்று, சுரத்துய்த்தல், தலைத்தோற்றம், தந்துநிறை, பாதீடு, உண்டாட்டு, கொடை, புலனறிசிறப்பு,பிள்ளைவழக்கு, துடிநிலை, கொற்றவைநிலை, வெறியாட்டு என இவை இருபதும் வெட்சித்திணையின் துறைகளாகும்.

**வெட்சி:**

வெட்சித்திணை என்பது இருவகைத் தன்மையுடையதாய் வரும். அவை முறையே மன்னுறு தொழிலும் தன்னுறு தொழில் என்பதாகும். மன்னுறு தொழில் என்பது மன்னன் ஆணையிட மறவர் சென்று பகைவரின் ஆநிரைகளைக் கவர்ந்து வருதல் ஆகும். தன்னுறு தொழில் என்பது அரசனின் ஆணையின்றி மறவர்கள் தாமே சென்று பகைவரின் ஆநிரைகளைக் கவர்ந்து வருதல் ஆகும். இவ் இருவகையான் வெட்சித்திணை நடைபெற்றியலும்.

வென்றி வேந்தன் பணிப்பவும் பணிப்பின்றியும்

சென்று இகல்முனை ஆதந் தன்று.

வெற்றியினையுடைய அரசன் ஏவதாலும் அன்றி அவன் ஏவலின்றியும் போய் மாறுபாட்டினையுடைய வேற்றுப்புலத்துப் ஆநிரையைக் கவர்ந்து வருவது வெட்சித்திணையாகும்.

**மன்னுறுதொழில்:**

மன்னன் ஆணையிட மறவர் சென்று பகைவரின் ஆநிரைகளைக் கவர்ந்து வருதல்

மண்டு மெரியுண் மரந்தடிந் திட்டற்றாக்

கொண்ட கொடுஞ்சிலையன் கோறெரியக்-கண்டே

அடையார் முனையலற வையிலைவேற் காளை

குறிப்பு

விடையாயங் கொள்கென்றான் வேந்து.

மிகுந்து எரிகின்ற நெருப்பினுள் மரத்தை வெட்டியிடும் ஆற்றல் மறவன் தன் கையில் கொடிய வில்லையுடையவன்.அவன் பகைவரின் ஆநிரைகளைக் கவரக் கருதிப் போரிற்கான அம்பினை ஆராய்ந்தான். அதனைக் கண்ட அரசன் பகைவர் கலங்க வியக்கத்தக்க சிறந்த வேலினையுடைய வீரனே!, ஆநிரையைக்கொள்க! என்று அரசன் கூறினான் என்பதால் இது மன்னுறு தொழிலுக்குச் சான்றாம்.

**தன்னுறு தொழில்:**

தன்னுறு தொழில் என்பது அரசனின் ஆணையின்றி மறவர்கள் தாமே சென்று பகைவரின் ஆநிரைகளைக் கவர்ந்து வருதல் ஆகும்.

அறாஅ நிலைச்சாடி யாடுறு தேறல்
மறாஅன் மழைத்தடங் கண்ணி-பொறாஅன்
கடுங்கண் மறவன் கழல்புனைந்தான் காலை
நடுங்கடைய நேரார் நிரை.

குளிர்ந்த பெரிய கண்ணினையுடை பெண்ணே! கள் அற்றுப் போகாத தாழியில் இருந்து இம்மறவன் கள்ளினைக் கடனாகக் கேட்கிறான். அதனை வழங்குவாயாக!. கடன் பொறாத இவ் வீரன் தன் காலிலே வீரக்கழலைக் கட்டினான்.எனவே வெற்றிகொண்ட ஆநிரைகளோடு நாளை காலையிலே நின் நெடிய வாசலிடத்தவனாய் வந்து நிற்பான் என்றமையால் இது தன்னறு தொழிலுக்குச் சான்றாம்.

## 1.5.1 வெட்சியரவம்:

கலவார் முனைமேற்
செலவு அமர்ந் தன்று .

பகைவர் ஆநிரையைக் கவரக் கருதும் மறவர் பல்வகை கருவிகளை முழங்கிச் செல்வதால் ஏற்படும் ஆராவரத்தை விளக்குதலால் இத்துறை வெட்சியரவம் எனப்பட்டது,

நெடிபடு கானத்து நீள்வேன் மறவர்
அடிபடுத் தாரதர் செல்வான் - துடிபடுத்து
வெட்சி மலைய விரவார் மணிநிரைக்
கட்சியுட் காரி கலுழ்ம்.

சில்வீடு என்னும் வண்டுகள் ஒலிக்கும் காட்டிடத்து நீண்ட வேலினையுடைய மறவர் காலிலே செருப்பைத் அணிந்து கொண்டு கடத்தற்கரிய வழியிடத்துச் செல்ல விரும்பினர்.மேலும் துடியைக்கொட்டச் செய்து வெட்சிப்பூவைச் சூடினர். பகைவருடைய மணிகள் பூட்டப்பெற்ற பசுவினை உடைய காட்டிடத்துக் காரியென்னும் பறவை துர்நிமித்தமாக அழுதது.அதன் செயலானது பகைவர்களுக்கு கேடு நிகழப்போவதை அறிவித்து நின்றது.

குறிப்பு

## 1.5.2 விரிச்சி:

வேண்டிய பொருளின் விளைவுநன் கறிதற்கு
ஈண்டு இருள் மாலைச் சொல் ஓர்த் தன்று .

விரும்பியபொருளைப் பெறுதற்கு வெட்சி மறவர் இருண்ட மாலையிடத்து நற்சொற் கேட்டது இத்துறையாகும்.

எழுவணி சீறூ ரிருண்மாலை முன்றிற்
குழுவினங் கைகூப்பி நிற்பத் - தொழுவிற்
குடக்கணீ கொண்டுவா வென்றாள் குனிவிற்
றடக்கையாய் வென்றி தரும் .

கணைய மரங்கள் சூழ்ந்த சிறப்புடைய ஊரில் இருளையுடைய மாலைப்பொழுதில் கோயில் முற்றத்திலே திரண்டிருந்துது நம் மறவர் கூட்டம். ஆக் கூட்டம் கைகுவித்துநிற்கக் கள் சாடியிருக்கும் ஏணியிற் குடத்துக் கள்ளை நீ எடுத்துக்கொண்டு வாவென்றாள் என்றாள் ஒருத்தி. இது நற்சொல் ஆதலால் வில்லைப் பெரிய கையிலே உடைய வீரனே! உறுதியாக நமக்கு வெற்றியைத் தரும் என்றமையால் இது விரிச்சி ஆயிற்று.

## 1.5.3 செலவு:

வில்லோர் உழவர் வேற்றுப் புலம் உன்னிக்
கல்லோர் கானம் கடந்துசென் றன்று .

வில்லாகிய ஏரினையுடைய உழவர்பகைவரின் ஆநிரைகளைக் கவர்தல் பொருட்டு கல் பொருந்தின காட்டைக் கடந்து போனது இத்துறையாகும்.

கூற்றினத் தன்னார் கொடுவி லிடனேந்திப்
பாற்றினம் பின்படர முன்படர்ந் - தேற்றினம்
நின்ற நிலைகருதி யேகினார் நீள்கழைய
குன்றங் கொடுவில் லவர் .

கூற்றினை ஒத்த வெட்சி மறவர்கள் குழுவாய் இணைந்து வளைந்த வில்லை இடப்பக்கத்திற்கொண்டு கழுகும் பருந்தும் தன்னைப் பின்னே தொடர்ந்துவரத் சென்றனர். வலியானே நெருங்கிப்போனார், வளைந்த வில்லாளர்கள் ஆநிரைநின்ற உயர்ந்த மூங்கிலையுடைய குன்றத்தினை நினைந்து சென்றனர்.

## 1.5.4 வேய்:

பற்றார் தம்முனைப் படுமணி ஆயத்து
ஒற்று ஆராய்ந்த வகை உரைத் தன்று

குறிப்பு

பகைவர் அறியாவண்ணம் அங்குள்ள ஆநிரை பற்றிய செய்திகளை ஒற்றர்கள் அறிந்து வந்து சொல்வது.

நிலையு நிரையு நிரைப்புறத்து நின்ற
சிலையுஞ் செருமுனையுள் வைகி - இலைபுனைந்த
கள்ளவிழ் கண்ணிக் கழல்வெய்யோய் சென்றறிந்து
நள்ளிருட்கண் வந்தார் நமர் .

பச்சிலையுடனே விரவித்தொடுத்த தேன்பொழியும் மாலையினையும் வீரக்கழலினையும் உடைய போரை விரும்பும் வீரனே! ஆநின்ற இடம், ஆவினுடைய அளவு, ஆவினுடைய புறங்காத்துநின்ற விற்படையினர் அளவு, வேற்றுப்புறத்திலேபோய் ஆராய்ந்து நடுவிருளிடத்து நம் சுற்றத்தார் வந்தார் என்றமையால் இது வேய் ஆயிற்று.

## 1.5.5 புறத்திறை:

நோக்கரும் குறும்பன் நூழையும் வாயிலும்
போக்கற வளைஇப் புறத்இறுத் தன்று.

பகைவர்கள் தங்கள் கண்ணால் பார்த்தற்கரிய சிறிய வழியினையும் பெருவாயிலையும் உடையது காவற்காடு.அதன் வழியாக உள்ளிருப்போர் வெளியில் தப்பிச் செல்லாதவாறு; வெட்சி மறவர் சுற்றி வளைத்து மதிற்புறத்தே தங்கினர்என்பது புறத்திறை என்பதாகும்.

உய்ந்தொழிவா ரீங்கில்லை யூழிக்கட் டீயேபோல்
முந்தமரு ளேற்றார் முரண்முருங்கத் - தந்தமரின்
ஒற்றினா னொற்றி யுரவோர் குறும்பினைச்
சுற்றினார் போகாமற் சூழ்ந்து .

வெட்சி மறவர் தம் சுற்றத்தராகிய ஒற்றராலே ஆராய்ந்து உணர்ந்து கொண்டனர். எனவே மிகுந்தவலியினை உடையோர் அரணினை வளைந்துகொண்டார். இச்செயல் ஊழிக்காலத்துத் தீயை ஒத்திருந்தது.எனவே இவ் இடத்து பிழைத்திருப்பார் ஒருவருமில்லை.

## 1.5.6 ஊர்கொலை:

விரைபரி கடவி வில்லுடை மறவர்
குரைஅழல் நடப்பக் குறும்பு எறிந் தன்று .

வில்லேந்திய வெட்சி மறவர் தம் குதிரையை விரைந்து செலுத்தி தீயைப் பகைவர் ஊரின்கண் தவழும்படி செய்து பகைவர் அரணினை அழிப்பர். இது ஊர்கொலை எனப்படும்.

இகலே துணையா வெரிதவழச் சீறிப்

புகலே யரிதென்னார் புக்குப் - பகலே

தொலைவிலார் வீழத் தொடுகழ லார்ப்பக்

கொலைவிலார் கொண்டார் குறும்பு .

குறிப்பு

வெட்சி மறவர் பகைவருடன் கொண்ட மாறுபாடே துணையாகக் கொண்டவர்கள். அவர்கள் பகைவர் அரண் இரவுப்பொழுதில் புகுதற்கரிய இடம் என்றும் எண்ணாது புகுந்தனர்.பகைவர் ஊரின்கண் தீயை வைத்தனர்.அப்பகைவர் இடிந்து வீழும்படிக் கொன்றனர்.தம் காலில் கட்டியிருந்த வீரக்கழல் ஆரவாரஞ்செய்யக் கொலைத் தொழிலாற் சிறந்த வில்லினையுடையார் அரணினைக் கைக்கொண்டார் என்றமையால் இது ஊர்கொலை ஆயிற்று.

## 1.5.7 ஆகோள்:

வென்று ஆர்த்து விறன்மறவர்

கன்றோடும் ஆதழீஇயன்று .

வெட்சி மறவர் பகைவர் முனையினைக்கடந்து ஆரவாரம் செய்து கன்றுடனே ஆநிரையைக் கைக்கொண்டது இத்துறையாகும்.

கொடுவரி கூடிக் குழூஉக்கொண் டனைத்தால்

நெடுவரை நீள்வேய் நரலும் - நடுவூர்க்

கணநிரை கைக்கொண்டு கையகலார் நின்ற

நிணநிரை வேலார் நிலை .

உயர்ந்த மலையிடத்து இருந்த நீண்டமூங்கில் ஒலிக்கும் ஊரிண்கண் ஆநிரையைக் கைப்பற்றி நின்றனர் வெட்சி மறவர். அவர்கள் வேலிடத்து பகைவரின் கொழுப்பு நிறைந்த தசை கோத்துத் தொங்கிக் கொண்டிருந்தது. இக்காட்சியானது புலிகள் தம்மில் இணையொத்துத் திரட்சிகொண்ட தன்மைத்தாய் இருந்தது.

## 1.5.8 பூசன்மாற்று:

கணம்பிறங்கக் கைக்கொண்டார்

பிணம்பிறங்கப் பெயர்த்திட்டன்று .

வெட்சி மறவரை எதரிர்த்துப் போர் செய்ய வந்தோரை முற்றிலும் அழித்து இனிப் போர் இல்லை என்னும் நிலையினை உருவாக்குவது பூசல்மாற்று எனப்படும். வெட்சி மறவர் பகைவரின் ஆநிரைகளைக்

கைக்கொண்டார். ஆதனைப் பொறுக்க இயலாது சூழ்ந்து நின்ற தடுக்க முயன்றனர் பகைவர் என்பது இத்துறையாகும்.



குறிப்பு

சூழ்ந்த நிரைபெயரச் சுற்றித் தலைக்கொண்டார்
வீழ்ந்தனர் வீழ்ந்தார் விடக்குணியத் - தாழ்ந்த
குலவுக் கொடுஞ்சிலைக்கைக் கூற்றனையா ரெய்த
புலவுக் கணைவழிபோய்ப் புள்.

வெட்சியாரால் வளைத்துகொள்ளப்பட்ட ஆநிரைகளை மீட்கச் சூழ்ந்து கொண்ட போர்க்களத்து கரந்தையார் மடிந்து வீழ்ந்தார்; வீழ்ந்தவருடைய தசையைத் தின்ன வேண்டிப் வளைந்த கொடியவில்லாற் சிறந்த கையினையுடைய கூற்றத்தையொப்பார் எய்த புலால் நாறும் அம்பு போன வழியே போய்ப் பறவைகள் இறந்து வீழ்ந்த கரந்தையாரின் உடல்மேல் சென்ற படிந்தன என்றமையால் இத்துறை பூசல்மாற்று ஆயிற்று.

## 1.5.9 சுரத்துய்த்தல்:

அருஞ்சுரத்து அகன்கானத்தும்
வருந்தாமல் நிரையுய்த்தன்று .

அரிய வழியிடத்தும் பரந்த காட்டிலும் ஆநிரைகளுக்கு துன்பம் நேரா வண்ணம் செலுத்துதல் சுரத்துய்த்தல் எனப்படும்.வெட்சி மறவர் கடந்து செல்வதற்கு அரிய தொலைவை உடையது காடு. ஆவற்றிடையே வெட்சி மறவர் தாம் கைப்பற்றிய ஆநிரைகளை துன்பம் உறா வண்ணம் அழைத்துச் சென்றனர் என்பது இதன் பொருளாம்.

புன்மேய்ந் தசைஇப் புணர்ந்துடன் செல்கென்னும்
வின்மே லசைஇயகை வெல்கழலான் - தன்மேற்
கடுவரை நீரிற் கடுத்துவரக் கண்டும்
நெடுவரை நீழ னிரை.

வில்லின்மேல் வைத்த கையினையும் வெல்லும் வீரக் கழலினையுடையவர்களாய் வெட்சி மறவர் நடந்து சென்றனர். அப்போது கரந்தை மறவர்கள் மலையினின்று செந்தூக்காய் வீழும் அருவி போன்ற வெட்சி மறவர் மேல் வீழ்ந்தனர். ஆனால் அதனைக் கண்'டு அஞ்சாத வெட்சி வீரன் தம் உடன் வந்த வீரர்களைப் பார்த்து ஆநிரைகளை மரநிழலில் புல்மேய வையுங்கள்.நீர் அருந்தச் செய்யுங்கள்.பின் ஒருங்கு செல்லும் படி செலுத்துங்கள் என்று கூறியமையால் இது சுரத்துய்த்தல் ஆயிற்று.

## 1.5.10 தலைத்தோற்றம்:

உரவெய்யோன் இனந்தழீஇ
வரவு உணர்ந்து கிளைமகிழ்ந்தன்று.

வலிமையினை உடைய வெட்சிப் படைத்தலைவன் அவன் தலைமையில் வெட்சி மறவர்கள் ஆநிரைகளைக் கைப்பற்றிக்கொண்டு வருதலைக் கண்ட அவனது சுற்றத்தினர் மகிழ்வது இத்துறையாகும்.

குறிப்பு

மொய்யண லானிரை முன்செல்லப் பின்செல்லும்
மையணற் காளை மகிழ்துடி - கையணல்
வைத்த வெயிற்றியர் வாட்க ணிடனாட
உய்த்தன் றுவகை யொருங்கு.

ஆநிரை முன்னேபோகப் பின்னே வரும் கறுத்த முடியினை உடைய காளை மகிழ்ந்து கொட்டுந்துடி இசைக்கச் சென்றான். வெட்சியாருடைய நிலைமையை அறியாது வெறுப்பினாற் கையைக் கன்னத்தில் வைத்த வேட்டு விச்சியர் வாள் போன்ற கண் இடந்துடிப்பச் மகிழ்ந்தனர் என்றமையால் இது தலைத்தோற்றம் ஆயிற்று.

## 1.5.11 தந்துநிறை:

வார்வலந்த துடிவிம்ம
ஊர்புகல நிரைஉய்த்தன்று.

வாரினால் கட்டப்பெற்ற துடி முழங்க ஊரினுள்ளார் விரும்ப ஆனிரையை மன்றத்திடத்தல் நிறுத்தல் இத்துறையாகும்.

தண்டா விருப்பின டன்னை தலைமலைந்த
வண்டார் கமழ்கண்ணி வாழ்கென்று - கண்டாள்
அணிநிரை வாண்முறுவ லம்மா வெயிற்றி
மணிநிரை மல்கிய மன்று.

தணியாத மகிழ்ச்சியை உடைய மறத்தி தன்னுடைய தலைவன் தலையிலே சூடின வண்டுநிறைந்த நறுநாற்றம் வீசும் மாலை வாழ்வதாக! என்று வாழ்த்தினாள்.பின்னர் அழகுடைத்ததாய் ஒழுங்குபட்டு ஒளிவிடும் பல்லினையும் அழகிய பெருமையினையும் உடைய மறத்தி, மணியணிந்த ஆநிரைகள் நின்ற மன்றத்தை எயிற்றி கண்டாள் என்றமையால் இது தந்துநிறை ஆயிற்று.

## 1.5.12 பாதீடு:

கவர்கணைச் சுற்றம் கவர்ந்த கணநிரை
அவர்அவர் வினைவயின் அறிந்துஈந் தன்று

வெட்சி மறவர் கவர்ந்து வந்த ஆநிரைகளை அவரவர் தகுதிக்கேற்பப் பிரித்து வழங்குதல் பாதீடு எனப்பெறும்.

ஒள்வாள் மலைந்தார்க்கும் ஒற்று ஆராய்ந்து
உரைத்தார்க்கும்
புள் வாய்ப்பச் சொன்ன புலவர்க்கும் - விள்வாரை
மாறு இட்டார் வென்றி மறவர்தம் சீறூரின்
கூறுஇட்டார் கொண்ட நிரை

ஆநிரைகளைக் கவர்ந்து கொண்டு வந்த வெட்சி மறவர் போரில் ஒளிரும் வாள் வீசிப் போர்செய்தார்க்கும் பகைவரிடத்துச் சென்று ஒற்று ஆராய்ந்து உரைத்தவர்க்கும் நல்நிமித்தம் பார்த்துச் சொல்லியோர்க்கும் புலவர் போன்றோர்க்கும் பகிர்ந்து கொடுத்தார் என்றமையால் இது பாதீடு எனப்பெற்றது.

## 1.5.13 உண்டாட்டு:

தொட்டு இமிழுங் கழன்மறவர்
மட்டுஉண்டு மகிழ்தூங்கின்று.

வீரக்கழலினையுடைய வெட்சி மறவர் மகிழ்வாலும் பெருமையாலும் மதுவையுண்டு மனங்களித்து ஆடியது.

இளிகொண்ட தீஞ்சொ லிளமா வெயிற்றிதந்துநிறை
ஆயிற்று.
களிகொண்ட நோக்கங் கவற்றத் - தெளிகொண்ட
வெங்கண் மலிய விளிவதுகொல் வேற்றார்மேற்
செங்கண் மறவர் சினம்.

பகைவர் மேல் சினம் கொண்டமையால் சிவந்த கண்களை உடையவர் வெட்சி மறவர். அவர்களின் சினமானது இளியென்னும் இசையினைக்கொண்ட இனிய சொல்லினையுடைய இளைய வேட்டுவிச்சியின் காதல் கொண்ட பார்வை வருத்தியதாலும் கள்ளையுண்ட மகிழ்ச்சி மிகுந்ததாலும் குறைந்தது.

## 1.5.14 கொடை:

ஈண்டியநிரை ஒழிவின்றி
வேண்டியோர்க்கு விரும்பிவீசின்று.

வெட்சி மறவர் தமக்குப் பிரித்துக் கொடுத்த ஆநிரைகளைத் தம்மை வேண்டினவர்களுக்கு விருப்புற்றுக் கொடுப்பது.

அங்கட் கிணையன் றுடியன் விறலிபாண்



குறிப்பு

வெங்கட்கு வீசும் விலையாகும் - செங்கட்
செருச்சிலையா மன்னர் செருமுனையிற் சீறி
வரிச்சிலையாற் றந்த வளம்.

போர்க்கு ஆஞ்சாத மன்னர், போர்க்களத்து வெகுண்டு வில்லாலே கொண்ட ஆநிரையாகிய செல்வமானதுஅழகிய கண்ணாற் சிறந்த கிணை கொட்டுபவன். துடி கொட்டுபவன். விறலி, பாணன் ஆகியோர் கள்ளிற்குக் கொடுக்கும் விலையாயிற்று என்றமையால் இது கொடை ஆயிற்று.

## 1.5.15 புலனறி சிறப்பு:

வெம்முனைநிலை உணர்த்தியோர்க்குத்
தம்மினுமிகச் சிறப்பு ஈந்தன்று.

கரந்தையாரின் வேற்றுப்புலத்தினது நிலைமையை அறிந்து வந்து அறிவித்த ஒற்றர்க்குப் பிறரைக் காட்டிலும் பெருகச் சிறப்புக் கொடுத்தது

இறுமுறை யெண்ணா திரவும் பகலும்
செறுமுனையுட் சென்றறிந்து வந்தார் - பெறுமுறையின்
அட்டுக் கனலு மயில்வேலோ யொன்றிரண்
டிட்டுக் கொடுத்த லியல்பு.

தமக்கு இறப்பு வரும் என்று அஞ்சாது இரவிலும் பகலிலும் கொல்லும் பகைப்புலத்துப் போய்ஆராய்ந்துவந்தார் ஒற்றர். அவர்கட்கு பிறர்க்குக் கொடுப்பதினும் ஒன்றாயினும் இரண்டாயினும் ஆக்களை மிகுதிக் கொடுத்தல் முறையாகும்.

## 1.5.16 பிள்ளைவழக்கு:

பொய்யாது புள்மொழிந்தார்க்கு
வையாது வழுக்குஉரைத்தன்று.

காரிக்குருவியின் ஒலியைக் கொண்ட பொய்யாகாது நிமித்தம் கண்ட கூறுபவர் நிமித்திகர் எனப்படுவர். அவருக்கு மனம் நோகா வண்ணம் மிகுதியாகக் கொடுப்பர்.இம்முறையினைக் கூறுவது பிள்ளை வழக்கு எனப்படும்.

புல்லார் நிரைகருதி யாஞ்செல்லப் புண்ணலம்
பல்லா ரறியப் பகர்ந்தார்க்குச் - சொல்லாற்
கடஞ்சுட்ட வேண்டா கடுஞ்சுரையா னான்கு

குறிப்பு

குடஞ்சுட் டினத்தாற் கொடு.

பகைவரது ஆநிரையைக் கொள்ள நினைந்து நாம் போக நிமித்தநன்மையைப் பலருமுணரச் சொன்னவர் நிமித்திகர்.அவசருக்கு இவ்வளவுதான் கொடுக்கவேண்டும் என்று கருதுதல் வேண்டாம். ஒரு குடம் அளவு பால் கொடுக்கும் ஆநிரைகள் பல உண்டு.அவற்றுள் இனம்தோறும் நான்கு கொடு என்பதாம்.

## 1.5.17 துடிநிலை:

தொடுகழன் மறவர் தொல்குடி மரபில்
படுகண் இமிழ்துடிப் பண்புஉரைத் தன்று.

தொன்று தொட்டு மரபு மாறாமல் துடி கொட்டுபவன் குடிப்பழமையை சிறப்பித்துக் கூறுவது துடிநிலை எனப்படும்.பெரிய கண்ணினை உடையதாய் முழங்குகின்ற தன்மை கொண்டது துடி. அதனைக் கொட்டுபவன் பழங்குடிக்கண் துடியனிவன் என்பது இதன் பொருளாம்.

முந்தை முதல்வர் துடிய ரிவன்முதல்வர்
எந்தைக்குத் தந்தை யிவனெனக்கு - வந்த
குடியொடு கோடா மரபினோற் கின்னும்
வடியுறு தீந்தேறல் வாக்கு.

தொன்று தொட்டு வருகின்ற எமது குடியின் முன்னோர் முதலாயினார்க்குத் துடிகொட்டினார் இவன் முன்னோன் முதலாயினார்; என் தந்தைக்கு இவன் தந்தை துடிகொட்டினான்; இவன் எனக்குத் துடி கொட்டுவான்; வழிவந்த குடிமுறைமையோடு பிறழாத முறைமையினையுடையவனுக்கு இன்னமும் வடித்தலுற்ற மதுவினது தெளிவை அளிப்பாயாக! என்றமையால் இது துடிநிலை எனப்பட்டது.

## 1.5.18 கொற்றவைநிலை:

வெற்றிக்கு துணையாய் அமையும் கொற்றவையை வாழ்த்திப் பேசுவது கொற்றவை நிலை எனப்படும்.

ஒளியினீங்கா விறற்படையோள்
அளியின் நீங்கா அருள்உரைத்தன்று.

குறையாத ஒளியையும் சூலப்படையையும் உடையவள் கொற்றவை.அத் தெய்வத்தின் இரக்கத்தில் நீங்காது அவளது அருள். அத்தகைய

அருளினது சிறப்பினை எடுத்துக் கூறுவது கொற்றவை நிலை என்பதாகும்.

ஆளி மணிக்கொடிப் பைங்கிளிப் பாய்கலைக்
கூளி மலிபடைக் கொற்றவை - மீளி
அரண்முருங்க வாகோள் கருதி னடையார்
முரண்முருங்கத் தான்முந் துறும்.

குறிப்பு

சிங்கத்தாற் சிறந்த அழகிய கொடியினையும் பசுங்கிளியினையும் பாயுங்கலையினையும் பேய்மிக்க படையினையும் உடையவள் கொற்றவை. அவள் வெட்சித்தலைவன் பகைவர் மாறுபாடு கெடத் வெட்சியாருக்கு முன்னதமாகவே எழுந்தருளும் தன்மை கொண்டவள் ஆவாள்.

## 1.5.19 வெறியாட்டு:

வால்இழையோர் வினைமுடிய
வேலனொடு வெறிஆடின்று.

அழகிய ஆபரணத்தையுடையவர்கள் மறக்குடி மகளிர். இவர்கள் தன் தலைவன் நினைத்த தொழில் வெற்றிகரமாக முடிய முருகனுக்கு வழிபாடு செய்து வள்ளிக்கூத்தை ஆடுவர். இது வெறியாட்டு எனப்படும்.

காணிலரனுங் களிக்குங் கழன்மறவன்
பூணிலங்கு மென்முலைப் போதரிக்கண் - வாணுதல்
தான்முருகு மெய்ந்நிறீஇத் தாமம் புறந்திளைப்ப
வேன்முருகற் காடும் வெறி.

அணிகலன் விளங்கும் மெல்லிய மார்பு,பூப்போன்ற அரிபரந்த கண், ஒளி மிக்க நெற்றி ஆகியவைகளைக் கொண்டவள் மறத்தி. அவள் முருகக் கடவுளைத் தன் உடம்பிலே நிறுத்தி மாலை பக்கத்தே அசைய வேலினையுடைய முருகனுக்கு ஆடும் வள்ளிக்கூத்தை ஆடினாள். அதனைக் கண்டால் நடனப்பிரியனாகிய சிவபெருமானே மகிழ்வான் என்பதாம். வெறியாட்டு என்பது வள்ளிநாயகியின் வேடங்கொண்டு ஆடும் கூத்து ஆகும்.

**பயிற்சி வினாக்கள்**:

1. விரிச்சி என்பதனை விளக்குக.

வேண்டிய பொருளின் விளைவுநன் கறிதற்கு
ஈண்டு இருள் மாலைச் சொல் ஓர்த் தன்று .

விரும்பியபொருளைப் பெறுதற்கு வெட்சி மறவர் இருண்ட மாலையிடத்து நற்சொற் கேட்டது இத்துறையாகும்.

எழுவணி சீறூ ரிருண்மாலை முன்றிற்
குழுவினங் கைகூப்பி நிற்பத் - தொழுவிற்
குடக்கணீ கொண்டுவா வென்றாள் குனிவிற்
றடக்கையாய் வென்றி தரும் .

கணைய மரங்கள் சூழ்ந்த சிறப்புடைய ஊரில் இருளையுடைய மாலைப்பொழுதில் கோயில் முற்றத்திலே திரண்டிருந்துது நம் மறவர் கூட்டம். ஆக் கூட்டம் கைகுவித்துநிற்கக் கள் சாடியிருக்கும் ஏணியிற் குடத்துக் கள்ளை நீ எடுத்துக்கொண்டு வாவென்றாள் என்றாள் ஒருத்தி. இது நற்சொல் ஆதலால் வில்லைப் பெரிய கையிலே உடைய வீரனே! உறுதியாக நமக்கு வெற்றியைத் தரும் என்றமையால் இது விரிச்சி ஆயிற்று

**2.பாதீடு என்பதனை விளக்கி எழுதுக.**

கவர்கணைச் சுற்றம் கவர்ந்த கணநிரை
அவர்அவர் வினைவயின் அறிந்துஈந் தன்று

வெட்சி மறவர் கவர்ந்து வந்த ஆநிரைகளை அவரவர் தகுதிக்கேற்பப் பிரித்து வழங்குதல் பாதீடு எனப்பெறும்.

ஒள்வாள் மலைந்தார்க்கும் ஒற்று ஆராய்ந்து உரைத்தார்க்கும்
புள் வாய்ப்பச் சொன்ன புலவர்க்கும் - விள்வாரை
மாறு இட்டார் வென்றி மறவர்தம் சீறூரின்
கூறுஇட்டார் கொண்ட நிரை

ஆநிரைகளைக் கவர்ந்து கொண்டு வந்த வெட்சி மறவர் போரில் ஒளிரும் வாள் வீசிப் போர்செய்தார்க்கும் பகைவரிடத்துச் சென்று ஒற்று ஆராய்ந்து உரதைத்தவர்க்கும் நல்நிமித்தம் பார்த்துச் சொல்லியோர்க்கும் புலவர் போன்றோர்க்கும் பகிர்ந்து கொடுத்தார் என்றமையால் இது பாதீடு எனப்பெற்றது.

3.வெறியாட்டு விவரி

வால்இழையோர் வினைமுடிய
வேலனொடு வெறிஆடின்று.



குறிப்பு

குறிப்பு

அழகிய ஆபரணத்தையுடையவர்கள் மறக்குடி மகளிர். இவர்கள் தன் தலைவன் நினைத்த தொழில் வெற்றிகரமாக முடிய முருகனுக்கு வழிபாடு செய்து வள்ளிக்கூத்தை ஆடுவர். இது வெறியாட்டு எனப்படும்.

காணிலரனுங் களிக்குங் கழன்மறவன்
பூணிலங்கு மென்முலைப் போதரிக்கண் - வாணுதல்
தான்முருகு மெய்ந்நிறீஇத் தாமம் புறந்திளைப்ப
வேன்முருகற் காடும் வெறி.

அணிகலன் விளங்கும் மெல்லிய மார்பு,பூப்போன்ற அரிபரந்த கண், ஒளி மிக்க நெற்றி ஆகியவைகளைக் கொண்டவள் மறத்தி. அவள் முருகக் கடவுளைத் தன் உடம்பிலே நிறுத்தி மாலை பக்கத்தே அசைய வேலினையுடைய முருகனுக்கு ஆடும் வள்ளிக்கூத்தை ஆடினாள்.அதனைக் கண்டால் நடனப்பிரியனாகிய சிவபெருமானே மகிழ்வான் என்பதாம்.

வெறியாட்டு என்பது வள்ளிநாயகியின் வேடங்கொண்டு ஆடும் கூத்து ஆகும

---

## கூறு: 2 கரந்தைப்படலம்

**நோக்கம்: கரந்தைத் திணையின் இலக்கணம், அவற்றின் பிரிவுகள் போன்றவற்றை மாணவர்களுக்குக் கற்பித்தல்**

### 2. கரந்தைப் படலம்

வெட்சி மறவர்களால் கவர்ந்து செல்லப்பெற்ற ஆநிரைகளை இடைமறித்து மீட்டுச்செல்லும் பொருட்டு நடைபெறும் போர் கரந்தை என்று அழைக்கப்படும்.அவ்வாறு மீட்கச் செல்லும் மறவர் தனக்காக அடையாளப் பூவான கரந்தைப் பூவினை அணிந்து செல்வர். இதன் காரணமாகவே இத்திணை கரந்தைத்திணை என்னும் பெயர் பெறலாயிற்று. இக் கரந்தைத்திணை பதினான்கு துறைகளைத் தன்னுட் கொண்டதாகும்.

### 2.1 கரந்தைத் திணையின் வகை:

கதமலி கரந்தை கரந்தை அரவம்
அதரிடைச் செலவே அரும்போர் மலைதல்
புண்ணொடு வருதல் போர்க்களத் தொழிதல்
ஆளெறி பிள்ளை பிள்ளைத் தெளிவே

பிள்ளை ஆட்டொடு கையறு நிலையே
நெடுமொழி கூறல் பிள்ளைப் பெயர்ச்சி
வேத்தியன் மலிபே மிகுகுடி நிலையென
அருங்கலை உணர்ந்தோர் அவைபதி நான்கும்
கரந்தையுங் கரந்தைத் துறையு மென்ப.

இச் சூத்திரம் கரந்தைத்திணை உணர்த்திற்று.

கரந்தைத்திணை,கரந்தையரவம்,அதரிடைச்செலவு,போர் மலைதல்,புண்ணொடுவருதல், போர்க்களத்தொழிதல், ஆளெறிபிள்ளை, பிள்ளைத்தெளிவு, பிள்ளையாட்டு, கையறுநிலை, நெடுமொழி கூறல், பிள்ளைப் பெயர்ச்சி, வேத்தியன்மலிபு, குடிநிலை எனப் பதினான்கு துறைகளையுடையதாய் வரும்.

## 2.1.1 கரந்தை:

மலைத்தெழுந்தோர் மறஞ்சாயத்
தலைக்கொண்ட நிரைபெயர்த்தன்று.

வெட்சி மறவராகிய மாற்றார் கைப்பற்றிய ஆநிரையை மீட்டல் இத்துறையாகும். தம்மொடு மாறுபட்டு வந்தவர்களாகிய வெட்சி மறவர் ஆநிரைகளை கவர்ந்து சென்றனர். கரந்தையார் அவர்களின் வலிமை கெடும்படி போரிட்டு ஆநிரைகளை மீட்டனர். இத்தகைய நிலையே கரந்தைத்திணை ஆகும்.

அழுங்கனீர் வையகத் தாருயிரைக் கூற்றம்
விழுங்கியபின் வீடுகொண் டற்றாற் - செழுங்குடிகள்
தாரார் கரந்தை தலைமலைந்து தாங்கோடல்
நேரார்கைக் கொண்ட நிரை.

தமது ஆநிரைகளைக் கவர்ந்து சென்ற வெட்சியாருடன் போரிட்டுக் கரந்தையார் தமது ஆநிரைகளை மீட்டு வந்தனர். அவர்களின் இச்செயலானது கடல்சூழ்ந்த உலகத்துப் பெறுதற்கரிய உயிரைக் கூற்றுவன் உண்டபின்பு மீட்டுக் கொண்டு வந்த தன்மையை ஒத்ததாய் இருந்தது.

## 2.1.2 கரந்தை அரவம்:

நிரைகோள் கேட்டுச் செய்தொழில் ஒழிய
விரைவனர் குழூஉம் வகைஉரைத் தன்று.

இலக்கணம் - புறப்பொருளும் அணியிலக்கணமும்

குறிப்பு

குறிப்பு

வெட்சியார் தமது ஆநிரையைக் கைப்பற்றினமை கேட்டுச் கரந்தையார் தம் செய்து கொண்டிருந்து தொழிலை விட்டு ஓரிடத்துக் ஒலி எழக் கூடி நின்றதைக் கூறுவது இத்துறையாகும

காலார் கழலார் கடுஞ்சிலையார் கைக்கொண்ட
வேலார் வெருவந்த தோற்றத்தார் - காலன்
கிளர்ந்தாலும் போல்வார் கிணைப்பூசல் கேட்டே
உளர்ந்தார் நிரைப்பெயர்வு முண்டு.

வீரக்கழலினையுடையார், கொடிய வில்லினையுடையார், கையிலேயெடுத்த வேலினையுடையார், அஞ்சத்தக்க காட்சியினையுடையார், கூற்றுவன் கோபித்தாலுமொப்பார், தடாரி ஓசையைக் கேட்டு அசைந்தார்; இதனால் வெட்சியார் கொண்ட ஆனிரை மீட்கப்படும் என்று கண்டோர் கூறினர்.

### 2.1.3 அதரிடைச் செலவு:

ஆற்றார் ஒழியக் கூற்றெனச் சினைஇப்
போற்றார் போகிய நெறியடை ஏகின்று.

ஆநிரைகளைக் கவர்ந்து சென்ற வெட்சியாரைப் பின்பற்றி கரந்தையார் செல்வது இத்துறையாகும். ஆநிரையை மீட்கும் போர் செய்யும் ஆற்றல் இல்லாதவர்கள் ஊரின்கண் தங்கினர்.எஞ்சிய கரந்தை மறவர் அனைவரும் கூற்றுவன் சினத்தைக் போலச் சினம் கொண்டனர்.தம் ஆநிரைகளைச் கவர்ந்து சென்ற வெட்சியாரின் வழியினைத் தொடர்ந்து கரந்தையார் சென்றனர். அதனால் இது அதரிடைச் செலவு எனப்பட்டது.

சங்குங் கருங்கோடுந் தாழ்பீலிப் பல்லியமும்
எங்கும் பறையோ டெழுந்தார்ப்ப - வெங்கல்
அழற்சுரந் தாம்படர்ந்தா ரான்சுவட்டின் மேலே
நிழற்கதிர்வேன் மின்ன நிரைத்து.

கரந்தை மறவர் வெட்சியார் கவர்ந்து சென்ற ஆநிரைகளின் சுவடுகளைப் பின்பற்றிச் சென்றனர்.அவர்கள் சென்ற இடங்களில் சங்கும் கொம்பும் தாழ்ந்த பீலியையுடைய சில விசேட வாச்சியங்களும் பறையோடு எங்கும் எழுந்து ஆரவாரித்தன.இவ்வாறு நெருப்புப் போன்ற கல்லினையுடைய அழல்பரந்த காட்டிலே தாம் போயினார் என்றமையால் இது அதரிடைச்செலவு ஆயிற்று.

### 2.1.4 போர் மலைதல்:

வெட்சி யாரைக் கண்ணுற்று வளைஇ

உட்குவரத் தாக்கி உறழ்செருப் புரிந்தன்று.

வெட்சி மறவரோடு கரந்தை மறவர் போர் செய்வது இத் துறை ஆகும்.ஆநிரைகளைக் கவர்ந்து சென்ற சென்ற வெட்சி மறவரைக் கண்ட கரந்தையார் சூழ்ந்து நின்றனர்.பின்னர் அவர்கள் அஞ்சும் படியாகத் தாக்கினர் என்பது போர் மலைதல் ஆகும்.

புலிக்கணமுஞ் சீயமும் போர்க்களிறும் போல்வார்
வலிச்சினமு மானமுந் தேசும் - ஒலிக்கும்
அருமுனை வெஞ்சுரத் தான்பூசற் கோடிச்
செருமலைந்தார் சீற்றஞ் சிறந்து.

ஆநிரைகளை வெட்சி மறவர் கவர்ந்து சென்றனர் எனக் கேட்ட கரந்தை மறவர் வலிய காட்டிடை அவர்களைச் சூழ்ந்து கொண்டு போர் செய்தனர். இத்தகைய காட்சியானது சினத்தால் புலியையும் மானத்தால் சிங்கத்தையும் பெருமையால் யானையும் ஒத்துக் காணப்பட்டது.

### 2.1.5 புண்ணொடு வருதல்:

மண்ணோடு புகழ்நிறீஇப்
புண்ணோடு தான்வந்தன்று.

கரந்தை மறவர் விழுப்புண்ணொடு வருவது இத்துறையாகும்.மன்னாத இவ் உலகத்தில் கரந்தை மறவர் தம் விழுப்புண்ணினால் தன் புகழினை நிறுவினர். இதுவே புண்ணோடு வருதல் என்பதாகும்.

வெங்குருதி மல்க விழுப்புண் ணுகுதொறூஉம்
இங்குலிகஞ் சோரும் வரையேய்க்கும்-பைங்கண்
இனம்போக்கி நின்றா ரிகல்வாட்டி வேந்தன்
மனம்போல வந்த மகன்.

வெட்சி மறவரோடு புரிந்த போரில் கரந்தை மறவன் ஒருவன் விழுப்புண்ணினால் முகத்தினும் மார்பினும் உதிரம் விழவிழச் சாதிலிங்கக் குழம்பினை ஒத்து காணப்பட்டான் என்றமையால் இது புண்ணொடு வருதல் எனப்பட்டது.

### 2.1.6 போர்க்களத்தொழிதல்:

படைக்கோடா விறன்மறவரைக்
கடைக்கொண்டு களத்து ஒழிந்தன்று.



குறிப்பு

குறிப்பு

வெட்சி மறவரின் படையினைக் கண்டு அஞ்சாமல் எதிர்த்துப் போர் புரிந்து கரந்தை மறவர் போர்களத்து வீரமரணம் எய்தல் போர்க்களத்து ஒழிதல் என்னும் இத்துறையாகும்.

உரைப்பி னதுவியப்போ வொன்னார்கைக் கொண்ட
நிரைப்பி னெடுந்தகை சென்றான் - புரைப்பின்
றுளப்பட்ட வாயெல்லா மொள்வாள் கவரக்
களப்பட்டான் றொன்றான் கரந்து.

வெட்சியார் கைப்பற்றின நிரையின் பின்னே பெரிய வீரத்தனை உடைய கரந்தை மறவன் சென்றான் அஞ்சாது எதிர் நின்று போர் செய்தான். ஒப்பின்றிக் கருதப்பட்ட உடம்பு முழுமையும் ஒள்ளிய வாளினால் விழுப்புண் பெற்றான். ஆநிரை மீட்கப்பட்டது என்பதனைக் கேட்ட பின்பே போர்க்களத்தில் மீண்டும் தோன்றாதானாய் உயிர் விட்டான். இத்தகைய படைத்தலைவனின் ஆண்மை வியப்பிற்குரியதே ஆகும்.

### 2.1.7 ஆளெறி பிள்ளை:

வருவாரை எதிர்விலக்கி
ஒருதான் ஆகிஆள்எறிந்தன்று.

வெட்சி மறவரின் வீரத்திற்கு எதிர்த்துப் போர் செய்ய இயலாத கரந்தை மறவர் ஓடி வந்தனர், அவர்களைத் தடுத்த கரந்தை மறவன் ஒருவன் தான் ஒருவனாய்ச் சென்று வெட்சி மறவர்களை வென்று ஆநிரைகளைக் கைப்பற்றினான் என்று சொல்வது ஆளெறிபிள்ளை என்னும் இத்துறையாகும்.

பிள்ளை கடுப்பப் பிணம்பிறங்க வாளெறிந்து
கொள்ளைகொ ளாயந் தலைக்கொண்டார் - எள்ளிப்
பொருதழிந்து மீளவும் பூங்கழலான் மீளான்
ஒருதனியே நின்றா னுளன்.

வெட்சி மறவரின் வீரத்திற்கு எதிர்த்துப் போர் செய்ய இயலாத கரந்தை மறவர் ஓடி வந்தனர், அவர்களைத் தடுத்த கரந்தை மறவன் ஒருவன். அவர்களைப் பார்த்து இகழ்ந்துரைத்தான்.அவன் அச்சத்தினை அறியாதா சிறு பிள்ளையை ஒத்தவன். வெட்சி மறவரின் பிணங்கள் போர்க்களத்தே குவியும் வண்ணம் வெட்டி வீழ்த்தித் தான் ஒருவனாக நின்றான்.

### 2.1.8 பிள்ளைத் தெளிவு:

கண் மகிழ்ந்து துடிவிம்மப்

புண்மகிழ்ந்து புகன்றுஆடின்று.

துடியின் கண் பகுதியில் ஒலி எழும்பும்வண்ணம் அதனைக் கொட்டுபவர் முழக்கினர். அதனைக் கேட்ட கரந்தை மறவன் தான் போர்க்களத்துப்பட்ட விழுப்புண்ணைக் கண்டு மகிழ்ந்து கூத்தாடுவது பிள்ளைத்தெளிவு என்னும் இத்துறையாகும்.

மேவா ருயிருணங்க மேன்முடித்த பிள்ளையன்
பூவா ளுறைகழியாப் போர்க்களத் - தோவான்
துடியிரட்டி விம்மத் தொடுகழலார் முன்னின்
றடியிரட்டித் திட்டாடு மாட்டு.

வலிமையான போரின்கண் வெட்சியாரின் உயிர் நீங்கும் வண்ணம் அவர்கள்தம் தலையினை வெட்டி வீழ்த்தினான் கரந்தை மறவன்.அத்தகைய அவனின் பெருமை கண்டு துடி முழக்கப்பட்டது, அதனால் மகிழ்ச்சி பெற்ற அம்மறவன் தன் உறையிலிருந்து அழகிய வாளினை எடுத்து ஏனைய கரந்தை மறவர் முன்பாக வீரக்கூத்தினை ஆடி மகிழ்ந்தான்.

## 2.1.9 பிள்ளை யாட்டு:

கூடலர்குடர் மாலைசூட்டி
வேல்திரித்து விரும்பிஆடின்று.

பகைவர்களின் குடராகிய மாலையைத் தான் கையிலே ஏந்தியிருக்கும் வேலிற்குச் சூட்டி அவ்வேலின் அடியை நுனியாகவும் நுனியை அடியாகவும் சுழற்றி ஆடுவது இத்துறையாகும்.

மாட்டிய பிள்ளை மறவர் நிறந்திறந்து
கூட்டிய வெ.்கங் குடர்மாலை - சூட்டியபின்
மாறிரியச் சீறி நுடங்குவான் கைக்கொண்ட
வேறிரிய விம்முந் துடி.

பகைவரைப் போர்க்களத்தில் மாளப்பண்ணியவன் கரந்தை மறவன். பிள்ளைத்தன்மையை எய்திய அவன் பகைவர்களின் குடலினைத் தான் ஏந்திய வேலினுக்கு மாலையாகச் சூட்டி ஆடினான். அவன் வேலின் அடி நுனியாகவும் நுனி அடியாகவும் கொண்டு ஆடியதற்கு ஏற்பத் துடி என்னும் கருவி முழங்கியது.



குறிப்பு

## 2.1.10 கையறுநிலை:

வெருவரும் வாளமர் விளிந்தோண் கண்டு
கருவி மாக்கள் கையறவு உரைத்தன்று.

வெட்சியாருக்கும் வஞ்சியாருக்கும் இடையே நடைபெற்ற அஞ்சத்தகும் போரில் இறந்துபட்ட தலைவனைப் பார்த்து பார்த்து யாழ்ப்பாணர் அவன் பட்டபடியைச் சொல்லியது இத்துறையாகும்.

குறிப்பு

நாப்புலவர் சொன்மாலை நண்ணார் படையுழக்கித்
தாப்புலி யொப்பத் தலைக்கொண்டான் - பூப்புனையும்
நற்குலத்துட் டோன்றிய நல்லிசையாழ்த் தொல்புலவீர்
கற்கொலோ சோர்ந்திலவெங் கண்.

செந்நாப் புலவர்களே! பகைவர் படையை அழிப்பதில் புலியைப் போன்றவன். அத்தகையவன் இப்போர்கக்களத்திழல் வீழ்ந்து பட்டான்.இவனின் இறப்பினைக் கண்டும் என் கண்கள் வீழ்ந்து போகவில்லை எனவே இவை கண்கள் அல்ல என்று பாணன் புலம்பி நின்றான்.

## 2.1.11 நெடுமொழி கூறல்:

மன்மேம் பட்ட மதிக்குடை யோற்குத்
தன்மேம் பாடு தானெடுத்து உரைத்தன்று.

மன்னரின் மேம்பட்ட குளிர்மதி போன்ற் கொற்றக் குடையினையுடைய அரசனுக்கு ஒருவீரன் தன்னுடைய மேம்பாட்டைத் தான் உயர்த்திச் சொல்லியது இத்துறையாகும்.

ஆளமர் வெள்ளம் பெருகி னதுவிலக்கி
வாளொடு வைகுவேன் யானாக- நாளும்
கழிமகிழ் வென்றிக் கழல்வெய்யோ யீயப்
பிழிமகி ழுண்பார் பிறர்.

நாள் தோறும் மிக்க உவகையாற் சிறந்த வெற்றியினையும் வீரக்கழலினையுமுடைய மன்னனே! வெட்சியாரின் போர் மறவர்கள் வருவர் ஆயின் யான் ஒருவனாகவே எதிர்த்து நின்று அவர்களை அழித்தொழிப்பேன். நும்முடைய மறவர்கள் நீ கொடுக்க நினைவு இயைந்து பிழியும் மதுவை அருந்துவராகுக.

## 2.1.12 பிள்ளைப் பெயர்ச்சி:

போர்தாங்கிப் புள்விலங்கியோனைத்

தார்வேந்தன் றலையளித்தன்று.

தீ நிமித்தம் என்பதனையும் நோக்காது நிரை மீட்கச் சென்ற மறவனின் ஆற்றலை மன்னன் சிறப்பிப்பது இத்துறையாகும்.

தணங்கஞர்செய் தாளெறித னோக்கி - வணங்காச்

சிலையளித்த தோளான் சினவிடலைக் கன்றே

தலையளித்தான் றண்ணடையுந் தந்து.

மாறுபடும் போரிடத்துக் காரியென்னும் பறவை தீ நிமித்தம் காட்டியது: அதனைக் கண்ட நிமித்திகர் மறவனைத் தடுத்தனர்: ஆனால் மறவனோ அதனைக் கருத்தில் கொள்ளாது போர்க்களத்துச் சென்று ஆநிரை மீட்டுத் திரும்பினான். அதனைக் கண்ட மன்னன் அவனுக்கு சிறப்புச் செய்து மகிழ்ந்தான்.

## 2.1.13 வேத்தியன் மலிபு:

தோள்வலிய வயவேந்தனை

வாள்வலிமறவர் சிறப்புரைத்தன்று.

தோள் வலிமையால் சிறந்து விளங்கும் கரந்தை மன்னனின் சிறப்புகளைச் சொல்லி மகிழ்வது இத்துறையாகும்.

அங்கையு ணெல்லி யதன்பய மாதலாற்

கொங்கலர் தாரான் குடைநிழற்கீழ்த்- தங்கிச்

செயிர்வழங்கும் வாளமருட் சென்றடையார் வேல்வாய்

உயிர்வழங்கும் வாழ்க்கை யுறும்.

தேன் சிந்தும் மாலையினை அணிந்த நம் அரசனுடைய வெண்கொற்றக்குடையின் கீழ் துன்பம் இன்றி இனிது வாழ்கின்றோம்.அத்தகைய வாழ்வினை உடைய நாம் போர்க்களத்தில் வாளால் வெட்டப்பட்டு உயிரை விடுகின்றோம். இத்தகைய செயல் சிறப்பான பயனைத் தருவதாகும். அது எவ்வாறு எனில் உள்ளங்கை நெல்லிக்கனி போன்றதாம்.

## 2.1.14 குடி நிலை:

மண்டிணி ஞாலத்துத் தொன்மையும் மறனும்

கொண்டுபிற றறியுங் குடிவர வுரைத்தன்று .

மண்செறிந்த பூமியிடத்துப் பழமையும், தறுகண்மையும் கொண்டு பிறரறியும் வண்ணம் தன் குடியின் பெருமையினைச் சொல்லியது இத்துறையாகும்.

பொய்யகல நாளும் புகழ்விளைத்த லென்வியப்பாம்
வையகம் போர்த்த வயங்கொலிநீர் - கையகலக்
கற்றோன்றி மண்டோன்றாக் காலத்தே வாளோடு
முற்றோன்றி மூத்த குடி .

குறிப்பு

இன்று நம் கண்ணிற்குப் புலனாகும் இவ் உலகம் முன்னம் கடலால் சூழப்பட்டிருந்தது.அதில் முதலில் மலை தோன்றியது, அத்தகைய காலத்து இந் நிலம் தோன்றவில்லை. அத்தகைய தொன்மையான காலத்தே தோன்றிய குடிகளுக்கெல்லாம் மூத்த குடி ஒன்று உண்டு.அது வாளினைத் தன் கைக்கொண்டு தோன்றிய இம் மறவனின் மூத்த குடி ஆகும்.அத்தகைய குடிப்பிறந்தோர் தம் மறப்புகழை நாள்தோறும் வளர்த்துக் கொள்ளுதல் என்ன வியப்பிற்குரியதாம்?

**பயிற்சி வினாக்கள்:**

**1. அதரிடைச் செலவு குறித்து எழுதுக**

ஆற்றார் ஒழியக் கூற்றெனச் சினைஇப்
போற்றார் போகிய நெறியடை ஏகின்று.

ஆநிரைகளைக் கவர்ந்து சென்ற வெட்சியாரைப் பின்பற்றி கரந்தையார் செல்வது இத்துறையாகும். ஆநிரையை மீட்கும் போர் செய்யும் ஆற்றல் இல்லாதவர்கள் ஊரின்கண் தங்கினர்.எஞ்சிய கரந்தை மறவர் அனைவரும் கூற்றுவன் சினத்தைக் போலச் சினம் கொண்டனர்.தம் ஆநிரைகளைச் கவர்ந்து சென்ற வெட்சியாரின் வழியினைத் தொடர்ந்து கரந்தையார் சென்றனர். அதனால் இது அதரிடைச் செலவு எனப்பட்டது.

சங்குங் கருங்கோடுந் தாழ்பீலிப் பல்லியமும்
எங்கும் பறையோ டெழுந்தார்ப்ப - வெங்கல்
அழற்சுரந் தாம்படர்ந்தா ரான்சுவட்டின் மேலே
நிழற்கதிர்வேன் மின்ன நிரைத்து.

கரந்தை மறவர் வெட்சியார் கவர்ந்து சென்ற ஆநிரைகளின் சுவடுகளைப் பின்பற்றிச் சென்றனர்.அவர்கள் சென்ற இடங்களில் சங்கும் கொம்பும் தாழ்ந்த பீலியையுடைய சில விசேட வாச்சியங்களும் பறையோடு எங்கும் எழுந்து ஆரவாரித்தன.இவ்வாறு நெருப்புப் போன்ற

கல்லினையுடைய அழல்பரந்த காட்டிலே தாம் போயினார் என்றமையால் இது அதரிடைச்செலவு ஆயிற்று.



**2. ஆளெறி பிள்ளை – சுட்டியுரைக்க**

வருவாரை எதிர்விலக்கி
ஒருதான் ஆகிஆள்எறிந்தன்று.

வெட்சி மறவரின் வீரத்திற்கு எதிர்த்துப் போர் செய்ய இயலாத கரந்தை மறவர் ஓடி வந்தனர், அவர்களைத் தடுத்த கரந்தை மறவன் ஒருவன் தான் ஒருவனாய்ச் சென்று வெட்சி மறவர்களை வென்று ஆநிரைகளைக் கைப்பற்றினான் என்று சொல்வது ஆளெறிபிள்ளை என்னும் இத்துறையாகும்.

பிள்ளை கடுப்பப் பிணம்பிறங்க வாளெறிந்து
கொள்ளைகொ ளாயந் தலைக்கொண்டார் - எள்ளிப்
பொருதழிந்து மீளவும் பூங்கழலான் மீளான்
ஒருதனியே நின்றா னுளன்.

வெட்சி மறவரின் வீரத்திற்கு எதிர்த்துப் போர் செய்ய இயலாத கரந்தை மறவர் ஓடி வந்தனர், அவர்களைத் தடுத்த கரந்தை மறவன் ஒருவன். அவர்களைப் பார்த்து இகழ்ந்துரைத்தான்.அவன் அச்சத்தினை அறியாதா சிறு பிள்ளையை ஒத்தவன். வெட்சி மறவரின் பிணங்கள் போர்க்களத்தே குவியும் வண்ணம் வெட்டி வீழ்த்தித் தான் ஒருவனாக நின்றான்.

**3. நெடுமொழி கூறல் சான்றுடன் விவரி.**

மன்மேம் பட்ட மதிக்குடை யோற்குத்
தன்மேம் பாடு தானெடுத்து உரைத்தன்று.

மன்னரின் மேம்பட்ட குளிர்மதி போன்ற் கொற்றக் குடையினையுடைய அரசனுக்கு ஒருவீரன் தன்னுடைய மேம்பாட்டைத் தான் உயர்த்திச் சொல்லியது இத்துறையாகும்.

ஆளமர் வெள்ளம் பெருகி னதுவிலக்கி
வாளொடு வைகுவேன் யானாக- நாளும்
கழிமகிழ் வென்றிக் கழல்வெய்யோ யீயப்
பிழிமகி ழுண்பார் பிறர்.

நாள் தோறும் மிக்க உவகையாற் சிறந்த வெற்றியினையும் வீரக்கழலினையுமுடைய மன்னனே! வெட்சியாரின் போர் மறவர்கள் வருவர் ஆயின் யான் ஒருவனாகவே எதிர்த்து நின்று அவர்களை

அழித்தொழிப்பேன். நும்முடைய மறவர்கள் நீ கொடுக்க நினைவு இயைந்து பிழியும் மதுவை அருந்துவராகுக.



## கூறு: 3 வஞ்சிப்படலம்

### நோக்கம்: வஞ்சித் திணையின் இலக்கணம், அவற்றின் பிரிவுகள் போன்றவற்றை மாணவர்களுக்குக் கற்பித்தல்

### 3. வஞ்சிப்படலம்:

தன் ஆற்றல் போற்றாத பகை மன்னனின் நாட்டின்கண் படையெடுத்துச் செல்லும் அரசன் அதன் அடையாளமாக வஞ்சிப் பூவினைச் சூடிச் செல்வான். எனவே இது வஞ்சித் திணை என்று அழைக்கப்பட்டது. இத்திணை இருபத்தொன்று பகுதிகளைத் தன்னுட் கொண்டமைந்ததாகும்.

### 3.1 வஞ்சித் திணையின் துறைகள்:

வாடா வஞ்சி வஞ்சி அரவம்
கூடார்ப் பிணிக்குங் குடைநிலை வாள்நிலை
கொற்றவை நிலையே கொற்ற வஞ்சி
குற்றமில் சிறப்பில் கொற்ற வள்ளை
பேராண் வஞ்சி மாராய வஞ்சி
நெடுமொழி வஞ்சி முதுமொழி வஞ்சி
உழபுல வஞ்சி மழபுல வஞ்சி
கொடையின் வஞ்சி குறுவஞ் சிய்யே
ஒருதனி நிலையொடு தழிஞ்சி பாசறை
பெருவஞ் சிய்யே பெறுஞ்சோற்று நிலையொடு
நல்லிசை வஞ்சியென நாட்டினர் தொகுத்த
எஞ்சாச் சீர்த்தி இருபத் தொன்றும்
வஞ்சியும் வஞ்சித் துறையுமாம்.

வஞ்சிச்திணை, வஞ்சியரவம், குடைநிலை, வாள்நிலை, கொற்றவைநிலை, கொற்றவஞ்சி, கொற்றவள்ளை,பேராண்வஞ்சி,மாராயவஞ்சி,நெடுமொழிவஞ்சி,முதுமொழிவஞ்சி,உழபுலவஞ்சி,மழபுலவஞ்சி,கொடைவஞ்சி,குறுவஞ்சி,ஒருதனிநிலை,தழி

ஞ்சி,பாசறைவஞ்சி,பெருவஞ்சி,பெருஞ்சோற்றுநிலை, நல்லிசைவஞ்சி என இவை இருபத்தொன்று துறைகளை உடைத்தாய் வரும்.



## 3.1.1 வஞ்சி:

வாடாவஞ்சி தலைமலைந்து
கூடார்மண் கொளல்குறித்தன்று.

தன் ஆற்றல் போற்றாத பகை மன்னனின் நாட்டின்கண் படையெடுத்துச் செல்லும் அரசன் அதன் அடையாளமாக வஞ்சிப் பூவினைச் சூடிச் செல்வான்.

செங்கண் மழவிடையிற் றண்டிச் சிலைமறவர்
வெங்கண் மகிழ்ந்து விழவமர- அங்குழைய
வஞ்சி வணங்கார் வணக்கிய வண்டார்ப்பக்
குஞ்சி மலைந்தானெங் கோ.

சிவந்தகண்ணினையுடைய இளமைப்பருவத்து காளையை ஒத்து செருக்குற்று நின்றனர் வஞ்சி மறவர்.அவர்கள் தங்கள் கைகளில் வில்லினை ஏந்தி நின்றனர். கள்ளுண்டு களித்த அம் மறவர்கள் விழாவினை விரும்பியவராய் இருந்தனர்.அந்நிலையில் அரசன் தன்னைப் போற்றாத பகைவரினை வெல்லக் கருதி மணம்மிக்க வஞ்சிப் பூவினைத் தன் தலையில் சூடினான்.

## 3.1.2 வஞ்சியரவம்:

வள்வார் முரசமொடு வயக்களிறு முழங்க
ஒள்வாள் தானை உருத்து எழுந் தன்று.

வலிமை மிகுந்த வாரால் கட்டப்பெற்ற முரசு முழங்கியது. யானைகள் பிளிறின. இத்தகைய ஒலிகளுயுடன் வாளினைக் கையில் ஏந்திய மறவர்கள் ஆராவாரத்துடன் போருக்கு எழுந்தனர். இதுவே வஞ்சியரவம் எனப்பட்டது.

வெளவிய வஞ்சி வலம்புனையச் - செவ்வேல்
ஒளிரும் படைநடுவ ணூழித்தீ யன்ன
களிறுங் களித்ததிருங் கார்.

கடல்போல வீரமுரசம் ஆர்த்தது. பகைவர்நிலம் அழியக் கைப்பற்றின வஞ்சியை வெற்றியாகச் சூடச் சிவந்தவேல் படைகளின் நடுவே ஊழிக்காலத்து நெருப்பையொத்து எழுந்தது. யானைகளும் மகிழ்ந்து மேகத்தைப்போல முழங்கின.

குறிப்பு

### 3.1.3 குடைநிலை:

பெய்தாமம் சுரும்பு இமிரப் பெரும்புலவர் புகழ்பாடக்
கொய்தார் மன்னவன் குடைநாள் கொண்டன்று.

அழகிய மலர்களால் அமைந்த மாலைகளை உடையவன் வஞ்சி அரசன்.அவனின் குடை மேல் அணிவிக்கப்பெற்ற மாலைகளின் மேல் வண்டுகள் மொய்த்தன.புலவர்கள் அதனைப் போற்றிப் புகழ்ந்தனர், அரசன் போரைக் கருதி ஒரு நல்லநாளில் அவ் வெண்கொற்றக் குடையினை புறவீடு செய்தல் குடைநாள் கோள் என்பதாகும்.

முன்னர் முரசிரங்க மூரிக் கடற்றானைத்
துன்னருந் துப்பிற் றொழுதெழா- மன்னர்
உடைநா ளுலந்தனவா லோதநீர் வேலிக்

இந் நில உலகம் முழுமையும் தன் வலிமையால் ஆடசி செய்யும் வஞ்சி அரசன் தன் பகைவர் மேல் போர் தொடுக்கும் எண்ணத்தால் தன் வெண்கொற்றக்குடையினை புறவீடு செய்தான். அதனால் பகைவரின் படையும் ஆற்றலும் வாள்நாளும் அழியும்.

### 3.1.4 வாள் நிலை:

செற்றார்மேல் செலவுஅமர்ந்து
கொற்றவாள் நாள்கொண்டன்று.

பகைவர்மேல் படையெடுக்கக் கருதிய வஞ்சியரசன் தன் வீர வாளினைப் புறவீடு செய்தல் வாள்நாள் கோள் எனப்படும்.

அறிந்தவ ராய்ந்தநா ளாழித்தேர் மன்னன்
எறிந்தில கொள்வா ளியக்கம் - அறிந்திகலிப்
பின்பகலே யன்றியும் பேணா ரகநாட்டு
நன்பகலுங் கூகை நகும்.

சோதிடநூல் வல்லவர் ஆய்ந்து கூறிய நாளிலே சிறந்த தேரினையுடைய வேந்தன் தனது ஒளிபொருந்திய வாளினது புறவீடு செய்தான். இதனைப் பகைவர் நாட்டில் வாழும் கூகை அறிந்து மாலைப் பொழுதில் மட்டுமன்றி நல்ல பகல் பொழுதிலும் அலறி அந்நாட்டிற்கு ஏற்படப் போகும் தீமையை அறிவித்தது.

## 3.1.5 கொற்றவை நிலை:

வெற்றியின் தலைமகளாய் விளங்கும் கொற்றவையின் அருளினைப் புகழ்ந்து கூறுவதல், வஞ்சி மறவர்களின் போர்த் திறத்தினைப் புகழ்ந்து கூறுதல் என கொற்றவை நிலை இரு திறத்ததாகும்.

நீடோளான் வென்றிகொள்கென நிறைமண்டை
வலன்உயரிக்
கூடாரைப் புறங்காணும் கொற்றவைநிலை உரைத்தன்று.

நீண்ட தோளினையுடையவன் வெற்றி பெறுவானாக எனச் சொல்லி நல்ல பொருள்களால் நிரம்பிய பாத்திரத்தை வெற்றியாக எடுத்து அரசனுடைய பகைவரை முதுகுபுறங்காணும் கொற்றவை நிலைமையைச் சொல்லியது.

அணங்குடை நோலை பொரிபுழுக்கல் பிண்டி
நிணங்குடர் நெய்த்தோர் நிறைத்துக்- கணம்புகலக்
கையிரிய மண்டைக் கணமோடி காவலற்கு
மொய்யிழியத் தான்முந் துறும்.

வலிமை வாய்ந்த தோள்களை உடைய வெட்சி மன்னன் வெற்றி பெற வேண்டும் என்று வெட்சி மறவர்கள் கொற்றவையை வழிபட்டனர். அவர்களின் வேண்டுதலை உள்ளத்தில் கொண்ட கொற்றவை அவ் வெற்றிக்கு அடையாளமாகக் குருதி நிறைந்த மண்டையைக் காட்டிப் பகைமன்னரைப் புற முதுகிட்டு ஓடச் செய்தாள். இவ்வாறு கொற்றவையின் அருள் நிலையினைக் கூறுவது கொற்றவை நிலை எனப்படும்.

## 3.1.6 இதுவுமது:

மைந்துடை ஆடவர் செய்தொழில் கூறலும்
அந்தமில் புலவர் அதுவென மொழிப.

வலியினையுடைய வீரர் செய்யுந் தொழிலைச் சொல்லுதலும் கொற்றவை நிலை என்னும் அத்துறையாகும்.

தமருட் டலையாத றார்தாங்கி நிற்றல்
எமருள்யா மின்னமென் றெண்ணல்-அமரின்
முடுகழலின் முந்துறுதன் .முல்லைத்தார் வேந்தன்
தொடுகழன் மைந்தர் தொழில்.

தம்முடைய கூட்டத்தாரின் பெருமையுடையனாதல், தூசிப்படையைத் தடுத்து நிற்றல், எங்கள் படைவீரருள் நாம் இத்தகைய சிறப்பினை உடையோம் என்று எண்ணுதல் போரிடத்து விரைந்து செல்லும்



குறிப்பு

ஊழித்தீ போல முற்படப் புகுதல் ஆகியன வீரக்கழலினையுடைய மன்னனுடைய வீரர்களின் சிறப்புகள் ஆகும்.

## 3.1.7 கொற்ற வஞ்சி:

வையகம் வணங்க வாள்ஓச் சினனெனச்
செய்கழல் வேந்தன் சீர்மிகுத் தன்று

உலகத்துள்ளோர் வணங்க வாளாலே பகைவரை வெட்டினான் என வீரக்கழலினையுடைய வஞ்சியரசனின் நன்மையைப் சிறப்பித்துச் சொல்லியது இத்துறையாகும்.

அழலடைந்த மன்றத் தலந்தயரா நின்றார்
நிழலடைந்த நின்னையென் றேத்திக் -கழலடையச்
செற்றங்கொண் டாடிச் சிலைத்தெழுந்தார் வீந்தவியக்
செற்றங்கொண் டெ.்.குயர்த்தான் கோ.

எம் வேந்தனின் வெகுளியைப் பாராட்டி அவனுடன் போர் செய்ய முனைந்து வந்தனர் பலர். அவர்கள் அனைவரும் போரில் எம் மன்னனின் வாளால் வெட்டப்பட்டு தன் பெயர் மாறிப் பிணம் என்னும் பெயரினைப் பெற்றனர். எஞ்சியோர் தீப்பற்றி எரியும் தம் நாட்டின் மன்றிலிடை நின்றனர். அப் பகைவர்கள் தாம் செல்லும் இடம் வேறு இன்றி எம் அரசனின் தாள்களையே பணிந்தனர் என்று அரசனின் சிறப்புகளை எடுத்துரைத்தமையால் இது கொற்ற வஞ்சி ஆயிற்று.

## 3.1.8 கொற்றவள்ளை:

மன்னவன் புகழ்கிளந்து
ஒன்னார்நாடு அழிபுஇரங்கின்று.

அரசன் புகழினைச் சொல்லிப் பகைவர்தேசம் கெடுவதற்கு வருந்திக் கூறியது இத்துறையாகும்.

தாழார மார்பினான் றாமரைக்கண் சேந்தனவாற்
பாழாயப் பரிய விளிவதுகொல்-யாழாய்ப்
புடைத்தே னிமிர்கண்ணிப் பூங்கட் புதல்வர்
நடைத்தே ரொலிகறங்கு நாடு.

ஆரந்தாழ்ந்த மார்பினையுடையவன் தாமரை மலர் போன்ற கண்கள் சிவந்தன.எனவே சினந்த அரசனின் பகைவர் நாடுகளில் முன்னம் வண்டுகள் ஒலிக்கும் மலர்மாலை அணிந்த சிறுவர்களின் சிறுதேர் உருட்டும் பொழுது எழுப்பும் ஒலி மிகுந்து கேட்கும். இப்போது அவற்றைக் கண்டோர் வருந்தும் படியாக வதாழ்வோர் இன்றிப் பாழாகின.

## 3.1.9 பேராண் வஞ்சி:



புகைவரை வென்ற மறவனைப் பாராட்டி மன்னன் வெகுமதி வழங்கல். முன்னன் தோல்வியுற்ற அவசனிடமிருந்து திறைப்பொருள் பெற்றுத் திரும்புதல் என பேராண்வஞ்சி இரு திறப்படும்.

கேள் அல்லார் முனைகெடுத்த

மீளியார்க்கு மிகஉய்த்தன்று.

போர்க்களத்துப் பகைவரை வென்று போரில்லாமல் செய்தவர் ஆற்றல் மிக்க வஞ்சி மறவர். அவர்களுக்கு வஞ்சியரசன் மிகுதியாகப் பொருள் கொடுத்துச் சிறப்பித்தல் பேராண்வஞ்சி எனப்படும்.

பலுபெறு நன்னகரும் பள்ளி யிடனும்

ஒலிகெழு நான்மறையோ ரில்லும்- நலிவொரீஇப்

புல்லா ரிரியப் பொருதார் முனைகெடுத்த

வில்லார்க் கருள்சுரந்தான் வேந்து.

நல்ல கோயில்களும் துறந்தாரிருக்கும் பள்ளியிடங்களும் ஓசைபொருந்திய நான்கு வேதத்தோர் இல்லங்கள் போன்றவற்றில் அழிவு ஏற்படா வண்ணம் மறவர் போர்செய்தனர். மேலும் அவ் இடங்களில் சென்று மறைந்து கொண்ட பகைவருக்கும் எந்த விதமான தீங்கும் செய்யாமல் விடுத்தனர்.தம்மை எதிர்த்து நின்ற பகைவர்களை மட்டுமே அழித்தனர். இத்தகைய சிறப்புடைய மறவர்களுக்கு அரசன் சிறப்புச் செய்தான்.

## 3.1.10 இதுவுமது:

அருந்திறை அளப்ப ஆறிய சினத்தொடு

பெரும்பூண் மன்னவன் பெயர்தலும் அதுவே.

பெறுதற்கரிய பொருளைப் பகைவர் கொடுப்பத் தணிந்த கோபத்தோடு பேரணிகலங்களையுடைய மன்னன் தன் நாடு மீண்டு வரைதல் அத்துறையாகும்.

கூடி முரசிரங்கக் கொய்யுளைமா முன்னுகளப்

பாடி பெயர்ந்திட்டான் பல்வேலான்-கோடி

நிதியந் திறையளந்தார் நேராருந் தன்கீழ்

முதியமென் றாறி முரண்

பல வாச்சியத்தோடும் பொருந்தி முரசு அதிரக் குதிரைகள் முன்னே நடக்க இருந்த பாசறையினை விட்டுப் பெயர்ந்தான் மன்னன்.பலவேற் படையினை உடைய அம் மன்னனுக்கு கோடிப்பொருளைத் திறையாகப் பகைவர் கொடுத்தார்.

குறிப்பு

## 3.1.11 மாராய வஞ்சி:

மறவேந்தனில் சிறப்பு எய்திய
விறல்வேலார் நிலைஉரைத்தன்று.

மன்னனாலே சிறப்புப்பெற்ற வெற்றி மிக்க வேலினையுடைய மறவர்களின் சிறப்பினைச் சொல்லியது இத்துறையாகும்.

நேராரம் பூண்ட நெடுந்தகை நேர்கழலான்
சேரார் முனைநோக்கிக் கண்சிவப்பப் -போரார்
நறவேய் கமிழ்தெரிய னண்ணா ரெறிந்த
மறவே லிலைமுகந்த மார்பு.

பெரிய சிறப்பினையும் பொருந்திய வீரக்கழலினையும் உடைய வஞ்சி மன்னன் பகைவர்தம் போரைப் பார்த்து வெகுண்டு கண்சிவந்தான். அதனைக் கண்ட போர்வீரர்கள் பகைவர் மேல் போர் தொடுத்தனர்: பகைவர் போர்க்களத்தில் தம்மை நோக்கி எறிந்த வேலினை மார்பில் ஏற்றனர். அத்தகைய வீரம் செறிந்த மார்பானது தற்போது அரசனால் வழங்கப் பெற்ற முத்து மாலையைப் பெற்றுச் சிறந்தது.

## 3.1.12 நெடுமொழி வஞ்சி:

ஒன்னாதார் படைகெழுமித்
தன்ஆண்மை எடுத்துரைத் தன்று.

பகைவர் படையினை நெருங்கித் தன் ஆண்மையினை எடுத்துக் கூறல் இத்துறை ஆகும்.

இன்ன ரெனவேண்டா வென்னோ டெதிர்சீறி
முன்னர் வருக முரணகலும்-மன்னர்
பருந்தார் படையமருட் பல்லார் புகழ
விருந்தா யடைகுறுவார் விண்.

என் முன் நிற்கும் மன்னர்களே! நாங்கள் இத்துணை சிறப்புடையோம் என்று தற்பெருமை பேச வேண்டாம்.அத்தகைய வீரம் உடையவர்கள் ஆயின் என்முன் போர் செய்ய வருவீர்களாகுக.பருந்துகள் நிறைந்தது இப் போர்க்களம். இதில் என்னை எதிர்த்து நிற்போர் எல்லோராலும் புகழப்படுவர். மேலும் விண்ணிற்கு விருந்தாகவும் செல்லுவர் என்பதனால் இத்துறை நெடுமொழி வஞ்சி என்பது ஆயிற்று.

## 3.1.13 முதுமொழி வஞ்சி:

தோல்மரபின் வாட்குடியின்
முன்னோனது நிலைகிளந்தன்று.

தொன்மைமயான வரலாற்றுப் பெருமையினை உடையது மறவர் குடியாகும். அத்தகைய குடியில் தோன்றிய முன்னோனாகிய தந்தையின் சிறப்பினை எடுத்துப் பேசுவது இத்துறையாகும்.

குளிறு முரசங் குணில்பாயக் கூடார்
ஒளிறுவாள் வெள்ள முழக்கிக்-களிறெறிந்து
புண்ணொடு வந்தான் புதல்வற்குப் பூங்கழலோய்
தண்ணடை நல்கல் தகும்.

மறவன் தன் காலில் வீரக்கழலினை அணிந்தவன். மேலும் பகைவரின் போர்ப் படையில் புகுந்து வென்று வீரம் காட்டினான். அவர்தம் போர் யானைகளை வென்று வீழ்த்தினான். வலிமை மிக்க பகைவர்களால் மார்பில் விழுப்புண்ணைப் பெற்று நின்றான். இத்தகைய ஆண்மை மிக்க மறவனின் மகனுக்கு மருத நிலங்களைக் கொடுப்பது தகுதியுடைய செயலாகும்.

## 3.1.14 உழபுல வஞ்சி:

நேராதார் வளநாட்டைக்
கூர்எரி கொளீஇயன்று.

பகைவர் நாட்டினை தீயிட்டுக் கொளுத்துவது இத் துறையாகும்.

அயிலன்ன கண்புதைத் தஞ்சி யலறி
மயிலன்னார் மன்றம் படரக்-குயிலகவ
ஆடிரிய வண்டிமிருஞ் செம்ம லடையார் நாட்
டோடெரியுள் வைகின வூர்.

வஞ்சி மன்னன் சினம் கொண்டு படை எடுக்கும் முன்னம் பகைவர் நாட்டில் குயில்கள் கூவிக் கொண்டிருந்தன. மக்கள் மகிழ்வுடன் எங்கும் இருந்தனர். வண்டுகள் தேனை உண்டு ஒலித்தன. ஆனால் இன்று அவற்றை வஞ்சி மறவர் தீயிட்டுக் கொளுத்தினர். அதனைக் கண்ட மக்கள் தங்களைக் காத்துக் கொள்ள அலறிக் கொண்டு மன்றங்களை நோக்கி ஓடினர்.

## 3.1.15 மழபுல வஞ்சி:

கூடார்முனை கொள்ளைசாற்றி
வீடுஅறக்கவர்ந்த வினை மொழிந்தன்று.

பகைவர் நாட்டினை வென்று அந்நாடு பாழ்படப் பாழ்படக் கொள்ளைகொண்ட தொழிலைச் சொல்லியது இத்துறை ஆகும்.

களமர் கதிர்மணி காலேகஞ் செம்பொன்

வளமனை பாழாக வாரிக்-கொளன்மலிந்து

கண்ணார் சிலையார் கவர்ந்தார் கழல்வேந்தன்

நண்ணார் கிளையலற நாடு.

வஞ்சி மன்னனின் படை மறவர்கள் பகைவரின் நாட்டினை வென்று அந்நாட்டின் அரண்மனைக்குள் சென்றனர். அங்கிருந்தோர் அலறும் வண்ணம் வேலையாட்கள், மணிகள், முத்துகள், பொன்னனிகள் போன்றவற்றைக் கொள்ளை அடித்தனர்.

## 3.1.16 கொடை வஞ்சி:

நீடவும் குறுகவும் நிவப்பவும் தூக்கிப்

பாடிய புலவர்க்குப் பரிசினீல் நீட்டின்று.

தனது வெற்றியைப் பாடிய புலவர்களுக்கு வஞ்சி அரசன் பரிசில் கொடுத்ததைக் கூறியது இத்துறையாகும்.இசையுடன் கூடிய அப்பாடல் ஓசை உயர்ந்தும் தாழ்ந்தும் ஒரு சீராயும் பாடப்படுவது ஆகும்.

சுற்றிய சுற்ற முடன்மயங்கித் தம்வயி

றெற்றி மடவா ரிரிந்தோட-முற்றிக்

குரிசி லடையாரைக் கொண்டகூட் டெல்லாம்

பரிசின் முகந்தன பாண்.

வஞ்சி மறவர்கள் தம் பகைநாட்டினர் அலறியடித்துச் செல்லும் வண்ணம் அவர்கள்தம் பொருட்களை கொள்ளையடித்து வந்து அரசனிடம் தந்தனர். அத்தகைய பொருட்கள் மன்னனைப் புகழ்ந்து பாடிய பாணர் கூட்டத்தால் கொள்ளப்பட்டன.

## 3.1.17 குறுவஞ்சி:

மடுதது எழுந்த மறவேந்தர்க்குக்

கொடுத்து அளித்துக் குடிஓம்பின்று.

தன்னை எதிர்த்த வீரத்தையுடைய மன்னர்க்குத் திறையைக் கொடுத்து நாடுடைய அரசன் குடிக்குத் நன்மை செய்து காத்தது இத்துறையாகும்.

தாட்டாழ் தடக்கைத் தனிமதி வெண்குடையான்

வாட்டானை வெள்ளம் வரவஞ்சி-மீட்டான்

மலையா மறமன்னன் மால்வரையே போலும்

கொலையானை பாய்மாக் கொடுத்து.

தாளிலே தாழநீண்ட பெரியகையினையும் ஒப்பில்லாத மதியினையொத்த கொற்றக்குடையினையும் வாளினையும் உடையவன் வஞ்சி அரசன். அவனின் படைகள் தங்கள் நாட்டில் வருதற்கு அஞ்சி விலக்கினான் எதிர் நாட்டரசன்.அதற்குத் திறையாக வஞ்சி அரசனுக்கு யானைகளையும் குதிரைகளையும் திறைப் பொருளாக வழங்கினான்.

## 3.1.18 இதுவுமது:

கட்டூரது வகைகூறினும்

அத்துறைக்கு உரித்தாகும்.

பகைவர்கண் படையெடுத்துச் சென்ற வஞ்சி அரசன் போர் தொடுக்காது பகைவரைப் பணி செய்த வெற்றிக் களிப்போடு பாசறைக்கண் தங்கியிருப்பதனைச் சொல்லுவது இத்துறை ஆகும்.

அவிழ்மலர்க் கோதைய ராட வொருபால்

இமிழ்முழவம் யாழோ டியம்பக்-கவிழ்மணிய

காய்கடா யானை யொருபாற் களித்ததிரும்

ஆய்கழலான் கட்டு ரகத்து.

வஞ்சி அரசன், எதிர்த்துப் போர் செய்வோர் இல்லாமையால் பாசறைக்கண் தங்கினான். அவன் அமர்ந்திருந்த இருக்கையினைச் சுற்றி ஒரு பக்கம் ஆடல் மகளிர் ஆடினர். மற்றொரு பக்கம் முழவானது யாழிசையோடு முழங்கியது.அதனைக் கேட்ட போர் யானைகள் மகிழ்ச்சியுற்று ஆராவரித்தன.

## 3.1.19 ஒருதனிநிலை:

பொருபடையுள்கற்சிறைபோன்று

ஒருவன்தாங்கிய நிலையுரைத்தன்று.

போரினைச்செய்யும் படையிடத்து வெள்ளம் தள்ளாதபடி கல்லாற்கட்டின கரையேபோலப் பெரும்படையை ஒருவீரன் தடுத்த நிலையைச் சொல்லியது.

வீடுணர்ந் தோர்க்கும் வியப்பாமா லிந்நின்ற

வாடன் முதியாள் வயிற்றிடம் - கூடார்

பெரும்படை வெள்ள நெரிதரவும் பேரா

இரும்புலி சேர்ந்த விடம் .

வஞ்சி மறவரை நோக்கி பகைவரின் படை வந்தது. ஆயினும் இவ் வீரன் தான் நின்ற இடத்தில் இருந்து நீங்காமல் தனித்து நின்று போராடினான்.இத்தகைய செயலைச் செய்த இவன் புலியைப் போல்வான்.இம் மறவன் முன்பு கிடந்த இடம் வற்றிய உடலுடன் நிற்கும்

மூதாட்டியின் வயிறு ஆகும்.இத்தகு செயலானது சான்றோருக்கும் துறவியருக்கும் வியப்பைத் தரும் செயலாகும்.

### 3.1.20 தழிஞ்சி:

அழிகுநர் புறக்கொடை அயில்வான் ஓச்சாக்

கழிதறு கண்மை காதலித்து உரைத்தன்று .

குறிப்பு

ஒருவீரன் தனக்குக் புறமுதுகிட்டு ஓடுவாரின் முதுகுபுறத்துக் கூரிய வாளினை வீசாத மிக்க மறப்பண்பை விரும்பிச்சொல்லியது இத் துறையாகும்.

கான்படு தீயிற் கலவார்தன் மேல்வரினும்

தான்படை தீண்டாத் தறுகண்ணன் - வான்படர்தல்

கண்ணியபி னன்றிக் கறுத்தார் மறந்தொலைதல்

எண்ணியபின் போக்குமோ வெ.ஃ.கு .

போர்க்களத்தில் வஞ்சி மறவனை எதிர்த்துப்’ பகை மறவர் காட்டில் தோன்றிய நெருப்பினைப் போல சீறி வந்தனர். அப்போதும் வஞ்சி மறவன் தன் வாளினை எடுத்தான் இல்லை. பகைவர் விழுப்புண் பெற்று விண்ணுலகம் செல்லும் திறத்தினர் ஆதல் வேண்டும். அல்லது என்னைக் கொல்லும் எண்ணத்துடன் வரல் வேண்டும். அவர்களுடன் மட்டும்தான் போர் செய்வேன் என்ற உறுதிப்பாட்டுடன் நின்றான். அத்தகையவன் போரில் புறமுதுகிட்டுச் செல்வார் பின் வாள் வீசுவானோ? செய்யமாட்டான் என்பதாம்.

### 3.1.21 பாசறைநிலை:

மதிக்குடைக்கீழ் வழிமொழிந்து மன்னர் எல்லாம் மறந்துறப்பவும்

பதிப்பெயரான் மறவேந்தன் பாசறை இருந்தன்று .

நிறைமதி போலும் வெண்கொற்றக்குடையின்கீழே தாழ்வு சொல்லி வேந்தர் பலரும் பகைமையை விடவும் அவ்விடத்தினின்றும் போகாது மறத்தினையுடைய மன்னன் பாடிவீட்டிலே இருந்தான் என்பது இத்துறையாகும்.

கரும்பொடு காய்நெற் கனையெரி யூட்டிப்

பெரும்புனல் வாய்திறந்த பின்னும் - சுரும்பின்

தொகைமலிந்த தண்குவளைத் தூமலர்த் தாரான்

பகைமெலியப் பாசறையு ளான்

கரும்பினையும் காய்ந்த நெல்லினையும் முழங்கும் நெருப்பினை உண்ணவைத்து பெரிய நீர்நிலைகள் பலவும் உடைத்தபின்னும் வண்டின்

கூட்டமிக்க குளிர்ந்த செங்கழுநீரின் தூய்தான பூவாற் செய்த மாலையினையுடையோன் பகைவர்கள் அழகிழக்க விட்ட படை வீட்டிலே இருந்தான்.



குறிப்பு

### 3.1.22 பெருவஞ்சி:

வஞ்சி வேந்தன் தன்னுடைய பகைவர் நாட்டினை மறுபடியும தீயிட்டு அழிப்பது பெருவஞ்சி எனப்படும். தன்பால் பணியாத பகைமன்னனின் தன்மை கண்ட வஞ்சி வேந்தன் பெருஞ்சினம் கொண்டு அழித்தலின் இது பெருவஞ்சி என்னும் துறையாயிற்று.

முன்அடையார் வளநாட்டைப்
பின்னரும்உடன்று எரிகொளீஇயன்று.

தன்னுடைய முன்னே வந்து செறியாதார் நல்ல தேசத்தைப் பின்பும் கோபித்து நெருப்பைக் கொளுத்தியது

பீடுலாம் மன்னர் நடுங்கப் பெரும்புகை
ஊடுலாய் வானதது ஒளிமறைப்ப - நாடெலாம்
பின்னும் பிறங்கழல் வேய்ந்தன பெய்கழற்கால்
மன்னன் கனல மறம்

பணியாத பகை அரசரின் நாட்டினை வஞ்சி அரசன் தீயிட:டுக் கொளுத்தினான். அதனால் எழுந்த புகையானது ஞாயிற்றின் ஒளியை மறைத்தது என்றமையால் இப்பாடல் மேற்கண்ட துறையாயிற்று.

### 3.1.23 பெருஞ்சோற்று நிலை:

வஞ்சி மறவன் தன்னுடைய வீரர்களுக்கு மிகுந்த சோற்றினை அளிப்பது பெருஞ்சோற்றுநிலை எனப்படும்.

திருந்தார் தெம்முனை தெறுகுவர் இவர்எனப்
பெருஞ்சோறு ஆடவர் பெறுமுறை வகுத்தன்று

வஞ்சி மறவன் தன்னுடைய வீரர்களுக்கு மிகுந்த சோற்றினை அளிப்பது பெருஞ்சோற்றுநிலை எனப்படும்.

இயவர் புகழ எறிமுரசு ஆர்ப்ப
குயம்வரி வேங்கை அனைய – வாயவ
பெறும் முறையால் பிண்டம்கோள் ஏவினான் பேணார்
இறுமுறையால் எண்ணி இறை

குறிப்பு

புலி அனைய தன் வீரர்களை அழைத்த வஞ்சி அரசன் அவரவர்கட்கு உரிய வரிசை முறையான் பெருஞ்சோறு அளித்தான் எனக் குறித்தமையால் இத்துறை பெருஞ்சோற்றுநிலை என்பதாயிற்று.

### 3.1.24 நல்லிசை வஞ்சி:

வஞ்சி வேந்தனின் வெற்றியைப் புகழ்ந்து பாடுதல் வஞ்சி அரசனால் அழிந்து பட்ட பகையரசனின் நாட்டிற்காக வருந்திப் பாடுதல் என்னும் இரண்டும் .இத்துறை ஆகும்.

ஒன்னாதார் முனைகெட இறுத்த
வென்வேல் ஆடவன் விறன்மிகுத்தன்று .

பகைவர்கள் அழிய வென்றி வேலினை யுடையவன் வஞ்சி மன்னனின் வெற்றியை மிகுத்துச் சொல்லியது

மடங்கலிற் சீறி மலைத்தெழுந்தார் மண்மேல்
இடங்கெடச் சென்றிறுத்த பின்னும் - நுடங்கெரிபோல்
வெல்லப் பெருகும் படையாற்கு வேந்தர்மேற்
செல்லப் பெருகுஞ் சினம் .

சிங்கம்போலும் சினத்தினைக் கொண்ட வஞ்சி அரசன் பகைவர் நாட்டின்கண் தன் படையினை நடத்திச் சென்று சினம் குறையாதவனாய்ப் பகைவர் நாட்டின் மேல் செல்லக் கருதினான்.எனவே அவனின் கோபம் அசையும் நெருப்பினைப் பொல காணப்பட்டது என்றமையால் இது மேற்கண்ட துறையாயிற்று

இது வென்றோர் விளக்கங் கூறியது.

### 3.1.25 இதுவுமது:

இறுத்தபின் அழிபிரங்கல்
மறுத்து உரைப்பினும் அத்துறையாகும் .

வஞ்சி வேந்தன் பகைவர் நாட்டின்கண் படையெடுத்துச் சென்று தங்கினான். ஆஅனால் பகைவர் நாடு பேரழிவிற்கு உள்ளாயிற்று எனக் கூறுவது இத்துறை ஆகும்.

குரையழன் மண்டிய கோடுயர் மாடம்
சுரையொடுபேய்ப் பீர்க்குஞ் சுமந்த - நிரைதிண்டேர்ப்
பல்லிசை வென்றிப் படைக்கடலான் சென்றிறுப்ப
நல்லிசை கொண்டடையார் நாடு .

வஞ்சி அரசனால் தீக்கிரையாக்கப்பட்ட மலையை ஒப்ப ஓங்கின மாளிகையெல்லாம் பேய்ச்சுரையும் பேய்ப்பீர்க்கும் விளையும் இடங்கள்

ஆயின என பகைவர் நாடு பேரழிவிற்கு உள்ளாயிற்று எனக் கூறியதால் இது மேற்கண்ட துறையாயிற்று.



## பயிற்சி வினாக்கள்:

**1.கொற்றவை நிலை விளக்கி வரைக.**

வெற்றியின் தலைமகளாய் விளங்கும் கொற்றவையின் அருளினைப் புகழ்ந்து கூறுவதல், வஞ்சி மறவர்களின் போர்த் திறத்தினைப் புகழ்ந்து கூறுதல் என கொற்றவை நிலை இரு திறத்ததாகும்.

நீடோளான் வென்றிகொள்கென நிறைமண்டை
வலன்உயரிக்
கூடாரைப் புறங்காணும் கொற்றவைநிலை உரைத்தன்று.

நீண்ட தோளினையுடையவன் வெற்றி பெறுவானாக எனச் சொல்லி நல்ல பொருள்களால் நிரம்பிய பாத்திரத்தை வெற்றியாக எடுத்து அரசனுடைய பகைவரை முதுகுபுறங்காணும் கொற்றவை நிலைமையைச் சொல்லியது.

அணங்குடை நோலை பொரிபுழுக்கல் பிண்டி
நிணங்குடர் நெய்த்தோர் நிறைத்துக்- கணம்புகலக்
கையிரிய மண்டைக் கணமோடி காவலற்கு
மொய்யிழியத் தான்முந் துறும்.

வலிமை வாய்ந்த தோள்களை உடைய வெட்சி மன்னன் வெற்றி பெற வேண்டும் என்று வெட்சி மறவர்கள் கொற்றவையை வழிபட்டனர். அவர்களின் வேண்டுதலை உள்ளத்தில் கொண்ட கொற்றவை அவ் வெற்றிக்கு அடையாளமாகக் குருதி நிறைந்த மண்டையைக் காட்டிப் பகைமன்னரைப் புற முதுகிட்டு ஓடச் செய்தாள். இவ்வாறு கொற்றவையின் அருள் நிலையினைக் கூறுவது கொற்றவை நிலை எனப்படும்

**2. பெருஞ்சோற்று நிலை குறித்தெழுதுக**

வஞ்சி மறவன் தன்னுடைய வீரர்களுக்கு மிகுந்த சோற்றினை அளிப்பது பெருஞ்சோற்றுநிலை எனப்படும்.

திருந்தார் தெம்முனை தெறுகுவர் இவர்எனப்
பெருஞ்சோறு ஆடவர் பெறுமுறை வகுத்தன்று

வஞ்சி மறவன் தன்னுடைய வீரர்களுக்கு மிகுந்த சோற்றினை அளிப்பது பெருஞ்சோற்றுநிலை எனப்படும்.

இயவர் புகழ எறிமுரசு ஆர்ப்ப
குயம்வரி வேங்கை அனைய – வாயவ

பெறும் முறையால் பிண்டம்கோள் ஏவினான் பேணார்
இறுமுறையால் எண்ணி இறை

புலி அனைய தன் வீரர்களை அழைத்த வஞ்சி அரசன் அவரவர்கட்கு உரிய வரிசை முறையான் பெருஞ்சோறு அளித்தான் எனக் குறித்தமையால் இத்துறை பெருஞ்சோற்றுநிலை என்பதாயிற்று.

குறிப்பு

**3.நெடுமொழி வஞ்சி என்பதனை விவரி**

ஒன்னாதார் படைகெழுமித்
தன்ஆண்மை எடுத்துரைத் தன்று.

பகைவர் படையினை நெருங்கித் தன் ஆண்மையினை எடுத்துக் கூறல் இத்துறை ஆகும்.

இன்ன ரெனவேண்டா வென்னோ டெதிர்சீறி
முன்னர் வருக முரணகலும்-மன்னர்
பருந்தார் படையமருட் பல்லார் புகழ
விருந்தா யடைகுறுவார் விண்.

என் முன் நிற்கும் மன்னர்களே! நாங்கள் இத்துணை சிறப்புடையோம் என்று தற்பெருமை பேச வேண்டாம்.அத்தகைய வீரம் உடையவர்கள் ஆயின் என்முன் போர் செய்ய வருவீர்களாகுக.பருந்துகள் நிறைந்தது இப் போர்க்களம். இதில் என்னை எதிர்த்து நிற்போர் எல்லோராலும் புகழப்படுவர். மேலும் விண்ணிற்கு விருந்தாகவும் செல்லுவர் என்பதனால் இத்துறை நெடுமொழி வஞ்சி என்பது ஆயிற்று.

## கூறு: 4 காஞ்சிப்படலம்

### நோக்கம்: காஞ்சித்திணையின் இலக்கணம், அவற்றின் பிரிவுகள் போன்றவற்றை மாணவர்களுக்குக் கற்பித்தல்

### 4.காஞ்சிப் படலம்:

தன் நாட்டினைக் கொள்ளப் பகையரசன் வந்தான் என்பதனை அறிந்த அரசன் தன் படைகளைத் திரட்டிச் சென்று தன் நாட்டின் எல்லையின்கண் நின்று தடுத்துப் போர் புரிவான். இப்போரினைச் செய்யும் அரசனும் மறவர்களும் காஞ்சிப் பூவினைச் சூடுவர். எனவே இத்திணை காஞ்சித் திணை ஆயிற்று.

### 4.1 காஞ்சித்திணையின் துறைகள்:

காஞ்சி காஞ்சி அதிர்வே தழிஞ்சி

பெரும்படை வழக்கொடு பெருங்காஞ் சிய்யே
வாள்செல என்றா குடையது செலவே
வஞ்சினக் காஞ்சி பூக்கோள் நிலையே
புகழ்த்தலைக் காஞ்சி தலைமா ராயம்
தலையொடு முடிதல் மறப்பெயர்க் காஞ்சி
மாற்றரும் பேய்நிலை பேய்க்காஞ் சிய்யே
தொட்ட காஞ்சி தொடாக்காஞ் சிய்யே
மன்னைக் காஞ்சி கட்காஞ் சிய்யே
ஆஞ்சிக் காஞ்சி மகட்பாற் காஞ்சி
முனைகடி முன்னிருப்பு உளப்படத் தொகைஇ
எண்ணிய வகையான் இருபத் திரண்டும்
கண்ணிய காஞ்சித் துறையென மொழிப.

இச் சூத்திரம் காஞ்சித்திணையின் துறைகள் ஆகும்.

காஞ்சி, காஞ்சியதிர்வு, தழிஞ்சி, படைவழக்கு, பெருங்காஞ்சி, வாள்செலவு, குடைச்செலவு, வஞ்சினக்காஞ்சி, பூக்கோணிலை, தலைக்காஞ்சி, தலைமாராயம், தலையொடுமுடிதல், மறக்காஞ்சி, பேய்நிலை, பேய்க்காஞ்சி, தொட்டகாஞ்சி, தொடாக்காஞ்சி, மன்னைக்காஞ்சி, கட்காஞ்சி, ஆஞ்சிக்காஞ்சி, மகட்பாற்காஞ்சி, முனைகடி முன்னிருப்பு என இவை இருபத்திரண்டும் காஞ்சித்திணையும் துறையுமாம்.

## 4.1.1 காஞ்சி:

தன் நாட்டினைக் கவர பகையரசன் வந்தான் என்பதனை அறிந்த அரசன் தன் படைகளைத் திரட்டிச் சென்று காஞ்சிப் பூவினைச் சூடிப் போர் புரிதல் இத்துறை ஆகும்.

வெஞ்சின மாற்றான் விடுதர வேந்தன்

காஞ்சி சூடிக் கடிமனை கருதின்று.

மிகுந்த சினத்தையுடைய வேற்றுமன்னன் வந்துவிட அரசன் காஞ்சியென்னும் பூவைச் சூடிக் காவலிடத்தைக் காக்க நினைந்தது இத்துறை ஆகும்.

அருவரை பாய்ந்திறுது மென்பார்பண் டின்றிப்

பெருவரைச் சீறூர் கருதிச் - செருவெய்யோன்

காஞ்சி மலையைக் கடைக்கணித்து நிற்பதோ

தோஞ்செய் மறவர் தொழில் .



போர்க்களத்தில் பொருவாரில்லாதபடியால் முன்பு ஏறுதற்கரிய மலையேறி விழுந்தாயினும் உயிர்துறப்போம் என்னும் காஞ்சி மறவர் இன்று பகைவர் வந்தனர் என்பதனை அறிந்து காஞ்சிப் பூவினைச் சூடி பகை மேற் சென்றனர் என்றமையால் இது மேற்கண்ட துறை ஆயிற்று.

### 4.1.2 காஞ்சியதிர்வு:

**குறிப்பு**

வஞ்சி மறவர் படையெடுத்து வருவதனை கண்ட தன் மறவரின் ஆற்றலை மிகுத்துச் சொல்லுவது இத்துறை ஆகும்.

மேல்வரும் படைவரன் மிகவும் ஆற்றா

வேல்வல் ஆடவன் விறன்மிகுத் தன்று .

எதிர் வரும் சேனை மேலிடுதலைப் பொறாத வேல் தொழிலை வல்ல வீரனுடைய வெற்றியை உயர்த்திச் சொல்லியது இத்துறையாகும்.

மன்மேல் வருமென நோக்கான் மலர்மார்பில்

வென்வேன் முகந்த புண் வெய்துயிர்ப்பத் - தன்வேல்

பிடிக்கலு மாற்றாப் பெருந்தகை யேவத்

துடிக்கண் புலையான் றொடும் .

பகை மறவர் தன்மேல் எய்த வேலானது தன் மார்பினை ஊடுருவிச் சென்ற போதும் அதற்கு அஞ்சாது தன் படையில் துடி கொட்டியவனை அழைத்து துடி கொட்டச் செய்து தன் போர் விருப்பத்தினை வெளிப்படுத்தினான் காஞ்சி மறவன் என்றமையால் இது மேற்கண்ட துறையாயிற்று.

### 4.1.3 தழிஞ்சி

பகையரசன் தன் நாட்டடின் எல்லையினைத் தொடாதவாறு காஞ்சி மறவன் காத்து நின்றது இத்துறையாகும்.

பரந்து எழுதரு படைத்தானை

வரம்பு இகவாமைச் சுரம்காத்தன்று .

பேர்க்கருவிகளைத் தாங்கி வரும் வஞ்சி மன்னின் படைகள் தன் நாட்டினைத் தொடாதவாறு காஞ்சி மறவன் காத்து நின்றான் என்பது பொருளாகும்.

குலாவுஞ் சிலையார் குறும்புகொள வெ∴கி

குறிப்பு

உலாவு முழப்பொழிக வேந்தன் - கலாவும்

இனவேங்கை யன்ன விகல்வெய்யோர் காவல்

புனவேய் நரலும் புழை.

காஞ்சியரசனின் நாட்டினுள் புகும் வழியாபனது மூங்கில் காடுகள் நிறைந்த பகுதியாகும். அதனை காஞ்சிமன்னனின் புலியை ஒத்த வீரர்கள் காத்து நிற்கின்றனர். அதனால் வஞ்சி அரசன் அதனுள் செல்வதனைத் தவிர்த்து நின்றான் என்றமையால் இது மேற்கண்ட துறையாயிற்று.

## 4.1.4 படைவழக்கு:

முத்து அவிர்பூண் மறவேந்தன்

ஒத்தவர்க்குப் படைவழங்கின்று .

முத்து விளங்கும் அணிகலனை அணிந்த சினம் மிக்க மன்னன் தம்மில் இனமொத்தவருக்கு ஆயுதத்தைக் கொடுத்தது

ஐயங் களைந்திட் டடல்வெங்கூற் றாலிப்ப

ஐயிலை யெ.்.க மவைபலவும் - மொய்யிடை

ஆட்கடி வெல்களிற் றண்ணல் கொடுத்தளித்தான்

வாட்குடி வன்க ணவர்க்கு

போர்க்களத்தில் வெற்றியைத் தரும் யானைப்படையினை உடைய காஞ்சி மன்னன் தன் வீரர்களுக்கு வில், வேல் முதலிய போர்க்கருவிகளை வழங்கினான். அது வரை போர் நிகழாதோ? என ஐயுற்று நின்ற கூற்றுவன் போர் நிகழும் என எண்ணி மகிழ்ந்தான் எனக் கூறுவது இத்துறையாகும்..

## 4.1.5 இதுவுமது:

கொடுத்தபின்னர்க் கழல்மறவர்

எடுத்துரைப்பினும் அத்துறையாகும் .

அரசன் படைவழங்கிய பின்னர்க் வீரக்கழல் அணிந்த வீரர்களின் பெருமையினை உயர்த்துச் சொல்லினும் முன்புசொன்ன துறையேயாம்.

துன்னருந் துப்பிற் றொடுகழலார் சூழ்ந்திருப்பத்

தன்னம ரொள்வாளென் கைதந்தான் - மன்னற்கு

மண்ணகமோ வைகின்று மாலை நெடுங்குடைக்கீழ்

விண்ணகமும் வேண்டுங்கொல் வேந்து .

பகைவர் கிட்டுதற்கரிய வீரத்தினையும் கட்டிய வீரக்கழலினையுமுடையார் தன்னைச் சுற்றியிருக்க அரசன் தனக்கு மேவும் ஒள்ளியவாளை என் கையிலே தந்தான். அதனால் எம் அரசன் மண்ணுலகினை ஆள்வது மட்டுமன்றி விண்ணுலகினையும் வெல்லக் கருதினான் போலும் என வீரன் கூறியதாய் வீரனின் சிறப்பினை மிகுத்துக் கூறியமையால் இது மேற்கண்ட துறையாயிற்று.



## 4.1.6 பெருங்காஞ்சி:

காஞ்சி மறவர் போரின்கண் தன் வீரத்தின் பெருமையினை வெளிப்படுத்துவது.

தாங்குதிறல் மறவர் தத்தம் ஆற்றல்

வீங்குபெரும் படையின் வெளிப்படுத்தன்று .

வஞ்சி அரசரின் எதிர்வரும் படையினைத் தடுக்கும் வலியினையுடைய காஞ்சி மறவர்கள் வஞ்சி மறவரை எதிர்த்துப் போர் செய்யும் வண்ணம் தத்தம் வலியை மிகுத்துக்காட்டுவது இத்துறை ஆகும்.

வில்லார் குறும்பிடை வேறுவே றார்த்தெழுந்த

கல்லா மறவர் கணைமாரி - ஒல்லா

வெருவி மறவேந்தர் வெல்களி றெல்லாம்

இருவி வரைபோன்ற வின்று .

காஞ்சி அரசனின் விற்படை வீரர்களை எதிர்த்து வந்த வஞ்சி மன்னனின் யானைப் படைகள் வீரர்களின் வில்லில் இருந்து புறப்பட்ட அம்புபட்டமையால் அஞ்சி ஓடின. ஆவ்வாறு அஞ்சி ஓடிய யானைகள் அறுவடை செய்த தினைத்தாள்களின் மலைகளைப்போல் காட்சியளித்தன என்றமையால் இது மேற்கண்ட துறையாயிற்று.

## 4.1.7 வாள்செலவு:

காஞ்சி மன்னன் தன் வாளினைப் போர்க்களத்திற்கு எடுத்துச் செல்வது.

அருமுனையான் னஅறகூவினபின்

செருமுனைமேல் வாள்சென்றன்று .

வெல்லுதற்கரிய போரையுடைய வஞ்சி அரசன் இவனைக் காஞ்சி மன்னன் போர்க்கு அழைத்தான். உடன் காஞ்சி மன்னன் தன் வாளினைப் போர்க்களத்திற்கு அனுப்பினான் என்பது இத்துறை ஆகும்.

உணங்கு புலவறா வொன்னார் குரம்பை

நுணங்கரில் வெம்முனை நோக்கி - அணங்கிய

குந்த மலியும் புரவியான் கூடாதார்

வந்தபின் செல்கென்றான் வாள் .

பகைவரை அஞ்சச் செய்யும் ஈட்டிகளை ஏந்திய குதிரைப் படைகளை உடைய வஞ்சி அரசன் பகைவரின் புலால் நாற்றம் வீசும் பாசறைகளை நோக்கினான். உடன் தன் மறவர்களிடம் பகைவர் போருக்கு வருவர். எனவே நமது வாளினை போர்க்களம் கொண்டு செல்லுங்கள் எனப் பணித்தான் என்றமையால் இது மேற்கண்ட துறை ஆயிற்று.

## 4.1.8 குடைசெலவு:

காஞ்சி மன்னன் தன் குடையினைப் போர்க்களத்திற்கு எடுத்துச் செல்வது.

முதுகுடி மறவர் முன்னுறச் சூழக்

கொதியழல் வேலோன் குடைசென் றன்று .

நெருப்புப்போன்ற வேலினையுடையவன் காஞ்சி அரசன் தொல்குடி மறவர்கள் தன் முன்னே சூழ்ந்து போக குடையைப் புறவீடு விடுத்தது இத்துறை ஆகும்.

தெம்முனை தேயத் திறல்விளங்கு தேர்த்தானை

வெம்முனை வெற்றி 3விறல்வெய்யோன் - தம்முனை

நாட்டிப் பொறிசெறித்து நண்ணார்மேற் செல்கென்று

கூட்டிநாட் கொண்டான் குடை .

பகையரசர் ஆற்றல் கெடப் பேர் புரியும் தேர்ப்படையினை உடையவன் காஞ்சி அரசன். அவன் தன்னிடம் போர் புரிய வந்த வஞ்சி அரசனிடம் இந்த நாளில் போர் புரிய வருகிறேன் எனத் தன் இலச்சினை பொறித்த மடலினை விடுத்தான்.பின்னர் நாழிகைக் கணக்கர் குறித்த நல்லநாளில் தன் குடையினைப் போர்க்களம் நோக்கி விடுத்தான்.

## 4.1.9 வஞ்சினக் காஞ்சி:

காஞ்சி மன்னன் போர்க்களத்தில் இத்தகைய வெற்றியைப் பெறுவேன். அவ்வாறு பெறாது ஒழிவேன் ஆகில் இத்தகைய இழிநிலையைப் பெறுவேனாக என உரைப்பது இத்துறையாகும்.

வெஞ்சின வேந்தன் வேற்றவர்ப் பணிப்ப

வஞ்சினங் கூறிய வகைமொழிந் தன்று.

மிகுந்த கோபத்தையுடைய மன்னவன் பகைவரைத் தன் அடியில் பணியச் செய்வான் வேண்டி இவ்வாறு செய்வேனெனச் சொல்லியது.

இன்று பகலோ னிறவாமு னொன்னாரை

வென்று களங்கொள்ளா வேலுயர்ப்பின் - என்றும்

அரணவியப் பாயு மடையார்மு னிற்பேன்

முரணவிய முன்முன் மொழிந்து .

இன்றைய நாள் கதிரவன் மறைவதற்கு முன் பகைவரை வெற்றி பெற்று அதன் அடையாளமாக வேலினை உயர்த்துவேன். அவ்வாறு செய்ய இயலாது எனில் வஞ்சி அரசனின் பகையினை மறந்து அவன் இடும் கட்டளைக்குக் காத்து நிற்பேன் என்றமையால் இத்துறை ஆயிற்று.

### 4.1.10 பூக்கோள் நிலை:

காஞ்சி மறவர் தம் மன்னனிடம் இருந்து காஞ்சிப்பூவினைப் பெறுதல் இத்துறை ஆகும்.

கார் எதிரிய கடல்தானை

போர் எதிரிய பூக்கொண்டன்று .

மேகம் பொருந்திய முழக்கத்தினையும் கடல்போல ஆராவாரத்தினையும் உடைய காஞ்சிப் படை மறவர் அரசன் கொடுத்த காஞ்சிப்பூவினைக்கொண்டது இத்துறை ஆகும்.

பருதிசெல் வானம் பரந்துருகி யன்ன

குருதியா றாவதுகொல் குன்றூர் - கருதி

மறத்திறத்தின் மாறா மறவருங் கொண்டார்

புறத்திறுத்த வேந்திரியப் பூ .

வீரம் கொண்ட காஞ்சி மறவர் வஞ்சி வீரர்கள் தன் நாட்டின் மதில்புறத்தே இருப்பதனை அறிந்து தன் மன்னனிடம் இருந்து காஞ்சிப்பூவினை வாங்கிச் சூடிக்கொண்டனர். அதனால் வஞ்சியாரின் குருதி ஆறாக ஓடப்போகிறது என உரைத்தமையால் இத்துறை ஆயிற்று.

## 4.1.11 தலைக்காஞ்சி:

மைந்துயர மறங்கடந்தான்

பைந்தலைச் சிறப்பு உரைத்தன்று .

செருக்களத்தில் அரிய செயல் செய்து வீரமரணம் அடைந்த வீரனின் தலையைப் பாராட்டுவது இத்துறை ஆகும்.

விட்டிடனென் வேந்தன் 3விலையிடினெ னிவ்வுலகின்

இட்டுரையி னெய்துவ வெய்திற்றால் - ஒட்டாதார்

போர்தாங்கி மின்னும் புலவா ளுறைகழியாத்

தார்தாங்கி வீழ்ந்தான் றலை .

போர்க்களத்தில் பகைவரின் வலிமை கெடும்படி போர் செய்து வீரமரணம் அடைந்தவன் காஞ்சி மறவன். அவனின் குருதி சொட்ட வெட்டி வரப்பட்ட தலையியினைக் கண்டு அரசன் வியந்து பாராட்டியதைக் குறித்தமையால் மேற்கண்ட பாடல் இத்துறை ஆயிற்று

## 4.1.12 தலைமாராயம்:

தலைகொடுவந்தான் உண்மலியச்

சிலைஉடைவேந்தன் சிறப்புஈந்தன்று.

தலையைக் கொண்டு வந்த பிறிதோர் மறவனுக்கு காஞ்சி மன்னன் மனமுவந்து செல்வத்தைக் கொடுத்தல்.

உவன்றலை யென்னு முறழ்வின்றி யொன்னார்

இவன்றலையென் றேத்த வியலும் - அவன்றலை

தந்தாற்கு நல்கல் வியப்போ கிளந்தேத்தி

வந்தார்க் குவந்தீயும் வாழ்வு .

காஞ்சி மறவன் பகைவரின் தலையினைத் தன் வாளால் வெட்டினான். பின் அவர்களால் வெட்டுப்பட்டு போர்க்களத்தில் இறந்தான். அத்தகைய சிறப்புடைய மறவனின் தலையினைக் கொண்டு வந்தானுக்கு அரசன் மகிழ்ந்து பொருள் கொடுத்தான் என்றமையால் இத்துறை ஆயிற்று.

## 4.1.13 தலையொடு முடிதல்:

மண்டு அமருள் மாறாமைந்தின்

கொண்டான் தலையொடு கோல்வளை முடிந்தன்று .



போர்க்களத்தில் வீரமரணம் அடைந்த தன் கணவனின் தலையுடனே திரண்ட வளையினையுடைய மனைவியும் இறந்தது இத்துறை ஆகும்.

**குறிப்பு**

கொலையானாக் கூற்றங் கொடிதே கொழுநன்

தலையானா டையலாள் கண்டே - முலையால்

முயங்கினாள் வாண்முகமுஞ் சேர்த்தினா ளாங்கே

உயங்கினா ளோங்கிற் றுயிர்.

காஞ்சி மறவன் பகைவரின் தலையினைத் தன் வாளால் வெட்டினான். பின் அவர்களால் வெட்டுப்பட்டு போர்க்களத்தில் இறந்தான். அத்தகைய சிறப்புடைய மறவனின் தலையினைக் கொண்டு வந்தான் ஒரு மறவன். தன் கணவனின் தலையினைக் கண்ட மனைவி அத்தலையினோடு தன் தலையினைச் சேர்த்து தன் உயிர் விடுத்தாள் என்றமையால் மேற்கண்ட பாடல் இத்துறை ஆகும்.

## 4.1.14 மறக்காஞ்சி:

இலைப்பொலிதார் இகல்வேந்தன்

மலைப்பொழிய மறங்கடைஇயன்று .

பசிய இலையினால் பொலிவு பெற்ற மாலையினால் சிறந்த வலிமையினையுடைய மன்னன் பகைவர் மாறுபாடு நீங்க மறத்தொழிலைச் செலுத்தியது இத்துறை ஆகும்.

கருந்தலையும் வெண்ணிணமுஞ் செந்தடியு மீராப்

பருந்தோ டெருவை படர - அருந்திறல்

வேறாய மன்னர் வியப்பக் கடாயினான்

மாறா மறவன் மறம் .

ஆற்றல் பொருந்திய காஞ்சி மன்னன் வஞ்சியார் அஞ்சும்படிப் போர் செய்தான். அதனால் வஞ்சி மன்னன் போர்க்களத்தில் வீழ்ந்துபட்டான். அவனின் கறுத்த தலையையும் வெள்ளைநிணத்தையும் சிவந்த தசையையும் இழுத்துக்கொண்டு பருந்தும் கழுகும் சென்றன என்றமையால் இத்துறை மறக்காஞ்சி ஆயிற்று.

## 4.1.15 இதுவுமது:

மண்கெழு மறவன் மாறுநிலை நோனான்

புண்கிழித்து முடியினும் அத்துறை யாகும் .

மறத்தொழிலையுடைய காஞ்சி வீரன் பகைவருடைய வெற்றியைப் பொறுக்க இயலாதவனாகி பகைவர்வேல்பட்ட தன் மார்பிற் புண்ணைத் தானே பிளந்து கொண்டு இறப்பதும் இத்துறையேயாம்.

நகையம ராய நடுங்க நடுங்கான்

தொகையம ரோட்டிய துப்பிற் - பகைவர்முன்

நுங்கிச் சினவுத னோனா னுதிவேலாற்

பொங்கிப் பரிந்திட்டான் புண் .

காஞ்சி மறவர் பகைவரின் படையாற்றலைக் கண்டு அஞ்சிய போதும் இவ்வீரன் மட்டும் அஞ்சாது போர் செய்தான்.அப்போரில் வஞ்சி மறவர் வெற்றி பெற்று வருதலைக் கண்டு மனம் பொறாதவனாகித் தன் புண்ணினை தானே கிழித்துக் கொண்டு உயிர் துறந்தான் என்றமையால் இத்துறை மறக்காஞ்சி ஆயிற்று.

### 4.1.16 பேய்நிலை:

செருவேலோன் திறம்நோக்கிப்

பிரிவின்றிப் பேய்ஓம்பின்று.

புண்பட்டு வீழ்ந்த மறவனைப் பேய் காப்பது பேய்நிலை என்பதாகும்.

ஆயு மடுதிறலாற் கன்பிலா ரில்போலும்

தோயுங் கதழ்குருதி தோள்புடைப்பப் - பேயும்

களம்புகலச் சீறிக் கதிர்வேல்வாய் வீழ்ந்தான்

உளம்புகல வோம்ப லுறும் .

பகைவரைக் கொன்று போர்க்களத்தில் வீழ்ந்த வலிமையினை உடைய வீரனுக்கு அன்பிலாதார் இல்லைபோலும்; போர்க்களத்தில் வீழ்ந்து கிடந்த வீரனை அவன் மனம் மகிழும்படி பேய் காத்தது என்றமையால் இது பேய்நிலை ஆயிற்ற.

### 4.1.17 பேய்க்காஞ்சி:

பிணம்பிறங்கிய களத்துவீழ்ந்தார்க்கு

அணங்குஆற்றா அச்சுறீஇயன்று.

போர்க்களத்திலே புண்பட்டுக் கிடக்கும் மறவனைப் பேய் மிகவும் அச்சமுறுத்தல் இத்துறை ஆகும்.

கொட்கு நிமிருங் குறுகுங் குடர்சூடிப்

பெட்ப நகும்பெயரும் பேய்மகள்-உட்கப்

புனலங் குருதிப் புலால்வாய்க் கிடந்து

கனல விழிப்பவற் கண்டு .

குறிப்பு

போர்க்களத்தில் வீழ்ந்து கிடந்த மறவனைச் சுற்றி நின்ற பேயானது நிமிர்ந்தும் குறுகியும் சுழன்றும் குடரை மாலையாகச் சூட்டிக் கொண்டும் அச்சமூட்டியது, ஆனால் அதனைக் கண்டும் மறவன் அஞ்சாதிருந்தான் என்றமையால் இத்துறை பேய்க்காஞ்சி ஆயிற்று.

## 4.1.18 தொட்ட காஞ்சி:

வியன்மனைவிடலை புண்காப்பத்

துயன்முலைப்பேழ்வாய்ப் பேய்தொட்டன்று

போர்க்களத்திலே புண்பட்டுக் கிடக்கும் மறவனின் புண்ணைப் பேய் தொடுவது இத்துறை ஆகும்.

கொன்றுருத்த கூர்வே லவற்குறுகிக் கூரிருள்வாய்

நின்றுருத்து நோக்கி நெருப்புமிழாச் - சென்றொருத்தி

ஒட்டார் படையிடந்த வாறாப்பு ணேந்தகலம்

தொட்டாள் பெருகத் துயில் .

போர்க்களத்தில் விழுப்புண் பெற்ற வீரனை உறவினர்கள் வீட்டில் வைத்துப் பாதுகாத்தனர், ஒருநாள் அவர்கள் அறியாத படி இரவில் சென்ற பேய் அவன் இறந்து போகும்படி அவனுடைய மார்பினைத் தொட்டது என்றமையால் இது தொட்ட காஞ்சி என்னும் துறையாயிற்று.

## 4.1.19 தொடாக் காஞ்சி:

அடலஞ்சா நெடுந்தகைபுண்

தொடல்அஞ்சித் துடித்துநீங்கின்று .

போர்க்களத்திலே புண்பட்டுக் கிடக்கும் மறவனின் புண்ணைப் பேய் தொட அஞ்சி நிற்பது இத்துறை ஆகும்.

ஐயவி சிந்தி 3நறைபுகைத் தாய்மலர் தூய்க்

கொய்யாக் குறிஞ்சி பலபாடி - மொய்யிணர்ப்

பூப்பெய் தெரிய னெடுந்தகைபுண் யாங்காப்பப்

பேய்ப்பெண் பெயரும் வரும் .

போர்க்களத்தில் விழுப்புண் பெற்ற வீரனை உறவினர்கள் வீட்டில் வைத்துப் வெண்சிறுகடுகினைத் தூவிக் குங்கிலியம் முதலான நறுநாற்றத்தைப் புகைத்துத் தெரிந்த பூவினைச்சிதறிப் குறிஞ்சிப்பண் பலவும்பாடிச் மலரிட்டுத் தொடுத்த மாலையால் நிறைந்த பெரிய மேம்பாட்டினையுடையவன் புண்ணைப் பாதுகாத்தனர்.அதனால் பேயானது அவனின் புண்ணினைத் தீண்ட அஞ்சி விட்டுச் சென்றது என்றமையால் இப்பாடல் தொடாக்காஞ்சி ஆயிற்று.



குறிப்பு

## 4.1.20 மன்னைக் காஞ்சி:

வியல்இடம்மருள விண்படர்ந்தோன்

இயல்பேத்தி அழிபுஇரங்கின்று.

போர்க்களத்தில் வீரமரணம் அடைந்த வீரனின் புகழினைப் பிறர் பாராட்டி வருந்துவது இத்துறை ஆகம்.

ஊர்க்கு முலகிற்கு மோருயிர்மன் - யார்க்கும்

அறந்திறந்த வாயி லடைத்ததா லண்ணல்

நிறந்திறந்த நீளிலை வேல் .

போர்க்களத்தில் இறந்த வீரன் போருக்குத் தெப்பம் ஒப்பவன்.உயர்ந்தோர்க்குத் மாளிகையைத் தாங்கும் தூண் ஒப்பவன், தன் ஊருக்கும் உலகுக்கும் உயிரைப் போன்றவன்.இத்தகையவனுடைய மார்பினை பகைவருடைய வாளானது பிளந்து உயிரைப் போக்கியது.இத்தகைய செயலினைச் செய்த வேலானது யாவர்க்கும் அறம் செய்வதாகிய வாயிலை அடைத்து விட்டது எனப் பிறர் கூறி வருந்தினர் என்றமையால் இது மன்னைக்காஞ்சி ஆயிற்று.

## 4.1.21 கட்காஞ்சி:

நறமலியும் நறுந்தாரோன்

மறமைந்தர்க்கு மட்டுஈந்தன்று.

தேன் மிகுந்த மாலையினை அணிந்த மன்னன் தன் மறவர்களுக்குக் கள்ளினை வழங்கியது இத்துறை ஆகும்.

ஒன்னா முனையோர்க் கொழிக வினித்துயில்

மன்னன் மறவர் மகிழ்தூங்கா - முன்னே
படலைக் குரம்பைப் பழங்கண் முதியாள்
விடலைக்கு வெங்கள் விடும்.

குறிப்பு

ஒரு குடிசையில் வாழ்கின்ற மூதாட்டியின் மகனுக்கு மன்னன் பிறர் அருந்தும் முன் கள்ளினை வழங்கினான்.அதனால் பகைவர்களின் உறக்கம் என்பது இல்லாமல் போனது என்றமையால் இது கட்காஞ்சி ஆயிற்று.

## 4.1.22 ஆஞ்சிக் காஞ்சி:

காதற் கணவனொடு கனையெரி மூழ்கும்
மாதர் மெல்லியல் மலிபுஉரைத் தன்று.

போர்க்களத்தில் வீரமரணம் அடைந்த அன்பினையுடைய தன் கணவனை நெருப்பிலே வைத்தபோது மனைவியும் அந்நெருப்பிலே வீழ்ந்து இறப்பதன் மேன்மையினைச் சொல்வது இத்துறையாகும்.

தாங்கிய கேளொடு தானு மெரிபுகப்
பூங்குழை யாயம் புலர்கென்னும் - நீங்கா
விலாழிப் பரித்தானை வெந்திறலார் சீறூர்ப்
புலாழித் தலைக்கொண்ட புண்.

போர்க்களத்தில் வீரமரணம் அடைந்த அன்பினையுடைய தன் கணவனை நெருப்பிலே வைத்தபோது அந்நெருப்பிலே வீழ்ந்து இறப்பதனை விரும்பிய மனைவி தன் தோழியரை அப்புறம் அகன்று செல்லுங்கள் என்பதனை உணர்த்தியமையால் இது ஆஞ்சிக்காஞ்சி ஆயிற்று.

## 4.1.23 இதுவுமது:

மன்னுயிர் நீத்த வேலின் மனையோள்
இன்னுயிர் நீப்பினும் அத்துறை யாகும்.

தலைவன் உயிரினை நீக்கின வேலாலே மனைவி தன் இனிய ஆவியைப் போக்கிக் கொண்டாள் என்பதனைக் குறிப்பது இத்துறையாகும்.

கவ்வைநீர் வேலிக் கடிதேகாண் கற்புடைமை செய்யுள்
வெவ்வேல்வாய் வீழ்ந்தான் விறல்வெய்யோன்

இம்பிற் பிறழுந் தடங்க ணவன்காதற் அவ்வேலே
அடிகள்

போர்க்களத்தில் வெற்றியை விரும்பிய மறவன் அப்போர்க்களத்திலே வேல்பட்டு இறந்தான். அந்த வேலே பிறழ்கின்ற பெரிய கண்களை உடைய அவ்வீரனின் மனைவிக்கும் கூற்றாயிற்று என்றமையால் இப்பாடல் ஆஞ்சிக்காஞ்சி ஆயிற்று.

### 4.1.24 மகட்பாற் காஞ்சி:

ஏந்திழையாள் தருகஎன்னும்

வேந்தனொடு வேறுநின்றன்று.

காஞ்சியரசன் தன் மகளைக் கேட்டு வந்த வஞ்சியரசனோடு மாறுபட்டு நிற்பது இத்துறையாகும்.

அளிய கழல் வேந்த ரம்மா வரிவை

எளியளென் றெள்ளி யுரைப்பிற் - குளியாவோ

பண்போற் கிளவியிப் பல்வளையாள் வாண்முகத்த

கண்போற் பகழி கடிது.

காஞ்சி மன்னனின் மகளோ திருமகளை ஒத்த சிறப்பினை உடையவள்.அக்காஞ்சி வேந்தன் மகள் பண்ணினைப் போன்ற சொல்லினை உடையவள் பலவாகிய வளையல்களை அணிந்தவள்.அத்தகையவளின் கூர்மையான கண்கள் தன்னை எளிதில் அடைந்துவிடலாம் என்ற கருதும் வஞ்சி வேந்தனின் மார்பில் கூர்மையான அம்புபோல் சென்று தைக்கும்.

### 4.1.25 முனைகடி முன்னிருப்பு

மன்னர் யாரையும் மறங்காற்றி

முன்னிருந்த முனைகடிந்தன்று.

வஞ்சி வேந்தனுக்குத் துணையாக வந்த வேந்தர் பலர் அஞ்சி ஓடும்படி காஞ்சி அரசன் போர் செய்தான். அதனால் அவ்வேந்தர்கள் அஞ்சி ஓடினர் எனச் சொல்வது இத்துறை ஆகும்.

கடிகமழ் வேரிக் கடைதோறுஞ் செல்லக்

கொடிமலி கொல்களி றேவித் - துடிமகிழ

ஆர்த்திட் டமரு ளடையாரை யம்முனையிற்

பேர்த்திட்டான் பெய்கழலி னான் .

வீரக்கழலினை உடைய காஞ்சிவேந்தன் தன் யானைப் படையினை பகைவர்கள்மேல் ஏவினான். அதனால் வஞ்சி அரசனுக்குத் துணையாக வந்த பகையரசர்கள் அஞ்சி ஓடினர் என்றமையால் இப்பாடல் மேற்கண்ட துறையாயிற்று.

*இலக்கணம் - புறப்பொருளும் அணியிலக்கணமும்*

**பயிற்சி வினாக்கள்:**

குறிப்பு

**1.வஞ்சினக் காஞ்சி - விளக்குக**

காஞ்சி மன்னன் போர்க்களத்தில் இத்தகைய வெற்றியைப் பெறுவேன். அவவாறு பெறாது ஒழிவேன் ஆகில் இத்தகைய இழிநிலையைப் பெறுவேனாக என உரைப்பது இத்துறையாகும்.

வெஞ்சின வேந்தன் வேற்றவர்ப் பணிப்ப

வஞ்சினங் கூறிய வகைமொழிந் தன்று.

மிகுந்த கோபத்தையுடைய மன்னவன் பகைவரைத் தன் அடியில் பணியச் செய்வான் வேண்டி இவ்வாறு செய்வேனெனச் சொல்லியது.

இன்று பகலோ னிறவாமு னொன்னாரை

வென்று களங்கொள்ளா வேலுயர்ப்பின் - என்றும்

அரணவியப் பாயு மடையார்மு னிற்பேன்

முரணவிய முன்முன் மொழிந்து .

இன்றைய நாள் கதிரவன் மறைவதற்கு முன் பகைவரை வெற்றி பெற்று அதன் அடையாளமாக வேலினை உயர்த்துவேன். அவ்வாறு செய்ய இயலாது எனில் வஞ்சி அரசனின் பகையினை மறந்து அவன் இடும் கட்டளைக்குக் காத்து நிற்பேன் என்றமையால் இத்துறை ஆயிற்று.

**2.தொட்ட காஞ்சி குறித்து எழுதுக.**

வியன்மனைவிடலை புண்காப்பத்

துயன்முலைப்பேழ்வாய்ப் பேய்தொட்டன்று

போர்க்களத்திலே புண்பட்டுக் கிடக்கும் மறவனின் புண்ணைப் பேய் தொடுவது இத்துறை ஆகும்.

கொன்றுருத்த கூர்வே லவற்குறுகிக் கூரிருள்வாய்

நின்றுருத்து நோக்கி நெருப்புமிழாச் - சென்றொருத்தி

ஒட்டார் படையிடந்த வாறாப்பு ணேந்தகலம்

தொட்டாள் பெருகத் துயில் .



போர்க்களத்தில் விழுப்புண் பெற்ற வீரனை உறவினர்கள் வீட்டில் வைத்துப் பாதுகாத்தனர், ஒருநாள் அவர்கள் அறியாத படி இரவில் சென்ற பேய் அவன் இறந்து போகும்படி அவனுடைய மார்பினைத் தொட்டது என்றமையால் இது தொட்ட காஞ்சி என்னும் துறையாயிற்று.

**3.மகட்பாற் காஞ்சி - விவரி**

ஏந்திழையாள் தருகஎன்னும்

வேந்தனொடு வேறுநின்றன்று.

காஞ்சியரசன் தன் மகளைக் கேட்டு வந்த வஞ்சியரசனோடு மாறுபட்டு நிற்பது இத்துறையாகும்.

அளிய கழல் வேந்த ரம்மா வரிவை

எளியளென் றெள்ளி யுரைப்பிற் - குளியாவோ

பண்போற் கிளவியிப் பல்வளையாள் வாண்முகத்த

கண்போற் பகழி கடிது.

காஞ்சி மன்னனின் மகளோ திருமகளை ஒத்த சிறப்பினை உடையவள்.அக்காஞ்சி வேந்தன் மகள் பண்ணினைப் போன்ற சொல்லினை உடையவள் பலவாகிய வளையல்களை அணிந்தவள்.அத்தகையவளின் கூர்மையான கண்கள் தன்னை எளிதில் அடைந்துவிடலாம் என்ற கருதும் வஞ்சி வேந்தனின் மார்பில் கூர்மையான அம்புபோல் சென்று தைக்கும்.

# பிரிவு - 2

## கூறு: 5 நொச்சிப்படலம்

**நோக்கம்: நொச்சித்திணையின் இலக்கணம், அவற்றின் பிரிவுகள் போன்றவற்றை மாணவர்களுக்குக் கற்பித்தல்**

## 5. நொச்சிப்படலம்

பகையரசன் ஒருவன் பிறிதோர் அரசனின் கோட்டையினைக் கைப்பற்ற விரும்புவான்.அதன் காரணமாகப் படையெடுத்துச் சென்று தான் வெல்லக் கருதிய அரசனின் மதிலை வளைத்துக் கொள்வான். அதனைக் கண்ட மதிலின் உட்புறத்தில் இருக்கும் அரசன் பகையரசன் தன் மதிலினைக் கைப்பற்றாதவாறு நொச்சிப் பூவினைச் சூடிக் காத்து நிற்பான். எனவே இத்திணை நொச்சித் திணை எனப்பட்டது.

### 5.1 நொச்சித்திணையின் துறைகள்:

நுவலருங் காப்பின் நொச்சி ஏனை

மறனுடைப் பாசி ஊர்ச்செரு என்றா

செருவிடை வீழ்தல் திண்பரி மறனே

எயிலது போரே எயில்தனை அழித்தல்

அழிபடை தால்கல் மகண்மறுத்து மொழிதல் என

எச்சம் இன்றி எண்ணிய ஒன்பதும்

நொச்சித் திணையும் துறையும் ஆகும் .

என்பன நொச்சித்திணையின் துறைகள் ஆகும்.

நொச்சித்திணை, மறனுடைப்பாசி, ஊர்ச்செரு, செருவிடை வீழ்தல், குதிரைமறன், எயிற்போர், எயிற்போர் , எயிறனையழித்தல்,அழிபடையாங்கல், மகண் மறுத்து மொழிதல் எனச் சொல்லப்பட்ட இவ்வொன்பதும் நொச்சித் திணையின் துறைகள் ஆகும்.

### 5.1.1 நொச்சி:

ஏப்புழை ஞாயில் ஏந்துநிலை அரணம்

காப்போர் சூடிய பூப்புகழ்ந் தன்று.

அம்பினை ஏவுகின்ற அறைகளையும் மறைகின்ற முடக்குகளையும் உடையது கோட்டை மதிலாகும்.அதனை நொச்சிப்பூவினைச் சூடி நின்ற மறவர் காத்து நின்றனர். அவ்வாறு காத்து நிற்கும் மறவர் சூடி நிற்கும் நொட்சிப்பூவின் சிறப்பினைக் கூறுவது இத்துறையாகும்.

ஆடரவம் பூண்டா னழலுணச் சீறிய

கூடரணங் காப்போர் குழாம்புரையச் - சூடினார்

உச்சி மதி வழங்கு மோங்கு மதில்காப்பான்

நொச்சி நுதிவே லவர்.

ஆடும் பாம்பினை அணிந்திருப்பவர் சிவபெருமான். அவர் ஒருமுறை கோபம் கொண்டு திரிபுரத்தினை எரிக்கச் சென்ற போது அவுணர்கள் கூட்டமாய் நின்று தம் மதிலைக் காத்து நின்றனர். அதனைப் போல வேற்படையினை உடைய மறவர் நொச்சிப்பூவினைச் சூடி தங்கள் மதிலைக் காத்து நின்றனர் என்றமையால் இப்பாடல் நொச்சி என்னும் துறை சார்ந்ததாய் அமைந்தது.

### 5.1.2 மறனுடைப் பாசி:

மறப்படை மறவேந்தர்

துறக்கத்துச் செலவுஉரைத்தன்று.

மறத்தன்மை நிறைந்தவர்கள் நொச்சி மறவர்கள். அவர்களுக்கு வீரத்தில் மிகச்சிறந்த தன்மை கொண்டோர் தலைமை தாங்கி நின்றனர், அவர்கள்பகைவருடன் போரிட்டு விண்ணுலகம் எய்தினர் என எடுத்துரைப்பது மறனுடைப்பாசி என்னும் துறையாகும்.நீர்ப்பாசி போன்று நீங்காதவராய் பரவி இருந்த பகைப்படையினுள் பரவிச் சென்று போர் செய்தலை உணர்த்தியமையால் இத்துறை மறனுடைப்பாசி என்னும் பெயர் பெற்றது.

பாயினார் மாயும் வகையாற் பலகாப்பும்

ஏயினா ரேய விகன்மறவர் - ஆயினார்

ஒன்றி யவரற வூர்ப்புலத்துத் தார்தாங்கி

வென்றி யமரர் விருந்து.

நொச்சியாரின் மதிலைச் சூழ்ந்து நின்ற பகைவர் மதிலின் மீது ஏறத்தொடங்கினர். அதனைக் கண்ட நொச்சிப் படையின் தலைவர்கள் மதிலின்கண் ஏறுவோர் இறந்து படும்படி தம் காவல் தொழிலைச் செய்யுமாறு கூறினர். அதனை தலைமேற் கொண்ட நொச்சி மறவர் உயிருடன் மீள்வது அரிது என்று தெரிந்தும் பகைவரின்

தூசிப்படையிடைச் சென்று அவர்களின் தலையினை வெட்டி வீழ்த்தினர்.அப்பொழுது பகைவர்களால் வெட்டப்பெற்று வானோர்களின் விருந்தினர் ஆயினர் என்றமையால் இப்பாடல் மறனுடைப்பாசி என்னும் துறையினைச் சார்ந்ததாகும்.

குறிப்பு

### 5.1.3 ஊர்ச்செரு:

மதிலுக்குப் புறத்தே உள்ள ஊரின்கண் பகைவரோடு நொச்சியார் போர் புரிவது ஊரச்செரு எனப்படும்.

அருமிளையொடு கிடங்குஅழியாமைச்

செருமலைந்த சிறப்புஉரைத்தன்று.

பகைவராற் புகுதற்கரியதாகிய காவற்காட்டோடு அகழி சிதையாதபடி நொச்சி மறவர் போர் செய்த திறத்தினைச் சொல்லியது.

வளையும் வயிரு மொலிப்பவாள் வீசி

இளையுங் கிடங்குஞ் சிதையத் - தளைபரிந்த

நோனார் படையிரிய நொச்சி விறன்மறவர்

ஆனா ரமர்விலக்கி யார்ப்பு.

நொச்சிப் பூவினைச் சூடிய மறவர்கள் சங்கும் கொம்பும் முழங்க வாளை வீசினர். அதனால் காவற்காடும் அகழியும் அழியக் கருதி வந்த பகைவர்களை அஞ்சி ஓடச் செய்தனர். மேலும் போர் செய்யப் பகைவர்கள் இல்லாமையால் ஆராவரித்து நின்றனர் என்றமையால் இது ஊர்ச்செரு என்னும் துறையாகும்.

## 5.1.4 செருவிடை வீழ்தல்:

மாற்றார் உள்ளே நுழையாதபடி போரிட்டு அரணைக் காத்து இறந்த மறவரைப் போற்றியுரைப்பது இத்துறையாகும்.

ஆழ்ந்துபடு கிடங்கோடு அருமிளை காத்து

வீழ்ந்த வேலோர் விறன்மிகுத் தன்று.

ஆழமுடைய அகழியோடு அரிய காவற்காட்டைக் காத்து வேல்வீரர் வெற்றியைத் தந்து போர்க்களத்தில் இறந்து பட்ட தன்மையைச் சொல்லியது.

ஈண்டரில் சூழ்ந்த விளையு மெரிமலர்க்

காண்டகு நீள் கிடங்குங் காப்பாராய் - வேண்டார்

மடங்க லனைய மறவேலோர் தத்தம் தத்தம்

உடம்பொடு காவ லுயிர்.



குறிப்பு

சிங்கத்தினை ஒத்த நொச்சி மறவர்கள் கொடிகள் சுற்றிய காவற்காடும் நெருப்புப் போன்ற சிவந்த பூவினையுடைய காணத்தக்க நீண்ட அகழியையும் காத்து நின்றனர். அவர்கள் அத்தகைய காவல் தொழிலை விட்டு தம் உயிரைக் காத்து நிற்றலை ஒருபோதும் விரும்பமாட்டார் என்றதாகும்.

## 5.1.5 குதிரைமறம்:

ஏமாண்ட நெடும்புரிசை

வாமானது வகைஉரைத்தன்று.

அம்புகளை எய்யும் தொழில் சிறப்புடையது நொச்சியாரின் பெரிய மதிலாகும். அத்தகைய மதிலிடத்துப் பாயும் குதிரையது சிறப்பினைச் சொல்லியது.

தாங்கன்மின் றாங்கன்மின் றானை விறன்மறவிர்

ஓங்கன் மதிலு ளொருதனிமா-ஞாங்கர்

மயிரணியப் பொங்கி மழைபோன்று மாற்றார்

உயிருணிய வோடி வரும்.

மலைபோன்ற மதிலிடத்து ஒப்பில்லாததொரு குதிரை ஒன்று மேகத்தை ஒத்துப் பகைவர் உயிரை உண்ண வேண்டிக் கடுகிவருகிறது. அதனைத் தடுத்தற்கரிது! தடுத்தற்கரிது! தடுக்காது விடுமின்கள்! தடுக்காது விடுமின்கள்! என்பதாம்.

## 5.1.6 எயிற்போர்:

அயிற்படையின் அரண்காக்கும்

எயிற்படைஞர் இகன்மிகுத்தன்று.

கூர்மையான ஆயுதத்தினைக் கொண்ட நொச்சி மறவர்களின் போராற்றலைக் குறித்து நிற்பது இத்துறையாகும்.

மிகத்தாய செங்குருதி மேவரு மார்பின்

உகத்தா முயங்கியக் கண்ணும் -அகத்தார்

புறத்திடைப் போதந் தடல்புரிந்தார் பொங்கி

மறத்திடை மானமேற் கொண்டு.



மதிலின் அகத்தே காத்து நின்ற மறவர்களின் மார்பிடை புண்ணினை உருவாக்கினர் பகைவர். ஆனால் அதனை ஒரு பொருட்டெனக் கருதாது வீரத்தையும் மானத்தையும் கைக்கொண்டு மதிலுக்கு வெளியே நின்ற பகைவரைக் கொல்லக் கருதினர் என உரைத்து நிற்கும்.

## 5.1.7 எயில்தனை அழித்தல்:

குறிப்பு

துணிவுடைய தொடுகழலான்

அணிபுரிசை அழிவுஉரைத்தன்று.

மதிலைக் காத்து நின்ற பகைவரை எதிர்த்துப் போர் செய்யும் ஆற்றல் உடைய நொச்சி மறவனை பகைவர்கள் தாக்கினர். அதனால் அவன் அவர்களோடு போரிட்டு இறந்தான் எனக் குறிப்பது இத்துறையாகும்.

அகத்தன வார்கழ னோன்றா ளரணின்

புறத்தன போரெழிற் றிண்டோள்-உறத்தழீஇத்

தோட்குரிமை பெற்ற துணைவளையார் பாராட்ட

வாட்குரிசில் வானுலகி னான்.

மதிலைக் காத்து நின்ற நொசிசி மறவன் பகைவரோடு போரிட்டான். அப்போரில் அவனின் கால்கள் அரணினுள்ளே வீழ்ந்தன. தோள்கள் மதிலின் புறம்பே வீழ்ந்தன. அவனின் தோள்களைத் தழுவுவதற்கு உரிமையுடைய தெய்வப் பெண்கள் அவனை இறுக அணைத்து வானுலகத்திற்குக் கொண்டு சென்றனர் என்பதாம்.

## 5.1.8 அழிபடை தாங்கல்:

இழிபுஉடன் இகல்பெருக

அழிபடை அரண்காத்தன்று.

பகைவர்களால் தம் படை சிதைந்து ஓடிடினும் அதனைக் கண்டு அஞ்சாது மானத்தோடு அதனைக் காத்து நின்ற மறவர்களின் தன்மை சொல்லியது இத்துறையாகும்.

பரிசை பலகடந்து பற்றா ரெதிர்ந்தார்

எரிசெ யிகலரணங் கொண்மார்- புரிசை

அகத்தடி யுய்யாமை யஞ்சுடர்வா ளோச்சி

மிகத்தடிந்தார் மேனின் றவர்.

நொச்சியாரின் கிடுகுபடை பலவற்றையும் வென்ற பகையான உழிஞையார் மதிலை நோக்கி வந்தனர். அவர்களை தம் மதிலின் மீது கால் வைக்காதவாறு நொச்சி மறவர்கள் தடுத்தனர். அதனையும் மீறி வந்தவர்களைத் தம் வாளினால் வெட்டி வீழ்த்தினர்.



## 5.1.9 மகண்மறுத்து மொழிதல்:

வெம்முரணான் மகள்வேண்ட

அம்மதிலோன் மறுத்துஉரைத்தன்று.

கொடுமையான பகையினை உடைய உழிஞை அரசன் நொச்சி அரசனின் மகளை வேண்ட நொச்சி அரசன் மறுத்து மொழிதல் இத்துறையாகும்.

ஒள்வாண் மறவ ருருத்தெழுந் தும்பர்நாட்

கள்வார் நறுங்கோதை காரணமாக்-கொள்வான்

மருங்கெண்ணி வந்தார் மழகளிற்றின் கோடிக்

கருங்கண்ணி வெண்கட்டிற் கால்.

நொச்சி மன்னனின் மகள் தேன் பொருந்திய மலர்களால் ஆகிய மாலையினை அணிந்தவள் அவளை அடைதல் வேண்டி பல மன்னர்கள் தங்கள் யானைப் படையுடன் வந்தனர். அவ்யானைகளை நொச்சி மறவர்கள் வெட்டி வீழ்த்தினர்.அத்தகைய யானைகளின் கொம்புகளே நொச்சிமன்னனின் மகள் படுத்துறங்கும் கட்டிலின் கால்கள் ஆகும்.

## பயிற்சி வினாக்கள்:

1.செருவிடை வீழ்தல் குறித்து எழுதுக.

மாற்றார் உள்ளே நுழையாதபடி போரிட்டு அரணைக் காத்து இறந்த மறவரைப் போற்றியுரைப்பது இத்துறையாகும்.

ஆழ்ந்துபடு கிடங்கோடு அருமிளை காத்து

வீழ்ந்த வேலோர் விறன்மிகுத் தன்று.

ஆழமுடைய அகழியோடு அரிய காவற்காட்டைக் காத்து வேல்வீரர் வெற்றியைத் தந்து போர்க்களத்தில் இறந்து பட்ட தன்மையைச் சொல்லியது.

ஈண்டரில் சூழ்ந்த விளையு மெரிமலர்க்

காண்டகு நீள் கிடங்குங் காப்பாராய் - வேண்டார்

மடங்க லனைய மறவேலோர் தத்தம் தத்தம்

உடம்பொடு காவ லுயிர்.

சிங்கத்தினை ஒத்த நொச்சி மறவர்கள் கொடிகள் சுற்றிய காவற்காடும் நெருப்புப் போன்ற சிவந்த பூவினையுடைய காணத்தக்க நீண்ட அகழியையும் காத்து நின்றனர். அவர்கள் அததகைய காவல் தொழிலை விட்டு தம் உயிரைக் காத்து நிற்றலை ஒருபோதும் விரும்பமாட்டார் என்றதாகும்.

**2.மகண்மறுத்து மொழிதல் விளக்கி வரைக**

வெம்முரணான் மகள்வேண்ட

அம்மதிலோன் மறுத்துஉரைத்தன்று.

கொடுமையான பகையினை உடைய உழிஞை அரசன் நொச்சி அரசனின் மகளை வேண்ட நொச்சி அரசன் மறுத்து மொழிதல் இத்துறையாகும்.

ஒள்வாண் மறவ ருருத்தெழுந் தும்பர்நாட்

கள்வார் நறுங்கோதை காரணமாக்-கொள்வான்

மருங்கெண்ணி வந்தார் மழகளிற்றின் கோடிக்

கருங்கண்ணி வெண்கட்டிற் கால்.

நொச்சி மன்னனின் மகள் தேன் பொருந்திய மலர்களால் ஆகிய மாலையினை அணிந்தவள் அவளை அடைதல் வேண்டி பல மன்னர்கள் தங்கள் யானைப் படையுடன் வந்தனர். அவ்யானைகளை நொச்சி மறவர்கள் வெட்டி வீழ்த்தினர்.அத்தகைய யானைகளின் கொம்புகளே நொச்சிமன்னனின் மகள் படுத்துறங்கும் கட்டிலின் கால்கள் ஆகும்.

**3. நொச்சித்திணை உணர்த்தும் செய்திகளைக் கட்டுரைக்க**

நொச்சித்திணை என்னும் பாடப்பகுதியில் இருந்து தொகுத்து எழுதுதல் வேண்டும

# கூறு: 6 உழிஞைப்படலம்

## நோக்கம்: உழிஞைத்திணையின் இலக்கணம், அவற்றின் பிரிவுகள் போன்றவற்றை மாணவர்களுக்குக் கற்பித்தல்

## 6. உழிஞைப் படலம்:

மாற்றாரின் கோட்டையினை வெல்லக் கருதிய அரசன் மாற்றாரின் காவற்காட்டினையும் அகலியையும் அழித்து உள்ளே செல்வான். இதுவே உழிஞைத் திணை எனப்படும். இப்போருக்குச் செல்லும்போது மன்னரும் மறவர்களும் உழிஞைப் பூவினைச் சூடிச்செல்வர்.

## 6.1 உழிஞைத்திணையின் துறைகள்:

உழிஞை ஓங்கிய குடைநாட் கோளே
வாள்நாட் கோளே முரச உழிஞை
கொற்ற உழிஞையோடு அரச உழிஞை
கந்தழி என்றா முற்றுழி ஞையே
காந்தள் புறத்திறை யாரெயி லுழிஞை
அருந்தோல் உழிஞை குற்றுழி ஞையொடு
கோட்புறத்து உழிஞை பாசி நிலையே
ஏணி நிலையே இலங்கெயிற் பாசி
முதுஉழி ஞையே முந்துஅகத்து உழிஞை
முற்று முதிர்வே யானைகைக் கோளே
வேற்றுப்படை வரவே உழுதுவித் திடுதல்
வாண்மண்ணு நிலையே மண்ணுமங் கலமே
மகட்பால் இகலே திறைக்கொண்டு பெயர்தல்
அடிப்பட இருத்தல் தொகைநிலை உளப்பட்ட
இழுமென் சீர்த்தி இருபத் தொன்பதும்
உழிஞை என்மனார் உணர்ந்திசி னோரே.

என்பன உழிஞைத் திணையின் துறைகள் ஆகும்.

உழிஞைத்திணை, குடைநாட்கோள், வாணாட்கோள், முரசவுழிஞை, கொற்றவுழிஞை, அரசவுழிஞை, கந்தழி, முற்றுழிஞை, காந்தள், புறத்திறை, ஆரெயிலுஞை, தோலுழிஞை, குற்றுழிஞை, புறத்துழிஞை, பாசிநிலை, ஏணிநிலை, எயிற்பாசி, முதுவுழிஞை, அகத்துழிஞை, முற்றுமுதிர்வு, யானைகைக்கோள், வேற்றுப்படைவரவு, உழுதுவித்திடுதல், வாண்மண்ணுநிலை, மண்ணுமங்கலம், மகட்பாலிகல், திறைகொண்டு

பெயர்தல், அடிப்படவிருத்தல், தொகைநிலை எனச்சொல்லப்பட்ட இவ்விருபத்தொன்பது துறைகளாய் அமையும்.

### 6.1.1 உழிஞை:

முடிமிசை உழிஞை சூடி ஒன்னார்

கொடிநுடங்கு ஆரெயில் கொளக்கரு தின்று.

**குறிப்பு**

தமது முடிமேலே உழிஞைமாலையை அணிந்து பகைவர்கள் கொடியசையும் கோட்டையினைக் கைப்பற்ற நினைத்தது.

உழிஞை முடிபுனைந் தொன்னாப்போர் மன்னர்

விழுமதில் வெல்களிறு பாயக்-கழிமகிழ்

வெய்தாரு மெய்தி யிசைநுவலுஞ் சீர்த்தியனே

கொய்தார மார்பினெங் கோ.

மார்பில் மலர்மாலையினை அணிந்திருந்த தலைவன் தலையில் உழிஞைப்பூவினைச் சூடினான். அவனின் யானைப்படையானது பகைவரின் மதிலை உடைத்தெறிந்தது. அதனால் சான்றோர்களால் போற்றப்டும் புகழினை அரசன் அடைந்தான்.

### 6.1.2 குடைநாட்கோள்:

செற்றடையார் மதில்கருதிக்

கொற்றவேந்தன் குடைநாட்கொண்டன்று.

உழிஞை வேந்தன் தன்னோடு முரண்பட்ட நொச்சியரசனை வெல்ல ஒரு நல்ல நாளில் வெற்றிக் குடையைப் புறவீடுவிட்டது.

நெய்யணிக செவ்வே னெடுந்தேர் நிலைபுகுக

கொய்யுளைமா கொல்களிறு பண்விடுக-வையகத்து

முற்றக் கடியரண மெல்லா முரணவிந்த

கொற்றக் குடைநாட் கொள.

உழிஞை வேந்தன் தன்னோடு முரண்பட்ட நொச்சியரசனை வெல்ல ஒரு நல்ல நாளில் வெற்றிக் குடையைப் புறவீடுவிட்டது. அதனால் உலகின்கண் உள்ள அரசர்கள் நம் அரசனோடு கொண்ட பகைமையை விட்டனர். அதனால் வேல்களுக்கு நெய் பூசுக. தேர்கள் அவற்றிற்குரிய

இடங்களில் நிற்கட்டும். குதிரையும் யானையும் தமக்குரிய ஒப்பனைகளைக் களையட்டும்.



## 6.1.3 வாள் நாட்கோள்:

கலந்தடையார் மதில்கருதி

வலந்தருவாள் நாட்கொண்டன்று.

உழிஞை வேந்தன் தன்னோடு முரண்பட்ட நொச்சியரசனை வெல்ல ஒரு நல்ல நாளில் வெற்றி வாளினை புறவீடுவிட்டது.

வாணாட்கொளலும் வழிமொழிந்து வந்தடையாப்

பேணார் பிறைதொடும் பேமதிற்-பூணார்

அணிகொள் வனமுலையா ராடரங்க மேறிப்

பிணிகொள்பே யாடும் பெயர்த்து.

.உழிஞை வேந்தன் தன்னோடு முரண்பட்ட நொச்சியரசனை வெல்ல ஒரு நல்ல நாளில் வெற்றி வாளினை புறவீடுவிட்டான்.. அதனால் உலகினகண் உள்ள அரசர்கள் நம் அரசனோடு கொண்ட பகைமையை விட்டனர்.நம் அரசனைப் பணியாதவர்களும் சிலர் உண்டு. அவர்கள் நாடுகளில் ஆடல் அரங்கங்கள் உண்டு. அவற்றில் நடனமாதர் ஆடுவர். இனி நம் அரசனின் படையெடுப்பதற்குப் பின் இவ் அரங்கங்களில் பேய்கள் நின்று ஆடும்.

## 6.1.4 முரச உழிஞை:

பொன்புனை உழிஞை சூடி மறிஅருந்தும்

திண்பிணி முரச நிலைஉரைத் தன்று.

நம் அரசனின் முரசம் பொன்னாலே செய்த உழிஞை மாலையை அணிந்து ஆடு வெட்டியிடும் பலியை நுகரும் தன்மை உடையதாகும் என முரசின் தன்மையைச் சொல்லல்.

கதிரோடை வெல்களிறு பாயக் கலங்கி

உதிரா மதிலு முளகொல் - அதிருமால்

பூக்கண் மலிதார்ப் புகழ்வெய்யோன் கோயிலுள்

மாக்கண் முரச மழை .

அரசனின் முரசம் பெரிய கண்களைக் கொண்டது, அது மேகத்தினைப் போல முழங்கியது. அதனால் நம் அரசனின் யானைகள் பகைவர்களின்

மதில்களை குத்தின. அதனால் சிதையாத மதில்களும் உண்டோ அவை இல்லவே இல்லை என்பதாகும்.

### 6.1.5 கொற்ற உழிஞை:

அடையாதார் அரண் கொள்ளிய

படையோடு பரந்துஎழுந்தன்று.

குறிப்பு

உழிஞை வேந்தன் தன் பகைவரின் மதிலைக் கைப்பற்றக் கருதித் தன் படை வீரர்களைத் திரண்டு வரப் பணித்தான் என உரைப்பது இத்துறையாகும்.

வெள்வாட் கருங்கழற்கால் வெஞ்சுடர்வேற் றண்ணளியான்

கொள்வான் கொடித்தானை கொண்டெழுந்தான் - நள்ளாதார்

அஞ்சுவரு வாயி லருமிளைக் குண்டகழி

மஞ்சிவரு ஞாயின் மதில் .

ஒளிபரந்த வாளினையும் வலிய வீரக்கழலாற்சிறந்த காலினையும் வெய்ய ஒளியாற் பொலிந்த வேலினையும் தண்ணளியையும் உடையவன் உழிஞை அரசன், அத்த பகைவரின் வாயிலினையும் புகுதற்கரிய காட்டினையும் ஆழ்ந்த கிடங்கினையும் மேகம் பரக்கும் ஏவறையினையுமுடைய மதிலையும் கைப்பற்றிக் கொள்ளக் கருதினான்.எனவே படையினைத் திரட்டிக் கொண்டு சென்றான்.

### 6.1.6 அரச உழிஞை:

தொழில்காவல் மலிந்துஇயலும்

பொழில்காவலன் புகழ்விளம்பின்று.

உழிஞை அரசனின் நாடு காக்கும் மேன்மையினை எடுத்துரைப்பது இத்துறையாகும்.

ஊக்க முரண்மிகுதி யொன்றிய நற்சூழ்ச்சி

ஆக்க மவன்க ணகலாவால்-வீக்கம்

நகப்படா வென்றி நலமிகு தாராற்

ககப்படா வில்லை யரண்.

மனவெழுச்சியும் மாறுபாட்டின் பெருமையும் பொருந்திய நல்ல சூழ்ச்சித் திறமும் செல்வப் பெருக்கமும் நீங்காத பெருமையினையும் பிறரால் இகழத்தகாத வெற்றியினையும், நன்மை நிறையம் மாலையினையும்

உடையவன் உழிஞை அரசன். அவனுக்கு அகப்படாத பகையரசரின் அரண்கள் இல்லை.



குறிப்பு

### 6.1.7 கந்தழி:

மாஉடைத்தார் மணிவண்ணன்

சோஉடைத்த மறநுவலின்று

உழிஞை அரசனைத் திருமாலாகக் கொண்டு புகழ்துரைப்புது இத்துறையாகும். திருமால் முன்னொரு காலத்து மாலையாற் சிறந்த நீலமணிபோன்ற மேனியையுடையான். அத்தகைய திருமால் சோவென்னும் அரணை அழித்தான் எனச் சொல்வது கந்தழி என்பதாகும்.

அன்றெறிந் தானு மிவனா லரண்வலித்

தின்றிவன் மாறா வெதிர்வார்யார்-என்றும்

மடையார் மணிப்பூ ணடையாதார் மார்பிற்

சுடராழி நின்றெரியச் சோ.

ஒளிபொருந்திய மணிகளைத் தன் மார்பில் அணிந்திருந்த பகையரசனின் மார்பின் மீது சக்கரப் படையினை ஏவித் தீயை உண்டாக்கியவன் உழிஞை அரசன். முன்னொரு காலத்து சோவென்னும் அரணை அழித்தவனும் இவனே ஆவான். எனவே இவனை எதிர்த்து நிற்கும் அரசர் உண்டோ? இல்லை என்பதாம்.

### 6.1.8 முற்றுழிஞை:

ஆடுஇயல் அவிர்சடையான்

சூடியபூச் சிறப்புடைத்தன்று.

ஆடிய அவிர் சடையான் ஆகிய சிவபெருமான் சூடிய உழிஞைப்பூவின் சிறப்பினைக் கூறுவது.

மயங்காத தார்ப்பெருமை மற்றறிவார் யாரே

இயங்கரண மூன்று மெரித்தான் -தயங்கிணர்ப்

பூக்கொ ளிதழிப் புரிசெஞ் சடையானும்

மாக்கொ ளுழிஞை மலைந்து.

கொத்தாகப் பொலிவினைக் கொண்ட கொன்றையையுடைய செஞ்சடையான் ஆகிய சிவபெருமான் திரிபுரத்தினை அழித்தவன்

ஆவான்.அத்தகையவன் புனைந்த உழிஞைப்பூவின் சிறப்பினைக் கூறுவார் யாவர்? ஒருவரும் இல்லை என்பதாம்.

### 6.1.9 காந்தள்:

கருங்கடலுள் மாத்தடிந்தான்

செழுங்காந்தள் சிறப்புஉரைத்தன்று.

**குறிப்பு**

கடலிடத்துச் சூரபன்மாவை வென்ற முருகப்பெருமானின் காந்தட்பூவின் சிறப்பினைச் சொல்லியது

குருகு பெயரிய குன்றெறிந் தானும்

உருகெழு காந்தண் மலைந்தான்-பொருகழற்

4கார்கருதி வார்முரச மார்க்குங் கடற்றானைப்

போர்கருதி யார்மலையார் பூ.

குருகின் பெயர்பெற்ற மலையை எறிந்தவன் முருகப்பெருமான் அவன் அழகு நிறைந்த காந்தள் பூவினைச் சூடினான். தற்போது வீரக்கழலினையுடைத்தாய் நிற்கிறது மறவர் கூட்டம். அவர்களிடத்து மேகத்தையொத்து வாராற் பிணித்த முரசுமுழங்குகிறது. எனவே கடல்போன்ற கடல் போன்ற இக் கூட்டத்தில் பூவினைச் சூடாதார் யார்? ஒருவரும் இல்லை என்பதாம்.

### 6.1.10 புறத்திறை:

மறத்துறை மலிந்து மண்டி மாற்றார்

விறல்கொடி மதிலின் புறத்துஇறுத் தன்று.

பகைவர் நாட்டின் மதிற்புறத்தே தங்குவது புறத்திறை எனப்படும். போரினை விரும்பிச் சென்ற உழிஞை மறவர் பகைவரின் மதிற்புறத்தே தங்கினர் என்பது இத்துறையாகும்.

புல்லார் புகலொடு போக்கொழியப் பொங்கினனாய்ப்

பல்லார் மருளப் படைபரப்பி-ஒல்லார்

நிறத்திறுத்த வாட்டானை நேரார் மதிலின்

புறத்திறுத்தான் பூங்கழலி னான்.

வீரக்கழலினையுடைய உழிஞை வேந்தன் பகைவர் எங்கும் தப்பிச் செல்ல முடியாதபடி புறத்தே பாடி வீடு அமைத்துத் தங்கினான்.

அதனைக் கண்ட பகைவர் அஞ்சி மயங்கினர் என்பது இதன் பொருளாம்.



## 6.1.11 ஆரெயில் உழிஞை:

வாஅள்மறவர் வணங்காதார்

நீஇள்மதிலின் நிலையுரைத்தன்று

வாளினையுடைய நொச்சி மறவர் தம் அரசனிடம் பணியாத பகையரசரின் அரணினைச் சூழ்ந்து நின்று அவ்அரணின் வலிமையை எடுத்துக் கூறுவது இத்துறையாகும்.

மயிற்கணத் தன்னார் மகிழ்தேற லூட்டக்

கயிற்கழலார் கண்கனல் பூப்ப -எயிற்கண்ணார்

வீயப்போர் செய்தாலும் வென்றி யரிதரோ

மாயப்போர் மன்னன் மதில்.

வீரக்கழலினை அணிந்த உழிஞை மறவர்க்கு மயிலினைப் போன்ற கண்களைக் கொண்ட பெண்கள் கள்ளிளைக் கொடுத்தனர்.அதனை உண்டமையால் கண்கள் சிவக்க பகைவரை வெல்லுவும் எண்ணம் கொண்டனர் அவ்வாறு முயன்றிடினும் நொச்சி அரசனின் மதிலை வெல்லுதல் அரிதாகும்.

## 6.1.12 தோல் உழிஞை:

வென்றி யோடு புகழ்விளைக் கும்எனத்

தொன்று வந்த தோல்மிகுத் தன்று.

வெற்றியுடன் புகழையும் உண்டாக்கும் கிடுகுப் படையின் பெருமையைச் சொல்லுவது இத்துறையாகும்.

நின்ற புகழொழிய நில்லா வுயிரோம்பி

இன்றுநாம் வைக லிழிவாகும்- வென்றொளிரும்

பாண்டி னிரைதோல் பணியார் பகையரணம்

வேண்டி னெளிதென்றான் வேந்து.

கண்ணாடி நிரைத்த கிடுகுபடையின் துணையினால் பகைவரின் அரணினை வெல்லுதல் எளிது என்றான் மன்னன்.அங்ஙனம் பாராட்டப்பெற்ற நாம் அதன் பெருமையினைக் காப்பாற்ற

வேண்டும்.அதனை விடுத்து நிலையில்லாத உயிரினைப் பெரிதெனக் கருதி மதிற்புறத்தே தங்கியிருத்தல் இழிவைத் தரும் என்பதாம்.



## 6.1.13 குற்றுழிஞை:

கருதாதார் மதில்குமரிமேல்

ஒருதானாகி இகன்மிகுத்தன்று

**குறிப்பு**

உழிஞை வேந்தன் தான் ஒருவனாக தனித்து நின்று போர்செய்து அரணைக் கைப்பற்றியது குற்றுழிஞை எனப்படும்.தனித்து நின்று வெற்றி பெற்ற அரசனின் பெருமையை சொல்லுவது அத்துறையாகும்.

குளிறு முரசினான் கொண்டா னரணம்

களிறுங் கதவிறப் பாயிந்த-ஒளிறும்

அயிற்றுப் படைந்த வணியெழு வெல்லாம்

3எயிற்றுப் படையா லிடந்து.

உழிஞை வேந்தன் நொச்சியாரின் அரணினை தனித்து நின்று வெற்றி பெற்றான்.அவனுடைய போர் யானைகள் பகைவரின் அரண்மனை வாயிலின்கண் இருந்த கணைய மரங்களைத் தன் கொம்புகளால் பெயர்த்து எறிந்தன.

### 6.1.14 இதுவுமது:

வளைஞரல வயிர்ஆர்ப்ப

மிளைகடத்தலும் அத்துறையாகும்.

சங்கு முழங்க கொம்புகள் ஒலிக்க உழிஞை வீரர்கள் நொச்சியாரின் காவற்காட்டினை கடந்து சென்றனர்.அந்த நிலையை எடுத்துரைப்பது குற்றுழிஞையே ஆகும்.

அந்தரந் தோயு வமையோங் கருமிளை

மைந்தர் மறிய மறங்கடந்து -பைந்தார்

விரைமார்பின் வின்னரல வெங்கணை தூவார்

வரைமார்பின் வைகின வாள்.

வானத்தினைத் தொடும் அளவிற்கு உயர்ந்து வளர்ந்த மூங்கிலை உடையது காவற்காடு. அத்தகைய காவற்காட்டினைக் கடந்து சென்று போரிட்டு நொச்சி மறவரை புறமுதுகிட்டு ஓடச் செய்தது மறவர் படை. மேலும் அவர்களின் அம்பு பகைவரின் மார்பில் தங்கியது.

## 6.1.15 இதுவுமது:

பாடுஅருந்தோல் படைமறவர்

ஆடலொடுஅடையினும்அத்துறையாகும்

உழிஞை மறவர் நொச்சி மறவரின் அரணுக்குள் கூத்தாடிக் கொண்டே புகுந்தனர் என்பதனை உணர்த்துவது இத்துறையாகும்.

நிரைபொறி வாயி னெடுமதிற் சூழி

வரைபுகு புள்ளின மான-விரைபடைந்தார்

வேலேந்து தானை விறலோன் விறன்மறவர்

தோலேந்தி யாட றொடர்ந்து.

வேற்படை மறவர்களால் மிகுந்த வெற்றியை அடைந்தான் உழிஞை அரசன். அவனின் வெற்றி வீரர்கள் கிடுகுப்படையினை கையில் ஏந்திக் கொண்டு மகிழ்ச்சியால் கூத்தாடி வந்தனர்.அவர்கள் பொறிகளும் வாயில்களும் மதிலின் உச்சியினை விரைவாக அடைந்தனர்.அக்காட்சி மலை சென்ற பறவைக் கூட்டத்தினை ஒத்துக் காணப்பட்டது,

## 6.1.16 புறத்துழிஞை:

விண்டோயும் மிளைகடந்து

குண்டுஅகழிப் புறத்துஇறுத்தன்று.

வானத்தைத் தொடும் அளவிற்கு உயர்ந்து நிற்பது நொச்சி மறவரின் காவற்காடு. அதனைக் கடந்து சென்ற உழிஞை மறவர் பகையரசரின் அகழிக்கரையில் தங்கினர்.இதனை உணர்த்துவது புறத்துழிஞை என்னும் துறையாகும்.

கோள்வாய் முதலைய குண்டகழி நீராக

வாள்வாய் மறவேந்தன் வந்திறுத்தான்-நீள்வாயில்

ஓங்க லரணத் தொளிவளையார் வெய்துயிர்ப்ப

ஆங்கொ லரிய வமர்.

வேற்படை மறவர்களால் மிகுந்த வெற்றியை அடைந்தான் உழிஞை அரசன்.முதலைகளை உடைய அகழிக்கரையின்கண் வந்து தங்கினான் உழிஞை மன்னன்.மேலும் அகழி நீரினை உண்டனர் மறவர்கள். போர் நிகழும் என்பதனை அறிந்த மதிலின் உள்ளே இருந்த மகளிர் பெருமூச்சு விட்டனர்.



குறிப்பு

## 6.1.17 பாசிநிலை:



அடங்காதார் மிடல்சாயக்

கிடங்கிடைப் போர்மலைந்தன்று.

நொச்சிப் பகைவருடைய வலிமை கெட அகழியிடத்துப் போர் மேற் கொண்டதைக் குறிப்பது இத்துறையாகும்.

குறிப்பு

நாவாயுந் தோணியு மேல்கொண்டு நள்ளாதார்

ஓவார் விலங்கி யுடலவும்-பூவார்

அகழி பரந்தொழுகு மங்குருதிச் சேற்றுப்

பகழிவாய் வீழ்ந்தார் பலர்.

அகழியிடத்து வந்த உழிஞை மறவர் அதனை அடுத்து முன்னேறாமல் தடுத்த நொச்சி மறவர் ஓடம் மரத்தோணி போன்றவற்றைக் கொண்டு போரிட்டனர். அவர்களை உழிஞை மறவர் எதிர்த்துப் போர் செய்தனர்.அதனால் அகழியில் பகைவரின் அம்பினால்உழிஞை மறவர் பலர் வீழ்ந்து இறந்தனர் என்பது இதன் பொருளாம்.

## 6.1.18 ஏணிநிலை:

தொடுகழல் மறவர் துன்னித் துன்னார்

இடுசூட்டு இஞ்சியின் ஏணிசாத் தின்று.

வீரக்கழலினையுடைய உழிஞை மறவர் பகைவரால் இயற்றப்பட்ட அம்புகளை ஏவும் அறைகளை உடைய மதிலிலே ஏணியைச் சாத்தியது.

கற்பொறியும் பாம்புங் கனலுங் கடிகுரங்கும்

விற்பொறியும் வேலும் விலக்கவும்-பொற்புடைய

பாணி நடைப்புரவிப் பல்களிற்றார் சாத்தினார்

ஏணி பலவு மெயில்.

கல்லெறியும் பொறி பாம்பும் நெருப்பும் கடிகுரங்கும் வில் இயந்திரமும் அயிலும் இவையனைத்தும் பகைவர் உட்புகுதாதபடி நொச்சி மறவர் செய்தனர். ஆனால் உழிஞை மறவர் அவற்றை விலக்கி மதிலின் மேல் ஏணியைச் சாத்தினர்.

## 6.1.19 எயிற்பாசி:

உடல்சினத்தார் கடிஅரணம்

மிடல்சாய மேல்இவர்ந்தன்று.

உழிஞை மறவர் மதிலின் மேல் ஏணியைச் சாத்தி ஏறினர் என்பதனைக் குறிப்பது இத்துறையாகும்.

கடுமுர ணெ∴கங் கழிய -அடுமுரண்

ஆறினா ரன்றி யரவு முடும்பும்போல்

ஏறினா ரேணி பலர்.

செங்கலால் செய்த நெடிய மதிலைச் சூழ்ந்து நீங்காராய் உழிஞை மறவர் நின்றனர். அவர்கள் மேல் நொச்சி மறவர் கொடிய வேலினை எய்தனர்.அது மார்பிலேபட்டு உருவிப் போகப் பலர் இறந்தனர். எனினும் எஞ்சியோர் பாம்பும் உடம்பும் போல் ஏணிமேல் ஏறினார்.

## 6.1.20 முதுவுழிஞை:

வேய்பிணங்கிய மிளையரணம்

பாய்புள்ளின் பரந்திழிந்தன்று.

மூங்கில் சூழ்ந்த காவற்காட்டினையுடைய அரணில்இரைகண்டு பாயும் பறவையைப்போல் வீரர் குதித்தது இத்துறையாகும்.

கோடுயர் வெற்பி னிலங்கண் டிரைகருதும்

தோடுகொள் புள்ளின் றொகையொப்பக் -கூடார்

முரணகத்துப் பாற முழவுத்தோண் மள்ளர்

அரணகத்துப் பாய்ந்திழிந்தா ரார்த்து.

மலையிலிருந்து இரையைப் பூமியிலே கண்டு பாயும் பறவையின் குழுவை போல் மாறுபாடு தம் மனத்தே கெட முழவுபோலத் திரண்ட தோளையுடைய வீரர் அரணிடத்துப்பாய்ந்து இறங்கி ஆரவாரித்தார்.

## 6.1.21 இதுவுமது:

செருமதிலோர் சிறப்புரைத்தலும்

அருமுரணான் அத்துறையாகும்.



குறிப்பு

போரைச் செய்யும் எயிலினுள் உள்ளோருடைய சிறப்பினைக் கூறலும் முன்னர் குறித்த துறையேயாகும்.

அறியார் வயவ ரகத்திழிந்த பின்னும்
நெறியார் நெடுமதிலு ணேரார்-மறியாம்
கிளியொடு நேராங் கிளவியார் வாட்கட்
களியுறு காமங் கலந்து.

குறிப்பு

மதிலகத்து இருந்த நொச்சிவீரர் உழிஞை வீரர் உட்புகுந்ததை உணரார்.மேலும் தோற்கப் போவதை அறியாமல் போர் மேல் விருப்பம் கொண்டவராய் இருந்தனர். இத்தகைய நிலையானது கிளியை யொத்த சொல்லினை உடைய பெண்களின் ஒளியினையுடைய கண்ணின் பார்வையால் மகிழும் காம வேட்கையினை ஒத்து இருந்தது.

## 6.1.22 அகத்துழிஞை:

முரண்அவியச் சினஞ்சிறந்தோர்
அரண்அகத்தோரை அமர்வென்றன்று

கோபமிக்க உழிஞை மறவர் எயிலினுள் நொச்சியாரைப் போரில் வென்றது இத்துறை ஆகும்.

செங்கண் மறவர் சினஞ்சொரிவாள் சென்றியங்க
அங்கண் விசும்பி னணிதிகழும்-திங்கள்
முகத்தா ரலற முகிலுரிஞ்சுஞ் சூழி
அகத்தாரை வென்றா ரமர்.

சிவந்த கண்ணினையுடைய உழிஞை மறவர் தமது வாளை நொச்சியர் மேல் செலுத்தி வென்றனர், அதனைக் கண்ட திங்களை ஒத்த முகத்தினை உடைய பெண்கள் அலறினர்.

## 6.1.23 முற்றுமுதிர்வு:

அகத்தோன் காலை அதிர்முரசு இயம்பப்
புறத்தோன் வெஞ்சினப் பொலிவுஉரைத் தன்று

மதிலின் உள்ள நொச்சி அரசனின் முரசு காலையில் ஒலிக்க புறத்திருந்த உழிஞை அரசன் கொண்ட கோபத்தின் மிகுதியைச் சொல்லியது.

குறிப்பு

காலை முரச மதிலியம்பக் கண்கனன்று
வேலை விறல்வெய்யோ னோக்குதலும் -மாலை
அடுக மடிசிலென் றம்மதிலு ளிட்டார்
தொடுகழலார் மூழை துடுப்பு.

நாட்காலையே நொச்சி மன்னனின் முரசு அரணின்கண் ஒலிப்பக் உழிஞை மன்னன் கண்சிவந்து வேலை வெற்றியை வேண்டுவோனாகப்பார்த்தான்.அரசனின் குறிப்பறிந்த உழிஞை மறவர் மாலைப் பொழுதிற்குள் பகைவரின் அரணிற்குள் சோறு சமைப்போம் என்றனர். மேலும் துடுப்பையும் அகப்பையையும் மதிலகத்து எறிந்தனர்,

## 6.1.24 யானை கைக்கோள்:

மாறுகொண்டார் மதில்அழிய
ஏறுந்தோட்டியும் எறிந்துகொண்டன்று.

பகைகொண்டார் அரணை அழித்து யானையையும் காவலையும் பகைவரை வென்று கைக்கொண்டது.

ஏவ லிகழ்மறவர் வீய விகல்கடந்து
காவலும் யானையுங் கைக்கொண்டான்-மாவலான்
வம்புடை யொள்வாண் மறவர் தொழுதேத்த
அம்புடை ஞாயி லரண்.

தன் மறவர்களால் ஏற்றிப் போற்றப்பெறும் உழிஞை அரசன் பகைவரின் மதிலினை அழித்து அவர்களின் யானையினைக் கைக்கொண்டான்.

## 6.1.25 வேற்றுப்படை வரவு:

மொய்திகழ் வேலோன் முற்றுவிட்டு அகலப்
பெய்தார் மார்பில் பிறன்வரவு உரைத்தன்று.

உழிஞை அரசன் நொச்சி அரசனின் மதிலை முற்றுகை இட்டிருந்தான். அப்பொழுது நொச்சி அரசனின் உதவிக்கு வேற்றரசன் வந்தான் எனச் சொல்லுவது இத்துறை ஆகும்.

உவனின் றுறுதுயர முய்யாமை நோக்கி
அவனென் றுலகேத்து மாண்மை -இவனன்றி

மற்றியார் செய்வார் மழைதுஞ்சு நீளரணம்

முற்றியார் முற்று விட.

உழிஞை அரசன் நொச்சி அரசனின் மதிலை முற்றுகை இட்டிருந்தான். அதனால் நொச்சி அரசன் துன்பமுற்றான். அதனைக் குறிப்பால் உணர்ந்த வேற்றரசன் அவனுக்கு உதவிக்கு வந்தான். உயர்ந்தோர் புகழும் ஆண்மைத்தன்மையினையுடைய இவனல்லது மற்று யாவர் இது செய்யவல்லார்! வேறு ஒருவரும் இல்லை என்பதாம்.

### 6.1.26 உழுது வித்திடுதல்:

எண்ணார் பல்எயில் கழுதையோர் உழுவித்து

உண்ணா வரகொடு கொள்வித் தின்று.

பகைவருடைய பலஅரணும் கைப்பற்றிய உழிஞை அரசன் அதனை அழித்ததுடன் நில்லாது கழுதையைப் பூட்டி உழுது கவடி, குடவோலை போன்றவற்றை விதைத்தல்.

எழுதெழின் மாடத் திடனெலா நூறிக்

கழுதையேர் கையொளிர்வேல் கோலா-உழுதற்பின்

வெள்வரகு கொள்வித் திடினும் விளியாதாற்

கள்விரவு தாரான் கதம்.

ஓவியம் எழுதி இருந்த அழகிய மாளிகை முழுதும் இடித்துக் கழுதையே ஏராகவும் கையில் விளங்கும் வேலே கோலாகவும் கொண்டு உழுது அதற்குப் பின்பு கவடியும் குடைவேலும் விதைத்தான் என்பதாம்.

### 6.1.27 வாள் மண்ணுநிலை:

புண்ணிய நீரில் புரையோர் ஏத்த

மண்ணிய வாளின் மறம்கிளந்த தன்று.

உயர்ந்தோர் துதிக்க புண்ணிய நீராலே நீராட்டிய வாளினது வீரத்தைச் சொல்லியது.

தீர்த்தநீர் பூவொடு பெய்து திசைவிளங்கக்

கூர்த்தவாண் மண்ணிக் கொடித்தேரான்-போர்த்தும்

இடியார் பணைதுவைப்ப விம்மதிலுள் வேட்டான்

புடையா ரறையப் புகழ்.

உழிஞை வேந்தன் வெற்றியை உடைய தன்னுடைய வாளினை புனித நீரும் பூவும் பெய்து நீராட்டி களவேள்வி செய்தான். அதன் மூலம் தன் புகழினைப் பக்கத்து நாட்டினரும் பேசும்படி செய்தான். என்பதாம்.



குறிப்பு

## 6.1.28 மண்ணுமங்கலம்:

வணங்காதார் மதிற்குமரியொடு

மணங்கூடிய மலிபுஉரைத்தன்று.

உழிஞை மன்னன் தன்னைப் பணியாதோர் நாட்டினைப் போர் செய்து பெற்றான். அதனால் அவர்களின் அரணாகிய கன்னியை மணந்தான் எனக் குறிப்பது இத்துறையாகும்.

எங்கண் மலர வெயிற்குமரி கூடிய

மங்கல நாள்யா மகிழ்தூங்கக்-கொங்கலர்தார்ச்

செய்சுடர்ப்பூண் மன்னவன் சேவடிக்கீழ் வைகினவே

மொய்சுடர்ப்பூண் மன்னர் முடி.

மலர் அணிந்த எம்முடைய அரசன் பகைவரை வென்று அவர்களின் கன்னியாகிய அரணை மணந்தான்.அந்த நாளில் பகையரசரின் முடிகள் அவனின் காலில் பொருந்தின.இச்செயலினைக் கண்டு மறவர்களாகிய நாங்கள் மகிழ்ந்தோம் என்பதாம்.

## 6.1.29 மகட்பால் இகல்:

மயிற்சாயல் மகள்வேண்டிய

கயிற்கழலோன் நிலைஉரைத்தன்று.

மயில்போன்ற மென்மையினையுடைய நொச்சியாரின் மகளை உழிஞை வேந்தன் மணம் செய்ய விரும்பினான் என்ற முறைமையைச் சொல்லியது.

அந்தழை யல்குலு மாடமை மென்றோளும்

பைந்தளிர் மேனியும் பாராட்டித்-தந்தை

புறமதில் வைகும் புலம்பே தருமே

மறமதின் மன்னன் மகள்.

அழகிய தழையாற் சிறந்த இடையினையும் அசையும் மூங்கில்போன்ற மெல்லியதோளினையும் பசுந்தளிர்போன்ற நிறத்தினையும் கொண்டவள்

நொச்சி மன்னனின் மகள். அவளை அடைய வேண்டி மதிற்புறத்தே தங்கியிருந்தானை தனிமைத்துயர் வாட்டியது என்பதனைக் கூறுவதாம்.



## 6.1.30 திறைகொண்டு பெயர்தல்:

அடுதிறல் அரணத்து அரசுவழிமொழியப்

படுதிறை கொண்டு பதிப்பெயர்ந் தன்று.

**குறிப்பு**

வலிமை மிகுந்த உழிஞை அரசன் தன்னைப் பணிந்த நொச்சி அரசன் தந்த திறைப்பொருளைக் கொண்டு தன் நாடு திரும்பல் இத்துறை ஆகும்.

கோடும் வயிரு மிசைப்பக் குழுமிளை

ஓடெரி வேய வுடன் றுலாய்ப்-பாடி

உயர்ந்தோங் கரணகத் தொன்னார் பணியப்

பெயர்ந்தான் பெருந்தகையி னான்.

உழிஞை அரசன் பகைவரின் அரணை அழித்து வெற்றி கொண்டான். அதனால் பகையரசனால் கொடுக்கப் பெற்ற திறைப்பொருள் கொண்டு நாடு திரும்பினான்.

## 6.1.31 அடிப்பட விருத்தல்:

பேணாதார் மறம்கால

ஆணைகொண்டு அடிப்பட இருந்தன்று.

பகைவர் நாடு தன் கீழ் அடிமைப்பட உழிஞை அரசன் சிறிது காலம் பாசறையில் தங்கி இருப்பது அடிப்பட இருத்தல் எனப்படும்.

ஒன்றி யவர்நா டொருவழித்தாய்க் கூக்கேட்ப

வென்றி விளையா விழுமதிலோர்-என்றும்

பருந்தார் செருமலையப் பாடி பெயரா

திருந்தா னிகன்மறவ ரேறு.

பகை மன்னர் சினம் கொண்டு போர் புரிந்து அதில் தோற்று தன் கீழ் ஈரக்கவேண்டும் என்பதற்காக உழிஞை அசரன் பாசறைக்கண் இருந்தான் . மேலும் தனக்க அடிபணியாதார் அரணுக்குள் அவர்களின் பிணங்களை உண்டு மகிழுமாறு போர் செய்யவும் சில காலம் பாசறைக்கண் தங்கியிருந்தான் என்பது ஆகும்.

## 6.1.32 தொகைநிலை:

எம்மதிலின் இகல்வேந்தரும்

அம்மதிலின் அடிஅடைந்தன்று.

உழிஞை அரசன் தன்னை எதிர்த்த நொச்சி அரசனை வென்றான். அதனைக் கண்ட பிற பகைவர்களும் உழிஞை அரசனின் அடி பணிந்தனர் என்பது இத் துறையாகும்.

நாவல் பெயரிய ஞாலத் தடியடைந்

தேவ லெதிரா திகல்புரிந்த - காவலர்

வின்னின்ற தானை விறல்வெய்யோற் கம்மதிலின்

முன்னின் றவிந்தார் முரண் .

உழிஞை அரசன் தன்னை எதிர்த்த நொச்சி அரசனை வென்றான். அதனைக் கண்ட நாவலந்தண்பொழில் என்னும் இப் பரந்த உலகத்தின்கண் இருந்து பிற பகைவர்களும் உழிஞை அரசனின் அடி பணிந்தனர் .

## பயிற்சி வினாக்கள்:

**1.கந்தழி குறித்து எழுதுக**

மாஉடைத்தார் மணிவண்ணன்

சோஉடைத்த மறநுவலின்று

உழிஞை அரசனைத் திருமாலாகக் கொண்டு புகழ்துரைப்புது இத்துறையாகும். திருமால் முன்னொரு காலத்து மாலையாற் சிறந்த நீலமணிபோன்ற மேனியையுடையான். அத்தகைய திருமால் சோவென்னும் அரணை அழித்தான் எனச் சொல்வது கந்தழி என்பதாகும்.

அன்றெறிந் தானு மிவனா லரண்வலித்

தின்றிவன் மாறா வெதிர்வார்யார்-என்றும்

மடையார் மணிப்பூ ணடையாதார் மார்பிற்

சுடராழி நின்றெரியச் சோ.

ஒளிபொருந்திய மணிகளைத் தன் மார்பில் அணிந்திருந்த பகையரசனின் மார்பின் மீது சக்கரப் படையினை ஏவித் தீயை உண்டாக்கியவன் உழிஞை அரசன். முன்னொரு காலத்து சோவென்னும் அரணை



குறிப்பு

அழித்தவனும் இவனே ஆவான். எனவே இவனை எதிர்த்து நிற்கும் அரசர் உண்டோ? இல்லை என்பதாம்.

**2.பாசிநிலை என்றால் என்ன?**

அடங்காதார் மிடல்சாயக்

கிடங்கிடைப் போர்மலைந்தன்று.

நொச்சிப் பகைவருடைய வலிமை கெட அகழியிடத்துப் போர் மேற் கொண்டதைக் குறிப்பது இத்துறையாகும்.

நாவாயுந் தோணியு மேல்கொண்டு நள்ளாதார்

ஓவார் விலங்கி யுடலவும்-பூவார்

அகழி பரந்தொழுகு மங்குருதிச் சேற்றுப்

பகழிவாய் வீழ்ந்தார் பலர்.

அகழியிடத்து வந்த உழிஞை மறவர் அதனை அடுத்து முன்னேறாமல் தடுத்த நொச்சி மறவர் ஓடம் மரத்தோணி போன்றவற்றைக் கொண்டு போரிட்டனர். அவர்களை உழிஞை மறவர் எதிர்த்துப் போர் செய்தனர்.அதனால் அகழியில் பகைவரின் அம்பினால்உழிஞை மறவர் பலர் வீழ்ந்து இறந்தனர் என்பது இதன் பொருளாம்.

**3. எயிற்பாசி என்பதனை விளக்குக**

உடல்சினத்தார் கடிஅரணம்

மிடல்சாய மேல்இவர்ந்தன்று.

உழிஞை மறவர் மதிலின் மேல் ஏணியைச் சாத்தி ஏறினர் என்பதனைக் குறிப்பது இத்துறையாகும்.

கடுமுர ணெ.்.கங் கழிய -அடுமுரண்

ஆறினா ரன்றி யரவு முடும்பும்போல்

ஏறினா ரேணி பலர்.

செங்கலால் செய்த நெடிய மதிலைச் சூழ்ந்து நீங்காராய் உழிஞை மறவர் நின்றனர். அவர்கள் மேல் நொச்சி மறவர் கொடிய வேலினை எய்தனர்.அது மார்பிலேபட்டு உருவிப் போகப் பலர் இறந்தனர். எனினும் எஞ்சியோர் பாம்பும் உடம்பும் போல் ஏணிமேல் ஏறினார்.

## கூறு: 7 தும்பைப்படலம்

### நோக்கம்: தும்பைத்திணையின் இலக்கணம், அவற்றின் பிரிவுகள் போன்றவற்றை மாணவர்களுக்குக் கற்பித்தல்

### 7. தும்பைப்படலம்:

குறிப்பு

மற்றரசர் இருவர் போர்க்களத்தில் வாகை சூடுதலை நோக்கமாகக் கொண்டு கடும்போர் செய்வர்.இப்போரானது அவர்களின் வலிமையை வெளிப்படுத்துவதாய் அமையும்.இத்தகைய போரினை மேற்கொள்ளும் மறவர்கள் தும்பைப்பூவினைச் சூடுவர். எனவே இத்திணை தும்பைத்திணை எனப் பெயர் பெறலாயிற்று.

### 7.1 தும்பைத்திணையின் துறைகள்:

துன்னரும் கடும்போர்த் தும்பை தும்பை அரவம்
தன்னிகர் இல்லாத் தானை மறமே
யானை மறத்தொடு குதிரை மறமே
தார்நிலை தேர்மறம் பாணது பாட்டே
இருவரும் தபுநிலை எருமை மறமே
ஏம எருமை நூழில் என்றா
நூழில் ஆட்டே முன்தேர்க் குரவை
பின்தேர்க் குரவை பேய்க்குர வையே
களிற்றுட னிலையே ஒள்வாள் அமலை
தானை நிலையே வெருவரு நிலையே
சிருங்கார நிலையே உவகைக் கலுழ்ச்சி
தன்னை வேட்டல் தொகைநிலை உளப்பட
நன்பொருள் தெரிந்தோர் நால்இரு மூன்றும்
வண்பூந் தும்பை வகை என மொழிப .

என்பன தும்பைத்திணையின் துறைகள் ஆகும்.

தும்பைத்திணை, தும்பையரவம், தானைமறம், யானைமறம், குதிரை மறம், தார்நிலை, தேர்மறம், பாண்பாட்டு, இருவருந்தபுநிலை, எருமை மறம், ஏமவெருமை, நூழில், நூழிலாட்டு, முன்றேர்க்குரவை ,

குறிப்பு

பின்றோர்க்குரவை, பேய்க்குரவை, களிற்றுடனிலை, ஒள்வாள்அமலை, தானை நிலை, வெருவருநிலை, சிருங்காரநிலை, உவகைக்கலுழ்ச்சி, தன்னைவேட்டல், தொகைநிலையென இருபத்துநான்கும் தும்பைத்திணையின் துறைகள் ஆகும்.

### 7.1.1 தும்பை:

செங்களத்து மறங்கருதிப்

பைந்தும்பை தலைமலைந்தன்று.

குருதியாற் சிவந்த நிறத்தினை உடையது போர்க்களம். அதில் பகைவரை வீழ்த்த நினைத்த அரசன் தும்பைப்பூவைச் சூடுவது இத்துறையாகும்.

கார்கருதி நின்றதிருங் கௌவை விழுப்பணையான்

சோர்குருதி சூழா நிலநனைப்பப் - பார்கருதித்

துப்புடைத் தும்பை மலைந்தான் றுகளறுசீர்

வெப்புடைத் தானையெம் வேந்து .

குற்றந்தீர்ந்த புகழினையும் வெம்மை மிக்க படையினையும் உடையவன் எம் மன்னன். அவன் மேகத்தை ஒப்புமுழங்கும் முரசினையுடையான் அத்தகையவன் குருதி ஒழுகும் போர்க்களத்தை விரும்பினான்.அதற்காக வலியையுடைய தும்பை மாலையைச் சூடினான்;

### 7.1.2 தும்பை அரவம்:

பொன்புனைந்த கழல்அடியோன்

தன்படையைத் தலையளித்தன்று.

வீரக்கழற்காலினையுடைய தும்மை அரசன் தனது படை மறவர்களின் தகுதி அறிந்து அதற்கேற்ப பொருள் வழங்கி மகிழ்விப்பான். இது தும்பை அரவம் எனப்படும்.

வெல்பொறியு நாடும் விழுப்பொருளுந் தண்ணடையும்

கொல்களிறு மாவுங் கொடுத்தளித்தான் - பல்புரவி

நன்மணித் திண்டேர் நயவார் தலைபனிப்பப்

பன்மணிப் பூணான் படைக்கு .

நவமணி மாலைகள் செறிந்த மார்பினை உடைய தும்பை மன்னன் தன் பகைவர்களை வெல்லக் கருதினான். அதனால் தன் மறவர்களுக்கு

வெல்லுதற்குரிய இயந்திரம், குறுநாடு, பொன் போன்ற மதிப்புள்ள பொருட்கள், மருதநிலம், யானை, குதிரை போன்றவற்றை வழங்கினான்.





## 7.1.3 தானை மறம்:

தாம்படைத் தலைக்கொள்ளாமை

.ஓம்படுத்த உயர்புகூறின்று.

போர் நிகழுமாயின் ஒத்த வலிமை உடைய இருதிறப்படையும் தம்முள் பொருது அழிந்த விடுவர், அதனால் போர் ஏற்படாமல் காத்தல் இத்துறையாகும்

கழுதார் பறந்தலைக் கண்ணுற்றுத் தம்முள்

இழுதார்வேற் றானை யிகலிற் - பழுதாம்

செயிர்காவல் பூண்டொழுகுஞ் செங்கோலார் செல்வம்

உயிர்காவ லென்னு முரை.

அரசர்கள் குற்றம் இல்லாமல் காக்கும் செயங்கோன்மை கொண்டவர்கள் ஆவர்: இத்தகைய செங்கோன்மையின் சிறப்பு உயிர்கள் அழியாமல் காத்தல் என்பதாகும். அதனை விடுத்து போர் முகத்து நிற்பார்கள் ஆயின் குற்றம் இல்லாமல் காத்தலே செங்கோன்மை என்னும் சான்றோரின் சொல் குற்றமுடையதாகும்.

## 7.1.4 இதுவுமது:

பூம்பொழில் புறம்காவலனை

ஓம்படுத்தற்கு உரித்தெனமொழிப.

பொலிவுபெற்ற நிலவுலகினை ஆளும் அரசனுக்கு உறுதிப் பொருளை உரைத்தலும் இத்துறையாகும்.

வயிர்மேல் வளைஞரல வைவேலும் வாளும்

செயிர்மேற் கனல்விழிப்பச் சீறி - உயிர்மேற்

பலகழியு மேனும் பரிமான்றேர் மன்னர்க்

குலகழியு மோர்த்துச் செயின்.

போர்க்களத்தில் சங்கும் கொம்பும் முழங்கும். வாட்கள் தம்முள் தோதிக் கொள்ளுதலால் நெருப்புப்பொறி பறக்கும்.அதனால் உயிர்கள் பலவும்

இறந்து படும். அரசன் உரிய காலத்தை ஆராய்ந்து போர் செய்தால் உலகம் அழியும் என்பதாம்.



## 7.1.5 இதுவுமது:

வேல்தானை மறங்கூறி மாற்றாரது அழிபிரங்கினும்

ஆற்றின் உணரின் அத்துறை யாகும்.

**குறிப்பு**

வேற்படையினது தறுகண்மையைச் சொல்லிப் பகைவருடைய அழிவிற்கு வருந்தி உரைத்தல் இத்துறையாகும்.

மின்னார் சினஞ்சொரிவேன் மீளிக் கடற்றானை

ஒன்னார் நடுங்க வுலாய்நிமிரின் - என்னாங்கொல்

ஆழித்தேர் வெல்புரவி யண்ணன் மதயானைப்

பாழித்தோண் மன்னர் படை.

ஒளி நிறைந்த சினத்தீயினை உடைய வேலினை ஏந்தியவன் தும்பை அரசன். அத்தகையவன கடல் போலும் படையினைத் தன்னகத்தே கொண்டவன்.அப்படையானது பகைவர் அஞ்சி நடக்கும் படியான தன்மையைக் கொண்டது. அவ்வாறு அப்படை செல்லுமானால் பகைவரின் தேர்ப்படை, குதிரைப்படை, யானைப்படை ஆகியவற்றின் நிலை என்னாகுமோ ? அறியோம் என்பதாம்.

## 7.1.6 யானைமறம்:

எழும்அரவக் கடல்தானையான்

மழகளிற்றின் மறங்கிளந்தன்று.

மிகுந்த ஆரவாரத்தால் நிறைந்த கடல்போன்ற படையினை உடையவன் தும்பை வேந்தன். அவனது இளங்களிற்றினது மறத்தைக் கூறியது.

அடக்கருந் தானை யலங்குதார் மன்னர்

விடக்கு முயிரு மிசையக் - கடற்படையுள்

பேயு மெருவையுங் கூற்றுந்தன் பின்படரக்

காயுங் கழலான் களிறு.

தடுத்தற்கரிய சேனையினையும் கோவை மாலையினையுமுடையவன் பகை அரசன்.அவன் வீரக்கழல் அணிந்த தும்பை அரசனுடன் போர் செய்ய வந்தான்.அதனால் தும்பை அரசனின் பட்டத்து யானை பகைவரின் தசையும் உயிரும் தனித்தனியாகச் சிதறும்படி

போர்க்களத்தில் புகுந்தது.அவற்றினை உண்பதற்காக கழுகும் கூற்றமும் அதனைப் பின் தொடர்ந்து வந்தன.



## 7.1.7 குதிரைமறம்:

ஏறிபடையான் இகல்அமருள்

செறிபடைமான் திறங்கிளந்தன்று.

வேற்படையால் சிறந்த தும்பை வேந்தனின் குதிரைப் படையின் பெருமையினை விதந்து சொல்லுதல் இத்துறையாகும்.

குந்தங் கொடுவில் குருதிவேல் கூடாதார்

வந்த வகையறியா வாளமருள் - வெந்திறல்

ஆர்கழன் மன்ன னலங்குளைமா வெஞ்சிலை

வார்கணையின் முந்தி வரும் .

வலிமையினை உடைய தும்பை வேந்தனின் குதிரையானது போர்களத்துச் சென்றது. அப் போர்க்களம் விற்படையும் வேற்படையும் குருதி தோய்ந்த காலாட்படையும் மோதும் தன்மை கொண்டது. அத்தகைய போர்க்களத்தில் குதிரையானது வில்லில் இருந்த புறப்பட்ட அம்புபோல் விரைந்து வந்தது.

## 7.1.8 தார்நிலை:

முன்எழுதரு படைதாங்குவன்என

மன்னவற்கு மறம்கிளந்தன்று.

தூசிப்படையைத் தான் ஒருவனே தடுப்பேன் என நின்ற மற வீரனின்பெருமையை எடுத்துரைப்பது இத்துறையாகும்.

உறுசுடர் வாளோ டொருகால் விலங்கின்

சிறுசுடர்முற் பேரிருளாங் கண்டாய் - எறிசுடர்வேற்

றேங்குலாம் பூந்தெரியற் றேர்வேந்தே நின்னோடு

பாங்கலா மன்னர் படை .

தும்பை வேந்தனே, நான் ஒளிவீசும் வசாளேந்தி போர் செய்யப்போவேன். அப்போது சிறு விளக்கின் முன் ஒளி கெட்டு ஓடுமாறு பகைவர்கள் கெட்டழிவர் என தும்பை வீரன் மன்னனைப் பார்த்துக் கூறினான்.

## 7.1.9 இதுவுமது:

ஒருகுடை மன்னனைப் பலகுடை நெருங்கச்



செருவிடைத் தமியன் தாங்கற்கும் உரித்தே.

வெண்கொற்றக் குடையினை உடைய தும்பை வேந்தனை பல மன்னர்கள் எதிர்த்து நின்றனர். அதனைக் கண்ட தும்பை வீரன் தான் ஒருவனாக அவர்களை எதிர்த்து நின்று வெற்றி கொள்வதும் தார் நிலை என்பதாகும்..

குறிப்பு

காலான் மயங்கிக் கதிர்மறைத்த கார்முகில்போல்

வேலான்கை வேல்பட வீழ்ந்தனவே - தோலா

இலைபுனை தண்டா ரிறைவன்மேல் வந்த

மலைபுரை யானை மறிந்து .

தும்பை அரசன் தோல்வி என்பதனைக் காணாதவன்.அம்மன்னனுடன் போரிடுவதற்காக யானைகள் நெருங்கி வந்தன. அவற்றை அம்மன்னனின் வீரன் ஒருவன் கண்டான்.தன் கையகத்து இருந்த வேல் கொண்டு அவற்றைத் தாக்கினான்.அதனால் யானைகள் இறந்து வீழ்ந்தன.அத்தகைய காட்சியானது கதிர் மண்டலத்தினை மறைத்த கரிய மேகங்கள் காற்றால் கீழ்மேலாய் நிலைகுலைந்ததனை ஒத்துக் காணப்பட்டன.

## 7.1.10 தேர்மறம்:

முறிமலர்த்தார் வயவேந்தன்

செறிமணித்தேர்ச் சிறப்புஉரைத்தன்று.

தும்பை மன்னனின தேரின் பெருமையினை விதந்து கூறுவது தேர்மறம் என்பதாகும்..

செருமலி வெங்களத்துச் செங்குருதி வெள்ளம்

அருமுர ணாழி தொடர - வருமரோ

கட்டார் கமழ்தெரியற் காவலன் காமர்தேர்

ஒட்டார் புறத்தின்மே லூர்ந்து .

தம்பை மாலையினை அணிந்த தும்பை மன்னனின் தேரானது போர்க்களத்தில் பகைவரை வீழ்த்தியது. அதன் வலிமையான தேர்ச்சக்கரத்தில் சிக்கி பகைவர்கள் அழிந்தொழிந்தனர்.

## 7.1.11 பாண்பாட்டு:

வெண்கோட்ட களிறுஎறிந்து செங்களத்து வீழ்ந்தார்க்குக்

கைவல்யாழ்ப் பாணர் கடன்இறுத் தன்று.

போர்க்களத்தில் யானையினை வென்று சிறந்த தும்பை மறவன் பகைவர்களால் வெட்டப்பட்டு வீழ்ந்து இறந்தான்.அத்தகைய வீரனின் உடலுக்கு யாழ்வாசிக்கும் பாணர்கள் இறுதிக்கடன் செய்தது இத்துறையாகும்.



தளரிய ராய்புதல்வர் தாமுண ராமைக்

களரிக் கனன்முழங்க மூட்டி - விளரிப்பண்

கண்ணினார் பாணர் களிறெறிந்து வீழ்ந்தார்க்கு

விண்ணினார் செய்தார் விருந்து .

போர்க்களத்தில் யானையினை வென்று சிறந்த தும்பை மறவன் பகைவர்களால் வெட்டப்பட்டு வீழ்ந்து இறந்தான். யானையை எறிந்து பட்ட வீரர்க்கு சொர்க்கத்து உள்ளோர் விருந்திடுதல் செய்தார்.அதனை தளர்ந்த இயல்பினையுடைய அவனின் மனைவி தாய் சிறுவர்போன்றோர் அறியவில்லை.அதற்கு முன்னர் பாணர் நெருப்பை முழுங்கமூட்டிச் சாப்பண்ணைப் பாடக்கருதினார்.

## 7.1.12 இருவரும் தபுநிலை:

பொருபடை களத்துஅவிய

இருவேந்தரும் இகல்அவிந்தன்று.

போர்க்களததில் போர் செய்த படையிரண்டும் தம்முள் பொருது அழிந்தொழிந்தது. அதனைக் கண்ட மன்னர்களும் போரிட்டு அழிந்தொழிந்தனர் என்று சொல்வது இருவரும் தபுநிலை எனப்படும்.

காய்ந்து கடுங்களிறு கண்கனலக் கைகூடி

வேந்த ரிருவரும் விண்படர - ஏந்து

பொருபடை மின்னப் புறங்கொடா பொங்கி

இருபடையு நீங்கா விகல் .

## 7.1.13 எருமை மறம்:

வெயர்பொடிப்பச் சினங்கடைஇப்

பெயர்படைக்குப் பின்நின்றன்று.

பகைவரின் படைக்குத் தோற்றோடும் தன் மறவர்களைக் கண்ட வீரன் ஒருவன் சினம் கொண்டு அப்படைகளுக்கு முன் தான் ஒருவனாய் நின்று பகைவர்களின் படை முன்னேறி வர இயலாதவாறு போர் செய்தல் இத்துறையாகும்.

குறிப்பு

கடுங்கண் மறவன் கனல்விழியாச் சீறி
நெடுங்கைப் பிணத்திடை நின்றான் - நடுங்கமருள்
ஆள்வெள்ளம் போகவும் போகான்கை வேலூன்றி
வாள்வெள்ளந் தன்மேல் வர .

போரிடத்துக் தன் படை அஞ்சி ஓடவும் போகானாகித் தன் கைவேலை ஊன்றி, பகைவர் வாட்படை தன்மேலே வீரன் நெருப்புப்போல் விழித்துக் யானைப்பிணத்தின் நடுவே நின்றான்.

## 7.1.14 ஏம எருமை:

குடைமயங்கிய வாள்அமருள்
படைமயங்கப் பாழிகொண்டன்று.

மன்னர்களின் குடைகள் தம்முள் நின்று போர் செய்தற்கு உரிய இடமாக விளங்குவது போர்க்களம். அதனுள் வீரன் ஒருவன் தன் வேலினை யானை மேல் எறிந்து பின் தன் தோளினால் போர் செய்து பகைவரை வீழ்த்தினான் என்பது இத்துறையாகும்.

மருப்புத்தோ ளாக மதர்விடையிற் சீறிச்
செருப்புகன்று செங்கண் மறவன் - நெருப்பிமையாக்
கைக்கொண்ட வெ·கங் கடுங்களிற்றின் மேற்போக்கி
மெய்க்கொண்டான் பின்னரு மீட்டு.

தோளே கொம்பாகக் கொண்டுஎருமையேறு போல வெகுண்டு போரைவிரும்பியவீரன்,கையிலேந்திய வேலைக் யானைமேல் செலுத்தி முன்பு வென்றி கொண்டது போல் நிராயுதனாகி நின்று உடல் வலிமையால் பின்னரும் வென்றிகொண்டான்.

## 7.1.15 படைமறுத்து நூழில்

கழல்வேந்தர் படைவிலங்கி
அழல்வேல்திரித்து ஆட்டுஅமர்ந்தன்று.

பகைவரை வென்ற தும்பை மறவன் தன் வேலினை மேலும் கீழும் சுழற்றி மகிழ்ந்து ஆடுவது இத்துறையாகும்.

ஆட லமர்ந்தா னமர்வெய்யோன் வீழ்குடர்
சூடன் மலைந்த சுழல்கட்பேய் - மீடல்
மறந்தவேன் ஞாட்பின் மலைந்தவர் மார்பம்
திறந்தவேற் கையிற் றிரித்து.

தும்பை மறவன் தன் எதிர்த்துப் போரிட்ட பகைவர்களின் மார்பினைத் தன் வேலாலல் பிளந்தான். பின் தன் வேலினை மேலும் கீழும் சுழற்றி மகிழ்ந்து ஆடினான். அதனைக் கண்ட பேய்கள் போர்க்களத்தில் சரிந்து விழும் பகைவர்களின் குடரினை மாலையாகச் சுமந்து கொண்டு ஆடின.

## 7.1.16 நூழிலாட்டு:

களங்கழுமிய படைஇரிய

உளங்கிழித்தவேல் பறித்துஓச்சின்று.

தும்பை மறவன் பகைவர்களை எதிர்த்துப் போரிட்டான். அவர்கள் எறிந்த வேல் ஒன்று அவன் மார்பில்பாய்ந்தது. அந்த வேலைப் பறித்து பகைவர் போர்க்களத்தை விட்டு ஓடும்படி எறிந்தது இத்துறை யாகும்.

மொய்யகத்து மன்னர் முரணினி யென்னாங்கொல்
கையகத்துக் கொண்டான் கழல்விடலை - வெய்ய
விடுசுடர் சிந்தி விரையகலம் போழ்ந்த
படுசுட ரெ.ஃ.கம் பறித்து.

தும்பை மாலையினை அணிந்தவன் தும்பை அரசன். அத்தகைய தும்பை மறவன் பகைவர்களை எதிர்த்துப் போரிட்டான். அவர்கள் எறிந்த வேல் ஒன்று அவன் மார்பில்பாய்ந்தது. அந்த வேலைப் பறித்து தன்கையில் தாங்கியுள்ளான். இனிப் பகைவர் நிலை எத்தன்மைத்தாகுமோ? அறியோம் என்பதாம்.

## 7.1.17 முன்தேர்க் குரவை:

எழுஉறழ் திணிதோள் வேந்தன் வெல்தேர்

முழுவலி வயவர் முன்ஆ டின்று.

வலிமையான கணையத்தை ஒத்த திண்மையான தோளினையுடைய மன்னனுடைய தேர்முன் வலிமையுடைய வீரர் ஆடியது.

ஆனா வயவர்முன் னாட வமர்களத்து
வானார்மின் னாகி வழிநுடங்கும்- நோனாக்
கழுமணிப் பைம்பூட் கழல்வேந்த னூரும்
குழுமணித் திண்டேர்க் கொடி.

தும்பை மன்னன் வீரக்கழலினை அணிந்தவன். போர் செய்தலை விரும்பியவன். அவன் ஏறி வந்த தேரின் கொடிகள் காற்றில் அசந்தன. அத்தேரின் முன்னே குன்றாத வலிமை உடைய போர் மறவர் ஆடிக்கெண்டே வந்தனர்.

குறிப்பு

## 7.1.18 பின்தேர்க் குரவை:

கருங்கழல் மறவரொடு வெள்வளை விறலியர்

பெருந்தகை தேரின் பின்ஆ டின்று.

தும்பை மன்னன் வீரக்கழலினை அணிந்தவன்.போர்செய்தலை விரும்பியவன்.அத்தகையவன் ஏறி வந்த தேரின் பின்னே மறவரும் விறலியரும் ஆடி வந்தனர்.

கிளையாய்ந்து பண்ணிய கேள்வியாழ்ப் பாணும்
வளையா வயவரும் பின்னாக் - கொளையாய்ந்
தசைவிளங்கும் பாடலொ டாட வருமே
திசைவிளங்குந் தானையான் றேர்.

கிளைநரம்பை ஆராய்ந்தமைத்த சுருதியான்மிக்கது யாழ்,அத்தகைய யாழினை இசைப்பதில் வல்லவர்கள் பாண்மகளிர். அம்மகளிர் தூக்குதல் ஓசை அமைந்த பாடலைப் பாடினர், அதற்கேற்ப தும்பை மறவர்கள் ஆடினர். அவர்களின் முன்னே புகழ் நிறுத்தும் படைகளை உடைய தேர் ஆடி வந்தது.

## 7.1.19 பேய்க் குரவை:

மன்னன் ஊரும் மறம்மிகு மணித்தேர்ப்

பின்னும் முன்னும் பேய்ஆ டின்று.

அரசன் செலுத்தும் வலிமைமிக்க மணியையுடைய தேரின் பின்பும் முன்பும் பேய் ஆடியது.

முன்னரும் பின்னரும் மூரிக் கடற்றானை
மன்ன னெடுந்தேர் மறனேத்தி- ஒன்னார்
நிணங்கொள்பேழ் வாய நிழல்போ னுடங்கிக்
கணங்கொள்பே யாடுங் களித்து.

பெரிய கடல் போன்ற படையையுடைய அரசன் நெடியதேரின் தன்மையை வாழ்த்தித் தேரின்முன்னும் பின்னும்,பகைவரது தசைகளைத் தின்ற பெரிய வாயினையுடைய பேய் நிழல் போல அசைந்து மகிழ்ந்து நடனமாடியது.

## 7.1.20 களிற்றுடனிலை:

ஒளிறுஎ.்கம் படவீழ்ந்த

களிற்றின்கீழ்க் கண்படுத்தன்று.

ஒளியையுடைய வேல்படுதலான் வீழ்ந்த யானையின்கீழ்ப்பட்டது.

இறுவரை வீழ வியக்கற் றவிந்த

தறுகட் டகையரியரிமாப் போன்றான்-சிறுகட்

பெருங்கைக் களிறெறிந்துபின்னதன் கீழ்ப்பட்ட

கருங்கழற் செவ்வே லவன்.

பெரியமலை முறிந்து வீழப் போகக்கற்றுப் பட்ட கொடுமைத்தொழின் மேம்பாட்டினையுடைய சிங்கத்தை ஒத்தான்; சிறிய கண்ணினையும் பெரிய கையினையுமுடைய ஆனையையெறிந்து பின்னர் அதன் கீழ்ப்பட்ட வலிய வீரக் கழலினையும் சிவந்த வேலினையும் உடையவன்.

## 7.1.21 ஒள்வாள்அமலை

வலிகெழுதோள் வாள்வயர்

ஒலிகழலான் உடன்ஆடின்று.

வலிமை வாய்ந்த பகையரசன் போர்க்களத்தில் இறந்து பட அவனைச் சுற்றி வீரர்கள் வாளேந்தி ஆடுவது ஒள்வாள் அமலை எனப்படும்.

வாளை பிறழுங் கயங்கடுப்ப வந்தடையார்

ஆளமர் வென்றி யடுகளத்துத் - தோள்பெயராக்

காய்ந்தடு துப்பிற் கழன்மறவ ராடினார்

வேந்தொடு வெள்வாள் விதிர்த்து.

காலில் வீரக்கழலை அணிந்த தும்பை மறவர் போர்க்களத்தில் மிகுந்த சினத்துடன் போர் செய்தனர், அப்போர்க்களத்தில் வலிமை வாய்ந்த பகையரசன் போர்க்களத்தில் இறந்து பட்டதைக் கண்டு அவனைச் சுற்றி வீரர்கள் வாளேந்தி ஆடினர்.

## 7.1.22 தானைநிலை:

இருபடையும் மறம்பழிச்சப்

பொருகளத்துப் பொலிவுஎய்தின்று.

இரு பக்கத்துப் படையும் தன்னைப் புகழும்படி தனி ஒரு வீரன் மேம்பட்டு நிற்பதனைக் குறிப்பது தானைநிலை எனப்படும்.

நேரார் படையி னிலைமை நெடுந்தகை

ஓரா னுறைகழியா னொள்வாளும்- தேரார்க்கும்

வெம்பரிமா வூர்ந்தார்க்கும் வெல்களிற்றின் மேலார்க்கும்

கம்பமா நின்றான் களத்து.



பகைவர் படையின் வலிமையினைக் கண்டு அஞ்சான். தன் வாளினையும் உறையில் இருந்து எடுத்தான் இல்லை. ஆயினும்தேர்வீரர்க்கும் குதிரையைச் செலுத்தினார்க்கும் வெல்லும் யானையின் மேல் இருந்தார்க்கும் நிலைத்தூண்போலக் களத்தின்கண் நின்றான்.

## 7.1.23 வெருவரு நிலை:

குறிப்பு

விலங்கமருள் வியலகலம் வில்உதைத்த கணைகிழிப்ப
நிலந்தீண்டா வகைப்பொலிந்த நெடுந்தகை
நிலையுரைத்தன்று.

தும்பை மறவன் பகைவரின் போர்க்களத்தில் எதிர்த்துப் போர் புரிந்து நின்றான். அப்பொழுது பகைவரின் அம்புகள் அவ்வீரனின் மார்பில் பாய்ந்தன. அவ்வாறு பாய்ந்த அம்புகள் அவ்வீரன் நிலத்தில் வீழாவண்ணம் தாங்கிப் பிடித்தன எனச் சொல்வது இத்துறையாகும்

வெங்கண் முரச திரும் வேலமருள் வில்லுதைப்ப
எங்கு மருதத் திடைக்குளிப்பச் - செங்கட்
புலவா ணெடுந்தகை பூம்பொழி லாகம்
கலவாமற் காத்த கணை.

முரசு முழங்கும் வேற் போர்க்களத்துள் சிவந்த கண்ணினையும் புலால் நாறும் வாளினையும் உடையனாகிப் பெரிய தகைமையாற் சிறந்தவனின் மார்பில் பாய்ந்த பகைவர்களின் வேல்கள் அவ்வீரன் நிலத்தில் வீழாவண்ணம் தாங்கிப் பிடித்தன.

## 7.1.24 சிருங்கார நிலை

பகை புகழக் கிடந்தானை
முகைமுறுவலார் முயக்கு அமர்ந்தன்று

பலரும் புகழும் ஆற்றலை உடைய தும்பை மறவன் போர்க்களத்தில் இறந்தான்.அவனை முல்லை அரும்பு போன்ற பற்களை உடைய மகளிர் ஆரத் தழுவினர் என்று சொல்வது இத்துறையாகும்.

எங்கணவன் எங்கணவன் என்பார் இகல்வாடத்
தங்கணவன் தார்தம முலைமுகப்ப – வெம்கணைசேர்
புண்ணடை மார்பம் பொருகளத்து புல்லினார்
நுண்ணிடைப் பேர்அல்கு லார்

பலரும் புகழும் ஆற்றலை உடைய தும்பை மறவன் போர்க்களத்தில் இறந்தான். அவனை எங்கணவன் எங்கணவன் இவன் என்று விண்ணுலகத்தினைச் சேர்ந்த மகளிர் தழுவ வந்தனர். அவர்தம் கூற்றினை தும்பை மறவனின் உரிமை மகளிர் மாறுபடச் செய்தனர் என்பது இதன் பொருள் ஆகும்.

குறிப்பு

### 7.1.25 உவகைக் கலுழ்ச்சி:

வாள்வாய்த்த வடுஆழ்யாக்கைக்
கேள்கண்டு கலுழ்ந்துஉவந்தன்று.

போர்க்களத்தில் வாளால் விழுப்புண் பெற்ற உடம்புடைய கணவனைக்கண்டு மனைவி மகிழ்ந்து கண்ணீர் வடித்தது இத்துறையாகும்.

வெந்தொழிற் கூற்றமு நாணின்று வெங்களத்து
வந்த மறவர்கை வாடுமிப்பப்- பைந்தொடி
ஆடரிமா வன்னான் கிடப்ப வகத்துவகை
ஓடரிக்கணீர்பா யுக.

தும்பை மறவன் பகைவரின் போர்க்களத்தல் எதிர்த்துப் போர் புரிந்து நின்றான். அப்பொழுது பகைவரின் வாள் அவ்வீரனின் மார்பில் விழுப்புண்களை ஏற்படுத்தியது. அத்தகைய புண்ணுடன் போர்க்களத்தில் வீழ்ந்து பட்டான்.அதனைக் கண்ட வளையல்கள் அணிந்த அவனின் மனைவி மகிழ்ந்து கண்ணீர் வடித்தாள்.

### 7.1.26 தன்னை வேட்டல்:

தம்இறைவன் விசும்புஅடைந்தென
வெம்முரணான் உயிர்வேட்டன்று.

தன்னுடைய மன்னன் விசும்பைச் சேர்ந்தான் என அறிந்த வீரத்தினை உடைய மறவன் தானும் உயிரை விட்டது இத்துறையாகும்.

வான மிறைவன் படர்ந்தென வாடுடுப்பா
மானமே நெய்யா மறம்விறகாத்- தேனிமிரும்
கள்ளவிழ் கண்ணிக் கழல்வெய்யோன் வாளமர்
ஒள்ளழலுள் வேட்டா னுயிர்.

விண்ணிடத்து தன் மன்னன் சென்றான் என்பதனை அறிந்த தும்பை மறவன் போர்க்களத்தினையே நெருப்பாகவும் வீரத்தினையே விறகாகவும் மான உணர்வினையே நெய்யாகவும் வாளினையே நெய்யூற்றும்

துடுப்பாகவும் கொண்டு தன் உயிரை வேள்விக்குரிய பொருளாகச் சொரிந்து கள வேள்வி செய்தான்.

## 7.1.27 இதுவுமது:

குறிப்பு

காய்கதிர் நெடுவேல் கணவனைக் காணிய
ஆயிழை சேறலும் அத்துறை யாகும்.

பகையை வெல்லும் வேலினையுடைய கணவனைக் காணவேண்டி அவன் இறந்த போர்க்களத்துள் அழகிய அணிகலனை உடைய மனைவியும் போயினாள் என்பது இத்துறையேயாம்.

கற்பின் விழுமிய தில்லை கடையிறந்
திற்பிறப்பு நானு மிடையொழிய - நற்போர்
அணங்கிய வெங்களத் தாருயிரைக் காண்பான்
வணங்கிடை தானே வரும்.

பெண்ணிற்குக் கற்புடைமையிற் சீரியதொன்றில்லைஆனால் இப்பெண் தன் வீட்டின் வாயிலின் நீங்கிக் குடிப்பிறப்பும் நாணமும் தன்னிடத்தைவிட்டு நீங்க படைகள் பரப்பிற்கிடந்த தன்னுயிர் அனைய கணவனைக் காணவேண்டி போர்க்களத்திற்குத் தனியளாய் வந்தாள்.

## 7.1.28 தொகைநிலை:

அழிவின்று புகழ்நிறீஇ
ஒழிவின்று களத்துஒழிந்தன்று.

நில்லா உலகத்து நிலைத்த புகழ் வேண்டி போர்க்களத்தில் பொருத இருபேரும் வேந்தரும் வீரர்களும் ஒருங்கே மாய்ந்தனர் எனச் சொல்லுவது இத்துறையாகும்.

மண்டமர்த் திண்டோண் மறங்கடைஇ மண்புலம்பக்
கண்டிரள்வேன் மன்னர் களம்பட்டார் - பெண்டிர்
கடிதெழு செந்தீக் கழுமினா ரின்னும்
கொடிதேகா ணார்ந்தின்று கூற்று.

வீரம் செறிந்த வேலினைக் கையில் தாங்கியவராய்ப் போர்க்களத்தில் போர் புரிந்த இருபெரும் வேந்தரும் ஒருங்கே மாண்டனர், அவர்கள்தம் மனைவியரும் நெருப்பினுள் மூழ்கி உயிர் துறந்தனர். இவர்களை எல்லாம் உண்ட பின்னும் வயிறு நிரம்பாமல் இருக்கும் கூற்றுவன் கொடியவனே ஆவான்.

## பயிற்சி வினாக்கள்:



குறிப்பு

**1.முன்தேர்க் குரவை – சுட்டியுரைக்க**

எழுஉறழ் திணிதோள் வேந்தன் வெல்தேர்

முழுவலி வயவர் முன்ஆ டின்று.

வலிமையான கணையத்தை ஒத்த திண்மையான தோளினையுடைய மன்னனுடைய தேர்முன் வலிமையுடைய வீரர் ஆடியது.

ஆனா வயவர்முன் னாட வமர்களத்து

வானார்மின் னாகி வழிநுடங்கும்- நோனாக்

கழுமணிப் பைம்பூட் கழல்வேந்த னூரும்

குழுமணித் திண்டேர்க் கொடி.

தும்பை மன்னன் வீரக்கழலினை அணிந்தவன்.போர்செய்தலைவிரும்பியவன். அவன் ஏறி வந்த தேரின் கொடிகள் காற்றில் அசந்தன.அத்தேரின் முன்னே குன்றாத வலிமை உடைய போர் மறவர் ஆடிக்கெண்டே வந்தனர்.

**2. சிருங்கார நிலை என்பதனை விளக்குக**

பகை புகழக் கிடந்தானை

முகைமுறுவலார் முயக்கு அமர்ந்தன்று

பலரும் புகழும் ஆற்றலை உடைய தும்பை மறவன் போர்க்களத்தில் இறந்தான்.அவனை முல்லை அரும்பு போன்ற பற்களை உடைய மகளிர் ஆரத் தழுவினர் என்று சொல்வது இத்துறையாகும்.

எங்கணவன் எங்கணவன் என்பார் இகல்வாடத்

தங்கணவன் தார்தம முலைமுகப்ப – வெம்கணைசேர்

புண்ணடை மார்பம் பொருகளத்து புல்லினார்

நுண்ணிடைப் பேர்அல்கு லார்

பலரும் புகழும் ஆற்றலை உடைய தும்பை மறவன் போர்க்களத்தில் இறந்தான். அவனை எங்கணவன் எங்கணவன் இவன் என்று விண்ணுலகத்தினைச் சேர்ந்த மகளிர் தழுவ வந்தனர். அவர்தம் கூற்றினை தும்பை மறவனின் உரிமை மகளிர் மாறுபடச் செய்தனர் என்பது இதன் பொருள் ஆகும்

**3.ஔள்வாள்அமலை விளக்கியுரை**



வலிகெழுதோள் வாள்வயர்

ஒலிகழலான் உடன்ஆடின்று.

வலிமை வாய்ந்த பகையரசன் போர்க்களத்தில் இறந்து பட அவனைச் சுற்றி வீரர்கள் வாளேந்தி ஆடுவது ஔள்வாள் அமலை எனப்படும்.

குறிப்பு

வாளை பிறழுங் கயங்கடுப்ப வந்தடையார்

ஆளமர் வென்றி யடுகளத்துத் - தோள்பெயராக்

காய்ந்தடு துப்பிற் கழன்மறவ ராடினார்

வேந்தொடு வெள்வாள் விதிர்த்து.

காலில் வீரக்கழலை அணிந்த தும்பை மறவர் போர்க்களத்தில் மிகுந்த சினத்துடன் போர் செய்தனர், அப்போர்க்களத்தில் வலிமை வாய்ந்த பகையரசன் போர்க்களத்தில் இறந்து பட்டதைக் கண்டு அவனைச் சுற்றி வீரர்கள் வாளேந்தி ஆடினர்.

.

## கூறு: 8 வாகைப்படலம்

### நோக்கம்: வாகைத்திணையின் இலக்கணம், அவற்றின் பிரிவுகள் போன்றவற்றை மாணவர்களுக்குக் கற்பித்தல்

### 8.வாகைப் படலம்:

போர்க்களத்தில் தம் வலிமை பொருட்டாகப் பொருதும் இருபெரும் வேந்தர்களுள் ஒருவர் வெற்றி பெற்று உயர்ந்து நிற்பது வாகைத்திணை எனப்படும்.வாகைத்திணை மறவர்கள் வாகைப்பூவினைச் சூடி போருக்குச் செல்வர் என்றமையால் இது வாகைத்திணை எனப் பெயர் பெறலாயிற்று.இத்திணையில் வெற்றி பெற்றவனின் சிறப்புகள் விரித்துரைக்கப்படும்.வெட்சி, கரந்தை என்பன போன்ற பிற புறத்திணைகளைப்போல் இத்திணை போர்க்கள வெற்றியை மட்டும் குறித்து நிற்பதன்று.ஒருவர் தான் தோன்றும் ஒவ்வொரு துறையிலும் பெறும் வெற்றியும் வாகைத்திணையின்பாற்படும் என்பதாகக் கொள்ளப்பெறும்.

### 8.1 வாகைத்திணையின் துறைகள்:

சீர்சால் வாகை அரவம்

அரச வாகை முரச வாகை

மறக்கள வழியொடு களவேள் வியயே

முன்தேர்க் குரவை பின்தேர்க் குரவை

பார்ப்பன வாகை வாணிக வாகை
வேளாண் வாகை பொருந வாகை
அறிவன் வாகை தாபத வாகை
கூதிர்ப் பாசறை வாடைப் பாசறை
அரச முல்லை பார்ப்பன முல்லை
அவைய முல்லை கணிவன் முல்லை
மூதின் முல்லை ஏறாண் முல்லை
வல்லாண் முல்லை காவன் முல்லை
பேராண் முல்லை மறமுல் லையே
குடைமுல் லையொடு கண்படை நிலையே
அவிப்பலி என்றா சால்பு முல்லை
கிணைநிலை ஏனைப் பொருளொடு புகறல்
அருளொடு நீங்கல் உளப்படத் தொகைஇ
மூன்று தலையிட்ட மூஈர் ஐந்தும்
வான்தோய் வாகைத் திணையது வகையே.

என்பன வாகைத்திணையின் துறைகள் ஆகும்.

வாகைத்திணை, வாகையரவம், அரசவாகை, முரசவாகை, மறக்களவழி, களவேள்வி, முன்றேர்க்குரவை, பின்றேர்க்குரவை, பார்ப்பனவாகை, வாணிக வாகை, வேளாண்வாகை, பொருநவாகை அறிவன்வாகை, தாபதவாகை, கூதிர்ப்பாசறை, வாடைப்பாசறை, அரசமுல்லை, பார்ப்பனமுல்லை, அவையமுல்லை, கணிவன்முல்லை, மூதின்முல்லை, ஏறாண்முல்லை, வல்லாண்முல்லை, காவன்முல்லை, பேராண்முல்லை, மறமுல்லை, கடைமுல்லை, கண்படைநிலை, அவிப்பலி, சால்புமுல்லை, கிணைநிலை, பொருளொடு புகறல், அருளொடு நீங்கல் என்று சொல்லப்பட்ட முப்பத்துமூன்று துறைகளை உடையதாகும்.

## 8.1.1 வாகை:

இலைபுனை வாகை சூடி இகல்மலைந்து
அலைகடல் தானை அரசுஅட்டு ஆர்த்தன்று.

கடல்போன்ற சேனையினையுடைய பகைவேந்தைக் கொன்ற வாகை அரசன் பச்சிலை விரவித் தொடுத்த வாகைப்பூவைப் புனைந்து ஆரவாரித்தது இத்துறையாகும்.

சூடினான் வாகைச் சுடர்த்தெரியல் சூடுதலும்
பாடினார் வெல்புகழைப் பல்புலவர் - கூடார்
உடல்வே லழுவத் தொளிதிகழும் பைம்பூண்

சுடல்வே லழுவத் தொளிதிகளும் பைம்பூண்
உடல்வேந்த னட்டார்த் தரடு.

ஒளிநிறைந்த பொன்னால் ஆகிய அணிகலன்களை அணிந்த வாகை அரசன் போர்க்களத்தில் எதிரிகளோடு மாறுபாடு கொண்டு போர் செய்தான்.பகைவரின் வேற்படையால் ஆகிய அரணினைக் கடந்தும் பகையரசரைக் கொன்றான்.பின் வாகை மாலையினை அணிந்து ஆராவரித்தான்.

### 8.1.2 வாகை அரவம்:

வெண்கண்ணியும் கருங்கழலும்
செங்கச்சும் தகைபுனைந்தன்று.

போர் மறவர்கள் வெள்ளைமாலையினையும் வலிய வீரக்கழலினையும் சிவந்த கச்சினையும் அணிந்து ஆராவரிப்பது இத்துறையாகும்.

அனைய வமரு ளயில்போழ் விழுப்புண்
இனைய வினிக்கவலை யில்லை - புனைக
அழலோ டிமைக்கு மணங்குடைவாண் மைந்தர்
கழலோடு பூங்கண்ணி கச்சு.

போர்க்களத்தில் பகைவரின் வாளினால் பட்ட இவ் விழுப்புண்கள் இத்தன்மையுடையவாயின.இனிமேல் எக்கவலையும் இல்லை.பகைவருக்கு வருத்தம் செய்யும் வாளினை ஏந்திய மறவர்கள் வெள்ளைமாலையினையும் வலிய வீரக்கழலினையும் சிவந்த கச்சினையும் அணிந்து ஆராவரித்தனர்.

### 8.1.3 அரச வாகை:

பகல்அன்ன வாய்மொழி
இகல்வேந்தன் இயல்புரைத்தன்று.

நுகத்தடியின் பகலாணிபோன்ற நடுநிலைச் சொல்லினையுடைய மாறுபாட்டாற் சிறந்த மன்னனது மேன்மையைச் சொல்லியது.

காவ லமைந்தான் கடலுலகங் காவலால்
ஓவ லறியா துயர்க்குவகை - மேவருஞ்சீர்
ஐந்தொழி னான்மறை மூத்தீ யிருபிறப்பு
வெந்திறற் றண்ணளியெம் வேந்து.

நன்மையினையுடைய ஐந்து தொழிலினையும் நான்கு வேதத்தினையும் மூன்று தீயினையும் பூணூலிடுவதற்கு முன்னும் பின்னுமாகிய இருபிறப்பினையும் பகையிடத்து வெவ்விய வினையினையும் குளிர்ந்த

அருளினையு முடைய எம்முடைய வேந்தன் காவல் தொழிலில் சிறந்தவன்.



## 8.1.4 முரச வாகை:

ஒலிகழலான் அகல்நகருள்

பலிபெறுமுரசின் பண்புஉரைத்தன்று.

வீரக்கழலினை அணிந்த வாகை அரசனின் மாளிகையில் உள்ள பலியைப்பெறும் முரசினையுடைய தன்மையைப் புகழ்ந்து சொல்லியது.

மதியோர் நெடுங்குடை மன்னர் பணிந்து
புதிய புகழ்மாலை வேய - நிதியம்
வழங்குந் தடக்கையான் வான்றோய் நகருள்
முழங்கு மதிரு முரசு.

பலருக்கும் பொருளைக் கொடுக்கும் கொடைத்தன்மை கொண்டவன் வாகை அரசன். அவனுடைய அரண்மனை விண்ணைத் தொடும் அளவிற்கு உயர்ந்தது. அதில் பகைவரைப் பலி கொள்ளும் முரசு இருக்கிறது, அதனை மன்னர் பலரும் பணிந்து வணங்கினர்.மாலையைச் சூட்டினர். ஆம்முரசு இப்பொழுது உயர்ந்த முழக்கத்தினை எழுப்பியது.

## 8.1.5 மறக்களவழி:

முழவுறழ் திணிதோளானை

உழவனாக உரைமலிந்தன்று.

முழவுபோலும் திரண்ட தோள்களை உடைய மன்னனை உழும் வேளாளனாக மிகுத்துச் சொல்லியது.

அஞ்சுவரு தானை யமரென்னு நீள்வயலுள்
வெஞ்சினம் வித்திப் புகழ்விளைக்கும் - செஞ்சுடர்வேற்
பைங்கட் பணைத்தாட் பகட்டுழவ னல்கலான்
எங்கட் கடையா விடர்.

கண்டாருக்கு அச்சத்தைத் தருவது படை. அதனை வரப்பாகக் கொண்டது போர் செய்வதற்குரிய களமென்னும் நீண்ட வயல். கோபமே வித்தாகும். புகழைத்தரும் விளைக்கும் சிவந்த ஒளிவேலே கோலாகும். பெருத்த கால்களை உடைய யானையே எருதாகும்.புகழே விளை பயனாகும். இவ்வாறு மன்னனே உழவனாய் நின்று உழவினைச் செய்கிறான்.அவ்வாறு மன்னன் காத்தல் தொழிலைச் செய்வதால் எம் போன்றோருக்கு வறுமைத் துன்பம் இல்லை.

குறிப்பு

### 8.1.6 களவேள்வி:

அடுதிறல் அணங்கார
விடுதிறலான் களம்வேட்டன்று.

கொல்லும் வலிமையினை உடைய பேய் வயிறார உண்ணப் சிறந்த வலியினையுடைய வாகை மன்னன் களவேள்வி செய்தது இத்துறையாகும்.

பிடித்தாடி யன்ன பிறழ்பற்பே யாரக்
கொடித்தானை மன்னன் கொடுத்தான்-1முடித்தலைத்
தோளொடு வீழ்ந்த தொடிக்கை துடுப்பாக
மூளையஞ் சோற்றை முகந்து.

வாகை வேந்தன் போர்க்களத்தில் பகை வேந்தரை வெட்டி வீழ்த்தினான். அவர்களின் தலையினையே மிடாசாகச் செய்தான்.கையினை அகப்பையாக்கினான்.பகைவர்களின் மூளையாகிய சோற்றினை முகந்து பேய்களுக்கக் கொடுத்தான்.பலகறை என்னும் விளையாட்டுப் பொருளினைப் போன்ற பிறழ்ந்த பற்களை உடைய பேய்கள் அவற்றை விரும்பி உண்டு மகிழ்ந்தன.

### 8.1.7 முன்தேர்க் குரவை:

வேன்றுஏந்திய விறல்படையோன்
முன்தேர்க்குஅணங்கு ஆடின்று.

புகைவரை வென்று வெற்றி பெற்ற வாகை மன்னனின் தேரின் முன் பேய்கள் ஆடியது முன்தேர்க்குரவை ஆகும்.

உலவா வளஞ்செய்தா னூழிவாழ் கென்று
புலவாய புன்றலைப்பே யாடும்-கலவா
அரசதிர நூறி யடுகளம் வேட்டான்
முரசதிர வென்றதேர் முன்.

வாகை அரசன் தன்னோடு போரிட்ட பகையரசரின் தலையினை வெட்டி வீழ்த்தினான்.அதனால் வெற்றி முரசம் முழங்கத் தேரின் மேல் வந்தான்.அத்தேரின் முன்னர் புலால் நாறும் வாயினையும் தலையினையும் உடைய பேய்கள் நின்று ஆடின.

### 8.1.8 பின்தேர்க் குரவை:

பொய்கழலான் தேரின்பின்

மொய்வளை விறலியர் வயவரொடுஆடின்று

வீரமுடைய வாகையரசனின் தேரின் பின்னர் விறலியரும் மறவரும் கூத்தாடுவது பின்தேர்க்குரவை எனப்படும்.

வஞ்சமில் கோலானை வாழ்த்தி வயவரும்
அஞ்சொல் விறலியரு மாடுபவே-வெஞ்சமரில்
குன்றேர் மழகளிறுங் கூந்தற் பிடியும்போற்
பின்றேர்க் குரவை பிணைந்து.

பொய்மையில்லாத செங்கோலினையுடைய அரசனை வணங்கி வெற்றியினையுடைய வீரரும் அழகிய மொழியினையுடைய விறலியரும் கூத்தாடி நின்றனர். போர்க்களத்தின்கண் தறுகாண்மை உடையது இளைய ஆண்யானை. அதனோடு சேர்ந்து பெண்யானை நின்றது. அத்தகைய காட்சியானது போர்மறவரும் விறலியரும் நின்றிருந்த காட்சியை ஒத்துக் காணப்பட்டது,

## 8.1.9 பார்ப்பனவாகை:

கேள்வியான் சிறப்புஎய்தியானை
வேள்வியான் விறன்மிகுத்தன்று.

உயர்வினை உடைய வேதத்தினைக் கேட்டு நின்ற பார்ப்பனருள் மேம்பட்டு நின்றான் ஒருவன். அத்தகைய சிறப்புடையவனைப் புகழ்ந்து நிற்பது பார்ப்பனவாகை எனப்படும்.

ஓதங் கரைதவழ்நீர் வேலி யுலகினுள்
வேதங் கரைகண்டான் வீற்றிருக்கும்-ஏதம்
சுடுசுடர் தானாகிச் சொல்லவே வீழ்ந்த
விடுசுடர் வேள்வி யகத்து.

அலைகள் சூழ்ந்த கடலினை எல்லையாகக் கொண்டது இவ் உலகம். அக்களத்துள் வானோராலும் விரும்பப்படும் வேள்விக்களம் ஒன்று உண்டு.அத்தகைய வேள்விக்களத்துள் நான்கு வேதங்களையும் உடையவனாய் மேம்பட்டு நின்றான் ஒருவன்.இவனே குற்றமாகிய காட்டினை சுட்டெரிக்கின்ற நெருப்பினைப் போன்றவன் என்று எல்லோராலும் புகழப்படுகிறான். அதனால் இவ் வேள்விக்களத்தில் மேம்பட்டு நின்றான்.

## 8.1.10 வாணிக வாகை:

செறுதொழிலில் சேண்நீங்கியான்
அறுதொழிலும் எடுத்துரைத்தன்று.

பொல்லாத வினைகளில் இருந்து விலகி நீண்ட தொலைவு சென்றவர் வணிகர். அறுவகைத்தொழிலைச் செய்யும் வணிகரின் சிறப்பினை மேம்படுத்திச் சொல்வது இத்துறையாகும்.



உழுது பயன்கொண் டொலிநிரை யோம்பிப்
பழுதிலாப் பண்டம் பகர்ந்து-முழுதுணர
ஓதி யழல்வழிபட் டோம்பாத வீகையான்
ஆதி வணிகர்க் கரசு.

**குறிப்பு**

நிலத்தை உழுது அதன் பயனாகிய விளைபொருளைக் கைக்கொள்ளுதல், ஆநிரைகளைப் பாதுகாத்தல், குற்றமற்ற பொருள்களை விற்றல், கற்பதற்கு உரியனவற்றைக் கற்றல்,முத்தீயைப் போற்றுதல்,தம் பொருளைச் சீர்த்தூக்கிப் பிறருக்கு வழங்குதல் என்பன போன்றன அறுவகைத் தொழில்கள் ஆகும்.

## 8.1.11 வேளாண் வாகை:

மேன்மூவரும் மனம்புகல
வாய்மையான் வழிஒழுகின்று.

வேளாண் மக்களைப் புகழ்ந்து சிறப்பித்து உரைப்பது வேளாண்வாகை எனப்படும்.

மூவரு நெஞ்சமர முற்றி யவரவர்
ஏவ லெதிர்கொண்டு மீண்டுரையான்-ஏவல்
வழுவான் வழிநின்று வண்டார் வயலுள்
உழுவா னுலகுக் குயிர்.

வண்டுகள் நிறைந்து ஆராவாரம் செய்யும் சிறப்பினையுடைய வேளாண்நிலத்தில் வேளாண்மை செய்பவர் வேளாளன் ஆவர். அத்தகையவர் தனக்கு மேம்பட்ட வருணத்தாராய் விளங்கும் அரசர்,அந்தணர், வணிகர் போன்றோரால் விரும்பப்படுபவராய் இருத்தல் வேண்டும்.அவர்களால் சொல்லப்படும் வேலைகளை விரும்பிச் செய்பவராய் இருத்தல் வேண்டும்.தனக்கென நீதிநூல் வகுத்த விதிகளை விரும்பிச் செய்பவராய் இருத்தல் வேண்டும்.

## 8.1.12 பொருந வாகை:

புகழொடு பெருமை நோக்கி யாரையும்
இகழ்தல் ஓம்புஎன எடுத்துரைத் தன்று.

உலகில் ஒருவருக்குப் புகழ் உண்டாகும்.அதனைப் பிறரோடு ஒப்புமைப்படுத்தி உரைப்பர், அதனால் பிறர் தமக்கு ஒப்பில்லை என்று எண்ணி நகையாடுவர். அவ்வாறு பிறரை இகழ்தலைத் தவிர்த்தல்

வேண்டும் எனச் சான்றோர் அறிவுரை வழங்கல் பொருநவாகை என்னும் துறையாகும்.



வெள்ளம்போற் றானை வியந்து விரவாரை

எள்ளி யுணர்த லியல்பன்று-தெள்ளியார்

ஆறுமே லாறியபி னன்றித்தங் கைக்கொள்ளார்

நீறுமேற் பூத்த நெருப்பு.

காட்டாற்று வெள்ளத்தினைப் போல் பெரும்படையினை உடையோம் என்று தம்மைத்தாமே வியந்து மகிழ்வர்,அதனால் தன் மாற்றரரை குறைத்து மதிப்பிடுவர், அவ்வாறு எடைபோடல் சிறந்த மன்னரின் இயல்பன்று. நல்ல அறிவுடைய மாந்தர் மூடிய நெருப்பை முற்றும் ஆற்றிய பின்னன்றி தமது கையில் ஏந்தமாட்டார்கள்.

## 8.1.13 அறிவன் வாகை:

புகழ்நுவல முக்காலமும்

நிகழ்புஅறிபவன் இயல்புஉரைத்தன்று.

மூன்று காலத்தினையும் உணரும் ஆற்றல் உடையவர் அறிவர். அவர்களின் இயல்பினை எடுத்துரைத்து சிறப்பித்தல் அறிவன் வாகை எனப்படும்.

இம்மூ வுலகி னிருள்கடியு மாய்கதிர்போல்

அம்மூன்று முற்ற வறிதலாற்-றம்மின்

உறழா மயங்கி யுறழினு மென்றும்

பிறழா பெரியோர்வாய்ச் சொல்.

கீழ்உலகம், நடு உலகம், மேல் உலகம் எனப்பெறும் மூன்று உலகங்களின் இருளையும் போக்கும் ஆற்றல் உடையது ஞாயிறு.அது போல இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் முக்காலத்திலும் நிகழும் நிகழ்வினை அறிந்து உணர்த்தும் ஆற்றல்பெற்றவர்கள் அறிவர் எனப்பட்டனர்.இனிக்கும் பால் புளித்தல், பகல் இருளாதல் போன்று மாறாதன கூட மாறும். ஆயினும் சான்றோராகிய பெரியோரின் வாய்மை மாறாது எனக் குறித்தல் அறிவன்வாகை எனப்படும்.

## 8.1.14 தாபத வாகை:

தாபத முனிவர் தவத்தொடு முயங்கி

ஓவுதல் அறியா ஒழுக்குஉரைத் தன்று.

தவத்தினை மேற்கொண்டு வாழும் முனிவர்கள் தம்ஒழுக்கத்தின்று பிறழாது வாழ்வர் என்று உணர்த்துவது தாபத வாகை எனப்படும்.

நீர்பலகான் மூழ்கி நிலத்தசைஇத் தோலுடீஇச்
சோர்சடை தாழச் சுடரோம்பி-ஊரடையார்
கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல்
வானகத் துய்க்கும் வழி.

குறிப்பு

நீரினுள் பலகாலும்மூழ்கி இருத்தல், நிலத்திடை கிடத்தல், சடை புனைதல், வேள்வித் தீயினைப் பாதுகாத்தல்,ஊருக்கள் வருகை புரியாமை, கிழங்கு, காய் போன்றவற்றை உண்ணல், காட்டில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு இறைவனையும் துறவியரையும் போற்றல் என்பன தாபதற்கு உரிய ஒழுக்கங்கள் ஆகும் எனச் சிறப்பித்தல் தாபத வாகை எனப்படும்.

## 8.1.15 கூதிர்ப் பாசறை:

கூற்றுஅனையான் வியன்கட்டூர்க் கூதிர்வான் துளிவழங்க
ஆற்றாமை நனிபெருகவும் அயில்வேலான் அளிதுறந்தன்று.

பகைவர்க்குக் கூற்றுவனை ஒத்த அரசன் பாசறையிடத்துக் கூதிர்காலத்துத்தங்கியிருந்தான் எனக் குறிப்பது கூதிர்ப்பாசறை எனப்படும்.

கவலை மறுகிற் கடுங்கண் மறவர்
உவலைசெய் கூரை யொடுங்கத் - துவலைசெய்
கூதிர் நலியவு முள்ளான் கொடித்தேரான்
மூதின் மடவாண் முயக்கு.

மேகங்கள் மழைத்துளிகளைத் சிதறும் கூதிர்காலம் என்பது அரசனின் தனிமைத்துயரை மிகுவிக்கும் காலம் ஆகும். அத்தகைய காலத்தும் அரசன் தன் தனிமைத்துயரைப் பெரிதெனக் கருதாமல் போர் நோக்கம் உடையவனாய் பாசறைக்கண் இருந்தான் என்று உரைப்பது கூதிர்ப்பாசறை எனப்படும்.

## 8.1.16 வாடைப் பாசறை:

வெந்திறலான் வியன்பாசறை வேல்வயவர் விதிர்பெய்த
வந்துலாய்த் துயர்செய்யும் வாடையது மலிபுரைத்தன்று.

வெற்றியை உடைய வாகை அரசனையும் மறவர்களையும் வருத்தும் வாடைக்காற்றின் தன்மையைச் சொல்லுவது வாடைப்பாசறை எனப்படும்.

வாடை நலிய வடிக்கண்ணா டோணசை
ஓடை மழகளிற்றா னுள்ளான்கொல் - கோடல்

முகையோ டலம்வர முற்றெரிபோற் பொங்கிப்
பகையோடு பாசறையு ளான்

வெற்றியை உடைய அரசனும் அவனுடைய படை வீரர்களும் பாசறைக்கண் தங்கியிருந்தனர்.அவர்களை வாடைக் காற்றானது வருத்தியது. அதனைக் கண்ட மன்னன் மாவடு போலும் கண்ணினைக் கொண்ட தன் மனைவியின் தோள் சேர விரும்பதவனாய் பகைவர் மேல் சினம் கொண்டு பாசறைக்கண் தங்கி இருந்தான்.



குறிப்பு

### 8.1.17 அரச முல்லை:

செருமுனை உடற்றும் செஞ்சுடர் நெடுவேல்
இருநிலம் காவலன் இயல்புஉரைத் தன்று.

பெரும் பகையை வருத்தும் சிவந்த சோதியாற் பொலிந்த நெடிய வேலினையுடைய பெரிய புவியைக்காக்கும் அரசன் தன்மையைச் சொல்லியது.

செயிர்க்க ணிகழாது செங்கோ லுயரி
மயிர்க்கண் முரச முழங்க - உயிர்க்கெல்லாம்
நாவ லகலிடத்து ஞாயி றனையனாய்க்
காவலன் சேறல் கடன் .

மயிரால் மிக்க கண்ணினையுடைய வீரமுரசு ஒலிப்பகுற்றத்தின் பாதையில் செல்லாது மனுநீதியை உயர்த்தி எல்லாவுயிர்க்கும் நாவலந்தீவின்கண் கதிரவனை ஒத்து நடத்தல் வேந்தன் முறைமை ஆகும் எனச் சொல்வது இத்துறையாகும்.

### 8.1.18 பார்ப்பன முல்லை:

கான்மலியும் நறுந்தெரியல் கழல்வேந்தர் இகல்அவிக்கும்
நான்மறையோன் அலம்பெருகும் நடுவுநிலை உரைத்தன்று.

அரசர்களிடத்து உள்ள மாறுபாட்டினை நீக்கி சந்து செய்விக்கும் பார்ப்பனர்களின் சிறப்பினைச் சொல்வது இத்துறையாகும்.

ஒல்லெனீர் ஞாலத் துணர்வோ விழுமிதே
நல்லிசை முச்செந்தீ நான்மறையோன் -செல்லலும்
வென்றன்றி மீளா விறல்வேந்தர் வெம்பகை

பகைவர் மேல் படையெடுத்துச் செல்லும் அரசர் அப்பகைவரை வெல்லாது மீண்டு வருவார் இல்லை அத்தகைய அரசர்களிடத்துச் சந்து செய்விக்க ஒருவன் சென்றான். அவன் சிறந்த புகழினை உடையவன்.

முத்தீ வளர்ப்பவன்.நான்கு வேதங்களையும் முழுமையும் கற்றவன். அத்தகையவன் தூதாகச் சென்றமையால் அவ்வரசர்கள் வெம் பகையினின்று மீண்டனர். அதனை விடுத்து ஒருவரை ஒருவர் தோல்வி அடையச் செய்து மீண்டிலர், அதுவே கடலால் சூழப்பெற்ற அந் நில உலகில் அறிவின் சிறப்புடைமை ஆகும்.

## 8.1.19 அவைய முல்லை:

குறிப்பு

நவைநீங்க நடுவுகூறும்

அவைமாந்தர் இயல்புஉரைத்தன்று.

குற்றம் கெட நடுவு நிலைமையில் நின்று சொல்லும் அவைக்களத்துச் சான்றோர் தன்மையைச் சொல்லியது.

தொடைவிடை யூழாத் தொடைவிடை துன்னித்

தொடைவிடை யூழிவை தோலாத் - தொடைவேட்

டழிபட லாற்ற லறிமுறையேன் 3றெட்டின்

வழிபடர்தல் வல்ல தவை .

வழக்கு என வந்துரைப்போரிடத்துக் கேள்விகளை எழுப்பி அதற்கான விடையினைப் பெறுதல் வேண்டு:ம்.பின்னர் அவற்றைத் தன் அறிவின் துணைகொண்டு ஆராய்ந்து அறிதல் வேண்டும்.பின் வினா, விடை. பொருத்தமுற அமைந்த முறை போன்றவற்றை ஆராய்ந்து முடிவினைக் கூறல் வேண்டும்.தோல்வியையும் வெற்றியையும் அவற்றிற்கு உரிய முறையில் வெளிப்படுத்தல் வேண்டும்.அத்தகைய தன்மையில் அமைந்து எண்வகைப் பண்புகளுக்கு ஏற்பச் சொல்வது எதுவோ அதுவே சான்றோரின் அவைக்களச் சிறப்பாகும்.

## 8.1.20 கணிவன் முல்லை:

துணிபுஉணரும் தொல்கேள்விக்

கணிவனது புகழ்கிளந்தன்று.

காலத்தினைக் கணக்கிட்டு ஆராய்ந்து கூறும் கணிவனின் பெருமையினைச் சொல்வது இத்துறையாகும்.

புரிவின்றி யாக்கைபோற் போற்றுவ போற்றிப்

பரிவின்றிப் பட்டாங் கறியத் - திரிவின்றி

விண்ணிவ் வுலகம் விளைக்கும் விளைவெல்லாம்

கண்ணி யுரைப்பான் கணி .

மனிதர் ஒவ்வொருவரும் தன் உடம்பினைப் பேணிக் காத்துப் பேணுவர். அதனைப் போன்று கற்க வேண்டிய நூல்களைக் கற்றுப் போற்றுதல் என்பது அறிவனின் கடமை ஆகும்.அவன் இவ்வுலகின்கண் வாழும் மக்கள் உண்மையை உணர்ந்து கொள்ளும் படி கணித்துக் கூறுபவன் ஆவான்.அதன்படி விண்ணிலும் மண்ணிலும் நடப்பவற்றை தவறுதல் இன்றி கணக்கிட்டு ஆராய்ந்த உரைக்கும் தன்மை உடையவனே கணியன் ஆவான்.



குறிப்பு

## 8.1.21 மூதின் முல்லை:

அடல்வேல் ஆடவர்க்கு அன்றியும் அவ்இல்

மடவரன் மகளிர்க்கும் மறம்மிகுத் தன்று.

பகைவரைக் கொல்லும் வேலினையுடைய வீரர்க்கு மட்டுமன்றி அந்த மறக்குடியில் மடப்பத்தினையுடைய பெண்களுக்கும் சினத்தைச் சிறப்பித்தது.

வந்த படைநோனாள் வாயின் முலைபறித்து

வெந்திற லெ.·.கமிறைக்கொளீஇ - முந்தை

முதல்வர்கற் றான்காட்டி மூதின் மடவாள்

புதல்வனைச் செல்கென்றாள் போர்க்கு .

மறக்குடியில் பிறந்த பெண் ஒருத்தி தன் அரசனோடு மாறுபட்டு வந்த பகைப்படையினைக் கண்டு பொறுக்காமல் சினம் கொண்டாள். உடன்தன் தன் பிள்ளை பாலுண்ணும் தன் மார்பினை அவன் வாயிலிருந்து எடுத்து அவன் கையில் வேல் கொடுத்துப் போரில் சென்று இறந்து போன தன் முன்னோரின் நடுகற்களைக் காட்டி நீயும் பகைவரை அழிக்கச் செல்லும் அம் மறவர்களோடு போருக்குச் செல்வாயாக என அனுப்பி வைத்தாள்.

## 8.1.22 ஏறாண் முல்லை:

மறக்குடியின் உயர்வு மிக்க சிறப்பினை உயர்த்திச் சொல்வது ஏறாண்முல்லை எனப்படும்.

மாறுஇன்றி மறம்கனலும்

ஏறாண்குடி எடுத்துஉரைத்தன்று.

மறக்குடியின் உயர்வு மிக்க சிறப்பினை உயர்த்திச் சொல்வது ஏறாண்முல்லை எனப்படும்.

கன்னின்றா னெந்தை கணவன் களப்பட்டான்

முன்னின்று மொய்யவிந்தா ரென்னையர் - பின்னின்று

கைபோய்க் கணையுதைப்பக் காவலன் மேலோடி

எய்போற் கிடந்தானென் னேறு.



**குறிப்பு**

கல்லிலே பொருந்திநின்றான் என் தகப்பன்; என் கணவன் போர்க்களத்தில் இறந்தான்.பகைவர் முன்னேநின்று எதிர்த்துப் பூசலிலே விழுந்தார் என் உடன்பிறந்தோர்.என் மகனோ தன் சேனை கெடவும் கெடாதே பின் நின்று தன் அம்பைச் செலுத்திப் பகையரசன் மேலே போருக்குச் சென்றான். பகைவரின் அம்புகள் அவன்மேல் பாய்ந்தமையால் முள்ளம்பன்றி போல் போர்க்களத்தில் வீழ்ந்து கிடந்தான்.

## 8.1.23 வல்லாண் முல்லை:

இல்லும் பதியும் இயல்பும் கூறி

நல்லாண் மையை நலமிகுத் தன்று.

மறவனின் இல்லையும் ஊரையும் இயல்பினையும் எடுத்துச் சொல்லி அழகிய ஆண்மைத் தன்மையை நன்மைபெருகச் சொல்லியது இத்துறையாகும்.

வின்முன் கணைதெரியும் வேட்டைச் சிறுசிறார்

முன்முன் முயலுகளு முன்றிற்றே - மன்முன்

வரைமார்பின் வேன்மூழ்க வாளமுவந் தாங்கி

உரைமாலை சூடினா னூர் .

வேந்தன் முன்பாக நிற்கும் இம்மறவன் மலைபோலும் மார்பினை உடையவன். பகைவர்களின் வாட்போரினைத் தடுத்து நிறுத்திய பெருமையை உடையவன்.அதனால் பகைவரால் எறியப்பெற்ற வாட்படையினைத் தன் மார்பில் பெற்ற புகழ் மாலையினைச் சூடியவன்.இவன் வாழும் ஊரில் உள்ள வேட்டுவச் சிறுவர்கள் வில்லினை எடுப்பதற்கு முன்பாக அம்பின் கூர்மையை ஆராய்வர். அவர்களுக்கு முன்பாக முயல்கள் பாய்தற்கு இடமாய முற்றங்கள் காணப்படும்.

## 8.1.24 காவன் முல்லை:

தவழ்திரை முழங்கும் தண்கடல் வேலிக்

கமழ்தார் மன்னவன் காவல்மிகுத் தன்று.

அலைகள் ஆரவாரிக்கும் கடலை எல்லையாக உடைய உலகத்தில் மணம் நிறைந்த மாலையினையுடைய அரசனின் பாதுகாத்தலைச் சிறப்பித்துக் கூறுவது இத்துறையாகும்.

பெரும்பூட் சிறுதகைப் பெய்ம்மலர்ப் பைந்தார்க்
கருங்கழல் வெண்குடையான் காவல் - விரும்பான்
ஒருநாண் மடியி னுலகின்மே னில்லா
திருநால் வகையா ரியல்பு .

பெரிய ஆபரணத்தினையும் நல்லோரிடத்துத் வணக்கத்தினையும் மலரிட்டுத் தொடுத்த மாலையினையும் வீரக்கழலினையும் உடையவன் அரசன்.அத்தகையவன் நாடு காத்தல் தொழிலைச் சிறப்புறச் செய்கிறான். நாடு காத்தல் தொழில் வேண்டானாகி ஒரு நாள் இருப்பினும் இவ் உலகில் வாழ்கின்ற எண்வகைத் தன்மைகளை உடைய சான்றோர்களின் தன்மையும் அவர்களை விட்டு நீங்கும் என்பதாம்.

## 8.1.25 இதுவுமது:

தக்காங்குப் பிறர்கூறினும்
அத்துறைக்கு உரித்தாகும் .

பொருந்தும் வகையான் பிறர் சொல்லினும் முன் கூறப்பட்ட துறைக்கு உரிமையுடைத்து ஆகும்.

ஊறின் றுவகையுள் வைக வுயிரோம்பி
ஆறிலொன் றானா தளித்துண்டு - மாறின்றி
வான்காவல் கொண்டான் வழிநின்று வைகலும்
தான்காவல் கொண்ட றகும் .

ஒரு நாட்டினை ஆளும் அரசன் குற்றமின்றி நாட்டினைக் காத்தல் வேண்டும். மேலும் விண்ணில் உள்ள தன் தந்தைவழியில் நாட்டினைக் காத்தல் வேண்டும். மேலும் ஆறில் ஒரு பங்கினை வரியாகக் கொள்ளல்வேண்டும். அப்பொருட்களைப் பிறர்க்கும் கொடுத்து தானும் நுகர்தல் வேண்டும். தனது காவலின் கீழ் உள்ள எல்லா உயிர்களும் மகிழ்ச்சியில் திளைக்கும்படி ஆட்சி புரிதல் வேண்டும்.

## 8.1.26 பேராண் முல்லை:

உளம்புகல மறவேந்தன்
களங்கொண்ட சிறப்புஉரைத்தன்று.

குறிப்பு

அரசன் ஒருவன் தன் மாற்றாரை வென்று போர்களத்தினைத் தனதாக்கிக் கொள்ளும் தன்மையைக் கூறுவது இத்துறையாகும்.

ஏந்துவட் டானை யிரிய வுறைகழித்துப்

போந்துவாண் மின்னும் பொருசமத்து - வேந்தர்

இருங்களி யானை யினமிரிந் தோடக்

கருங்கழலான் கொண்டான் களம் .

காலில் வீரக்கழலினை அணிந்த வாகை மன்னனை எதிர்த்து நின்ற மறவர்கள் ஒளிவீசும் வாளினை போர்க்களத்தில் ஏந்திப் போர் செய்தனர். அவ்வாறு போர் செய்த மன்னர்களை வாகை வேந்தன் புறமுதுகிட்டு ஓடுமாறு செய்து போர்க்களத்தினைத் தனதாக்கிக் கொண்டான். அவற்றுடன் பகைவரின் யானைக் கூட்டத்தினையும் அகற்றினான்.

## 8.1.27 மறமுல்லை:

வெள்வாள் வேந்தன் வேண்டியது ஈயவும்

கொள்ளா மறவன் கொதிப்புஉரைத் தன்று .

வெற்றி பொருந்திய வாளினையுடைய மன்னன் மறவர்க்குத் தான் விரும்பியதைக் கொடுக்க விரும்பினான். அதனை ஏற்றுக்கொள்ளாத வீரனது சினத்தினைக் கூறியது இத்துறையாகும்.

வின்னவி றோளானும் வேண்டிய கொள்கென்னும்

கன்னவி றிண்டோட் கழலானும் - மன்னன்முன்

ஒன்றா னழல்விழியா வொள்வாள் வலனேந்தி

நின்றா னெடிய மொழிந்து .

வில் ஏந்திய புயத்தினையுடைய அரசனும் மறவர்களிடம் நீங்கள் விரும்பினவற்றை நீ கொள்கவென்று கூறினான். அம்மறவர்களுள் பொருளினை விரும்பாது நின்ற ஒருவன் மலையினை ஒத்த திண்மையான தோளினை உடையவன்.வீரக்கழலினைக் காலில் அணிந்தவன்.அவன் தனது கரத்தில் வாளினை ஏந்திக் கொண்டு பகைவர்களை வெல்லவேண்டும் எனக் கூறிநின்றான்.

## 8.1.28 குடை முல்லை:

மொய்தாங்கிய முழவலித்தோள்

கொய்தாரான் குடைபுகழ்ந்தன்று.

போரினைத் தடுத்து நிறத்தும் ஆற்றல்கொண்ட வேந்தன் தன்மார்பில் அழகிய மாலையினை அணிந்தவன். அத்தகைய சிறப்பினை உடைய வேந்தனின் குடைச்சிறப்பினை வியந்து கூறுவது இத்துறையாகும்.



குறிப்பு

வேயுள் விசும்பு விளங்கு கதிர்வட்டம்

தாய புகழான் றனிக்குடைக்குத் - தோயம்

எதிர்வழங்கு கொண்மூ விடைபோழ்ந்த சுற்றுக்

கதிர்வழங்கு மாமலை காம்பு .

சிறந்த புகழினை உடைய வாகை வேந்தனின் குடையானது இணையற்ற சிறப்பினைத் தன்னகத்தே கொண்டமைந்ததாகும்.அதன் மேல் அமைந்த போர்வையானது வானம் ஆகும். ஒளிவீசுகின்ற ஞாயிறு ஒளி வட்டமாகும்.நிழலைப் பொழியும் மேகமானது இடையில் விடப்பட்ட நுசுற்றுத் தாமம் ஆகும்.திங்களும் ஞாயிறும் சுற்றி வருகின்ற மேருமலையே காம்பாகும்.

## 8.1.29 கண்படை நிலை:

மண்கொண்ட மறவேந்தன்

கண்படைநிலை மலிந்தன்று.

மாற்றாரின் நாட்டினை வென்று கைக்கொண்ட சினம் மிக்க மன்னன் உறக்கத்தை மிகுத்தது.

கொங்கலர்தார் மன்னருங் கூட்டளப்பக் கூற்றணங்கும்

வெங்கதிர்வேற் றண்டெரியல் வேந்தற்குப் - பொங்கும்

புனலாடை யாளும் புனைகுடைக்கீழ் வைகக்

கனலா துயிலேற்ற கண் .

திறைகொடாத வேந்தரும் திறைகொடுக்க, எமனை வருத்தும் ஒளிவேலினையும் குளிர்ந்த மாலையினையும் உடைய அரசனின் வெண்கொற்றக் குடைக்கீழ் கடலாகிய புடைவையையுடைய நிலமகளும் தங்குதலால் அவனின் கண்கள் சினத்தால் சிவத்தலை விடுத்து உறக்கத்தை மேற்கொண்டன.

## 8.1.30 அவிப்பலி:

வெள்வாள் அமருள் செஞ்சோறு அல்லது

உள்ளா மைந்தர் உயிர்ப்பலி கொடுத்தன்று.

தெளிந்த வாட்போரினை உடைய போர்க்களத்தின்கண் போர் செய்யும் மறவர்கள் பிறவற்றைப் பெரிதென எண்ணாது செஞ்சோற்றுக்கடனை நினைத்துக் கொண்டு போர் செய்து உயிரைப் பலியாகக் கொடுப்பர்.அந்நிலையே உயிர்ப்பலி எனப்படும்.

குறிப்பு

சிறந்த திதுவென்னச் செஞ்சோறு வாய்ப்ப

மறந்தரு வாளம ரென்னும் - பிறங்கழலுள்

ஆருயி ரென்னு மவிவேட்டா ராங்க.ஃ.தால்

வீரியரெய் தற்பால வீடு .

போர்க்களத்தின்கண் போர் செய்த வீர மறவர்கள் செஞ்சோற்றுக்கடனுக்காகப் போர் செய்தலை சிறந்த ஒழுக்கமாகப் போற்றினர், எனவே போர்க்களத்தினை நெருப்பாகக் கருதி அதனுள் தம் உயிரினை அவிப்பலியாகக் கொடுத்தனர்.அத்தகைய செயலானது அவர்கள் துறக்க உலகினை அடைய ஏதுவாயிற்று.

## 8.1.31 சால்பு முல்லை:

வான்தோயும் மலைஅன்ன

சான்றோர்தம் சால்புஉரைத்தன்று.

வானத்தை எட்டும் மலையினையொத்த சான்றோர்களின் சிறப்பியல்புகளை எடுத்துரைப்பது சால்பு முல்லை எனப்படும்.

உறையார் விசும்பி னுவாமதி போல

நிறையா நிலவுத லன்றிக் - குறையாத

வங்கம்போழ் முந்நீர் வளம்பெறினும் வேறாமோ

வெண் சங்கு போலும் தூய்மையினைப் பெற்ற சான்றோர்கள் வானில் விளங்கும் முழுமதி போலும் நிறைவுடனாய அமைதியைப் பெற்றவர்கள் ஆவர். அத்தகைய சிறப்புடையவர்கள் மரக்கலத்தினைப் பிளக்கின்ற கடல் போலும் செல்வம் பெறினும் தம் இயல்பில் இருந்து மாறமாட்டார்கள்.

## 8.1.32 கிணைநிலை:

தண்பணை வயல்உழவனைத்

தெண்கிணைவன் திருந்துபுகழ்கிளந்தன்று.

குளிர்ச்சி பொருந்திய நன்செய் நிலத்தில் உழுது விதைப்பவர்கள் வேளாளர்.அவர்கள் மேலான புகழினைப் பெற்றவர்கள் ஆவர். அவர்களின்

புகழினை கிணை கொட்டுபவன் எடுத்துரைப்பான். அதனைக் கூறுவது கிணைநிலை என்னும் துறையாகும்.



பகடுவாழ் கென்று பனிவயலு ளாமை
அகடுபோ லங்கட் டடாரித் - துகடுடைத்துக்
குன்றுபோற் போர்விற் குருசில் வளம்பாட
இன்றுபோ மெங்கட் கிடர் .

குளிர்ச்சி பெருந்திய நிலத்தின்கண் வாழ்வது ஆமை ஆகும். அதன் வயிற்றைப் போலும் கண்ணினை உடைய தடாரிப் பறையின் தூசினைத் துடைத்தான் கிணைவன். பின் ஏர் வாழ்க! எனப் பாடினான்.அதன் பின்னர் குன்றைப்போல் உயர்ந்து விளங்கும் வைக்கப்போரினை உடைய வேளாளர்களின் வளத்தினைப் பாடினான். அதனால் இன்றே எம் வறுமை எல்லாம் நீங்கிப் போகும் எனக் கூறினான்.

## 8.1.33 பொருளொடு புகறல்:

வையகத்து விழைவுஅறுத்து
மெய்யாய பொருள்நயந்தன்று.

வையகத்தில் உள்ள பொய்யாய பொருள்களின் மீதான பற்றினை விடுத்து மெய்யாய பொருள்களின் மேல் பற்றுக் கொள்ள வேண்டும் என்று எடுத்துரைப்பது பொருளோடு புகறல் எனப்படும்.

ஆமினி மூப்பு மகன்ற திளமையும்
தாமினி நோயுந் தலைவரும் - யாமினி
மெய்யைந்து மீதூர வைகாது மேல்வந்த
ஐயைந்து மாய்வ தறிவு .

வாழ்வில் இனிமையைத் தரும் இளமைப்பருவம் கழிந்தது. இனி மூப்பு வந்தமையும் நோயும் வந்தமையும். ஆதலால் இனி மெய் முதலாகிய ஐந்து பொறிகளின் வழிப்பட்டு நிற்றலை ஒழித்து மெய்ப்பொருளைப் பற்ற வேண்டும்

ஐயைந்தாவன :

மெய், வாய், கண், மூக்கு, செவி - ஞானேந்திரியங்கள் ஐந்து

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் - பூதங்கள் ஐந்து

ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை - தன்மாத்திரைகள் ஐந்து

வாய், கை, கால், எருவாய், கருவாய் - கன்மேந்திரியங்கள் ஐந்து

மனம், புத்தி, சித்தாம், அகங்காரம் - அந்தக்கரணம் நான்கு

உயிர் – ஒன்று

இறை – ஒன்று

குறிப்பு

## 8.1.34 அருளொடு நீங்கல்:

ஒலிகடல் வையகத்து

நலிவுகண்டு நயப்புஅவிந்தன்று.

கடலால் சூழப்பெற்ற இவ் உலகம் துன்பத்தினைத் தருவதாகும்.அத்துன்பத்தினை உணர்ந்து இவ் உலகின் மீது உள்ள ஆசையினை விடல் வேண்டும். இதுவே அருளோடு நீங்கல் எனப்படும்.

கயக்கிய நோயவாய்க் கையிகந்து நம்மை

இயக்கிய யாக்கை யிறாமுன்-மயக்கிய

பட்படா வைகும் பயன்ஞால நீள்வலை

உட்படாம் போத லுறும்.

உயிரைக் கலக்குகின்ற பல்வேறு நோய்களின் இருப்பிடமாகத் திகழ்வது இவ் உடல் ஆகும். அது உயிரின் வழிப்படாது பொறியின் வழிப்பாடும் தன்மை கொண்டது ஆகும். அதனால் விளையும் நல்வினை, தீவினை என்பன நம்மை அடுத்த பிறவியில் பிறவியாகிய வலையில் சிக்க வைக்கும்.எனவே இவ் உடல் அழியும் முன்னரே இவ் உயிருக்கு உறுதி சேர்க்கும் நல்லனவற்றைச் செய்தல் நன்னெறிக்கண் சேர்க்கும் வழியாகும் என்று உரைத்தல் அருளோடு அகறல் என்பதாகும்.

## பயிற்சி வினாக்கள்:

**1.பார்ப்பனவாகை – குறித்துரை**

கேள்வியான் சிறப்புஎய்தியானை

வேள்வியான் விறன்மிகுத்தன்று.

உயர்வினை உடைய வேதத்தினைக் கேட்டு நின்ற பார்ப்பனருள் மேம்பட்டு நின்றான் ஒருவன். அத்தகைய சிறப்புடையவனைப் புகழ்ந்து நிற்பது பார்ப்பனவாகை எனப்படும்.

ஓதங் கரைதவழ்நீர் வேலி யுலகினுள்

வேதங் கரைகண்டான் வீற்றிருக்கும்-ஏதம்

சுடுசுடர் தானாகிச் சொல்லவே வீழ்ந்த

விடுசுடர் வேள்வி யகத்து.

அலைகள் சூழ்ந்த கடலினை எல்லையாகக் கொண்டது இவ் உலகம். அக்களத்துள் வானோராலும் விரும்பப்படும் வேள்விக்களம் ஒன்று உண்டு.அத்தகைய வேள்விக்களத்துள் நான்கு வேதங்களையும் உடையவனாய் மேம்பட்டு நின்றான் ஒருவன்.இவனே குற்றமாகிய காட்டினை சுட்டெரிக்கின்ற நெருப்பினைப் போன்றவன் என்று

எல்லோராலும் புகழப்படுகிறான். அதனால் இவ் வேள்விக்களத்தில் மேம்பட்டு நின்றான்.



குறிப்பு

**2.கண்படை நிலை விளக்குக**

மண்கொண்ட மறவேந்தன்

கண்படைநிலை மலிந்தன்று.

மாற்றாரின் நாட்டினை வென்று கைக்கொண்ட சினம் மிக்க மன்னன் உறக்கத்தை மிகுத்தது.

கொங்கலர்தார் மன்னருங் கூட்டளப்பக் கூற்றணங்கும்
வெங்கதிர்வேற் றண்டெரியல் வேந்தற்குப் - பொங்கும்
புனலாடை யாளும் புனைகுடைக்கீழ் வைகக்
கனலா துயிலேற்ற கண் .

திறைகொடாத வேந்தரும் திறைகொடுக்க, எமனை வருத்தும் ஒளிவேலினையும் குளிர்ந்த மாலையினையும் உடைய அரசனின் வெண்கொற்றக் குடைக்கீழ் கடலாகிய புடைவையையுடைய நிலமகளும் தங்குதலால் அவனின் கண்கள் சினத்தால் சிவத்தலை விடுத்து உறக்கத்தை மேற்கொண்டன.

**3. பேராண் முல்லை குறித்துரைக்க**

உளம்புகல மறவேந்தன்

களங்கொண்ட சிறப்புஉரைத்தன்று.

அரசன் ஒருவன் தன் மாற்றாரை வென்று போர்களத்தினைத் தனதாக்கிக் கொள்ளும் தன்மையைக் கூறுவது இத்துறையாகும்.

ஏந்துவட் டானை யிரிய வுறைகழித்துப்

போந்துவாண் மின்னும் பொருசமத்து - வேந்தர்

இருங்களி யானை யினமிரிந் தோடக்

கருங்கழலான் கொண்டான் களம் .

காலில் வீரக்கழலினை அணிந்த வாகை மன்னனை எதிர்த்து நின்ற மறவர்கள் ஒளிவீசும் வாளினை போர்க்களத்தில் ஏந்திப் போர் செய்தனர். அவ்வாறு போர் செய்த மன்னர்களை வாகை வேந்தன் புறமுதுகிட்டு ஓடுமாறு செய்து போர்க்களத்தினைத் தனதாக்கிக் கொண்டான். அவற்றுடன் பகைவரின் யானைக் கூட்டத்தினையும் அகற்றினான்.

**4.வாகைத்திணையின் செய்திகளைத் தொகுத்துரைக்க.**

பாடப்பகுதியில் சுட்டப்பட்டுள்ள வாகைத்திணை குறித்த செய்திகளை எடுத்து எழுதுதல் வேண்டும்.

# பிரிவு - 3

## கூறு: 9 பாடாண்படலம்

### நோக்கம்: பாடாண்திணையின் இலக்கணம், அவற்றின் பிரிவுகள் போன்றவற்றை மாணவர்களுக்குக் கற்பித்தல்

குறிப்பு

### 9.பாடாண்படலம்:

ஆண்மகனின் உயர்ந்த ஒழுகலாறுகளைப் புகழ்ந்துரைப்பது பாடாண்திணை எனப்படும். இதனை பாடு + ஆண் + திணை = பாடாண்திணை எனக் குறிப்பர்.அந்நிலையில் ஒருவருடைய கொடைமை, ஆண்மை,ஆற்றல், வலிமை போன்ற இன்னபிற சிறந்த ஒழுகலாறுகள் இதனுள் புகழ்ந்துரைக்கப்படும் என்பது தெரியவரும். இத்திணைக்கென தனித்த பூ ஏதும் தொல்காப்பியரால் குறிக்கப்படவில்லை. இத்திணை கைக்கிளை என்னும் அகத்திணைக்குப் புறனாய திணையாகும்.

### 9.1 பாடாண்திணையின் துறைகள்:

பாடாண் பாட்டே வாயில் நிலையே
கடவுள் வாழ்த்தொடு பூவை நிலையே
பரிசில் துறையே இயன்மொழி வாழ்த்தே
கண்படை நிலையே துயிலெடை நிலையே
மங்கல நிலையொடு விளக்கு நிலையே
கபிலை கண்ணிய புண்ணிய நிலையே
வேள்வி நிலையொடு வெள்ளி நிலையே
நாடு வாழ்த்தொடு கிணையது நிலையே
களவழி வாழ்த்தே
வீற்றுஇனிது இருந்த பெருமங் கலமே
குடுமி களைந்த புகழ்சாற்று நிலையே
மணமங் கலமே பொலிவுமங் கலமே
நாண்மங் கலமே பரிசில் நிலையே
பரிசில் விடையே ஆள்வினை வேள்வி
பாணாற்றுப் படையே கூத்தராற்றுப் படையே
பொருநாற்றுப் படையொடு விறலியாற்றுப் படையே

வாயுறை வாழ்த்தே செவியறி வுறூஉக்
குடைமங் கலமொடு வாண்மங் கலமே
மண்ணுமங் கலமே ஓம்படை ஏனைப்
புறநிலை வாழ்த்தும் உளப்படத் தொகைஇ
அமரர்கண் முடியு அறுவகை யாகிய
கொடிநிலை கந்தழி வள்ளி குணஞ்சால்
புலவரை அவர்வயின் புகழ்ந்தாற்றுப் படுத்தல்
புகழ்ந்தனர் பரவல் பழிச்சினர்ப் பணிதல்
நிகழ்ந்த காமப் பகுதியுள் தோன்றிய
கைக்கிளை வகையும் பெருந்திணை வகையும்
நல்துனி நவின்ற பாடாண் பாட்டும்
கடவுள் பக்கத்து மேனோர் பக்கத்தும்
மடவரல் மகளிர் மகிழ்ந்த பக்கமும்
மாதர் மகிழ்ந்த குழவியும் ஊரின்
கண்ணே தோன்றிய காமப் பகுதியொடு
ஆங்க ஆறுஎண் பகுதிப் பொருளும்
பாங்குற உரைப்பது பாடாண் பாட்டே.

பாடாண் திணையானது வாயில்நிலை, கடவுள் வாழ்த்து, பூவை நிலை, பரிசில் துறை, இயன்மொழி வாழ்த்து, கண்படை நிலை, துயிலெடை நிலை, மங்கல நிலை, விளக்கு நிலை, கபிலை கண்ணிய புண்ணிய நிலை, வேள்வி நிலை, வெள்ளி நிலை,நாடு வாழ்த்து, கிணையது நிலை, களவழி வாழ்த்து,பெருமங்கலம்,குடுமி களைந்த புகழ்சாற்றுநிலை,மணமங்கலம், பொலிவுமங்கலம்,நாண்மங்கலம், பரிசினிலை, பரிசில்விடை, ஆள்வினை வேள்வி,பாணாற்றுப் படை, கூத்தராற்றுப்படை,பொருநாற்றுப் படை,விறலியாற்றுப் படை,வாயுறை வாழ்த்து, செவியறி வுறூஉ, குடைமங்கலம்,வாண்மங்கலம், மண்ணுமங்கலம், ஓம்படை,புறநிலை வாழ்த்து, அமரர்கண் முடியும் அறுவகையாகிய கொடிநிலை, கந்தழி, வள்ளி,புலவரை அவர்வயிற் புகழ்ந்தாற்றுப் படுத்தல்,புகழ்ந்தனர் பரவல், பழிச்சினர்ப்பணிதல், கைக்கிளை வகை, பெருந்திணை வகை, பாடாண் பாட்டு, கடவுட் பக்கத்து மேனோர் பக்கத்தும் மடவரன் மகளிர் மகிழ்ந்த பக்கமும் மாதர் மகிழ்ந்த குழவியும் ஊரின் கண்ணே தோன்றிய காமப் பகுதியொடு ஆங்க ஆறெண் பகுதிப் பொருளும் பாங்குற உரைப்பது பாடாண்பகுதியின் துறைகள் ஆகும்.இவ்வாறு பாடாண்பாட்டு முதலாகக்



குறிப்பு

காமப்பகுதி ஈறாகச் சொல்லப்பட்ட நாற்பத்தெட்டும் பாடாண்திணையும் துறைகளுமாகும்.



## 9.1.1 பாடாண் பாட்டு:

ஒளியும் ஆற்றலும் ஓம்பா ஈகையும்

அளியும் என்றிவை ஆய்ந்துரைத் தன்று.

**குறிப்பு**

புகழ், வலி, கொடை, கருணை ஆகியவற்றில் சிறந்து நிற்கும் ஒருவனின் தன்மைகளை ஆராய்ந்து அவற்றைப் புலவர் புகழ்ந்துரைப்பது பாடாண்பாட்டு எனப்படும்.

மன்னர் மடங்கன் மறையவர் சொன்மாலை

அன்ன நடையினார்க் காரமுதம்- துன்னும்

பரிசிலர்க்கு வானம் பனிமலர்ப் பைந்தார்

எரிசினவேற் றானையெங் கோ.

அரசர்பலர்க்கும் சிங்கம் போன்றவன், அந்தணர்க்குப் புகழ்மாலையானவன், அன்னம்போன்ற நடையினை உடைய மகளிர்க்கு நிறைந்த அமிழ்தம்போன்றவன் எனச் சிறப்பிக்கப்படும் அரசன் தன்னை நாடி வரும் பரிசிலர்க்கு இலலை என்று கூறாமல் மழைபோல் கொடுப்பவன் என்றமையால் இது பாடாண்பாட்டு ஆயிற்று.

## 9.1.2 வாயில் நிலை:

புரவலன் நெடுங்கடை குறுகிய என்னிலை

கரவின்று உரையெனக் காவலர்க்கு உரைத்தன்று.

அரசனுடைய நெடிய வாயிலைக் அடைந்த புலவன் தன் வரவினை மறைவின்றி அரசனுக்குச் சொல்லென வாயில்காவலனுக்குச் சொல்லியது இத்துறையாகும்.

நாட்டிய வாய்மொழி நாப்புலவர் நல்லிசை

ஈட்டிய சொல்லா னிவனென்று - காட்டிய

காயலோங் கெ.ஃ.கிமைக்குங் கண்ணார் கொடிமதில்

வாயிலோய் வாயி விசை.

அரண்மனை வாயிலினை போர்த்தொழிலில் சிறந்த போர்வீரர்கள் பலர் காவல் காத்தனர், அக்காவலர்களைக் கண்ட புலவன் ஒருவன் அவர்களைப் பார்த்து, உங்களுடைய அரசன் இவ் உலகில்

மெய்மையாகிய மொழிகளை உடைய அரசர்களால் பாராட்டப்பெற்றவன்.அத்தகைய சிறப்பினைப் பெற்ற உன்னைப் புகழ்ந்து பாடிய மொழிகளை உடைய புலவன் ஒருவன் உன் வாயிலிடத்தே நிற்கின்றான் என என் வரவினை மன்னனிடம் கூறுவாயாக! எனப் புலவன் உரைத்து நின்றான்.



## 9.1.3 கடவுள் வாழ்த்து:

காவல் கண்ணிய கழலோன் கைதொழும்

மூவரில் ஒருவனை எடுத்துரைத் தன்று.

பூமியைக்காத்தலாகிய தொழிலைச் செய்யும் அரசன் ஒருவனால் வணங்கப்படும் அரி, அயன், அரன் என்னும் மூவருள் ஒருவரை உயர்த்திச் சொல்லியது இத்துறையாகும்.

வைய மகளை யடிப்படுத்தாய் வையகத்தார்

உய்ய உருவம் வெளிப்படுத்தாய் - வெய்ய

அடுந்திற லாழி யரவணையா யென்றும்

நெடுந்தகை நின்னையே யாம்

ஒருவராலும் அளக்க இயலாத பெருமையினை உடையவன் திருமால். அத்தகைய திருமால் நிலமகளைத் தன் திருவடியில் அடக்கியவன்.உலகத்தார் உய்விதற்காகத் தன் உருவமாகிய திருமேனியைத் தோற்றுவித்து அருளினவன்.சக்கரப்படையினைக் கையில் ஏந்தியவன்.பாம்பணையின்மேல் பள்ளி கொண்டவன். இத்தகைய சிறப்புகளை உடைய திருமாலைப்போல் நீயும் உலகில் காத்தல் தொழிலைச் செய்கின்றாய்!நாங்கள் அத்திருமாலை வாழ்த்துவோம்.

## 9.1.4 பூவை நிலை:

கறவை காவலன் நிறனொடு பொரீஇப்

புறவுஅலர் பூவைப் பூப்புகழ்ந் தன்று.

ஆனிரையைக் காத்த மாயவன் திருவுருவோடு உவமித்துக் காட்டிடத்தகும் காயாம்பூவைப் புகழ்ந்தது இத்துறையாகும்.

பூவை விரியும் புதுமலரிற் பூங்கழலோய்

யாவை விழுமிய யாமுணரேம் - மேவார்

மறத்தொடு மல்லர் மறங்கடந்த காளை

நிறத்தொடு நேர்தருதலான்.



வீரக்கழலினை அணிந்த வேந்தனே! பகைவரின் வீரத்தினையும் மல்லர்களின் வஞ்சத்தினையும் வென்றவன் திருமால். அவனின் உருவத்தினை ஒத்திருப்பது காயாம்பூ. அம்மாயவனின் உருவத்தினை ஒத்திருக்கும் காயம் பூப்போலும் சிறந்த பொருள் இவ் உலகத்தில் எவ்விடத்திலும் இருப்பதனை அறியோம் யாம்’? என்பதாம்.



**9.1.5 பரிசிற்றுறை:**

மண்ணகங் காவல் மன்னன் முன்னர்

எண்ணிய பரிசில் இதுவென உரைத்தன்று.

மண்ணுலகத்தினைக் காக்கும் தொழிலையுடைய அரசன் முன் சென்ற இரவலன் தான் விரும்பிய பொருள் இதுவெனக் கருதியதை இதுவெனச் சுட்டிச் சொல்லியது இத்துறையாகும்.

வரிசை கருதாது வான்போற் றடக்கைக்

குரிசினீ நல்கயாங் கொள்ளும் - பரிசில்

அடுகள மார்ப்ப வமரோட்டித் தந்த

படுகளி நால்வாய்ப் பகடு.

மேகம் போலும் வள்ளல்தனமையினை உடைய அரசனே! நீ போர்க்களத்துச் சென்று போரில் வென்று பகைவர்களின் பெரும்பொருளினைக் கைக்கொண்டாய். அவ்வாறு கொண்ட பொருள்களை உங்கள் தரத்தினை ஆராய்ந்து பாராது கொடுக்கம் வள்ளல்தன்மை கொண்டவன் நீ, எனினும் நீ கொண்ட பொருள்களுள் மதக்களிப்பினையும் தொங்கும் கைகளையும் உடைய யானையினை நான் பசிசாகப் பெற விரும்புகிறேன் என்பதாம்.

## 9.1.6 இயன்மொழி வாழ்த்து:

இன்னோர் இன்னவை கொடுத்தார் நீயும்

அன்னோர் போல அமையெமக்கு ஈகென

என்னோரும் அறிய எடுத்துரைத் தன்று.

உன்னுடைய முன்னோர் கொடுத்ததைப் போலும் நீயும் கொடுப்பாயாயாக! என உரைப்பதும் அரசனுடைய இயல்பினை எடுத்துரைப்பதும் இத்துறையாகும்.

முல்லைக்குத் தேரு மயிலுக்குப் போர்வையும்

எல்லைநீர் ஞாலத் திசைவிளங்கத் - தொல்லை

இரவாம லீந்த விறைவர்போ னீயும்

கரவாம லீகை கடன்.

எமக்கு இத்தகைய பொருளினை வழங்குவாயாக! என வினவாதவிடத்தும் முல்லைக்குத் தேரினையும் மயிலுக்குப் போர்வையினையும் வழங்கினர்முன்னோர். அதன்வழி தம் புகழினை இவ் உலகின்கண் நிறுத்தினர், அம்மன்னர்களைப்போல் நீயும் எதனையும் மறைக்காமல் எமக்கு வழங்குதலே உம்முடைய கடமையாகும் எனக் குறிப்பது இத்துறையாகும்.

## 9.1.7 இதுவுமது:

மயல்அறு சீர்த்தி மான்தேர் மன்னவன்

இயல்பே மொழியினும் அத்துறை யாகும்.

மயக்கமற்ற மிக்க புகழினை உடையவன் அரசன்.அத்தகையவன் குதிரைகள் பூட்டப்பெற்ற தேரினை உடையவன் என அரசனின் இயல்பினை எடுத்துரைப்பதும் இத்துறையாகும்.

ஒள்வா ளமரு ளுயிரோம்பான் றானீயக்

கொள்வார் நடுவட் கொடையோம்பான் - வெள்வாள்

கழியாமே மன்னர் கதங்காற்றும் வேலான்

ஒழியாமே யோம்பு முலகு.

ஒள்ளிய வாளினைத் தன் இடையில் கொண்ட எம் அரசன் போர்க்களத்தில் தன் வாளினை உறையில் இருந்த எடுக்காமலே பகைவரைப் பணிய வைக்கும் ஆற்றல் பெற்றவன்.இத்தகைய சிறப்பினை உடைய எம் அரசன் வாட்போரில் தன் உயிரினைப் பெரிதென எண்ணாதவன்.அறநெறி வழுவாமல் நாட்டினைப் பாதுகாத்து வருபவன் என உரைத்தல் இத்துறையாகும்.

## 9.1.8 கண்படைநிலை:

நெடுந்தேர்த் தானை நீறுபட நடக்கும்

கடுந்தேர் மன்னவன் கண்படை மலிந்தன்று.

உயரிய தேரினை உடைய அரசன் பகைவர்கள் தூளாகிச் சிதறும்படி செய்து ஓடச் செய்தவன்.அதனால் பகையின்றி இனிதே உறங்கினான் என உரைப்பது இத்துறையாகும்.

மேலா ரிறையமருண் மின்னார் சினஞ்சொரியும்

வேலான் விறன்முனை வென் றடக்கிக் - கோலாற்

கொடிய வுலகிற் குறுகாமை யெங்கோன்

கடியத் துயிலேற்ற கண்.

குறிப்பு

சினத்தீயைப் பொழியும் வேற்படையினைக் கொண்ட அரசன் அதன் வலிமையால் பகைவரை வெற்றி கொண்டான். தனது செங்கோலினைக் கொண்டு கொடிய செயல்கள் இவ் உலகில் நிகழாவண்ணம் காத்தான்.ஆதனால் அவனுடைய கண்கள் இனிதென உறக்கத்தினை மேற்கொண்டன என உரைப்பது இத்துறையாகும்.

## 9.1.9 துயிலெடைநிலை:

அடுதிறன் மன்னரை அருளிய எழுகெனத்

தொடுகழல் மன்னனைத் துயில்எடுப் பின்று.

கொல்லும் வலியினையுடைய பகை வேந்தர்க்கு அருளல் வேண்டும் என மறவர் வீரக்கழல் அணிந்த மன்னனை துயிலிலிருந்து எழுப்புதல் இத்துறையாகும்.

அளந்த திறையா ரகலிடத்து மன்னர்

வளந்தரும் வேலோய் வணங்கக் - களந்தயங்கப்

பூமலர்மேற் புள்ளொலிக்கும் பொய்கைசூழ் தாமைரைத்

தூமலர்க்க ணேற்க துயில்.

வேற்படையினை உடைய வேந்தனே! பகையரசர் பலரும் திறைப்பொருளினைக் கொண்டு வந்து நின்னைக் கண்டு வணங்க நின்றுள்ளனர். எனவே பொய்கையில் மலரும் தாமரை மலரினை ஒத்த நின் கண்னகள் உறக்கத்தினின்று எழுவனவாக! என எழுப்புதல் இத்துறையாகும்.

## 9.1.10 மங்கலநிலை:

கங்குல் கனைதுயில் எழுந்தோன் முன்னர்

மங்கலம் கூறிய மலிவுஉரைத் தன்று.

இரவுப் பொழுதில் உறக்கத்தில் ஆழ்ந்த அரசன் விடிகாலைப்பொழுதில் விழித்தெழுந்தான். அவ்வரசனின் முன் நின்றோர் மேலும் ஆக்கம்

உண்டாகட்டும் என வாழ்த்தி நிற்பர். இதனை எடுத்துரைப்பது இத்துறையாகும்.



விண்வேண்டின் வேறாதன் மங்கலம் வேந்தர்க்கு

மண்வேண்டின் கைகூப்பன் மங்கலம் - பெண்வேண்டின்

துன்னன் மடவார்க்கு மங்கலம் தோலாப்போர்

மன்னன் வரைபுரையு மார்பு.

இவ் உலகின்கண் வாழும் அரசர்கள் விண்ணுலகத்தினை விரும்புவர். எம்முடைய அரசனைப் பகைத்துக் கொண்டால் விண்ணுலகததினை அடையலாம். இமமண்ணுலகினை ஆள விரும்பினால் எம் அரசனைத் தொழுது அம்மங்கலத்தினைப் பெறலாம்.மடப்பத்தினை உடைய பெண்கள் பெண்மைப்பேற்றை விரும்புவர், அத்தகையவர்கள் தோல்வியறியாத எம் மன்னின் மலை ஒத்த மார்பினைத் தழுவினால் அம்மங்கலத்தை அடையலாம் என்பதாம்.

## 9.1.11 இதுவுமது:

மன்னிய சிறப்பின் மங்கல மரபில்

துன்னினன் என்றலும் அத்துறை யாகும்.

நிலைபெற்ற சிறப்பினை உடைய அரசாட்சியினை ஒருவன் மரபுரிமையால் மட்டுமே அடையமுடியும் என உரைப்பதும் இத்துறையாகும்.

தீண்டியுங் கண்டும் பயிற்றியுந் தன்செவியால்

வேண்டியுங் கங்குல் விடியலும் - ஈண்டிய

மங்கல மாய நுகர்ந்தான் மறமன்னர்

பகைவரை போர்க்களத்தில் வென்ற அரசன் இரவு முழுமையும் தன் காதலியோடு இருந்தான். தீண்டி இன்பம் அடையும் தன்மையனவற்றைத் தீண்டி இன்பம் அடைந்தான்.கண்டு இன்பம் அடைய வேண்டியவற்றைக் கண்டு இன்பம் அடைந்தான்.சொல்லுதற்கு உரியனவற்றைச் சொல்லி இன்பம் அடைந்தான்.கேட்டு இன்பம் பெறுவனவற்றைக் கேட்டு இன்பம் அடைந்தான்.இவ்வாறாக ஐம்பொறிகளுக்கும் உரிய இன்பத்தினை அடைந்தான் எனக் குறிப்பது இத்துறையாகும்.

## 9.1.12 விளக்கு நிலை:

அளப்பருங் கடல்தானையான்

விளக்குநிலை விரித்துஉரைத்தன்று.

அளத்தற்கரிய கடல்போன்ற பெரிய படையினை உடைய அரசனின் ஒளி பொருந்திய விளக்கின் சிறப்பினை எடுத்துரைப்பது இத்துறையாகும்.

வளிதுரந்த கண்ணும் வலந்திரியாப் பொங்கி
ஒளிசிறந் தோங்கி வரலால் - அளிசிறந்து
நன்னெறியே காட்டு நலந்தெரி கோலாற்கு
வென்னெறியே காட்டும் விளக்கு.

குறிப்பு

தன் குடையின்கீழ் வாழும் மக்களுக்குக் கொடுத்தல் தொழிலில் குறைவு படாதவன் அரசன். அவன் தன் செங்கோல் திறத்தால் நன்னெறியின்வழி ஆட்சி நடத்துபவன். அத்தகைய சிறப்பினை உடைய அரசனுடைய திருவிளக்கு மிகுதியான காற்று எழுந்த போதும் வலதுபுறமாகச் சழன்று ஒளி மிகுந்து எழும்.அத்தகைய தன்மையால் அரசனுக்கு வெற்றி விளைவதனையே எடுத்துக்காட்டும்.

## 9.1.13 இதுவுமது:

அடஅவிர் பைம்பூண் வேந்தன் தன்னைச்
சுடரோடு பொருவினும் அத்துறை யாகும்.

பொன் தகட்டால் சிறந்து விளங்கும் எம் அரசன் கதிரவனுக்கு ஒப்பானவன் என அரசனை பொருளோடு ஒப்பிட்டு உரைப்பது இத்துறையாகும்.

வெய்யோன் கதிர்விரிய விண்மே லொளியெல்லாம்
மையாந் தொடுங்கி மறைந்தாங்கு - வையகத்துக்
கூத்தவை யேத்துங் கொடித்தேரான் கூடியபின்
வேத்தவையுண் மையாக்கும் வேந்து.

கூத்தர்களால் புகழப்படும் வேந்தன் பெரிய தேரினை உடையவன்.அத்தகைய சிறப்பினை உடைய அரசன் அவைக்களத்தே வந்தடைவான்.அதனால் அவையின்கண் வீற்றிருந்த ஏனைய அரசர்கள் தம் ஒளியை இழப்பர். இது ஞாயிறானது வானில் தன் ஒளியைப் பரப்ப ஏனைய கோள்கள் ஒளியிழத்தலை ஒத்ததாய் அமைந்தது.

## 9.1.14 கபிலைகண்ணிய புண்ணியநிலை

அண்ணல் நான்மறை அந்தணா ளர்க்குக்
கண்ணிய கபிலை நிலைஉரைத் தன்று.

தலைமையால் சிறந்த நான்கு வேதத்தினையுமுடைய அந்தணர்க்குக் கொடுக்கக் கருதிய பசுவினது சிறப்பினைச் சொல்லியது.

பருக்காமுஞ்செம்பொன்னும் பார்ப்பார் முகப்பக்

குருக்கட் கபிலை கொடுத்தான் - செருக்கோ

டிடிமுரசத் தானை யிகலிரிய வெங்கோன்

கடிமுரசங் காலை செய.

இடிபோல் முழங்கும் முரசினை உடைய பகையரசரின் மகிழ்ச்சி மாறுபாடு அடையும் வண்ணம் நம் அரசனின் முரசம் முழங்கியது, இவ்வாறு முரசு முழங்கும் அதிகாலையில் பருத்த மணிகளையும் சிவந்த பொன்னையும் அந்தணர்கள் தாமாக முகந்து கொண்டனர்.சிறந்த முகம் உடைய பசுக்களை எம் வேந்தன் அந்தணர்களுக்குத் தானமாக வழங்கினான்.

### 9.1.15 வேள்விநிலை:

அந்தமில் புகழான் அமரரும் மகிழச்

செந்தீ வேட்ட சிறப்புஉரைத் தன்று.

முடிவில்லாத புகழினை உடைய அரசன் தேவர்களும் மனமகிழும் வண்ணம் செய்த வேள்வியின் சிறப்பினைச் சொல்லியது இத்துறையாகும்.

கேள்வி மறையோர் கிளைமகிழ்த லென்வியப்பாம்

வேள்வி விறல்வேந்தன் றான்வேட்ப - நீள்விசும்பின்

ஈர்ந்தா ரிமையோரு மெய்தி யழல்வாயால்

ஆர்ந்தார் முறையா லவி.

பகைவரை வென்ற வெற்றிச் சிறப்பினை உடைய நம் வேந்தன் தீயை எழுப்பி வேள்வியைச் செய்தான். அதனைக் காண வானுலகத்தில் வாழும் ஈர மாலையினை அணிந்த தேவர்களும் வந்திருந்தனர்.அவர்கள் தமக்குரிய முறையால் தீயாகிய வாயினால் அவிப்பலியை உண்டனர். அத்தகைய சிறப்பு மிக்க வேள்வியைக் கண்ட வேள்வியில் சிறப்புமிக்க அந்தணக் குடும்பத்தினர் மகிழ்தல் வியப்பாமோ!

### 9.1.16 வெள்ளிநிலை:

துயர்தீரப் புயல்தருமென

உயர்வெள்ளி நிலைஉரைத் தன்று.

குறிப்பு

உலக மாந்தர் துன்பம் நீங்கும்படி மழையைத் தருவது மேகம். அந்த மழையின் நிலையினை வெள்ளியைக் கொண்டு அறியலாம். அத்தகைய சிறப்புடைய வெள்ளிக் கோளின் சிறப்பினை எடுத்துரைப்பது இத்துறையாகும்.

சூழ்கதிர் வான்விளங்கும் வெள்ளி சுடர்விரியத்

தாழ்புயல் வெள்ளந் தருமரோ - சூழ்புரவித்

தேர்விற்றார் தாங்கித் திகழ்ந்திலங்கு வேலோய்நின்

மார்விற்றார் கோலி மழை .

மிகச் சிறப்பு மிக்க குதிரைகள் பூட்டிய தேரினையும் வலிய வில்லினையும் உடையவன் பகையரசன். அத்தகைய அரசன் தோல்வியுறும்படியாக வெற்றியைப்பெற்ற வேந்தனே! ஞாயிறு முதலிய கோள்கள் வலமாக இயங்குவது வானம். அத்தகைய சிறப்புடைய வானத்தினை தன் ஒளியால் இயங்கச் செய்வது வெள்ளி எனும் கோள்.அதனுடைய ஒளியானது வானில் பரவியது, அதனால் கரிய மேகமானது நிலத்தினை நோக்கித் தாழ்ந்தது.அம்மேகம் நின் மார்பிடத்தே காணப்படும் மாலையினைப் போல் நீர்ப்பொழிவினைத் தந்தது. அதனால் நிலவுலகம் முழுவதும் வெள்ளம் பெருகியது.

## 9.1.17 நாடு வாழ்த்து:

தாள்தாழ் தடக்கையான்

நாட்டது வளம்உரைத்தன்று.

தன் முழங்தாளுக்கு கீழ் நீண்டு தொங்கும் கைகளை உடையவன் அரசன். அவனுடைய நாடு வளம் மிக்கது. அத்தகைய நாட்டின் வளத்தினை மிகுவித்துச் சொல்வது நாடு வாழ்த்து எனப்படும்.

எண்ணி னிடரெட்டு மின்றி வயற்செந்நெற்

கண்ணின் மலரக் கருநீலம் - விண்ணின்

வகைத்தாய் வளனொடு வைகின்று வென்வேல்

வெற்றியால் சிறந்த வேலினையும் மாலைகளையும் அணிந்த அரசனின் நாடு மிகப்பெறும் சிறப்புகளை உடையது ஆகும். அது எட்டுவகையான துன்பங்களும் இல்லாமல் திகழ்வது ஆகும்.வயலில் செந்நெல்லோடு பெண்களின் கண்கள் போன்ற கருங்குவளை மலர்களும் மலர்ந்து காணப்படும்.மேலும் இன்பநிலையில் வானுலகத்தினை ஒத்துக் காணப்படுவதோடு நிலையான செல்வத்தினையும் உடையதாய் அமைந்தது ஆகும்.

## 9.1.18 கிணை நிலை:

திருக்கிளரும் அகன்கோயில்

அரிக்கிணைவன் வளம்உரைத்தன்று.

நாள்தோறும் செல்வம் பெருகும் அரசனின் அரண்மனையில் இருந்து பெரும்பொருளைப் பெற்றான் கிணைவன். அவனது சிறப்பினைச் சொல்லியது இத்துறையாகும்.

வெள்ளி முளைத்த விடியல் வயல்யாமை

அள்ளகட்ட டன்ன வரிக்கிணை - வள்ளியோன்

முன்கடை தட்டிப் பகடுவாழ் கென்னாமுன்

என்கடை நீங்கிற் றிடர்.

வெள்ளி என்னும் கோளானது வானத்தில் தோன்றும் வைகறைப்பொழுதில் கொடைத்தன்மையில் சிறந்த அரசனின் மாளிகை வாசலில் வந்து நின்றேன்.வயலில் வாழும் ஆமையின் கண்களை ஒத்துக் காணப்படும் தடதரிப் பறையினைக் கொட்டினேன்.அரசனின் பட்டத்து யனை வாழ்வதாக எனப் பாடக் கருதினேன். ஆனால் அதற்கு முன்பாகவே என்னுடைய வறுமைத் துன்பம் எல்லாம் என்னை விட்டு நீங்கியது.

## 9.1.19 களவழி வாழ்த்து:

செங்களத்துச் செழுஞ்செல்வம்

வெண்டுறையாழ்ப் பாணர்விளம்பின்று.

அரசன் போர்க்களத்தில் மாற்றாரை வென்று பெரும் செல்வத்தினைக் கைப்பற்றினான். அதனை வெண்டுறைப் பாடலைப் பாடும் யாழ்ப்பாணர் விதந்து பாடினர் என்பது இத்துறையாகும்.

ஈண்டி யெருவை யிறகுளரும் வெங்களத்து

வேண்டியாங் கொண்ட விறல்வேழம் - வேண்டாள்

வளைகள் வயிரியம்பும் வாட்டானை வேந்தே

விளைகட் பகர்வாள் விலை.

வெற்றிச்சங்குகளும் கொம்புகளும் முழங்குகின்ற வாட்படையினை உடையவன் வேந்தன்.பருந்துகள் கூட்டமாகக் கூடி தம் சிறகுகளைக் கோதிக் கொண்டிருப்பது வெவ்விய போர்க்களம்.அத்தகைய போர்க்களத்தில் பாணர்களாகிய நாங்கள் உன்னிடம் வெற்றி உடைய

யானைகளைப் பரிசாகப் பெற விரும்பி பெற்றோம்.அவ்வாறு பெறப்பட்ட யானைகளை கள்ளினை விற்பவளிடம் விலையாகக் கொடுத்தோம்ஆனால் கள்ளினை விற்கும் பெண்கள் அதனை விரும்பி ஏற்கவில்லை.

## 9.1.20 வீற்றினிதிருந்த பெருமங்கலம்:

கூற்றுஇருந்த கொலைவேலான்

வீற்றிருந்த விறல்மிகுத்தன்று.

குறிப்பு

கொலைத்தொழிலில் சிறந்த வேலினைத் தாங்கியவன் அரசன்.அவன் இறுமாப்புடன் இருந்த வெற்றிச் சிறப்பினை மிகுவித்துக் சொல்வது இத்துறையாகும்.

அழலவிர் பைங்க ணரிமா னமளி

நிழலவிர்பூண் மன்னர்நின் றேத்தக் - கழல்புனைந்து

வீமலிதார் மன்னவனாய் வீற்றிருந்தான் வீங்கொலிநீர்ப்

பூமலி நாவற் பொழிற்கு.

கடலால் சூழப்பெற்றது இவ் உலகம்.அதில் மணம்மிக்க மலர்களையும் வீரக்கழலினையும் உடையவனாகிய அரசன் ஒருசேரத் குடையின்கண் வீற்றிருந்தான்ஆதலால் அரசர்கள் பலரும் அவனை வாழ்த்தினர்.அச்செயலால் நெருப்புப்ஒளிவீசும் பசிய கண்களை உடைய சிங்கங்கள் தாங்கிய இருக்கையின் மீது எங்கள் வேந்தன் இறுமாப்புடன் வீற்றிருந்தான் என்பதாகும்.

## 9.1.21 குடுமி களைந்த புகழ்சாற்றுநிலை:

நெடுமதில் எறிந்து நிரைதார் மன்னன்

குடுமி களைந்த மலிவுஉரைத் தன்று.

பகையரசரை வென்று அவர்தம் குடுமியை வெற்றி பெற்ற அரசன் களைந்ததைக் கூறியது இத்துறையாகும்.

பூந்தா மரையிற் பொடித்துப் புகல்விசும்பின்

வேந்தனை வென்றான் விறன்முருகன் - ஏந்தும்

நெடுமதில் கொண்டு நிலமிசையோ ரேத்தக்

குடுமி களைந்தானெங் கோ.

வெற்றியை உடைய முருகப்பெருமான் சரவணப் பொய்கையில் தோன்றினான்.அவன் இந்திரனை வென்றான்.அவனின் பகை அரணினைக்

கைப்பற்றினான்.அதன் பினனர் உலகில் உள்ளோர் அனைவரும் மகிழும் வண்ணம் அவனின் குடுமியைக் களைந்தான்.



## 9.1.22 மணமங்கலம்:

இகல்அடுதோள் எறிவேல் மன்னன்

மகளிரொடு மணந்த மங்கலம் கூறின்று.

பகையைக் கொல்லும் புயத்தினையும் எறியும் வேலினையுமுடைய வேந்தன் அரிவையரோடு புணர்ந்த நன்மையைச் சொல்லியது.

அணக்கருந் தானையா னல்லியந்தார் தோய்ந்தோள்

மணக்கோல மங்கலம்யாம் பாட - வணக்கருஞ்சீர்

ஆரெயின் மன்னன் மடமக ளம்பணைத்தோட்

கூரெயிற்றுச் செவ்வாய்க் கொடி.

பகைவரின் அரணினைக் கைப்பற்றினான் வேந்தன். அவனது மடமகளோ மூங்கில் போன்ற ஒளிவீசும் தோளினைப் பெற்றவள்.துறக்க உலகத்தில் காணப்படும் காமவல்லி என்னும் கொடியினை ஒத்தவள்.அத்தகையவள் பகைவரால் வருந்துதற்கு அரிய படையினை உடைய எம் மன்னனின் அல்லி மாலையினை மணந்தான்.அப்பெண்ணின் திருமணக்கோலத்தினை யாம் புகழ்ந்து பாடிக்கொண்டுள்ளோம்.

## 9.1.23 பொலிவுமங்கலம்:

வேல்வேந்தன் உள்மகிழப்

பாலன் பிறப்பப் பலர்புகழ்ந் தன்று.

வெற்றி தரும் வேலினை ஏந்திய மன்னனுக்குப் புதல்வன் பிறந்தான். அதனைப் பலரும் ஏற்றிப் பாடுவது பொலிவு மங்கலம் எனப்படும்.

கருங்கழல் வெண்குடைக் காவலற்குச் செவ்வாய்ப்

பெருங்கட் புதல்வன் பிறப்பப் - பெரும்பெயர்

விண்ணார் மகிழ்ந்தார் வியலிடந்தா ரேத்தினார்

எண்ணா ரவிந்தா ரிகல்.

வீரக்கழலினையும் வெண்மையான நிறத்தினையும் உடைய வேந்தற்குச் சிவந்த வாயினையும் பெரிய கண்ணினையுமுடைய மைந்தன் பிறந்தான். அதனால் விண்ணுலகத் தேவர்கள் மகிழ்ந்தனர்,நில உலகில் உள்ள

மக்கள் வாழ்த்தினர்.பகைவர் எல்லாம் தம் பகையை விட்டு நட்புப் பாராட்டினர்.

### 9.1.24 நாண்மங்கலம்:

அறந்தரு செங்கோல் அருள்வெய்யோன்

பிறந்தநாள் சிறப்புரைத் தன்று.

**குறிப்பு**

செங்கோலினையும் அருளினையும் விரும்பிய மன்னன் பிறந்தநாள் நன்மை பயப்பதாகும்.அந்நாளைச் சிறப்பித்துக் கூறுவது நாண்மங்கலம் எனப்படும்.

கரும்பகடுஞ் செம்பொன்னும் வெள்ளணிநாட் பெற்றார்

விரும்பி மகிழ்தல் வியப்போ - சுரும்பிமிர்தார்.

வெம்முரண் வேந்தரும் வெள்வளையார் தோள்விழைந்து

தம்மதி றாந்திறப்பர் தாள்.

அரசன்தன் பிறந்தநாளில் யானைகளையும் பொன்னையும் பரிசாகக் கொடுத்தான்.அதனைப் பெற்றவர்கள் பெரிதும் விருப்பமுற்றனர். அந்நன்னாளில் மாறுபாட்டினை உடைய மன்னர்கள் தம் அச்சத்தினை விட்டனர்,வளையல் அணிந்த உரிமை மகளிர் தோளைத் தழுவவிரும்பினர்.எனவே தாம் அடைத்து வைத்திருந்த அரண்களின் கதவுகளுக்குரிய தாழ்ப்பாளை நீக்கினர்.

### 9.1.25 பரிசினிலை:

புரவலன் மகிழ்தூங்க

இரவலன் கடைக்கூடின்று.

இரவலனுக்குப் பரிசில் பெகாடுத்த அரசன் இன்பத்தில் திளைத்திருந்தான். எனவே இரவலன் தன் ஊருக்குப் பரிசிலுடன் செல்லத் தொடங்கியதனைக் குறிப்பது இத்திணையாகும்.

வெல்புரவி பூண்ட விளங்கு மணித்திண்டேர்

நல்கிய பின்னு நனிநீடப் - பல்போர்

விலங்குங் கடற்றானை வேற்றார் முனைபோற்

கலங்கு மளித்தென் கடும்பு.

அரசன் தன்னை நாடி வந்த இரவலனுக்குக் குதிரைகள் பூட்டிய தேரினைப் பரிசாக வழங்கினான் எனினும் சென்று வா என்று அவனிடம் கூறாமல் காலம் தாழ்த்தினான். அதனைக் கண்ட இரவலனின் சுற்றம்

கலக்கமுற்றது. அக் கலக்கமானது கடல் போலும் பெரும்படையினை உடைய பகை மன்னர்களின் கலக்கத்தினை ஒத்திருந்தது என்பது இதன் பொருளாம்.



## 9.1.26 பரிசில்விடை

வேந்தன்உள் மகிழ வெல்புகழ் அறைந்தோர்க்கு

ஈந்து பரிசில் இன்புற விடுத்தன்று.

வெற்றிச் சிறப்பினை உடைய வேந்தன் தன்னைப் புகழ்ந்து பாடிய இரவலர்க்குப் பரிசிலை வழங்கினான். பின் அவர்கள் இன்புறும்படியாக சென்று வருக என விடை கொடுத்து அனுப்பினான் என்பது இத் துறையாகும்.

படைநவின்ற பல்களிறும் பண்ணமைந்த தேரும்
நடைநவின்ற பாய்மாவு நல்கிக் - கடையிறந்து
முன்வந்த மன்னர் முடிவணங்குஞ் சேவடியாற்
பின்வந்தான் பேரருளி னான

அருளினை உடைய அரசன் பகை மன்னர்களின் முடிகள் பட்டமையால் சிவந்த பாதத்தினை உடையவன் ஆனான்.இத்தகைய சிறப்புடைய அரசன் இரவலர்க்குக் களிற்று யானை, தேர், குதிரை போன்றவற்றைப் பரிசாக வழங்கினான்.பின் தன் அடியாலே என் பின்னேநடந்து வாயில்வரை வந்து விடை கொடுத்தான்.

## 9.1.27 ஆள்வினை வேள்வி

வினைமுற்றிய கனைகழலோன்

மனைவேள்வி மலிவுஉரைத்தன்று

மாற்றார் மேல் படையெடுத்துச் சென்று வெற்றி பெற்ற வேந்தன் தன் காலில் வீரக்கழலினை அணிந்தவன்.அத்தகைய சிறப்பினை உடையவன் இல்லற வாழ்க்கையிலும் சிறந்து விளங்கினான் என்று சொல்வது ஆள்வினை வேள்வி என்பது ஆகும்.

நின்ற புகழொடு நீடுவாழ் கிவ்வுலகில்
ஒன்ற வுயிர்களிப்ப வோம்பலால்- வென்றமருள்
வாள்வினை நீக்கி வருக விருந்தென்னும்
ஆள்வினை வேள்வி யவன்.

போர்க்களத்தில் பகைவரை வென்று வெற்றி பெற்ற வேந்தன் தன் முயற்சியால்இல்லறத்தினை மிகச் சிறப்பாக நடத்தினான்.தன் இல்லத்திற்கு விருந்தினர்களை வருமாறு அழைத்தான்.மேலும் இவ்

உலகத்து உயிர்கள் இன்புறும் வகையிலும் ஆள்கின்றான். எனவே அவன் நிலைபெற்ற புகழுடன் நீண்ட காலம் வாழ்வானாக!



## 9.1.28 பாணாற்றுப்படை

சேணோங்கிய வரைஅதரில்

பாணனை ஆற்றுப்படுத்தன்று

**குறிப்பு**

ஒரு பாணன் மற்றொரு பாணனை ஆற்றுப்படுத்தவது பாணாற்றுப்படை என்பதாகும்.அரசனிடம் பரிசில் பெற்ற பாணன் ஒருவன் மலை வழியாகத் திரும்பினான். அவ்வாறு வரும் வழியிடத்துப் புதியதொரு பாணனைக் கண்டான். அவனையும் அரசனிடத்து ஆற்றுப்படுத்தினான். இதனைக் குறிப்பது பாணாற்றுப்படை எனப்படும்.

இன்றொடை நல்லிசை யாழ்ப்பாண வெம்மைப்போற்
கன்றுடை வேழத்த கான்கடந்து- சென்றடையிற்
காமரு சாயலாள் கேள்வன் கயமலராத்
தாமரை சென்னி தரும்.

இனிய கோவையினையுடைய நல்லிசையால் சிறந்த யாழினை உடைய பாணனே.எம்மைப்போல நீயும் கன்றுகளுடன் கூடிய யானைகள் இயங்கும் காட்டினைக் கடந்து செல்வாயாயாக! அவ்வாறு சென்றால் அழகு நிறைந்த மென்மையினை உடைய மெல்லியலாளின் கணவனைக் காணலாம்.அவன் குளத்தில் பூவாத பொன்னால் ஆகிய தாமரையை உனக்குப் பரிசாகத் தருவான்.

## 9.1.29 கூத்தராற்றுப்படை

ஏத்திச்சென்ற இரவலன்

கூத்தரை ஆற்றுப்படுத்தன்று.

பரிசில் பெற்றுச் செல்லும் கூத்தன் மற்றொரு கூத்தனை ஆற்றுப் படுத்துவது கூத்தராற்றுப்படை எனப்படும்

கொலைவிற் புருவத்துக் கொம்பன்னார் கூத்தின்
தலைவ தவிராது சேறி-சிலைகுலாம்.
காரினை வென்ற கவிகையான் கைவளம்
வாரினை கொண்டு வரற்கு.

கொலைத்தொழிலில் சிறந்து விளங்கும் வில்லினைப் போன்ற புருவத்தினை உடைய விறலி ஆடும் பாட்டின் தலைவனே! எனக்குப் பரிசில் அளித்தவன் மேகத்தினைத் தோற்கடிக்கும் வள்ளல்தன்மை

கொண்டவன்.அவன் கையினால் வழங்கும் பரிசுப்பொருட்களைப் பெற்று வர இப்பொழுதே செல்வாயாக!



## 9.1.30 பொருநாற்றுப்படை

பெருநல்லான் உழையீர் ஆகஎனப்

பொருநனை ஆற்றுப்படுத்தன்று.

பரிசில் பெற்றுச் செல்லும் பொருநன் மற்றொரு பொருநனை ஆற்றுப்படுத்தவது பொருநராற்றுப்படை எனப்படும்.

தெருவி லலமருந் தெண்கட் 1டடாரிப்

பொருவில் பொருநநீ செல்லிற்- செருவில்

அடுந்தடக்கை நோன்றா ளமர்வெய்யோ னீயும்

நெடுந்தடக்கை யானை நிரை.

தடாரிப்பறையினைக் கையில் ஏந்தி தெருவெங்கும் சுற்றித் திரியும் பொருநனே! எமக்குப் பரிசில் அளித்தவன் போர்க்களத்தில் பகைவரைக் கொல்லும் பெரிய தாளினையும் கையினையும் கொண்டவன்.அவன்பால் நீ செல்வாயாகில் பெரிய யானைக் கூட்டத்தினை உனக்குப் பரிசாக வழங்குவான்.

## 9.1.31 விறலியாற்றுப்படை

திறல்வேந்தன் புகழ்பாடும்

விறலியை ஆற்றுப்படுத்தன்று.

பரிசில் பெற விரும்பும் விறலியை வள்ளலிடம் ஆற்றுப்படுத்துவது விறலியாற்றுப்படை எனப்படும்.

சில்வளைக்கைச் செவ்வாய் விறலி செருப்படையான்

பல்புகழ் பாடிப் படர்தியேல்- நல்லவையோர்

ஏத்த விழையணிந் தின்னே வருதியாற்

பூத்த கொடிபோற் பொலிந்து.

சில வளையல்களை கையில் அணிந்துள்ள விறலியே! எனக்குப் பரிசில் அளித்த வள்ளல் போரில் மிகுந்த படையினையும் புகழினையும் உடையவன்.நீ அவனைப் பாடிச் செல்வாய் ஆகில் அவன் அவையில் உள்ளோர் உன்னைப் புகழ்ந்துரைப்பர். மேலும் அரசனால் வழங்கப்படும் அணிகளையும் நீ பெறுவாய்! அவற்றை அணிந்து கொண்டு மலர்ந்த பூங்கொடி போலும் பொலிவு பெற்று நீ திரும்புவது உறுதியாகும்.

## 9.1.32 வாயுறை வாழ்த்து

பின்பயக்கும் எம்சொல்லென

முன்படர்ந்த மொழிமிகுத்தன்று.

பின்னால் நன்மை பயக்கும் எங்கள் வார்த்தையைப் பின்பற்றி நிற்க வேண்டுமென சான்றோர் உரைப்பர். இத்தகைய மேம்பாட்டினை எடுத்துரைப்பது வாயுறை வாழ்த்து என்பதாகும்.

**குறிப்பு**

எஞ்சொ லெதிர்கொண் டிகழான் வழிநிற்பிற்

குஞ்சர வெல்படையான் கொள்ளானோ-எஞ்சும்

இகலிட னின்றி யெறிமுந்தீர் சூழ்ந்த

அகலிட மங்கை யகத்து.

வெல்லும் தன்மை கொண்ட யானைப்படையினைக் கொண்ட அரசனே! நான் கூறுகின்ற மொழிகளை இகழாமல் கேட்பாயாக! அச்சொற்களை ஏற்று நன்னெறியின்கண் நிற்பாயாக! நிற்பாயாகில் உன்னுடன் முரண்பட்டோருக்கு நிலம் இல்லாமல் போகும். கடலால் சூழப்பட்ட இவ் உலகம் முழுவதும் உன்னுடையதாகிவிடும்.

## 9.1.33 செவியறிவுறூஉ

மறம்திரிவு இல்லா மன்பெரும் சூழ்ச்சி

அறம்தெரி கோலாற்கு அறிய உரைத்தன்று.

அறத்தினை துணையாகக் கொண்டு ஆட்சிபுரியும் அரசனுக்கு சான்றோர் மறமும் பிறழ்ச்சியும் இல்லாத நல்லுரைகளைக் கூறுவது செவியறிவுறூஉ எனப்படும்.

அந்தணர் சான்றோ ரருந்தவத்தார் தம்முன்னோர்

தந்தைதா யென்றிவர்க்குத் தார்வேந்தே - முந்தை

வழிநின்று பின்னை வயங்குநீர் வேலி

மொழிநின்று கேட்டன் முறை.

மலர்மாலை அணிந்த மன்னனே! கடலால் சூழப்பட்ட இவ் உலகில் அந்தணர், சான்றோர், அரிய தவத்தினை மேற்கொண்டோர், தம்முடைய முன்னோர், தந்தை, தாய், என்று முற்கூறப்பட்ட முன்னோர் சென்ற நெறியைப் பின்பற்றி நிற்பாயாக! பின்னர் இவ்வுலகத்து முன்னோர் மொழிகளைக் கேட்டு நடத்தலை வழக்கமாகக் கொள்வாயாக!

## 9.1.34 குடைமங்கலம்



குறிப்பு

நாற்றிசையும் புகழ்பெருக

வீற்றிருந்தான் குடைபுகழ்ந்தன்று.

நான்கு திக்கும் தம்முடைய புகழைப் பரவச் செய்தவன் மன்னன்.அத்தகைய சிறப்புடைய அரசன் வெண்கொற்றக்குடை கொண்ட ஆசனத்தின்மீது அமர்ந்திருந்தான்.அக்குடையினது சிறப்பினை எடுத்துக் கூறுவது குடைமங்கலம் எனப்படும்.

தன்னிழலோ ரெல்லோருந் தண்கதிராந் தற்சேரா

வெந்திழலோ ரெல்லார்க்கும் வெங்கதிராம்-இன்னிழல்வேல்

மூவா விழுப்புகழ் முல்லைத்தார்ச் செம்பியன்

கோவா யுயர்த்த குடை.

வெற்றி மாலையினை அணிந்த சோழ மன்னன் வேலினைத் தன் கையில் ஏந்தியவன்.அச்சோழன் அரசுரிமை பெற்றவனாய் தன்குடையை உயர்த்தினான்.அக்குடையானது தன் நிழலின் கீழ் வாழ்பவர்களுக்கு திங்கள் ஒளியாய் குளிர்ச்சி தரும்.தன்னைப் பணியாத மாற்றாருக்கு ஞாயிறாய் கொடுமை தந்து நிற்கும் தன்மை உடையதாகும்.

## 9.1.35 வாண்மங்கலம்

கயக்கருங் கடல்தானை

வயக்களிற்றான் வாள்புகழ்ந்தன்று.

பகைவராற் கலக்குதற்குரிய கடல்போலும் படையினையும் வலிய யானையினையும் உடைய மன்னனின் வாளைப் புகழ்ந்தது.

கொங்கவி ழைம்பான் மடவார் வியன்கோயில்

மங்கலங் கூற மறங்கனலும்- செங்கோல்

நிலந்தரிய செல்லு நிரைதண்டார்ச் சேரன்

வலந்தரிய வேந்திய வாள்.

குளிர்ந்த மாலையினை அணிந்தவன் சோழ மன்னன். அவனின் அரண்மனை அகன்ற தன்மை உடையதாய் அமையும்.அவ் அரண்மனையில் உள்ள பெண்கள் தேன் மலரும் மலர்களை அணிந்து ஐந்தாகப் பகுக்கப்பட்ட கூந்தலினை உடையவர்கள் ஆவர்.அவர்கள்

சேரனின் செங்கோலினைப் புகழ்ந்தனர்.அதனைக் கேட்டு வெற்றியைத் தரும் அவன் கையில் இருந்த வாள் சினத்தீயை உமிழ்ந்தது.

## 9.1.36 மண்ணுமங்கலம்

எண்ணருஞ் சீர்த்தி இறைவன் எய்தி

மண்ணு மங்கல மலிபுஉரைத் தன்று.

**குறிப்பு**

மன்னன் மங்கல நீராடுதலின் மாண்பினை சொல்வது மண்ணுமங்கலம் என்று அழைக்கப்படும்.

கொங்கலர் கோதைக் குமரி மடநல்லாள்

மங்கலங் கூற மலிபெய்திக் - கங்கையாள்

பூம்புன லாகங் கெழீஇயினான் போரடுதோள்

வேம்பார் தெரியலெம் வேந்து.

போரில் வெல்லும் ஆற்றலைக் கொண்ட மன்னன் வேம்பம்பூ மாலையினைச்சூடினான்.அப்பாண்டிய மன்னனுக்கு மகரந்தங்கள் பொருந்திய மாலையையும் மடப்பத்தையும் உடைய பெண் மங்கல வாழ்த்துப் பாடினாள்.அதன் காரணமாக உள்ளம் குளிர்ந்த மன்னன் கங்கை என்னும் பெண்ணின் பொலிவு பெற்ற நீராகிய மார்பினைத் தழுவினான்.

## 9.1.37 ஓம்படை

இன்னது செய்தல் இயல்பென இறைவன்

முன்நின்று அறிவன் மொழிதொடர்ந் தன்று.

அரசனின் முன் நின்று இத்தகைய செயலைச் செய்தலே உயர்வானது என்றும் மன்னருக்குத் தகுதியானது என்றும் சான்றோர் உரைப்பது ஓம்படை எனப்படும்.

ஒன்றி லிரண்டாய்ந்து மூன்றடக்கி நான்கினால்

வென்று களங்கொண்ட வேல்வேந்தே- சென்றுலாம்

ஆழ்கடல்சூழ் வையகத்து ளைந்துவென்-3றாறகற்றி

ஏழ்கடிந் தின்புற் றிரு.

ஒன்றாகிய பேரறிவினை உடையவனே! நன்மை, தீமை என்னும் இரண்டினையும் ஆராய்ந்து அறியும் ஆற்றல் உடையவனே! பகை, நட்பு, நொதுமல் என்னும் மூன்றினையும் மனத்துள் கொண்டவனே!யானை, தேர்,

குதிரை, காலாள் என்னும் நாட்படையினைக் கொண்டவனே! வேலினைக் கையில் ஏந்தியவனே! மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து பொறிகளும் உன் சொல்லினைக் கேட்டு நடக்கும்படி அவற்றை வெற்றி கொள்க! படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு,அரண் என்னும் ஆறினையும் பெருக்குவாயாக! வேட்டையாடுதல், கடுஞ்சொல், மிகுதண்டம், சூது, பொருள் ஈட்டம், காமம், கள் என்னும் ஏழு குற்றங்களையும் நீக்கி இனிமையுடன் வாழ்வாயாக!

## 9.1.38 புறநிலை வாழ்த்து

வழிபடு தெய்வ நிற்புறங் காப்ப

வழிவழி சிறக்களன வாய்மொழிந் தன்று.

நீ வணங்குந் தெய்வம் நின்னைக் காப்ப நின் வழிவழி மிகுவதாகவெனச் சொல்லி உண்மையைச் சொல்லியது.

கொடிபடு முத்தலைவேற் கூற்றக் கணிச்சிக்

கடிபடு கொன்றையான் காப்ப - நெடிதுலகிற்

பூமலி நாவற் பொழிலகத்துப் போய்நின்ற

மாமலைபோன் மன்னுக நீ.

கொன்றை மாலையினை அணிந்த சிவபெருமான் மூன்று இலைகளை உடைய சூலத்தினை ஏந்தியவன்.கூற்றுவனை உதைத்து மழுப்படையினை எந்தியவன்.அத்தகைய இறைவன் உன்னைக் காக்கின்றான்.இந்நாவலந் தீவினை ஊடறுத்துச் செல்லும் மேருமலையினைப் போன்று சிவனின் அருளால் இவ் உலகில் நிலைத்து நிற்பாயாக!

## 9.1.39 கொடிநிலை

மூவர்கொடி யுள்ளும் ஒன்றொடு பொரீஇ

மேவரு மன்னவன் கொடிபுகழ்ந் தன்று.

அரி, அயன் அரனென்னும் மூவர் கொடியுள்ளும் ஒருவர் கொடியோடு உவமித்துப் வேந்தனுடைய கொடியைப் புகழ்ந்துரைப்பது இத்துறையாகும்.

பூங்க ணெடுமுடிப் பூவைப்பூ மேனியான்

பாம்புண் பறவைக் கொடிபோல -ஓங்குக

பல்யானை மன்னர் பணியப் பனிமலர்த்தார்க்



குறிப்பு

கொல்யானை மன்னன் கொடி.

பொலிகின்ற கண்ணினையும் நெடிய திருமுடியினையும் காயாவின் மலர் போன்ற திருமேனியினையும் உடைய மாயவனின் பாம்பை அருந்தும் கருடக்கொடியை ஒத்து உயர்க; பல யானைகளை உடைய வேந்தர் வணங்கக் குளிர்ந்த பூவாற்செய்த மாலையினையும் கொல்லுங் களிற்றினையுமுடைய வேந்தனின் வீரக்கொடி என்பதாம்.



## 9.1.40 கந்தழி

சூழநேமியான் சோஎறிந்த

வீழாச்சீர் விறல்மிகுத்தன்று.

வளைந்த ஆழிப்படையினை உடைய திருமால் சோவென்னும் அரணினை அழித்த கெடாத தன்மையினையுடைய வெற்றியைச் சிறப்பித்தது.

மாயவன் மாய மதுவான் மணிநிரையுள்

ஆயனா வெண்ண லவனருளான் -காயக்

கழலவிழக் கண்கனலக் கைவளையார் சோரச்

சுழலழலுள் வைகின்று சோ.

திருமால் கருணையை உகுத்து வெகுண்டெழுந்தான். அந்தப் பொழுதே வளையல் அணிந்த கைகளை உடைய அரக்க மகளிர் அஞ்சினர்.வீரசோ என்னும் அரணானது நெருப்பினுள் மூழ்கிற்று. அத்தகைய ஆற்றல் பொருந்திய மாயவனை பசுக்கூட்டங்களை மேய்க்கும் இடையன் எனக் கருதுதல் பொருந்தாது என்பதாம்.

## 9.1.41 வள்ளி

பூண்முலையார் மனமுருக

வேல்முருகற்கு வெறியாடின்று.

ஆபரணத்தினாற் சிறந்த முலையினையுடைய பெண்கள் நெஞ்சு நெகிழ வேலினையுடைய முருகனுக்கு வெறியென்னுங் கூத்தை ஆடியது.

வேண்டுதியா னீயும் விழைவோ விழுமிதே

ஈண்டியம் விம்ம வினவளையார்-பூண்டயங்கச்

சூலமொ டாடுஞ் சுடர்ச்சடையோன் காதலற்கு

ஒளிமிகுந்த சடையினை உடையவன் முருகப்பெருமான்.அவன் திரிசூலத்தினை ஏந்திக் கூத்தாடுபவன். அவனின் திருக்குமரன் முருகன். அவனுக்கு வளையல் அணிந்த மகளிர் இசைக்கருவிகள் முழங்க வேலனோடு சேர்ந்து வெறிக்கூத்தினை ஆடுவர். அதனை நீயும் விரும்புவாயாக! அத்தகைய விருப்பம் மிகச் சிறந்த ஒன்றாகும்.



குறிப்பு

## 9.1.42 புலவர் ஆற்றுப்படை:

இருங்கண் வானத்து இமையோர் உழைப்

பெரும்புலவனை ஆற்றுப்படுத்தன்று

விண்ணுலகத்தில் வாழ்பவர்கள் தேவர் ஆவர். அவர்களிடத்துச் செல்லுமாறு ஓர் அறிவாளியை ஒரு பேரறிவாளன் ஆற்றுப்படுத்துவான்.இது புலவராற்றுப்படை எனப்படும்.

வெறிகொள் அறைஅருவி வேங்கடத்துச் செல்லின்

நெறிகொள் படிவத்தோய் நீயம் - பொறிகட்கு

இருள்ஈயும் ஞாலத்து இடர்எல்லாம் நீங்க

அருள்ஈயும் ஆழி அவன்

தவவேடத்தனை உடைய புலவனே! நிலவுலகம் ஐம்பொறிகளுக்கும் மயக்கத்தைத் தருவது.துன்பம் நிறைந்தது.அவற்றை நீக்குபவன் வேங்கடப்பெருமான்.அவன் உறையும் வேங்கடமலை அருவிகளை உடையது. அங்கு சென்றால் துன்பம் எல்லாம் உன்னைவிட்ட நீங்கும்படியாக எனக்கு அருளியதைப்போல் உனக்கும் அருள் செய்வான்.

## 9.1.43 புகழ்ந்தனர் பரவல்

இன்னதுஒன்று எய்தும் இருநிலத்து யாம்எனத்

துன்னரும் கடவுள் தொடுகழல் தொழுதன்று.

இன்னதொரு பதத்தினை அடைவோமாக! பூமியிடத்து நாங்களெனச் சொல்லிக் கிட்டுதற்கரிய தெய்வத்தின் கட்டும் வீரக்கழலையுடைய பாதங்களைப் பணிந்து என்பதாம்.

சூடிய வான்பிறையோய் சூழ்கடலை நீற்றரங்கத்

தாடி யசையா வடியிரண்டும்-பாடி

உரவுநீர் ஞாலத் துயப்போக வென்று

பரவுதும் பல்காற் பணிந்து.

குறிப்பு

சடையிலே இளமதியையுடையோய்!சுடுகாடான அரங்கத்திலே நடனமாடி வருந்தாத சீர்பாதம் இரண்டையும் துதித்து, கடல்சூழ்ந்த பூமியினின்றும் பிழைத்து நன்னெறிக்கண்ணே போவோமென்று சொல்லிப் பலகாலும் வணங்கிப் போற்றுதும் என்பதாம்.

### 9.1.44 பழிச்சினர் பணிதல்

வயங்கியபுகழ் வானவனைப்

பயன்கருதிப் பழிச்சினர்ப் பணிந்தன்று.

சிறப்புமிக்க புகழினை உடைய இறைவனைப் பெறும் பேற்றை நினைந்து வாழ்த்தி வணங்குதல் இத்துறையாகும்.

ஆட லமர்ந்தா னடியடைந்தா ரென்பெறார்

ஓடரி யுண்க ணுமையொருபாற்-கூடிய

சீர்சா லகலத்தைச் செங்க ணழனாகம்

தாராய்த் தழுவப் பெறும்.

திருக் கூத்தாடுதலை விரும்பியவன் பாதங்களைச் சேர்ந்தார் என்பெறார் ? பார்வதி ஒரு பக்கத்தே பொருந்திய விழுப்பம் அமைந்த திருமார்பத்தைச் சிவந்த கண்ணினையுடைத்தாய் அழலும் பாம்பு மாலையாய்ப் பொருந்தப்பெறும் என்பதாம்.

### 9.1.45 கைக்கிளை

தண்டாக் காதல் தளரிய தலைவன்

வண்டார் விரும்பிய வகையுரைத் தன்று

மாறாத அன்பினையும் நுடங்குந்தன்மையினையும் உடையவள், தலைவனுடைய மாலையை விரும்பிய தன்மையைச் சொல்லியது இத்துறையாகும்.

மங்குன் மனங்கவர மான்மாலை நின்றேற்குப்

பொங்கு மருவிப் புனனாடன் - கங்குல்

வருவான்கொல் வந்தென் வனமுலைமேல் வைகித்

தருவான்கொன் மார்பணிந்த தார்.

சிறுதுவலை பெய்யும் கார் காலத்தே என் நெஞ்சை மயக்கச் செய்யும் மாலைப்பொழுதிலே தனியே நின்றேன். வருத்தமிகுதியால் நின்றேனுக்கு நீரால் சிறந்த நாடனாகிய சோழன் இரவுப்பொழுதிடத்து

வருவான்கொல் ? வந்து என்னுடைய அழகிய கொங்கை மேலே தங்கித் தருவான்கொல், மார்பினணிந்த மாலையை? என வருந்தி உரைத்ததாம்.



குறிப்பு

## 9.1.46 பெருந்திணை

பெய்கழற் பெருந்தகை பேணா முயக்குஇவர்ந்து

மல்குஇருள் செல்வோள் வகைஉரைத்தன்று

தன்னை விரும்பாத தலைவனை ஒருத்தி தழுவ விரும்புவது பெருந்திணை எனப்படும்.

வயங்குளைமான் றென்னன் வரையகலந் தோய

இயங்கா விருளிடைச் செல்வேன் -மயங்காமை

ஓடரிக் கண்ணா யுறைகழிவாண் மின்னிற்றால்

மாட மறுகின் மழை.

செவ்வரி கருவரி பரந்த கண்ணினையுடைய தோழியே!தலையாட்டத்தால் அழகுபெற்ற குதிரையினையுடையவன் பாண்டியன். அவனது வரைபோன்ற மார்பைத் தழுவ ஒருவரும் நடக்காத இருள் நிறைந்த பாதையில் போவேன். அப்போது உறையிலிருந்து நீங்கிய வாள்போல மின்னி மேகம் எனக்கு வழிகாட்டிற்று.

## 9.1.47 புலவிபொருளாகத்தோன்றிய பாடாண்பாட்டு

வில்லேர் நுதலி விறலோன் மார்பம்

புல்லேம் யாம்எனப் புலந்துரைத் தன்று.

வில்போன்ற நெற்றியினையுடையாள் வீரன் தன் அகலத் திடத்தைத்தழுவேம் யாம் என்று ஊடிச் சொல்லியது இத்துறையாகும்.

மலைபடு சாந்த மலர்மார்ப யாநின்

பலர்படி செல்வம் படியேம் - புலர்விடியல்

வண்டினங்கூட் டுண்ணும் வயல்சூழ் திருநகரிற்

கண்டனங் காண்டற் கினிது.

முலையகத்து சந்தனத்தையுடைய அகன்ற மார்பனே, நாங்கள் உன்னுடைய பரத்தையர் பலரும் தோயும் செல்வத்தைத் தோயேம்; பொழுதுபுலரும் விடியற்காலத்தே சுரும்பினங்கள் புணர்ந்து நுகரும்

பழனஞ் சூழ்ந்த செல்வப்பதியிலேகண்டோம்; காணுதற்கு இனிதாயிருந்தது என்பதாம்.



## 9.1.48 கடவுண் மாட்டுக் கடவுட்பெண்டிர் நயந்தபக்கம்

இமையா நாட்டத்து இலங்கிழை மகளிர்

அமையாக் காதல் அமரரை மகிழ்ந்தன்று.

**குறிப்பு**

இமைக்காத கண்ணினையும் ஒளிவிடும் ஆபரணத்தினையு உடைய தெய்வமகளிர் ஆராத அன்புடைய கடவுளரை விரும்பியது இத்துறையாகும்.

நல்கெனி னாமிசையா ணோமென்னுஞ் சேவடிமேல்

ஒல்கெனி னுச்சியா ணோமென்னும்-மல்கிருள்

ஆட லமர்ந்தாற் கரிதா லுமையாளை

ஊட லுணர்த்துவதோ ராறு.

நாவினால் அருள்செய்க எனச் சொன்னால் உம்முடைய நாவின்மேலிருக்கும் நாமகள் துன்புறுவாள் என்று சொல்லும்; பாதத்திலே வணங்குவேனென்று சொல்லின், நும்முடைய திருமுடிமேலிருக்கும் கங்காதேவி துன்புறுவாள் என்று சொல்லும்; மிக்க இருளிடத்துக் திருக்கூத்தை விரும்பிய இறைவனுக்கு அருமையுடைத்தாயிருந்தது, உமாதேவியை வழக்காட்டினைத் தீர்ப்பதொரு நெறி என்பதாம்.

## 9.1.49 கடவுண்மாட்டு மானிடப்பெண்டிர் நயந்தபக்கம்

முக்கணான் முயக்கம்வேட்ட

மக்கள்பெண்டிர் மலிவுஉரைத்தன்று.

மூன்று திருக்கண்களை உடையானுடன் புல்லுதலை விரும்பிய மானிடமகளிர் நிலையினைச் சொல்லியது இத்துறையாகும்.

அரிகொண்ட கண்சிவப்ப வல்லினென் னாகம்

புரிகொண்ட நூல்வடுவாப் புல்லி - வரிவண்டு

பண்ணலங்கூட்டுண்ணும் பனிமலர்ப் பாசூரென்

உண்ணலங் கூட்டுண்டா னூர்.

உறங்குகின்ற நள்ளிரவில் கனவில் வந்தான் தலைவன்.என்னுடைய மார்பில் முறுக்கிய பூணூலின் தழும்புபடும் படியாகத் தழுவினான். என்னுடைய கண்கள் மேலும் சிவக்கும் வண்ணம் நெஞ்சத்து அழகை

உண்டு மகிழ்ந்தான்.அவன் ஓர் இறைவன்.அவனுடைய ஊரானது வண்டுகள் பண்ணினைப் பாடிக்கொண்டிருக்கும் குளிர்ந்த பூவினை நுகரும் திருப்பாசூர் என்பதாகும்.



குறிப்பு

## 9.1.50 குழவிக்கண் தோன்றிய காமப்பகுதி

இளமைந்தர் நலம்வேட்ட

வளமங்கையர் வகையுரைத்தன்று

சிறுவனாகிய ஆண்மகனை விரும்பின காமப்பகுதி நிறைந்த மங்கையரது தன்மையச் சொல்லியது இத்துறையாகும்.

வரிப்பந்து கொண்டொளித்தாய் வாள்வேந்தன் மைந்தா

அரிக்கண்ணி யஞ்சி யலற -எரிக்கதிர்வேற்

செங்கோல னுங்கோச் சினக்களிற்றின் மேல்வரினும்

எங்கோலந் தீண்ட லினி.

வாள் வேந்தன் மைந்தனே,இவள் ஆடிய பந்தினை எடுத்துக்கொண்டு ஓடி மறைந்தாய். ஆதலால் இவள் அஞ்சி அழுதாள்.அப்பந்தினைத் திரும்பத் தருவதற்காக நெருப்புப் போன்று ஒளிரும் வேலினையும் செங்கோலினையும் ஏந்திய அரசனாகிய உன் தந்தையும் உடன் வந்தார். அவ் அரசன் மிகுந்த வெகுளியை உடைய யானைமேல் வந்து தோன்றிடினும் அதனால் எமக்குக் கவலை இல்லை. இனி எம்முடைய அணிகலன் அணிந்த மேனியைத் தீண்டாதே!

## 9.1.51 ஊரின்கண் தோன்றிய காமப்பகுதி

நீங்காக் காதன் மைந்தரும் மகளிரும்

பாங்குறக் கூடும் பதியுரைத் தன்று.

ஒழியாத அன்பினையுடைய ஆடவரும் மகளிரும் அழகு பொருந்தக் கூடும் ஊரைச் சிறப்பித்துச் சொல்லியது இத்துறையாகும்.

ஊடிய வூட லகல வுளநெகிழ்ந்து

வாடிய மென்றோள் வளையொலிப்பக் -கூடியபின்

யாமநீ டாகென்ன யாழ்மொழியார் கைதொழூஉம்

ஏம்நீர்க் கச்சியெம் மூர்.

யாழ் போலும் இனிய மொழியினை உடையவர்கள் மகளிர், அவர்கள் தம் கணவரோடு கொண்ட ஊடலினை அவர்களின் பணிந்த மொழியால்

அகற்றினர். பின் பிரிவுத் துன்பத்தால் மெலிந்த தம் தோள்கள் மகிழும் வண்ணம் கூடினர்.அதனால் இரவுப்பொழுது மிகவும் நீள வேண்டும் என்று கைகூப்பித் தொழுதனர். அத்தகைய சிறப்புப் பொருந்தியது காஞ்சி மாநகரம்.அது காவல் உடையதாயும் நீர்வளத்தால் சிறந்ததாயும் அமைந்தது.

## பயிற்சி வினாக்கள்:

**1.துயிலெடைநிலை விளக்குக.**

அடுதிறன் மன்னரை அருளிய எழுகெனத்

தொடுகழல் மன்னனைத் துயில்எடுப் பின்று.

கொல்லும் வலியினையுடைய பகை வேந்தர்க்கு அருளல் வேண்டும் என மறவர் வீரக்கழல் அணிந்த மன்னனை துயிலிலிருந்து எழுப்புதல் இத்துறையாகும்.

அளந்த திறையா ரகலிடத்து மன்னர்

வளந்தரும் வேலோய் வணங்கக் - களந்தயங்கப்

பூமலர்மேற் புள்ளொலிக்கும் பொய்கைசூழ் தாமரைத்

தூமலர்க்க ணேற்க துயில்.

வேற்படையினை உடைய வேந்தனே! பகையரசர் பலரும் திறைப்பொருளினைக் கொண்டு வந்து நின்னைக் கண்டு வணங்க நின்றுள்ளனர். எனவே பொய்கையில் மலரும் தாமரை மலரினை ஒத்த நின் கண்னகள் உறக்கத்தினின்று எழுவனவாக! என எழுப்புதல் இத்துறையாகும்.

**2.நாண்மங்கலம் என்பதனை விவரி**

அறந்தரு செங்கோல் அருள்வெய்யோன்

பிறந்தநாள் சிறப்புரைத் தன்று.

செங்கோலினையும் அருளினையும் விரும்பிய மன்னன் பிறந்தநாள் நன்மை பயப்பதாகும்.அந்நாளைச் சிறப்பித்துக் கூறுவது நாண்மங்கலம் எனப்படும்.

கரும்பகடுஞ் செம்பொன்னும் வெள்ளணிநாட் பெற்றார்

விரும்பி மகிழ்தல் வியப்போ - சுரும்பிமிர்தார்.

வெம்முரண் வேந்தரும் வெள்வளையார் தோள்விழைந்து

தம்மதி றாந்திறப்பர் தாள்.

அரசன்தன் பிறந்தநாளில் யானைகளையும் பொன்னையும் பரிசாகக் கொடுத்தான்.அதனைப் பெற்றவர்கள் பெரிதும் விருப்பமுற்றனர். அந்நன்னாளில் மாறுபாட்டினை உடைய மன்னர்கள் தம் அச்சத்தினை விட்டனர்,வளையல் அணிந்த உரிமை மகளிர் தோளைத் தழுவவிரும்பினர்.எனவே தாம் அடைத்து வைத்திருந்த அரண்களின் கதவுகளுக்குரிய தாழ்ப்பாளை நீக்கினர்.

**3. வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ குறித்து விவரி**

வாயுறை வாழ்த்து:

பின்பயக்கும் எம்சொல்லென

முன்படர்ந்த மொழிமிகுத்தன்று.

பின்னால் நன்மை பயக்கும் எங்கள் வார்த்தையைப் பின்பற்றி நிற்க வேண்டுமென சான்றோர் உரைப்பர். இத்தகைய மேம்பாட்டினை எடுத்துரைப்பது வாயுறை வாழ்த்து என்பதாகும்.

எஞ்சொ லெதிர்கொண் டிகழான் வழிநிற்பிற்

குஞ்சர வெல்படையான் கொள்ளானோ-எஞ்சும்

இகலிட னின்றி யெறிமுந்நீர் சூழ்ந்த

அகலிட மங்கை யகத்து.

வெல்லும் தன்மை கொண்ட யானைப்படையினைக் கொண்ட அரசனே! நான் கூறுகின்ற மொழிகளை இகழாமல் கேட்பாயாக! அச்சொற்களை ஏற்று நன்னெறியின்கண் நிற்பாயாக! நிற்பாயாகில் உன்னுடன் முரண்பட்டோருக்கு நிலம் இல்லாமல் போகும். கடலால் சூழப்பட்ட இவ் உலகம் முழுவதும் உன்னுடையதாகிவிடும்.

செவியறிவுறூஉ:

மறம்திரிவு இல்லா மன்பெரும் சூழ்ச்சி

அறம்தெரி கோலாற்கு அறிய உரைத்தன்று.

அறத்தினை துணையாகக் கொண்டு ஆட்சிபுரியும் அரசனுக்கு சான்றோர் மறமும் பிறழ்ச்சியும் இல்லாத நல்லுரைகளைக் கூறுவது செவியறிவுறூஉ எனப்படும்.

அந்தணர் சான்றோ ரருந்தவத்தார் தம்முன்னோர்

தந்தைதா யென்றிவர்க்குத் தார்வேந்தே - முந்தை

வழிநின்று பின்னை வயங்குநீர் வேலி
மொழிநின்று கேட்டன் முறை.

மலர்மாலை அணிந்த மன்னனே! கடலால் சூழப்பட்ட இவ் உலகில் அந்தணர், சான்றோர், அரிய தவத்தினை மேற்கொண்டோர், தம்முடைய முன்னோர், தந்தை, தாய், என்று முற்கூறப்பட்ட முன்னோர் சென்ற நெறியைப் பின்பற்றி நிற்பாயாக! பின்னர் இவ்வுலகத்து முன்னோர் மொழிகளைக் கேட்டு நடத்தலை வழக்கமாகக் கொள்வாயாக!

**4.கந்தழி - விளக்குக.**

சூழநேமியான் சோஎறிந்த
வீழாச்சீர் விறல்மிகுத்தன்று.

வளைந்த ஆழிப்படையினை உடைய திருமால் சோவென்னும் அரணினை அழித்த கெடாத தன்மையினையுடைய வெற்றியைச் சிறப்பித்தது.

மாயவன் மாய மதுவான் மணிநிரையுள்
ஆயனா வெண்ண லவனருளான் -காயக்
கழலவிழக் கண்கனலக் கைவளையார் சோரச்
சுழலழலுள் வைகின்று சோ.

திருமால் கருணையை உகுத்து வெகுண்டெழுந்தான். அந்தப் பொழுதே வளையல் அணிந்த கைகளை உடைய அரக்க மகளிர் அஞ்சினர்.வீரசோ என்னும் அரணானது நெருப்பினுள் மூழ்கிற்று. அத்தகைய ஆற்றல் பொருந்திய மாயவனை பசுக்கூட்டங்களை மேய்க்கும் இடையன் எனக் கருதுதல் பொருந்தாது என்பதாம்.

5. பாடாண்படலத்தின் துறைகளைக் கட்டுரைக்க.

பாடாண்படலம் என்னும் பாடப்பகுதியில் அமைந்துள்ள செய்திகளைத் தொகுத்து கட்டுரை வடிவில் எழுதல் வேண்டும்.

## கூறு: 10 - பொதுவியற் படலம்:

### நோக்கம்: பொதுவியல்திணையின் இலக்கணம், அவற்றின் பிரிவுகள் போன்றவற்றை மாணவர்களுக்குக் கற்பித்தல்

வெட்சி படலம் முதலாகப் பாடாண் படலம் ஈறாக அமைந்த படலங்களுள் பொதுவாக அமைந்த துறைகளை விளக்குவதால் இது

பொதுவியல் என்னும் பெயர் பெறலாயிற்று.அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாய் அமைந்தமையால் இதனைப் பொதுவியல் எனக் குறிப்பாரும் உண்டு. இவ் இயலை ஐயனாரிதனார் நான்காகப் பகுத்துக் கொண்டு விளக்குவார்.அவை முறையே பொதுவியற்பால, சிறப்பில் பொதுவியற்பால, காஞ்சிப் பொதுவியற்பால, முல்லைப் பொதுவியற்பால என்பதாகும்.

## பொதுவியல் திணையின் துறைகள்:

## 10.1 பொதுவியற்பால:

சீர்சால் போந்தை வேம்போடு, ஆரே

உன்ன நிலையே ஏழக நிலையே

கழல்நிலை ஏனைக் கற்காண் டல்லே

கல்கோல் நிலையே கல்நீர்ப் படுத்தல்

கல்நடு தல்லே கன்முறை பழிச்சல்

இற்கொண்டு புகுதல் எனப்பன் னிரண்டும்

பொதுவியற் பால என்மனார் புலவர்

போந்தைமுதல் இற்கொண்டு புகுதல் இறுதியாகிய பன்னிரண்டும் பொதுவியல் திணை எனப்படும்.

### 10.1.1போந்தை:

கலவா மன்னர் கண்ணுறு ஞாட்பின்

புலவேல் வானவன் பூப்புகழந் தன்று.

பகைவேந்தர் வேந்தர் போர் செய்யும் போர்க்களத்தில் புலால் நாறும் வேலினையுடைய சேரன் சூடும் போந்தைப்பூவைப் புகழ்ந்தது.

குடையலர் காந்தட்டன் கொல்லிச் சுனைவாய்த்

தொடையவிழ் தண்குவளை சூடான் - புடைதிகழும்

தேரதிரப் பொங்குந் திருந்துவேல் வானவன்

போரெதிற் போந்தையாம் பூ.

பகைவர் படை அஞ்சும்படியான வேலினை ஏந்தியவன் சேர மன்னன். அவனுக்கு குடை போல் மலரும் செங்காந்தள் பூக்களை உடைய கொல்லிமலை உரியதாகும்.அதன் சுனையில் குளிர்ந்த குவளைமலர்கள்

காணப்படும். சேரன் அதனை விரும்பாது தன்னை எதிர்த்துப் போர் செய்யக் கருதிய அரசருடன் போர் செய்வதற்காகப் பனம்பூவினைச் சூடினான்.

## 10.1.2 வேம்பு

விரும்பார் அமரிடை வெல்போர் வழுதி

சுரும்பார் முடிமிசைப் பூப்புகழ்ந் தன்று.

பகைவர் போர்க்களத்தில் வெல்லும் போரையுடைய பாண்டியன் மகுடத்தின்மீது புனையும் வண்டுநிறைந்த வேப்பம் பூவினைப் புகழ்ந்தது.

தொடியணிதோ ளாடவர் தும்பை புனையக்

கொடியணிதேர் கூட்டணங்கும் போழ்தின் - முடியணியும்

காத்தல்சால் செங்கோற் கடுமா னெடுவழுதி

ஏத்தல்சால் வேம்பி னிணர்.

காவல் தொழிலில் சிறப்பு பெற்ற செங்கோலினையும் விரைந்து செல்லும் குதிரையினையும் நீண்ட புகழினையும் உடையவன் பாண்டிய மன்னன்.அவன் தனது தேர்ப்படையின் மூலம் பகைவரை வருந்தச் செய்வான்.அத்தகைய போரில் அவனுடைய படை வீரர்கள் தும்பைப் பூவினைச் சூடினர்.ஆனால் பாண்டிய மன்னனோ போற்றுதலுக்குரிய வேப்பம்பூவினைச் சூடினான் என்பதாய் பாண்டியனின் அடையாளப்பூவாகிய வேப்பம்பூவினைப் புகழ்ந்தது.

## 10.1.3 ஆர்

விறற்படை மறவர் வெஞ்சமம் காணின்

மறப்போர்ச் செம்பியன் மலைப்பூ உரைத்தன்று.

பகைவர் படையைக் காணின் எதிர்த்துப் போர் செய்வதில் வல்லவன் சோழன். அவன் அணிந்திருக்கும் அத்திப்பூவின் சிறப்புகளைச் சொல்வது இத்துறையாகும்.

கொல்களி றூர்வர் கொலிமலை வாண்மறவர்

வெல்கழல் வீக்குவர் வேலிளையர்- மல்கும்

கலங்க வொலிபுன்ற் காவிரி நாடன்

அலங்க லமரழுவத் தார்.

கொலைத்தொழிலின் மிக்க வாள்வீரர் கொல்லும் யானையைச் செலுத்துவர். வெல்லும் வீரக்கழலினைக் கட்டிய வேலினையுடையவராய் மறவர் நிற்பர்.அத்தகைய போர்க்களத்தில் காவிரியின் தலைவனாகிய சோழ மன்னன் அத்தி மாலையைச் சூடியவனாய் நிற்பான்.

## 10.1.4 உன்னநிலை

துன்னரும் சிறப்பில் தொடுகழன் மன்னனை

உன்னம் சேர்த்தி உறுபுகழ் மலிந்தன்று.

கிட்டுதற்கரிய நன்மையினையும் கட்டுங்கழலினையுமுடைய வேந்தனை நிமித்தம் பார்க்கும் மரத்தொடு கூட்டி மிகுபுகழைச் சொல்லியது.

துன்னருந் தானைத் தொடுகழலான் றுப்பெதிர்ந்து

முன்னர் வணங்கார் முரண்முருங்க-மன்னரும்

ஈடெலாந் தாங்கி யிகலவிந்தார் நீயுநின்

கோடெலா முன்னங் குழை.

உன்ன மரமே! கிடைத்தற்கரிய அரும்பெரும் படையினையும் காலில் வீரக்கழலினையும் அணிந்தவர் நம் மன்னர். அவரிடம் எதிர்த்து நின்ற பகைவர் அனைவரும் அழிந்தனர், எனவே என்னுடைய கிளைகள் எல்லாம் அழகு மிக்கதாய் தளிர்க்கச் செய்வாயாக!

## 10.1.5 ஏழகநிலை

ஏழகம் ஊரினும் இன்னன் என்றவன்

தாழ்வில் ஊக்கமொடு தகைபுகழ்ந் தன்று.

அரசன் ஒருவன் ஆட்டுக்கிடாயின் மேலேறி விளையாடும் தன்மை கொண்டவனாய் இருப்பினும் அரசாட்சியியல் மேம்பட்டு விளங்கும் மனவெழுச்சி உடையவனகாய் இருப்பதனைப் புகழ்ந்து பாடுவது ஏழகநிலை எனப்படும்.

எம்மனை யாமகிழ வேழக மேற்கொளினும்

தம்மதி றாழ்வீழ்த் திருக்குமே - தெம்முனையுள்

மானொடு தோன்றி மறலுங்கா லேழகத்

தானொடு நேரா மரசு .

எம் அரசன் எம் இல்லத்தின்முன் நிற்கும் ஆட்டுக்கடாயின் மேலேறி விளையாடும் பருவத்தினை ஒத்தவன் ஆவான். எனினும் பகைவருக்கு

அஞ்சி தன் மதிலின் வாயிலைத் தாழிட்டுக் கொண்டு இருக்கமாட்டான்.பகைவர்கள் போர் செய்யம் இடத்தில் குதிரைமேல் வந்து போர் செய்வர், அத்தகைய இடத்திலும் தன் ஆட்:டுக்கடாயின் மேல் சென்று போர் செய்வான் எம் மன்னன் என்பதாம்.

## 10.1.6 இதுவுமது

**குறிப்பு**

ஏந்துபுகழ் உலகின் இளமை நோக்கான்

வேந்து நிற்றலும் ஏழக நிலையே

புகழுடைய இவ் உலகத்தின்கண் இளமைத்தனமை உடையவனாய் இருக்கும் ஓர் அரசன் தன் நாட்டினைக் காவல் செய்வதில் சிறந்து நின்றான் என்று குறிப்பிடுவது இத்துறையாகும்.

வேண்டார் பெரியர் விறல்வேலோன் றானிளையன்

பூண்டான் பொழில்காவ லென்றுரையாம் - ஈண்டு

மருளன்மின் கோள்கருது மால்வரை யாளிக்

குருளையுங் கொல்களிற்றின் கோடு .

நும்முடைய அரசனை எதிர்த்து நிற்கும் பகைவர்களோ வயதில் பெரியவர்கள். நம்முடைய அரசனோ சிறியவன். அதனால் யாரும் குறைத்து மதிப்பிடவேண்டாம்.பெரிய மலையிடத்து வாழ்வது யாளி.அதனது குட்டியானது கொலைத்தொழிலில் வல்லமை உடைய யானையது கோட்டைக் கவர நினைக்கும் அதனால் வயதில் இளையவனின் ஆட்சி என்று யாரும் மயக்கம் கொள்ளவேண்டாம்.

## 10.1.7 கழனிலை

அடுமுரண் அகற்றும் ஆள்உகும் ஞாட்பில்

கடுமுரண் வயவன் கழல்புனைந் தன்று.

போர் மறவருக்கு வீர மரணத்தைத்தரும் போர்க்களத்தில் மாறுபட்டு நின்ற வீரன் ஒருவன் காலில் அணிந்திருக்கும் கழலின் பெருமையைச் சொல்வது கழல்நிலை எனப்படு:ம்.

வாளமரின் முன்விலக்கி வான்படர்வார் யார்கொலோ

கேளலார் நீக்கிய கிண்கிணிக்காற் - காளை

கலங்கழல் வாயிற் கடுத்தீற்றி யற்றால்

பொலங்கழல் கான்மேற் புனைவு .

கிண்கிணியைத் தன் காலில் அணிந்தவன் நம் அரசன்.அவன் தன்னுடன் மாறுபட்டு நின்ற பகைவரைப் போர்க்களத்தில் போக்கியவன். அத்தகையவன் தன் காலில் அணிந்திருந்த கிண்கிணியைக் கழட்டி விட்டு பொன்னால் ஆகிய வீரக்கழலினைக் கட்டினான்.இத்தகைய செயலானது கலக்கத்திற்குக் காரணமாகிய நெருப்பின் வாயில் நஞ்சைத் தடவியது போல இருந்தது. எனவே அவனுடைய வாட்போரினைத் தடுத்து வானகம் செல்லப்போவது யார்?

## 10.1.8 கற்காண்டல்

ஆனா வென்றி அமரில்வீழ்ந் தோற்குக்

கான நீளிடைக் கற்கண் டன்று .

போர்க்களத்தில் விழுப்புண் பட்டு இறந்த மறவன் ஒருவனுக்கு நடுகல் நாட்டல் பொருட்டு காட்டின் இடையே நல்ல கல்லினை ஆராய்ந்து எடுப்பது கற்காண்டல் எனப்படும்.

மிகையணங்கு மெய்ந்நிறீஇ மீளி மறவர்

புகையணங்கப் பூமாரி சிந்திப் - பகையணங்கும்

வீளைக் கடுங்கணையால் வேறாகி விண்படர்ந்த

காளைக்குக் கண்டமைத்தார் கல்.

போர்க்களத்தில் அம்புபட்டு வீரன் ஒருவன் வானுலகம் சென்றான். எனவே தலைமைத்தன்மை கொண்ட மறவர் தெய்வத்தை அவன் உடம்பில் நிறுத்தினர்.நறிய புகையினை எழச்செய்தனர்,மலர்களை மழைபோலப் பெய்து வீரமரணம் அடைந்த மறவனை நிறுத்துதற்கு உரிய நல்லகல் இதுவென்று ஒரு கல்லைத் தேர்ந்தெடுத்தனர்.

## 10.1.9 கற்கோணிலை

மண்மருளத் துடிகறங்க

விண்மேயாற்குக் கல்கொண்டன்று.

போர்க்களத்தில் விழுப்புண் பட்டு இறந்த மறவன் ஒருவனுக்கு நடுகல் நாட்டல் பொருட்டு காட்டின் இடையே நல்ல கல்லினை ஆராய்ந்து எடுத்துக் கொண்டு வருவது கற்கோள்நிலை எனப்படும்.

பூவொடு நீர்தூவிப் பொங்க 2விரைபுகைத்து

நாவுடை நன்மணி நன்கியம்ப - மேவார்

அழன்மறங் காற்றி யவிந்தாற்கென் றேத்திக்

கழன்மறவர் கைக்கொண்டார் கல் .

போர்க்களத்தில் பகைவருடன் போரிட்டு வீழ்ந்தான் மறவன். அதனைக் கண்ட மறவர்கள் அவனுக்கான கல் ஒன்றினைத் தேர்ந்தெடுத்தனர், அக்கல்லினை மலரிட்டு நீரைச்சேர்த்து வணங்கினர்,அகில் போன்ற நறுமணப்புகையினை எழுப்பினர்.நாவினால் நல்ல மணியினை எழுப்பினர்.அக்கல்லினை வாழ்த்திப் பின் எடுத்து வந்தனர்.

## 10.1.10 கல் நீர்ப்படுத்தல்

வண்டுசூழ் தாமம் புடையே அலம்வரக்

கண்டு கொண்ட கல்நீர்ப் படுத்தன்று.

போர்க்களத்தில் இறந்த மறவனுக்காய் எடுத்து வந்த கல்லினை நீரினுள் கிடத்தல் கல் நீர்ப்படுத்தல் எனப்படும்.

காடு கனலக் கனலோன் சினஞ்சொரியக்

கூடிய வெம்மை குளிர்கொள்ளப் - பாடி

நயத்தக மண்ணி நறுவிரைகொண் டாட்டிக்

கயத்தகத் துய்த்திட்டார் கல் .

வீரனுக்காய் எடுக்கப்பெற்ற கல் காட்டினுள் இருந்து எடுக்கப்பட்டதாகும். எனவே அக்கல் வெப்பம்பட்டு வெம்மை உடையதாய் அமைந்திருந்தது.எனவே அதன் மேல் உள்ள வெப்பத்தினை நீக்கும் பொருட்டு நீரால் நீராட்டி தூய்மை செய்தபின் அதனைக் குளத்தில் இட்டு வைத்தனர்,

## 10.1.11 இதுவுமது

ஓங்கியகல் உய்த்துஒழுக்கல்

ஆங்கு எண்ணினும் அத்துறையாகும்.

இதுவும் மேற்கண்ட துறைக்குறிப்பினைச் சார்ந்ததே ஆகும்.

கணனார்ந் துவப்பக் கடுங்கண் மறவர்

பிணனார்ந்து பேய்வழங்கு ஞாட்பின் - நிணனார்

விழுக்கினால் வேய்ந்த விறல்வேலோர் கல்லை

ஒழுக்கினா ரொன்றொருவர் முன் .

பேய்கள் பிணத்தினைத் தின்று திரிவதற்கு இடமாய் அமைவது போர்க்களம் ஆகும். அதில் மறவர் பலர் பகைவரின் கொழுப்பு என்னும் நிணத்தினால் சூழப்பெற்ற மார்புடன் கிடந்தனர்,வெற்றியை ஏந்திய அம்மறவர்களின் பெயர்கள் கல்லில் எழுதப்பெற்றன.மறவர் கூட்டம் அதனைப் பார்த்து மகிழ்ந்தது.அக்கற்களை நடுவித்தலைச் செய்யும் தலைவர் முன்பாக ஒவ்வொன்றாக நட்டனர்.



## 10.1.12 கல் நடுதல்:

அவன்பெயர்க்கல் மிசைப்பொறித்துக்

கவின்பெறக் கல்நாட்டின்று.

போர்க்களத்தில் வீரமரணம் அடைந்த மறவனின் பெயரினைக் கல்லில் எழுதி நடுதல் கல் நடுதல் எனப்படும்.

மாலை துயல மணியெறிந்து மட்டுகுத்துப்

பீலி யணிந்து பெயர்பொறித்து - வேலமருள்

ஆண்டக நின்ற வமர்வெய்யோற் காகென்று

காண்டக நாட்டினார் கல் .

போர்க்களத்தில் வீரமரணம் அடைந்தான் மறவன் ஒருவன். அவனுக்குக் கல் எடுப்பிக்க நினைத்தனர்,கல்லினை நட்டு இது அவன் உருவம் ஆகுக! என வாழ்த்தினர்,அக்கல்லிற்கு மாலை அணிவித்தனர்.மணியை ஒலிக்கச் செய்தனர்,கள்ளினைத் தெளித்த மயிற்தோகையினைச் சூட்டினர்,அம்மறவனின் பெயரினையும் புகழினையும் கல்லில் எழுதி பலரும் காணும்படி வைத்தனர்.

## 10.1.13 கல்முறை பழிச்சல்

நிழல் அவிர் எழில்மணிப்பூண்

கழல்வெய்யோன் கல்வாழ்த்தின்று.

போர்க்களம் சென்று போரில் வீரமரணம் அடைந்த வீரனுக்கு நடுகல் எடுத்து வாழ்த்தல் கல்முறைப்பழிச்சல் எனப்படும்.

அடும்புகழ் பாடி யழுதழுது நோனா

திடும்பையுள் வைகி யிருந்த - கடும்பொடு

கைவண் குருசில் கற் கைதொழூஉச் செல்பாண

தெய்வமாய் நின்றான் றிசைக்கு

**குறிப்பு**

பாணனே! வாரிவழங்கும் வள்ளல் தன்மையில் சிறந்து நின்ற நம் தலைவன் இன்று அனைவருக்கும் தெய்வமாகி நிற்கிறான்.நீயும் அவனுடைய பெயரும் புகழும் எழுதிய கல்லின் முன் நின்று கைகுவித்து வணங்கி அவனுடைய புகழினைப் பாடுவாயாக!

## 10.1.14 இற்கொண்டு புகுதல்

வேத்து அமருள் விளிந்தோன் கல்என

ஏத்தினர் துவன்றி இற்கொண்டு புக்கன்று.

வேந்தர் போரிடத்துப் பட்டவனுடைய கல்லென்று சொல்லி வாழ்த்தி கோயிலுக்கு எடுத்துச் செல்லல் இத்துறையாகும்.

வாட்புகா வூட்டி வடிமணி நின்றியம்பக்

கோட்புலி யன்ன குருசில்கல் - ஆட்கடிந்து

விற்கொண்ட வென்றி விறன்மறவ ரெல்லோரும்

இதற்கொண்டு புக்கா ரியைந்து.

கொல்லும் புலியை ஒத்த மறவன் போர்க்களத்தில் இறந்து பட்டான். மறவர்கள் அவனுக்குக் கல் எடுத்தனர். கல்லாகிய மறவனின் வெற்றி வாளிற்கு உணவூட்டினர்,மணி ஒலிக்க வீரம் மிக்க மறவர்கள் ஒன்று கூடிக் கல்லினை எடுத்துக் கொண்டு கோயிலுக்குள் புகுந்து வாழ்த்தினர்.

## 10.2 சிறப்பிற் பொதுவியற்பால்:

முதுபா லையே சுரநடை யேனைத்

தபுதார நிலையே தாபத நிலையே

தலைப்பெயல் நிலையே பூசல் மயக்கே

மாலை நிலையே மூதா னந்தம்

ஆனந் தம்மே ஆனந்தப் பையுள்

கையறு நிலை உளப் படப்பதி னொன்றும்

மையறு சிறப்பிற் பொதுவியற் பால.

இதுவும் பொதுவியற்பாலவாமாறு உணர்த்துதல் நுதலிற்று. முதுபாலை முதலாகக் கையறுநிலை ஈறாகச் சொல்லப்பட்ட பதினொன்றும் பொதுவியற்பாலவாம்.

## 10.2.1 முதுபாலை

காம்புயர் கடத்திடைக் கணவனை இழந்த

பூங்கொடி மடந்தை புலம்புரைத் தன்று.

மூங்கில் ஓங்கின கானகத்துத் தன் கணவனை இழந்த கொடி போன்ற மடந்தையது தனிமையைச் சொல்லியது இத்துறையாகும்.

நீர்மலி கண்ணொடு நின்றே னிலையிரங்காய்

தார்மலி மார்பன் றகையகலம் - சூர்மகளே

வெள்ளில் விளைவுதிரும் வேயோங்கும் வெஞ்சுரத்துக்

கொள்ளனீ கோடல் கொடிது .

வருத்தும் தொழிலினாய பேய்மகளே! விளவினது பழம் உதிர்ந்து கிடக்கும் தன்மையது காடு.அக்காட்டுள் நீர்வழியும் கண்ணோடு தனித்துத் துயர்படுகின்ற என்நிலைக்கு கருணை காட்டமாட்டாயா!மலர்மாலை அணிந்தவனாய் இறந்து கிடக்கும் என் தலைவனின் மார்பினை எடுத்துக் கொள்வது கொடுமையானது. எனவே அச்செயலினை ஒழிப்பாயாயக! என்கிறாள்.

## 10.2.2 சுரநடை

மூதரில் நிவந்த முதுகழை ஆரிடைக்

காதலி இழந்த கணவன்நிலை உரைத்தன்று.

மூங்கில் ஓங்கின கானகத்துத் தலைவியை இழந்த தலைவன் முறையைச் சொல்லியது இத்துறையாகும்.

உரவெரி வேய்ந்த வுருப்பவிர் கானுள்

வரவெதிரின் வைவேல்வாய் வீழ்வாய் - கரவினால்

பேதையைப் பெண்ணியலைப் பெய்வளையை யென்மார்பிற்

கோதையைக் கொண்டொளித்த கூற்று.

கூற்றமே! என் தலைவி பேதமைத்தன்மை உடையவள், வளையல்களை அணிந்தவள், என் மர்ர்பினை அழகு செய்கின்ற மாலை போன்றவள், அவளை நெருப்புப் போன்ற இக்காட்டில் பற்றிப் படித்து மறைத்துக் கொண்டாய்! அப்படிச் செய்த நீ என்முன் வருவை ஆயின் எனது கூரிய வேலால் குத்துப்பட்டு இறப்பாய்!

குறிப்பு

## 10.2.3 தபுதாரநிலை

புனையிழை இழந்தபின் புலம்பொடு வைகி

மனையகத்து உறையும் மைந்தன்நிலை உரைத்தன்று.

ஆபரணத்தினையுடைய மனைவியை இழந்தபின் தனிமையுடனே தங்கி இல்லத்தில் இருந்த ஆண்மகன் முறைமையைச் சொல்லியது இத்துறையாகும்.

பைந்தொடி மேலுலக மெய்தப் படருழந்த

மைந்தன் குருசின் மழைவள்ளல்-எந்தை

தவுதாரத் தாழ்ந்த தனிநிலைமை கேளாச்

செவிடா யொழிகென் செவி.

பசிய நிறத்தால் அமைந்த வளையலை அணிந்த மனைவியின் வருத்தம் தாழாது தலைவன் பெரிதும் வருந்தினான்.அத்தகைய தலைவன் எனக்குத் தந்தை போன்றவன்.அத்தகையவன் மனைவியை இழந்து தனிமைத்துயரில் வருந்தும் செய்தியைக் கேளாது என் காதுகள் செவிடாகட்டும்.

## 10.2.4 தாபதநிலை

குருந்தலர் கண்ணிக் கொழுநன் மாய்ந்தெனக்

கருந்தடம் கண்ணி கைம்மைகூ றின்று.

குருந்தப்பூ மலரும் மாலையினையுடைய கணவன் இறந்தமையால் கரிய பெரிய கண்ணினை உடைய மனைவி கைம்மை நோன்பினை மேற்கொண்டாள் என்று சொல்லுவது இத்துறையாகும்.

கலந்தவனைக் கூற்றங் கரப்பக் கழியா

தலந்தினையு மவ்வளைத் தோளி-உலந்தவன்

தாரொடு பொங்கி நிலனிசைஇத் தான்மிசையும்

காரடகின் மேல்வைத்தாள் கை.

தன்னுடை கணவனை கூற்றுவன் கொண்டான். அதனைக் கண்ட மனைவி வருந்தினாள். கைம்மை நோன்பினை மேற்கொண்டாள்.தன் கணவனின் மாலையோடு சினந்தாள்.வெறும் நிலத்தில் படுத்து உறங்கினாள்.தனக்கென அமைத்துக் கொண்ட கரிய உணவினை உண்டாள்.

## 10.2.5 தலைப்பெயனிலை

இன்கதிர் முறுவல்பாலகன் என்னும்

தன்கடன் நிறுத்ததாய் தபுநிலை உரைத்தன்று

இனிய ஒளிநகையினையுடைய பிள்ளையினைப் பெற்ற தாய் தன் கடைமையை முடித்து, முன்பு இறந்த கணவனோடு இறந்து கூடினாள் என உரைப்பது இத்துறையாகும்.

இடம்படு ஞாலத் தியல்போ கொடிதே

தடம்பெருங்கட் பாலகனென்னும்-கடன்கழித்து

முள்ளெயிற்றுப் பேதையாள் புக்காள் முரணவியா

வள்ளெயிற்றுக் கூற்றத்தின் வாய்.

முள் போலும் கூரிய பல்லினைக் கொண்டவள் பெண். அவள் தாய்மைக்குரிய கடனாகிய புதல்வனைப் பெற்றெடுத்தாள்.பின் கூற்றுவன் வாயில் சென்று புகுந்தாள்.அதனால் அகன்ற இவ் உலகததின் இயல்பு கொடுமையானதாகும் எனக் குறிப்பது இத்துறையாகும்.

## 10.2.6 பூசன்மயக்கு

பல்லிதழ் மழைக்கணி பாலகன் மாய்ந்தெனப்

புல்லிய பெருங்கிளைப் பூசல்கூ றின்று

பூவையொத்து மழைபோலக் குளிர்ந்த கண்ணினையுடைய பிள்ளை இறந்ததால் பொருந்திய பெரிய சுற்றத்தினது அழுகையைச் சொல்லியது இத்துறையாகும்.

அலர்முலை யஞ்சொ 1லவணொழிய வவ்விற்

குலமுதலைக் கொண்டொளித்த லன்றி- நிலமுறப்

புல்லிய பல்கிளைப் பூசல் பரியுமோ

கொல்லிய வந்தொழியாக் கூற்று.

கூற்றுவன் பெருத்தமார்பினையும் அழகிய சொல்லினையும் உடைய தாயின் உயிரைக் கைக்கொள்ளாமல் குழந்தையின் உயிரைக் கொண்டான்.கூற்றுவன் அத்தகைய செயலைச் செய்யாமல் சுற்றத்தினரின் அழுகைக்கு இரங்கிக் கருணைபுரிவானோ?

## 10.2.7 இதுவுமது

வேந்தன் மாய்ந்தென வியல்இடம் புலம்பினும்

ஆய்ந்த புலவர் அதுவென மொழிப.

குறிப்பு

அரசன் இறந்ததால் அகன்ற பூமியினுள்ளார் இரங்கி அழுதலை ஆராய்ந்த அறிவினையுடையோர் முன்பு சொல்லப்பெறும் துறையும் பூசன்மயக்கு எனப்படும்.

எண்ணி னிகல்புரிந்தோ ரெய்தாத தில்போலும்
கண்ணினொளிர் வேலான் கரந்தபின் -அண்ணல்
புகழொடு பூசன் மயங்கிற்றாற் பொங்கும்
அகழ்கடல் வேலி யகத்து.

கடலினை வேலியாக உடைய நிலவுலகை ஆண்ட அரசன் இறந்தான். அதனைக் கண்ட இவ் உலகின் ஆராவாரம் எல்லாம் இறந்த அரசனின் புகழோடு சேர்ந்து ஒலிக்கின்றது.இதனை ஆராய்ந்து பார்த்தால் போரினை விரும்பும் அரசர் பெறாத புகழ் என்று ஒன்று இல்லை போலும்.

## 10.2.8 மாலைநிலை

கதிர்வேல் கணவனொடு கனைஎரி முழுக
மதியோர் நுதலி மாலைநின் றன்று.

வேலாற்றலில் சிறந்த தலைவன் இறந்தான்.அதனைக் கண்ட மனைவியும் இறக்கக் கருதினள்.பிறையினைப் போன்ற நெற்றியை உடைய அத்தலைவி மாலைப்பொழுதில் நெருப்பினுள் புக நின்றாள் என்று சொல்வது இத்துறையாகும்.

சோலை மயிலன்னா டன்கணவன் சொல்லியசொல்
மாலை நினையா மனங்கடைஇக் - காலைப்
புகையழல் வேலோன் புணர்ப்பாகி நின்றாள்
அகையழ லீமத் தகத்து.

மயிலினைப் போன்ற தலைவி தன் தலைவன் கூறிய வார்த்தைகளை எல்லாம் மாலைப்பொழுதில் நினைத்துப் பார்த்தாள்.அதனால் தன் மனத்தினை இறப்பதற்குத் விரைவு படுத்தினாள். எரிகின்ற நெருப்பினுள் புகுந்த தன் கணவனுக்குத் துணையானாள்.

## 10.2.9 மூதானந்தம்

கயலேர் கண்ணி கணவனொடு முடிய
வியல்நெறிச் செல்வோர் வியந்துஉரைத் தன்று.

குறிப்பு

கயலையொத்த விழியினையுடைய தலைவி தன் கணவன் இறந்துபடத் தானும் உயிர் விட்டாள். அதனைக் கண்ட அகன்ற வழியிடத்துப் போவார் கண்டு அதிசயித்துச் சொல்லியது இத்துறையாகும்.

ஓருயி ராக வுணர்க வுடன்கலந்தார்க்

கீருயி ரென்ப ரிடைதெரியார்-போரில்

விடனேந்தும் வேலோற்கும் வெள்வளையி னாட்கும்

உடனே யுலந்த துயிர்.

நஞ்சு தோய்ந்த வேலினை ஏந்திப் போர் செய்யும்தலைவன் போர்க்களத்தில் இறந்தான். அவன் மனைவியின் உயிரும் உடன் போயிற்று.எனவே இருவருக்கும் ஈருடல் ஓர் உயிர் என்று அறிக. அதனை ஏற்காது இரண்டு பேருக்கும் இரண்டு உயிர் என்று கூறுபவர்கள் நடுவுநிலையை ஆராய்ந்து அறியும் தன்மை அற்றவர்கள் ஆவர்.

## 10.2.10 இதுவுமது

கொடியான் கூர்ங்கணை குளிப்பத் தன்தொழில்

முடியான் அவிதலும் மூதா னந்தம்

போருக்குச் சென்ற வீரனின் மார்பில் பகைவரின் அம்பு பாய்ந்தது.எனினும் அவ்வீரன் தான் செய்யக் கருதிய வினையினை முடித்தே இறந்தான் என்று சொல்வது இத்துறையாகும்.

முந்தத்தான் மாவொடு புக்க முனையமருட்

சிந்தத்தான் வந்தார் செருவிலக்கிக்-குந்தத்தாற்

செல்கணை மாற்றிக் குருசில் சிறைநின்றான்

கொல்கணைவாய் வீழ்தல் கொடிது.

நும் தலைவன் குதிரைமேல் சென்று பகைவரின் படைவீரர்களை வெட்டி வீழ்த்தினான்.தன் குந்தாலிப்படையால் தன்மேல் பாய்ந்த அம்பினை எற்றினான்.பகைவரின் படையாகிய வெள்ளத்தினைக் கரைத்தவன் பகைவரின் அம்பு பட்ட இறந்தது கொடுமையானது.

## 10.2.11 ஆனந்தம்

ஆடமைத் தோளி விரிச்சியும் சொகினமும்

வேறுபட வஞ்சி விதுப்புற்று அன்று.

அசையும் மூங்கில் போன்ற தோளினையுடைவள் நற் சொல்லும் நிமித்தமும்மாறுபட்டுத் தோன்றியதை எண்ணிப் பயப்பட்டு நடுக்கமுற்றது இத்துறையாகும்.

வேந்தார்ப்ப வெஞ்சமத்து வேலமுவந் தாங்கினான்

சாந்தா ரகலத்துத் தாழ்வடுப்புண்-தாந்தணியா

மன்னா சொகின மயங்கின வாய்ப்புளும்

என்னாங்கொல் பேதை யினி.

போர்க்களத்தில் பகைவரின் வேற்கூட்டத்தனைத் துடைத்த படைத்தலைவனின் மார்பிடத்தே உள்ள விழுப்புண்கள் இன்னும் ஆறாத தன்மையை உடையதாய் உள்ளது,இப்போது ஏற்படும் நிமித்தமும் பொருந்தவில்லை. நற்சொல்லும் மயக்கம் தருவதாய் அமைந்துள்ளது. இனித் தலைவியின் நிலை என்னாகுமோ?

## 10.2.12 இதுவுமது

தவப்பெரிய வெஞ்சமங்குறுகும்

அவற்ககு இரங்கினும் அத்துறையாகும்.

போர்த்தொழிலை மேற்கொண்ட தலைவன் இறந்துபடுவானோ எனக் காதலி வருந்துவதும் இத்துறையாகும்.

இன்னா சொகின மிசையா விரிச்சியும்

அன்னா வலம்வருமென் னாருயிரும்-என்னாங்கொல்

தொக்கார் மறமன்னர் தோலாத் துடிகறங்கப்

புக்கான் விடலையும் போர்க்கு.

தாயே!மாறுபாடு கொண்ட பகைவர்கள் போர் கொண்டு வந்தனர்,நம் தலைவனும் துடி முழங்க போருக்குச் சென்றான்.நிமித்தம்நன்மை தருவதாக அமையவில்லை.நற்சொல்லும் ஏற்றதாய் அமையவில்லை.என் உயிரும் சுழல்கின்றது.எதிர்காலம்தான் என்னாகுமொ!

## 10.2.13 ஆனந்தப்பையுள்

விழுமம் கூர வேய்த்தோள் அரிவை

கொழுநன் வீயக் குழைந்துஉயங் கின்று.

துன்பம் மிக மூங்கில்போன்ற தோளினையுடை மனைவி கணவன் இறப்ப மெலிந்து வருந்தியது.

புகழொழிய வையகத்துப் பூங்கழற் காளை
திகழொளிய மாவிசும்பு சேர - இகழ்வார்முன்
கண்டே கழிகாத லில்லையாற் கைசோர்ந்தும்
உண்டே யளித்தெ னுயிர்.

வீரம் செறிந்த தலைவனின் உயிரானது தன் புகழ் நிறுவி வானுலகம் சென்றது. அவனுடன் உயிர் துறக்காத என்னைப் பிறர் இகழ்கின்றனர்.அதனைக் கண்ட அவன் பிரிவாலே துயருற்று நிற்கின்றேன்.கணவன் இறந்தபோதே இறந்துபடாத அன்பு என்னிடம் இல்லை.ஆதலால் என் உடலில் நிலைத்திருக்கும் உயிர் மிகவும் வருந்தற்குரியதாம்.

## 10.2.14 கையறுநிலை

செய்கழல் மன்னன் மாய்ந்தெனச் சேர்ந்தோர்
கையற உரைத்துக் கைசோர்ந் தன்று.

போரினைப் பெரிதும் விரும்பும் தலைவன் போர்க்களத்தில் உயிர்கொடுத்துப் புகழ் கொண்டான். அவனால் பாதுகாக்கப்பட்ட உலகத்து உயிர்கள் எல்லாம் அவன் புகழைச் சொல்லி எந்நாளும் சுழன்று கொண்டே இருக்கும்.

தாயன்னான் றார்விலங்கி வீழத் தளர்வொடு
நீயென்னாய் நின்றாயென் னெஞ்சளியை-ஈயென்றார்க்
கில்லென்ற றேற்றா விகல்வெய்யோன் விண்படரப்
புல்லென்ற நாப்புலவர் போன்று.

எல்லாவுயிர்க்கும் தாய் போன்றவன், மாற்றார் கொடிப்படையைத் தடுத்துப் போர்க்களத்தில் இறந்தான்.அதனால் மெலிவுடனே உயிர்ப்பொருளாய் நின்றாயோ? உயிரில் பொருளாய் நின்றாயோ? நீ என்னாகி நின்றாய் ? என்னுடைய மனமே, நீ அளியினையுடையை; எனக்கு இது தருகவென்று வேண்டினோர்க்கு இல்லையென்னும் வார்த்தையை அறியாத போர்விரும்புவோன் விண்ணிலே செல்ல செந்நாப்புலவர் வருந்தத்தக்கவராவார்.

## 10.2.15 இதுவுமது

கழிந்தோன் தன்புகழ் காதலித்து உரைப்பினும்
மொழிந்தனர் புலவர் அத்துறை என்ன.

போரில் இறந்தோன் பெயரை அன்புற்றுச் சொல்லினும் முன்புசொன்ன துறையென்று சொல்லுவர் அறிவுடையோர்.

நின்று நிலமிசையோ ரேத்த நெடுவிசும்பில்
சென்று கழிந்தான் செருவெய்யோன் - என்றும்
அழலுங் கதிர்வே லவன்புகழ் பாடி
உழலு முலகத் துயிர்.

போரினைப் பெரிதும் விரும்பும் தலைவன் போர்க்களத்தில் உயிர்கொடுத்துப் புகழ் கொண்டான். அவனால் பாதுகாக்கப்பட்ட உலகத்து உயிர்கள் எல்லாம் அவன் புகழைச் சொல்லி எந்நாளும் சுழன்று கொண்டே இருக்கும்.

## 10.3 காஞ்சிப் பொது இயல் :

முதுரை பொருந்திய முதுமொழிக் காஞ்சி
பெருங்காஞ் சிய்யே பொருண்மொழிக் காஞ்சி
புலவர் ஏத்தும் புத்தேள் நாட்டொடு
முதுகாஞ் சிய்யொடு காடுவாழ்த்து உளப்பட
மையறு சீர்த்தி வரும் இரு மூன்றும்
பொய்தீர் காஞ்சிப் பொதுவியற் பால.

என்-னின், இதுவும் பொதுவியற்பாலவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

முதுமொழிக் காஞ்சி முதலாகக் காடுவாழ்த்து ஈறாகச் சொல்லப்பட்ட ஆறும் பொதுவியற்பாலவாம்.

## 10.3.1 முதுமொழிக் காஞ்சி

பலர்புகழ் புலவர் பன்னினர் தெரியும்

உலகியல் பொருண்முடி உணரக் கூறின்று.

எல்லோரும் கொண்டாடும் அறிவுடையோர் குற்றம் நீக்கி ஆராயும் உலகத்தியலுள் முடிந்த பொருளாகிய அறம், பொருள், இன்பத்தை அறியச் சொல்லியது இத்துறையாகும்.

ஆற்றி னுணரி னருளறமா மாற்றார்க்குப்

போற்றார் வழங்கிற் பொருள்பொருளாம்-மாற்றிப்

புகலா தொழுகும் புரிவளையார் மென்றோள்

ஆராஅகலா தளித்தொழுக லன்பு.

பழமையான நூல்களின் வழி ஆராயின் பிற உயிர்களிடத்து அருளுடைமையே அறம் எனலாகும்.தனக்கெனக் கொள்ளாமல் வறியவருக்கு ஈயப்படும் பொருளே உறுதி பயக்கும் பொருள் எனப்படும்.பிறரை விரும்பாமல் கொண்டவள் மனம் மகிழும்படி அவளது தோளை நீங்காமல் அவருக்கு அருள் செய்வதே இன்பம் எனப்படும்.

## 10.3.2 பெருங்காஞ்சி

மலைஓங்கிய மாநிலத்து

நிலையாமை நெறியுரைத்தன்று.

மலையால் சூழப்பெற்ற இவ் உலகில் காணப்படும் பொருள்கள் எல்லாம் நிலையில்லாமல் அழிந்துபடும் என்பது இத்துறையாகும்.

ஆயா தறிவயர்ந் தல்லாந் தகலிடத்து

மாயா நிதிய மனைச்செறீஇ-ஈயா

திறுகப் பொதியன்மி னின்றொடு நாளைக்

குறுக வருமரோ கூற்று.

உலகத்துவாழும் மாந்தரே! உம் உயிரைக் கொண்டு போவதற்கு இன்றோ நாளையோ கூற்றுவன் வருவான்.எனவே அதன் தன்மை அறியாது பெரும்பொருளை இல்லததில் சேர்த்து வைக்கின்றீர். அதனைப் பிறருக்கு வழங்காமல் இறுகப் பற்றிக் கொண்டுள்ளீர்.அச்செயலை ஒழிப்பீராக!

## 10.3.3 பொருண்மொழிக் காஞ்சி

எரிந்துஇலங்கு சடைமுடி முனிவர்

புரிந்து கண்ட பொருண்மொழிந் தன்று.

ஒளியுடன் வி-ளங்குகின்ற சடைமுடியினை உடையவர்கள் முனிவர்கள்.அவர்கள் தெளிந்து உணர்ந்த நற்பொருளைக் கூறுவது பொருண்மொழிக்காஞ்சி ஆகும்.

ஆய பெருமை யவிர்சடையோ ராய்ந்துணர்ந்த

பாய நெறிமேற் படர்ந்தொடுங்கித் - தீய

இபுளொடு வைகா திடம்படு ஞாலத்

தருளொடு வைகி யகல்.

தீய வழியில் செல்வதனை நெஞ்சமே தவிர்ப்பாயாயக! தவத்தில் சிறந்த முனிவர் ஆராய்ந்து கூறிய மெய்ப்பொருளை உணர்ந்து புலனடக்கம் கொள்க! இந்நிலவுலகில் வாழும் நாள்வரை திருவருளைப் பெற்று வாழ்வீராக!அவற்றால் பிறவி என்னும் பிணியில் இருந்து நீங்குவீராக!

## 10.3.4 புலவர் ஏத்தும் புத்தேள் நாடு:

நுழைபுலம் படர்ந்த நோயறு காட்சி

விழைபுலம் கடந்தோர் வீடுஉரைத் தன்று.

ஐம்புலன்களை வென்ற சான்றோர்கள் தமது அறிவினை உலகியல் மாட்டு செல்லவிடார்.பிறவிப்பிணி நீங்குவதற்கரிய இறைத்திருவருளை எண்ணி நிற்பர்.அத்தகையதே வீடாகும். அத்தகைய வீட்டினைப் பற்றி எடுத்துரைப்பது இத்துறையாகும்.

பொய்யில் புலவர் புரிந்துறையு மேலுலகம்

ஐயமொன் றின்றி யறிந்துரைப்பின் - வெய்ய

பகலின் றிரவின்று பற்றின்று துற்றின்

றிகலின் றிளிவரவு மின்று.

மெய்ஞ்ஞானிகள் விரும்பி உறையும் விண்ணுலகத்தை ஐயப்பாடு ஒன்றுமின்றியே உணர்ந்து சொல்வோமாகில் அங்கு வெவ்விதான பகற்பொழுதுமில்லை; இரவுப் பொழுதுமில்லை; பாசமுமில்லை; உணவுமில்லை; மாறுபாடுமில்லை; தாழ்வுமில்லை என்பதாம்.

## 10.3.5 முதுகாஞ்சி

தலைவரும் பொருளைத் தக்காங் குணர்த்தி

நிலைநிலை யாமை நெறிப்பட உரைத்தன்று.

மெய்ப்பொருள் ஒன்றே அழியாமல் நிற்பது, மற்றவையெல்லாம் அழியும் தன்மை கொண்டவை என்பதனை எடுத்துரைப்பதே முதுகாஞ்சி என்னும் இத்துறையாகும்.

இளமை நிலைதளர மூப்போ டிறைஞ்சி

உளமை யுணரா தொடுங்கி - வளமை

வியப்போவ லில்லா வியலிடத்து வெ்.கா

துயப்போக லெண்ணி னுறும்.

இளமைப்பருவம் நிலையில்லாதது. ஆய்ந்து பார்க்கின் முதுமைப்பருவம் வந்தமையும்.ஆதலால் தாழ்ந்து உண்மையை அறியாதேஒன்றையும் விரும்பாத நிலை ஏற்பட்டது.இப்பற்று நீங்கிய நிலை மீண்டும் பிறந்து வாழ்கின்ற நிலையினின்று நீங்குதற்கு உதவும்.

## 10.3.6 காடு வாழ்த்து

பல்லவர்க்கு இரங்கும் பாடிமிழ் நெய்தல்

கல்லென ஒலிக்கும் காடுவாழ்த் தின்று.

சாப்பறை பெரும் முழக்கத்தினைச் செய்யும் இடம் சுடுகாடாகும்.அச்சுடுகாட்டினை வாழ்த்தியது காடு வாழ்த்து என்பதாகும்.

தன்புறங் கண்டறிவார் தாமில்லை - அன்பின்

அழுதார்க ணீர்விடுத்த வாறாடிக் கூகை

கழுதார்ந் திரவழங்குங் காடு.

இவ் உலகில் இறந்துபட்டவரின் அன்பினார் கண்ணீர் ஆறாகப் பெருகிய இடம் சுடுகாடாகும்.அத்தகைய காட்டில்கூகையும் பேயும் குளித்தன.அப்பறவைகள் மிகுதியாக இயங்குதற்கு அடிப்படையாய் அமைந்ததுசுடுகாடு. அதன் உண்மைநிலையைக் கண்டறிந்தார் ஒருவரும் இல்லை.

## 10.4 முல்லைப் பொது இயல் :

சீர்சான் முல்லையொடு கார்முல்லை என்றா

தேர்முல் லையொடு நாண்முல்லை என்றா

இல்லாண் முல்லையொடு பகட்டுமுல்லை என்றா

பான்முல் லையொடு கற்புமுல்லை என்றாங்கு

இருநால் முல்லையும் பொதுவியற் பால.

முல்லை முதலாகக் கற்புமுல்லை ஈறாகச் சொல்லப்பட்ட எட்டும் பொதுவியற்பாலவாம்.

குறிப்பு

### 10.4.1 முல்லை

தடவரை மார்பன் றன்னமர் காதல்

மடவரல் புணர்ந்த மகிழ்ச்சிநிலை உரைத்தன்று.

பெரிய மலைபோன்ற மார்பினை உடைய தலைவன் தன்னைப் பொருந்திய அன்பினையும் மடப்பத்தினையும் உடைய தலைவியோடு கூடிக்களித்ததைச் சொல்லியது இத்துறையாகும்.

ஊதை யுளர வொசிந்து மணங்கமழும்

கோதைபோன் முல்லைக் கொடிமருங்குற்- பேதை

குவைஇ யிணைந்த குவிமுலை யாகம்

கவைஇக் கவலை யிலம்.

காற்றின் காரணமாக மணம் வீசுவது முல்லை் அத்தகைய முல்லையினைப் போன்றவள் தலைவி.மடப்பம் பொருந்தியவள்.அவளின் மார்பு திரண்டு காணப்பட்டது,இம்மார்பினைத் தழுவிக் கொண்டு துயரம் இல்லாத நிலையினை யாம் அடைந்தோம்.

### 10.4.2 கார்முல்லை

அருந்திறல் கட்டூர் அவர் வாராமுன்

கருங்கடல் முகந்து கார்வந் தன்று.

தலைவன் பகைவரை வெல்லும் பொருட்டு பாசறைக்கண் வீற்றிருந்தான்.அத்தலைவன் தன் ஊருக்குத் திரும்பி வருவதற்கு முன் மேகம் கடல்நீரை முகந்து கொண்டு வந்தது என்று குறிப்பது இத்துறையாகும்.

புனையும் பொலம்படைப் பொங்குளைமான் றிண்டேர்

துனையுந் துனைபடைத் துன்னார்-முனையுள்

அடன்முகந்த தானை யவர்வாரா முன்னம்

கடன்முகந்து வந்தன்று கார்.

தேரானது அழகிய குதிரைகளால் பூட்டப்பெற்றது,அத்தகைய தேரின்மேல் பகைவரை வீழ்த்துதற்காகத் தலைவன் விரைந்து சென்றான். எனினும் சென்ற வினை முடியாமையால் பாசறைக்கண் தங்கினான்.அவன் மீள்வதற்கு முன்பாக மேகமானது கடல்நீரை முகந்து கொண்டு வந்தது.

## 10.4.3 தேர்முல்லை

உருத்தெழும் மன்னர் ஒன்னார் தந்நிலை

திருத்திய காதலர் தேர்வரவு உரைத்தன்று.

சினந்தெழும் அரசராகிய பகைவர் தம்முடைய நிலைமையை உறவாக்கி மீண்ட அன்பர்தம் தேர் வந்த நிலையச் சொல்லியது

தீர்ந்து வணங்கித் திறையளப்பத் தெம்முனையுள்

ஊர்ந்துநங் கேள்வ ருழைவந்தார் - சார்ந்து

பரிகோட்ட மின்றிப் பதவார்ந் துகளும்

திரிகோட்ட மாவிரியத் தேர்.

போர்க்களத்தில் தேரினைச் செலுத்தி நம் தலைவர் பகையை வென்றார். அதனால் பகைவர்கள் பகைமையை மறந்து நண்பர்கள் ஆயினர்.திறைப்பொருளைக் கொண்டு வந்து கொடுத்தனர். பின் தலைவர் காட்டு வழியிடைத் தேரினைச் செலுத்தினார். அதனால் அருகம்புல்லினை மேய்ந்து கொண்டிருந்த மானினம் தேரின் வருகை கேட்டுப் பாய்ந்து ஓடியது.

## 10.4.4 நாண்முல்லை

செறுநர் நாணச் சேயிழை அரிவை

வறுமனை வைகித் தற்காத் தன்று.

பகைவர் நாணச் சிவந்த ஆபரணத்தினையுடைய மடந்தை கணவன் பிரிந்த இல்லிலே தங்கித் தன்னைப் காத்துக்கொண்ட தன்மையைச் சொல்லியது இத்திணையாகும்.

கொய்தார மார்பிற் கொழுநன் றணந்தபின்

செய்வளை யாட்குப் பிறிதில்லை- வெய்ய

வளிமறையு மின்றி வழக்கொழியா வாயில்

நளிமனைக்கு நற்றுணை நாண்.

மாலையணிந்த மார்பினை உடைய தலைவன் தன் மனைவியைப் பிரிந்தான். வளையல்கள் அணிந்த கையினை உடைய அவனின் மனைவியோ வேறு காவல் ஏதும் இல்லாத வெம்மைக்காற்றினைத் தடுக்கும் கதவும் இல்லாத இல்லத்தில் நாணம் ஒன்றினையே துணையாகக் கொண்டு தன்னைக் காத்துக் கொண்டாள்.



குறிப்பு

## 10.4.5 இல்லாண் முல்லை



கழுமிய காதற் கணவனைப் பழிச்சி

இழுமென் சீர்த்தி இல்மலிபு உரைத்தன்று

அன்பினோடு கணவனைத் தொழுது எழும் மனைவி இனிய சொற்களால் பாராட்டப்படும் சிறப்பினை உடையவள்.அத்தலைவியின் இயல்பினைச் சிறப்பித்துக் கூறுவது இத்துறையாகும்.

குறிப்பு

கல்லெனீர் வேலிக் கணவன் கழல்வாழ்த்தி

ஒல்லும் வகையால் விருந்தோம்பிச்-செல்லுந்தம்

இற்செல்வ மன்றி யிரந்தவர்க் கீகல்லாப்

புற்செல்வம் பூவா புகழ்.

கடலால் சூழப்பெற்ற இவ் உலகில் வாழும் பெண் தன் கணவனைத் தொழவேண்டும். கணவனின் வருமானத்திற்கு ஏற்ப விருந்தினரைப் பேண வேண்டும்.அவ்வாறான இல்லறச் செல்வம் புகழினைப் பூக்கும். இரந்தவர்க்குக் கொடுக்காத செல்வம் புகழைப் பூப்பதில்லை.

## 10.4.6 பகட்டு முல்லை

வயன்மிகு சிறப்பின் வருத்தமும் நோன்மையும்

வியன்மனைக் கிழவனைப் பகட்டொடு பொரீஇயன்று.

வயலுக்கு உரிய வேளாளனுக்கு உதவியாய் அமைவது எருது. அது முயற்சியால் வரும் வருத்தத்தையும் சுமையையும் பொறுக்கும் தன்மை உடையது. அத்தகைய எருதோடு வேளாளனை ஒப்பிட்டுக் கூறுவது பகட்டுமுல்லை எனப்படும்.

உய்த்தல் பொறுத்த லொழிவின் றொலிவயலுள்

எய்த்த லறியா திடையின்றி-வைத்த

படுநுகம் பூண்ட பகட்டொடு மானும்

நெடுமொழி யெங்கணவ னோ்.

வயலில் எப்பொழுதும் கழுத்தின்மேல் நுகத்தடி பூண்டு உழைப்பது எருது.அதனைப்போல குடும்பத்தைச் செலுத்துதலையும் பலருக்கும் தாங்குதலையும் தொழிலாய்க் கொண்டுள்ளான் தலைவன்.அவன் நீண்ட புகழினை உடையவன் ஆவான்.

## 10.4.7 பான்முல்லை

அரிபாய் உண்க ஆயிழைப் புணர்ந்தோன்

பரிவகல் உள்ளமொடு பால்வாழ்த் தின்று.

செவ்வரி, கருவரி பரந்த மையுண்ட விழியினையும் தெரிந்த ஆபரணத்தினையும் உடையாளை மணந்தவன் தலைவன். அவன் அத்தலைவியுடன் கூடி வருத்தம் நீங்கினான்.அவன் தெய்வத்தினை வாழ்த்தியுரைத்தது இத்துறையாகும்.

திங்கள் விளங்குந் திகழ்ந்திலங்கு பேரொளி

அங்கண் விசும்பி னகத்துறைக-செங்கட்

குயிலனைய தேமொழிக் கூரெயிற்றுச் செவ்வாய்ப்

பயில்வளையை நல்கிய பால்.

நன்கு சிவந்த கண் குயில்போலும் குரல், கூர்மையான பல சிவந்த வாய் செறிந்த வளையல் போன்றவற்றைக் கொண்டவள் தலைவி.அத்தகைய தலைவியை எனக்குத் தந்தருளியது ஊழாகிய தெய்வம்ஆகும்.அத்தெய்வம் திங்கள் ஒளி பொருந்தி வானுலகத்தில் என்றும் பொருந்தி வாழ்வதாகுக!

## 10.4.8 கற்பு முல்லை

பொன்றிகழ் சுணங்கின் பூங்கண் அரிவை

நன்அறி கொழுநனை நலமிகுத் தன்று.

பொன்போல் இலங்கும் சுணங்கினையும் பொலிந்த கண்ணினையும் உடைய பெண் நன்மையை உணரும் தன்மையுடைய கணவனின் நன்மையைப் பெருகச் சொல்லியது இத்துறையாகும்.

நெய்கொ ணிணந்தூ நிறைய வமைத்திட்ட

குய்கொ ளடிசில் பிறர்நுகர்க-வைகலும்

அங்குழைக் கீரை யடகு மிசையினும்

எங்கணவ னல்க லினிது.

நெய்யும் கொழுப்பும் சேர்த்துச் செய்யப்படுவது புலால் உணவு, கறியினை உடையதாய் விளங்குவது கறிச் சோறாகும். அதனை அனைவரும் உண்டு மகிழ்க! யாம் நாள்தோறும் கீரை உணவையே



**குறிப்பு**

உண்போம்.அவ் உணவும் எம்முடைய கணவன் அளிக்க அதுவே எமக்கு இனிமை பயப்பதாகும்.



## 10.4.9 இதுவுமது

மேவரும் கணவன் தணப்பத் தன்வயின்

காவல் கூறினும் அத்துறை யாகும்.

**குறிப்பு**

சேர்ந்திருந்த கணவன் பிரிந்திருந்தான்.அந்நிலையில் இருந்த பெண் தன்னுடைய கற்பைக் காத்துக் கொண்டாள்.அதனைச் சொல்லுவதும் முன்னால் கூறப்பட்ட கற்பு முல்லை என்பதாகும்.

மௌவல் விரியு மணங்கமழ் மான்மாலைத்

தௌவன் முதுகுரம்பைத் தான்றமியள்-செவ்வன்

இறைகாக்கு மிவ்வுலகி னிற்பிறந்த நல்லாள்

நிறைகாப்ப வைகு நிறை.

முன்னால் பாதுகாக்கப்படும் நிலவுலகில் நல்லகுடியில் பிறந்தவள் தலைவி.அவள் முல்லை மலரும் மாலைப்பொழுதினில் தன் வீட்டில் தனித்து இருந்தாள்.அவ்வீடு பழங்கூரையை உடையதாய் இருந்தது.அத்தகைய வீட்டில் பிறர் காவல் இன்றியும் காப்பனவற்றைக் காத்து நீக்கினவற்றை நீக்கி ஒழுகும் ஒழுக்கமாகிய நிறைவுடைமையைக் காத்தாள் தலைவி.அதனால் அவளுடைய கற்பும் நிலைபெற்றது.

## 10.4.10 இதுவுமது

திருவளர் நன்னகர் அடைந்த கொழுநன்

பெருவளம் ஏத்தினும் அத்துறை யாகும்.

செல்வம் பெருகும் அழகிய மாளிகையிலே சேர்ந்த கணவன்தன் பெரிய செல்வத்தை வாழ்த்தினும் முற்பட்ட துறையேயாம்

ஊழிதோ றூழி தொழப்பட் டுலைவின்றி

ஆழிசூழ் வையத் தகமலிய-வாழி

கருவரை மார்பினெங் காதல னல்க

வருவருந் தோம்பும் வளம்.

மலைபோலும் மார்பினை உடையவன் தலைவன்.அவனால் தேடிவரப்பட்டு விருந்தினரை நாள்தோறும் போற்றுதற்குக் காரணமாய் அமைந்தது செல்வம். அது நீண்ட காலமாக ஊழிதோறும் அறிஞர்களால்

வணங்கப்பெறும்சிறப்பினை அடையட்டும். மேலும் கெடுதல் இல்லாமல் கடலால் சூழப்பட்ட அந்நிலவுலகில் பெருகி வாழ்வதாகுக!



## பயிற்சி வினாக்கள்:

**1.உன்னநிலை என்பதனை விளக்கியுரை**

துன்னரும் சிறப்பில் தொடுகழன் மன்னனை
உன்னம் சேர்த்தி உறுபுகழ் மலிந்தன்று.

கிட்டுதற்கரிய நன்மையினையும் கட்டுங்கழலினையுமுடைய வேந்தனை நிமித்தம் பார்க்கும் மரத்தொடு கூட்டி மிகுபுகழைச் சொல்லியது.

துன்னருந் தானைத் தொடுகழலான் றுப்பெதிர்ந்து
முன்னர் வணங்கார் முரண்முருங்க-மன்னரும்
ஈடெலாந் தாங்கி யிகலவிந்தார் நீயுநின்
கோடெலா முன்னங் குழை.

உன்ன மரமே! கிடைத்தற்கரிய அரும்பெரும் படையினையும் காலில் வீரக்கழலினையும் அணிந்தவர் நம் மன்னர். அவரிடம் எதிர்த்து நின்ற பகைவர் அனைவரும் அழிந்தனர், எனவே என்னுடைய கிளைகள் எல்லாம் அழகு மிக்கதாய் தளிர்க்கச் செய்வாயாக!

**2.கல் நடுதல் - சுட்டியுரைக்க.**

அவன்பெயர்க்கல் மிசைப்பொறித்துக்
கவின்பெறக் கல்நாட்டின்று.

போர்க்களத்தில் வீரமரணம் அடைந்த மறவனின் பெயரினைக் கல்லில் எழுதி நடுதல் கல் நடுதல் எனப்படும்.

மாலை துயல மணியெறிந்து மட்டுகுத்துப்
பீலி யணிந்து பெயர்பொறித்து - வேலமருள்
ஆண்டக நின்ற வமர்வெய்யோற் காகென்று
காண்டக நாட்டினார் கல் .

போர்க்களத்தில் வீரமரணம் அடைந்தான் மறவன் ஒருவன். அவனுக்குக் கல் எடுப்பிக்க நினைத்தனர்,கல்லினை நட்டு இது அவன் உருவம் ஆகுக! என வாழ்த்தினர்,அக்கல்லிற்கு மாலை அணிவித்தனர்.மணியை ஒலிக்கச் செய்தனர்,கள்ளினைத் தெளித்த மயிற்தோகையினைச்

சூட்டினர்,அம்மறவனின் பெயரினையும் புகழினையும் கல்லில் எழுதி பலரும் காணும்படி வைத்தனர்.



**3.முதுமொழிக் காஞ்சி – விளக்குக.**

பலர்புகழ் புலவர் பன்னினர் தெரியும்

உலகியல் பொருண்முடி உணரக் கூறின்று.

குறிப்பு

எல்லோரும் கொண்டாடும் அறிவுடையோர் குற்றம் நீக்கி ஆராயும் உலகத்தியலுள் முடிந்த பொருளாகிய அறம், பொருள், இன்பத்தை அறியச் சொல்லியது இத்துறையாகும்.

ஆற்றி னுணரி னருளறமா மாற்றார்க்குப்

போற்றார் வழங்கிற் பொருள்பொருளாம்-மாற்றிப்

புகலா தொழுகும் புரிவளையார் மென்றோள்

ஆராஅகலா தளித்தொழுக லன்பு.

பழமையான நூல்களின் வழி ஆராயின் பிற உயிர்களிடத்து அருளுடைமையே அறம் எனலாகும்.தனக்கெனக் கொள்ளாமல் வறியவருக்கு ஈயப்படும் பொருளே உறுதி பயக்கும் பொருள் எனப்படும்.பிறரை விரும்பாமல் கொண்டவள் மனம் மகிழும்படி அவளது தோளை நீங்காமல் அவருக்கு அருள் செய்வதே இன்பம் எனப்படும்.

**4. பொதுவியல் திணையின் செய்திகளை விரித்தெழுதுக.**

பொதுவியல் திணை என்னும் பகுதியில் காணப்படும் செய்திகளைத் தொகுத்துக் கட்டுரை வடிவில் எழுதுதல் வேண்டும்.

## கூறு: 11 – உவமை, உருவகம், தீவகம்

**நோக்கம்: உவமை, உருவகம், தீவகம் ஆகிய அணிகளின் இலக்கணத்தையும் அவற்றின் வகைகளையும் கற்று அறிதல்**

### தண்டியலங்காரம்:

தமிழ் இலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து பிரிவுகளைத் தன்னுள் கொண்டு அமைந்ததாகும்.இவ் ஐந்து இலக்கணங்களையும் ஒருங்கு கூறும் ஐந்திலக்கண நூல்களும் ஒவ்வொரு இலக்கணத்தையும் தனித்துக் கூறும் நூல்களும் தமிழ் மொழியிடத்தே உண்டு. அவற்றுள் தண்டியலங்காரம் என்னும் இந்நூல் தமிழில் அணி இலக்கணத்தை விரித்துக் கூறும் நூல் ஆகும்.இந்நூல்

குறிப்பு

வடமொழியில் அமைந்த காவ்யதர்சம் என்னும் நூலினை அடியொற்றித் தமிழில் தோன்றியது எனக் கூறுவாரும் உண்டு. அதனை வடமொழியில் எழுதியவர் தண்டி என்பவர் ஆவார். தமிழில் அணி இலக்கணத்தைக் கூறும் இந்நூலும் தண்டியலங்காரம் என்றே வழங்கப்படுகிறது.இந்நூலினைத் தமிழில் யாத்தளித்த புலவரின் பெயர் அறியக் கிடைக்கவில்லை.எனினும் இவர் அனபாயச்சோழனைப் பற்றிக் குறிப்பிடுவதால் இவர் அவன் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தவர் என்பது வெளிப்படுகிறது.இவர் இச்சோழனின் காலமாகிய பன்னிரண்டாம் நூற்றாண்டினைச் சேர்ந்தவர் என்பதும் தெரியவருகிறது.தண்டியலங்காரம் என்னும் இந்நூல் மூன்று இயல்களைக் கொண்டு அமைந்துள்ளது.முதல் இயல் பொதுவணியியல் என்பதாகும். இதில் இருபத்தைந்து நூற்பாக்கள் அமைந்துள்ளன. இவ்வியல் அணிபெறும் செய்யுள் பற்றியும் ஒருசார் அணிக்குரிய இலக்கணம் பற்றியும் எடுத்துரைக்கின்றது.இரண்டாவது இயல் பொருளணியியல் என்பதாகும்.பொருளினால் ஆகும் அணிகளின் தன்மையைக் கூறுவதால் இப்பெயர் பெற்றது. இவ்வியலில் சொல்லினால் ஆகிய அணிகள் சில கூறப்பட்டிருப்பினும் பொருளினால் ஆகும் அணிகளே மிகுதியும் கூறப்பட்டிருப்பதால் மிகுதி கருதிப் பொருளணியியல் என்பது பெயராயிற்று.இதனுள் அறுபத்துநான்கு நூற்பாக்கள் இடம்பெற்றுள்ளன.இதில் முப்பத்தைந்து அணிகளும் அவற்றின் வகைகளும் விரித்துரைக்கப்படுகின்றன.மூன்றாவது இயல் சொல்லணியியல் என்பதாகும். இதனுள் சொல்லினால் ஆகிய அணிகள் விளக்கப்படுகின்றன.மேலும் வழுக்கள், வழுவமைதிகள் போன்றனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வியலில் அமைந்துள்ள நூற்பாக்களின் எண்ணிக்கை முப்பத்து ஐந்து ஆகும்.

## 11. பொருளணியியல்

## 11.1 காப்பு

என்னை யுடையாள் கலைமடந்தை யெவ்வுயிர்க்கும்
அன்னை யுடைய வடித்தளிர்கள் - இன்னளிசூழ்
மென்மலர்க்கே கன்று மெனவுரைப்பர் மெய்யிலா
வன்மனத்தே தங்குமோ வந்து .

மிகவும் இழிவான என்னை அடிமையாகவுடையாள் கலைமடந்தை, எல்லாவுயிர்க்குந் தாயாயுள்ளவளது தளிராகிய அடியிணைகளானவை. இனிதாகிய பண் முரலும் வண்டுகள் சூழ்கின்ற மிருதுவாகிய மலரின் மீது மிதிப்பினும் கன்றும் என்று சொல்லி நிற்பர். இத்தன்மையாகிய தளிரடிகள், உண்மையற்ற கடினமாகிய என் மனத்தின்கண் வந்து நிலையாக நிற்கும் என்பதாம்.

## 11.2 பொருளணிகள்:

தன்மை உவமை உருவகம் தீவகம்
பின்வரு நிலையே முன்ன விலக்கே
வேற்றுப் பொருள்வைப்பே வேற்றுமை விபாவனை
ஒட்டே அதிசயம் தற்குறிப் பேற்றம்
ஏது நுட்பம் இலேசம் நிரனிறை
ஆர்வ மொழிசுவை தன்மேம் பாட்டுரை
பரியா யம்மே சமாயிதம் உதாத்தம்
அரிதுணர் அவநுதி சிலேடை விசேடம்
ஒப்புமைக் கூட்டம் மெய்ப்படு விரோதம்
மாறுபடு புகழ்நிலை புகழாப் புகழ்ச்சி
நிதரிசனம் புணர்நிலை பரிவருத் தனையே
வாழ்த்தொடு சங்கீ ரணம்பா விகம்இவை
ஏற்ற செய்யுட்கு அணிஏழ் ஐந்தே.

பொருளால் ஆகிய அணிகளது இயல்பு உணர்த்தினமையால்,இது பொருளணியியல் என்னும் பெயரினை உடையது ஆயிற்று.சொல்லால் உணர்த்தப்படும் அணி ஈண்டு உணர்த்திலரோ எனின், மிகுதி பொருள்மேலது ஆதலின் மிகுதி நோக்கி இப்பெயர் கொடுக்கப்பட்டது.இதனுள் அமைந்த இச்சூத்திரம் என்னுதலிற்றோ எனின்,அலங்காரங்களின் பெயரும், முறையும், தொகையும் உணர்த்துதல் நுதலிற்று ஆகும்.

தன்மை, உவமை, உருவகம், தீவகம், பின்வருநிலை, முன்ன விலக்கு, வேற்றுப்பொருள் வைப்பு, வேற்றுமை, விபாவனை, ஒட்டு, அதிசயம்,தற்குறிப்பேற்றம்,ஏது, நுட்பம், இலேசம், நிரனிறை, ஆர்வ மொழி, சுவையணி,தன்மேம்பாட்டுரை, பரியாயம், சமாயிதம், உதாத்தம்,அவநுதி, சிலேடை, விசேடம், ஒப்புமைக் கூட்டம், விரோதம், மாறுபடு புகழ்நிலை, புகழாப் புகழ்ச்சி, நிதரிசனம், புணர்நிலை, பரிவருத்தனை, வாழ்த்து, சங்கீரணம், பாவிகம் என இவை முப்பத்தைந்தும் மேற்கூறிய செய்யுட்கு அலங்காரமென்று சொல்லப்படும்.

### 11.2.1 தன்மையணி

எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்கும்

சொன்முறை தொடுப்பது தன்மை யாகும் .

எவ்வகைப்பட்ட பொருளும் மெய்ம்மைக் கூறுபாட்டால் விளக்கும் சொல்முறையால் பாடப்படுவது தன்மை என்னும் அணியாகும்.

**குறிப்பு**

### 11.2.1.1 தன்மையணியின் வகை

அதுவே,

பொருள் குணஞ் சாதி தொழிலொடு புலனாம் .

அத்தன்மை அணி பொருள், குணம், சாதி, தொழில் என்பனவற்றை அடிப்படையாக வைத்துத் தோன்றும்.

#### 11.2.1.1.1 பொருட்டன்மை

“நீல மணிமிடற்ற னீண்ட சடைமுடியன்
நூலணிந்த மார்பன் நுதல்விழியன் - தோலுடையன்
கைம்மான் மறியன் கனன்மழுவன் கச்சாலை
எம்மான் இமையோர்க் கிறை”

விளக்கம்: எம்மை ஆண்டு கொண்ட பெரியோன் இமையவர்க்குத் தலைவனாகிய சிவபெருமான் கருங்குவளை போன்ற அழகிய மிடற்றினையும், நீண்ட சடையினையும், மார்பில் முப்புரி நூலினையும், நெற்றியில் விழியினையும் உடையவன். மேலும் உடையாகத் தோலினையும், கரத்தில் மானினையும், மழுவினையும், திருக்கச்சாலை என்னும் திருப்பதியினையும் உடையவனாய் விளங்குபவன்.

பொருத்தம்: சிவபெருமானிடத்து உள்ள பலவிதமான தன்மைகள் இப்பாடலில் கூறப்படுவதால் இது பொருள் தன்மையாயிற்று.

#### 11.2.1.1.2 குணத் தன்மை

“உள்ளங் குளிர வுரோமஞ் சிலிர்த்துரையும்
தள்ளவிழி நீரரும்பத் தன்மறந்தாள் - புள்ளலைக்கும்
தேந்தா மரைவயல்சூழ் தில்லைத் திருநடஞ்செய்
பூந்தா மரைதொழுத பொன்”

விளக்கம்: நெஞ்சம் குளிர மெய் மயிர் அரும்பி கண்ணிலே நீர் தோன்றத் தன்னுருவத்தையும் மறந்தாள்.மது நிறைந்த தாமரையையுடைய வயல்கள் சூழ்ந்த தில்லைப் பொதுவின்கண்ணே அழகுடைத்தாகிய கூத்தையாடுகின்ற இறைவனின் திருவடித் தாமரையை வணங்கின பொன்னை ஒப்பாள் என்றவாறாம்.

பொருத்தம்: : இது தில்லை நடராசப் பெருமானைத் தொழுதலால் அடையும் இன்பத்தின் தன்மையைக் கூறுதலின் குணத்தன்மையாயிற்று .

#### 11.2.1.1.3 சாதித் தன்மை

“பத்தித் தகட்ட கறைமிடற்ற பைவிரியும்
துத்திக் கவைநாத் துளையெயிற்ற - மெய்த்தவத்தோர்
ஆகத்தான் அம்பலத்தான் ஆரா வமுதணங்கின்
பாகத்தான் சாத்தும் பணி“

குறிப்பு

விளக்கம்: உண்மையாகிய தவத்தினையுடையோர் அகத்தில் உள்ளான்,அம்பலத்திலே நடனமிடுவான் பருகாத அமுதமன்ன உமாதேவியின் பாகத்தை உடையான்.வரைகள் பொருந்திய வயிற்றினை உடையனவாய் கருமையாகிய மிடற்றினை உடையனவாய்ப் படத்தின்கண் விரிந்த பொறி நிறத்தையும், இரண்டு பிரிவான நாவையும், புரையையுடைய பல்லினையும் உடையனவாயிருக்கும்.

விளக்கம்: இது பாம்புச் சாதியின் பலவிதமான தன்மைகளைக் கூறுதலின் சாதித்தன்மையாயிற்று.

#### 11.2.1.1.4 தொழிற்றன்மை

“சூழ்ந்து முரன்றணவி வாசந் துதைந்தாடித்
தாழ்ந்து மதுநுகர்ந்து தாதருந்தும் - வீழ்ந்தபெரும்
பாசத்தார் நீங்காப் பரஞ்சுடரின் பைங்கொன்றை
வாசத்தார் நீங்காத வண்டு “

விளக்கம்: பாச நீங்கிய முத்தர்களை விட்டு நீங்காத பரஞ்சோதியின் வாசனையையுடைய கொன்றை மாலையைப் பிரியாத வண்டு, சூழ்ந்து பண்ணை முரன்று சேரச் சென்று மணத்தைச் செறிந்து மீதே பறந்து விரும்பி மதுவையுண்டு தாதைக் கோதா நிற்கும்.

பொருத்தம்: இப்பாடல் வண்டு தாது அருந்துதலாகிய தொழிற்கண் உள்ள பலவிதமான தன்மைகளைக் கூறுதலால் தொழில் தன்மையாயிற்று.

## 11.2..2 உவமையணி – உவமையணியின் வகை:

பண்பும் தொழிலும் பயனுமென்(று) இவற்றின்
ஒன்றும் பலவும் பொருளொடு பொருள் புணர்த்(து)
ஒப்புமை தோன்றச் செப்புவ(து) உவமை .

குறிப்பு

இது உவமை என்னும் அணியின் பொது இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று .

பண்பு, தொழில், பயன் என்பன காரணமாக ஒன்றாகியும், பலவாகியும் வரும் பொருளோடு பொருள் இயைய வைத்து ஒப்புமை புலப்படப் பாடுவது உவமை என்னும் அணி ஆகும்.

**ஒன்றும் பலவும் பொருளொடு பொருள் புணர்த்தல்**: - ஒரு பொருளோடு ஒரு பொருளும், ஒரு பொருளோடு பல பொருளும், பல பொருளோடு பல பொருளும், பல பொருளோடு ஒரு பொருளும் இயைய அமைத்துப் பாடப்பாடுவது ஆகும்.

**பண்புவமை**

“பவளத் தன்ன மேனி” “வேய்புரை பணைத்தோள்”

**தொழிலுவமை**

“அரிமா வன்ன வணங்குடைத் துப்பிற், றிருமா வளவன்”

**பயனுவமை**

“மாரி யன்ன வண்மைத், தேர்வே ளாயைக் காணிய சென்மே”

“செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை”

**ஒரு பொருளோடு ஒரு பொருள்** :

செவ்வான் அன்ன மேனி

**ஒரு பொருளோடு பல பொருள்**: :

“அவ்வான் , இலங்கு பிறை யன்ன விளங்குவால் வையெயிற்று”

**பல பொருளோடு பல பொருள்** : “களிறே...சுறவினத் தன்ன வாளோர் மொய்ப்ப, மரீஇயோ ரறியாது மைந்துபட் டன்றே “(புறம் - 13)

**பல பொருளோடு ஒரு பொருள்** ;

பெரும்பெயர்க் கரிகாலன் முன்னிலைச் செல்லார்....பீடின் மன்னர் போல , ஓடுவை மன்னால் வாடைநீ யெமக்கே”

**உவமையின் வகை:**

அதுவே

விரியே தொகையே இதர விதரம்

உரைபெறு சமுச்சயம் உண்மை மறுபொருள்

புகழ்தல் நிந்தை நியமம் அநியமம்

ஐயம் தெரிதரு தேற்றம் இன்சொல்

எய்திய விபரீதம் இயம்புதல் வேட்கை

பலபொருள் விகாரம் மோகம் அபூதம்

பலவயிற் போலி ஒருவயிற் போலி

கூடா வுவமை பொதுநீங் குவமை

மாலை என்னும் பால தாகும்.

விரியுவமை,தொகையுவமை,இதரவிதரவுவமை,சமுச்சயவுவமை,உண்மையுவமை,மறுபொருளுவமை,புகழுவமை,நிந்தைஉவமை,நியமஉவமை,அநியமவுவமை,ஐயவுவமை,தெரிதருதேற்றவுவமை,இன்சொலுவமை,விபரீதவுவமை,இயம்புதல் வேட்கையுவமை, பல பொருளுவமை, விகாரவுவமை, மோகவுவமை,அபூதவுவமை, பலவயிற்போலியுவமை, ஒருவயிற்போலியுவமை, கூடாவுவமை, பொதுநீங்குவமை, மாலை யுவமை, என்னும் இருபத்து நான்கு வகையினை உடையது என்பன உவமை அணியின் வகைகள் ஆகும்.

### 11.2..2.1 விரியுவமை

பண்பும் தொழிலும் பயனும் ஆகியன பொருளுக்கும் உவமைக்கும் பொதுத்தன்மையாகவுள்ள இவை விரிந்து நிற்பது விரியுவமையாம் .

“பால்போலு மின்சொற் பவளம்போற் செந்துவர்வாய்

சேல்போற் பிறழுந் திருநெடுங்கண் - மேலாம்

புயல்போற் கொடைக்கைப் புனனாடன் கொல்லி

அயல்போலும் வாழ்வ தவர்”

விளக்கம்:.பாலை போலும் இனிய சொல்லினையும், பவளம் போலும் சிவந்து வாயினையும், சேலை ஒத்துப் பிறழ்தலால் விளங்கிய அழகினை உடைத்தாகிய நெடிய கண்ணினையுமுடைய அவர் வாழுமிடம், மின்னும் முழக்கமும், காலவரைவுமின்றிச் சான்றோராலே புகழப்பட்டு மழை போன்று கொடுத்தலால் சிறந்த கையையுடையனாகிய சோழனுடைய கொல்லிமலைப் பக்கம் போலும் என்பதாம்.

பொருத்தம்: “பால் போலும் இன்சொல்”, “பவளம்போல் செந்துவர்வாய்” என்ற தொடர்களில் இனிமையும் செம்மையுமாகிய பண்பும், “சேல்போல் பிறழுந் திருநெடுங்கண்“ என்ற தொடரில் பிறழ்தலாகிய

தொழிலும்,புயல்போல் கொடைக்கை" என்ற தொடரில் கொடையாகிய பயனும் விரிந்து நின்றமையால் இது விரியுவமை ஆயிற்று.



### 11.2..2.2 தொகையுவமை

பண்பும் தொழிலும் பயனும் ஆகியன பொருளுக்கும் உவமைக்கும் பொதுத்தன்மையாகவுள்ள இவை தொக்கி நிற்பது தொகை உவமம் ஆகும்.

தாமரை வாண்முகத்துத் தண்டரளம் போன்முறுவல்

காமரு வேய்புரைதோட் காரிகையீர் ! - தேமருவும்

பூங்குழலின் வாசப் பொறைசுமந்து நொந்ததோ

பாங்குழலுந் தென்றற் பரிசு "

விளக்கம்: தாமரை போன்ற ஒளியையுடைய முகத்தினையும், குளிர்ந்த முத்துப் போன்ற நகையினையும், அழகு மருவிய மூங்கில் போன்ற தோளினையும் உடைய மாதரீர் ! உம்முடைய பக்கத்தில் உலாவுகின்ற தென்றலின் தன்மை, உம்முடைய தேன் பொருந்திய பூவினையுடைத்தாகிய குழலின்கண் உண்டாகிய நறுநாற்றப் பாரத்தைத் தாங்கிக்கொண்டு வருகின்ற வருத்தந் தானோ மெல்லிய உருவுடைத்தானது ? சொல்லுவீராக.

பொருத்தம்: முகத்திற்குத் தாமரையையும், முறுவலுக்கு முத்தையும்,தோளிற்கு மூங்கிலையும் உவமையாகக் கூறப்பட்டிருந்தாலும், இன்ன தன்மையால் உவமை கூறப்பட்டது என்னும் பொதுத்தன்மையை மறைத்துக் கூறியுள்ளமையால் இது தொகையுவமையாயிற்று.

### 11.2..2.3 இதரவிதர உவமை

பொருள் ஒருகால் உவமையாயும், உவமை ஒருகால் பொருளாகவும் ஒருதொடர்ச்சிக்கண்ணே வருவது இதரவிரத உவமை எனப்படும்.

"களிக்குங் கயல்போலு நுங்கணுங் கண்போல்

களிக்குங் கயலுங் கனிவாய்த் - தளிர்க்கொடியீர்!

தாமரைபோல் மலரு நும்முகம் நும்முகம்போல்

தாமரையுஞ் செவ்வி தரும்"

விளக்கம்: கொவ்வைப் பழம் போன்ற வாயினையுடைத்தாய்த் தளிரோடு கூடிய கொடிபோன்ற பெண்டீர்! செருக்கினை உடைத்தாகிய கயல்போன்ற தன்மையை உடைத்தாயிருந்தன நும்முடைய நாட்டங்களானவை; இத்தன்மைத்தாகிய உங்களுடைய நாட்டங்களிற்கு உவமையாகின்றன மீன் கூட்டங்கள். மேலும் உம்முடைய முகமானது தாமரைபோல்

மலர்ந்து நின்றது; அத்தன்மைத்தாகிய தாமரை உம்முடைய முகமண்டலம் போலச் செவ்வியினை யுடைத்தாகின்றது என்பதாம்.



பொருத்தம்:கண்ணிற்குக் கயலை உவமை கூறிப் பின் அக்கயலுக்கே கண்ணை உவமை கூறுகின்றமையாலும் முகத்திற்குத் தாமரையை உவமை கூறிப் பின் அத்தாமரைக்கே முகத்தை உவமை கூறுகின்றமையாலும் இது இதரவிதரம் ஆகும்.

குறிப்பு

### 11.2..2.4 சமுச்சய உவமை

இதனை ஒப்பது இதனானேயன்றி இதனானும் ஒக்கும் என் உரைப்பது சமுச்சய உவமை எனப்படும்.

"அளவே வடிவொப்ப தன்றியே பச்சை

இளவேய் நிறத்தானு மேய்க்கும் - துளவேய்

கலைக்குமரி போர்துளக்குங் காரவுணர் வீரம்

தொலைக்குமரி யேறுகைப்பாள் தோள்"

விளக்கம்: துழாய் மாலையைச் சூடிய கலைமடந்தையாகிய கன்னி, போரிடத்துப் பகைவரை நடுக்கம் செய்பவராக அசுரருடைய ஆண்மையைக் கெடுக்கும் சிங்கத்தை வாகனமாக உடையாளது தோள்களைப் பசிய இளவேயானது அளவினானும் வடிவினானும் ஒப்பதன்றிப் பசுமை நிறத்தானும் ஒக்கும் என்பதாம்.

பொருத்தம்: வெற்றித் திருவின் தோள்களை மூங்கிலானது அளவினாலும் வடிவினாலுமே அன்றி நிறத்தினாலும் ஒக்கும் என்பதால் இது சமுச்சய உவமையாயிற்று. சமுச்சயம் என்பது இரண்டு மூன்று முதலியவைகளின் கூட்டம் ஆகும்.

### 11.2..2.5 உண்மை உவமை

உவமையைக் கூறி மறுத்துப் பின் பொருளினையே கூறி முடிப்பது உண்மை உவமை எனப்படும்.

தாமரை யன்று முகமேயீ தீங்கிவையும்

காமருவண் டல்ல கருநெடுங்கண் - தேமருவு

வல்லியி னல்லள் இவளென் மனங்கவரும்

அல்லி மலர்க்கோதை யாள் "

விளக்கம்: இது தாமரை மலரன்று முகமே; இவையும் வண்டல்ல, கறுத்து நீண்ட கண்களே; தேன் மருவப்பட்ட கொடியல்லள் இவள் மடந்தையே. இத்தன்மைத்தாகிய அவயவங்களுடைய இவள் என்னுள்ளம் கவரும்

அகவிதழ்களையுடைய பூவாற் செய்யப்பட்ட மாலையினையுடையவள் என்பதாம்.

பொருத்தம்: முகம், கண், பெண், ஆகிய மூன்று பொருள்களுக்கும் முறையே தாமரை, வண்டு, வல்லி ஆகிய மூன்று உவமைகளைக் கூறிப் பின்பு மறுத்துச் சொல்லப்பட்டமையால் இது உண்மை உவமையாயிற்று.

### 11.2..2.6 மறுபொருள் உவமை:

முன்னர் வைத்தபொருட்கு நிகராவதொரு பொருளைப் பின்னர் வைப்பது இவ் உவமை ஆகும்.

அன்னைபோல் எவ்வுயிருந் தாங்கும் அனபாயா !

நின்னையார் ஒப்பார் நிலவேந்தர் - அன்னதே

வாரி புடைசூழ்ந்த வையகத்திற் கில்லையால்

சூரியனே போலுஞ் சுடர்"

விளக்கம்: தாயிற்கு ஒப்பாக எவ்வகைப்பட்ட உயிர்களையும் தாங்கும் அனபாயனே ! நிலத்திலுண்டாகிய வேந்தரில் உன்னை ஒப்பார் யாருமில்லை; அதுபோலக் கடல் சூழ்ந்த வையகத்திற்குச் சூரியனை ஒக்குஞ் சுடரும் இல்லை என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் முன்னர் வைத்த பொருள் அனபாயன். பின்னர் வைத்த பொருள் சூரியன் . உலகிற்கு அனபாயனைப்போல் தாங்குநர் எவரும் இல்லையாதல்போல, இருளை நீக்குதற்கும் சூரியனையொத்த சுடர் இல்லை எனக் கூறுதலின் இது மறுபொருளுவமையாயிற்று.

### 11.2..2.7 புகழுவமை

உவமையைப் புகழ்ந்து உவமிப்பது .

இலறயோன் சடைமுடிமேல் எந்நாளுந் தங்கும்

பிறையோர் திருநுதலும் பெற்ற - தறைகடல்சூழ்

பூவலயந் தாங்கும் அரவின் படம்புரையும்

பாவைநின் னல்குற் பாப்பு"

விளக்கம்: ஒலிக்கின்ற கடலாற் சூழப்பட்ட நிலப்பரப்பைத் தாங்குகின்ற சேடனுடைய படப்பரப்பை ஒத்திருக்கின்றது உனது அல்குல்; அதுவேயன்றி, முக்கட் கடவுள் முடியினைப் பிரியாது எந்நாளும் தங்கும் பிறையினுடைய அழகினை நின்னுடைய நுதலும் பெற்றது; ஆதலால் பெண்ணே! நின்னுருவத் தன்மையிருந்தபடியென் ?

குறிப்பு

பொருத்தம்: நுதலுக்குக் உவமையான பிறையும், அல்குலுக்கு உவமையான அரவின் படமும் முறையே “இறையோன் சடைமுடிமேல் எந்நாளும் தங்கும்”என்றும், “அறைகடல்சூழ் பூவலயந் தாங்கும்” என்றும் புகழ்ந்து உவமிக்கப் பட்டிருத்தலின் இது புகழுவமை ஆயிற்று.

### 11.2..2.8 நிந்தையுவமை

உவமையைப் பழித்து உவமிப்பது நிந்தை உவமை எனப்படும்.

“மறுப்பயின்ற வாண்மதியு மம்மதிக்குத் தோற்கும்

நிறத்தலரு நேரொக்கு மேனும் - சிறப்புடைத்துத்

தில்லைப் பெருமா னருள்போல் திருமேனி

முல்லைப் பூங்கோதை முகம்“

விளக்கம்: தில்லையில் கூத்தாடுகின்ற சிவபெருமான் அருளையொத்த அழகிய மேனியினையுடைய, முல்லைப் பூவாற் செய்யப்பட்ட மாலையினை உடையவளது முகமானது மறுப்பிரியாத ஒளியினையுடைதாகிய சந்திரனும், அம்மதியத்திற்குக் கருகுகின்ற தாமரை மலரும் உவமிக்கப் பொருந்துமெனினும் சிறப்புடையது ஆகும்.

பொருத்தம்: முகத்திற்கு உவமையாகிய மதியையும், தாமரையையும் முறையே களங்கம் உடையது என்றும், சந்திரனுக்குத் தோற்கும் என்றும் பழித்துப் பின் “நேரொக்குமேனும்” என்று உவமித்துக் கூறியமையால் இது நிந்தை உவமையாயிற்று என்பதாயிற்று.

### 11.2..2.9 நியம வுவமை

இன்னதற்கு இன்னதே உவமையாம் எனத் தேற்றேகாரம் தந்து துணிந்து சொல்லுவது நியம உவமை எனப்படும்.

தாதொன்று தாமரையே நின்முகம் ஒப்பதுமற்

றியாதொன்று மொவ்வா திளங்கொடியே! - மீதுயர்ந்த

சேலே பணியப் புலியுயர்த்த செம்பியர்கோன்

வேலே விழிக்கு நிகர்“

விளக்கம்: இளங்கொடியை ஒத்தவளே! எல்லாருடைய கொடிக்கு மேலாகிய உயர்ந்த பாண்டியனுடைய மீன்கொடி தாழத், தனது புலிக்கொடியை உயர்த்தியவன் சோழன். அவனுடைய வேலே விழிக்கு நிகராகும். மகரந்தங்கள் பொருந்தியிருக்கப்பட்ட தாமரை மலரே நின்முகத்தை ஒப்பது; இவையல்லது உன் விழியினை உலகத்துண்டாகிய பொருள்கள் யாவும் ஒவ்வாது.

பொருத்தம்: முகத்திற்கும் விழிக்கும் உவமை கூறும்பொழுது தாமரையே நின்முகம் ஒப்பது என்றும், வேலே விழிக்கு நிகர் என்றும் தேற்றேகாரம் தந்து துணிந்து சொல்லியிருப்பதால் இது நியம உவமையாயிற்று. நியமம் என்பது வரையறைப்படுத்தி உரைப்பது எனப் பொருள்படும்.

### 11.2..2.10 அநியம உவமை

நியமித்த உவமையை விலக்கிப் பிறிதும் இத்தன்மைத்தாம் என வரையறுத்து உரைப்பது அநியம உவமை எனப்படும்.

கௌவை விரிதிரைநீர்க் காவிரிசூழ் நன்னாட்டு
மௌவல் கமழுங் குழன்மடவாய்! - செவ்வி
மதுவார் கவிரேநின் வாய்போல்வ தன்றி
அதுபோல்வ துண்டெனினு மாம்"

விளக்கம்: பரந்த அலைகளை உடைய நீரையுடைய காவிரி சூழ்ந்த நன்னாட்டின் மௌவற் பூவாற் செய்த மாலையானது சூட்டப்பெற்ற கூந்தலினை உடைய பெண்ணே! செவ்வியும் தேனும் நிறைந்த முருக்கு இதழே நின்வாயை ஒப்பது; அதுவன்றி, அப்பூப் போன்றன உலகத்து உண்டாயினும் நின்வாயை ஒக்கும் என்பதாம்.

பொருத்தம்: வாய்க்கு முருக்கிதழே உவமை கூறத்தகும் என முன்னர் நியமித்துப், பின்பு அம்முருக்கிதழ் போன்ற பிற பொருள்களுண்டெனினும் அதற்குவமையாகும் எனக் கூறியதனால் இது அநியம உவமையாயிற்று. அநியமம் என்பது வரையறையின்றி உரைப்பது என்பதாகும்.

### 11.2..2.11 ஐயவுவமை

உவமையையும் பொருளையும் ஐயுற்று உரைப்பது ஐயவுவமை எனப்படும்.

தாதளவி வண்டு தடுமாறுந் தாமரைகொல் !
மாதர் விழியுலவு வாண்முகங்கொல் ! - யாதென்
றிருபாற் கவர்வுற் றிடையூச லாடி
ஒருபாற் படாதென் னுளம்"

விளக்கம்: தாதைக் கலந்து வண்டுகளால் சூழப்பட்ட தாமரை மலரோ! காதலைச் செய்கின்ற விழி உலவுகின்ற ஒளியினையுடைய முகமண்டலமோ ! என்னென்று என் மனமானது ஊசலைப் போல் ஆடி இருதலைப்பட்டு ஒன்றின் பால் என் மனம் துணிகின்றதில்லை.

பொருத்தம்: தாமரையாகிய உவமையையும், முகமாகிய பொருளையும் உறுதியாகத் தெரியாது இதுவோ, இதுவோ என ஐயுற்று உரைத்தலின் இது ஐயவுவமையாயிற்று.

### 11.2..2.12 தெரிதருதேற்ற உவமை

ஐயுற்றதனைத் தெரிந்து துணிந்து உரைப்பது தெரிதருதேற்ற உவமை எனப்படும்.

தாமரை நாண்மலருந் தண்மதியால் வீறழியும்

காமர் மதியுங் கறைவிரவும் - ஆமிதனால்

பொன்னை மயக்கும் புனைசுணங்கி னார்முகமே

என்னை மயக்கு மிது"

விளக்கம்: நாளின் காலையில் மலருந் தாமரையும் குளிர்ந்த மதியினாலே அழகு கெடும்; அழகிய மதியும் களங்கத்தோடு கூடியிருக்கும்; ஆதலால், என்னை மயக்கஞ் செய்த இது, பொன்னை ஒப்பாக அலங்கரிக்கப்பட்ட சுணங்கினையுடையாளுடைய முகமே ஆகும்.

பொருத்தம்: முகத்தைக் கண்டு இது தாமரையோ, மதியோ என முன்னர் ஐயுற்றுப் பின்னர், அது தாமரையானால் மதியத்தைக்கண்டு குவியும்; மதியானால் களங்கம் உடைத்தாயிருக்கும்; இவ்விரண்டும் இன்றி எஞ்ஞான்றும் மலர்ச்சியும், களங்கமின்றியும் இருத்தலால் முகமே எனத் தெளிந்து உரைக்கப்பட்டுள்ளமையின் இது தெரிதருதேற்ற உவமையாயிற்று.

### 11.2..2.13 இன்சொலுவமை:

பொருளினும் உவமைக்கொரு மிகுதி தோன்றக் கூறி உவமித்து, இன்ன மிகுதியையுடையதாயினும் ஒப்பதன்றிச் சிறந்ததன்று என உரைப்பது.

மான்விழி தாங்கு மடக்கொடியே ! நின்வதனம்

மான்முழுதுந் தாங்கி வருமதியம் - ஆனாலும்

முற்றிழை நல்லாய் ! முகமொப்ப தன்றியே

மற்றுயர்ச்சி யுண்டோ மதிக்கு"

விளக்கம்: மடக்கொடியே ! உன்னுடைய முகமானது மானின்விழி ஒன்றனையே தாங்கி நின்றது; ஆகாயத்தில் வருகின்ற மதியானது மானின் அவயவம் முழுதும் தாங்கி நின்றது; இப்படி மதியானது முழுவதுந் தாங்கி நின்றிடினும் உன் முகத்தை ஒப்பதன்றியே விசேடமுடைத்தாகவற்றே அம்மதியம் ?

பொருத்தம்: இதில் முன்னர் கூறப்பட்ட பொருள் முகம். உவமப் பொருள் மதியம். முகம் மானின் விழியை மட்டுமே கொண்டுள்ளது. மதியோ மான் வடிவம் முழுவதையும் தாங்கி நிற்கின்றது. இவ்வாறு முகத்தினும் மதி உயர்ந்திருப்பினும், அம்மதியும் முகத்திற்கு உவமையாதல் அன்றி வேறு உயர்வு கூறப்படுதற்குண்டோ ? எனக்கூறுதலின் இது இன்சொல் உவமையாயிற்று.

### 11.2..2.14 விபரீதவுவமை

உவமையாய் வருவதனைப் பொருளாக்கிப், பொருளாய் வருவதனை உவமையாக்கியுரைப்பது.

திருமுகம் போல்மலருஞ் செய்ய கமலம்

கருநெடுங்கண் போலுங் கயல்கள் - அரிவை

இயல்போலு மஞ்ஞை யிடைபோலும் கொம்பர்

மயல்போலும் யாம்போம் வழி”

விளக்கம்: பெண்ணின் திருமுகத்தை ஒத்து மலரும் சிவந்த தாமரை; கறுத்த நெடிதாகிய கண்கள் போலும் கயல்கள்; சாயல்போலும் மயில்; மருங்குல் போலும் கொம்பு; ஆதலால் இவ்வழியில் நாம் போகின்ற போக்கு மயல் போலும்.

“ஒவத் தன்ன வுண்டுறை மருங்கிற்

கோவத் தன்ன கொங்குசேர் புறைத்தலின்

வருமுலை யன்ன வண்முகை யுடைந்து

திருமுக மவிழ்ந்த தெய்வத் தாமரை” -சிறுபாண்: 70 – 73 )

பொருத்தம்: :பழங்காலம் தொட்டுப் பெண்களின் முகத்திற்குத் தாமரையையும், கண்களுக்குக் கயலையும், சாயலுக்கு மயிலையும், இடைக்குக் கொம்பையும் உவமை கூறல் இயல்பாகும். அவ்வியல்பை மாற்றித் தாமரை, கயல், மயில், கொம்பு ஆகிய உவமைப்பொருள்களைப் பொருளாக்கியும் முகம், கண், சாயல், இடை ஆகிய பொருள்களை உவமையாக்கியும் கூறப்பட்டிருத்தலின் இது விபரீத உவமையாயிற்று.

### 11.2..2.15 இயம்புதல் வேட்கை உவமை

பொருளை இன்னது போலுமென்று சொல்ல விரும்புகின்றது என் உள்ளம் என உரைப்பது.

நன்றுதீ தென்றுணரா தென்னுடைய நன்னெஞ்சம்

பொன்றுதைந்த பொற்சுணங்கிற் பூங்கொடியே ! - மன்றல்
மடுத்ததைந்த தாமரைநின் வாண்முகத்திற் கொப்பென்
றெடுத்தியம்ப வேண்டுகின்ற தின்று"

விளக்கம்: பொன் சேர்ந்தது போன்ற அழகிய சுணங்கினையும் பொலிவினையும் பெற்று கொடியை ஒத்தவளே! நன்று, தீது என்பதனை ஒன்றும் தெறியாது நறுநாற்றத்தை உடையதாய் மடுவிடத்து நின்று நின்ற தாமரையை, உன் ஒளியினையுடைய முகத்திற்கு ஒப்பாம் என்று எடுத்துரைக்க வேண்டுகின்றது இன்று என் நெஞ்சம் என்பதாம்.

பொருத்தம்: இதனுள் எடுத்துக் கூறப்படும் பொருள் முகம், நன்றென்றோ தீதென்றோ உணராமல் இம்முகத்திற்குத் தாமரையை ஒப்பாகச்சொல்ல வேண்டுகின்றது என் உள்ளம் என்று கூறப்பட்டிருப்பதால் இது இயம்புதல் வேட்கை உவமையாயிற்று.

### 11.2..2.16 பலபொருளுவமை

ஒருபொருட்குப் பலபொருட்களை உவமையாய்க் காட்டுவது பலபொருள் உவமை ஆகும்.

"வேலுங் கருவிளையு மென்மானுங் காவியும்
சேலும் வடுவகிருஞ் செஞ்சரமும் - போலுமால்
தேமருவி யுண்டு சிறைவண் டறைகூந்தற்
காமருவு பூங்கோதை கண்"

விளக்கம்: மதுவை விரும்பியுண்ட வண்டு ஒலிக்கின்ற கூந்தலையும், அழகிய மாலையையும் உடையவளுடைய கண்கள் வேலையும், கருவிளைமலரையும் மிருதுவாகிய நோக்கத்தையுடைய மானையும், காவி மலரையும், சேலையும், மாவடுவையும்,செவ்விய சரத்தினையும் போலும் உள்ளன என்பதாம்.

பொருத்தம்: இதனுள் கண்ணாகிய ஒரு பொருளுக்கு வேல்,கருவிளை மலர், மான், நீலம், மீன், மாவடு, அம்பு ஆகிய பல பொருள்களையும் உவமை கூறப்பட்டிருத்தலால் இது பல பொருளுவமையாயிற்று.

### 11.2..2.17 விகார உவமை

ஓர் உவமையை விகாரப்படுத்தி உவமிப்பது.

சீத மதியி னொளிஞ் செழுங்கமலப்
போதின் புதுமலர்ச்சி யுங்கொண்டு-வேதாதன்

கைம்மலரா லன்றிக் கருத்தால் வகுத்தமைத்தான்

மொய்ம்மலர்ப்பூங் கோதை முகம்,"

விளக்கம்: மலர்களாற் பொலிவு பெற்ற கூந்தலினையுடையவள் முகத்தினைப் பிரமன், மதியில் உண்டாகிய ஒளியினையும், செழித்த தாமரைப்போதில் உண்டாகிய புதிய மலர்ச்சியையுங் கொண்டு, தன் கைத்தாமரையினாலன்றித் தன்னுள்ளக் கருத்தால் வகுத்து அமைத்தான் என்பதாம்.

பொருத்தம்: முகத்திற்கு உவமையாகக் கூறப்படும் மதி, மலர் ஆகிய இரண்டையும் முழுமையாக உவமமாக்கிக் கூறாது அவற்றின் ஒளி,மலர்ச்சி ஆகிய இரண்டை மட்டுமே பிரித்து உவமையாகக் கூறப்பட்டிருத்தலின் இது விகாரவுவமை யாயிற்று.

### 11.2..2.18 மோக உவமை

ஒரு பொருள்மேல் எழுந்த விருப்பத்தால் வந்த உள்ள மயங்கம் தோன்ற உரைப்பது.

கயல்போலு மென்றுநின் கண்பழிப்பல் கண்ணின்

செயல்போற் பிறழுந் திறத்தாற் - கயல்புகழ்வல்

ஆரத்தா னோமருங்கு லந்தரள வாண்முறுவல்

ஈரத்தா லுள்வெதும்பும் யான்"

விளக்கம்: முத்தினால் செய்யப்பட்ட அணியால் வருந்துகின்ற இடையினையும் முத்தின் ஒளிபோன்ற புன்னகையையுமுடையாய்! உன்னுடைய குறிப்பினால் மனம் அழியும் நான், கயல்போலும் என்று உன் கண்ணினைப் பழிப்பேன். நின் கண்போல் பிறழும் தன்மையால் கயலைப் புகழ்வேன் என்பதாம்.

பொருத்தம்:: இது கண்ணாகிய ஒரு பொருளை அதற்கு உவமையான கயலுடன் மயக்கந் தோன்ற உவமித்துக் கூறலினால் மயக்கவுவமை ஆயிற்று. கண், கயல்போலுள்ளன எனப் பழித்துப் பின் அக்கயல் கண்போல் உள்ளது எனப் புகழ்தல், கண்ணாகிய அப்பொருள்மேல் எழுந்த உள்ள மயக்கத்தால் ஆகும்.

### 11.2..2.19 அபூதவுவமை

முன்பு இல்லாத ஒன்றினை உவமையாக்கி உரைப்பது.

"எல்லாக் கமலத் தெழிலுந் திரண்டொன்றின்

வில்லோ் புருவத்து வேனெடுங்கண் --நல்லீர்!

குறிப்பு

முகம்போலு மென்ன முறுவலித்தார் வாழும்

அகம்போலுமெங்க ளகம்"

விளக்கம்: வில்லினை ஒத்த புருவத்தினையும், வேல் போன்ற நெடிய கண்ணினையும் உடைய நல்லீர்! உம்முடைய முகத்தினை ஒக்கும் எங்குமுள்ள தாமரைப்பூக்களின் செவ்வியும் செறிந்தொன்றுமாயின் என, முறுவலைச் செய்தார் மருவி வாழும் இடம் போன்றது எங்கள் உள்ளம் என்பதாம்.

பொருத்தம்: அபூதம் என்றால் இல்லாதது என்று பொருள் ஆகும். தாமரையும் அதன் எழிலும் உலகில் உள்ள பொருளே எனினும், எல்லாத் தாமரைகளின் அழகும் சேர்ந்து ஒன்றுதல் இல்பொருள் ஆகும். அவ்வழகு அனைத்தும் சேர்ந்து ஒன்றின் முகத்தை ஒக்கும் எனவே இது அபூதவுவமையாயிற்று. இதனை, "இல்பொருளுவமை"என்றும் வழங்குவர்.

**11.2..2.19 பலவயிற்போலி யுவமை**

ஒரு தொடர்மொழிக்கண் பல உவமை வந்தால், வந்த உவமைதோறும் உவமைச் சொல் தோன்றப் புணர்ப்பது பலவயிற் போலி உவமை ஆகும்.

"மலர்வாவி போல்வரான் மாதர் கமல

மலர்போலு மாதர் வதனம்-மலர்சூழ்

அளிக்குலங்கள் போலு மளக மதனுட்

களிக்குங் கயல்போலுங் கண்"

விளக்கம்: தாமரை மலர்ந்த குளம் போல்வார் மாதர்; தாரமரை மலர் போலும் மாதர் வதனம்; மலர் சூழ்ந்த வண்டின் குலம் போலும் அளகம்; அதனுள் களிக்கும் கயல்போலும் கண்கள்.

பொருத்தம்:பலவயின் பலவிடத்தும். இதன்கண் அடிதொறும் உவமிக்கப்பட்டு,அங்ஙனம் உவமிக்கப்பட்ட இடங்களிலெல்லாம் போல என்னும் உரும உருபு வந்தமையால் இது பலவயிற்போலி உவமையாயிற்று.

**11.2..2.20 ஒருவயிற்போலி யுவமை**

ஒரு தொடர் மொழிக்கண் பல உவமை வந்தால், அவ்வாறு வந்த உவமைதோறும் உவமைச்சொற் வராது ஓர் உவமைச் சொற் புணர்ப்பது சொல்வது ஒருவயிற் போலி உவமை ஆகும்.

"நிழற் கோப மல்க நிறைமலர்ப்பூங் காயா

சுழற்கலவ மேல்விரித்த தோகை - தழற்குலவு

தீம்புகை யூட்டுஞ் செறிகுழலார் போலுங்கார்

யாம்பிரிந்தோர்க் கென்னா மினி"



விளக்கம்: காயாமலரின் நிழலின்கண் இந்திர கோபஞ் செறிய, அப்பொலிவினை உடைய காயாவின் நிறைந்த மலரின் சூழலிலே தன் தோகையை விரித்த மயிலானது தழலின்கண் தோன்றிய நறும்புகையினையூட்டும் செறிந்த குழலினையுடைய மடவாரைப் போலுங் கார்காலம்; நான் பிரிந்து போகப்பட்டாருக்கு என்னாம் இனி?

பொருத்தம்: இப்பாடலில் கார்காலம் பற்றிய நிகழ்ச்சி கூறப்படுகின்றது. அக்கார்காலத்தைக் கண்டு மகிழும் மயிலுக்குத் தழற்புகை யூட்டும் பெண்களை உவமையாகக் கூறுகின்ற பொழுது, மயில் பெண்களை ஒக்கும் என்ற இடத்தில் மட்டும் "போலும்" என்ற உருபை விரித்து, ஏனைய இடங்களில் எல்லாம் அவ்வுருபை விரித்துக் கூறாமையின் இது ஒருவயிற்போலியுவமை ஆயிற்று.

### 11.2..2.21 கூடாவுவமை

ஒரு பொருட்குக் கூடாதவதனைக் கூடுவதாகக்கொண்டு அதனை ஒன்றற்கு உவமை யாக்கி உரைப்பது.

சந்தனத்திற் செந்தழலுந் தண்மதியில் வெவ்விடமும்

வந்தனவே போலுமால் நும்மாற்றம்- பைந்தொடியீர்!

வாவிக் கமல மதிமுகங்கண் டேக்கறுவார்

ஆவிக் கிவையோ வரண்"

விளக்கம்: பைந்தொடியீர்! சந்தனத்தின்கண் செந்தழலும், குளிர்ந்த மதியினிடத்து வெவ்விய விடமும் பிறந்தாற்போலும், நும்முடைய வார்த்தைகள்; ஆனால், குளிர்ந்த வாவியிடத்துக் கமலமலரும் மதியமும் போலும் நும்முகங்கண்டு ஏக்கறுவார் ஆவிக்கு இவையோ காவல் என்பதாம்.

பொருத்தம்: சந்தனத்தில் நெருப்பும், மதியில் விடமும் தோன்றக் கூடாதன. இவற்றைத் தோழியிடமிருந்து வந்த சொல்லிற்கு உவமை கூறினமையின் கூடாவுவமை யாயிற்று.

### 11.2..2.22 பொது நீங்குவமை

உவமையைக் கூறி மறுத்துப் பொருள்தன்னையே உவமையாக உரைப்பது பொது நீங்குவமை எனப்படும்.

திருமருவு தண்மதிக்குஞ் செந்தா மரையின்

விரைமலர்க்கு மேலாந் தகையால்-கருநெடுங்கண்

மானே! யிருளளகஞ் சூழ்ந்தநின் வாண்முகம்

தானே யுவமை தனக்கு"

குறிப்பு

விளக்கம்: கரிய நெடிய கண்களையுடைய மானே ! குளிர்ந்த மதிக்கும், சிவந்த தாமரையினது நறு நாற்றத்தையுடைய மலருக்கும் மேலாகிய தன்மையை உடையதாதலான், இருளாகிய கூந்தல் சூழ்ந்த உன் ஒளியினையுடைய முகம் தானே தனக்கு உவமையாம். வேறு உவமை இல்லை என்பது இதன் பொருள் ஆகும்.

பொருத்தம்: முகத்திற்கு உவமையாக மதி, தாமரை ஆகிய இரண்டையும் முன்னர்க் கூறி மறுத்துப், பின்பு அம்முகத்திற்கு அதுவே உவமையாகுமேயன்றி பிறிதில்லை என்பதால் இது பொது நீங்குவமையாயிற்று.

**11.2..2.23 மாலையுவமை**

ஒரு பொருட்குப் பல உவமை வந்தால். அவை ஒன்றோடொன்று இடைவிடாது தொடர்ச்சி உடையவாகப் புணர்த்திக் இறுதியில் பொருள்கூட்டி முடிப்பது.

மலயத்து மாதவனே போன்றும் அவன்பால்

அலைகடலே போன்றும் அதனுட் - குலவும்

நிலவலய மேபோன்றும் நேரியன்பா னிற்கும்

சிலைகெழுதோள் வேந்தர் திரு"

விளக்கம்: பொதிய மலை அகத்தியனைப் போன்றும், அகத்தியனால் உண்ணப்பட்ட அலையையுடைய கடல்போன்றும், அதனுள் உண்டாகிய நிலாவட்டம் போன்றும், சோழனுடைய இடத்தே பேராதே நிற்கும், வில்பயின்ற தோள்களையுடைய வேந்தர்களின் செல்வம் என்பதாம்.

பொருத்தம்: இதனுள் சோழனைவிட்டு நீங்காத செல்வத்திற்கு மூன்று உவமைகள் தரப்பட்டு, அம்மூன்றும் ஒன்றினோடு ஒன்று தொடர்ச்சியுடையவாகப் புணர்க்கப்பட்டுள்ளமையானும், இறுதியில் அப்பொருளைக் கூறி முடித்திருப்பதானும் இது மாலையுவமை என்பதாயிற்று.

**உவமை பிற அணிகளுடன் கூடிவரல்:**

அற்புதம் சிலேடை அதிசயம் விரோதம்

ஒப்புமைக் கூட்டம் தற்குறிப் பேற்றம்

விலக்கே ஏதுவென வேண்டவும் படுமே .

அற்புதமும், சிலேடையும், அதிசயமும், விரோதமும் ஒப்புமைக் கூட்டமும், தற்குறிப்பேற்றமும், விலக்கும், ஏதுவும் எனச் சொல்லப்பட்ட எட்டு அணிகளோடு கூடியும் வரும் அவ் உவமை என்னும் அணியாகும்.



குறிப்பு

அவை முறையே அற்புதவுவமை, சிலேடையுவமை, அதிசயவுவமை, விரோதவுவமை,ஒப்புமைக்கூட்டவுவமை, தற்குறிப்பேற்றவுவமை, விலக்குவமை, ஏதுவுவமை எனப்பெயர் பெறும்.

### 11.2..2.24 அற்புதவுவமை

குழையருகு தாழக் குனிபுருவந் தாங்கி

உழைய ருயிர்பருகி நீண்ட - விழியுடைத்தாய்

வண்டே றிருளளகஞ் சூழ வருமதியொன்

றுண்டேல் இவள்முகத்திற் கொப்பு "

விளக்கம்: குழை தாழ்ந்த முகத்தினை யுடையதாய், வளைந்த புருவத்தினை யுடையதாய்,கண்டாருடைய உயிரை உண்டு வளர்ந்த கண்களையுடையதாய், சுரும்புகளாலே மேவப்பட்டிருக்குங் குழலைச் சூழக்கொண்டு வருவதொரு மதியம் உண்டாயின் அது ஒன்றே இவளுடைய முகத்திற்கு ஒப்பாகும் என்பதாம்.

பொருத்தம்: பொருளின் குணங்களை உவமையில் ஏற்றி அற்புதந் தோன்றச் சொல்வது அற்புதவுவமையாம் எனப்படும். மேற்கண்ட பாடலில் கூறப்பட்ட பொருள் முகம் ஆகும் உவமை மதி என்பதாகும். காதில் குழை தாழ்தல், புருவம் தாங்கல், கண்டார் உயிருண்ணும் தோற்றமுடைய கண்ணையுடைத்தாதல், இருண்ட கூந்தல் உடைத்தாதல் ஆகியன பொருளின் குணங்களாகும். இவற்றை உவமையாகிய மதிக்கும் ஏற்றி, இத்தகைய மதியுண்டேல் இவள் முகத்திற்கு ஒப்பாகும் எனக்கூறலின் இது அற்புத உவமையாயிற்று.

### 11.2..2.25 சிலேடையுவமை:

இது இருவகைப்படும்; அவை முறையே செம்மொழிச் சிலேடையுவமையும், பிரிமொழிச் சிலேடையுவமையும் என்பதாகும்.

### 11.2..2.25.1 செம்மொழிச் சிலேடையுவமை: .

செந்திருவுந் திங்களும் பூவுந் தலைசிறப்பச்

சந்தத் தொடையோ டணிதழுவிச் - செந்தமிழ்நூல்

கற்றார் புனையுங் கவிபோல் மனங்கவரும்

முற்றா முலையாள் முகம் "

குறிப்பு

விளக்கம்: திருவென்றும், திங்களென்றும், பூவென்றும் சொல்லப்பட்டவற்றின் பெயரை முதலில் உடையதாய் ஓசையோடு சேர்ந்து, சொற்கோவையோடு அழகு புணர்ந்து, பயின்றார் உளங்கவருந்தன்மையடைய, செந்தமிழ் நூல் கற்றாராலே சொல்லப்பட்ட கவியைப்போல, திருவின் உருவத்தையும் திங்களின் உருவத்தையும் பூவையும் உச்சிமீதில் உடையதாய், பூமாலையோடும் அழகு தழுவிப் பயின்றார் உள்ளங்களைக் கவரும் முகம் என்பதால் இது செம்மொழிச் சிலேடை உவமை ஆயிற்று.

பொருத்தம்: சொற்கள் ஒரு பொருளன்றிப் பலபொருட்பட வருமானால் அவை சிலேடையாம் . அங்ஙனம் ஒரு சொல் ஒன்றிற்கும் மேற்பட்ட பொருளைத்தரும் பொழுது, ஒரே தன்மைத்தாய் நின்று பொருள்படுமேல் செம்மொழிச் சிலேடையாகும்.இப்பாடலிலுள்ள சொற்கள் கவிக்கும், முகத்திற்கும், ஒரே தன்மைத்தாய் நின்று பொருள்படுவதால் செம்மொழிச் சிலேடையாயிற்று. கூறப்பட்ட இருபொருளில் கவியை முகத்திற்கு உவமை கூறுதலின் உவமையுமாயிற்று . எனவே இது செம்மொழிச் சிலேடையுவமையாம் என்பதாயிற்று.

### 11.2..2.25.2 பிரிமொழிச் சிலேடையுவமை

நளிதடத்த வல்லியின் கண்ணெகிழ ஞாலத்

தளவி னிறைகடாஞ் சிந்திக் - களிறிகலும்

கந்த மலையா நிலவுங் கவடசைய

வந்த மலையா நிலம் “

விளக்கம்: செறிவினையும் பெருமையினையுமுடைய காலிலே, இருக்கின்ற விலங்கின் கண் தேய தரைமீது நிறைந்த கடாம் பொழியத் தறியைச் சீறிக் கயிறு அசையவரும் யானையினைப் போன்று, தென்றல் பெரிய பொய்கையின் பூவில் தேன்சோர உலகத்தார் நிறைகளை அழித்து விரைகமழ நெருங்கிய பணைகளை அசைத்து வருகின்றது.

பொருத்தம்: இப்பாடலிலுள்ள சொற்கள் யானைக்கும் தென்றல் காற்றிற்கும் பொதுமையாக நிற்றலானும் , அவற்றுள் பெரும்பாலான சொற்கள் ஒவ்வொரு பொருட்கும் ஒவ்வொரு விதமாகப் பிரிந்து பொருள்படுதலானும் பிரிமொழிச் சிலேடையாயிற்று. யானையைத் தென்றல் காற்றிற்கு உவமை கூறலின் உவமையாயிற்று. எனவே இது பிரிமொழிச் சிலேடையுவமையாயிற்று.

### 11.2..2.26 அதிசயவுவமை

நின்னுழையே நின்முகங் காண்டும் நெடுந்தடம்

தன்னுழையே தன்னையுங் காண்குவம் - என்னும்

இதுவொன்று மேயன்றி வேற்றுமை யுண்டோ

மதுவொன்று செந்தா மரைக்கு "

விளக்கம்: நல்லாய் ! உன்னிடத்திலே நின் முகத்தினைக் கண்டு நின்றோம்; பெரிதாகிய பொய்கையிலே தாமரையையும் கண்டு நின்றோம் என்கிற இத்தன்மையை அன்றி பிறிது வேறுபாடு ஏதும் மதுவினையுடைத்தாகிய தாமரைக்கும் நின் முகத்திற்கும் கண்டிலோம்.,

பொருத்தம்: முகத்தின் அழகை உவந்து, அதற்கும் உவமையாகிய தாமரைக்கும், அவை சார்ந்திருக்கும் இடங்களாலன்றி வேற்றுமையில்லையென அதிசயிக்குமாறு கூறப்பட்டிருத்தலின் அதிசயவுவமையாயிற்று .

### 11.2..2.27 விரோத உவமை

செம்மை மரைமலருந் திங்களும் நும்முகமும்

தம்மிற் பகைவிளைக்குந் தன்மையவே - எம்முடைய

வைப்பாகுஞ் சென்னி வளம்புகார் போலினியீர் !

ஒப்பாகும் என்பா ருளர்"

விளக்கம்: எமது செல்வமாகிய சோழனது புகார்போன்ற இனிமையையுடையீர் ! சிவந்த தாமரைமலரும், மதியமும், உமது முகமும் தமக்குள்ளே பகை பெருக்கும் தன்மை உடையதாய் இருக்க, இவற்றை உவமைக்குப் பொருந்தும் என்பாரும் உளர்; இதற்குக் காரணஞ் சொல்லுவீர் என்பதாம்.

பொருத்தம்: தாமரை மலரும் பொழுது சந்திரன் ஒளி கெடுதலும், சந்திரன் ஒளிதருங்கால் தாமரை குவிதலும், முகம் மலர்ந்து ஒளி தரும்பொழுது இவ்விரண்டும் ஒருங்கு ஒளிகெடுதலும் விரோதமாம். எனினும் முகத்திற்குத் தாமரை மதியம் ஆகிய இரண்டையுமே ஒப்பாகக் கூறுவர் என்பதால் உவமையுமாயிற்று.

### 11.2..2.28 ஒப்புமைக் கூட்டவுவமை

"விண்ணின்மேற் காவல் புரிந்துறங்கான் விண்ணவர்கோன்

மண்ணின்மே லன்னை வயவேந்தே ! - தண்ணளியில்

சேரா வவுணர் குலங்களையுந் தேவர்கோன்

நேரார்மேல் அத்தகையை நீ "

விளக்கம்: விண் உலகத்தைக் காக்குந்தொழிலின் மிக்கு உறங்காதவனாயினான்,இந்திரன்; அதேபோல் மண்ணின் மேல்

*இலக்கணம் - புறப்பொருளும் அணியிலக்கணமும்*

**குறிப்பு**

உண்டாகிய உயிர்களைக் காக்கவேண்டி, வலிமையுடைய வேந்தனே! நீயும் உறங்காதவனாயினாய்! உள்ளங் குளிர்ந்து பிறரைக் காக்குந் தன்மையிற் சேராத அசுரர் குலங்களைக் களையாநிற்கும் இந்திரன்; பகைவரிடத்திலே நீயும் அத்தன்மையையுடையவன் என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் காத்தல் தொழிற்கு ஒப்புமையுடையவராகக் கூட்டிச் சொல்லப்பட்டவர்கள் இந்திரனும் சோழனும் ஆவர். இவர்கள் இருவரும் காத்தலிலும், பகைத்திறங் களைதலிலும் ஒத்து விளங்கியமை கூறப்படுதலின் ஒப்புமைக் கூட்டமாயிற்று. சோழனுக்கு இந்திரனை உவமை கூறுதலின் உவமையுமாயிற்று

### 11.2..2.29 தற்குறிப்பேற்ற உவமை

இயல்பாக விளையும் தன்மையில் கவிஞன் தான் குறித்த கருத்தை ஏற்றிச் சொல்லுதல் தற்குறிப் பேற்றமாம்

"உண்ணீர்மை தாங்கி யுயர்ந்த நெறியொழுகி

வெண்ணீர்மை நீங்கி விளங்குமால் - தண்ணீர்த்

தரம்போலு மென்னத் தருகடம்பை மாறன்

கரம்போற் கொடைபொழிவான் கார்"

விளக்கம்: முதுவேனில் காலத்தில் தடத்தில் உண்டாகிய குளிர்ந்த நீர்போலச் சேர்ந்தோர் யாவர்க்கும் வருத்தம் நீங்கக் கொடுக்க வல்ல கடம்பையென்னும் பதியில் உண்டாகிய மாறன் என்னும் இயற்பெயரை உடையவனது கரம்போலக் கொடுக்க நினைத்து மேகமும் உள்ளே நீரையுடைத்தாய் உயர்ந்த வான் வழியே நடந்து வெளுத்த தன்மையை நீங்கி விளங்கிநின்றது.

பொருத்தம்: மேகம் மழை பொழியும் பொழுது தன்னுள்ளே நீரையுடைத்தாயிருத்தல் என்பதும், வானத்தில் இருத்தலும் வெண்ணிறம் நீங்கி விளங்குதலும் இயல்பானதாகும். இங்ஙனம் இயல்பாக இருப்பதை மாறன் கைபோல இருந்து கொடுக்கவேண்டும் என்பதற்காகத்தான் அம்முத்திறங்களையும் பெற்றிருந்தது எனக்கூறல் தற்குறிப்பேற்றமாம். மேகத்திற்குக் கையை உவமை கூறினமையின் உவமையுமாயிற்று . எனவே இது தற்குறிப்பேற்ற உவமையாயிற்று. .

### 11.2..2.30 விலக்குவமை

ஒரு பொருளோடு ஒரு பொருளை உவமித்து அவற்றிற்குள்ள ஒப்புமையை முன்னர்க்கூறிப் பின்பு , யாதானுமொரு செயற்றிறனால் அப்பொருளொடு உவமை ஒவ்வாது என விலக்கிக் கூறின் அது விலக்குவமையாம்.

"குழைபொருது நீண்டு குமிழ்மேன் முறியா
உழைபொருதென் லுள்ளங் கவரா - மழைபோல்
தருநெடுங்கைச் சென்னி தமிழ்நா டனையார்
கருநெடுங்கண் போலுங் கயல்"

விளக்கம்: மழையைப் போலக் கொடுக்கவல்ல பெரிய கையினையுடைய சென்னியுடைய தமிழ்நாட்டையொப்பாருடைய கரிய நெடிய கண்போலும் கயலும், சங்கொடு பொருது வளர்ந்து நீர்க்குமிழி மேலே மறிந்து தன்னிடத்திலே பொருதும், என்னுள்ளத்தைக் கவரமாட்டா என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் கயலைக் கண்ணிற்கு உவமித்து அவற்றிற்குள்ள ஒப்புமையை முன்னர்க்கூறிப் பின்பு, உள்ளங் கவராத தன்மையால் கண்ணினைக் கயல் ஒவ்வாது என விலக்கினமையின் விலக்குவமை யாயிற்று.

### 11.2..2.31 ஏதுவுவமை

"வாளரவின் செம்மணியும் வன்னியிளம் பாசிலையும்
நாளிளைய திங்கள் நகைநிலவும் - நீளொளியால்
தேனுலவு பூங்கொன்றைத் தேவர்கோன் செஞ்சடைமேல்
வானுலவு விற்போல் வரும்"

விளக்கம்: அரவின் சூட்டிலுண்டாகிய மணியானது சிவந்த ஒளியை மிகுத்தலானும், வன்னியாகிய மரத்தின் இளைய இலை தன்னுடைய பசுமையை மிகுத்தலானும், குழவித் திங்களானது தன்னுடைய வெண்மையை மிகுத்தலானும், தேனுலவப்பட்ட பொலிவையுடைய கொன்றையினது பூ தன்கண் உண்டாகிய புற்கென்ற நிறத்தை மிகுத்தலானும், தேவர்கட்குத் தலைவனாகிய முக்கட் கடவுளுடைய சிவந்த சடையானது வான்மீது உண்டாகிய வில்லுப்போலத் தோன்றுகின்றது.

பொருத்தம்: இன்ன ஏதுவால் இதனை இது ஒக்கும் என ஏதுவோடு கூட்டி உவமிக்கப்படுவது ஏதுவுவமையாம். சிவபெருமானுடைய சடை வானவில்லை யொக்கும் என்பதால் உவமையும், அங்ஙனம் வானவில்லைச் சிவபெருமானுடைய சடை ஒப்பதற்குக் காரணம் வானவில்லில் இருக்கும் செம்மை, பசுமை வெண்மை ஆகிய நிறங்களுக்கு ஏற்பச் சிவபெருமானுடைய சடையிலும் செம்மணி, வன்னி, திங்கள் ஆகிய முப்பொருளும் இருப்பதாலாம் என்பதால் ஏதுவும் கூறப்பட்டமையால் இது ஏதுவுவமை ஆயிற்று.

குறிப்பு

### 11.2..2.32 உவமைக்கு எய்தியதோர் வேறுபாடு

மிகுதலும் குறைதலும் தாழ்தலும் உயர்தலும்

பான்மாறு படுதலும் பாகுபா டுடைய .

உவமேய அடைக்கு உவமான அடை மிகப் புணர்தலும், உவமேய அடைக்கு உவமான அடை குறையப் புணர்தலும், இழிந்த உவமையோடு உயர்ந்த பொருள் உவமையாகலும், உயர்ந்த உவமையோடு இழிந்த பொருள் உவமையாகலும், ஆண்பாற்குப் பெண்பால் உவமையாகலும் பெண்பாற்கு ஆண்பால் உவமையாகலும், ஒருமைப்பாற்குப் பன்மைப்பால் உவமையாகலும், பன்மைப்பாற்கு ஒருமைப்பால் உவமையாகலு மாகிய வேறுபாடுடையன.

அவற்றுட் சில வருமாறு : -

#### 11.2..2.32.1 மிகுதல்

"நீலப் புருவங் குனிய விழிமதர்ப்ப

மாலைக் குழல்சூழ்ந்த நின்வதனம் - போலும்

கயல்பாய வாசங் கவருங் களிவண்

டயல்பாய வம்போ ருகம் "

விளக்கம்: கரிய நிறப் புருவம் வளையவும் கண்கள் களிப்படையவும் பூமாலை அணிந்த கூந்தலால் சூழப்பட்டது உனது முகம்.அதனைப் போல மலர்ந்த தாமரையானது கயல் மீன்கள் பிறழ்வது போலவும் மதுவினை உண்ட வண்டுகள் பாடிச் சுற்றுவது போலவும் காட்சியளிக்கின்றன.

பொருத்தம்:: தன்கண் முகம் உவமையாகவும் , தாமரை பொருளாகவும் கூறப்பட்டுள்ளது . உவமையாகிய முகத்திற்குப் புருவம் குனிதல், விழி மதர்த்தல், குழல் சூழ்தல் ஆகிய மூன்று அடைமொழிகளும், பொருளாகிய தாமரைக்குக் கயல் பாய்தல், வண்டு அயல் பாய்தல் ஆகிய இரு அடைமொழிகளும் கூறப்பட்டிருத்தலின் மிகுதற்கு எடுத்துக் காட்டாயிற்று.

#### 11.2..2.32.2 குறைதல்:

"நாட்டந் தடுமாறச் செவ்வாய் நலந்திகழ

தீட்டரிய பாவை திருமுகம் --காட்டுமால்

கெண்டைமீ தாட நறுஞ்சே யிதழ்கிளர

வண்டுசூழ் செந்தா மரை”

விளக்கம்: தீட்டற்கரியதாகிய கொல்லிப் பாவையினைப் போல அழகு வாய்ந்தவள் பெண்.அவள் கண்டாரால் விரும்பப்படும் தன்மை கொண்டவள்.அவளின் முகத்தில் கண்கள் தடுமாறி உலவின. சிவந்த வாய் அழகுடன் திகழ்ந்தது.அவளின் முகம்பேல் காணப்பட்டது தாமரை மலர். அதன் பக்கங்களில் கெண்டை மீன்கள் உலவின்.இதழ்கள் ஒளிவீசின. அச்செந்தாமரையை வண்டுகள் சூழ்ந்திருந்தன

பொருத்தம்: இதன்கண் முகம் உவமையாகவும், தாமரை பொருளாகவும் கூறப்பட்டுள்ளது. உவமையாகிய முகத்திற்கு நாட்டந் தடுமாறல், செவ்வாய் நலந்திகழல் ஆகிய இருஅடைமொழிகளும், பொருளாகிய தாமரைக்குக் கெண்டை மீதாடல், நறுஞ்சேய் இதழ் கிளரல், வண்டு சூழ்தல் ஆகிய மூன்று அடைமொழிகளும் கூறப்பட்டிருத்தலின் குறைதற்கு எடுத்துக் காட்டாயிற்று.

**11.2..2.33 தாழ்தலும் உயர்தலும் பால்மாறுபடுதலும்**

மன்னவர்க்கு நாய்போல் வனப்புடையர் வாள்வயவர்

மின்மினியும் வெஞ்சுடரோன் போல்விளங்கும் --அன்னப்

பெடைபோலுஞ் சந்திரன் பைந்தடங்கள் போலும்

மிடைமாசொன் றில்லா விசும்பு“

வேந்தரிடை நாயிடத்து உண்டாகிய நற்செய்தியைச் செய்தலால், வாளினையுடைய வலியோர் நாயை ஒப்பர்; மின்மினியும், வெய்ய சுடரோனைப் போல் விளங்கும்; அன்னப் பெடையை ஒக்கும், மதியம்; பசிய தடாகங்கள் போலும், செறிந்திருக்கப்பட்ட மாசில்லாத ஆகாயம் என்பதாம்.

“மன்னவர்க்கு நாய்போல் வனப்புடையர் வாள் வயவர்“ - இறப்ப இழித்து இன்னாதாகப் புணர்க்கப்பட்டது உவமை.

“மின்மினியும் வெஞ்சுடரோன்போல் விளங்கும்“ - மின்மினிக்கு நிகராக்கலாகாத வெஞ்சுடரோனை உவமிக்க உவமை வழுவாயிற்று.

அன்னப்பெடை போலுஞ் சந்திரன் - ஆண்பாற்குப் பெண்பால் உவமையாய்க் குற்றமாயிற்று.

பைந்தடங்கள் போலும் மிடைமாசொன்றில்லா விசும்பு - ஒருமைப் பாலுக்குப் பன்மைப் பாலை உவமை காட்ட வழுவாயிற்று. பிறவுமன்ன,

வி-ரை:வீரர்களுக்கு நாயை உவமை கூறியது தாழ்தல் பற்றிய உவமையாம். உயர்தல்--பொருளுக்குக் கூறப்பட்ட உவமை மிகவும் தாழ்ந்ததா யிருத்தல்.

குறிப்பு

**11.2..2.34 உவமவுருபுகள்**

போல மானப் புரையப் பொருவ
நேரக் கடுப்ப நிகர நிகர்ப்ப
ஏர ஏய மலைய இயைய
ஒப்ப எள்ள உறழ ஏற்ப
அன்ன அனைய அமர ஆங்க
என்ன இகல இழைய எதிரத்
துணைதூக்(கு) ஆண்(டு) ஆங்கு மிகுதகை வீழ
இணைசிவண் கேழ்,அற்றுச் செத்தொடு பிறவும்
நவைதீர் பான்மை உவமைச் சொல்லே.

போல முதல் செத்து ஈறாகச் சொல்லப்பட்ட முப்பத்தைந்தும், இவை போல்வன பிறவும் குற்றமற்ற பாகுபாடுடைய உவமைச் சொல்லாகும்.

“பிறவும்”என்றதனால், நாட, நக, நடுங்க, நந்த, கள்ள, கருத, காட்ட, மிளிர, ஏய்ப்ப, மருள எனபன முதலியுனவுங் கொள்ளப்படும்.

## 11.2.3 உருவகவணி - உருவக அணியின் வகை:

உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்(து)

ஒன்றென மாட்டின்அ.ஃ. து உருவகமாகும்.

உருவகம் என்னும் அலங்காரத்தின் பொது விலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று

உவமையாம் பொருளையும்,உவமிக்கப்படும் பொருளையும் வேறுபாடு ஒழிவித்து ஒன்றென்பதோர் உள்ளுணர்வு தோன்ற ஒற்றுமை தோன்றச் சொல்லின் அ.ஃ.து உருவகம் என்னும் அணியாகும்.

**உருவக அணியின் வகை:**

தொகையே விரியே தொகைவிரி யெனாஅ
இயைபே இயைபிலி வியநிலை யெனா அச்
சிறப்பே விருபகஞ் சமாதான மெனா அ
உருவகம் ஏகம் அநேகாங்க மெனா அ
முற்றே அவயவம் அவயவி யெனா அச்
சொற்றஜம் மூன்றும் மற்றதன் விரியே.

தொகையுருவகமும்,விரியுருவகமும்,தொகைவிரியுருவகமும்இயைபுருவகமும் ,இயைபிலியுருவகமும்,வியநிலையுருவகமும்,சிறப்புருவகமும்,விருபகவுருவகமும்,சமாதானவுருவகமும்,உருவகவுருவகமும்,ஏகாங்கவுருவகமும்,

அநேகாங்கவுருவகமும்,
முற்றுருவகமும்,அவயவவுருவகமும்,அவயவிவுருவகமும் எனச் சொல்லபட்ட பதினைந்தும் மேற்கூறிய உருவகத்து விரியாகும்.



### 11.2.3.1 தொகையுவருவகம்

தொகையுருவகம் என்பது ஆகிய என்னும் மாட்டேற்றுச் சொல் தொகுத்துக் கூறுவது.

"அங்கை மலரும் அடித்தளிருங் கண்வண்டும்

கொங்கை முகிழுங் குழற்காரும் - தங்கியதோர்

மாதர்க் கொடியுளதா னண்பா ! அதற்கெழுந்த

காதற் குளதோ கரை"

அழகிய கையாகிய மலரினையும், அடியாகியதளிரினையும், கண்ணாகிய வண்டினையும், கொங்கையாகிய அரும்பினையும்,குழலாகிய மேகத்தினையும் உடைத்தாய்ப் பிறர்க்குக் காதல் செய்யவற்றாய் இருப்பதொருகொடியுளது, நான் நெருநற் கண்டது; நண்பனே! அக் கொடிமேல் எழுந்த காதலுக்கு எல்லை உலகத்துண்டோ வெனில், இல்லையாயிருந்தது.

அங்கை மலர், அடித்தளிர், கண்வண்டு, கொங்கை முகிழ்,குழல்கார் மாதர்க் கொடி என்ற இடங்களில் ஆகிய என்னும் உருபு தொக்கு வருதலின் இது தொகையுருவகம் ஆயிற்று.

ஆகிய என்ற உருபு ஆக, ஆ எனக் குறைந்து நிற்றலும் உண்டு. அவை தொக்குநிற்பினும் தொகையுருவகமேயாம்.

### 11.2.3.2 விரியுருவகம்

விரியுருவகம் என்பது அச்சொல் விரிந்து நிற்பது.

"கொங்கை முகையாக மென்மருங்குல் கொம்பாக

அங்கை மலரா அடிதளிராத் - திங்கள்

அளிநின்ற மூர லணங்காம் எனக்கு

வெளிநின்ற வேனிற் றிரு".

விளக்கம்:: எனக்கு இளவேனிற் காலத்தைக் கொண்டு வெளிப்பட்ட திருவை ஒத்தவள்கொங்கை அரும்பாக, நுண்ணிடை வஞ்சிக் கொம்பாக, அழகிய கையே மலராக, அடி தளிராக, நிலவு போல வெள்ளிய

ஒளியினை யுடைத்தாய், நெருநல் தோன்றிய அணங்கு போன்று இருந்தாள்,

பொருத்தம்: இப்பாடலில் முகையாக கொம்பாக என்ற இடங்களில் “ஆக” என்ற உருபு விரிந்தும், மலரா, தளிரா என்ற இடங்களில் “ஆ” என்பது விரிந்தும் நிற்றலின் விரியுருவக மாயிற்று.

### 11.2.3.3 தொகைவிரியுருவகம்



தொகைவிரியுருவகம் என்பது அச்சொல் தொக்கும் விரிந்தும் நிற்பது.

வையந் தகளியா வார்கடலே நெய்யாக

வெய்ய கதிரோன் விளக்காகச் - செய்ய

சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை

இடராழி நீங்குகவே யென்று” .

விளக்கம்: எனது சொல்லினால் தொடுத்த மாலையை, துக்கமாகிய கடல் வறப்பதாக உலகமே தகளியாகவும், நெடிய கடலே நெய்யாகவும், வெம்மையை யுடைய பகலவனே விளக்காகவும், சிவந்த நிறத்தை யுடைத்தாகிய சக்கரத்தை யுடையான் அடிக்கே சேர்த்தினேன்.

பொருத்தம்: தகளியா, நெய்யாக, விளக்காக என்ற இடங்களில் அவ்வுருபு விரிந்தும், இடர்ஆழி என்றவிடத்து அவ்வுருபு தொக்கும்நிற்றலின், இது தொகைவிரி உருவகமாயிற்று .

### 11.2.3.4 இயைபுருவகம்

இயைபுருவகம் என்பது பல பொருளை உருவகஞ் செய்யுங்கால் தம்முள் இயைபுடையவாக வைத்து உருவகஞ் செய்வது.

செவ்வாய்த் தளிரும் நகைமுகிழுங் கண்மலரும்

மைவா ளளக மதுகரமும் - செவ்வி

உடைத்தாந் திருமுகமென் னுள்ளத்து வைத்தார்

துடைத்தாரே யன்றோ துயர்”

விளக்கம்: சிவந்த வாயாகிய தளிரினையும், நகையாகிய முல்லை அரும்பினையும், கண்ணாகிய மலரினையும், கரிய நீண்ட கூந்தலாகிய வண்டினையும், செவ்வியினையும் உடைய கண்டாரால் விரும்புந் தன்மையுடைத்தாகிய முகத்தை என்னுள்ளத்திலே வைத்தார்; இதனாலே என்னுடைய உள்ளத்திலுண்டாகிய துயரத்தை நீக்குவாரன்றோ ? சொல்லுவீராக.

பொருத்தம்: வாய், நகை, கண், கூந்தல் ஆகியன ஒன்றினொடொன்று இயைபுடைய பொருள்கள். இவற்றை முறையே தளிர், அரும்பு, மலர், வண்டுகளாகவும், அவை தமக்குள் இயைபுடையனவாகவும் உருவகிக்கப் பட்டுள்ளமையின் இது இயைபுருவகம் ஆயிற்று.



### 11.2.3.5 இயைபிலுருவகம்

இயைபிலுருவகம் என்பது பல பொருளுந் தம்முள் இயையாமை வைத்து உருவகஞ் செய்வது.

தேனக் கலர்கொன்றை பொன்னாகச் செஞ்சடையே

கூனற் பவளக் கொடியாகத் - தான

மழையாகக் கோடு மதியாகத் தோன்றும்

புழையார் தடக்கைப் பொருப்பு”

விளக்கம்: துளையை உடைத்தாகிய பெரிய கையையுடைய யானையாகிய மலை மதுவைக் கொண்டிருக்கும் கொன்றைமலர் பொன்னாகவும், சிவந்த சடை வளைந்து நன்மையுடைத்தாகிய பவளக் கொடியாகவும், மதம் மழையாகவும், மருப்பு மதியாகவும் தோன்றாநின்றது.

பொருத்தம்:விநாயகப் பெருமான் அணிந்திருக்கும் கொன்றை மலர், அவர்தம் சடை, மதம், மருப்பு ஆகிய பொருள்களை முறையே, தம்மில் இயைபற்ற பொருள்களான பொன், பவளக்கொடி, மழை, மதியாக உருவகிக்கப்பட்டுள்ளமையின் இது இயைபில் உருவகமாயிற்று.

### 11.2.3.6 வியநிலையுருவகம்

வியநிலையுருவகம் என்பது ஒன்றன் அங்கம் பலவற்றினுள் சிலவற்றை உருவகஞ் செய்தும் , சிலவற்றை உருவகஞ் செய்யாதும் உரைத்து , அங்கியை உருவகஞ் செய்து உரைப்பது .

செவ்வாய் நகையரும்பச் செங்கைத் தளிர்விளங்க

மைவாள் நெடுங்கண் மதர்த்துலவச் - செவ்வி

நறவலருஞ் சோலைவாய் நின்றதே நண்பா !

குறவர் மடமகளாங் கொம்பு”

விளக்கம்: நண்பனே ! குறவர்க்கு மடப்பத்துடனே கூடிய மகளாம் தன்மையுடைத்தாய் இருப்பதொரு வஞ்சிக்கொம்பு,சிவந்தவாய் எயிற்றை அரும்பச், செங்கரங்கள் தளிரை விளக்க, வருத்தம் செய்யும் வாளாகிய

கண்கள் சிவந்த அரியோடு உலாவப், புதிதாகிய தேனை யுடையதாய் மலரும் சோலையின்கண்ணே தோன்றிற்று ;

பொருத்தம் இப்பாடலில் கூறப்பட்ட பொருள் குறவர் மடமகள். இப்பெண்ணின் உறுப்புக்களில் இங்குக் கூறப்படுவன வாய், கை, கண் ஆகிய மூன்றுமாம். இவற்றுள் கையை மட்டும் தளிராக உருவகஞ் செய்து,ஏனைய உறுப்புக்களை உருவகிக்காதும், உறுப்பினையுடைய பெண்ணை மட்டும் கொம்பாக உருவகித்தும் இருத்தலின் இது வியநிலை யுருவகமாயிற்று.

### 11.2.3.7 சிறப்புருவகம்

சிறப்புருவகம் என்பது ஒரு பொருளை எடுத்து அதற்குச் சிறந்த அடைகளை உருவகஞ் செய்து அவற்றானே உருவகமாக்கி உரைப்பது ஆகும்.

விரிகடல்சூழ் மேதினி நான்முகன்மீ கானாச்

சுரநதிபா யுச்சி தொடுத்த - அரிதிருத்தாள்

கூம்பாக எப்பொருளுங் கொண்டபெரு நாவாய்

ஆம்பொலிவிற் றாயினதால் இன்று

விளக்கம்: கடல்சூழ்ந்த உலகமானது, நான்முகத்தோன் மீகாமனாகவும், கங்கை பாயாகவும், அப்பாயை உச்சியிலே உடைத்தாகிய திருமால் மேனோக்கி எடுத்த சீர்பாதம் கூம்பாகவும், பல வகைப்பட்ட பொருள்களையும் உடைத்தாய்ப் பெரிதாகிய அழகோடு கூடிய நாவாய் ஆனது.

பொருத்தம்: இதனுள் நான்முகன் மீகாமனாகவும், சுரநதி பாயாகவும், அரிதிருத்தாள் கூம்பாகவும் உருவகஞ் செய்யப் புவி நாவாய் ஆயினமையின் சிறப்புருவகம் ஆயிற்று.

### 11.2.3.8 விரூபகவுருவகம்

விரூபகவுருவகம் என்பது ஒரு பொருட்குக் கூடாத தன்மை பலவுங்கூட்டி உருவகஞ் செய்வது ஆகும்.

தண்மதிக்குத் தோலாது தாழ்தடத்து வைகாது

முண்மருவுந் தாண்மேன் முகிழாது - நண்ணி

இருபொழுதுஞ் செவ்வி இயல்பாய் மலரும்

விளக்கம்: என் காதலியின் முகமாகிய தாமரைதட்பத்தினையுடைய மதியின் தொழிற்குக் கெடாது, ஆழ்ந்த கயத்தில் தங்காது, முள்ளை

உடையதாகிய தாளின்மீது முகிழாது, காலையும் மாலையுஞ் சேர்ந்து செவ்வியை உடையதாய் மலர்ந்து நிற்கும்.

பொருத்தம்: மதிக்குத் தோலாமை, தடத்துள் வைகாமை, முள்தாளின் மீது முகிழாமை, இருபொழுதும் மலர்தல் ஆகிய இவை தாமரைக்குக்கூடாத தன்மைகளாம . இத்தன்மைகளை அதற்கு ஏற்றி, அத்தகைய தாமரையாக முகத்தை உருவகம் செய்தமையின், இது விரூபகவுருவக மாயிற்று.

### 11.2.3.9 சமாதானவுருவகம்

சமாதானவுருவகம் என்பது ஒருபொருளை நன்றாக உருவகம் செய்து , அதனையே தீங்கு தருவதாகக் கூறி, அத்தீங்கும் அதனானே வருகின்றது அன்று எனக்கூறி அதற்குப் பிறிதோர் காரணங் கூறுவது ஆகும்.

"கைகாந்தள் வாய்குமுதங் கண்நெய்தல் காரிகையீர் !

மெய்வார் தளிர்கொங்கை மென்கோங்கம் - இவ்வனைத்தும்

வன்மைசேர்ந் தாவி வருத்துவது மாதவமொன்(று)

இன்மையே யன்றோ எமக்கு"

விளக்கம்: கண்நெய்தல் காரிகையீர்!! உம்முடைய காந்தள் மலராகிய கையும், குமுதமாகிய வாயும், நெய்தல் மலராகிய கண்ணும், நீண்ட தளிராகிய மெய்யும், மென்மையுடைய கோங்கரும்பாகிய கொங்கையும் என்று சொல்லப்பட்டன அனைத்தும் உம்முடைய அவயவமாகிலும், அவை அனைத்தும் தன்மை திரிந்து வன்கண்மையைச் சேர்ந்து எம்முடைய உயிரை வருத்தம் செய்யும்; இது , முற் காலத்தில் நான்செய்த தீவினைப்பயன் இக்காலத்து எமக்குப் பயத்தலாலன்றோ ? உம்மேல் தவறுண்டோ ? என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் எடுத்துக் கூறப்பட்ட பொருள் ஒரு பெண் ஆவள் . அப்பெண்ணின் உறுப்புக்களான கை, வாய், கண், மெய்,கொங்கை ஆகியவற்றை முறையே காந்தள், குமுதம், நெய்தல், தளிர் , கோங்கரும்பு என நன்றாக உருவகம் செய்து, இத்தகைய உறுப்பு நலமுடைய பெண்ணே தன் உயிரை வருத்துவதாக அவ்வழகு நலத்திற்குத் தீங்கு கூறி, அத்தீங்கும் தன்னுடைய தீவினைப் பயனாலேயே வந்ததாகும் என அதற்குப் பிறிதொரு காரணமும் கூறியிருத்தலின் இது சமாதான உருவகமாயிற்று.

முதற்கண் பெண்ணால் தீங்கு வந்ததாகக் கூறிப், பிறகு அதுவும் தன் தீவினையினாலேயே வந்தது எனச் சமாதானம் செய்து கொள்கின்றமையின், இது சமாதான உருவகம் எனப் பெயர் பெற்றது .

குறிப்பு

### 11.2.3.10 உருவகவுருவகம்

உருவகவுருவகம் என்பது ஒன்றனை உருவகஞ் செய்து , அதனையே பெயர்த்தும் பிறிதொன்றாக உருவகஞ் செய்வது .

கன்னிதன் கொங்கைக் குவடாங் கடாக்களிற்றைப்
பொன்னெடுந்தோட் குன்றே புனைகந்தா - மன்னவநின்
ஆகத் தடஞ்சே வகமாக யான்அணைப்பல்
சோகித் தருளேல் துவண்டு "

விளக்கம்: தலைவனே ! நீ காதலித்த கன்னியுடைய முலையென்னும் மலையாகிய மதக்களிற்றை, உன் பெரிய தோளாகிய குன்றமே திரளச் செய்யப்பட்ட கந்தாகவும், மார்பாகிய பரந்த இடமே கூடமாகவும் கொண்டு நான் சேர்த்து வைப்பேன். நீ வருந்தம் தவிர்க்க என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் கொங்கையைக் குவடாக உருவகஞ் செய்து, அதனையே மீண்டும் களிறாகவும், தோளைக் குன்றாக உருவகஞ் செய்து, அதனையே மீண்டும் கந்தாக (கட்டுத்தறியாக)வும் உருவகம் செய்யப்பட்டுள்ளமையின், இது உருவக உருவகமாயிற்று.

### 11.2.3.11 ஏகாங்கவுருவகம்

ஏகாங்கவுருவகம்என்பது ஒரு பொருளினது அங்கம் பலவற்றுள்ளும் ஒன்றினை மட்டும் உருவகம் செய்து பிற அங்கங்களை உருவகம் செய்யாது கூறுவது.

காதலனைத் தாவென் றுலவுங் கருநெடுங்கண்
ஏதிலனால் யாதென்னும் இன்மொழித்தேன் - மாதர்
மருண்ட மனமகிழ்ச்சி வாண்முகத்து வந்த
இரண்டினுக்கும் என்செய்கோ யான் "

விளக்கம்: நெஞ்சமே ! எமக்கொரு கணவனைத் தருவாயாக என்பது போன்றிருந்தது, காதளவும் உலவுகின்ற கரிய நெடிய கண்கள்; அயலானால் பயனில்லை என்பது போன்றிருந்தது, தேனாகிய மொழி கண்டவருக்கு மயக்கத்தோடு கூடிய உள்ளக் மகிழ்வைக் கொடுக்கின்ற ஒளியையுடைய முகத்திலே தோற்றிய இவ்விரண்டினுக்கும் யான் என்ன செய்யக் கடவேன்.

பொருத்தம்: இப்பாடலில் கூறப்பட்ட பொருள் ஒரு பெண் ஆவள். அப்பெண்ணின் உறுப்புக்களுள் மொழியை மட்டும் தேனாக உருவகித்து,

ஏனைய கண், முகம் இரண்டையும் உருவகஞ் செய்யாது கூறினமையின், இது ஏகாங்க உருவகமாயிற்று .



### 11.2.3.12 அநேகாங்கவுருவகம்

அநேகாங்கவுருவகம் என்பது ஒன்றன் அங்கம் பலவற்றையும் உருவகஞ் செய்து உரைப்பது .

கைத்தளிராற் கொங்கை முகிழ்தாங்கிக் கண்ணென்னும்

மைத்தடஞ்சேல் மைந்தர் மனங்கலங்க - வைத்ததோர்

மின்னுளதால் மேக மிசையுளதால் மற்றதுவும்

என்னுளதாம் நண்பா ! இனி

விளக்கம்: கை ஆகிய தளிரினாலே முலையாகிய அரும்பினைத் தாங்குகின்ற தன்மையையுடைத்தாகவும், கண்ணெனப்பட்ட கரிய குளிர்ந்த மீன்களாலே ஆடவர் உள்ளங்களை அழிக்குந் தன்மையையுடைத்தாகவும் ,கறுத்த மேகத்தைச் சுமந்துகொண்டு நிற்பதாகவும், ஒரு மின் தோன்றிப் பூமிக் கண்ணே நின்றதேல், அது நண்பனே ! என் உள்ளத்ததுவேயாம்நண்பனே ! என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் ஒரு பெண்ணின் கை, கொங்கை, கண், கூந்தல், வடிவம் ஆகிய பலவுறுப்புக்களும் முறையே தளிர், கோங்கரும்பு, கயல், மேகம், மின்னல் ஆக உருவகிக்கப்பட்டுள்ளமையின் இது அநேகாங்க உருவகமாயிற்று .

### 11.2.3.13 முற்றுருவகம்

முற்றுருவகம் என்பது அவயவ அவயவிகளை ஏற்ற இடத்தோடும் , பிறவற்றோடும் முற்ற உருவகஞ் செய்து உரைப்பது .

விழியே களிவண்டு மென்னகையே தாது

மொழியே முருகுலாந் தேறல் - பொழிகின்ற

தேமருவு கோதைத் தெரிவை திருமுகமே

தாமரையென் னுள்ளத் தடத்து

விளக்கம்: என் உள்ளமாகிய தடாகத்தில் தேன் மருவிய கூந்தலையுடைய பெண்ணின் திருமுகமே தாமரை, விழிகளே களிக்கின்ற வண்டு, மெல்லியவாகிய நகையே தாது, வார்த்தையே நறுநாற்றம் கொண்ட மது ஆகும்என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் ஒரு பெண்ணின் விழி, நகை மொழி, முகம் ஆகிய உறுப்புக்களை முறையே வண்டு, தாது, தேன், தாமரை ஆக

உருவகித்து, அது தன் உள்ளத்தில் இருப்பதற்கு ஏற்ப உள்ளத்தைக் குளமாகவும் உருவகித்துள்ளமையால் இது முற்றுருவகம் ஆயிற்று .



### 11.2.3.14 அவயவவுருவகம்

அவயவவுருவகம்என்பது அவயவத்தை உருவகஞ் செய்து , அவயவியை வாளாவே கூறுவது .

குறிப்பு

புருவச் சிலைகுளித்துக் கண்ணம்பெ னுள்ளத்

துருவத் துரந்தார் ஒருவர் - அருவி

பொருங்கற் சிலம்பிற் புனையல்குல் தேர்மேல்

மருங்குற் கொடிநுடங்க வந்து

விளக்கம்: அல்குலாகிய தேரின்மேல் ஏறி, இடையாகிய கொடியானது அசைய வந்து, அருவி நிறைந்த மலைச் சிலம்பினிடத்தில் தோன்றித் தம்முடைய புருவமாகிய வில்லை வளைத்துக், கண்ணாகிய அம்பினாலே என் உள்ளத்திலே உருவிப் போக ஒருவர் எய்தார்; இதற்குச் செய்யக்கடவது என்கொல் ? சொல்லுவாயாக என்பதாம்..

பொருத்தம் இப்பாடலில் ஒரு பெண்ணின் புருவம், கண், அல்குல், மருங்குல் ஆகிய உறுப்புக்களை மட்டும் உருவகித்து, இவ்வுறுப்புக்களையுடைய பெண்ணை மட்டும் "ஒருவர்" என வாளாவே கூறியுள்ளமையின், அது அவயவ உருவகம் ஆயிற்று

### 11.2.3.15 அவயவியுருவகம்

அவயவியுருவகம்என்பது அவயவியை உருவகஞ் செய்து , அவயவங்களை வாளாவே கூறுவது ஆகும்.

வார்புருவங் கூத்தாட வாய்மழலை சோர்ந்தசைய

வேரரும்பச் சேந்து விழிமதர்ப்ப - மூரல்

அளிக்குந் தெரிவை வதனாம் புயத்தால்

களிக்குந் தவமுடையேன் கண்

விளக்கம்: முற்காலத்தில் யான் செய்த நல்வினைப் பயனால் எனது கண் நல்லாருடைய புருவம் அசைய, வாயில் வார்த்தையானது உருத்தெரியாது அழிந்து தளரக், குறுவியர்ப்பை யுடைத்தா, விழியானது சிவந்து மதர்ப்ப, முறுவலிப்பதொரு முகமாகிய தாமரையினாலே களிக்குந் தன்மையைப் பெற்றது

பொருத்தம்: இப்பாடலில் கூறப்படும் பெண்ணின் முகம் அவயவியாகும். அதனை மட்டும் தாமரையென உருவகித்து, அதனிடத்து உள்ள

உறுப்புக்களான புருவம், மழலை, விழி, முறுவல் ஆகியவற்றை உருவகிக்காது கூறியுள்ளமையின், இது அவயவி உருவகமாயிற்று.



### 11.2.3.16 உருவகம் பிற அணிகளுடன் கூடிவரும் எனல்

உவமை ஏது வேற்றுமை விலக்கே

அவநுதி சிலேடையென்(று) அவற்றொடும் வருமே .

உவமையும், ஏதுவும், வேற்றுமையும், விலக்கும், அவநுதியும், சிலேடையும் என்னும் ஆறு அலங்காரங்களோடு கூடியும் வரும் அவ்வுருவக அணி என்பதாகும்.

#### 11.2.3.16.1 உவமையுருவகம்

மதுமகிழ்ந்த மாதர் வதன மதியம்

உதய மதியமே யொக்கும் - மதிதளர்வேன்

வெம்மை தணிய மதராக மேமிகுக்கும்

செம்மை யொளியால் திகழ்ந்து

விளக்கம்: அறிவு அழியும் தன்மையேனுடைய தன்மையையை உடையவனுடைய ஆற்றல் அழியக் களிப்போடு கூடிய காதலைப் பெரிதும் புலப்படுத்துகின்ற மதுவுண்டு களித்த மடவாருடைய முகமாகிய நிலவு உதயஞ் செய்த நிறை மதியம் போன்றது ஆகும்.

பொருத்தம்: உவமையணியோடு கூடிவரும் உருவகம் உவமையுருவகம் ஆகும் , முகத்தை மதியமாக உருவகித்துப் பின்பு அது உதய மதியத்தை ஒக்கும் என உவமையோடுகூட்டிக் கூறுதலின் இது உவமையுருவக மாயிற்று .

#### 11.2.3.16.2 ஏதுவுருவகம்

மாற்றத்தால் கிள்ளை நடையால் மடவன்னம்

தோற்றத்தால் தண்ணென் சுடர்விளக்கம் - போற்றும்

இயலால் மயில்எம்மை யிந்நீர்மை யாக்கும்

மயலார் மதர்நெடுங்கண் மான்

விளக்கம்: நண்பனே ! எம்மை இவ்வாறு தாழ்வு பண்ணுகின்ற காதலைக் கொடுக்கின்ற கண்களை யுடையவள் ஆதலால் மான் போன்றாள் ஆயினள். மொழியினால் கிளியாயினாள். நடையினால் அன்னமாயினாள்; மேனியால் குளிர்ந்த உருவத்தையுடைய விளக்கின் நிறமாயினாள் ; யாவரும் பரவப்படும் சாயலால் மயிலாயினாள்..

பொருத்தம்: ஏது அணியோடு கூடிவரும் உருவகம் ஏது வுருவகம் ஆகும் . இப்பாடலில் ஒரு பெண்ணைக் கிளியாகவும், அன்னமாகவும், விளக்காகவும், மயிலாகவும் உருவகம் செய்ததோடு, அவ்வப்பொருளாக உருவகம் செய்ததற்குரிய காரணங்களையும் உடன் கூறியுள்ளமையின் இது ஏதுவுருவகமாயிற்று .

**11.2.3.16.3 வேற்றுமையுருவகம்**

வையம் புரக்குமால் மன்னவநின் கைக்காரும்

பொய்யின்றி வானிற் பொழிகாரும் - கையாம்

இருகார்க்கு மில்லைப் பருவம் இடிக்கும்

ஒருகார் பருவம் உடைத்து

விளக்கம்: அரசனே ! உன்னுடைய கையாகிய மேகமும், காலம் தவறாது உரிய காலத்து ஆகாயத்தில் நின்று பொழிகின்ற மேகமும், உலகத்தைப் காக்கும் தன்மையில் ஒக்குமாயினும்,கை என்னும் இரண்டு மேகங்களுக்கும் பருவமில்லை; ஆனால் இடியையுடைய ஒரு மேகத்துக்குப் பருவமுண்டு.

பொருத்தம்: வேற்றுமை அணியோடு கூடிவரும் உருவகம் வேற்றுமை உருவகம் ஆகும். அரசனின் கையை மேகமாக உருவகித்துப், பின்பு அம்மேகத்திற்கும் கைக்கும் வேற்றுமை காட்டியுள்ளமையின், இது வேற்றுமை உருவகமாயிற்று .

**11.2.3.16.4 விலக்குருவகம்**

வல்லி வதன மதிக்கு மதித்தன்மை

இல்லை யுளதேல் இரவன்றி - எல்லை

விளக்கு மொளிவளர்த்து வெம்மையால் எம்மைத்

துளக்கும் இயல்புளதோ சொல்

விளக்கம்: வல்லியானவள் முகமாகிய மதியத்திற்கு, மதியினுடைய தன்மையில்லை போலும்; உண்டாயின், பகற்பொழுது தன்னிடத்திலே ஒளியை மிகுத்து நம்மை வருத்தி அறிவையழிக்கும் இயல்புடைத்தாமோ ? நண்பனே ! சொல்லுவாயாக என்பதாம்.

பொருத்தம்: விலக்கு அணியோடு கூடிவரும் உருவகம் விலக்குருவகமாகும், இப்பாடலில் ஒரு பெண்ணின் முகத்தை மதியமாக உருவகித்துப் பின்பு அம்முகத்திற்குள்ள தன்மை மதியத்திற்கு இல்லை என விலக்கலின் விலக்குருவகம் ஆயிற்று .

### 11.2.3.16.5 அவநுதியுருவகம்

பொங்களக மல்ல புயலே யிதுஇவையும்

கொங்கை யிணையல்ல கோங்கரும்பே - மங்கைநின்

மையரிக்கண் அல்ல மதர்வண் டிவைஇவையும்

கையல்ல காந்தள் மலர்

விளக்கம்: மங்கைப் பருவத்தையுடையவளே ! உன்னுடையது மிக்க கருமையையுடைய கூந்தலன்று, இது மேகப்பரப்பே ஆகும். இரண்டாகிய தனங்கள் அல்ல, இவை கோங்கரும்புகளே; மையணிந்த செவ்வரி பரந்த கண்கள் அல்ல, இவை செருக்கினையுடைய வண்டுகளே; கையல்ல, காந்தள் மலர்களே ஆகும்.

பொருத்தம்: இப்பாடலில் ஒரு பெண்ணின் உறுப்புக்களைச் சிறப்பிக்கும் முகமாக அவளுடைய கூந்தல், கொங்கை, கண், கை ஆகிய உறுப்புக்களை அவ்வவ் வுறுப்புக்கள் அல்ல என மறுத்துப், பின்பு அவற்றை முறையே புயல், கோங் கரும்பு, வண்டு, காந்தள் என உருவகித்துள்ளமையின் இது அவநுதி யுருவகமாயிற்று.

### 11.2.3.16.6 சிலேடையுருவகம்

“உண்ணெகிழ்ந்த செவ்வித்தாய் பொற்றோட் டொளிவளரத்

தண்ணளிசூழ்ந் தின்பந் தரமலர்ந்து - கண்ணெகிழ்ந்து

காதல் கரையிறப்ப வாவி கடவாது

மாதர் வதனாம் புயம்.”

விளக்கம்: உள்ளும் மலர்ந்திருக்கும் பொலிவினை உடையது. அழகிய இதழ்களின் ஒளி மிகுந்தது. வண்டுகளால் சூழப்படுவது. கண்டார்க்கு இனிமை தோன்ற இதழ் விரிந்து மது நிறைந்து கண்டார்க்கு ஆசை மிகுப்பப் பொய்கை யிடத்து நீங்காது தோன்றியது தாமரை. உள்ள உருக்கத்தால் மலர்ந்த புதுமையுடையது, பொன்னால் ஆகிய தோடுகளின் தழைத்துஒளி வீசுவது. குளிர்ந்த விருப்பத்தைக் கொண்டு கண்டார்க்கு விருப்பத்தைத் தோற்றுவிப்பது. குாதல் எல்லை கடந்தாலும் உள்ளம் கட்டுப்பட்டு நிற்பது என்னும் குணங்களைக் கொண்டது தாமரை.

பொருத்தம்: சிலேடை அணியோடு கூடிவரும் உருவகம் சிலேடையுருவக மாகும். இப் பாடலில் ஒரு பெண்ணின் முகத்திற்கும், தாமரைக்கும் பொருந்துவதான சொற்றொடர்களை முன்னே அமைத்துக் கூறிப் பின்பு அம்முகத்தை தாமரையாக உருவகித்துக் கூறப்பட்டுள்ளமையின் இது சிலேடை உருவகமாயிற்று.

### 11.2.3.17 உவமை உருவகங்கட்குப் புறனடை



உருவகம் உவமை எனஇரு திறத்தவும்
நிரம்ப உணர்த்தும் வரம்புதமக்கு இன்மையிற்
கூறிய நெறியின் வேறுபட வருபவை
தேறினர் கோடல் தெள்ளியோர் கடனே.

**குறிப்பு**

உருவகமும் உவமையும் என்னும் இரண்டு வகையான அணிகளும், ஒழிவின்றி உணர்த்தும் வரையறை உடையவல்ல வாகலால், சொல்லப்பட்ட நெறியின் வேறுபட வருபவை யறிந்து அவற்றின்பால் சார்த்திக்கோடல் அறிவுடையோர் கடன் என்பதாம்.

### 11.2.3.17.1 ஏதுவுருவகம்

"வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை."

விளக்கம்: வில்லை ஏராகவுடைய வீரர்களோடு பகைமை கொள்ளினும், நீதி நூல்களை ஏராகவுடைய அறிஞர்களோடு பகை கொள்ளற்க என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் வீரர், அறிஞர் ஆகிய இருவர்களையும் உழவராக உருவகித்ததுடன், அதற்குரிய காரணங்களையும் உடன் தந்துள்ளமையின், இது ஏது உருவகமாயிற்று.

### 11.2.3.17.2 இயைபுருவகம்

"ஏரி யிரண்டும் சிறகா எயில்வயிறாக்
காருடைய பீலி கடிகாவா - நீர்வண்ணன்
அத்தியூர் வாயா அணிமயிலே போன்றதே
பொற்றேரான் கச்சிப் பொலிவு."

விளக்கம்: இரு, பக்கத்திலுமுள்ள ஏரிகள் சிறகுகளாகவும், இடையிலுள்ள மதில் வயிறாகவும், சுற்றிலுமுள்ள நறுமணம் வீசும் சோலைகள் கருமை நிறம் பொருந்திய தோகைகளாகவும்,திருமாலினது திருவத்தியூர் வாயாகவும் கொண்டிலங்கும் சிறப்பால், அழகிய தோள்களையுடைய சோழனுடைய காஞ்சீபுரமானது அழகிய மயிலை யொத்து விளங்குகின்றது என்பதாம்.

பொருத்தம்: இதன்கண் காஞ்சியிலுள்ள ஏரி, மதில், சோலை, அத்தியூர் ஆகியவைகளை முறையே சிறகு, வயிறு, தோகை, வாய் ஆகவும்,

காஞ்சியை மயிலாகவும் தம்முள் இயைபுடையனவாக உருவகம் செய்யப்பட்டுள்ளமையின் இது இயைபுருவகமாயிற்று.



### 11.2.3.17.3 விலக்குருவகம்

விலக்கு அணியுடன் உருவகம் செய்யப்படுவது விலக்கு உருவகமாம்.

"மலையிற் பயிலா மடமஞ்ஞை வாரி

அலையிற் பிறவா வமுதம் - விலையிட்(டு)

அளவாத நித்திலம் ஆராத தேறல்

வளவாண் மதர் நெடுங்கண் மான்."

வளப்பம் பொருந்திய வாள்போன்ற மதர்த்த கண்களையுடைய மான் போன்ற பெண், மலையில் வாழாத இளமயிலும்,கடலினது அலையிலே பிறவாத அமுதமும், விலையிட்டுக் கூற முடியாத முத்தும், உண்ண முடியாததோர் தேனுமாவள் என்பதாம். இப்பாடலில் ஒரு பெண்ணை மயில், அமுதம், நித்திலம், தேன் என உருவகிக்குங்கால், அவ்வப் பொருள்களின் தன்மையினின்றும் விலக்கி உருவகம் செய்யப்பட்டிருத்தலால் இது விலக்குருவகமாயிற்று.

### 11.2.3.17.4சிறப்புருவகம்

ஒன்றனை உருவகிக்குங்கால், அவ்வுருவகப் பொருளுக்கு இல்லாத சிறப்பினையேற்றி உருவகிப்பது சிறப்புருவகமாகும்.

"மழலைவாய் நவ்வி மதர்நெடுங்கண் மஞ்ஞை

குழலின் பொறைமெலிந்த கொம்பர் - சுழல்கலவந்

தாங்கிய அன்னந் தடங்கொங்கை ஆரமுதம்

தேங்கொள் கமலத் திரு."

தேனைத் தன்னகத்தே கொண்ட செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளாகிய பெண். மழலைச் சொற்களைப் பேசும் வாயையுடைய மானும், வளப்பம் பொருந்திய நீண்ட கண்களை யுடைய மயிலும், கூந்தலின் சுமையைத் தாங்குதலால் மெலிவுற்ற கொம்பும், திரண்ட தோகையை யுடைய அன்னமும் பெருத்த கொங்கைகளையுடைய அமுதமும் ஆவள் என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் ஒரு பெண்ணை மான், மயில், கொம்பு, அன்னம், அமுதம் ஆக உருவகிக்குங்கால் அவ்வப்பொருள்களிடத்தும் இல்லாத்தான மழலைவாய்,மதர்நெடுங்கண், குழலின் பொறை மெலிதல்,

கலவம் தாங்கல், தடங்கொங்கை யுடைத்தாதல் ஆகிய சிறப்புக்களை ஏற்றி உருவகித்துள்ளமையின் இது சிறப்புருவக மாயிற்று.

### 11.2.3.17.5 அற்புதவுருவகம்

ஒன்றனை உருவகிக்குங்கால் அற்புதம் (வியப்பு) தோன்ற உருவகிப்பது அற்புத உருவகமாகும்.

“மன்றற் குழலார் உயிர்மேல் மதன்கடவும்

தென்றற் கரிதடுக்குந் திண்கணையும்-1 மன்றலரைக்

கங்குற் கடலில் கரையேற்று நீள்புணையாம்

பொங்குநீர் நாடன் புயம்”

விளக்கம்: பொலிவினையுடைய நீர்சூழ்ந்த காவிரி நாடனுடைய தோளானது, நறுநாற்றத்தையுடைய குழலினார் உயிரை அழிக்க மன்மதன் வரவிடுத்த தென்றலாகிய மதக்களிறு வராதபடி தடுத்தற்கு ஏற்ற வலிய கணையமும், அவரகளைக் கங்குலாகிய கடலின் கரையிலே சேர்க்கும் பெரிய மிதவையுமாம் உன்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் சோழனின் தோள்களைக் கணையமாகவும், புணையமாகவும் உருவகிக்குங்கால் அற்புதம் தோன்ற உருவகித்துள்ளமையின் இது அற்புதவுருவகமாயிற்று.

### 11.2.3.17.6 தெரிதருதேற்ற உவமை

“நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே

கல்லார்கண் பட்ட திரு”

விளக்கம்: இன்னதற்கு இன்னது உவமையாகும், இன்னது உவமையாகாது எனத் தெரிந்து கூறுவது தெரிதருதேற்ற வுவமையாகும். கல்லாதவர் மாட்டுளதாய செல்வம், கற்றார் மாட்டுளதாய வறுமையினும் கொடிது என்பதாம்.

பொருத்தம்: இதன்கண் கல்லாதவர் மாட்டுளதாய செல்வத்திற்குக் கற்றாரிடத் துளதாய வறுமை உவமை கூறுத்தக்கதன்று எனத் தெரிந்து கூறியிருத்தலின், இது தெரிதருதேற்ற உவமை யாயிற்று.

### 11.2.3.17.7 பலபொருளுவமை

ஒரு பொருளுக்குப் பலபொருளை உவமை கூறின் அது பலபொருளுவமையாம

“அடிநோக்கின். ஆழ்கடல் வண்ணன் அவன்தன்

படிநோக்கிற் பைங்கொன்றைத் தாரான் - முடிநோக்கித்

தேர்வளவ னாகத் தெளிந்தென்தன், சென்னிமேல்

ஆரலங்கல் தோன்றியது கண்டு”



விளக்கம்: அவனது அடிகளை நோக்கின் ஆழமுடைய கடலின் நிறத்தையுடைய திருமாலாகத் தோன்றுகின்றான்; மற்றும் அவனுடைய வடிவத்தை நோக்கின் பசிய கொன்றை யணிந்த சிவபெருமான் போலத் தோன்றுகின்றான்; இங்ஙனம் ஒவ்வொரு வகையில் ஒவ்வொரு பொருளாகத் தோன்றுகின்ற அவனுடைய முடியை இறுதியில் நோக்க அவ்விடத்து ஆத்திமாலையிருக்கக்கண்டு அவனைத் தேரினையுடைய சோழனாகத் தெளிந்தேன் என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலின்கண் சோழனாகிய ஒருவனுக்குத் திருமால், சிவபெருமான் ஆகிய இருவரையும் உவமை கூறியிருத்தலின் இது பலபொருளுவமையாயிற்று.

### 11.2.3.17.8 பண்புவமை

ஒரு பொருளொடு பொருளைப் பண்புபற்றி உவமை கூறுதல் பண்புவமையாம்.

“கருங்கால் வேங்கை வீயுறு துறுகல்

இரும்புலிக் குருளையில் தோன்றுங் காட்டிடை

எல்லி வருநர் களவிற்கு

நல்லை யல்லை நெடுவெண் ணிலவே”

விளக்கம்: பரந்த வெண்ணிலவே! கரிய அடிப்பகுதியையுடைய வேங்கை மரத்தின் மலர்கள் பரவப்பெற்ற வலிய கல்லானது, பெரிய புலியினது குட்டியைப் போலத் தோன்றும் காட்டிடத்தே, இரவில் களவிடத்துத் தனித்துவரும் எம் தலைவருக்கு நீ நன்மை செய்யமாட்டாய் என்பதாம்.

பொருத்தம்: வேங்கைமலர் பரவப்பெற்ற கல், வண்ணத்தாலும், வடிவத்தாலும் கோடுகளையுடைய புலிக் குட்டியைப் போல் தோன்றும் என்பதால், இது பண்புவமையாயிற்று.

### 11.2.3.17.9 ஒப்புவமை

உவமை கொடுத்துக் கூறப்பட்ட பொருளைப் பின்னும் பிறிதொன்றற்கு உவமையாக்கி யுரைப்பது ஒப்புவமை ஆயிற்று.

“முத்துக்கோத் தன்ன முறுவல் முறுவலே

ஒத்தரும்பு முல்லைக் கொடிமருங்குல்-மற்றதன்மேல்
மின்னளிக்கும் கார்போல் விரைக்கூந்தல் மெல்லியலாள்
தண்ணளிக்கும் உண்டோ தரம்”

விளக்கம்: முத்தைக்கோத்தது போன்றது இவளது எயிறு; அவ்வெயிற்றை யொத்த அரும்புடைய முல்லைக்கொடி போன்றது மருங்குல்; அம்மருங்குலாகிய கொடிமீதே மின்னத்தோற்றிய கார் போன்றது நறுநாற்றத்தை யுடைய கூந்தல்; இத்தன்மைத்தாகிய மெல்லிய சாயலாளிடத்து உண்டாகிய அன்பிற்குத் தரமுண்டோ?

பொருத்தம்: முத்துக் கோத்தன்ன முறுவல் என உவமை கொடுத்துக் கூறப்பட்ட பொருளைப் பின்பு, அம்முறுவலை ஒத்த அரும்பு என உவமையாக்கிக் கூறியுள்ளமையின் இது ஒப்புவமை யாயிற்று.

**11.2.3.17.10 சந்தானவுவமை**

ஒன்றோடொன்று தொடர்புடைய பல பொருள்களை ஒவ்வொரு பொருளுக்கும் உவமையாக்கி யுரைப்பது சந்தான வுவமையாம். இங்ஙனம் வரும் உவமையும் பொருள்களும் ஒன்றற்கொன்று தொடர்புடை யனவாக மாலைபோல் நிற்றலின், இதனை மாலையுவமை யென்றும் கூறுவர்.

ஈர்ந்து நிலந்தோயு மிரும்பிடித் தடக்கையிற்
சேர்ந்துடன் செறிந்த குறங்கு குறங்கென
மால்வரை யொழுகிய வாழை வாழைப்
பூவெனப் பொலிந்த வோதி யோதியின்
நளிச்சினை வேங்கை நாண்மலர் நாண்மலர்க்
களிச்சுரும் பரற்றுஞ் சுணங்கு சுணங்குபிதிர்ந்
தியாணர்க் கோங்கின் அவிர்முகை முகையெனப்
பூணகத் தொடுங்கிய வெம்முலை முலையென
வண்டோட்டுப் பெண்ணை வளர்த்த நுங்கின்
இன்செறி நீர்தரு மெயிற்றின்“ ( சிறுபாண் ; 19-28 )

விளக்கம்: இழுக்கப்பட்டு நிலத்திலே பொருந்தப் பெற்ற பெரிய பெண் யானையினது நீண்ட துதிக்கைபோலத் திரண்டு உருண்டு ஒன்றொடொன்று நெருங்கியுள்ள தொடைகளையும்,அந்தத் தொடைகளைப் போலப் பெரிய மலையிடத்து வரிசையாகப் பொருந்திய வாழை மரங்கள், அவற்றின் பூவைப் போல அழகுற வமைந்த தலைமுடியினையும், அம்மயிர் முடியைப்போலக் கரிய நிறம் உடையதாய்த் தண்ணிதாகச் செறிந்த கிளைகளையுடைய வேங்கை மரத்தின் புதிய மலர், அம்மலர் என்று கருதி மகிழ்ந்த வண்டுகள் மொய்க்கின்ற தேமலையும்; அத்தேமல்

பொறியாக பரந்தாற்போலப் புதிதாகப் பூத்தலை யுடைய கோங்கமரத்தின் அழகிய அரும்புகள், அவ்வரும்புகளைப் போன்ற அணியணிந்த முலைகளையும், பெரிய மடல்களையுடைய பனைமரம் அந்த முலைபோல வளர்த்த நுங்குபோல இனிமை பொருந்திய நீரைத்தரும் பற்களையும் (உடைய மகளிர்) என்பதாம்.



பொருத்தம்: இதன் கண் யானையின் துதிக்கையை முதலும், எயிற்றை யிறுதியாகவும் வைத்து ஒன்றொடொன்று தொடர்புடையனவாக உவமை செய்திருத்தலின் இது சந்தானவுவமை யாயிற்று.

### 11.2.3.17.11 விலக்குவமை

முன்னர்ப் பொருளைக் கூறிப் பின்பு உவமையைக் கூறுங்கால், குறிப்பாக முன்னர்க் கூறிய பொருளுக்குப் பின்னர்க் கூறிய உவமையை உவமையாகக் கூறுதல் தக்கதன்று என இழிவு தோன்றுமாறு செய்து விலக்குவது விலக்குவமையாம

"பாரி பாரி யென்றுபல வேத்தி

ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்

பாரி யொருவனும் அல்லன்

மாரியும் உண்டீண் டுலகு புரப்பதுவே"

விளக்கம்: பாரி பாரி என்று பலகாலும் அவனுடைய புகழ்களைப் பாராட்டி அவ்வொருவனுடைய கொடைத் தன்மையையே பல புலவர்களும் பாராட்டுவார்கள்; ஆனால் அங்ஙனம் இவ்வுலகினைக் காத்தற்குப் பாரி ஒருவன் மட்டுமல்லன், மழையும் உண்டு என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் கூறப்பட்ட பொருள் பாரி. அவனுக்கு மேகம் உவமை யாகாது என நேரிதாக கூறி விலக்காமல், மாரியும் உண்டு என்னும் இழிவுசிறப்பாக வந்த குறிப்பினால் அவனுக்கு அது உவமையாதல் தக்கதன்று என விலக்கப்பட்டமையின் இது விலக்குவமை யாயிற்று.

## 11.2.4. தீவகவணி

குணந்தொழில் சாதி பொருள்குறித்து ஒருசொல்

ஒருவயின் நின்றும் பலவயின் பொருள்தரின்

தீவகம் செய்யுள் மூவிடத் தியலும்.

நிறுத்த முறையானே தீவகமென்னும் அணி உணர்த்திற்று.

குறிப்பு

விளக்கம்: குணத்தானும், தொழிலானும், சாதியானும் பொருளானும் குறித்து ஒருசொல் ஓரிடத்து நின்று, செய்யுளிற் பலவிடத்து நின்ற சொற்களோடு பொருந்திப் பொருள் விளைப்பது தீவகம் என்னும் அணியாகும்.. அது செய்யுளில் முதல்,இடை,கடை என மூன்றிடத்தும் வரும். எனவே, அது முதனிலைத் தீவகம், இடைநிலைத் தீவகம்,கடைநிலைத் தீவகம் என மூன்று வகைப்படும். மூன்றையும் குணம், தொழில்,சாதி, பொருள் என்பனவற்றோடு கூட்டி உறழப் பன்னிரண்டாகும்.

### 11.2.4.1 முதனிலைக் குணத்தீவகம்

"சேந்தன வேந்தன் திருநெடுங்கண் தெவ்வேந்தர்

ஏந்து தடந்தோள் இழிகுருதி --பாய்ந்து

திசையனைத்தும் வீரச் சிலைபொழிந்த, வம்பும்

மிசையனைத்தும் புட்குலமும் வீழ்ந்து."

விளக்கம்: அரசனுடைய நீண்ட கண்கள் சினத்தால் சிவந்தன; அங்ஙனம் அவை சிவந்த பொழுதிலே பகைவர்களுடைய உயர்ந்த பெரிய தோள்கள், அம்புகள் தைக்கப்பட்டுச் சிவந்தன; அத்தோள்களின்றும் பெருகுகின்றன குருதி எங்கும் பரத்தலால் திக்குகள் எல்லாம் சிவந்தன; அக்குருதி தோய்தலால் வில்லினின்றும் வெளி வந்த அம்புகள் சிவந்தன; அக்குருதி மேல்படுதலால் பறவை இனங்கள் அனைத்தும் சிவந்தன என்பதாம்

பொருத்தம்: "சிவத்தல்" என்பது நிறம் பற்றிய பண்புச் சொல், முதலில் இருக்கும் அச்சொல் கண், தோள், திசை, அம்பு,புட்குலம் ஆகிய சொற்களோடும் இயைந்து பொருள் தருதலின் இது முதனிலைக் குணத்தீவகம் ஆயிற்று.

### 11.2.4.2 முதனிலைத் தொழில்தீவகம்

சரியும் புனைசங்குந் தண்டளிர்போல் மேனி

வரியும் தனதடஞ்சூழ் வம்பும் --- திருமான

ஆரம் தழுவுந் தடந்தோள் அகளங்கன்

கோரந் தொழுத கொடிக்கு"

விளக்கம்: திருமகள் தங்குதற்கான பெருஞ் சிறப்புடையதும், முத்து மாலை அணிந்ததுமான தோள்களையுடைய குற்றமில்லாத சோழனுடைய குதிரையை வணங்கிய பூங்கொடி போன்ற பெண்ணுக்கு, அவள் கையில் அணிந்த வளையல்களும் சரிந்தன; குளிர்ந்த தளிர் போன்ற மேனியில்

அழகும் சரிந்தது; பெருத்த கொங்கைகளின் மீதுள்ள கச்சும் சரிந்தது என்பதாம்.

பொருத்தம்: "சரிதல்" என்பது தொழில்பற்றிய சொல். முதற்கண் இருக்கும் அச்சொல் வளையல், மேனியழகு, கச்சு ஆகிய சொற்களுடன் இயைந்து பொருள் படுதலின் இது முதனிலைத் தொழில் தீவகம் ஆயிற்று.

### 11.2.4.3 முதனிலைச் சாதித்தீவகம்

"தென்றல் அனங்கன் துணையாஞ் சிலகொம்பர்

மன்றல் தலைமகனாம் வான்பொருள்மேற் - சென்றவர்க்குச்

சாற்றவிடுந் தூதாகும் தங்கும் பெரும்புலவி

மாற்ற வருவிருந்து மாம்"

விளக்கம்: தென்றற் காற்றானது காமவுணர்ச்சியைத் தூண்டுதலால் மன்மதனுக்குத் துணையாகும்; அது வரச் சில பூங்கொம்புகள் தளிர்த்தலால் அக்கொம்புகளாகிய பெண்களுக்குக் கணவனாகும்; சிறந்த பொருள்மேல் சென்றாரை நினைத்து வருந்தும் தலைவியர்க்கு இன்பவுணர்ச்சியை ஊட்டுதலால் அவர்கள் தம் விருப்ப மிகுதியைத் தம் கணவர்பால் சொல்லுதற்காக அனுப்பப்படும் தூதாகும்;கணவனிடத்து ஊடிய பெண்டிர்க்கு இன்பவுணர்ச்சியைத் தூண்டுதலால் தாம் கொண்டிருந்த ஊடலை நீக்குதற்கு வந்த புதிய வாயிலாகும் என்பதாம்.

பொருத்தம்: தென்றற் காற்று" என்பது காற்றில் ஓர் இனத்தைக் குறித்தலின் இது சாதிபற்றிய சொல்லாம், முதற்கண் இருக்கும் அச்சொல் துணை, தலைமகன், தூது, வாயில் ஆகிய நான்கிடத்தும் சென்றியைந்து பொருள் படுதலின் இது முதளிலைச் சாதித் தீவகம் ஆயிற்று

### 11.2.4.4 முதனிலைப் பொருள்தீவகம்

"முருகவேள் சூர்மா முதல்தடிந்தான் வள்ளி

புரிகுழல்மேல் மாலை புனைந்தான் - சரணளித்து

மேலாய வானோர் வியன்சேனை தாங்கினான்

வேலான் இடைகிழித்தான் வெற்பு"

விளக்கம்: முருகவேள் சூரபதுமனாகிய மாமரத்தை அடியோடும் சாய்த்தான்; வள்ளியம்மையின் அழகிய கூந்தலில் மாலையைப் புனைந்தான்; மேன்மை பொருந்திய தேவர்கட்கு அடைக்கலம் தந்து



குறிப்பு

அவர்களின் சேனைகனைக் காத்தருளினான்; தன்னுடைய வேலினாலே கிரௌஞ்சகிரியைப் பிளந்தான் என்பதாம்.



பொருத்தம்: இதன்கண் உள்ள " முருகவேள்" என்னும் முதற்சொல் பொருள்குறித்த சொல்லாகும். அச்சொல் தடிந்தான், புனைந்தான், தாங்கினான், கிழித்தான் என்னும் சொற்களோடு இயைந்து பொருள்படுதலின் இது முதனிலைப் பொருள் தீவகம் ஆயிற்று.



### 11.2.4.5 இடைநிலைக் குணத்தீவகம்

"எடுத்த நிரைகொணா வென்றலுமே வென்றி

வடித்திலங்கு வைவாளை வாங்கத் - துடித்தனவே

தண்ணார மார்புந் தடந்தோளும் வேல்விழியும்

எண்ணாத மன்னர்க கிடம்."

விளக்கம் தாம் கவர வேண்டுமென நினைத்த ஆநிரைகளைக் கொண்டு வருக என அரசன் கூறினான் அவ்வளவிலே, அவனது வீரன் வெற்றி பொருந்திய கூரிய வாளை வலக்கையில் ஏந்தினானாகப், பகைவர்களுக்குக் குளிர்ச்சி பொருந்திய முத்துமாலை யணிந்த மார்பும், நீண்ட கண்ணும், இடது பக்கம் துடிப்பனவாயின என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலின் இடையிலிருக்கும் "துடித்தல்" என்னும் பண்புகுறித்த சொல் மார்பு, கண் ஆகிய சொற்களோடு இயைந்து பொருள்படுதலின், இது இடைநிலைக் குணத்தீவகம் ஆயிற்று.

### 11.2.4.6 இடைநிலைத் தொழில்தீவகம்

"எடுக்குஞ் சிலைநின் றெதிர்ந்தவருங் கேளும்

வடுக்கொண் டுரந்துணிய வாளி - தொடுக்கும்

கொடையும் திருவருளுங் கோடாத செங்கோல்

நடையும் பெரும்புலவர் நா"

விளக்கம்: ஒரு பேரரசன் தனக்குப் பகை ஆயினாரும், அவர்களுக்குத் துணை ஆயினுரும் வடுப்பட்டு அவர்கள் மார்பு பிளக்குமாறு தன் கையிலேந்திய வில்லில் அம்புகளைத் தொடுத்தான். அவ்வளவிலேயே பெரும் புலவர்களின் நாவானது அப்பேரரசனின் கொடையையும், மேலான அருளையும், வளையாத செங்கோலின் திறனையும் பாக்களில் தொடுத்துப் புகழ்வது ஆயின என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலின் இடையிலிருக்கும் ''தொடுத்தல்'' என்னும் தொழில் குறித்தசொல்,கொடை,அருள், நடை ஆகிய இடங்களோடும்

சென்றியைந்து பொருள்படுதலின்,இது இடைநிலைத் தொழில் தீவகம் ஆயிற்று.



### 11.2.4.7 இடைநிலைச் சாதித்தீவகம்

"கரமருவு பொற்றொடியாங் காலிற் கழலாம்
பொருவில் புயவலய மாகும் -அர(வு) அரைமேல்
நாணாம் அரற்கு நகைமணிசேர் தாழ்குழையாம்
பூணாம் புனைமாலை யாம்"

விளக்கம்: நாகமானது சிவபெருமானுக்குக் கையில் பொருந்திய அழகிய வளையாகும்; காலில் அணியும் வீரக்கழலாகும்; ஒப்பில்லாத தோள் வளையமாகும்; அரையில் அணியும் அரைஞாணாகும்;ஒளியினையுடைய மணி கள் பதித்த தொங்குகின்ற குழையாகும்; மற்றும் பல ஆபரணங்களாகும்; அழகிய மாலையாகும் என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் இடையிலிருக்கும் "அரவு" என்னும் சாதி குறித்த ஒரு சொல் தொடி, கழல், புயவலயம், நாண், குழை, பூண், மாலை ஆகிய சொற்களோடும் சென்றியைந்து பொருள்படுதலின். இது இடைநிலைச் சாதித்தீவகம் ஆயிற்று.

### 11.2.4.8 இடைநிலைப் பொருள்தீவகம்

மானமருங் கண்ணாள் மணிவயிற்றில் வந்து தித்தான்
தானவரை யென்றுந் தலையழித்தான் - யானைமுகன்
ஒட்டினான் வெங்கலியை யுள்ளத் தினிதமர்ந்து
வீட்டினான் நம்மேல் வினை.

விளக்கம்: விநாயகப் பெருமான் மானின் பார்வையை ஒத்த கண்ணினை உடைய உமையம்மையாரின் அழகிய திருவயிற்றில் வந்து பிறந்தான்; எஞ்ஞான்றும் அசுரர்களை அழித்தான்; கொடிய வறுமையைப் போக்கினான்; நம்முடைய உள்ளத்தே வீற்றிருந்து நம்மீதுள்ள வினைக் பகையை அழித்தான் என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலின் இடையில் இருக்கும் "யானைமுகன்" என்னும் பொருள் குறித்த ஒருசொல். உதித்தான், அழித்தான், ஒட்டினான், வீட்டினான் என்னும் சொற்களோடு இயைந்து பொருள்படுதலின், இது இடைநிலைப் பொருள் தீவகம் ஆயிற்று.

குறிப்பு

### 11.2.4.9 கடைநிலைத் தொழில்தீவகம்

துறவுளவாச் சான்றோர் இளிவரவுந் தூய
பிறவுளவா வூன்துறவா வூணும் -- பறைகறங்கக்
கொண்டா னிருப்பக் கொடுங்குழையாள் தெய்வமுமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று.

விளக்கம்: ஞானியர்களுக்குத் துறவு நெறியே உளதாக மற்றைக் கூடா வொழுக்கம் உளதாதலும், தூய்மையான பிறஉணவுகள் இருக்க ஊனுண்டல் உளதாதலும், ஒரு பெண்ணிற்கு மணவொலி ஒலிக்க மணந்துகொண்ட கணவன் இருக்கப் பிறிதொரு தெய்வம் உளதாக வணங்குதலும் ஒரு பொருளாக மதிக்கத்தக்கதன்றாம்.

பொருத்தம்: இப்பாடலின் இறுதியில் இருக்கும் " வைக்கற்பாற்றன்று" என்னும் தொழில்குறித்த ஒருசொல் இளிவரவு, ஊண், தெய்வம் என்ற சொற்களுடன் இயைந்து பொருள்படுதலின், இது கடைநிலைத் தொழில் தீவகம் ஆயிற்று.

### 11.2.4.10 கடைநிலைப் பொருள்தீவகம்

"புறத்தன வூரன நீரன மாவின்
திறத்தன கொற்சே ரியவே - அறத்தின்
மகனை முறைசெய்தான் மாவஞ்சி யாட்டி
முகனை முறைசெய்த கண்"

விளக்கம்: அறநெறி தவறாது தன்மகனையே தேர்க்காவில் இடறச் செய்து முறையோம்பிய மனுநீதிச் சோழனின் நகரமான வஞ்சியில் இருக்கும் ஒரு பெண்ணின் முகத்திற்கு அழகு தரும்படியான கண்கள் காட்டிலுள்ள மானின் கண்களைப் போன்றன; நாட்டிலுள்ள அம்புகளைப் போன்றன; நீரிலுள்ள தாமரை மலர்களைப் போன்றன மாவடுக்களைப் போன்றன; கொல்லர்களின் சேரியிலே செய்யும்படியான வாள்களைப் போன்றன என்பதாம் .

பொருத்தம்: இப்பாடலில் இறுதியில் இருக்கும் "கண்" என்னும் பொருள் குறித்த ஒரு சொல், புறம், ஊர், நீர் மாவடு, கொற்சேரி ஆகிய சொற்களோடு இயைந்து பொருள்படுதலின் இது கடைநிலைப் பொருள் தீவகம் ஆயிற்று

### 11.2.4.11 தீவகம் பிற அணிகளுடன் கூடிவரல்:

அதுவே,

மாலை விருத்தம் ஒருபொருள் சிலேடையென

நால்வகை யானும் நடைபெறும் என்ப .

தீவகம் மாலாதீவகம், விருத்த தீவகம், ஒருபொருள் தீவகம், சிலேடா தீவகம் என நான்கு அலங்காரங்களோடு கூடியும் வரும்.

#### 11.2.4.11.1 மாலாதீவகம்

மனைக்கு விளக்கம் மடவார் மடவார்

தமக்குத் தகைசால் புதல்வர் - மனக்கினிய

காதற் புதல்வர்க்கும் கல்வியே கல்விக்கும்

ஓதிற் புகழ்சால் உணர்வு

விளக்கம்: இல்லறத்திற்கு விளக்கம்,மடப்பத்தினையுடைய பெண்டிர் உண்டாதல்; அப்பெண்டிர்க்கு விளக்கம், அழகு சான்ற புதல்வரைப் பெறுதல்; அப்புதல்வர்க்கு விளக்கம், இனிமையான கல்வி ; அக்கல்விக்கு விளக்கம், மறவாமை என்பதாம்.

பொருத்தம்: மாலை என்னும் அணியுடன் தீவக அணி சேர்ந்துவரின் அது மாலா தீவகமாம்.இதில் மனைவிக்கு மடவாரும், மடவாருக்குப் புதல்வரும், புதல்வர்க்குக் கல்வியும், கல்விக்கு உணர்ச்சியுமாக ஒன்றோடொன்று தொடர்புடைய பொருள்கள் வந்து மாலைபோல வருதலின் மாலையணி யாயிற்று . “விளக்கம்“ என்னும் சொல் மனை, மடவார், புதல்வர், கல்வி ஆகிய பொருள்களோடும் சென்றியைந்து பொருள்படுதலின் தீவகமும் ஆயிற்று.

#### 11.2.4.11.2 விருத்த தீவகம்

விருத்தம் என்னும் அணியுடன் தீவக அணி சேர்ந்துவரின் அது விருத்த தீவகமாம்

வரிவண்டு நாணா மதுமலர் அம்பாப்

பொருவெஞ் சிலைக்குப் பொலிவும் - பிரிவின்

விளர்க்கு நிறமுடையார் தம்மேல் மெலிவும்

வளர்க்கு மலயா நிலம் “

விளக்கம்: பொறிவண்டு நாணாக, மது மலரே கணையாகக் காமன் தனி இருந்தாரைப் பொருகின்ற விருப்பத்தையுடைய சிலைக்குப் பொலிவினையும, பிரிவிற் பசலையுற்றார் தம்மேல் மெலிவினையும்

பொருத்தம்: இதன்கண் மாறுபாடுடையனவாகிய பொலிவும், மெலிவும் ஆகிய இரு சொற்கள் வருதலின் விருத்தமாயிற்று . அவ்விரு சொற்களுடன் “மலயா நிலம்“ என்ற சொல் சென்றியைந்து பொருள்படுதலின் தீவகமும் ஆயிற்று .

### 11.2.4.11.3 ஒருபொருள் தீவகம்

ஒரே பொருளைக் குறிக்கும் பல சொற்களுடன் ஒரு சொல் சென்றியைந்து பொருள் படுமாயின் அது ஒரு பொருள் தீவகமாம்

வியன்ஞாலஞ் சூழ்திசைகள் எல்லாம் விழுங்கும்

அயலாந் துணைநீத் தகன்றார் - உயிர்பருகும்

விண்கவரும் வேரிப் பொழில்புதைக்கு மென்மயில்கள்

கண்கவரும் மீதெழுந்த கார் “

விளக்கம்:: உலகத்தைச் சூழ்ந்த திக்குகள் எல்லாவற்றையும் தன்னிடத்து அடக்கும்; துணையைப் பிரிந்து அயலவர் போலப் போயினார் உயிரை உண்ணும்; ஆகாயத்தை மறைக்கும்; நறு நாற்றத்தையுடைய பொழிலை மூடும்; மென்மையையுடைய மயில்களின் கண்களை வவ்விக்கொள்ளும் உயரவெழுந்த மேகம் என்பதாம். .

பொருத்தம்: இதில் விழுங்கும், பருகும், கவரும், புதைக்கும் என்பன மேகத்தின் மிகுதியாகிய ஒரு பொருளையே குறித்தலின் ஒரு பொருள் ஆயிற்று . அவ்வச் சொற்களுடனும் “கார்“ என்னும் சொல் சென்றியைந்து பொருள் தருதலின் தீவகமும் ஆயிற்று .

### 11.2.4.11.4 சிலேடா தீவகம்

சிலேடை அணியுடன், தீவக அணி கூடிவரின் அது சிலேடா தீவகமாம் .

மான்மருவி வாளரிகள் சேர்ந்து மருண்டுள்ளம்

தான்மறுக நீண்ட தகைமையவாம் - கான

வழியும் ஒருதனிநாம் வைத்தகலும் மாதர்

விழியுந் தருமால் மெலிவு”

விளக்கம்: மான்கள் மருவி ஒளியையுடைய சிங்கங்கள் சேர்ந்து மயங்கிக் கண்டார் உள்ளம் அஞ்சும் படியான காட்டு நெறியும், அரிகள் பரந்து கண்டார் உள்ளமானது மயங்கித் தடுமாறும்படி பெரிதாய நான்

தனியிருத்திப் போந்த தலைவியுடைய கண்ணும், நமக்கு வருத்தத்தைத் தந்துநின்றன

பொருத்தம்: :இதில் அமைந்துள்ள சொற்றொடர்கள் விழிக்கும் வழிக்கும் இயைய இருத்தலின் சிலேடை ஆயிற்று . அவ்விரு சொற்களுடனும் “மெலிவு “ என்னும் சொல் சென்றியைந்து பொருள் படுதலின் தீவகமும் ஆயிற்று .

**11.2.4.11.5 உவமா தீவகம்**

உவமை அணியுடன் தீவக அணி கூடிவரின் அது உவமா தீவகமாம் .

“முன்னங் குடைபோல் முடிநா யகமணிபோல்

மன்னுந் திலகம்போல் வாளிரவி - பொன்னகலம்

தங்கு கவுத்துவம்போல் உந்தித் தடமலர்போல்

அங்கண் உலகளந்தாற் காம்”

விளக்கம்: உலகை அளந்த திருமாலுக்கு ஆதித்தன் முதலில் குடை போலும், பின்பு முடியில் சூடிய நாயகமணி போலும், அதன்கீழ் உண்டாய நெற்றித்திலகம் போலும், மார்பிலுள்ள கௌத்துவமாகிய மணிபோலும், கொப்பூழில் உண்டாய பெரிய தாமரை போலும் என்பதாம்.

பொருத்தம்: திருமால் பேருரு எடுத்த காலத்துச் சூரியன் அவனுக்குக் குடைபோன்றும், நாயகமணி போன்றும், திலகம் போன்றும், கௌத்துவம் போன்றும், உந்திமலர் போன்றும் இருந்தது என்பதால் இது உவமையணி ஆயிற்று. “இரவி“ என்னும் சொல் மேற்கூறப்பட்ட சொற்களோடும் சென்றியைந்து, பொருள்படுதலின் தீவகமும் ஆயிற்று.

**11.2.4.11.6 உருவக தீவகம்**

உருவக அணியுடன் தீவக அணி கூடிவரின் அது உருவக தீவகமாம் .

“கானற் கயலாம் வயலிற் கமலமாம்

ஏனற் கருவிளையாம் இன்புறவில் - மானாம்

கடத்துமேல் வேடர் கடுஞ்சரமா நீங்கிக்

கடத்துமேல் மெல்லியலாள் கண்”

விளக்கம்: நெஞ்சமே ! இவளைத் தனியே இருத்திவிட்டுப் பிரிந்து போவோமாயின், இவளுடைய கண்களானவை, நெய்தல் நிலத்தில்செல்வேமாயின் மீனாகத் தோன்றியும், மருதநிலத்திற் செல்வேமாயின் தாமரை மலராய்த் தோன்றியும், குறிஞ்சி நிலத்திற் செல்வேமாயின் கருவிளை மலராய்த் தோன்றியும், முல்லை நிலத்திற்

செல்வேமாயின் மானாய்த் தோன்றியும், பாலை நிலத்திற் செல்வேமாயின் வேடுவரது கையிலுள்ள கடிய சரமாய்த் தோன்றியும், இப்படிச் செய்து நம் போக்கை விலக்கும் ஆகலான்,நமக்குப் பிரிதற்கு அரிது காண் என்பதாம்.



பொருத்தம்: ஒரு பெண்ணின் கண்ணைக் கயலாகவும், கமலமாகவும், கருவிளையாகவும், மானாகவும், சரமாகவும் உருவகிக்கப்பட்டிருத்தலின் உருவகம் ஆயிற்று . "கண்" என்னும் சொல் மேற்கூறிய உருவகச் சொற்களுடன் சென்றியைந்து பொருள்படுதலின் தீவகமும் ஆயிற்று .

## பயிற்சி வினாக்கள்:

**1.**தன்மையணி என்பதனை விளக்குக

எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்கும்

சொன்முறை தொடுப்பது தன்மை யாகும் .

எவ்வகைப்பட்ட பொருளும் மெய்ம்மைக் கூறுபாட்டால் விளக்கும் சொல்முறையால் பாடப்படுவது தன்மை என்னும் அணியாகும்.

2.தீவகவணி – விளக்கி எழுதுக.

குணந்தொழில் சாதி பொருள்குறித்து ஒருசொல்

ஒருவயின் நின்றும் பலவயின் பொருள்தரின்

தீவகம் செய்யுள் மூவிடத் தியலும்.

நிறுத்த முறையானே தீவகமென்னும் அணி உணர்த்திற்று.

விளக்கம்: குணத்தானும், தொழிலானும், சாதியானும் பொருளானும் குறித்து ஒருசொல் ஓரிடத்து நின்று, செய்யுளிற் பலவிடத்து நின்ற சொற்களோடு பொருந்திப் பொருள் விளைப்பது தீவகம் என்னும் அணியாகும்.. அது செய்யுளில் முதல்,இடை,கடை என மூன்றிடத்தும் வரும். எனவே, அது முதனிலைத் தீவகம், இடைநிலைத் தீவகம்,கடைநிலைத் தீவகம் என மூன்று வகைப்படும். மூன்றையும் குணம், தொழில்,சாதி, பொருள் என்பனவற்றோடு கூட்டி உறழப் பன்னிரண்டாகும்.

3.முற்றுருவகம் - விளக்குக

முற்றுருவகம் என்பது அவயவ அவயவிகளை ஏற்ற இடத்தோடும் , பிறவற்றோடும் முற்ற உருவகஞ் செய்து உரைப்பது .

விழியே களிவண்டு மென்னகையே தாது

மொழியே முருகுலாந் தேறல் - பொழிகின்ற

தேமருவு கோதைத் தெரிவை திருமுகமே

தாமரையென் னுள்ளத் தடத்து

விளக்கம்: என் உள்ளமாகிய தடாகத்தில் தேன் மருவிய கூந்தலையுடைய பெண்ணின் திருமுகமே தாமரை, விழிகளே களிக்கின்ற வண்டு, மெல்லியவாகிய நகையே தாது, வார்த்தையே நறுநாற்றம் கொண்ட மது ஆகும்என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் ஒரு பெண்ணின் விழி, நகை மொழி, முகம் ஆகிய உறுப்புக்களை முறையே வண்டு, தாது, தேன், தாமரை ஆக உருவகித்து, அது தன் உள்ளத்தில் இருப்பதற்கு ஏற்ப உள்ளத்தைக் குளமாகவும் உருவகித்துள்ளமையால் இது முற்றுருவகம் ஆயிற்று.

4.உவமைஅணியின் வகைகளை விளக்கி வரைக.

பாடப்பகுதியில் அமைந்துள்ள உவமைஅணி குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுதல் வேண்டும்

5. உருவகஅணியின் வகைகளை விவரி

பாடப்பகுதியில் அமைந்துள்ள உருவகஅணி குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுதல் வேண்டும்

# பிரிவு - 4

## கூறு: 12
## பின்வருநிலையணி முதல் அதிசயவணி வரை

**நோக்கம்: பின்வருநிலையணி முதல் அதிசயவணி வரையிலான அணிகளின் இலக்கணத்தையும் அவற்றின் வகைகளையும் கற்று அறிதல**

### 12.1 பின்வருநிலையணி

முன்வரும் சொல்லும் பொருளும் பலவயிற்

பின்வரும் என்னில் பின்வரு நிலையே .

ஒரு செய்யுளுள் முன்னர் வந்த சொல்லே பின்னர்ப் பலவிடத்தும் வரினும், முன்னர் வந்த பொருளே பின்னர்ப் பலவிடத்தும் வரினும் அது பினவரு நிலையென்னும் அணியாகும்.

### 12.1.1 சொற்பின்வருநிலை

"மால்கரி காத்தளித்த மாலுடைய மாலைசூழ்

மால்வரைத்தோள் ஆதரித்த மாலையார்-மாலிருள்சூழ்

மாலையின் மால்கடல் ஆர்ப மதன்தொடுக்கும்

மாலையின் வாளி மலர்"

விளக்கம்: மதத்தால் மயங்கிய யானையின் துன்பத்தைத் தீர்த்தளித்த திருமாலின் மாலை கூடிய த தோள்களை விரும்பிய இயல்புடையார்மேல்; அந்திப்பொழுதில் கருங்கடல் ஆர்ப்பக் காமன் இடையறாது மலராகிய கணைகளைத் தொடுப்பான் என்பதாம்.

பொருத்தம் இபபாடலுள்˙ முன்வந்த "மால்" என்னும் சொல்லே பின்னும் பலவிடத்து வந்தமையின் சொற்பின்வருநிலை ஆயிற்று.

### 12.1.2 பொருட்பின்வருநிலை

அவிழ்ந்தன தோன்றி யலர்ந்தன காயா

நெகிழ்ந்தன நேர்முகை முல்லை-மகிழ்ந்திதழ்

விண்டன கொன்றை விரிந்த கருவிளை

கொண்டன காத்தாள் குலை"

விளக்கம்: தோன்றி மலர்கள் மலர்ந்தன, காயம் பூக்கள் மலர்ந்தன, அழகிய அரும்புடைய முல்லைகள் மலர்ந்தன; கொன்றை மரங்கள்

செழித்து இதழ்கள் மலர்ந்தன; கருவிளை மலர்கள் மலர்ந்தன; காந்தள் மலர்கள் பூங்கொத்துக்களாகப் பூத்து விளங்கின என்பதாம்

பொருத்தம்: இதனுள் அவிழ்தலும், அலர்தலும், நெகிழ்தலும், விள்ளலும், விரிதலும், குலை கொள்ளுதலும் “மலர்தல்“ என்னும் ஒரு பொருள்மேல் நின்றனவாதலின் அப்பெயர்த்தாயிற்று. “வருவது” என்னாது “வருமெனின்” என்றதனான் முன்னர் வந்த சொல்லும் பொருளும் பின்னர்ப் பலவிடங்களிலும் வருதல் சொற்பொருட்பின்வருநிலை எனவும் படும்.

## 12.1.3 சொற்பொருட் பின்வருநிலை

“வைகலும் வைகல் வரக்கண்டும் அ∴துணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகல்தம் வாழ்நாள்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்”

விளக்கம்: நாடொறும் நாள் கழிதலை அறிந்திருந்தும், அங்ஙனம் கழிதலைத் தம் வாழ்நாள்மீது வைத்து அது தான் இங்ஙனம் கழிகின்றது என்பதை அறியாதவர், நாடொறும் நாள் கழிதலைக் கண்டு துன்புறாமல், இன்புறு நாளாக எண்ணி மகிழ்வர் என்பதாம்.

பொருத்தம்: இதன்கண் “வைகலும் “ என்னும் சொல் பின்னர்ப் பலவிடத்தும் வந்தும் ஒரு பொருளையே தந்து நிற்றலின், இது சொற்பொருட்பின்வருநிலை ஆயிற்று.

## 12.1.4 உவமைபொருட்பின்வருநிலை

உவமை அணியுடன் பொருட்பின்வருநிலை அணி கூடிவரின் அது உவமைப்பொருட்பின்வருநிலையாம்.

“செங்கமல நாட்டஞ் செழுந்தா மரைவதனம்
பங்கயஞ் செவ்வாய் பதுமம் போல்-செங்கரங்கள்
அம்போருகாந்தாள் அரவிந்த மாரனார்
தம்போ ருகந்தாள் தனம்”

விளக்கம் :மன்மதனது காமப்போரை விரும்பியவளுடைய கண்கள் செந்தாமரை மலர் போன்றன; முகம் செந்தாமரை போன்றது; வாய் செந்தாமரை போன்றது; கைகள் செந்தாமரை போன்றன; கால்கள் செந்தாமரை போன்றன; கொங்கைகள் தாமரை யரும்பு போன்றன என்பதாம்.

பொருத்தம்: பெண்ணின் கண், முகம், வாய், கை, கால் ,கொங்கை ஆகிய வற்றிற்குத் தாமரையை உவமை காட்டினமையின்

உவமையாயிற்று.தாமரை என்ற பொருளைக் குறிக்கும் சொற்கள் மீண்டும் மீண்டும் வந்துள்ளமையின் பொருட்பின்வருநிலை ஆயிற்று.



## 12.2 முன்னவிலக்கணி

முன்னத்தின் மறுப்பின்அது முன்ன விலக்கே

மூவகைக் காலமும் மேவிய தாகும்.

**குறிப்பு**

ஒரு பொருளைக் குறிப்பினால் விலக்கின் அது முன்ன விலக்கு என்னும் அணியாகும். அ∴து இறப்பு, எதிர்வு, நிகழ்வு என்னும் மூவகைப்பட்ட காலங்களோடும் கூடியதாம்.

### 12.2.1 இறந்தவினை விலக்கு

"பாலன் தனதுருவாய் ஏழுலகுண் டாலிலையின்

மேலன்று கண்துயின்றாய் மெய்யென்பர்-ஆலன்று

வேலைநீர் உள்ளதோ விண்ணதோ மண்ணதோ

சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல்"

விளக்கம்: குன்றமெடுத்த மாயவனே! உலகம் ஏழையும் உண்டு பாலன் உருவத்தைக் கொண்டு ஆலிலையிலே உறங்கா நின்றாய் என்பது உலகத்துள்ளோர் மெய்யென்று சொல்லுவர்; நீ உலகத்தை உண்டு உறங்கிய ஆலானது, அன்று கடலுள்ளே நின்றதோ? ஆகாயத்தே நின்றதோ? மண்ணிலே நின்றதோ? சொல்லுவாயாக என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் பண்டொருநாள் கண்ணன் உலகனைத்தும் உண்ட பின்பு ஆலிலையில் கண் துயின்றான் என்ற நிகழ்ச்சி குறிப்பிட்டுள்ளது. உலகனைத்தும் உண்ட பின்பு ஆலிலை ஒன்று தனியே இருப்பது பொருந்தாமையை, அவ்வாலிலை தான் அப்பொழுது கடலதோ? விண்ணதோ? மண்ணதோ? என வினாவுமுகமாக அந்நிகழ்ச்சியைக் குறிப்பாக விலக்கினமையின், இது இறந்தவினை விலக்காயிற்று.

### 12.2.2 எதிர்வினை விலக்கு

"முல்லைக் கொடிநடுங்க மொய்காந்தள் கைகுலைப்ப

எல்லை யினவண் டெழுந்திரங்க - மெல்லியல்மேல்

தீவாய் நெடுவாடை வந்தால் செயலறியேன்

போவாய் ஒழிவாய் பொருட்கு"

விளக்கம்: தலைவனே! முல்லைக் கொடியானது நடுங்க, நெருங்கிய காந்தள் மலரானது விரிய, வண்டின் கூட்டங்கள் எழுந்தொலிக்கத், தீயையுடைய நெடிய வாடையானது மெல்லிய நடையையுடைய இவள்மேல் வந்தால் பின் விளையுஞ் செய்தி அறியமாட்டேன்! ஆதலின் பொருளீட்டுதற்குப் போவதை ஒழிவாய்!

பொருத்தம்:“தீவாய் நெடுவாடை வந்தால்“ என எதிர்கால நிகழ்ச்சி கூறி, அப்பொழுது “செயலறியேன்“ என்பதால் அச்செலவு விலக்குவித்தலின், இது .எதிர்வினை விலக்காயிற்று.

## 12.2.3 நிகழ்வினை விலக்கு

நிகழ்காலத்தில் நடைபெறும் நிகழ்ச்சியை விலக்குவது நிகழ்வினை விலக்காம்

“மாதர் நுழைமருங்குல் நோவ மணிக்குழைசேர்

காதின் மிகைநீலங் கைபுனைவீர்-மீதுலவு

நீணீல வாட்கண் நெடுங்கடையே செய்யாவோ

நாணீலஞ் செய்யும் நலம்”

விளக்கம்: நுண்ணிடை வருந்த,குழையையுடைய உமது காதின்மீதே மிகையாக நீலப்பூவைச் சாத்துகின்றவரே! அக்காதின் மீதே உலாவுகின்ற நீண்ட நீலமாகிய நிறத்தையுடைய கண்களின் நெடிய கடையே செய்யாவோ, நீவீர் நன்றாகச் சூடிய நீலப்பூச் செய்யும் நலத்தை என்பதாம்.

பொருத்தம்: நீலநிறம் பொருந்திய அழகிய கடைக்கண் நோக்கினையுடைய தலைவியொருத்தி , காதில் நீலோற்பல மலரையும் அணிந்தனள் . இது நிகழ்வினையாம் . அதனைக் கண்ட தலைவன் ஒருவன் , நீலோற்பல மலர் செய்யும் அழகைக் கடைக்கண்ணே செய்வதாயிருக்க , அம்மலரணிதல் மிகையன்றோ எனக் கூறுமுகமாக அம்மலரணிதலை விலக்குவதால், நிகழ்வினை விலக்காயிற்று .

## 12.2.4 அதன் வகை

அதுவே

பொருள்குணம் காரணம் காரியம் புணரும்.

விலக்கணி பொருள் விலக்கும், குண விலக்கும், காரணவிலக்கும், காரிய விலக்கும் என நான்கு வகையால் வரும்.

குறிப்பு

### 12.2.4.1 பொருள் விலக்கு

கண்ணும் மனமுங் கவர்ந்தவள் ஆடிடமென்
றண்ணல் அருளும் அடையாளந் - தண்ணிழலின்
சுற்றெல்லை கொண்டுலவுஞ் சோதித் திரளல்லால்
மற்றில்லை காணும் வடிவு

விளக்கம்: தலைவனுடைய கண்களையும், மனத்தையும் கவர்ந்துகொண்ட பெண் விளையாடுமிடம் ஆகிய சோலையின்கண் குளிர்ந்த நிழலைச் சேர்ந்த சூழலிடத்தைக் கொண்டு உலாவித் திரிவதொரு சோதியுருவம் அல்லது, அச்சோதியுருவின் அவயவங்களைக் காண்டற்கு அரிதாய் இருந்து; இ∴து ஓர் உருவத்தன்மை இருந்தபடி என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் பண்பாகிய சோதியைக் கண்டதல்லது, பண்பியாக அவ்வடிவத்தைக் காணவில்லை என விலக்கி இருப்பதால், இது பொருள் விலக்காயிற்று.

### 12.2.4.2 குண விலக்கு

“மாதர் துவரிதழ்வாய் வந்தென் னுயிர்கவரும்.
சீத முறுவல் அறிவழிக்கும் - மீதுலவி
நீண்ட மதர்விழியென் னெஞ்சங் கிழித்துலவும்
யாண்டையதோ மென்மை யிவர்க்கு”

விளக்கம்: இவருடைய அழகிய பவளம் போன்ற வாயானது, என்னுடைய உயிரை வந்து கவர்ந்து நின்றது; குளிர்ந்த நகையானது, அறிவை அழித்து நின்றது; விழியானது, என்னுடைய நெஞ்சத்தைக் கிழித்து உலவா நின்றது; ஆதலால், இவர்க்கு மென்மை எங்குள்ளதோ சொல்லுவாயாக என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் தலைவியாகிய பண்பியை விலக்காது, அவளுக்கு உளதாகிய பண்பாகிய மென்மைத் தன்மையை விலக்கி யிருப்பாதல், இது குண விலக்காயிற்று.

### 12.2.4.3 காரண விலக்கு

மதரரிக் கண்சிவப்ப வார்புருவங் கோட
அதரந் துடிப்ப வணிசேர் - நுதல்வியர்ப்ப
நின்பால் நிகழ்வனகண் டஞ்சாதால் என்நெஞ்சம்

என்பால் தவறின்மை யால்.

விளக்கம்: மடவாய்! செவ்வரி பரந்து மதர்த்த கண் சிவப்ப, நீண்ட புருவம் வளைய, இதழ் துடிக்க, அழகு சேர்ந்த நெற்றியானது வியர்ப்ப, உன்னிடத்தில் நிகழ்வவைற்றைக் கண்டு என்னிடத்தில் குற்றம் இல்லாமையால்என்னுடைய நெஞ்சம் பயப்பட மாட்டாது

பொருள் இப்பாடலில் அச்சத்திற்குக் காரணமான குற்றத்தைத் தன்பால் இல்லையென விலக்கியிருத்தலின், இது காரண விலக்காயிற்று.



### 12.2.4.4 காரிய விலக்கு

"மன்னவர் சேயர் மயிலகவி யாடலும்

பொன்னலருங் கொன்றையும் பூந்தளவின்- மென்மலரும்

மின்னுயிரா நீண்முகிலும் மெய்யென்று கொள்வதேல்

என்னுயிரோ இன்னு முளது.

விளக்கம்: காதலர் வினை கருதிச் சேய்மையில் உள்ள நாட்டினராக உள்ளார். மயிலினங்கள் கூவி யாடுதலும், கொன்றைகள் பொன்போல மலர்தலும், அழகிய முல்லையின் மிருதுவாகிய மலரும், மின்னைலைக் கொடுக்கின்ற நெடிய மேகமுமாகிய இவை மெய்யென்று கொள்வோமாயின், என் உயிரோ இன்னும் உடலோடு பொருந்தி நின்றது என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் தலைமகனைப் பிரிந்து வருந்தும் தலைவிக்குக்கார்கால வரவாகிய காரணம் நிகழ்ந்தும், உயிர் போதலாகிய காரியம் நிகழவில்லை எனக் கூறியிருத்தலின், இது காரிய விலக்காயிற்று.

## 12.2.5 விலக்கணியின் வகை:

வன்சொல் வாழ்த்துத் தலைமை இகழ்ச்சி

துணைசெயல் முயற்றி பரவசம் உபாயம்

கையறல் உடன்படல் வெகுளி இரங்கல்

ஐயம் என்றாங்(கு) அறிந்தனர் கொளலே.

விளக்கம்: வன்சொல் விலக்கும், வாழ்த்து விலக்கும், தலைமை விலக்கும். இகழ்ச்சி விலக்கும், துணைசெயல் விலக்கும், முயற்சி விலக்கும், பரவச விலக்கும்,உபாய விலக்கும்,கையறல் விலக்கும், உடன்படல் விலக்கும், வெகுளி விலக்கும், இரங்கல் விலக்கும், ஐய

விலக்கும் என்று சொல்லிய பதின்மூன்று பாகுபாட்டை உடையது இவ்வணியின் வகை ஆகும்.

### 12.2.5.1 வன்சொல் விலக்கு

வன்சொல் சொல்லி விலக்குவது.

மெய்யே பொருள்மேற் பிரிதியேல் வேறொரு
தையலை நாடத் தகும்நினக்கு - நெய்யிலைவேல்
வள்ளல் பிரிவற்றம் பார்த்தெங்கள் வாழ்நாளைக்
கொள்ள உழலுமாம் கூற்று

விளக்கம். ஒருதலையாய்ப் பொருள்மேல் ஆசையால் பிரிதியேல். இப்போழுதே உனக்கொரு மனையாளைத் தேடத்தகுவதாயிருந்தது; வேலையுடைய வள்ளலே ! நீ பிரிந்த கணம் பார்த்து, அப்பொழுதே எங்கள் வாழ்நாளைக் கொள்வதாக நினைத்துத்திரியாநின்றது கூற்றம்.

### 12.2.5.2 வாழ்த்து விலக்கு

வாழ்த்தி வைத்து விலக்குலது.

“செல்லு நெறியனைத்துஞ் சேம நெறியாக
மல்க நிதியம் வளஞ்சி□றக்க - வெல்லும்
அடற்றேர் விடலை யகன்றுறைவ தியாங்கவ்
விடத்தே பிறக்க வியாம்.

விளக்கம்: வீரனே ! நீ எம்மைப் பிரிந்து போகக்கருதிப் போகும் வழியனைத்தும் உனக்குக் காவலாகிப் உதவி செய்வதாக! நினக்குப் பொருள் வருவாயும் பெருகுவதாக! நீ இப்படிப் பிரிந்து நிலையாக நிற்பது எவ்விடம்? அவ்விடத்தை எங்கட்குச் சொல்ல வேண்டும்; நாங்கள் அவ்விடத்தே அறிந்து பிறப்போமாக

பொருத்தம்: பாதுகாப்பு நெறியாக, பொருள் மல்க, வளஞ் சிறக்க எனத்தோழி முன்னதாக வாழ்த்திப், பின்னர் நீ பிரியின் நாங்கள் இறப்போம். ஆதலின், நீ பிரிந்து செல்லுமிடத்து நாங்கள் பிறப்போமாக எனக்கூறுவதன் மூலம் தலைவனுடைய செலவை விலக்குதலின், இது வாழ்த்து விலக்காயிற்று.

### 12.2.5.3 தலைமை விலக்கு

தன்பால் தலைமை தோன்றக் கூறி விலக்குவது.

“பொய்ம்மை நெறிதீர் பொருளும் மிகப்பயக்கும்
எம்முயிர்க்கும் ஏதும் இடரில்லை - வெம்மைதீர்ந்
தேக வினிய நெறியணிய வென்றாலும்
போக லொழிவாய் பொருட்கு“

விளக்கம்: பொய்யாகிய வழியினைத் தப்புவிக்கின்ற பொருளும் பெரிது உண்டாகும்; எங்கள் உயிர்க்கும் ஓர் இடர் உண்டாக மாட்டாது; அவ்வழி நடையும் வருத்தமின்றி இன்பம் உண்டாக்கும்; அவ்வழிதானும் சிறுகித் தோன்றும் என்று சொன்னேமே ஆயினும், பொருள் கருதிப்போகின்ற போக்கை நீ ஒழிவாயாக

பொருத்தம்: :தலைவனை தோழி விலக்கும் நிலையினளாயினும், நீ பிரியின் "எம் உயிர்க்கு ஏதும் இடரில்லை" எனத் தம் தலைமை கூறி அதன் மூலமாக விலக்கலின், இது. தலைமை விலக்காயிற்று.

**12.2.5.4 இகழ்ச்சி விலக்கு**

விலக்குதற்கு ஏதுவை இகழ்ந்து விலக்குவது.

ஆசை பெரிதுடையேம் ஆருயிர்மேல் அப்பொருள்மேல்

ஆசை சிறிதும் அடைவிலமால் - தேசு

வழுவா நெறியின் வருபொருள்மேல் அண்ணல்

எழுவாய் ஒழிவாய் இனி"

விளக்கம்: தலைமை கெடாதவண்ணம் நல்வழி அமைகின்ற பொருள் கருதிப் பிரிகின்ற பெரியோனே யாம் எங்கள் அரிதாகிய உயிரின் மேல் மிக ஆசை யுடையேம்; நீ நினைத்துப் பிரிகின்ற பொருள்மேல் ஆசையுண்டாதற்குக் காரணம் சிறிதுமிலேம்; ஆதலால், நீ பொருள்மேல் ஏகுவாய், அன்றி அதனைத் தவிர்வாய்; எங்கள் தன்மை இதுவாகும் என்பதாம்.

பொருத்தம் தோழி தலைவனை விலக்கும் காலத்து தலைவன் பிரிதற்குக்காரணமான பொருளை அப்பொருள் மேல் ஆசை சிறிதும் அடைந்தோம் இல்லை எனக் கூறுமாற்றான் இகழ்ந்து அவனுடைய செலவை விலக்கலின், இது இகழ்ச்சி விலக்காயிற்று.

**12.2.5.5 துணைசெயல் விலக்கு**

துணைசெய்வாரைப்போலக் கூறி விலக்குவது துணைசெயல் வகை விலக்கு எனப்படும்.

:"விளைபொருள்மேல் அண்ணல் விரும்பினையேல் ஈண்டெம்

கிளையமுகை கேட்பதற்கு முன்னே - விளைதேன்.

புடையூறு பூந்தார் புனைகழலாய் போக்கிற்(கு)

இடையூறு வாராமல் ஏகு"

விளக்கம்: மாலையினையும், அலங்கரிக்கப்பட்ட கழலினையும் உடைய தலைவனே! நன்மை பயக்கும் பொருள்மேலே முன்னே இப்போழுதே உன்னுடைய போக்கிற்கு விலக்கு வாராவண்ணம் போவாய்!

குறிப்பு

பொருத்தம்: பொருள்மேல் விரும்பினையேல் ஈண்டு எம் கிளையமுகை கேட்டலாகிய இடையூறு வருவதற்கு முன்னே செல்வாயாக எனத் தோழி தலைவனுடைய செலவிற்குத் துணைசெய்வது போலக் கூறினும், அதனால் தாம் இறந்துபடுவோம் என்பதை உணர்த்துமுகமாக அவனுடைய செலவை விலக்கலின், இது துணைசெயல் விலக்காயிற்று.

### 12.2.5.6 முயற்சி விலக்கு

முயற்சிதோன்றக் கூறி விலக்குவது முயற்சி விலக்கு எனப்படும்.

மல்லணிந்த தோளாய் ! இதென்கொலோ வான்பொருள்மேற்

செல்க விரைந்தென் றுளந்தெளிந்து - சொல்லுதற்கே

என்று முயல்வலியான் ஏகல்நீ யென்றிடையே

தோன்றுகின்ற தென்வாயிற் சொல்

விளக்கம்: தோளினை உடையாய் ! நீ நன்மைப் பொருளின் திறத்தே விரைந்து போவாயாக என்று என்னுள்ளமானது கலக்கமறச் சொல்லுவதாக நினைத்துத் தொழிற்படாநின்றது ; அதற்குள்ளே ஒரு சொல் போகாதொழிவாயாக என்று சொல்லுவதாகத் தோன்றா நின்றது ; இஃது என்னாகுமோ ? சொல்லுவாயாக என்பதாம்

பொருத்தம்: பொருள்வயிற் பிரிதற்குச் செல்க என்று கூறுதற்கு உள்ளத்தால் நான் முயலினும், வாயில் வரும் சொல் "ஏகல்நீ" என்றே வருகின்றது எனத் தோழி, தன் முயற்சி தோன்றக் கூறித் தலைவனுடைய செலவை விலக்கலின், இது முயற்சி விலக்காயிற்று .

### 12.2.5.7 பரவச விலக்கு

தன்வசமல்லாமை தோன்றக் கூறி விலக்குவது பரவச விலக்கு எனப்படும்.

"செல்கை திருவுளமேல் யானறியேன் தேக்கமழ்தார்

மல்லகலந் தங்கு மதர்விழியின் - மெல்லிமைகள்

நோக்கு விலக்குமேல் நோவாள் இவள்காதல்

போக்கி யகல்வாய் பொருட்கு

விளக்கம்: இவளைப் பிரிவதே காரியமாகத் திருவுள்ளத்தடைத்துப் பொருட்குப் பிரிவாயானால், அதன் மேல் அடுக்குங் காரியம் என்னால் அறியப்படாதாகலான்,நின்னுடைய மார்பில் பிரியாது தங்கப்பட்ட விழியினிடத்து இமைகள் எம்முடைய தலைவன் மார்பினைப் பார்க்கின்ற பார்வையினை விலக்கா நின்றன என்று அதற்கு வருந்துந் தன்மையையுடைய இவள், நின்மேல் வைத்த ஆசையினைப் போக்கிப் போவாயாக என்பதாம்.

பொருத்தம்: “செல்கை திருவுளமேல் யானறியேன்” என்பதால் தோழி தன்வயமின்மை கூறி, இவள் காதலைப் போக்கியே நீ பொருட்கு அகல வேண்டும் என்பதால் தலைவனுடைய செலவை விலக்குதலின் இது பரவச விலக்காயிற்று .

### 12.2.5.8 உபாய விலக்கு

விலக்குவதனை ஓர் உபாயம் காரணமாகக் கூறி விலக்குவது .

> “இன்னுயிர் காத்தளிப்பாய் நீயே இளவேனில்
>
> மன்னவனுங் கூற்றுவனும் வந்தணைந்தால் - அன்னோர்
>
> தமைக்கெம்மைத் தோன்றாத் தகைமையதோர் விஞ்சை
>
> எமக்கின் றருள்புரிந்தே யேகு”

விளக்கம்: எங்களது உயிரைக் காக்குந் தன்மையை உடையையாகிய நீயே பிரியக் கருதினையாயின், எங்களிடத்து இளவேனிற் காலத்துத் தலைவனாகிய காமனும், கூற்றுவனும் வந்து சேர்ந்தால் அவர் கண்ணுக்கு நாங்கள் தோன்றாதே இருப்பதொரு வித்தையை எங்களுக்குத் தந்து போவாயாக என்பதாம்.

பொருத்தம்: நீ பிரியின் மன்மதனுக்கும் எமனுக்கும் கண்ணில் படாதவாறு இருக்கும் ஓர் உபாயத்தை அருளிச்செல்க எனத் தலைவனுக்கு ஓர் உபாயம் கூறுவதுபோல கூறி, அது அவனுக்கு இயலாததால், செல்லுதலும் இயலாது என்பது தோன்ற விலக்கினமையின் இது உபாய விலக்காயிற்று .

### 12.2.5.9 கையறல் விலக்கு

தத்தமக்கு வேண்டிய பொருள் மேல் முயலும் ஒழுக்கமின்மை தோன்றக் கூறுவது .

> “வாய்த்த பொருள்விளைத்த தொன்றில்லை மாதவமே
>
> ஆர்த்த அறிவில்லை அம்பலத்துக் - கூத்துடையான்
>
> சீலஞ் சிறிதேயுஞ் சிந்தியேன் சென்றொழிந்தேன்

காலம் வறிதே கழித்து

விளக்கம்: நற்பொருளை விளைத்தற்குக் காரணமாகிய யாதொரு முயற்சியும் செய்யவில்லை; பெரிய தவத்தைத் தேடிக்கொள்ளத் தக்க அறிவுமில்லை; சிதாகாசத்தில் ஆனந்தத் தாண்டவஞ் செய்கின்ற நடேசனுடைய மான்மியத்தைச் சிறிதேனும் நினைக்கவில்லை; ஆதலால், என் வாழ்நாளை வீண் நாளாக்கிவிட்டேன் என்பதாம்.

குறிப்பு

பொருத்தம்: இது காலத்தை வீணே கழித்தான் ஒருவனின் கூற்றாகும். நற்பொருளைத் தேடவுமில்லை, நற்றவத்தைச் செய்யவுமில்லை, அம்பலத்தானைச் சிந்திக்கவுமில்லை எனத் தத்தம் பொருள்மேல் முயலும் ஒழுக்கம் இன்மை கூறி, இதுவரை இவை செய்யாமையின், இனியும் அவை செய்ய இயலா எனக் குறிப்பான் விலக்கலின், இது கையறல் விலக்காயிற்று .

### 12.2.5.10 உடன்படல் விலக்கு

உடன்பட்டார் போல விலக்குவது உடன்படல் விலக்கு எனப்படும்.

"அப்போ தடுப்ப தறியேன் அருள்செய்த

இப்போ திவளும் இசைகின்றாள் - தப்பில்

பொருளோ புகழோ தரப்போவீர் மாலை

இருளோ நிலவோ வெழும்"

விளக்கம்:பொருளென்ன புகழென்ன இவற்றை உண்டாக்குதற்குப் பிரிந்து போவீர் ! நீர் பிரிந்த அப்பொழுதே இவளுக்கு அடுப்பதொன்றும் என்னால் அறியப்படாது; நீர் அருளிச் செய்த பிரிவுக்கு இப்போது இவளும் உடன்படா நின்றாள்; மாலைக்காலம் வந்த பொழுதே அதனோடு இருளோ மதியமோ வருதல் செய்யும், இதனை நீர் அறிவீர் என்பதாம்.

பொருத்தம்:: இப்போது இவளும் இசைகின்றாள் என்பதால் உடன்பாடு தோன்றக் கூறினும் மாலை இருளோ நிலவோ எழும், அப்போது அடுப்ப தறியேன் என்பதால் பிரியின் இறப்பள் எனக் கூறித் தலைவனுடைய செலவை விலக்கலின், இது உடன்படல் விலக்காயிற்று .

### 12.2.5.11 வெகுளி விலக்கு

வெகுளிதோன்றக் கூறி விலக்குவது .

"வண்ணங் கருக வளைசரிய வாய்புலர

எண்ணந் 1தளர்வே மெதிர்நின்று - கண்ணின்றிப்

போதல் புரிந்து பொருட்காதல் செய்வீரால்

யாதும் பயமிலேம் யாம்"

விளக்கம்: இவளுடைய நிறம் வேறுபடவும், வளையானது சிந்தவும், வாயானது நீரற்று உலரவும், நன்மை எய்துவதாக நாங்கள் எண்ணிய எண்ணமெல்லாம் பழுதாகவும் எங்கள் எதிரே நின்று கண்ணோட்டமின்றிப் பிரிதல் விரும்பி எங்களை வெறுத்துப் பொருளை ஆசைப் படுவீரானால், இனி எங்களுக்கு ஒரு பயனுமில்லை.

பொருத்தம்: நும்முடைய பிரிவால் வண்ணமும், வளையும், எண்ணமும் தளரும் எம்மைக் கண்டும் பொருள்வயிற் பிரிய வேண்டும் என்பீராயின் எமக்கு யாதும் பயமில்லை என வெகுளி தோன்றக் கூறி, பிரிதலை நினையவே இங்ஙனம் தளரும் யாம், பிரிந்தால் இறந்தே படுவோம் என்பதைக் குறிப்பால் அறிவுறுத்து விலக்கலின், இது வெகுளி விலக்காயிற்று .

### 12.2.5.12 இரங்கல் விலக்கு

இரக்கந்தோன்றக் கூறி விலக்குவது .

"ஊசல் தொழிலிழக்கும் ஒப்பு மயிலிழக்கும்

வாசஞ் சுனையிழக்கும் வள்ளலே ! - தேசு

பொழிலிழக்கும் நாளையெம் பூங்குழலி நீங்க

எழிலிழக்கும் அந்தோ இவண்"

விளக்கம்: எம்முடைய பூவினால் அலங்கரிக்கப்பட்ட குழலினை யுடைய இவள் உயிர் இழப்பதே யன்றி ஆடுகின்ற ஊசல்களும் விளையாடல் தொழிலை யிழக்கும்; மயிலும் உவமையை யிழக்கும்; சுனைகளும் நறு நாற்றத்தை யிழக்கும் ; பொழிலும் ஒளியை யிழக்கும் ; இவ்விடமும் அழகை யிழக்கும்; தலைவனே ! இனி அடுத்தவாறு செய்

பொருத்தம்:நீ பிரியின் ஊசலும், மயிலும், சுனையும், பொழிலும் இவ்விடமும் தத்தம் தன்மையை இழந்துவிடும் என இரங்கல் தோன்றக் கூறி, இதனால் நீ பிரியாமையே இவை தத்தம் தன்மையுடன் இருப்பதற்கு ஏதுவாம் எனத் தலைவனுடைய செலவை விலக்கலின் இது இரங்கல் விலக்காயிற்று .

### 12.2.5.13 ஐய விலக்கு

ஐயுற்றதனை விலக்குவது .

"மின்னோ பொழிலின் விளையாடும் இவ்வுருவம்

பொன்னோ வெனுஞ்சுணங்கிற் பூங்கொடியோ - என்னோ

திசையுலவுங் கண்ணுந் திரள்முலையுந் தோளும்

மிசையிருளுந் தாங்குமோ மின்"



விளக்கம்: இப்பொழிலின்கண்ணே விளையாடுகின்ற இவ்வுருவம், மின்னினது உருவமோ ? பொன்னோவென்று ஐயுறு நிறத்தையுடைய சுணங்கினையுடைத்தாய் இருப்பதோர் உருவத்தை யுடைத்தாகிய கொடியோ ? யாதோ ? என்று ஐயுறுகின்ற நெஞ்சமே ! திக்கனைத்தும் பரந்து உலாவித் திரிகின்ற கண்ணினையும் , திரண்ட முலையினையும் , இரண்டு தோளினையும், தன்மீதே இருளினையுந் தாங்கி யிருப்பதொரு மின்னும் உண்டோ ? சொல்லுவாயாக

பொருத்தம்: தலைவியை முதற்கண் மின்னோ, பூங்கொடியோ என ஐயுற்றவன் பின்னர், அம்மின்னல்தான் கண்ணும், முலையும், தோளும், இருளும் தாங்குமோ என்பதால் அதனை விலக்கிப் பெண் என உணருதலின், இது ஐய விலக்காயிற்று.

## 12.2.6 முன்னவிலக்குப் பிற அணிகளுடன் கூடிவரல்:

வேற்றுப்பொருள் சிலேடை ஏதுவென்று இன்னவை

மேற்கூறு இயற்கையின் விளங்கித் தோன்றும்

விளக்கம்: வேற்றுப்பொருள் வைப்பும், சிலேடையும், ஏதுவும் என்று சொல்லப்பட்டவைகளோடு இவ்விலக்கு என்னும் அணியுடன் கூடி மேற் சொல்லப்பட்ட அணிகள் போல வரும்.

### 12.2.6.1 வேற்றுப்பொருள்வைப்பு விலக்கு

வேற்றுப் பொருள் வைப்பணியோடு விலக்கு அணி கூடிவரின் , அது வேற்றுப்பொருள்வைப்பு விலக்காம்.

"தண்கவிகை யாலுலகந் தாங்கும் அனபாயன்

வெண்கவிகைக் குள்ளடங்கா வேந்தில்லை - எங்கும்

மதியத் துடனிரவி வந்துலவும் வானிற்

பொதியப் படாத பொருள்"

விளக்கம்: உளம் குளிர்ந்து கொடுக்கும் கொடையையுடைய அனபாயச் சோழனுடைய வெண்கொற்றக் குடைக்கீழ் அடங்காத மன்னர் இம் மண்ணுலகில் எங்கும் இல்லை; மதியும் இரவியும் தவழுகின்ற ஆகாயத்தில் அடங்காத பொருளும் எங்கும் இல்லை என்பதாம்.

பொருத்தம்: அனபாயன் குடைக்கீழ் அடங்காத மன்னரில்லை என விலக்கலின் விலக்கணி யாயிற்று.பின்னிரண்டு அடிகளில் உலகறி

பொருளான வேற்றுப் பொருளில் வைத்து விளக்கி இருத்தலில் வேற்றுப் பொருள் வைப்புமாயிற்று.



### 12.2.6.2 சிலேடை விலக்கு:

சிலேடை யணியோடு விலக்கு அணி கூடிவரின், அது சிலேடை விலக்காம்.

"அம்போ ருகஞ்செற் றமுத மயமாகி

வம்பார் முறுவல் ஒளிவளர்க்க - இம்பர்

முகைமதுவார் கோதை முகமுண் டுலகின்

மிகைமதியும் வேண்டுமோ வேறு"

விளக்கம்: தாமரையினது அழகினை அழித்து, அமுதத் தன்மையதாய் புதுமையோடு கூடி விரியாநின்ற ஒளியையுடையதாதற்கு முல்லை மொட்டுகளையுடைய பெண்ணின் முகமல்லது, தாமரையைக் கருகுவித்து அமிருத கலைகளால் இயன்ற வடிவுடைத்தாய்ச் செவ்வி தாராநின்ற ஒளிநிலா விரிமதி உலகத்திற்கு மிகை என்பதாகும்

பொருத்தம்: இதில் முகமிருக்க மதியமும் வேண்டுமோ ? என மதியத்தை விலக்கலின், இது விலக்கணி ஆயிற்று. முன்னிரண்டு அடிகள் முகத்திற்கும் மதியத்திற்கும் ஒப்பப் பொருள்படுதலின் சிலேடையும் மாயிற்று.

### 12.2.6.3 ஏது விலக்கு

ஏதுவணியோடு விலக்கணி கூடிவரின் அது ஏது விலக்காம்.

"பூதலத்துள் எல்லாப் பொருளும் வறியராய்க்

காதலித்தார் தாமே கவர்தலால் -நீதி

அடுத்துயர்ந்த சீர்த்தி அனபாயா ! யார்க்கும்

கொடுத்தியெனக் கொள்கின் றிலேம்"

விளக்கம்: பூமியில் வறியவராய் ஆசைப்பட்டார் எவரும், தாம் ஆசைப்பட்ட பொருள்களைத் தடையின்றித் தாமே எடுத்துக் கொள்ளுகின்றார் ஆதலின், நீ உலகத்து வறியோர்க்குக் கொடுக்கின்றாயாக நினைக்கின்றிலோம்; நீதியைச் செய்தலாலே உயர்ந்த புகழையுடைய அனபாயச் சோழனே என்பதாம்.

பொருத்தம்: பூமியில் எல்லாப் பொருளையும் வறியராயுள்ளார் அனைவரும் தாமே கவர்தல் என்னும் காரணத்தால் யார்க்கும் கொடுத்தல் என்பது விலக்கப் பட்டிருத்தலின், இது ஏது விலக்காயிற்று.

## 12.3 வேற்றுப்பொருள் வைப்பணி - வகை

முன்னொன்று தொடங்கி மற்றது முடித்தற்குப்

பின்னொரு பொருளை உலகறி பெற்றி

ஏற்றிவைத்து உரைப்பது வேற்றுப்பொருள் வைப்பே.

புலவன் தான் சொல்லக் கருதிய பொருளை முடித்தற்கு உலகறிந்த பொருளாய வேறொரு பொருளை வைப்பது வேற்றுப் பொருள் வைப்பாகுமகவிஞன் தான் சொல்லக் கருதிய பொருளைச் சிறப்புப்பொருள் என்றும்அதனை முடித்தற்குக் கூறப்படும் வேற்றுப்பொருளைப் பொதுப்பொருள் என்றும் கூறப்படும்.

**வேற்றுப்பொருள் வைப்பணி வகை:**

முழுவதும் சேறல் ஒருவழிச் சேறல்

முரணித் தோன்றல் சிலேடையின் முடித்தல்

கூடா இயற்கை கூடும் இயற்கை

இருமை இயற்கை விபரீதப் படுத்தல் என்(று)

இன்னவை எட்டும் அதன(து) இயல்பே.

முழுவதுஞ் சேறுலும், ஒருவழிச் சேறலும், முரணித் தோன்றலும், சிலேடையின் முடித்தலும், கூடாவியற்கையும், கூடுமியற்கையும், இருமையியற்கையும், விபரீதப்படுத்தலும் என எட்டு வகையால் வருவது இதன் இயல்பு ஆகும்.

### 12.3.1 முழுவதுஞ்சேறல்

ஒருதிறம் உரைத்தால் அத்திறம் எல்லாவற்றின் மேலும் முற்றச் செல்ல உரைப்பது இதுவாகும்.

புறந்தந் திருளிரியப் பொன்னேமி யுய்த்துச்

சிறந்த வொளிவளர்க்குந் தேரோன்-மறைந்தான்

புறவாழி சூழ்ந்த புவனத்தே தோன்றி

இறவாது வாழ்கின்றார் யார் ?

விளக்கம்: உலகைக் காத்துச் சக்கரத்தை நடத்தி இருள்கெட, ஒளியை வளர்க்குந் தேரையுடைய ஆதித்தன் மறைந்தான்; கடல் சூழ்ந்த உலகிற் பிறந்தார் இறவாதே வாழ்கின்றார் யாவர்? என்பதாம்.

பொருத்தம் இதில் "இருளை நீக்கி ஒளி வளர்ந்த கதிரவன் மறைந்தான் " என்பது புலவன் சொல்லக் கருதிய பொருளாகும். இதனை முடித்தற்கு "உலகில் தோன்றியவர்களில் யார்தாம் இறவாதவர் " என்ற உலகறிந்த பொருளை ஏற்றியுரைத்தலின், இது வேற்றுப் பொருள் வைப்பாயிற்று .தோன்றிய பொருள் யாவும் மறையும் என்பது உலகப் பொருள்கள் அனைத்திற்கும் பொருந்துதலின், இது முழுவதும் சேறல் என்னும் வகையாயிற்று .

## 12.3.2 ஒருவழிச்சேறல்

ஒருதிறம் உரைத்தல் அத்திறம் எல்லாவற்றின் மேலும் முற்றச் செல்லாது, சிலவற்றின் மேலே சென்றொழிவது.

"எண்ணும் பயன்தூக்கா தியார்க்கும் வரையாது
மண்ணுலகில் வாம னருள்வளர்க்கும் - தண்ணறுந்தேன்
பூத்தளிக்கும் தாராய் ! புகழாளர்க் கெவ்வுயிரும்
காத்தளிக்கை யன்றோ கடன்

விளக்கம் திருமால் தனக்கென யாதும் பயன் கருதாது உலகில் யாவர்க்கும் இல்லையென்னாது கருணையைச் செய்து அருளுகின்றான் ; குளிர்ந்த நல்ல தேனை மலர்ந்து கொடுக்கும்படியான மாலையை யுடையவனே ! புகழுடையார்க்கு எவ்வுயிர்களையும் காத்தளித்தலன்றோ கடமையாகும் என்பதாம்.

பொருத்தம்: இதன்கண் "திருமால் யாவர்க்கும் கைம்மாறு கருதாது அருள் சுரக்கின்றான் " என்பது கவிஞன் சொல்லக் கருதிய பொருளாகும் . இதனை முடித்தற்குப் " புகழ் பொருந்தியார்க்கு எவ்வுயிரும் காத்தளித்தலே கடன் " என்ற உலகறி பொருளை ஏற்றியுரைத்தலின் வேற்றுப் பொருள் வைப்பாயிற்று . எவ்வுயிரையும் காத்தளித்தல் உலகினர் அனைவர்க்கும் பொருந்தாது , அவர்களுள் ஒரு சாரார் ஆகிய புகழாளர்க்கே அமைதலின், இது ஒருவழிச்சேறலாயிற்று.

## 12.3.3 முரணித்தோன்றல்

தம்முள் மாறுபட்டிருக்கும் இயல்புடைத்தாய பொருள் வைப்பது.

"வெய்ய குரல்தோன்றி வெஞ்சினவே றுட்கொளினும்
பெய்யு முகில்தன்னைப் பேணுவரால் -வையத்
திருள்பொழியுங் குற்றம் பலவரினும் யார்க்கும்

குறிப்பு

பொருள்பொழிவார் மேற்றே புகழ்"

விளக்கம்:கொடிய இடியைத் தன்னிடத்தே உடைத்தாயினும் மழை பொழியும் மேகத்தை அனைவரும் பாராட்டுவர். உலகில் இருள் தன்மை வாய்ந்த மிகக் கொடிய குற்றங்களைச் செய்யினும், அவர்கள் யாவர்க்கும் வரையாது வழங்கும் வள்ளன்மையாராயின் அவர்களையே பாராட்டுவர் என்பதாம்.

பொருத்தம்: இதில் "கடிய குரலையும், கொடுமையையும் உடைய இடியைத் தன்னகத்தே கொண்டிருப்பினும் மழை தருதலின் மேகத்தை யாவரும் புகழ்வர்" என்பது கவிஞன் சொல்லக் கருதிய பொருளாகும். இதனை முடித்தற்குக் "குற்றமிருப்பினும் கொடையாளரை யாவரும் புகழ்வர்" என்ற உலகறி பொருளை ஏற்றியிருத்தலின் வேற்றுப்பொருள்வைப்பாயிற்று. குற்றம்உடையார் புகழப்படாதிருத்தலே இயல்பு . அங்ஙனமின்றிப் புகழப்படுவர் என்றல் முரணித் தோன்றலாம் .

## 12.3.4 சிலேடையின் முடித்தல்

முன்னர் வைத்த பொருளையும், பின்னர் வைத்த பொருளையும் ஒரு சொற்றொடர்பால் சொல்லுவது.

எற்றே கொடிமுல்லை தன்னை வளர்த்தெடுத்த
முற்றிழையாள் வாட முறுவலிக்கும் - முற்று
முடியாப் பரவை முழங்குலகத் தென்றும்
கொடியார்க்கும் உண்டோ குணம் !

விளக்கம் முல்லைக் கொடியானது, முன்பு தன்னை வளர்த்துக் காத்த இவள் வருந்த முறுவல் செய்து நின்றது; இ∴து என்னே ! முழக்கத்தினை யுடைய முடிவு தெரியாத கடல் சூழப்பட்ட உலகத்துக் கொடியார்க்கும் குணம் உண்டாமோ ? இல்லை என்பதாம்..

பொருத்தம்: இதில் "தன்னை வளர்த்தெடுத்த தலைவி தலைவனுடைய பிரிவால் வருந்துமாறு முல்லைக்கொடி முறுவலிக்கும் என்பது கவிஞன் சொல்லக் கருதிய பொருளாகும் . இதனை முடித்தற்கு உலகத்தில் கொடியாரிடத்தும் குணம் உண்டாகுமோ ? என்ற உலகறி பொருளை ஏற்றி வைத்திருத்தலின் வேற்றுப்பொருள் வைப்பாயிற்று.

## 12.3.5 கூடாவியற்கை

கூடாததனைக் கூடுவதாக்கிக் கொள்வது.

ஆர வடமும் அதிசீத சந்தனமும்
ஈர நிலவும் எரிவிரியும் - பாரில்
துதிவகையான் மேம்பட்ட துப்புரவுந் தத்தம்

விதிவகையான் வேறு படும்

விளக்கம்:தண்ணிய முத்து மாலையும் மிகவும் குளிர்ந்த சந்தனமும், குளிர்ந்த நிலவும் பிரிவாற்றாது வருந்துபவர்க்கு நெருப்பின் வெம்மையைத் தருவனவாகும். உலகில் புகழ்தற்குரிய பொருள்களும் அவரவர் விதி வகைக்கேற்பத் தத்தம் நிலைமையினின்றும் வேறுபடும் என்பதாகும்.

பொருத்தம்: இதில் ஆரவடம், சந்தனம், நிலவு ஆகியன பிரிவாற்றாத பெண்டிர்க்கு நெருப்பாக இருக்கும்" என்பது கவிஞன் சொல்லக் கருதிய பொருளாகும். இத்தன்மை அவற்றிற்குக் கூடாத்தன்மையாகும். இங்ஙனம் கூடாத தன்மையைக் கூடுவதாக்கி யுரைத்தற்கு,"நுகர்தற்குரிய பொருள்களெல்லாம் அவரவர் விதிவகையான் வேறுபடும்" என்ற உலகறி பொருளை ஏற்றிவைத்திருத்தலின், இது வேற்றுப் பொருள் வைப்பாயிற்று. முன்னிரண்டு அடிகளில். கூடாத தன்மையைக் கூட்டி யுரைக்கப் பட்டிருத்தலின் கூடா இயற்கை ஆயிற்று.

## 12.3.6 கூடுமியற்கை

கூடுவதாகக் கூறுவது.

"பொய்யுரையா நண்பர் புனைதேர் நெறிநோக்கிக்

கைவளைசோர்ந் தாவி கரைந்துகுவார் - மெய்வெதும்பப்

பூத்தகையுஞ் செங்காந்தள் பொங்கொலிநீர் ஞாலத்துத்

தீத்தகையார்க் கீதே செயல்"

விளக்கம்: எக்காலத்தும் பொய்யறியாத தலைவருடைய அலங்கரிக்கப்பட்ட தேர் வரும் வழிபார்த்துக் கைவளை வீழ உயிர் நைந்து விதனப் படுகின்ற மடவாருடைய மேனி அழலப் பூத்து விளங்கிவருத்துகின்றது சிவந்த நிறத்தையுடைய காந்தள்; கடல் சூழ்ந்த ஞாலத்துத் தீக்குணத் தார்க்கு ஈதன்றோ செயல்

பொருத்தம்: இதில் "தலைவனின் தேர் வரும் வழியைப் பார்த்து மனம் வெதும்புவார்தம் உடல் வருந்துமாறு செங்காந்தள் பூத்துகிடக்கின்றது என்பது கவிஞன் சொல்லக் கருதிய பொருளாகும். இதனை முடித்தற்கு உலகில் கொடிய தன்மையுடையார்க்குப், பிறர் வெதும்புமாறு செய்தலே இயல்பாம் என்ற உலகறி பொருளை ஏற்றி வைத்திருத்தலின்,வேற்றுப்பொருள் வைப்பாயிற்று. தீயதன்மை வாய்ந்தார், பிறர்க்கு தீய தன்மையை விளைவித்தல் பொருந்திய இயல்பாதலின், இது கூடும் இயற்கை ஆயிற்று.

குறிப்பு

### 12.3.7 இருமையியற்கை

கூடாததனையும் கூடுவதனையும் ஒருங்கு கூறுவது.

“கோவலர்வாய் வேய்ங்குழலே யன்றிக் குரைடகலும்
கூவித் தமியோரைக் கொல்லுமால் - பாவாய்!
பெரியோரும் பேணாது 1செய்வரே போலும்
சிறியோர் பிறர்க்கியற்றுந் தீங்கு”

விளக்கம்: வேய்ங்குழல் இசையே யன்றி, கடலும் பிரிந்திருந்தாரைக் கொல்லும்; பாவாய்! பெருந்தகைமை உடையாரும் விசாரியாது செய்வர் போன்றதுகாண், எப்பொழுதுஞ் சிறியோர் அயலவர்க்குச் செய்யுந் தீமைக் காரியத்தை என்பதாம்.

பொருத்தம்:: இதன்கண் “பிரிவால் வருந்தியிருப்பவர்களை அவர்கள் வருத்தம் மிகுமாறு கோவலரின் வேய்ங்குழலே யன்றிக் கடலும் அத்தன்மையைச் செய்கிறது“, என்பது கவிஞன் சொல்லக் கருதிய பொருளாகும். இதனை முடித்தற்குச் “ சிறியோர் செய்யும் தீங்கினைப் பெரியோர்களும் செய்வர் போலும்“, என்ற உலகறி பொருளை ஏற்றி வைத்திருத்தலின், இது வேற்றுப் பொருள் வைப்பாயிற்று. சிறியோர் பிறர்க்குத் தீங்கியற்றல் கூடும்தன்மை. பெரியோர் அங்ஙனம் செய்தல் கூடாத் தன்மை. சிறுமையதாகிய குழல் செய்யும் தீங்கினைப், பெரிதாகிய கடலும் செய்கிறது எனவே, அவ்விருமை கூடுமியற்கை, கூடா இயற்கை இயற்கையும் ஒருங்கு கூறியதாயிற்று.

### 12.3.8 விபரீதம்

விபரீதப்படச் சொல்லுவது.

“தலையிழந்தான் எவ்வுயிருந் தந்தான் பிதாவைக்
கொலைபுரிந்தான் குற்றங் கடிந்தான் - உலகில்
தனிமுதன்மை பூண்டுயர்ந்தோர் வேண்டுவரேல் தப்பாம்
வினையும் விபரீத மாம்.

விளக்கம்: முழுதுலகும் படைத்த பிரமன் தலை இழந்தான்; பிதாவைக்கொன்ற சண்டீசன் குற்றம் தீர்ந்தான்; ஒருவர்க்குமில்லாத பெருமையுடையராய் உயர்ந்தோர் நினைப்பின் தப்பாத வினைகளும் உலகத்து மறுதலைப்படும்.

பொருத்தம்: :இதன்கண் தலையிழந்த பிரமன் எவ்வுயிரையும் தந்தான் எனபதும், பிதாவைக் கொலைபுரிந்த சண்டீசரைக் குற்றமற்றவராக இறைவன் ஆட்கொண்டான் என்பதும் கவிஞன் கூறக்கருதியவிபரீதப் பொருளாகும். இதனை முடித்தற்கு "உலகில் தனித்தலைமை பூண்டவர்கள் தவறுகள் செய்யினும் தவறாகா" என்ற உலகறி பொருளை ஏற்றி வைத்திருத்தலின் இது வேற்றுப் பொருள் வைப்பாயிற்று.



குறிப்பு

## 12.4 வேற்றுமையணி

கூற்றினும் குறிப்பினும் ஒப்புடை இருபொருள்

வேற்றுமைப் படவரின் வேற்றுமை அதுவே.

கூற்றினானால், குறிப்பினானால் ஒப்புடைய இரு பொருள்களை ஒரு பொருளாக வைத்து அவற்றைத் தம்முள் வேற்றுமைப்படச் சொல்லுவது வேற்றுமை என்னும் அணியாகும். வேற்றுமை என்னாது அதுவே எனக் குறித்தமையால் அவை ஒரு பொருளான் வேற்றுமை செய்தலும், இப்பொருளான் வேற்றுமை செய்தலும் உடையன. ஆகும்.மேலும் அவ்விலேசானே வேற்றுமைப்படக் கூறுதலேயன்றி ஒன்றின் ஒன்று மிகுதிப்படக் கூறவும் படும்.

### 12.4.1 ஒருபொருள் வேற்றுமைச்சமம்

புலவன் தான் கூறும் இருபொருள்களுள் ஒன்றற்கு மட்டுமே வேற்றுமை கூறி, அவ்வேற்றுமை யிருப்பினும் அவ்விரண்டு பொருள்களும் சமமேஎன்று கூறுவது ஒரு பொருள் வேற்றுமைச் சமமாம்.

அனைத்துலகுஞ் சூழ்போய் அரும்பொருள் கைக்கொண்(டு)

இனைத்தளவைத் தென்றற் கரிதாம் - பனிக்கடல்

மன்னவநின் சேனைபோல் மற்றது நீர்வடிவிற்(று)

என்னும் இதுவொன்றே வேறு.

விளக்கம்: உலகம் முழுவதும் சூழ்ந்து பிறர்க்கு அரிய பொருள்களையும் உடைத்தாய் இன்ன அளவினையுடைத்து என்றற்கு அரிதாகும் குளிர்ந்த கடலும், உலகில் உள்ள எல்லாநாட்டையும் கைக்கொண்டு அந்த நாட்டரசர்களின் அரிய செல்வமெல்லாம் கைக் கொண்ட உனது படையும் அரசே! ஒக்குமாயினும்,கடலானது நீராகிய வடிவை உடையது என்னும் ஒரு குணமே வேறுபட்டிருக்கும் தன்மையுடையதாகும்.

பொருத்தம்: இப்பாடலில் கூறப்படும் பொருள்கள் படை, கடல் என்பன ஆகும். முன்னிரண்டடிகளில் இவ்விரண்டிற்குமுள்ள ஒப்புமையைக் கூறி, மூன்றாமடியில் "நீர் வடிவிற்று என்னும் இதுவொன்றே வேறு எனக்

கடலுக்கு மட்டும் வேற்றுமை கூறி, அவ்வேற்றுமை யிருப்பினும் அவ்விரண்டும் சம்மே எனத் தோன்றுமாறு உரைத்தலால் இது ஒரு பொருள் வேற்றுமைச் சமமாயிற்று.

### 12.4.2 இருபொருள் வேற்றுமைச்சமம்

புலவனால் கூறப்படும் இருபொருள்களுள் ஒன்றற்கு மட்டுமே வேற்றுமை கூறி, அவ்வேற்றுமை யிருப்பினும் அவ்விரண்டு பொருள்களும் சமமேஎன்று கூறுவது ஒரு பொருள் வேற்றுமைச் சமமாம்

சென்று செவியளக்குஞ் செம்மையவாய்ச் சிந்தையுள்ளே

நின்றளவில் இன்பம் நிறைப்பவற்றுள் - ஒன்று

மலரிவருங் கூந்தலார் மாதர்நோக்(கு) ஒன்று

மலரிவருங் கூத்தன்தன் வாக்கு"

விளக்கம்: செவியை அளக்கும் செம்மையை உடைத்தாயும் மனங்களில் நின்ற மாத்திரத்திலே உவகையை தரும் தன்மையை உடையதாயும் அமைந்தது காதலைச் செய்யும்கண் என்றும்; உலகத்தார் செவியால் அளந்தறியும் தன்மையை உடைத்தாய்க், கேட்போர். மனங்களில் நின்று அளவில்லா இன்பத்தைத் தோற்றுவிப்பது மலரி எனப்பட்ட ஊரில் உண்டாகிய கூத்தன் என்னும் இயற் பெயரையும், சக்கரவர்த்தி என்னும் சிறப்புப் பெயரையும் உடையானது கவிதை என்றும் அமைந்ததாகும்.

பொருத்தம்: இப்பாடலில் உரைக்கப்படும் பொருள்கள் பெண்களின் நோக்கும், ஒட்டக் கூத்தரின்கவியும் ஆகும் . முன்னிரண்டடிகளில் இவ்விரண்டற்கும் உள்ள ஒப்புமையைக் கூறிப் பின்பு, பின்னிரண்டடிகளில் ஒன்று பெண்களுக்கு நோக்கு என்றும், இன்னொன்று ஒட்டக்கூத்தரின் வாயிடத்துள்ள வாக்கு என்றும் அவ்வப்பொருள்களுக்கும் இருக்கும் இடத்தால் வேற்றுமை கூறி, அவ்வேற்றுமையிருப்பினும் அவ்விரு பொருள்களும் சமமே எனத் தோன்றுமாறு கூறியிருத்தலின், இது இருபொருள் வேற்றுமைச் சமமாயிற்று .

### 12.4.3 உயர்ச்சி வேற்றுமை

மலிதேரான் கச்சியும் மாகடலுந் தம்முள்

ஒலியும் பெருமையும் ஒக்கும் - மலிதேரான்

கச்சி படுவ கடல்படா கச்சி

கடல்படுவ வெல்லாம் படும்

விளக்கம்: தேர்கள் நிறைந்து விளங்கும் காஞ்சீபுரமும், பெருமை பொருந்திய கடலும் தம்முள் ஒலியாலும், பெருமையாலும் ஒத்து

விளங்கும். ஆயினும் தேர்கள் நிறைந்த காஞ்சீபுரத்தில் உள்ள பொருள்கள் கடலின்கண் இராது. ; ஆனால் கடலில் உள்ள பொருள்கள் எல்லாம் காஞ்சீபுரத்தில் இருப்பனவாம் என்பதாம் .



பொருத்தம்: இப்பாடலில் கூறப்பட்ட பொருள்கள் கச்சியும், கடலும் ஆகிய இரண்டாகும் . முன்னிரண்டடிகளில் இவ்விரண்டற்கும் உள்ள ஒப்புமையைக் கூறிப், பின்னிரண்டடிகளில் கடலினும் கச்சியே உயர்ந்தது என அவ்வுயர்ச்சிக்கான காரணத்துடன் வேற்றுமையையும் கூறியிருத்தலின், இது உயர்ச்சி வேற்றுமை ஆயிற்று.

## 12.4.4 இருபொருள் வேற்றுமைச் சமம்

கார்க்குலமும் பாய்திரையுங் காட்டும் கடல்படையும்

போர்க்களிறும் பாய்மாவும் பொங்குமால் - 1ஏற்றும்

கலமுடைத்து முந்நீர் கதிராழித் திண்டேர்

பலவுடைத்து வேந்தன் படை

விளக்கம்: கரிய மேகத்தையும் பரந்த அலைகளையும் உடையது கடலானது; சோழனது படையும் போர்த்தொழில் மிக்க களிறும்,பாயுங் குதிரையும் மிக்குத் தோன்றும்; அந்தக் கடலானது, பலபொருளும் ஏற்றும் மரக்கலம் உடைத்து; சோழனது படையும், பலகதிராழித் திண்டேரினை உடையது என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் கூறப்பட்ட பொருள்கள் கடலும், படையும் ஆகிய இரண்டுமாம் . முன்னிரண்டடிகளில் இவ்விரண்டற்கும் உரிய ஒப்புமையைக் கூறிப் பின்னிரண்டடிகளில் கடல் கலம் உடைத்து; படைதேர் உடைத்து என வேற்றுமை கூறி, அவ்வேற்றுமை இருப்பினும் அவ்விரண்டும் சமமே எனக் கருதுமாறு கூறியிருத்தலால், இது இருபொருள் வேற்றுமைச் சமமாயிற்று .

## 12.4.5 உயர்ச்சி வேற்றுமை

பதுமங் களிக்கும் அளியுடைத்துப் பாவை

வதனம் மதர்நோக் குடைத்துப் - புதையிருள்சூழ்

அப்போ(து) இயல்பழியும் அம்போ ருகவதனம்

எப்போது நீங்கா தியல்பு

விளக்கம்: தாமரை தன்னிடத்து வண்டுகளை உடையது, இப்பெண்ணின் முகமும் தன்னிடத்து கண்களை உடையது; ஆயினம் உலகை இருளில் மறைக்கும் இரவு நேரத்தில் தாமரை தன் இயல்பு கெடும் ,

ஆனால் இப்பெண்ணின் முகமோ எப்போதும் தன் இயல்பு கெடாது என்பதாம் .

பொருத்தம்: இப்பாடலில் உரைக்கப்பட்ட பொருள்கள் தாமரை, பெண்ணின் முகம் ஆகிய இரண்டும் ஆகும். முன்னிரண்டடிகளில் இவ்விரண்டற்கும் உள்ள ஒப்புமையைக் குறிப்பால் கூறிப் , பின்னிரண்டடிகளில் தாமரையிலும் முகம் உயர்ந்ததற்கான வேற்றுமையைக் கூறியிருத்தலின், இது குறிப்பான் வந்த உயர்ச்சி வேற்றுமை ஆயிற்று .

## 12.4.6 வகைகள்:

அதுவே

குணம்பொருள் சாதி தொழிலொடும் புணரும் .

இவ்வேற்றுமை என்னும் அணி குணத்தோடும், பொருளோடும், சாதியோடும், தொழிலோடும் கூடியும் வரும்.

### 12.4.6.1 குண வேற்றுமை

சுற்றுவிற் காமனுஞ் சோழர் பெருமானாம்

கொற்றப்போர்க் கிள்ளியுங் கேழ்ஒவ்வார் - பொற்றொடியாய்

ஆழி யுடையான் மகன்மாயன் செய்யனே

கோழி யுடையான் மகன் “

விளக்கம் காமனும், சோழனும் தம்மில் நிறம் ஒவ்வார். ! சக்கரத்தை உடையனாகிய மாயனுடைய மகனாகிய காமன் கறுத்திருப்பான்; கோழி என்னும் ஊரை யுடையவனாகிய சோழனுடைய மகன் சிவந்திருப்பான் என்பதாம்.

பொருத்தம்: : இப்பாடலில் கூறப்பட்ட பொருள்கள் காமனும் சோழனும் ஆவர். இவ்விருவருக்கும் கறுப்பும் சிவப்புமாகிய வேற்றுமை கூறப்பட்டிருத்தலின், இது குண வேற்றுமை ஆயிற்று .

### 12.4.6.2 பொருள் வேற்றுமை

ஓங்கல் இடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி

ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் - ஆங்கவற்றுள்

மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது

தன்னேர் இலாத தமிழ்

விளக்கம்::மலையில் தோன்றி, மேன்மக்கள் தொழுதேத்த விளங்கி,கடல் சூழ்ந்த உலகத்து இருள் அகற்றுவதாயும்; பொதிய மலையில் தோன்றி,

அறிவுடையோர் தொழுதேத்த விளங்கி,கடல்சூழ் உலகத்தில் மக்கள் உள்ளத்து உள்ள மயக்கந் தீர்ப்பதாயும் இருக்கின்றவற்றுள், ஒன்று ஒளியும் அழகும் தனிக்கால் தேரும் விரும்பும் வெயிலும் உடைய ஆதவன் பிறிதொன்று தனக்கொப்பற்ற தமிழ் என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் கூறப்பட்ட பொருள்கள் தமிழ் , ஆதவன் ஆகிய இரண்டாகும். இவ்விரு பொருள்களும் ஓங்கலிடை வருதல் முதலிய தொழில்களால் ஒப்புமையுடையவேனும், பொருளால் இரண்டும் வெவ்வேறு என வேற்றுமை கூறியிருத்தலின் , இது பொருள் வேற்றுமை ஆயிற்று .

### 12.4.6.3 சாதி வேற்றுமை

வெங்கதிர்க்கும் செந்தீ விரிசுடர்க்கும் நீங்கா(து)

பொங்கு மதியொளிக்கும் போகாது - தங்கும்

வளமையான் வந்த மதிமருட்சி மாந்தர்க்(கு)

இளமையான் வந்த இருள் "

விளக்கம்: சூரியனுக்கும், விளக்குக்கும் நீங்காது; மதியொளிக்கும் போகாதே நிற்கும்; இளமைப் பருவத்தில் செல்வக் களிப்பான் வந்த அறியாமையாகிய இருள் என்பதாகும்.

பொருத்தம்: இப்பாடலில் கூறப்பட்ட பொருள்கள் மருட்சியும், இருளும் ஆகும். இவற்றுள் முன்னையது அக இருள் : ஏனையது புற இருள்; ஆதலின் இவ்விரண்டும் இருள் என்னும் சாதி பற்றியதாகும் இவ்விரண்டற்கும் வேற்றுமை கூறப்படுதலின் , இது சாதி வேற்றுமை ஆயிற்று.

### 12.4.6.4 தொழில் வேற்றுமை

புனனாடர் கோமானும் பூந்துழாய் மாலும்

வினைவகையான் வேறு படுவர் - புனனாடன்

ஏற்றெறிந்து மாற்றலர்பால் எய்தியபார் மாயவன்

ஏற்றிரந்து கொண்டமையி னால்

விளக்கம்: சோழனும், பொலிவினை யுடைய துளசி மாலையை அணிந்த மாயனும் தொழிலான் வேறுபட்டிருப்பர்; சோழன், பகைவர் எறிந்த வேலைத் தன்மீது ஏற்றும், தனது வேலைப் பகைவர்மேல் எறிந்தும் கைக்கொண்ட உலகை, மாயத்தையுடைய திருமால் நீரேற்றும் இரந்தும் கொண்டமையினால் என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் கூறப்பட்டவர்கள் சோழனும், திருமாலும் ஆவர். இருவரும் காத்தல் தொழிலால் ஒப்புமை யுடையாராயினும், உலகைப் பெறுதலாகிய தொழிலில் வேற்றுமை கூறப்பட்டிருத்தலின், இது தொழில் வேற்றுமை ஆயிற்று .

இவ்வேற்றுமையணி விலக்கு , சிலேடை என்ற அணிகளுடனும் கூடிவரும் என்பதற்காம்.

### 12.4.6.5 விலக்கியல் வேற்றுமை

வேற்றுமையணி விலக்கணியோடு கூடிவரின் அது விலக்கியல் வேற்றுமையாம்.

தம்மால் பயன்றூக்கா தியாவரையுந் தாங்கினும்

கைம்மாறுங் காலம் உடைத்தன்றே - எம்மாவி

அன்னவனை யாழி யனபா யனை 1யலராள்

மன்னவனை மானுமோ வான்

விளக்கம்: உலகத்தாரால் பயனை விரும்பாது யாவரையும் தாங்கினும் மேகம் கைம்மாறுங் கால வரைவுடைத்து; ஆதலால், கைம்மாறுங் காலவரையின்றிக் கொடுக்கின்ற எம்முடைய உயிரை ஒத்தவனை அனபாயனைத் திருமகளுக்கு நாயகனை மேகம் ஒக்குமோ ? ஒவ்வாது என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் கூறப்படும் பொருள் சோழனும் மேகமும் ஆகும். முதலடியில் இவ்விரண்டற்கும் உள்ள ஒப்புமையைக் கூறி, இரண்டாமடியில் மேகம் கால வரையறை யுடையது என்பதால், சோழன் கால வரையறை யின்றி வழங்குபவன் என வேற்றுமை கூறி யிருத்தலின் , இது வேற்றுமை யாயிற்று. பின்னிரண்டடிகளில் இவ்வாற்றான் சோழனுக்கு மேகம் ஒப்பாகாது என விலக்கப்பட்டிருத்தலின் விலக்கணியும் ஆயிற்று.

### 12.4.6.6 சிலேடை வேற்றுமை

வேற்றுமையணி சிலேடை அணியோடு கூடிவரின் அது சிலேடை வேற்றுமையாம்.

ஏறடர்த்து வில்முருக்கி எவ்வுலகுங் கைக்கொண்டு

மாறடர்த்த வாழி வலவனைக் - கால்தொழுதற்(கு)

எஞ்சினா ரில்லெனினு மாய னிகனெடுமால்

வஞ்சியா னீர்நாட்டார் மன்

விளக்கம்: விடைதழுவ , வில்லிறுத்து, மூன்றுலகும் அளந்து கைக்கொண்டு, பகைஞரைத் தொலைத்த சக்கரத்தை யுடைய மாலை, உலகத்துள்ளார் யாவரும் வணங்குவார் எனினும் மாயன் என்று சொல்லப்படுவான். பாண்டியனுடைய சுறவேற்றுக் கொடியை அழித்துச் சேரனுடைய விற்கொடியைச் சிதைத்து எல்லா நாட்டையும் கைக்கொண்டு தன்னோடு ஒப்பார் உலகத்தில் இல்லையெனச் சக்கரம் செலுத்திய சோழனைத் தொழுதற்கு ஒழிந்தார் இல்லையென மாயனோடு ஒப்பித்துச் சொல்லினும், சோழன் வஞ்சியான் என்பதாம்.





பொருத்தம்: இப்பாடலில் கூறப்படும் பொருள் சோழனும் திருமாலும் ஆவர். முன்னிரண்டடிகளில் இருவர்க்கும் உள்ள ஒற்றுமையைக் கூறிப் பின்னிரண்டடிகளில் திருமால் மாயன் என்றும், வேற்றுமை கூறப் பட்டிருத்தலின், இது வேற்றுமையணி ஆயிற்று. மாயன் என்னும் சொல் கரியன்,வஞ்சனையுடையவன் என்ற இருபொருளுக்கும், வஞ்சியான் என்னும் சொல் வஞ்சனையில்லாதவன், வஞ்சி என்னும் ஊரை உடையவன் என்ற இரு பொருளுக்கும் ஏற்ப இருத்தலின், இது சிலேடையணியும் ஆயிற்று.

## 12.5 விபாவனையணி

உலகறி காரணம் ஓழித்தொன் றுரைப்புழி

வேறொரு காரண மியல்பு குறிப்பின்

வெளிப்பட வுரைப்பது விபாவனை யாகும்.

ஒன்றன் வினை உரைக்குங்கால் அவ்வினைக்குப் பலரும் அறிய வருங் காரணம் ஒழித்துப், பிறிதொரு காரணமாக இயல்பாகக், குறிப்பால் வெளிப்பட உரைப்பது விபாவனை என்னும் அணி என்பது ஆகும்..

### 12.5.1 அயற்காரண விபாவனை

தீயின்றி வேந்தமியோர் சிந்தை செழுந்தேறல்

வாயின்றி மஞ்ஞை மகிழ்தூங்கும் - வாயிலார்

இன்றிச் சிலர்ஊடல் தீர்ந்தார் இகலின்றிக்

கன்றிச் சிலைவளைக்கு கார்

விளக்கம்: துணையின்றித் தனித்திருப்போருடைய மனம் நெருப்பில்லாமலே வேகும்; செழிப்பான கள்ளை உண்ணாமலேயே மயில்கள் மகிழ்ச்சியோடிருக்கும்; ஊடல் தீர்ப்பதற்குரிய வாயில்கள் இல்லாமலேயே சில பெண்கள் ஊடல் தீர்ந்தனர்; மேகம் யாரொடும்

மாறுபாடு கொள்ளாமலேயே கோபித்துஇந்திரவில்லை வளைக்கும் என்பதாம்.

பொருத்தம்: வேதற்குத் தீயும். மகிழ்தற்குத் தேறலும், ஊடல் தீர்தற்கு வாயிலும், வில் வளைத்தற்கு மாறுபாடும் இன்றியமையாத காரணங்கள் ஆகும். இவை உலகறிந்த காரணங்கள். எனினும், இவையின்றியே அவ்வச் செயல்கள் நிகழ்ந்தன என்பதால் விபாவனை ஆயிற்று. இங்ஙனம் கூறவே இவற்றிற்குக் காரணம் 'கார் காலம்' என்பது உய்த்துணர்ந்து கொள்ளப்படுதலின் இது அயற்காரணமாயிற்று

## 12.5.2 இயல்பு விபாவனை:

"கடையாமே கூர்த்த கருநெடுங்கண் தேடிப்

படையாமே ஏய்ந்ததனம் பாவாய்! - கடைஞெமிரக்

கோட்டாமே கோடும் புருவங் குலிகச்சே(று)

ஆட்டாமே சேந்த வடி

விளக்கம்: பெண்ணே! நின்னுடைய கண்கள் யாரும் கடைதல் இன்றியே கூர்மையாய் உள்ளன, தனங்கள் தேடிப் படைக்காமலேயே பொருந்த அமைந்துள்ளன, அடிகள் சாதிலிங்கக் குழம்பு பூசப்படாமலேயே சிவந்துள்ளன என்பதாம்.

பொருத்தம்: கூர்மையாதற்குக் கடைதலும், தனம் பெருக அமைதற்குத் தேடிப் படைத்தலும், வளைதற்குப் பிறரால் வளைக்கப்படுதலும், சிவத்தற்க்குக் குலிக சேறு ஆட்டுதலும் உலகறிந்த காரணங்கள்ஆகும்,ஈண்டு அவையின்றியே அவ்வச் செயல்கள் இயல்பாக விளைந்தன எனக் குறிப்பாக அறியப்படுதலின் இது இயல்பு விபாவனை ஆயிற்று.'விபாவனை என்னாது' ஆகும் என்றதனால், வினையெதிர் மறுத்து பொருள் புலப்படுப்பினும், பொதுவகையாற் காரணம் விலக்கிக் காரியம் புலப்படுப்பினும் அவ் அணி என்பதாகும்.

## 12.5.3 வினையெதிர் மறுத்துப் பொருள்புலப்படுப்பது:

"பூட்டாத விற்குனித்துப் பொங்கு முகிலெங்கும்

தீட்டாத அம்பு சிதறுமால் - ஈட்டமாய்க்

காணாத கண்பரப்புந் தோகை கடும்பழிக்கு

நாணா(து) அயர்த்தார் நமர்"

விளக்கம்: மேகங்கள் நாணால் பூட்டப்படாத வில்லை வளைத்து இந்திரவில்லைத் மழைத் துளிகளைச் சொரிகின்றன; மயில்கள் கூட்டமாகக் காணாத கண்களைாகிய பீலிக் கண்களைப்) பரவச்

குறிப்பு

செய்கின்றன, இத்தகைய கார்காலத்தில் பிரிவால் யாம் இறந்துபடுதலாகிய கொடும்பழிக்கு நாணாது நம்மைத் தலைவர் மறந்தார் என்பதாம்.

பொருத்தம் வில்லிற்குப் பூட்டுதலும், அம்பிற்குத் தீட்டுதலும், கண்ணிற்குக் காணுதலும் அவ்வவற்றிற்குரிய வினைகளாம். ஈண்டு அவ்வினைகளை மறுத்தலால் முறையே இந்திரவில், மழைத்துளி, பீலிக்கண் என்ற பொருள்கள் புலப்படுதலின், இது வினையெதிர் மறுத்துப் பொருள் புலப்படுத்தல் என்பது ஆயிற்று.

## 12.5.4 பொதுவகையாற் காரணம் விலக்கிக் காரியம் புலப்படுப்பது:

காரண மின்றி மலயா நிலங்கனலும்

ஈர மதிவெதும்பற் கென்னிமித்தம் - காரிகையார்க்

கியாமே தளர வியல்பாக நீண்டனகண்

தாமே திரண்ட தனம்

விளக்கம் பொதிய மலையிலிருந்து வரும் தென்றற் காற்று காரணமின்றியே வெம்மை உடையதாகிறது.; குளிர்ச்சியையுடைய நிலவு இப்பொழுது வெப்பம் தருதற்குக் காரணம் யாது? யாம் தளருமாறு இவ்வழகிய மகளிர்க்குக் கண்கள் இயல்பாகவே நீண்டுள்ளன, கொங்கைகளும் காரணமின்றி இயல்பாகவே திரண்டுள்ளன என்பதாம்.

பொருத்தம் கனலுதற்கும், வெதும்புதற்கும், தளர்தற்கும், திரட்சி பெறுதற்கும் உளவாகிய உலகறி காரணங்களைப் பொதுவகையால் ‘காரணமின்றி’ எனவும், என்னிமித்தம் எனவும், இயல்பாக எனவும் தாமே“ எனவும் விலக்கி, அவற்றின் காரியமாய கனலுதல் முதலியவற்றைக் கூறியிருத்தலின், இது பொதுவகையாற் காரணம் விலக்கிக் காரியம் புலப்படுப்பது என்பது ஆயிற்று.

## 12.5.5 குறிப்பு விபாவனை:

பாயாத வேங்கை மலரப் படுமதமா

பூவாத புண்டரிகம் என்றஞ்சி - மேவும்

பிடிதழுவி மாறதிருங் கானிற் பிழையால்

வடிதழுவும் வேலோய் வரவு.“

விளக்கம்: கூர்மையுடைய வேலினை உடையாய் ! பாயாத வேங்கையாகிய மரம் மலர, அதனை மலராத புண்டரிகம் ஆகிய புலி என நினைத்து அஞ்சித் தம்மிடத்தே சேரும் பெண் யானைகளைத்

தழுவி அப்புலிக்கு எதிராகப் பேரொலி செய்யும் ஆண் யானைகள் உள்ள காட்டில், நீ இரவில் வருதல் தவறாகும் என்பதாகும்.

பொருத்தம்: பெண் யானைகள்,வேங்கை மலர அதனைப் புலியென்று அஞ்சின என்பது முன்னிரண்டடிகளின் கருத்தாகும் . பாயாத வேங்கை என்பதால் வேங்கை மரத்தையும், பூவாத புண்டரிகம் என்பதால் புலியையும் குறிப்பாகப் பெறுதலால், இது குறிப்பு விபாவனை ஆயிற்று.

குறிப்பு

## 12.6 ஒட்டணி - வகை

கருதிய பொருள்தொகுத்(து) அதுபுலப் படுத்தற்(கு)

ஒத்ததொன்று உரைப்பின்அ.(து) ஒட்டென மொழிப.

புலவன் தன்னால் கருதப்பட்ட பொருளை மறைத்து, அதனை வெளிப்படுத்தற்குத் தக்க பிறிதொன்றனைச் சொல்லுவது ஒட்டு என்னும் அணியாகும். இதனைப் பிறிது மொழிதல் அணி, நுவலா நுவற்சிஅணி எனவும் குறிப்பர்.

**ஒட்டணி வகை:**

அடையும் பொருளும் அயல்பட மொழிதலும்

அடைபொது வாக்கி ஆங்ஙன மொழிதலும்

விரவத் தொடுத்தலும் விபரீதப் படுத்தலும்

எனநால் வகையினும் இயலும் என்ப.

இவ்வணி கூறுகின்ற பொருளும் தனது அடையும் வேறுபட மொழிதல், அடைபொதுவாக்கிப் பொருள் வேறுபட மொழிதல், அடைவிரவிப் பொருள் வேறுபட மொழிதல், அடையை விபரீதப் படுத்துப் பொருள் வேறுபட மொழிதல் என நான்கு வகையினை உடையதாய் வரும்.

### 12.6.1 அடையும் பொருளும் அயல்பட மொழிதல்:

சிறப்பிக்க வந்த அடைமொழிகளையும் அவற்றால் சிறப்பிக்கப்படும் பொருளையும் வேறாகக் கூறி , அவற்றால் தம் உள்ளத்துள்ள கருத்தை வெளிப்படுத்துவது இதன் இலக்கணமாகும

“வெறிகொள் இனச்சுரும்பு மேய்ந்ததோர் காவிக்

குறைபடுதேன் வேட்டுங் குறுகும் - நிறைமதுச்சேர்ந்(து)

உண்டாடுந் தன்முகத்தே செவ்வி யுடையதோர்

வண்டா மரைபிரிந்த வண்டு”





விளக்கம்:செவ்வியையும் வளத்தினையும் உடைய தாமரையின் தேனைச் சேர்ந்து உண்டு களித்து விளையாடுகின்ற வண்டு. பலவண்டுகள் சேர்ந்து உண்டு வெறுத்து விட்ட குறைபடு காவியின் மதுவை ஆசைப்பட்டுச் சேரும் ஆனது என உரைத்தலாகும். இதனுள் தாமரை என்பது தலைவியையும். காவி என்றது பரத்தையையும் வண்டு என்பது தலைவனையும் குறித்து நின்றது.

பொருத்தம்: இப்பாடலில் புலவன் கூற வந்த பொருள், தலைவன் தலைவியைப் பிரிந்து பரத்தையிடத்து இன்பம் துய்த்தான் என்பதாகும். ஆனால் அதனை மறைத்து அதற்கு ஒத்த பொருளாகக் கூறப்பட்டது : ஒரு வண்டானது தனக்கே உரிய தாமரையிலுள்ள தேனை உண்ணாது, பிற வண்டுகளாலும் நுகரப்பட்ட நீலமலரிடத்துள்ள தேனை உண்டது என்பதாகும். இவ்வாறு கூறினமையால் இது ஒட்டணி ஆயிற்று. இங்ஙனம் தான் சொல்லக் கருதிய பொருள் ஒன்றாக, அதற்கு வேறான வண்டையும் அதற்கு ஏற்ற அடைமொழிகளையும் கூறியுள்ளமையால், இது அடையும் பொருளும் அயல்பட மொழிதல் என்பது ஆயிற்று.

## 12.6.2 அடைபொதுவாக்கிப் பொருள் வேறுபட மொழிதல்:

புலவன் சொல்லக் கருதிய பொருளுக்கும், அதனை மறைத்து அதற்கு ஒத்ததாகக் கூறப்பட்ட பொருளுக்கும் அடைமொழிகளைப் பொதுவாகக் கூறி, தாம் கருதியதற்கு ஒத்ததாகக் கூறப்பட்ட பொருளை வேறாக மொழிதல் என்பது இதன் இலக்கணமாகும்.

உண்ணிலவு நீர்மைத்தா யோவாப் பயன்சுரந்து

தண்ணளி தாங்கு மலர்முகத்துக் - கண்ணெகிழ்ந்து

நீங்க லரிய நிழலுடைத்தாய் நின்றெமக்கே

ஓங்கியதோர் சோலை யுளது

விளக்கம்: மனத்துள்ளே உண்டாகிய குணமுடைத்தாய்ப் பலர்க்கும் ஏற்ற கருணையுடைய முகத்தை உடையதாய், கண்ணோட்டத்தையும் உடைத்தாய், பிரிதற்கு அரிதாய் சாயலோடு கூடி நிற்பது ஆகியதொரு வள்ளல். நடுவுண்டாகிய நீரை யுடைத்தாய், ஓவா பல வளங்களைக் கொடுத்துத் தட்பமுடைய வண்டுகளைத் தாங்கிய மலர்களை தோற்றத்திலே உடைத்தாய், மதுச்சோர்ந்து விட்டுபோதற்கு அரிய நிழலுடைத்தாய், ஓங்கிநிற்பது என்று சோலை என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் புலவன் சொல்லக் கருதிய பொருள் ஒரு வள்ளலாகும் . அதனைப் புலப்படுத்த அதற்கு ஒத்ததாகக் கூறப்பட்ட பொருள் ஒரு சோலையாகும். முதல் மூன்றடிகளில் இவ்விரண்டற்கும் பொருந்துமாறு அடை மொழிகளைக் கூறித், தான் கருதிய பொருளாகிய

வள்ளற்கு வேறாகச் சோலையைக் கூறியிருத்தலின், இது அடைபொதுவாக்கிப் பொருள் வேறுபட மொழிதல் ஆயிற்று.



**குறிப்பு**

## 12.6.3 அடைவிரவிப் பொருள் வேறுபட மொழிதல்:

புலவன் தான் சொல்லக் கருதிய பொருள், அதனை மறைத்து அதற்கு ஒத்ததாகக் கூறும் பொருள் ஆகிய இரண்டற்கும் சில அடைமொழிகளைப் பொதுவாகக் கூறியும்,சில அடைமொழிகளை ஒன்றற்கே சிறப்பாகக் கூறியும். தான் கருதிய பொருள்களுக்கு வேறான பொருளைக் கூறுதல் இதன் இலக்கணமாகும்.

தண்ணளிசேர்ந் தின்சொல் மருவுந் தகைமைத்தாய்

எண்ணிய எப்பொருளும் எந்நாளும் - மண்ணுலகில்

வந்து நமக்களித்து வாழும் முகிலொன்று

தந்ததால் முன்னைத் தவம் “

விளக்கம்: குளிர்ந்த கருணையையும் இன்சொல்லையும் உடைத்தாய, எல்லாரும் ஆசைப்பட்ட எல்லாப் பொருளையும் காலம் வரையாது மண்ணுலகிலே பிறந்து எம் போல்வார்க்கு அளித்து வாழும் என்று ஒரு வள்ளல். மேலும் உலகத்தார்க்குக் குளிர்ச்சியோடு கூடக் கொடுக்கின்ற கொடைசேர்ந்து நன்றாகிய புகழ் மருவி, எண்ணப்பட்ட எல்லாப் பொருளையும் எக்காலமும் உலகிற்குச் சேர்ந்து கொடுத்து வாழும் என மேகத்தின் மேலும் சேர்த்துச் சொல்லுக என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் புலவன் சொல்லக் கருதிய பொருள் ஒரு வள்ளல் ஆகும்; அதனைப் புலப்படுத்த அதற்கு ஒத்ததாகக் கூறப்பட்ட பொருள் மேகம் ஆகும். தண்ணளி சேர்தலும், இன்சொல் மருவுதலும் வள்ளலுக்கும் முகிலுக்கும் பொதுவான அடைமொழிகளாகும், எண்ணிய எப்பொருளும் எந்நாளும் மண்ணுலகில் நமக்கு அளிக்கும்“ என்னும் அடைமொழி வள்ளலுக்கே உரிய சிறப்பு அடைமொழியாகும். இங்ஙனம் இவ்விரு அடைமொழிகளும் விரவி வள்ளலுக்கு மாறாக முகிலாகிய பொருளைச் சொல்லியிருப்பதால், இது அடை விரவிப் பொருள் வேறுபட மொழிதல் ஆயிற்று.

## 12.6.4. அடையை விபரீதப்படுத்துப் பொருள் வேறுபட மொழிதல்:

புலவன் தான் சொல்லக்கருதிய பொருளை மறைத்து, அதற்கு ஒத்ததாகக் கூறப்படும் பொருளில் அதற்கு ஒவ்வாத விபரீதமான அடைமொழிகளைப் புணர்த்துக் கூறுதல் இதன் இலக்கணமாகும்.

கடைகொல் உலகியற்கை! காலத்தின் தீங்கால்
அடைய வறிதாயிற் றன்றே - அடைவோர்க்(கு)
அருமை யுடைத்தன்றி யந்தேன் சுவைத்தாய்க்
கருமை விரவாக் கடல்.

விளக்கம்: மிகவுத் தாழ்வுடைத்தது போல உயர்ந்தோர் செய்தி! கால இயற்கையாலே மிடியாய் சென்று இரப்பவும் வறுமையுற்றது; சேர்வோர்க்கு அருமையின்றித் தேன்போலுங் சொல்லையும் உடைத்தாய் வெகுளி இல்லாத கடல் என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் புலவன் சொல்லக் கருதிய பொருள் வள்ளலாகும். அதற்கு ஒத்ததாகக் கூறப்பட்ட பொருள் கடலாகும். அடைவோர்க்கு அருமையின்றி யிருத்தல், அம்தேன் சுவைத்தாதல், கருமை விரவாதிருத்தல் ஆகிய அடைமொழிகளைக் கடலுக்கு மாறுபாடாகக் கூறியிருத்தலால் இது அடையை விபரீதப்படுத்துப் பொருள் வேறுபட மொழிதல் ஆயிற்று.

## 12.7 அதிசயவணி வகை:

மனப்படும் ஒருபொருள் வனப்புவந்து உரைப்புழி
உலகுவரம்(பு) இறவா நிலைமைத் தாகி
ஆன்றோர் வியப்பத் தோன்றுவ(து) அதிசயம்.

விளக்கம் புலவன் தான் கூறக் கருதிய பொருளினது வனப்பை உவந்து சொல்லும் பொழுது உலகநடையினைக் கடந்து தன்மைத்தாகி உயர்ந்தோர் வியப்புறச் சொல்லுவது அதிசயம் என்னும் அணியாகும்.

**அதிசயவணியின் வகை:**

அதுதான்
பொருள்குணம் தொழில்ஐயம் துணிவே திரிபெனத்
தெருளுறத் தோன்றும் நிலைமைய தென்ப.

விளக்கம்:: அதிசயவணி பொருளதிசயம், குணவதிசயம்,தொழிலதிசயம், ஐயவதிசயம், துணிவதிசயம், திரிபதிசயம் என ஆறு வகையினை உடைத்தாய் வரும்.

## 12.7.1 பொருளதிசயம்:

பண்டு புரமெரித்த தீமேற் படர்ந்தின்றும்
அண்ட முகடு நெருப்பறா(து) - ஒண்டளிர்க்கை
வல்லி தழுவக் குழைந்த லடமேரு

வில்லி நுதல்மேல் வழி. "



விளக்கம்: கொடி போலும் மலைமகள் தழுவக் குழைந்த திருமேனியையும், வடமேருவாகிய வில்லினையும், நெற்றிக்கண்ணினையும் உடைய சிவன்பெருமான் முற்காலத்துத் திரிபுரத்தை சிரித்து எரித்த தீயானது இருத்தலால் இக்காலத்து வானின் உச்சியில் நெருப்பு அறாது என்பதாம்.

குறிப்பு

பொருத்தம்: இப்பாடலில் கூறப்படுவது திரிபுரத்தை எரித்த தீயாகும். அத்தீ படர்ந்ததால்தான் வான் இன்னும் நெருப்புடன் இருக்கின்றது என அதனை உலக நடை கடந்து அதிசயித்து உரைத்திருத்தலின்இது பொருள் அதிசயமாயிற்று.

## 12.7.2 குணவதிசயம்:

"மாலை நிலவொளிப்ப மாதர் இழைபுனைந்த
நீல மணிகள் நிழலுமிழ - மெல்விரும்பிச்
செல்லும் இவள்குறித்த செல்வன்பாற் சேர்தற்கு
வல்லிருளா கின்ற மறுகு"

விளக்கம்: மாலைக் காலத்தில் தோன்றிய நிலவானது ஒளியிழந்து நிற்க, ஆசையினால் இவள் புனைந்த அணிகளிலுள்ள நீலமணிகள் ஒளியை உமிழ, இவள் காதலோடு விரும்பிச் செல்வதற்கு ஏதுவாய் தெருக்கள் செறிந்த இருளாயின.

பொருத்தம்: இப்பாடலில் கூறப்படும் பொருள் நீலமணிகளின் ஒளியாகும். ஆம் அம்மணிகளின் ஒளியே தலைவி செல்லும் வீதியில் இருளைச் செய்கின்றது என உலகநடை கடந்து அதிசயித்து உரைத்திருப்பதால் இது குண அதிசயமாயிற்று

## 12.7.3 தொழிலதிசயம்:

"ஆளும் பரியும் கரியும் சொரிகுருதி
தோளுந் தலையுஞ் சுழித்தெறிந்து - நீள்குடையும்
வள்வார் முரசும் மறிதிரைமேற் கொண்டொழுக
வெள்வாள் உறைகழித்தான் வேந்து"

விளக்கம்: மள்ளர்கள், குதிரைகள், யானைகள் இவற்றின் மீதிருந்து வழிந்த குருதி வெள்ளமானது, தோள்களையும் தலைகளையும் சுழித்து வீசி,குடைகளையும் பேரிகைகளையும் கடலின்மேல் அடித்துக்கொண்டு ஓடும்படி அரசன் வெண்மையாகிய வாளை உறையினின்று நீக்கினான் என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் கூறப்படும் தொழில் உறையினின்றும் வாளை உருவியதாகும்.. அதனை உருவியவுடன் பகைவர் படையினின்று ஒழுகிய குருதியில் தோள், தலை முதலியன மிதந்தன என அத்தொழிலை உலகநடை கடந்து அதிசயித்து உரைத்திருப்பதால் இது தொழில் அதிசயமாயிற்று.



## 12.7.4 ஐயவதிசயம்:

"உள்ளம் புகுந்தே யுலாவும் ஒருகால்என்

உள்ளம் முழுதும் உடன்பருகும் - ஒள்ளிழைநின்

கள்ளம் பெருகும் விழிபெரிய வோ ! கவல்வேன்

உள்ளம் பெரிதோ உரை"

விளக்கம்: ஒளி மிகுந்த ஆபரணத்தை உடையாய் ! உனது கள்ளம் மிக்க கண்கள் எனது உள்ளத்துப் புகுந்து உலாவுதலால் சிறிதாய்த் தோன்றின; அவை புகுந்து எனது உள்ளம் முழுதும் தமதுள்ளே அடக்கினமையின் அவ்வுள்ளம் சிறிதாய்த் தோன்றிற்று. இவற்றுள் விழி பெரியதோ ? உள்ளம் பெரியதோ சொல்லுவாயாக!.

பொருத்தம்: இப்பாடலில் சுட்டப்படும் பொருள் விழி ஆகும். அது உள்ளம் புகுந்து உலாவுதலின் உள்ளம் பெரிதோ ? அல்லது அது உள்ளம் முழுமையும் உடன் பருகுவதால் அவ்விழி பெரியதோ ? என ஐயுற்றுக் கூறும் வகையில் அவ்விழியை உலகநடை கடந்து அதிசயித்து உரைத்தலின், இது ஐய அதிசயமாயிற்று.

## 12.7.5 துணிவதிசயம்

"பொங்கிச் செறிந்து புடைதிரண்டு மீதிரண்டு

செங்கலசக் கொங்கை திகழுமால் - 1 எங்கோன்தன்

தில்லையே யன்னார் இவரல்குல் தேரின்மேல்

இல்லையோ உண்டோ இடை"

விளக்கம் வளர்ந்து நெருங்கி அடிபரந்து உருண்டு கலசம் போன்ற கொங்கை விளங்கின. எனவே பரமசிவனுடைய தில்லைப்பதியை ஒத்த இவருடைய அல்குலாகிய தேரின் மேல், இடை இல்லையோ ? உண்டு என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் கூறப்படும் பொருள் இடை என்பது ஆகும் . அது இல்லையோ ! உண்டோ ! என முன்னர் ஐயுற்றுப், பின்பு மீதிரண்டு செங்கலசக் கொங்கை திகழ்வதால் உண்டு எனத் துணிந்து கூறும்

குறிப்பு

வகையான் இடையை உலகநடை கடந்து அதிசயித்து உரைத்திருப்பதால் இது துணிவு அதிசயமாயிற்று.

## 12.7.6 திரிபதிசயம்:

திங்கள் சொரிநிலவு சேர்வெள்ளி வள்ளத்துப்
பைங்கிள்ளை பாலென்று வாய்மடுக்கும் - அங்கயலே
காந்தர் முயக்கொழிந்தார் கைவறிதே நீட்டுவரால்
ஏந்நிழையார் பூந்துகிலா மென்று"

விளக்கம்: நிலா முற்றத்தில் இருந்த வெள்ளிக் கிண்ணத்தில் உள்ள நிலவைப் கிளிகள், பாலென்று கருதி வாய் திறக்கும்.மேலும் அங்கு ஒரு புறத்தில் தன் கணவனைப் புணர்ந்து நீங்கினராகிய மகளிர் தாம் நீக்கிய அடையெனக் கருதி அந்நிலவிலே கையை நீட்டுவார்.

பொருத்தம்: இப்பாடலில் கூறப்படும் பொருள் நிலா முற்றத்தில் உள்ள வெள்ளிக் கிண்ணத்தில்படும் நிலவின் ஒளியாகும். அதனைக்கண்டு கிளி பால் என்றும் பெண்கள் தம் துகில் என்றும் ஒன்றையொன்றாகத் திரித்து மயங்குகின்றார் என அதனை உலகநடை கடந்து அதிசயித்து உரைத்தலின் இது திரிபு அதிசயமாயிற்று.

## பயிற்சி வினாக்கள்:

**1.சொற்பின்வருநிலை - இலக்கணம் தருக.**

"மால்கரி காத்தளித்த மாலுடைய மாலைசூழ்
மால்வரைத்தோள் ஆதரித்த மாலையார்-மாலிருள்சூழ்
மாலையின் மால்கடல் ஆர்ப மதன்தொடுக்கும்
மாலையின் வாளி மலர்"

விளக்கம்: மதத்தால் மயங்கிய யானையின் துன்பத்தைத் தீர்த்தளித்த திருமாலின் மாலை கூடிய த தோள்களை விரும்பிய இயல்புடையார்மேல்; அந்திப்பொழுதில் கருங்கடல் ஆர்ப்பக் காமன் இடையறாது மலராகிய கணைகளைத் தொடுப்பான் என்பதாம்.

பொருத்தம் இபபாடலுள்˙ முன்வந்த "மால்" என்னும் சொல்லே பின்னும் பலவிடத்து வந்தமையின் சொற்பின்வருநிலை ஆயிற்று.

2.விலக்கணியின் வகைகள் யாவை?

வன்சொல் வாழ்த்துத் தலைமை இகழ்ச்சி
துணைசெயல் முயற்றி பரவசம் உபாயம்

கையறல் உடன்படல் வெகுளி இரங்கல்

ஐயம் என்றாங்(கு) அறிந்தனர் கொளலே.

விளக்கம்: வன்சொல் விலக்கும், வாழ்த்து விலக்கும், தலைமை விலக்கும். இகழ்ச்சி விலக்கும், துணைசெயல் விலக்கும், முயற்சி விலக்கும், பரவச விலக்கும்,உபாய விலக்கும்,கையறல் விலக்கும், உடன்படல் விலக்கும், வெகுளி விலக்கும், இரங்கல் விலக்கும், ஐய விலக்கும் என்று சொல்லிய பதின்மூன்று பாகுபாட்டை உடையது இவ்வணியின் வகை ஆகும்.

**3.வேற்றுப்பொருள் வைப்பணி குறித்து எழுதுக.**

முன்னொன்று தொடங்கி மற்றது முடித்தற்குப்

பின்னொரு பொருளை உலகறி பெற்றி

ஏற்றிவைத்து உரைப்பது வேற்றுப்பொருள் வைப்பே.

புலவன் தான் சொல்லக் கருதிய பொருளை முடித்தற்கு உலகறிந்த பொருளாய வேறொரு பொருளை வைப்பது வேற்றுப் பொருள் வைப்பாகுமகவிஞன் தான் சொல்லக் கருதிய பொருளைச் சிறப்புப்பொருள் என்றும்அதனை முடித்தற்குக் கூறப்படும் வேற்றுப்பொருளைப் பொதுப்பொருள் என்றும் கூறப்படும்.

வேற்றுப்பொருள் வைப்பணி வகை:

முழுவதும் சேறல் ஒருவழிச் சேறல்

முரணித் தோன்றல் சிலேடையின் முடித்தல்

கூடா இயற்கை கூடும் இயற்கை

இருமை இயற்கை விபரீதப் படுத்தல் என்(று)

இன்னவை எட்டும் அதன(து) இயல்பே.

முழுவதுஞ் சேறுலும், ஒருவழிச் சேறலும், முரணித் தோன்றலும், சிலேடையின் முடித்தலும், கூடாவியற்கையும், கூடுமியற்கையும், இருமையியற்கையும், விபரீதப்படுத்தலும் என எட்டு வகையால் வருவது இதன் இயல்பு ஆகும்.

**4.ஒட்டணி குறித்து விவரி**

கருதிய பொருள்தொகுத்(து) அதுபுலப் படுத்தற்(கு)

ஒத்ததொன்று உரைப்பின்அ.்.(து) ஒட்டென மொழிப.

புலவன் தன்னால் கருதப்பட்ட பொருளை மறைத்து, அதனை வெளிப்படுத்தற்குத் தக்க பிறிதொன்றனைச் சொல்லுவது ஒட்டு என்னும்

அணியாகும். இதனைப் பிறிது மொழிதல் அணி, நுவலா நுவற்சிஅணி எனவும் குறிப்பர்.

**குறிப்பு**

ஒட்டணியின் வகை:

அடையும் பொருளும் அயல்பட மொழிதலும்

அடைபொது வாக்கி ஆங்ஙன மொழிதலும்

விரவத் தொடுத்தலும் விபரீதப் படுத்தலும்

எனநால் வகையினும் இயலும் என்ப.

இவ்வணி கூறுகின்ற பொருளும் தனது அடையும் வேறுபட மொழிதல், அடைபொதுவாக்கிப் பொருள் வேறுபட மொழிதல், அடைவிரவிப் பொருள் வேறுபட மொழிதல், அடையை விபரீதப் படுத்துப் பொருள் வேறுபட மொழிதல் என நான்கு வகையினை உடையதாய் வரும்.

**5. அதிசயவணி குறித்துக் கட்டுரைக்க.**

பாடப்பகுதியில் அமைந்துள்ள அதிசயவணி குறித்த கருத்துகளைத் தொகுத்து எழுதுதுல் வேண்டும்.

## கூறு: 13 – தற்குறிப்பேற்றம் முதல் சுவையணி வரை

**நோக்கம்: தற்குறிப்பேற்றம் முதல் சுவையணி வரையிலான அணிகளின் இலக்கணத்தையும் அவற்றின் வகைகளையும் கற்று அறிதல்**

### 13.1 தற்குறிப்பேற்றவணி

பெயர்பொருள் அல்பொருள் எனஇரு பொருளினும்

இயல்பின் விளைதிறன் அன்றி அயல் ஒன்று

தான்குறித்(து) ஏற்றுதல் தற்குறிப் பேற்றம்.

விளக்கம் பெயரும் பொருள், பெயராத பொருள் என்னும் இரு பொருட் கண்ணும் இயல்பாக நிகழும் தன்மை ஒழியக், புலவன் தான் கருதிய வேறொன்றினை அவற்றின்கன் ஏற்றிச் சொல்வது தற்குறிப்பேற்றம் என்னும் அணியாகும்.

## 13.1.1 பெயர்பொருள் தற்குறிப்பேற்றம்

மண்படுதோட் கிள்ளி மதயானை மாற்றரசர்
வெண்குடையைத் தேய்த்த வெகுளியால் - விண்படர்ந்து
பாயுங்கொல் என்று பனிமதியம் போல்வதூஉம்
தேயுந் தெளிவிசும்பி னின்று"

விளக்கம்: இந்த நிலவுலகத்தைத் தாங்கிய தோள் வலிமையை உடைய சோழனுடைய மதயானையானது மாறுபட்ட அரசர்களுடைய வெண்கொற்றக் குடையைச் சீறிச் சிதைத்த கோபத்தாலே நம்மேலும் வந்து பாயுமோ? என்று குளிர்ந்த ஆகாயத்திலே நிறைமதியம் எனப்படுவதூஉம் தேயா நிற்கும்,.

பொருத்தம் இப்பாடலில் கூறப்பட்ட பெயர்பொருள் மதி ஆகும். அதன் இயல்பு வளர்தலும் தேய்தலும் ஆகும். இங்ஙனம் இயல்பாக உள்ள தன்மைக்குச் , " சோழனின் யானை பகைவரின் வெண்கொற்றக் குடைகளைத் தேய்த்த வெகுளியால் , அக்குடைபோன்ற தன்னையும் பாயுமோ ! என்னும் அச்சத்தாலேயாம் " எனக் புலவன் தான் ஒரு காரணத்தை ஏற்றிக் கூறுதலின், இது பெயர்பொருள் தற்குறிப்பேற்றம் ஆயிற்று.

## 13.1.2 பெயராதபொருள் தற்குறிப்பேற்றம்

வேனில் வெயிற்குலர்ந்த மெய்வறுமை கண்டிரங்கி
வானின் வளஞ்சுரந்த வண்புயற்குத் - தானுடைய
தாதுமே தக்க மதுவுந் தடஞ்சினையாற்
போதுமீ தேந்தும் பொழில்

விளக்கம் முதுவேனில் காலத்து ஆதித்தன் வெயில் வெம்மைக்கு ஆற்றாது உலர்ந்த தமது மெய்வறுமை கண்டு இரங்கி, வானின்கண் நின்று மழைவளத்தைப் பொழிந்து தமது வாட்டம் நீக்கின முகிலுக்கு, பொழில்கள் தங்களிடம் உண்டாகிய தாதோடு கூடிய மலர்களையும், தங்கள் மதுவினையும், தமது பெரிய கிளைகளாகிய கைகளாலே மேனோக்கித் தாங்கி நிற்கும்.

பொருத்தம்: இப்பாடலில் கூறப்பட்ட பொருள் பொழில் ஆகும். இது பெயராத பொருள். அதன் இயல்பு அவ்வவ்விடங்களிலுள்ள செடி கொடிகள், கிளையும் தளிரும் மலரும் தேனும் உடைத்தாய் இருப்பதாகும். இவ்வியல்பான தன்மைக்கு, "வேனில் காலத்துத் தனக்கு வெப்பம் தீர உதவிய மேகத்திற்கு நன்றியறிதலாக அப்பொழில் தன்பால்

குறிப்பு

உள்ள பொருள்களைத் தருதலேயாகும் “ எனக் கவிஞன் தான் ஒரு காரணத்தை ஏற்றிக் கூறுதலின், இது பெயராதபொருள் தற்குறிப்பேற்றம் ஆயிற்று

### 13.1.3 தற்குறிப்பேற்றம் உவம உருபுகளோடும் வருதல்:

அன்ன போல் எனும் அவைமுத லாகிய

சொல்நிலை விளங்கும் தோற்றமும் உடைத்தே.

விளக்கம்: அன்ன, போல என்பவை முதலாகிய உவமைச் சொல் சில புணர்ந்து விளங்கும் தன்மையும் உடைத்தாம்; அத் தற்குறிப்பேற்றம் என்னும் அணி ஆகும்.

காமருதேர் வெய்யவன் எங்கும் கரம்பரப்பித்

தேமருவு சோலை மலர்திறக்கும் - தாமரையின்

தொக்க இதழ்விரித்துப் பார்க்குந்தொலைந் திருள்போய்ப்

புக்க !புரைகிளைப்பான் போல்”

விளக்கம்: அழகு பொருந்திய தேரினையுடைய சூரியன், தனக்குத் தோற்று இருள் சென்று ஒளிந்த இடத்தை ஆராய்ந்து பார்ப்பவன் போல, எவ்விடத்தும் தன் ஒளிக்கதிர்களாகிய கைகளை விரித்து நீட்டித்தேன் பொருந்திய சோலையிலுள்ள மலர்களைத் திறந்து பார்ப்பான் ; மூடியிருக்கும் தாமரை மலரின் இதழ்களையும் விரித்துப் பார்ப்பான் என்பதாம்.

பொருத்தம்: இதன்கண் கூறப்பட்ட பொருள் கதிரவன் தன் ஒளிக்கதிர்களைச் சோலையில் யாண்டும் பரப்புதல் ஆகும். இவ்வியல்பான நிகழ்ச்சிக்குக் “கதிரவன் தன் பகையாகிய இருள் சென்று ஒளிந்த இடத்தைத் தேடுதற்காகத்தான் அங்ஙனம் செய்கிறான் “எனக் கவிஞன் தான் குறித்ததொரு காரணத்தை ஏற்றிச் சொல்லுதலின், இது தற்குறிப்பேற்றம் ஆயிற்று. ஈற்றடியில் “ போல் “ என்னும் உவமவுருபு இருத்தலின், இந்நூற்பாவின் இலக்கணத்திற்கு ஏற்புடையதாயிற்று.

## 13.2 ஏதுவணி

யாதென் திறத்தினும் இதனின் இது விளைந்ததென்று

ஏதுவிதந்(து) உரைப்ப(து) ஏது; அதுதான்

காரக ஞாபகம் எனஇரு திறப்படும்.

ஏதேனும் ஒரு பொருளிடத்து இதனால் இது நிகழ்ந்ததென்று காரணம் விதந்து சொல்லுவது, ஏது என்னும் அணியாகும்.அது காரகவேது என்றும்,ஞாபகவேது என்றும் இரண்டு வகைப்படும்.

### 13.2.1 காரகவேது

முதல்வனும் பொருளும் கருமமும் கருவியும்
ஏற்பது நீக்கமும் எனஇவை காரகம்.

கருத்தா, பொருள், கருமம், கருவி,ஏற்பது, நீக்கம் வரைச் சொல்லப்பட்ட இவை ஆறும் காரணமாகத் தோன்றுவது காரக ஏதுவாகும்.

### 13.2.2 கருத்தா காரகவேது

ஒரு வினைமுதலாகிய கருத்தாவே தொழிலே இயற்றுவிப்பதாகிய காரகமாயும் பிற தோன்றற்கு ஏதுவாயும் நிற்பின், அது கருத்தாகாரக ஏது எனப்படும்.

எல்லைநீர் வையகத்(து) எண்ணிறந்த எவ்வுயிர்க்கும்
சொல்லரிய பேரின்பந் தோற்றியதால் - முல்லைசேர்
தாதலைத்து வன்கொன்றைத் தாரலைத்து வண்டார்க்கப்
பூதலத்து வந்த புயல்

விளக்கம்: முல்லையின் மகரந்தங்களை கீழே உதிர்த்து, கொன்றை மலர்களையும் உதிரச் செய்து, அவற்றில் உள்ள வண்டுகள் ஒலிக்க, இந்நில உலகத்து வந்த காற்றானது, கடல் சூழ்ந்த நிலவுலகத்திலுள்ள எல்லா உயிர்களுக்கும் சொல்லுதற்கரிய பேரின்பத்தைத் தோற்றுவித்தது என்பதாம்.

பொருத்தம், இப்பாடலில் கூறப்பட்ட கருத்தா காற்று ஆகும். அதுவே உயிர்களுக்கு இன்பத்தைத் தோற்றுவித்தது எனக் காரகமாகவும், தாதலைத்தல், தாரலைத்தல் ஆகிய செயல்கள் நிகழ்தற்கு ஏதுவாகவும் நிற்றலின், இது கருத்தா காரக ஏது ஆயிற்று.

### 13.2.3 பொருட் காரகவேது

ஒரு செயப்படு பொருளே காரகமாயும், அதுவே ஏதுவாயும் நிற்பின், அது பொருட்காரக ஏதுவாம்.

கனிகொள் பொழிலருவி கைகலந்து சந்தின்
பனிவிரவிப் பாற்கதிர்கள் தோய்ந்து - தனியிருந்தோர்
சிந்தை யுடனே உயிருணக்குந் தென்மலயம்
தந்த தமிழ்மா ருதம்

விளக்கம்: பொதிய மலையில் பிறந்து தமிழோடு பழகிய தென்றல் காற்றானது மலை மீது உள்ள பொழில்கள் உகுத்த கனியோடு கலந்து, அருவியினுட் புக்குக் கலந்தும், அதனினுண்டாய சந்தனத்தின் தட்பத்துடன் மருவி, பால் போன்ற சந்திர கிரணங்களில் மூழ்கி, தனது தன்மை ஒழிந்து கொழுநரைப் பிரிந்திருந்தோர் மனத்தோடு உயிரையும் உணக்கா நின்றது.

பொருத்தம்: இப்பாடலில் சுட்டப்பட்ட செயப்படு பொருள் மாருதமாகும். அதுவே பிரிந்திருந்தோரின் மனத்தோடு உயிரையும் வாட்டுகின்றது எனக் காரகமாயும்; கைகலத்தல், மருவல், தோய்தல் ஆகிய காரணங்களாலே உயிரை வாட்டிற்று எனக் கூறுதலின் ஏதுவாயும் நிற்றலின், இது பொருட்காரக ஏதுவாயிற்று.

## 13.2.4 கரும காரகவேது

ஒரு கருமமே காரகமாகவும், அதுவே ஏதுவாயும் நிற்பின் அது கருமகாரக ஏதுவாகும்.

மலையின் அலைகடலின் வாளரவின் வெய்ய
தலையிற் பயின்ற தவத்தால் - தலைமைசேர்
அம்மாதர் புல்லும் அபயன் புயம்புணர
எம்மா தவம்புரிந்தோம் யாம்

விளக்கம்: மலையில் தவம் புரிந்தோள் வெற்றி மடந்தை. அலை கடலில் தவம் புரிந்தோள் - அலைமகள். வாளரவின் வெய்ய தலையில் நின்று தவம் புரிந்தோள் - நிலமகள். இப்படிப் பெரிய தவம் புரிதலாலே அவர்களால் தழுவப்பட்ட அபயனுடைய புயத்தை யாம் தழுவுதற்கு எத்தவம் புரிந்தோம்? ஏன்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் கூறப்பட்ட கருமம் தவமாகும். அதுவே அபயன் புயத்தைப் புணர்வித்தது எனக் காரகமாயும், அங்ஙனம் புணர்தற்கு ஏதுவாதல்பற்றி ஏதுவாயும் நின்றலின், இது கருமகாரக ஏதுவாயிற்று.

## 13.2.5 கருவி காரகவேது

ஒரு கருவியே காரகமாயும், அதுவே ஏதுவாயும் நிற்பின் அது கருவிகாரக ஏதுவாகும

“கரடத்தான் மாரியும் கண்ணால் வெயிலும்
நிரைவயிரக் கோட்டால் நிலவும் - சொரியுமால்
நீளார்த் தொடையதுல னேரார் கலிங்கத்து
வாளாற் கவர்ந்த வளம்”

விளக்கம்: நெடிய ஆர்த் தாரையுடைய ஒப்பில்லாதானாகிய சோழன் பகை கொண்ட கலிங்கருடைய தேயத்துச் சென்று வாளாலே கவர்ந்து கொண்ட வளம்மதத்தால் மழையையும், கண்ணின் கடுமையால் வெயிலையும், கோட்டின் வெண்மையால் நிலவையும் கொடா நின்றது.

பொருத்தம்: இப்பாடலில் கூறப்பட்ட கருவிகள் கரடம், கண், கோடு என்பனவாம். இவை முறையே மாரி, வெயில், நிலவு ஆகியவற்றைத் தோற்றுவித்தது என்பதால் காரகமாயும், இவற்றை அக்கருவிகள் தோற்றுவித்தன என்பதால் அவையே ஏதுவாயும் நிற்றலின், இவை கருவிகாரக ஏதுவாயின.

## 13.2.6 ஞாபகவேது

அவையல பிறவின் அறிவது ஞாபகம்.

விளக்கம் அச்சொல்லப்பட்ட காரணமன்றிப் பிற காரணத்தினால் உய்த்துணரத் தோன்றுவது ஞாபக ஏதுவாகும்.

"காதலன்மேல் ஊடல் கரையிறத்தல் காட்டுமால்

மாதர் நுதல்வியர்ப்ப வாய்துடிப்ப - மீது

மருங்குவளை வின்முரிய வாளிடுக நீண்ட

கருங்குவளை சேந்த கருத்து"

விளக்கம் மகளிரின் நெற்றி வியர்க்கவும், வாய்துடிக்கவும், பக்கம் வளைந்த புருவங்களாகிய விற்கள் மேற்சென்று வளையவும், வாட்படையும் தோற்கும்படியான கரிய, நீண்ட, நீலமலர் போன்ற கண்கள் சிவக்கவும் உள்ளதன் கருத்து, அவர் தம்முடைய கணவன் மீதுள்ள ஊடல் மிகுதியைக் காட்டுவதாகும் என்பதாம்.

பொருத்தம்: நெற்றி வியர்த்தல், வாய் துடித்தல், புருவம் வளைதல், கண் சிவத்தல் ஆகிய காரணங்கள், அப் பெண்களுக்கு உள்ள ஊடல் மிகுதியை அறிவிப்பதால் ஞாபக ஏதுவாயிற்று.

## 13.2.7 அபாவவேது - வகை

அபாவம் தானும் அதன்பால் படுமே.

அபாவமாவது ஒன்றனது இன்மை; அதுவும் அவ்வேதுவின் பாற்படும்.

**அபாவவேதுவின் வகை**

என்றும் அபாவமும் இன்மையது அபாவமும்

ஒன்றினொன்று அபாவமும் உள்ளதன் அபாவமும்

அழிவுபாட்டு அபாவமும் எனஐந்து அபாவம்.



விளக்கம்: என்றும் அபாவம்,இன்மைய தபாவம்,ஒன்றினொன்று அபாவம், உள்ளதன் அபாவம், அழிவுபாட்டு அபாவம் எனச் சொல்லப்பட்ட ஐந்து பகுதியை உடையதாம் அவ்வபாவம். எனவே இவ்வைந்து அபாவமும் ஏதுவாகத் தோன்றுவது அபாவ ஏதுவாம் என்றவாறு.

### 13.2.7.1 என்றும் அபாவம்



என்றும் அபாவம் என்பது எக்காலத்தும் இல்லாமை.

யாண்டு மொழிதிறம்பார் சான்றவர் எம்மருங்கும்

ஈண்டு மயில்கள் இனமினமாய் - முண்டெழுந்த

காலையே கார்முழங்கும் என்றயரேல் காதலர்தேர்

மாலையே நம்பால் வரும்"

விளக்கம்: இன்று காலையில் இவ்விடத்து மயில்கள் கூட்டங் கூட்டமாய்ச் சேர்ந்தெழுந்து அகவா நின்றன; அதுபற்றிக் கார் முழங்கா நிற்குமென்று வருந்தா தொழிக; அறிவால் நிறைந்தோர் எக்காலத்தும் சொன்னசொற் பிறழார், ஆதலால் அன்னராகிய நம்முடைய காதலர் தேரானது மாலையிலே நம்மிடத்தில் வரும் என்பதாம்.

பொருத்தம்:சான்றவர் யாண்டும் மொழி திறம்புதல் என்பது எக்காலத்தும் இல்லாததொன்றாகும். இவ்வேதுவால் காதலர் தேர் மாலையே வரும் என்று கூறப்படுதலின் இது என்றும் அபாவமாயிற்று.

### 13.2.7.2 இன்மையது அபாவம்

இன்மையது அபாவம் என்பது இல்லாமையினது இல்லாமை.

"காரார் கொடிமுல்லை நின்குழன்மேற் கைபுனைய

வாராமை யில்லை வயவேந்தர் - போர்கடந்த

வாளையேய் கண்ணி! நுதல்மேல் வரும்பசலை

நாளையே நீங்கும் நமக்கு"

விளக்கம் கார் காலத்து ஓங்கிய கொடியையுடைய முல்லையினது பூவினை நின்னுடைய கூந்தலின்கண் அலங்கரித்துச் சூட்ட வருகின்றார், வெற்றியையுடைய அரசர்; ஆகையால் போர்த் தொழில் முடித்த வாள் போன்ற கண்களையுடையாய்! உன்னுடைய நுதலின்மேல் உண்டாகிய பசலை விடியற்காலத்தே நீங்கும், ஆதலால் நமக்கு யாது குறை? என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் “வாராமை யில்லை” என்பது இன்மையது அபாவ மாகும். வாராமை யில்லை எனவே வருதல் உண்டென்பது பெற்றாம். இதனால் பசலை நீங்கும் என்றலின், இன்மையது அபாவ ஏதுவாயிற்று.

### 13.2.7.3 ஒன்றினொன்று அபாவம்

ஒன்றினொன்று அபாவம் என்பது ஒன்றின்கண் ஒன்றினது இல்லாமை.

“பொய்ம்மை யுடன்புணரார் மேலானோர் பொய்ம்மையும்

மெய்ம்மைசூழ் மேலாரை மேவரவாம் - இம்முறையாற்

பூவலர்ந்த தாரார் பிரிந்தாற் பொலங்குழையார்

காவலர்சொற் போற்றல் கடன்”

விளக்கம்: உலகத்து மேலான அறிவையுடையார் பொய்யோடு கூடுவாரல்லார், அப்பொய்யும் மெய்தழுவிய மேலான அறிவுடையாரைப் பொருந்தாவாகும்; இத்தன்மையால் பொலிவு விளங்கிய மாலையையுடைய தலைவர் பிரிந்த காலத்துப் பொற்குழையையுடைய மனையறக் கிழத்தியர்க்குக் காவற்கடன் பூண்ட தலைவர் குறித்துரைத்த பருவத்தை நோக்குதல் கடனன்றோ என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் பொய்மை என்ற ஒன்றன்கண் மேலானோர் புணரார் என்பதும், மேலார் எனப்படுவாரிடத்துப் பொய்மை மேவாது என்பதும் ஒன்றின் ஒன்று அபாவமாகும். இதனை ஏதுவாகக்கொண்டு, தோழிதலைவர் பிரிந்திருப்பின் அவர் கூறியவாறு வந்துவிடுவார் என்னும் சொல்லை பாதுகாத்துக்கொண்டு இருத்தலே தக்கது என வலியுறுத்தலின் இது ஒன்றினொன்றபாவமாயிற்று.

### 13.2.7.4 உள்ளதன் அபாவம்

உள்ளதன் அபாவம் என்பது ஓரிடத்தும் ஒருகாலத்தும் உள்ள பொருள்,பிறிதோரிடத்தும் பிறிதொரு காலத்தும் இல்லாமை,

“கரவொடு நின்றார் கடிமனையிற் கையேற்(று)

இரவொடு நிற்பித்த தெம்மை - அரவொடு

மோட்டாமை பூண்ட முதல்வனை முன்வணங்க

மாட்டாமை பூண்ட மனம்”

விளக்கம்: இரப்போர்க்குப் பயந்து காவல் கொண்டிருப்பவருடைய வீட்டிற்போய் எங்களைக் கையேற்று இரந்து நிற்கும் படி செய்தது

பாம்பையும் பெரிய ஆமையோட்டையும் அணியாகக் கொண்ட பரமசிவனை முற்பிறப்பில் வணங்கமாட்டாமையைக் கொண்ட மனம்

குறிப்பு

பொருத்தம்: இப்பாடலில் கூறப்பட்ட பொருள் மனம் ஆகும். இப்பிறவியில், கரவினையுடைய பொருளாளரிடத்துச் சென்று வணங்கும் வணக்கம் உள்ளது" என்பதாகும். இவர்களிடத்து வணங்கும் உள்ளம் முற்பிறவியில் இறைவனிடத்துச்சென்று வணங்காததாயிற்று என்பது அதன் அபாவமாகும். இங்ஙனம் இப்பொழுது இரக்க நேர்ந்தமைக்குக்காரணம் இறைவனை முன்பு வணங்காமையே என்பதால் ஏதுவாயிற்று.

### 13.2.7.5 அழிவுப்பாட்டு அபாவம்

அழிவுப்பாட்டு அபாவம் என்பன முன்பு உள்ளது அழிவுபட்டு இலதாதல்.

"கழிந்த(து) இளமை களிமயக்கந் தீர்ந்த(து)

ஒழிந்தது காதல்மேல் ஊக்கம் - சுழிந்து

கருநெறியுங் கூந்தலார் காதல்நோய் தீர்ந்த(து)

ஒருநெறியே சேர்ந்த(து) உளம்"

விளக்கம்: முதுமைப் பருவம் வந்தது; செல்வத்தினால் வரும் மனக்களிப்பாகிய அறியாமையும் நீங்கிற்று; காதலிக்கப்பட்ட பொருள்களைத் தலைப்படவேண்டி எழாநின்ற ஊக்கமும் ஒழிந்தது; சுருண்டு நெறிப்பையுடைய கரிய கூந்தலார் மேல் வைத்த ஆசையாகிய நோயும் தீர்ந்தது; ஒரு தன்மைத்தாய சித்தியைச் சேர்ந்தது என் உள்ளம் என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் இளமை, மயக்கம், ஊக்கம், காதல் என்பது முன்பு இருந்து அழிந்தன என்பதால் அழிவுபாட்டபாவ மாயிற்று. இவற்றை மனம் ஒரு நெறிப்பட்டது என்பதால் அவை ஏதுவாயிற்று.

### 13.2.7.6 சித்திரவேது

சித்திர ஏது - ஆச்சரியத்தைத் தரத்தக்க ஏதுவாகும்.

தூர காரியமும் ஒருங்குடன் தோற்றமும்

காரண முந்துறூஉங் காரிய நிலையும்

யுத்தமும் அயுத்தமும் முத்தையோடு இயலும்.

விளக்கம் தூரகாரியம் முதல் அயுத்தம் ஈறாகச் சொல்லப்பட்ட இவ்வைந்தும் முன்னைய ஏது அலங்காரத்தோடு நடக்கும்.

### 13.2.7.7 தூரகாரியவேது

தூரகாரியவேது என்பது ஒருவழிக்காரணம் நிகழப், பிறிதொருவழிக் காரியம் நிகழ்வது.

"வேறொரு மாதர்மேல் வேந்தன் நகநுதியால்
ஊறுதர இம்மா(து) உயிர்வாடும் - வேறே
இருவரே மெய்வடிவில் ஏந்திழை நல்லார்
ஒருவரே தம்மில் உயிர்.

விளக்கம் தலைமகளாயினாள் தன்னை யொழித்து ஒரு காதலி மார்பகத்தே வேந்தன் நகத்தின் நுனியினாற் குறியிட, அதுகண்டு அழுது வருந்துவாள்; ஆதலால். இவ்வேந்திழை நல்லார் உருவத்தால் இருவர் எனினும், உயிரானது இவர்கட்கு ஒன்றே போலும்.

பொருத்தம்: பரத்தையின் மார்பைத் தன் நகத்தின் நுனியால் தலைவன் வருட, அதனால் தலைவி வருந்தினள் என்பது இங்குக் கூறப்படும் பொருளாகும். நகத்தால் ஊறுபட்டவள் பரத்தை; எனவே அவளே அதற்கு (அச்சிறுபுண்ணிற்கு) வருந்த வேண்டும். அங்ஙனமாகத் தலைவி வருந்தினாள் என்றலின், இது தூரகாரிய நிகழ்ச்சியாயிற்று. தலைவன் கை நகம் பரத்தையின் மாட்டுப் பட்டதால் தலைவி வருந்தினள் என்பதால் இது ஏதுவாயிற்று.

### 13.2.7.8 ஒருங்குடன் தோற்றவேது

ஒருங்குடன் தோற்றவேது என்பது காரணமும் காரியமும் ஒக்க நிகழ்வது.

விரிந்த மதிநிலவின் மேம்பாடும் வேட்கை
புரிந்த சிலைமதவேள் போரும் - பிரிந்தோர்
நிறைதளர்வும் ஒக்க நிகழ்ந்தனவால் ஆவி
பொறைதளரும் புன்மாலைப் போழ்து

விளக்கம் முழுமதியினது நிலவின் மேம்பாடும் வேட்கை மிகுந்த சிலையையுடையவனாகிய மதவேள் போரும், பிரிந்தோர் நிறைதளர்வும் ஒருங்கு நிகழ்ந்தன; ஆதலால் தனித்தோர் உயிராகிய பாரத்தைத் தாங்க மாட்டாத தன்மையையும், புன்கண்மையையும் உடைத்து இம்மாலைப் பொழுது எ-று.

பொருத்தம்:இப்பாடற்கண் பிரிந்தோர் நிறை தளர்தற்குக் காரணமாகக்கூறப்பட்டன இரண்டு. (1)நிலவு. (2)மன்மதன். இவ்விரு காரணங்களோடு பிரிந்தோர்க்கு நிறை தளர்வும் ஒருங்கு ஏற்பட்டது

என்றதால் இது ஒருங்குடன் தோற்றமாயிற்று. நிலவாலும், மன்மதனாலும் நிறை தளர்வு ஏற்பட்டது என்பதால் ஏதுவாயிற்று.

### 13.2.7.9 காரணமுந்துறூஉம் காரியநிலை ஏது

காரணமுந்துறூஉங் காரியநிலை ஏது என்பது காரணத்திற்கு முன்னர்க் காரியம் நிகழ்வது.

தம்புரவு பூண்டோர் பிரியத் தனியிருந்த
வம்புலவு கோதையர்க்கு மாரவேள் - அம்பு
பொருமென்று மெல்லாகம் புண்கூர்ந்த மாலை
வருமென்(று) இருண்ட மனம்.

விளக்கம் தம்மை காக்கும் தொழிலைப் பூண்ட தலைவர் பிரியத் தனித்து உயிர்கொண்டிருந்த வாசனை பொருந்திய கோதையையுடைய மடவாருக்கு. மாரன்கணை தைக்குமென்று மென்மையையுடைய மார்பகம் புண்ணாகா நின்றது; அதுவேயுமன்றி, மாலைப்பொழுது வருமென்று அவர்களுடைய மனம் இருண்டது எ-று.

பொருத்தம்: இப்பாடலில் காரண முந்துறூஉங் காரியமாகக் கூறப்படுவன இரண்டு (1) ஆகம்புண் கூர்தல். (2)மனம் இருளல். அம்புதைத்தலாகிய காரணம் நிகழ்ந்த பின்னரே ஆகம் புண் கூர்தல் வேண்டும், மாலை வருதலாகிய காரணம் நிகழ்ந்த பின்னரே மனம் ஆகம் புண் கூர்தல் வேண்டும். இங்கு அங்ஙனமின்றி அவ்வக் காரணங்கள் நிகழும் முன்னரே காரியம் நிகழ்ந்தன என்றலின், இவ்விரு நிகழ்ச்சிகளும் காரண முந்துறூஉம் காரியநிலை யாயின.

### 13.2.7.10 யுத்தவேது

யுத்தவேது என்பது காரணத்திற்கேற்ற காரியம் நிகழ்வது.

“பொன்னி வளநாடன் கைவேல் பொழிநிலவால்
முன்னர் அசைந்து முகுளிக்கும் - தன்னேர்.
பொரவந்த வேந்தர் புனைகடகச் செங்கை
அரவிந்த நூறா யிரம்.

பொருத்தம்: சோழன் ஏந்திய வேலின்கண் உண்டாகிய வெண்மை விளக்கம் பரந்த நிலவினால் முன்னே நடுங்கி மொட்டியாறிற்கும், நேர்நின்று பொருதற்கு எதிர்ந்த வேந்தருடைய புனையப்பட்ட கடகத்தையுடைய சிவந்த கையாகிய தாமரைகள் பலவும் உண்டு.

பொருத்தம்: இப்பாடலில் சோழனின் கைவேலிலிருந்து வரும் ஒளியாகிய நிலவினைக் கண்டு பகையரசர்களுடைய கைகளாகிய தாமரை குவியும் என்றதால் யுத்த ஏதுவாயிற்று. சந்திரனைக்கண்டு தாமரை குவிதல், இயல்பாதலின், இது காரணத்திற்கேற்ற காரியமாயிற்று.

### 13.2.7.11 அயுத்தவேது

அயுத்தவேது என்பது காரணத்திற்கு ஏலாத காரியம் நிகழ்வது.

இகன்மதமால் யானை அனபாயன் எங்கோன்

முகமதியின் மூரல் நிலவால் - நகமலர்வ

செங்கயற்கண் நல்லார் திருமருவு வாள்வதன

பங்கயங்கள் சாலப் பல.

விளக்கம்:: வெற்றியையும், மதத்தையும் உடைய உயர்ந்த யானைகளையுடைய அனபாயனாகிய எம் அரசனுடைய முகமாகிய நிறைமதியின்கண் உண்டாகிய முறுவலின் வெண்ணிலவினால், செவ்வரியை யுடைய கயல் போன்ற கண்ணினையுடைய நல்லாருடைய திருமருவு வாண்முகமாகிய தாமரைகள் பல விளங்க மலர்கின்றன .

பொருத்தம்:சோழனின் முகமாகிய மதியத்தின் ஒளியால், பெண்களின் முகமாகிய தாமரைகள் மலர்கின்றன என்பதால் அயுத்த ஏதுவாயிற்று. நிலவினைக்கண்டு தாமரை குவிதல் பொருத்தமே யன்றி மலர்தல் பொருத்தமில்லை. ஆதலின் இது காரணத்திற்கு ஏலாத காரிய மாயிற்று.

### 13.2.7.12 ஐயவேது

முடியும் உமைவாய் மழலை மொழியாலோ

ஓது மறையின் ஒலியாலோ - யாதாலோ

கோலம் இருதிறனாக் கொண்டான் திருமிடற்றின்

ஆலம் அமிர்தான வாறு.

விளக்கம்,உமையாளுடைய வாயிலுள்ள அழகிய மழலைச் சொல்லாகிய அமிர்தத்தைச் செவியாற் பருகிய அதனாலோ, அன்றியே தானோதப்பட்ட வேத மந்திர ஒசைத் தழைப்பினாலோ, இவ்விரண்டனுள்ளும் எதனாலோ? இரண்டு வடிவமாகத் திருமேனியைக் கொண்ட பரமசிவனுடைய சிறந்த மிடற்றிலுள்ள நஞ்சம் அமிருதமாயவாறு; தெரியாது.

பொருத்தம்: இப்பாடற்கண் இறைவன் திருமிடற்றிலுள்ள ஆலம் அமிர்தமானதற்குக் காரணம், உமையின் மழலை மொழியோ, அல்லது

மறைபின் ஒலியோ, அன்றி யாதாலோ என ஐயுற்றவாறும், அவ்வகையான் அவை ஏதுவாயினவாறும் காண்க.



## 13.3 நுட்பவணி

தெரிபுவேறு கிளவாது குறிப்பினும் தொழிலினும்

அரிதுணர் வினைத்திறம் நுட்ப மாகும்.

**குறிப்பு**

பொருள் தெரிந்து கொண்டு வேறுபட மொழியாது குறிப்பினானாதல், தொழிலினானாதல் அரிதாக நோக்கி உணருந் தன்மையை உடையது நுட்பம் என்னும் அணியாகும்.

### 13.3.1 குறிப்பு நுட்பம்

"காதலன் மெல்லுயிர்க்குக் காவல் புரிந்ததால்

பேதையர் ஆயம் பிரியாத - மாதர்

படரிருள்கால் சீக்கும் பகலவனை நோக்கிக்

குடதிசையை நோக்குங் குறிப்பு"

விளக்கம்:காதலிக்கப்பட்ட தலைவனுடைய மெல்லுயிர்க்குப் பரிகாரஞ் செய்தது போலும், மடப்பத்தையுடைய ஆயத்தார்ப் பிரியாது சூழப்பட்டமாதர், உலகிற்குப் படர் செய்யும் இருளினது அடியை அறுக்கின்ற ஞாயிற்றினைப் பார்த்து மேற்றிசைப் பார்க்கும் உள்ளக்கருத்து

பொருத்தம்: இதன்கண் தலைவி குடதிசையை நோக்கிய குறிப்பானது தலைவனின் உயிர்க்குக் காவலாயிற்று என்னும் குறிப்பால், தலைவி இரவுக் குறிக்கு உடன்பட்டாள் என்னும் கருத்து நுட்பமாகப் பெறப்படுதலின், இது குறிப்பு நுட்பமாயிற்று.

### 13.3.2 தொழில் நுட்பம்

"பாடல் பயிலும் பணிமொழி தன்பணைத்தோள்

கூடல் அவாவாற் குறிப்புணர்த்தும் - ஆடவற்கு

மென்தீந் தொடையாழின் மெல்லவே தைவந்தாள்

இன்தீங் குறிஞ்சி யிசை."

விளக்கம்: பாடுந் தொழிலைப் பயிலும் குளிர்ந்த மொழியாள் தனது பணைத்தோளினால் தலைவனைத் தழுவ வேண்டும் என்னும் ஆசையினாலே தலைவற்குத் தன் உள்ளக் கருத்தை அறிவியாது

நின்றாள்,பின் மெல்லிய இனிய நரம்பையுடைய யாழிலேகுறிஞ்சியாகிய பண்ணை முறையாக ஆக்கினாள்



பொருத்தம்:: இதன்கண் தலைவி குறிஞ்சிப் பண்ணைப் பாடுதலாகிய தொழிலால், தனக்குள்ள புணர்தல் விருப்பத்தை நுட்பமாகத் தலைவனுக்கு அறிய வைத்தலின், இது தொழில் நுட்பமாயிற்று.

குறிப்பு

## 13.4 இலேசவணி – வகை:

குறிப்பு வெளிப்படுக்கும் சத்துவம் பிறிதின்

மறைத்து உரையாடல் இலேச மாகும்.

விளக்கம்: கருதியது வெளிப்படுக்கும் சத்துவமாகிய குணங்களைப் பிறிதொன்றால் நிகழ்ந்தனவாக மறைத்துச் சொல்லுவது, இலேசம் என்னும் அணியாகும்.

சத்துவம் என்பது வெண்பளிங்கில் செந்நூல் கோத்தால் அதன் செம்மை புறம்பே தோன்றுமாறு போல, உள்ளங் கருதியதைப் புலனாக்கும் குணங்கள்; அவை: சொற்றளர்வு, மெய்வியர்ப்பு, கண்ணீர் நிகழ்ச்சி, மெய் விதிர்ப்பு, மெய்வெதும்பல், மெய்ம்மயிர் அரும்பல் முதலியன ஆகும்.

“கல்லுயர்தோட் கிள்ளி பரிதொழுது கண்பனிசோர்

மெல்லியலார் தோழியர்முன் வேறொன்று - சொல்லுவரால்

பொங்கும் படைபரப்ப மீதெழுந்த பூந்துகள்சேர்ந்(து)

எங்கண் கலுழ்ந்தனவால் என்று.

விளக்கம்: மலை போலும் பெரிய தோள்களையுடைய சோழன் ஏறிய குதிரையைத் தொழுது நீர்வார்ந்த கண்ணையுடைய மெத்தென்ற நடையையுடைய மடநல்லார், எமக்கு கண்ணீர் வருதற்கு காரணம், சினத்தையுடைய சேனை பரந்து வருதலால் ஆகாயத்தில் எழுந்த தூசியானது கண்ணினுள் புகுந்து கண்ணீர் வார்ந்தது என்று தோழியர்க்கு நிகழ்ந்ததை மறைத்து வேறோர் உபாயத்தால் சொல்லினார் என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் குதிரைமீது சோழன் உலா வருதலைக் கண்ட பெண்கள், அவன் அழகைக் கண்டு காமுற்றதால் ஏற்பட்ட கண்ணீரை, அங்கெழுந்த புழுதியால் ஏற்பட்டது எனப் பிறிதின் மறுத்துரையாடியிருத்தலின், இது இலேசவணியாயிற்று.

குறிப்பு

**இலேசவணியின் வகை**

புகழ்வது போலப் பழித்திறம் புனைதலும்
பழிப்பது போலப் புகழ்புலப் படுத்தலும்
அவையும் அன்னதென்(று ) அறைகுநர் உளரே.

ஒன்றனைப் புகழ்ந்தாற்போலப் பழித்து உரைத்தலும், பழித்தாற் போலப் புகழ்ந்து உரைத்தலும் என்னும் இரண்டும் அவ்விலேசத்தின் பாற்படும் என்று உரைப்பாரும் உளர் ஒருசார் தொல்லாசிரியர்.

## 13.4.1 புகழ்வதுபோலப் பழித்தல்

“மேய கலவி விளைபொழுது நம்மெல்லென்
சாயல் தளராமல் தாங்குமால் - சேயிழாய் !
போர்வேட்ட மேன்மைப் புகழாளன் யாம்விரும்பித்
தார்வேட்ட தோள்விடலை தான்

விளக்கம்: தோழீ ! கேட்பாயாக ! எம்மில் பொருந்திய கலவி நிகழும்போது அக்கலவியில் நமது மென்மை குன்றாதபடி பாதுகாத்து ஒழுகுவான். எப்பொழுதும் போர்த்தொழிலை விரும்பிய மேலாய புகழையுடையவன், யாம் முற்காலத்துக் காதலித்து மாலையிட்ட தோளையுடைய தலைவன் என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் தலைவி, புணருங்காலத்துத் தன் தலைவன் தன் மென்மை கெடாமல் பாதுகாக்கின்றான் எனப் புகழ்வது போலக்கூறி, அக்காலத்துத் தன் மென்மை கெடத் தலைவன் கூடவேண்டியிருக்க, அங்ஙனம் கூடும் தன்மை அறியாதிருக்கின்றான் எனப் பழித்துக்கூறலின், இது புகழ்வது போலப் பழித்தலாயிற்று.

## 13.4.2 பழிப்பதுபோலப் புகழ்தல்

ஆடல் மயிலியலி அன்பன் அணியாகம்
கூடுங்கால் மெல்லென் குறிப்பறியான் - ஊடல்
இளிவந்த செய்கை இரவாளன் யார்க்கும்
விளிவந்த வேட்கை யிலன்

விளக்கம்: மயில்போலும் சாயலினை உடையாய் ! நம்மீது அன்பு வைத்த தலைவனுடைய அலங்கரித்த மார்பகத்தை யாம் கூடுங்கால், நம் மெல்லென்ற நலம் பாராட்ட அறியான் ஆவான்.மேலும் ஊடற்கண் தனக்குத் தகாதன செய்து இரக்கும் இரவாளன் ஆவான். யாவர்க்கும்

வெறுக்கத்தக்க ஆசைப்பாடு உடையனல்லன் ஆவான். எனவே இகழ்தற்கு ஏதுவாயினான் என்பதாம்.



குறிப்பு

பொருத்தம்: இப்பாடலில் தலைவி, புணருங்காலத்துத் தன் தலைவன் தன் மென்மை கெடக் கூடுகின்றான் எனப் பழிப்பது போலக் கூறி, அக் காலத்து அங்ஙனம் கூடுவதே இயல்பாதல் தோன்றப் புகழ்ந்து கூறுலின் இது பழிப்பது போலப் புகழ்தலாயிற்று.

## 13.5 நிரல் நிறையணி

நிரல்நிறுத்து இயற்றுதல் நிரல்நிறை அணியே.

சொல்லையும் பொருளையும் நிரலே நிறுத்தி நேரே பொருள் கொள்வது, நிரல்நிறை என்னும் அணியாகும்

### 13.5.1 நிரலே நிறுத்தி நேரே பொருள் கொள்வது

“காரிகை மென்மொழியால் நோக்கால் கதிர்முலையால்
வார்புருவத் தால்இடையால் வாய்த்தளிரால் - நேர்தொலைந்த
கொல்லி வடிநெடுவேற் கோங்கரும்பு விற்கரும்பு
வல்லிகவிர்மென் மலர்”

விளக்கம்: அழகு நிறைந்த பெண்ணின் மென்மையான சொல்லாலும், நோக்காலும், ஒளி பொருந்திய கொங்கைகளாலும், நீண்ட புருவத்தாலும், இடையாலும், தளிரனைய கையாலும், கொல்லி என்னும் இனிய பண்ணும், கூர்மை பொருந்திய நீண்ட வேலும், கோங்கினது அரும்பும், மன்மதனின் வில்லாகிய கரும்பும், பூங்கொடியும், மென்மையான முருக்க மலரும் அழகு இழந்தன என்பதாம்.

பொருத்தம்: இதன்கண் சொல்லால் பண்ணும், நோக்கால் வேலும், கொங்கையால் கோங்கரும்பும், புருவத்தால் கரும்பும், இடையால் வல்லியும், வாயால் முருக்க மலரும் நேர் தொலைந்த என நிரல்நிறையாக்கிப் பொருள்கோடலின், இது நிரல்நிறையாயிற்று.

### 13.5.2 நிரலே நிறுத்தி மொழிமாற்றிப் பொருள்கொள்வது

ஆடவர்கள் எவ்வா(று) அகன்றொழிவார் வெ.·.காவும்
பாடகமும் ஊரகமும் பஞ்சரமா - நீடியமால்
நின்றான் இருந்தான் கிடந்தான் இதுவன்றோ
மன்றார் மதிற்கச்சி மாண்பு

குறிப்பு

விளக்கம்: நீண்ட திருவுருவத்தை உடைய திருமால் வெ.்.கா, பாடகம், ஊரகம் ஆகிய இடங்களைத் தனக்கு இடமாகக் கொண்டு, அவற்றில் முறையே கிடந்தான், இருந்தான், நின்றான் ; மன்றுகள் பல நிறைந்ததும், மதில் சூழ்ந்ததும் ஆன காஞ்சீபுரத்தின் பெருமை இதுவன்றோ? இத்தகைய சிறப்பு மிக்க காஞ்சிப்பதியை மனிதர்கள் எங்ஙனம் விட்டு நீங்குவர் ? என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலின் இரண்டாம் அடியில் வெ.்.கா, பாடகம், ஊரகம் என நிறுத்தியதற்கேற்ப, மூன்றாம் அடியில் உள்ள சொற்களைக் கிடந்தான், இருந்தான், நின்றான் என மாற்றிப் பொருள் கோடலின், இது நிரலே நிறுத்தி மொழிமாற்றிப் பொருள் கொள்வது ஆயிற்று.

## 13.6 ஆர்வமொழியணி:

ஆர்வ மொழிமிகுப்ப(து) ஆர்வ மொழியே.

உள் நிகழ்ந்த ஆர்வம்பற்றி நிகழும் மொழி மிகத்தோன்றச் சொல்லுவது, ஆர்வமொழி என்னும் அணியாகும்.

"சொல்ல மொழிதளர்ந்து சோருந் துணைமலர்த்தோள்

புல்ல விருதோள் புடைபெயரா - மெல்ல

நினைவோ மெனில்நெஞ் சிடம்போதா தெம்பால்

வனைதாராய் வந்ததற்கு மாறு

விளக்கம்: உன் முன்னின்று மறுமொழிதர முயல்வேமாயின், எங்கள் மொழியானது தடுமாறிச் சோர்வுபட நின்றது; உன் இணைமலர்த் தோள்களைத் தழுவ முயல்வேமாயின், எங்கள் இரண்டு தோள்களும் இடமுண்டாக வளர்வன அல்ல; மெல்ல உன்புகழை நினைப்போமாயின், எங்கள் உள்ளம் இடம் போதாது. அலங்கரிக்கப்பட்ட மாலையை யுடையானே ! எம்மிடத்து நீ வந்த இதற்குக் கைம்மாறு யாதென்று சொல்லப்படும் என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் தலைவி தலைவன் மீதுள்ள ஆர்வ மிகுதியால், தன் மொழி சோரும், தோள் புடைபெயரும், நெஞ்ச இடம் போதாது எனக் கூறுதலின் இது ஆர்வமொழியாயிற்று.

## 13.7 சுவையணி – வகை:

உண்ணிகழ் தன்மை புறத்துத் தோன்ற

எண்வகை மெய்ப்பாட்டின் இயல்வது சுவையே.

உள் நிகழுந் தன்மை புறத்துப் புலனாய் விளங்க, எட்டு வகைப்பட்ட மெய்ப்பட்டானும் நடப்பது, சுவை என்னும் அணியாகும்.

**சுவையணியின்வகை:**

அவைதாம்,

வீரம் அச்சம் இழிப்பொடு வியப்பே

காமம் அவலம் உருத்திரம் நகையே.

மேற்கூறிய எண்வகைப்பட்ட மெய்ப்பாடாவன வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், உருத்திரம், நகை என்பதாகும்.

## 13.7.1 வீரம்

சேர்ந்த புறவின் நிறைதன் திருமேனி

ஈர்ந்திட் டுயர்துலைதான் ஏறினான் - நேர்ந்த

கொடைவீர மோ ? மெய்ந் நிறைகுறையா வன்கட்

படைவீர மோ ? சென்னி பண்பு

விளக்கம் தன்னிடம் சரணடைந்த புறவிற்காகத் தனது தசையை அறுத்திட்டும், தசை எடை போதாதற்குத் தானும் துலாக்கோலில் ஏறிய செயல் கொடையின் வெற்றியோ ? மெய்யொழுக்கம் குன்றாத வன்கண்மையுடைய படையின் வெற்றியோ ? என ஆராய்வார்க்கு இவையிரண்டும் அன்று ; சோழன் தனது தன்மை இருந்தபடி இவ்வாறாம் என்பதாம்.

பொருத்தம்:: கல்வி, தறுகண் , புகழ், கொடை ஆகிய நான்கும்பற்றி வீரம் பிறக்கும் என்பர் தொல்காப்பியர். இப்பாடல் கொடை வீரம்பற்றி வந்ததாகும்.

## 13.7.2 அச்சம்

“கைநெரிந்து வெய்துயிர்ப்பக் கால்தளர்ந்து மெய்ப்பனிப்ப

மையரிக்கண் நீர்ததும்ப வாய்புலர்ந்தாள் - தையல்

சினவேல் விடலையாற் கையிழந்த செங்கட்

புனவேழம் மேல்வந்த போது”

விளக்கம்: சினம் பொருந்திய வேற்படையை உடைய வீரனால் துதிக்கையை இழந்த சிவந்த கண்களை உடைய காட்டுயானை தன் முன்னே வந்தபொழுது, ஒரு பெண், தன் கைகளை நெரித்துக்கொண்டு,

பெருமுச்சு எறிய, கால் தளர்ந்து, உடல் நடுங்க, மைதீட்டிய செவ்வரி பரந்த கண்களில் நீர் ததும்ப, வாய் உலர்ந்தாள் என்பதாம்.



பொருத்தம்: அணங்கு, விலங்கு, கள்வர், இறை ஆகிய நான்கானும் அச்சம் பிறக்கும் என்பர் தொல்காப்பியர். இப்பாடற்கண் யானையாகிய விலங்கு காரணமாகப் பிறந்த அச்சத்தைக் கூறுதலின், இது அச்சமாயிற்று.

குறிப்பு

### 13.7.3 இழிப்பு

உடைதலையும் மூளையும் ஊன்தடியும் என்பும்

குடரும் கொழுங்குருதி யீர்ப்ப - மிடைபேய்

பெருநடஞ்செய் பெற்றித்தே கொற்றப்போர்க் கிள்ளி

கருநடரைச் சீறுங் களம்

விளக்கம்::வெற்றியைத் தரும் போரினைச் செய்யும் சோழன் கருநாடக அரசர்களைச் சினந்து தாக்கிய போர்க்களமானது, உடைந்த தலைகளையும், மூளைகளையும், கொழுப்பையும், தசைத் திரளையும், எலும்பையும், குடலையும், செழித்த இரத்த வெள்ளம் இழுக்க, நெருங்கிய பேய்கள் பெருங் கூத்தாடும் தன்மையை உடையது என்பதாம்

பொருத்தம்: இழிப்பு என்பது அருவருப்பு எனப் பொருள்படும். இதனை இளிவரல் என்றும், அது மூப்பு, பிணி, வருத்தம், மென்மை ஆகிய நான்கினிடமாகப் பிறக்கும் என்றும், தொல்காப்பியர் கூறுவர். இப்பாடற்கண் போர்க்களத்திலுள்ள உடைதலை, ஊன் முதலியவைகளைக் கூறுமுகத்தான் அருவருப்புச் சுவை தோன்றலின், இது இழிப்பாயிற்று.

### 13.7.4 வியப்பு

முத்தரும்பிச் செம்பொன் முறிததைந்து பைந்துகிரின்

தொத்தலர்ந்து பல்கலனுஞ் சூழ்ந்தொளிரும் - கொத்தினதாம்

பொன்னேர் மணிகொழிக்கும் பூங்கா விரிநாடன்

தன்னேர் பொழியுந் தரு “

விளக்கம்: பொன்னையும்,மணிகளையும் அலைத்துக்கொண்டு வருகின்ற பொலிவுடைய காவிரி நாடனுக்கு உவமையாகச் சொல்லப்பட்ட கற்பகத்தரு, முத்தமாகிய அரும்பை அரும்பிச் சிவந்த பொன் முறியாய தளிரினாலே செறிந்த பச்சைத் துகிராகிய கொத்துக்களை உடைத்தாய்ப்

பலவகைப்பட்ட ஆபரணங்களால் சூழப்பட்டு விளங்கிய பணைகளை உடைத்தாய் இருக்கும் என்பதாம்.

பொருத்தம்: முன்னர்க் காணாத காணும்போது ஏற்படும் உள்ள மகிழ்ச்சியே வியப்பாகும். இது புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் ஆகிய நான்கும் பற்றிப் பிறக்கும் என்பர் தொல்காப்பியர்.கற்பகத் தருவில் முத்தரும்புதல், செம்பொன் முறிததைதல், பைந்துகிரின் தொத்தலர்தல், பல்கலனும் சூழ்ந்தொளிர்தல், ஆகியன இருப்பதாகக் கூறலின், இது இதுவரை காணாத புதுமைபற்றிப் பிறந்த வியப்பாயிற்று.

## 13.7.5 காமம்

திங்கள் நுதல்வியர்க்கும் வாய்துடிக்கும் கண்சிவக்கும்

அங்கைத் தளிர்நடுங்கும் சொல்லசையும் - கொங்கை

பொருகாலும் ஊடிப் புடைபெயருங் காலும்

இருகாலும் ஒக்கும் இவர்க்கு

விளக்கம்: கொங்கைகள் என் மீது அழுந்துமாறு என்னைத் தழுவிய பொழுதும், என்னிடத்து ஊடல் கொண்டு என்னிடத்தினின்றும் நீக்கியபொழுதும் இவர்க்கு, எட்டாம் பிறையை போன்ற நெற்றி வியர்க்கும், வாய் துடிக்கும், கண்சிவக்கும், அழகிய கைகளாகிய தளிர்கள் நடுங்கும் சொல் தடுமாறும் என்பதாம்.

காமச் சுவையைத் தொல்காப்பியர் உவகை என்ற பெயரால் குறிப்பர். இது செல்வம், அறிவு, புணர்ச்சி , விளையாட்டு ஆகிய நான்கும் பற்றிப் பிறக்கும் என்பர்.

பொருத்தம்: இப்பாடல் தலைவன், தன் தலைவியின் மாட்டுள்ள காதல் மகிழ்ச்சி புலப்படக் கூறியதாகும். “ஊடல், உணர்தல், புணர்தல் இவை காமம் கூடியார்ப் பெற்ற பயன். ஆதலின் இவ்விரு நிகழ்ச்சியும் காமம் பற்றிய தாயிற்று.

## 13.7.6 அவலம்:

“கழல்சேர்ந்த தாள்விடலை காதலிமெய் தீண்டும்

அழல்சேர்ந்து தன்னெஞ் சயர்ந்தான் - குழல்சேர்ந்த

தாமந் தரியா(து) அசையுந் தளிர்மேனி

ஈமந் தரிக்குமோ வென்று

விளக்கம்: குழலிடத்துப் பொருந்தின மாலையைப் பொறாது தளரும் தளிர் போலும் மேனியானது ஈமத்து எரியைப் பொறுக்கவற்றோ ? என்று

. வீரக்கழலைக் அணிந்த காலினையுடைய விடலையானவன், தன்னுடைய மனைவியின் மெய்யை எரிக்கும் அழலைச் சேர்ந்து, தன்னுடைய நெஞ்சம் வருந்தினான்,

பொருத்தம்: இதனைத் தொல்காப்பியர் அழுகை எனக் குறிப்பிடுவர். இது இளிவு, இழவு, அசைவு, வறுமை ஆகிய நான்கும் பற்றிப் பிறக்கும் என்பர். இப்பாடல் தலைவியை இழந்த தலைவனின் அவலத்தைப் பெரிதும் விளக்குதலின், இது இழவுபற்றிய அவலமாயிற்று.

குறிப்பு

### 13.7.7 உருத்திரம்

கைபிசையா வாய்மடியா கண்சிவவா வெய்துயிரா

மெய்குலையா வேரா வெகுண்டெழுந்தான் - வெய்யபோர்த்

தார்வேய்ந்த தோளான் மகளைத் தருகென்று

போர்வேந்தன் தூதிசைத்த போது"

விளக்கம்: கொடிய போரில் வாகை சூடிய தோளினையுடைய மன்னன் ஒருவனின் மகளைத் தனக்குத் தருமாறு பகை மன்னன் ஒருவன்தூது விடுத்தான். அவனைக் கண்டதும் தன் கைகளைப் பிசைந்து, வாயை மடித்துக் கண்சிவந்து வெவ்விய பெருமூச்செறிந்து உடல் நடக்குற்று வியர்த்துச் சினந்து போர்புரியவும் ஆயத்தமானான் என்பதாம்.

பொருத்தம்: இதனைத் தொல்காப்பியர் வெகுளி என்பர். இது உறுப்பறை, குடிகோள், அலை, கொலை ஆகிய நான்கும்பற்றிப் பிறக்கும் என்பர். அரசன் ஒருவன் தன் மகளைத் தகுதியற்ற அரசன் ஒருவன் கேட்க, அது பொழுது அவனுக்கு எழுந்த வெகுளியை இப்பாடல் விவரித்தலின், இது குடிகோள் பற்றிய உருத்திரமாயிற்று.

### 13.7.8 நகை

நாண்போலும் தன்மனைக்குத் தான்சேறல் இந்நின்ற

பாண்போலும் வெவ்வழலிற் பாய்வதூஉம் - காண்தோழி !

கைத்தலங் கண்ணாக் களவுகாண் பான்ஒருவன்

பொய்த்தலைமுன் னீட்டியற்றும் போந்து

விளக்கம்: தோழி ! இதனைக் காண்பாயாக ! தன் இல்லத்திற்குத் தான் வருவதும் கூட நம் தலைவனுக்கு நாணம் போலும். நாம் அவர் வரவை மறுப்பின், அவர் தீயில் பாய்வர் என இப்பாணனை சொல்வதும் இடத்திற்கேற்ப இவனுரைக்கும் கற்பனை போலும். தலைமகன் நேரில் தான் வாராது இப்பாணன் வரவிட்டது, கைகளையே கண்ணாகக்

கொண்டு இரவில் களவு புரிவான் ஒருவன், தான் நுழைவதற்கு முன்னே பொய்த்தலையை நீட்டுவது போலாம் என்பதாம்.

பொருத்தம்: இச்சுவையைத் தொல்காப்பியர் நகை என்று குறிப்பிடுவர். இது எள்ளல், இளமை, பேதைமை, மடன் ஆகிய நான்கும்பற்றிப் பிறக்கும் என்பர். இது தலைமகனையும் அவனால் அனுப்பப்பட்ட பாணனையும் ஒருங்கு எள்ளி நகையாடுதலின், இது எள்ளல் பற்றி வந்த நகையாயிற்று.

## பயிற்சி வினாக்கள்:

**1.தற்குறிப்பேற்றவணி என்பதனை விளக்குக.**

பெயர்பொருள் அல்பொருள் எனஇரு பொருளினும்
இயல்பின் விளைதிறன் அன்றி அயல் ஒன்று
தான்குறித்(து) ஏற்றுதல் தற்குறிப் பேற்றம்.

விளக்கம் பெயரும் பொருள், பெயராத பொருள் என்னும் இரு பொருட் கண்ணும் இயல்பாக நிகழும் தன்மை ஒழியக், புலவன் தான் கருதிய வேறொன்றினை அவற்றின்கன் ஏற்றிச் சொல்வது தற்குறிப்பேற்றம் என்னும் அணியாகும்

**2.ஏதுவணியின் வகைகள் யாவை?**

யாதென் திறத்தினும் இதனின் இது விளைந்ததென்று
ஏதுவிதந்(து) உரைப்ப(து) ஏது; அதுதான்
காரக ஞாபகம் எனஇரு திறப்படும்.

ஏதேனும் ஒரு பொருளிடத்து இதனால் இது நிகழ்ந்ததென்று காரணம் விதந்து சொல்லுவது, ஏது என்னும் அணியாகும்.அது காரகவேது என்றும்,ஞாபகவேது என்றும் இரண்டு வகைப்படும்.

**3. நிரல் நிறையணி குறித்து விவரி**

நிரல்நிறுத்து இயற்றுதல் நிரல்நிறை அணியே.

சொல்லையும் பொருளையும் நிரலே நிறுத்தி நேரே பொருள் கொள்வது, நிரல்நிறை என்னும் அணியாகும்

நிரலே நிறுத்தி நேரே பொருள் கொள்வது

“காரிகை மென்மொழியால் நோக்கால் கதிர்முலையால்
வார்புருவத் தால்இடையால் வாய்த்தளிரால் - நேர்தொலைந்த

கொல்லி வடிநெடுவேற் கோங்கரும்பு விற்கரும்பு

வல்லிகவிர்மென் மலர்”

விளக்கம்: அழகு நிறைந்த பெண்ணின் மென்மையான சொல்லாலும், நோக்காலும், ஒளி பொருந்திய கொங்கைகளாலும், நீண்ட புருவத்தாலும், இடையாலும், தளிரனைய கையாலும், கொல்லி என்னும் இனிய பண்ணும், கூர்மை பொருந்திய நீண்ட வேலும், கோங்கினது அரும்பும், மன்மதனின் வில்லாகிய கரும்பும், பூங்கொடியும், மென்மையான முருக்க மலரும் அழகு இழந்தன என்பதாம்.

பொருத்தம்: இதன்கண் சொல்லால் பண்ணும், நோக்கால் வேலும், கொங்கையால் கோங்கரும்பும், புருவத்தால் கரும்பும், இடையால் வல்லியும், வாயால் முருக்க மலரும் நேர் தொலைந்த என நிரல்நிறையாக்கிப் பொருள்கோடலின், இது நிரல்நிறையாயிற்று.

நிரலே நிறுத்தி மொழிமாற்றிப் பொருள்கொள்வது

ஆடவர்கள் எவ்வா(று) அகன்றொழிவார் வெ.்.காவும்

பாடகமும் ஊரகமும் பஞ்சரமா - நீடியமால்

நின்றான் இருந்தான் கிடந்தான் இதுவன்றோ

மன்றார் மதிற்கச்சி மாண்பு

விளக்கம்: நீண்ட திருவுருவத்தை உடைய திருமால் வெ.்.கா, பாடகம், ஊரகம் ஆகிய இடங்களைத் தனக்கு இடமாகக் கொண்டு, அவற்றில் முறையே கிடந்தான், இருந்தான், நின்றான் ; மன்றுகள் பல நிறைந்ததும், மதில் சூழ்ந்ததும் ஆன காஞ்சீபுரத்தின் பெருமை இதுவன்றோ? இத்தகைய சிறப்பு மிக்க காஞ்சிப்பதியை மனிதர்கள் எங்ஙனம் விட்டு நீங்குவர் ? என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலின் இரண்டாம் அடியில் வெ.்.கா, பாடகம், ஊரகம் என நிறுத்தியதற்கேற்ப, மூன்றாம் அடியில் உள்ள சொற்களைக் கிடந்தான், இருந்தான், நின்றான் என மாற்றிப் பொருள் கோடலின், இது நிரலே நிறுத்தி மொழிமாற்றிப் பொருள் கொள்வது ஆயிற்று.

**4.சுவையணியின் வகைகளைக் கட்டுரைக்க.**

பாடப்பகுதியில் அமைந்துள்ள சுவையணி குறித்த செய்திகளை எடுத்து எழுதுதல் வேண்டும்.

குறிப்பு

## கூறு: 14 –

# தன் மேம்பாட்டுரையணி முதல் பாவிக அணி வரை

**நோக்கம்: தன் மேம்பாட்டுரையணி முதல் பாவிக அணி வரையிலான அணிகளின் இலக்கணத்தையும் அவற்றின் வகைகளையும் கற்று அறிதல்**

## 14.1 தன் மேம்பாட்டுரையணி:

தான்தற் புகழ்வது தன்மேம் பாட்டுரை.

ஒருவன் தன்னைத்தானே புகழ்வது, தன் மேம்பாட்டுரை என்னும் அணியாகும்.

"எஞ்சினா ரில்லை யெனக்கெதிரா இன்னுயிர்கொண்(டு)
அஞ்சினார் அஞ்சாது போயகல்க - வெஞ்சமத்துப்
பேரா தவராகத் தன்றிப் பிறர்முதுகிற்
சாராவென் கையிற் சரம்"

விளக்கம்: கொடிய போரில் எனக்கு எதிராக வந்து முன்னின்று போர் செய்து தமது இனிய உயிரைத் தப்புவித்துக் கொண்டு பிழைத்தார் எவருமில்லை ; எனக்கு அஞ்சியவர்கள் அஞ்சாது விலகிச் செல்வாராக என்கையால் எய்யப்படும் அம்புகள், புறங்கொடுத்துச் செல்லாதவர்களின் மார்பிலன்றி, புறங் கொடுப்பாரது முதுகில் சேரமாட்டாது என்பதாம்.

பொருத்தம்: இது ஒன்னாதார் படைகெழுமித் தன் ஆண்மை எடுத்துரைத்தலின் தன் மேம்பாட்டுரை ஆயிற்று.

## 14.2 பரியாயவணி

கருதியது கிளவா(து) அப்பொருள் தோன்றப்
பிறிதொன்(று) உரைப்பது பரியா யம்மே.

விளக்கம்: தான் கருதியதனைக் கூறாது அப்பொருள் தோன்றப் பிறிதொன்றினைக் கூறுவது பரியாயம் என்னும் அணியாகும்.

"மின்னிகரா மாதே ! விரைச்சாந் துடன்புணர்ந்து
நின்னிகரா மாதவிக்கண் நின்றருள்நீ - தன்னிகராம்
செந்தீ வரமலருஞ் செங்காந்தட் போதுடனே
இந்தீ வரங்கொணர்வல் யான்

குறிப்பு

விளக்கம்: மின்னலுக்கு உவமையாகிய மாதே ! சந்தன மரத்தைத் தழுவி உனக்கு நிகராய் இருக்கின்ற இம்மாதவிக் கீழே நிற்பாயாக; தனக்கு நிகராய் இருக்கின்ற சிவந்த தீயினது ஒளி புலப்பட, மலர்ந்த சிவந்த காந்தட் பூவுடனே நல்ல குவளை மலருங் கொண்டு நின் குழற்கு அணிய வாராநின்றேன் என்று இடத்து நிறீஇ நீங்கினாள்.

பொருத்தம்: இப்பாடலில் தோழி கருதிய பொருள் தலைமகளைக் குறியிடத்துய்த்து நீங்க நினைப்பதாகும் ஆயினும் அதனைக் கூறாது, காந்தள் மலரையும் குவளைமலரையும் கொண்டு வரும்வரை நீ இங்கிருப்பாயாக எனப் பிறிதொன்று உரைப்பதால், இது பரியாயமாயிற்று.

## 14.3 சமாயிதவணி

முந்துதான் முயல்வுறூஉம் தொழிற்பயன் பிறிதொன்று

தந்ததா முடிப்பது சமாயிதம் ஆகும்.

முன்பு தன்னால் முயலப்பட்ட தொழிலினது பயனானது அத்தொழிலால் அன்றிப் பிறிதொன்றால் நிகழ்ந்ததாகக் கூறி முடிப்பது சமாயிதம் என்னும் அணியாகும்.

“அருவியங் குன்றம் அரக்கன் பெயர்ப்ப

வெருவிய வெற்பரையன் பாவை - பெருமான்

அணியாகம் ஆரத் தழுவினாள் தான்முன்

தணியாத வூடல் தணிந்து

விளக்கம் முன்பு தீராத ஊடலை உடையளாய் இருக்கின்ற மலையரசன் பயந்த பாவையாகிய உமையானவள், அருவியினை உடைத்தாய் , அழகு பொருந்திய கயிலாயமலையை இராவணன் அலைப்ப வெருவி, சவபெருமானது அழகிய மார்பகத்தை ஊடல் தணிந்து தானே தழுவினாள்.

பொருத்தம்: இப்பாடலில் சிவபெருமான் முன்னதாக முயன்ற தொழில் உமையம்மையின் ஊடலைத் தணிவிப்பதாகும். ஆனால் அப்பயன் அம் முயற்சியால் கிட்டாது இராவணன் மலையை அசைத்ததால் கிடைத்ததாகக் கூறப்பட்டிருத்தலின், இது சமாயித மாயிற்று.

## 14.4 உதாத்தவணி

வியத்தகு செல்வமும் மேம்படும் உள்ளமும்

உயர்ச்சிபுனைந்து உரைப்ப(து) உதாத்தம் ஆகும்.

வியக்கத்தக்க செல்வத்து உயர்ச்சியையும், மேம்பட்ட உள்ளத்து உயர்ச்சியையும் மிகுத்துச் சொல்வது உதாத்தம் என்னும் அணியாகும்.



## 14.4.1 செல்வ மிகுதி

"கன்றும் வயவேந்தர் செல்வம் பலகவர்ந்தும்

என்றும் வறிஞர் இனங்கவர்ந்தும் - ஒன்றும்

அறிவரிதாய் நிற்கும் அளவினதால் அம்ம

செறிகதிர்வேற் சென்னி திரு"

விளக்கம்: சினந்து வருகின்ற அரசர்களுடைய செல்வங்கள் பலவற்றையும் நாளும் கவர்ந்துகொண்டு வருதலானும், வறுமையுற்றோர் தாம் கூட்டத்துடன் சென்று எப்பொழுதும் வேண்டியவாறு எடுத்துக் கொள்ளப்படுதலானும், நிறைந்த ஒளியையுடைய வேற்படையையுடைய சோழனது செல்வமானது சிறிதளவேனும் அளவிட்டறியப் படாததாய் நிற்கும் என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் சோழனுடைய செல்வத்தினது வியத்தகு நிலைமை பாராட்டப்பெற்றிருத்தலின், இது செல்வ மிகுதி பற்றி வந்த உதாத்தமாயிற்று.

## 14.4.2 உள்ள மிகுதி

"மண்ணகன்று தன்கிளையின் நீங்கி வனம்புகுந்து

பண்ணுந் தவத்திசைந்த பார்த்தன்தான் - எண்ணிறந்த

மீதண்டர் கோன்குலையும் வெய்யோர் குலந்தொலைத்தான்

கோதண்ட மேதுணையாக கொண்டு"

விளக்கம்: நாட்டை விட்டு தன் சுற்றத்தை அகன்று காட்டிற் புகுந்து செய்யப்பட்ட தவத்தால் சிறந்த அருச்சுனனானவன் தேவர்கட்குக் தலைவனாகிய இந்திரன் நடுங்க வரும் உக்கிரத்தையுடைய அசுரர் குலங்கெட தனது கோதண்டமே துணையாக அறுத்தான்.

பொருத்தம்: இப்பாடலில் அருச்சுனன் தன்னுடைய ஒரே வில்லின் துணை கொண்டு அவுணர் குலமனைத்தும் அழித்தான் என அவனுடைய உள்ள மிகுதி கூறப்பட்டிருத்தலின், இது உள்ள மிகுதி பற்றி வந்த உதாத்தமாயிற்று.

குறிப்பு

## 14.5 அவநுதியணி

சிறப்பினும் பொருளினும் குணத்தினும் உண்மை

மறுத்துப் பிறிதுரைப்ப(து) அவநுதி யாகும்.

விளக்கம்: சிறப்பினாலும், பொருளினாலும், குணத்தினாலும் ஆகிய உண்மையை மறுத்துப் பிறிதொன்றாக உரைப்பது, அவநுதி என்னும் அணியாகும்.யாதானும் ஒரு பொருளிலுள்ள உண்மைத் தன்மையை மறுத்துப் பிறிதொரு தன்மையை அதன்கண் ஏற்றி உரைப்பது அவநுதி யாகும் . இங்ஙனம் உண்மையை மறுத்துப் பிறிதுரைக்குங்கால் அப்பொருளுக்குச் சிறப்புத் தோன்றுமாறு அமையும்.

### 14.5.1 சிறப்பவநுதி

“நறைகமழ்தார் வேட்டார் நலனணியும் நாணும்

நிறையும் நிலைதளரா நீர்மை - அறநெறிசூழ்

செங்கோலன் அல்லன் கொடுங்கோலன் தெவ்வடுபோர்

வெங்கோப மால்யானை வேந்து”

விளக்கம்: மணமுடைய மாலையை ஆசைப்பட்ட மடவாருடைய அழகும், அணியும், நாணும், நிறையும் நிறை தளராதபடி தாங்கும் அறநெறியினை உடைத்தாகிய செங்கோலை உடையவனல்லன்; கொடுங் கோன்மை உடையவன் ; போர்க்களத்துப் பகைவரை வென்ற வெவ்விய கோபத்தையுடைய பெரிய யானையையுடைய வேந்தன்.

பொருத்தம்: இப்பாடற்கண் அரசனுக்குச் சிறப்பானதும் உண்மையானதுமான செங்கோன்மையை மறுத்துக் கொடுங்கோன்மையை அவன்மீது ஏற்றிச் சொல்லப்பட்டிருத்தலின், இது சிறப்பவநுதி ஆயிற்று. அரசனது மாலையை விரும்புவேருக்கே அவன் கொடுங்கோன்மையன் ஆவான் எனவே, அவனுடைய இன்பச் சிறப்பும், இதனால் இவர்கட்கன்றி ஏனையோர்களுக்கெல்லாம் செங்கோலனே ஆவன் என்பதும் பெறப்படுதலின் அவனுடைய குணச்சிறப்பும் ஒருங்கு விளங்கி நிற்றலை அறிய முடிகிறது.

### 14.5.2 பொருளவநுதி

“நிலனாம் விசும்பாம் நிமிர்கால்நீர் தீயாம்

அலர்கதிராம் வான்மதியாம் அன்றி - மலர்கொன்றை

ஒண்ணறுந் தாரான் ஒருவன் இய மானனுமாய்

எண்ணிறந்த எப்பொருளு மாம்"

விளக்கம்: கொன்றைப் பூவினால் செய்த நறுநாற்றத்தையுடைய மாலையை அணிந்தவனும், ஏகனும் ஆகிய பரமசிவன், நிலமும், ஆகாயமும், உயர்ந்த காற்றும், நீரும், தீயும், பரந்த கதிரையுடைய கதிரவனும் மதியமும் ஆகிய ஏழாதலுமன்றி ஆன்மாவுமாய் எண்ணிறந்த எல்லாப் பொருளுமாவான்.

பொருத்தம்: இப்பாடலில் கூறப்பட்ட பொருள் சிவபெருமான் ஆவர். அப்பெருமானுக்கு இயல்பாகவும் உண்மையாகவும் உள்ள ஒருவனாந் தன்மையை மறுத்து, எண்ணிறந்த எப்பொருளுமாம் என்னும் பலவாந் தன்மையை ஏற்றியுரைக்கப்படுதலால், இது பொருள் அவநுதியாயிற்று.

### 14.5.3 குணவவநுதி

"மனுப்புவிமேல் வாழ மறைவளரக்கும் ஆரப்

பனித்தொடையல் பார்த்திபர்கோன் எங்கோன் - தனிக்கவிகை

தண்மை நிழற்றன்று தன்தொழுத பேதையர்க்கு

வெம்மை நிழற்றாய் மிகும்"

விளக்கம்: மக்கள் நிலவுலகில் உயிர்வாழ வேதாகம நெறியை வளர்க்கும் தண்ணிய ஆத்திமாலையையுடைய அரசர்க்குக் தலைவனாகிய எம் இறைவனான சோழ அரசனின் தனிக்குடையானது குளிர்ச்சியான நிழலை யுடையதன்று; அவனைக் கண்ட மடவார்க்கு மிக்க வெய்ய தன்மையைப் பண்ணி நிற்கும் என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் கூறப்பட்ட பொருள் சோழனது வெண்கொற்றக் குடையாகும் .அதனிடத்து இயல்பாகவுள்ள குளிர்ந்த தன்மையை மறுத்து, வெம்மைத் தன்மையை ஏற்றி உரைத்திருத்தலின், இது குண அவநுதி யாயிற்று. "அவநுதி " என்னாது "ஆகும் " என்றதனால் இவ்வலங்காரம் பிற அலங்காரங்களோடு கூடி வருவனவுங் கொள்க.

### 14.5.4 வினைபற்றிய சிலேடை அவநுதி

அவநுதியணி சிலேடையணியோடு கூடி, அச்சிலேடை தானும் வினைச்சொல்லினிடமாகவரின் , அது வினைபற்றிய சிலேடை அவநுதியாம்

"நறவேந்து கோதை நலங்கவர்ந்து நல்கா

மறவேந்தன் வஞ்சியா னல்லன் - துறையின்

விலங்காமை நின்று வியன்தமிழ்நா(டு) ஐந்தின்

குலங்காவல் கொண்டொழுகுங் கோ”

விளக்கம்: மாலையணிந்த பெண்ணொருத்தியின் அழகைக் கவர்ந்துகொண்டு மீண்டும் அதனை அவளுக்குக் கொடுக்காத கொடுமையை உடைய அரசன் , பிறரை வஞ்சியாதானல்லன் (வஞ்சியைத் தலைநகராக உடைய சேரனல்லன்), குலவொழுக்கத்தினின்றும் வழுவாமல் நின்று பெரிய ஐவகைத் தமிழ் நாட்டையும் பாதுகாத்து ஒழுகும் சோழன் ஆவன் என்பதாம்.

பொருத்தம்: இப்பாடற்கண் சோழன் வஞ்சியாதவன் என்ற உண்மையை மறுத்து, வஞ்சிப்பவன் எனக் கூறுவதால், இது அவநுதி யாயிற்று .

## 14.6 சிலேடையணி - வகை

ஒருவகைச் சொற்றொடர் பலபொருள் பெற்றி

தெரிவுதர வருவது சிலேடை யாகும்.

ஒருவகையாய் முறையானே நின்ற தொடர்ச்சொல் பலபொருள்களது தன்மை தெரிய வருவது. சிலேடை என்னும் அணியாகும்.

பொருத்தம்: “சிலேடை“என்னாது “ஆகும்” என்றதனால் , தொடர்ச் சொல்லேயன்றி ஒரு சொல்லே பலபொருட்பெற்றி தெரிவுதர வருவதும் அணியாகும்

**சிலேடையணியின் வகை:**

அதுவே

செம்மொழி பிரிமொழி யெனவிரு திறப்படும்.

அச்சிலேடை செம்மொழிச் சிலேடையும், பிரிமொழிச் சிலேடையும் என இருவகைப்படும்.

### 14.6.1 செம்மொழிச்சிலேடை

ஒருவகையாய் நின்று பலபொருள் படுவது. அதாவது சொற்கள் ஒவ்வொரு பொருள் படும் பொழுதும் பிரிவதில் மாறுபடுதலின்றி, ஒரே நிலையில் பிரிந்து பொருள் தருவது.

“செங்கரங்க ளானிரவு நீக்குந் திறம்புரிந்து

பங்கய மாதர் நலம்பயிலப் - பொங்குதயத்(து)

ஓராழி வெய்யோன் உயர்ந்த நெறியொழுகும்

நீராழி நீணிலத்து மேல்”

விளக்கம்: சூரியன் சிவந்த கரங்களால் இருள் நீக்கம் திறம் பெற்றது. தாமரை விரும்பப்படும் சிறப்ப மிக்கது. மேல் நோக்கிய தோற்றத்தினை உடையது. ஒற்றைச் சக்கரத்தால் ஆகிய தேரில் ஊர்ந்து வருவது.கடலால் சூழப்பட்ட இவ் உலகில் மேல் அமைந்த வான வெளியில் ஊர்ந்து வருவது.

சோழன் தன் சிவந்த கரங்களால் இவ் உலகில் உள்ளோரின் வறுமையைத் தீர்ப்பவன். தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளின் செல்வத்தைப் பெற்றவன். மேம்பட்டு நின்ற செல்வத்தைப் பெற்றவன்.தனித்த ஆணைச்சக்கரத்தை உடையவன்.கடல் சூழ்ந்த உலகில் உயர்ந்த நெறியில் ஒழுகியவன்.

பொருத்தம்: இப்பாடலிலுள்ள தொடர்கள் சூரியன், சோழன் ஆகிய இருவருக்கும் பொருந்துவதா யிருப்பதால் சிலேடை யாயிற்று. இத்தொடர்கள் சூரியன் சோழன் ஆகிய இருவர்க்கும் ஒரே நிலையில் செம்மையாகப்) பிரிந்து பொருள்படுதலால் செம்மொழிச் சிலேடையு மாயிற்று.

## 14.6.2 பிரிமொழிச்சிலேடை

ஒருவகையாய் நின்ற சொல்லைப் பிரித்துத் தொகை வேறுபடுத்துப் பல பொருளாகக் கொள்வது.

:தள்ளா விடத்தேர் தடந்தா மரையடைய

எள்ளா வரிமா னிடர்மிகுப்ப - உள்வாழ்தேம்

சிந்துந் தகைமைத்தே எங்கோன் திருவுள்ளம்

நந்துந் தொழில்புரிந்தார் நாடு "

விளக்கம்: அழகு கெடாத நிலங்களில் உண்டாய எருது பெரிய தாமரையைப் பொருந்தவும்,நெற்சூட்டை உழவர் திரட்டவும், அத்தாமரை மலரில் உண்டாகிய தேன்பொழியும் பெருமையை உடையது சோழனுடைய திருவுள்ளம் சிறக்கும்வகை ஏற்றுக் கொண்டோர் நாடு.

அசையாத விடத்தேர் என்னும் மரமுடைத்தாய், பெரிய மலைச் சிகரங்களைத் தாவும் மான்களை இகழப்படாத சிங்கங்கள் துன்பமுறுத்தவும் பட்டு நல்லோர் உள்ளங்களில் வாழும் நாடுகள் எல்லாம் அழிவுபடுந் தன்மையை உடையதாம் சோழனோடு முரண்பட்டோர் நாடு என்பதாம்.இது சோழனுடைய மனம் களிக்கும்படி நடந்தோருடைய நாட்டிற்கும், அவன் மனம் வெறுக்கும்படி நடந்தோருடைய நாட்டிற்கும் சிலேடை.

பொருத்தம்: :இப்பாடலிலுள்ள தொடர்கள் சோழனின் நட்பு நாடு, பகை நாடு ஆகிய இரண்டற்கும் பொருந்துவதால் சிலேடை யாயிற்று.

இத்தொடர்கள் சோழனின் நட்பு நாட்டிற்கு ஆங்கால் ஒருவிதமாகவும், பகை நாட்டிற்கு ஆங்கால் வேறொரு விதமாகவும் பிரிந்து பொருள் படுவதால், இது பிரிமொழிச் சிலேடை யாயிற்று.



## 14.6.3 சிலேடை விரி:

ஒருவினை பலவினை முரண்வினை நியமம்

நியம விலக்கு விரோதம் அவிரோதம்

எனும்எழு வகையினும் இயலும் என்க.

அச்சிலேடை, ஒருவினைச் சிலேடை, பலவினைச் சிலேடை, முரண்வினைச் சிலேடை, நியமச் சிலேடை, நியம் விலக்குச் சிலேடை, விரோதச் சிலேடை, அவிரோதச் சிலேடை என்னும் ஏழு கூறுபாட்டான் நடக்குமென்று சொல்லுவர் நூலோர் என்பதாம்.

### 14.6.3.1 ஒருவினைச்சிலேடை

ஒருவினைச்சிலேடை என்பது ஒரு வினையான் வருவது.

“அம்பொற் பணைமுகத்துத் திண்கோட் டணிநாகம்

வம்புற்ற வோடை மலர்ந்திலங்க - உம்பர்

நவம்புரியும் வானதியும் நாண்மதியும் நண்ணத்

தவம் புரிவார்க்(கு) இன்பம் தரும்”

பொலிவுடைய பருத்த முகத்தில் திண்ணிய கோட்டை உடையதாய் அழகு பெற்றிருந்த யானையானது கச்சோடு கட்டிய பட்டம் விரிந்து விளங்கியது. முடிமீது ஒளிமிக்குப் பெரிதாகிய கங்கையும் இளம்பிறையும் பொருந்த வந்து அமைந்தது. தவம் செய்வோர்க்கு வேண்டிய இந்திர பதங்கள் முதலாகிய இன்பங் கொடுக்கும் தன்மை வாய்ந்தது.

அழகிய பொன்னோடு கூடிய மூங்கில் நெருங்கிய பக்கமுடைத்தாய்த் திண்ணிய சிகரங்களையும் உடைத்தாய் விளங்குவது இமயமலை. அழகு பெற்ற மலை வாசனை கமழும் ஓடை பூத்து விளங்கத் தன்மீது ஒளி மிக்குப் பெரிதாகிய கங்கையும் பிறையும் மருவும்படி உயர்ந்து தவம் செய்வோர்க்கு அவர் வேண்டிய பொருள்கள் எல்லாம் கொடுக்கும் வாய்ந்ததுவும் அத்தகைய மலையே ஆகும்.

இது விநாயகருக்கும் மலைக்கும் சிலேடை,

பொருத்தம்: இப்பாடலிலுள்ள தொடர்கள் விநாயகர், மலை ஆகிய இரு பொருள்களுக்கும் பொருந்தி, இறுதியில் “இன்பம் தரும், என்னும் ஒரு வினையால் முடிந்திருப்பதால், இது ஒருவினைச் சிலேடையாயிற்று.

### 14.6.3.2 பலவினைச்சிலேடை:

பலவினைச்சிலேடை என்பது பலவினையால் வருவது.

"தவிரா மதுவுண் களிதளிர்ப்ப நீண்டு
செவிமருவிச் செந்நீர்மை தாங்கிக் - குயிலிசையும்
மின்னுயிரா நுண்ணிமையார் மென்னோக்கு மேவலார்
இன்னுயிரை யீர்க்கின் றன"

விளக்கம்: குயிலின் குரலானது இடைவிடாமல் மது உண்ண வந்த களிப்பால் நீண்டொலித்தது. செவியின் உள்ளே புகுந்து நிறைந்தது. கோடாத இயல்பினைப் பெற்றது. பிரிந்தோர் உயிர்களை வருத்தும் தன்மை கொண்டது.

மின்னலைப் போன்ற நுண்ணிய இடையினை உடையவர்கள் பெண்கள்.அவர்களின் கண்கள் மென்மையானவை.அவை விடுதற்கு அரிய கள்ளை உண்ட மயக்கத்தால் தழைத்தவை. செவியளவும் நீண்டு சென்றவை. சிவந்த குளிர்ச்சியை உடையவை. தம்மைப் புணராத தலைவனின் இனிய உயிருக்குத் துன்பம் தருபவை.

இது குயில்குரலுக்கும் மடவார் கண்ணுக்கும் சிலேடை.

பொருத்தம்:இப்பாடலிலுள்ள தொடர்கள் குயிலின் குரல், பெண்களின் கண்கள் ஆகிய இரண்டற்கும் பொருந்தி, அவையிரண்டும் இடையிடையே நீண்டு, மருவி, தாங்கி,ஈர்க்கின்றன என்ற பல வினைகளோடும் இயைந்து பொருள்படுவதால், இது பலவினைச் சிலேடையாயிற்று.

### 14.6.3.3 முரண்வினைச்சிலேடை:

முரண்வினைச்சிலேடை என்பது மாறுபட்ட வினையால் வருவது.

"மாலை மருவி மதிதிரிய மாமணஞ்செய்
காலைத் துணைமேவ லார்கடிய - வேலைமிசை
மிக்கார் கலியடங்கா தார்க்கும் வியன்பொழில்கள்
புக்கார் கலியடங்கும்புள்.

விளக்கம்: மயக்கத்தை பொருந்தியதால் கருத்து வேறுபட்டவர் காதலர். மணங்கமழும் காலத்து தந்துணைவரைப் பொருந்தாமல் இருந்தனர், அவர்கள் அஞ்சக் கரைமீது கடல் பொங்கி ஆர்ப்பரித்தது.

மாலைப்பொழுதினைப் பொருந்தி திங்கள் உலவியது. மிக்கிருந்த கூட்டத்தினைச் செய்யும் காலத்தில் தம் தலைவரைப் பொருந்தினோராய் ஆடவரும் பெண்டிரும் விளங்கினர். அவர்கள் மகிழும் படியாக கடலானது

கரைமீது வந்து பொங்கியது. ஆகன்ற பொழிகளிடத:து பறவைகள் ஒலியடங்கின.



இது பிரிந்தார்க்கும் புணர்ந்தார்க்கும் சிலேடை.

பொருத்தம்: இப்பாடலிலுள்ள தொடர்கள் துணைவரைப் பிரிந்தார்க்கும், புணர்ந்தார்க்கும் பொருந்தி, ஆர்க்கும் அடங்கும் என்ற முரண்பட்ட வினைகளோடு இயைந்து பொருள்படுவதால், இது முரண்வினைச் சிலேடையாயிற்று.

### 14.6.3.4 நியமச்சிலேடை:

நியமச்சிலேடை என்பது சிலேடித்தவற்றை நியமஞ் செய்வது.அதாவது பல பொருள்களுக்கு இயையுமாறு சொற்களையும் சொற்றொடர்களையும் அமைத்து, அப்பொருள்களுள் சிலேடித்த பொருளாகிய ஒன்றற்கே தேற்றேகாரம் கொடுத்து வரையறைப் படுத்தி உரைப்பது இதன் இலக்கணமாகும்,

“வெண்ணீர்மை தாங்குவன முத்தே வெறியவாய்க்

கண்ணீர்மை சோர்வ கடிபொழிலே - பண்ணீர்மை

மென்கோல யாழே யிரங்குவன வேல்வேந்தே.!

நின்கோல் உலாவு நிலத்து”

விளக்கம்: வேந்தனே! நின் செங்கோல் உலாவும் உலகத்து வெண்மை நிறத்தை உடைத்தாய் இருப்பன முத்துக்களே. மணம் மிகுந்து தேன் சொரிய நிற்பன பெரிய பொழில்களே. குளிர்ந்த ஓசையை உடைத்தாய் அழகோடு கூடி மெல்லிதாய்ப் பிறர்க்கு மனக் உருக்கத்தினைக் கொடுப்பன யாழே என்பனவுமாய் அமைந்தமையால் கூறப்பட்ட இவை நீங்கலாக அறிவின்மை தாங்குவதும், மிடியை உடைமையால் கண்ணீர் சொரிவதும், பிறர் மனம் தளர்வதும் இல்லை என்பது விளங்கி நின்றது.பொருத்தம்: இப்பாடலில் வெண்ணீர்மை, வெறியவாய், கண்ணீர்மை, இரங்குவன என்ற சொற்கள் பல பொருள்களிக்கியையுமாறு புணர்க்கப்பட்டு, அப்பொருள்களுள் சிலேடித்த பொருள்களாகவுள்ள முத்து, பொழில், யாழ் என்பனவற்றிற்கே தேற்றேகாரம் கொடுத்து வரையறுக்கப்பட்டுள்ளமையின் இது நியமச் சிலேடையாயிற்று.

### 14.6.3.5 நியமவிலக்குச்சிலேடை

நியமவிலக்குச்சிலேடை என்பது சிலேடித்த பொருளை நியமஞ்செய்து அந்நியமத்தை விலக்குவது.

“சிறைபடுவ புட்குலமே தீம்புனலும் அன்ன

இறைவநீ காத்தளிக்கும் எல்லை - முறையில்

கொடியன குன்றத்தின் மாளிகையே யன்றிக்

கடியவிழ்பூங் காவு முள".

விளக்கம்: தலைவனே! நீ காத்தளிக்கும் உலகில் சிறை ( சிறககள் ) உடைத்தாய் இருப்பன பறவை இனங்களே, அன்றித் தீம்புனலும் அன்ன என்றதனால் தித்தித்த புனல்களும் சிறையுடையன. கொடியை உடையன குன்றம் போன்ற மாளிகைகளே; அன்றிக் பூங்காவு முள" என்றதனால் மணம் பரந்த பூவைஉடைத்தாகிய சோலைகளும் கொடியை யுடையன என்பதும் வெளிப்பட்டு நிற்கும்.

இதனால் சிறைபடுதலும் கொடுமையும் மன்னன் காக்கின்ற நிலத்தின் கண்இல்லை எனபது வெளிப்பட்டு நின்றது..

பொருத்தம்:இப்பாடற்கண் ஈரிடத்து நியம விலக்குச் சிலேடையுள்ளன அவை முறையே சிறைபடுவ என்ற தொடரைச் சிலேடைப் பொருள்படுமாறு அமைத்துப் புட்குலமே என முன்னர் நியமித்தவாறும் பின் அதனைத், "தீம்புனலும் அன்ன" என்ற தொடரால் விலக்கியவாறுமாய் அமைந்தது முதலிடம் ஆகும். கொடியன" என்ற சொல்லைச் சிலேடைப் பொருள்படுமாறு அமைத்துக் குன்றத்தின் மாளிகையே என முன்னர் நியமித்தவாறும், பின் அதனைக் கடியவிழ் பூங்காவுமுள" என்ற தொடரால் விலக்கியவாறு அமைந்தது இரண்டாம் இடம் ஆகும்..

### 14.6.3.6 விரோதச்சிலேடை

விரோதச்சிலேடை என்பது முன்னர்ச் சிலேடித்தவற்றைப் பின்னர் விரோதிப்பச் சிலேடிப்பது.அதாவது எடுத்துக் கூறப்படும் இருபொருள்களில் ஒன்றற்கு விரோதமானவற்றை பின்னே அமைத்துக் கூறுவது விரோதச் சிலேடை ஆகும்.

"விச்சா தரனேனு மந்தரத்து மேவானால்

அச்சுத னேனுமம் மாயனலன்- நிச்ச

நிறைவான் கலையா னகளங்க னீதி

இறையா னநகனெங் கோ"

விளக்கம்: விஞ்சையர் ஆகாயத்தில் பொருந்துவர் எனினும் துன்பம் அடைவர். ஆனால் ஆகாயத்தில் பொருந்தமாட்டான். எனினும் சோழன் துன்பம் அடையான். திருமால் மாயம் உடையான் ஆதலால் மாயன் எனப்படான். ஆனால் மாயம் செய்யாத மன்னனும் மாயன் எனப்பட்டான். நாடோறும் நிறைந்த வெண்மை அடையும் கலைகளை உடையனாகிய சந்திரன் களங்கம் உடையவன்; நாடோறுங் கலைநூல்களால் பெருக்கம்

உடையனேனும் சோழன் அகளங்கள் எனப்பட்டான்; முக்கட்கடவுள் பொருப்பு உடையன் ஆதலால் நகன் எனப்பட்டான்; சோழனாகிய எங்கோன் தீவினை இன்மையால் அநகன் எனப்பட்டான்.

பொருத்தம்:இப்பாடற்கண் அடிதோறும் இவ்வணி அமைந்துள்ளது. "விச்சாதரன்" என்னும் சொல் விஞ்சையனுக்கும், சோழனுக்கும் பொருந்துவதால் சிலேடையாம். அது விஞ்சையன் என்னும் பொருள்படுங்கால் ஆகாயத்தில் பொருந்தமாட்டான் என்பது விரோதமாய் இருத்தலின் விரோதச் சிலேடையாம். விஞ்சையன் என்பான் விண்ணகத் தியங்குபவன் ஆவான். "அச்சுதன்" என்னும் சொல் திருமாலுக்கும் சோழனுக்கும் பொருந்துவதால் சிலேடையாம். அது திருமாலுக்காங்கால் மாயஞ் செய்யான் என்னும் தொடருடன் முடிதல் விரோதமாய் இருத்தலின் விரோதச்சிலேடையாம்.நிறை வான் கலையான் என்னும் தொடர் சந்திரனுக்கும் சோழனுக்கும் பொருந்துவதால் சிலேடையாம் அது சோழனுக்காங்கால் களங்கத்தை யுடையவன் என்னும் சொல்லோடு முடிதல் விரோதமாய் இருத்தலின் விரோதச் சிலேடையாம். நீதி இறையான்" என்னும் தொடர் இறைவனுக்கும் சோழனுக்காங்கால் தீவினை யுடையவன் என்னும் சொல்லுடன் முடிதல் விரோதமாய் இருத்தலின் விரோதச் சிலேடை ஆயிற்று.

### 14.6.3.7 அவிரோதச்சிலேடை

அவிரோதச்சிலேடை என்பது முன்னர்ச் சிலேடித்த பொருளைப் பின்னர் விரோதியாமல் சிலேடிப்பது.அதாவது எடுத்துக் கூறப்படும் இரு பொருள்களில் ஒன்றற்கு ஒன்று விரோதமின்றி அவ்வப் பொருள்களுக்கும் ஏற்ப பின்னருள்ளதொடரை அமைத்துக் கூறுவது அவிரோதச் சிலேடையாம்.

சோதி யிரவி கரத்தான் இரவொழிக்கும்

மாதிடத்தான் மன்மதனை மாறழிக்கும்-மீதாம்

அனகமதி தோற்றக் குமுதம் அளிக்கும்

தனதன் இருநிதிக்கோன் தான்"

விளக்கம்:ஒளியினை உடைய கதிரவன் தன் கதிர்களாலே இருளை நீக்குவான்; புகழை உடையனாய் இரவிகுலத்தில் தோன்றிய இரவி என்னும். பெயரினையுடையனாய் சோழன் கைகளாலே பிறருடைய வறுமையைத் தீர்ப்பான்; உமாதேவியை இடப்பாகத்திலுடையவன் காமனைமாறாக்கி அழிப்பான்; இவன் மிகுந்த திட்பம் உடையனாதலால் மன்னவர் வலியினை மாறுகொண்டு கெடுப்பான்; ஆகாயத்தில் தோன்றிய குற்றமற்ற மதி உதயம் செய்து குமுதங்களை ( அல்லி மலர்களை ) மலரச்செய்யும். இவன் மேலாய குற்றமற்ற அறிவு தோன்றிப் பூதலத்துக்கு ஏற்ற மகிழ்ச்சியைக் கொடுப்பான்; குபேரன் தனதன் என்னும் பெயரை உடையவனாய சங்கமநிதி, பதுமநிதி என்னும்

இருநிதிக்குத்தலைவனாவான். மன்னனும் பிறருக்குப் பொருளை அளித்துமிக்க பொருளுக்குமுதல்வன் என்னப்படுவான்.

பொருத்தம்: இப்பாடலில் அடிதொறும் இவ்வணி அமைந்துள்ளது."சோதியிரவி" என்னும் தொடர் சூரியனுக்கும், சோழனுக்கும் பொருந்துவதால் சிலேடையாம். அது கரத்தான் இரவொழிக்கும்" என்னும் தொடரோடு முடியுங்கால் விரோதமின்றி இருபொருளுக்கும் ஒப்ப அமைதலின் அவிரோதச் சிலேடையாயிற்று

"மாதிடத்தான்" என்னும் தொடர் சிவபெருமானுக்கும், சோழனுக்கும் பொருந்துவதால் சிலேடையாம். அது மன்மதனை மாறழிக்கும் என்னும் தொடரோடு முடியுங்கால் விரோதமின்றி இரு பொருளுக்கும் ஒப்ப அமைதலின் அவிரோதச் சிலேடை யாயிற்று.

"மதி" என்னும் சொல் சந்திரனுக்கும், சோழனுடைய அறிவுக்கும் பொருந்துவதால் சிலேடையாம். அது "குமுதம் அளிக்கும்" என்னும் தொடரோடு முடியுங்கால் விரோதமின்றி இரு பொருளுக்கும் ஒப்ப அமைதலின் அவிரோதச்சிலேடை யாயிற்று.

"தனதன்" என்னும் சொல் குபேரனுக்கும், சோழனுக்கும் பொருந்துவதால் சிலேடையாம் அது. இருநிதிக்கோன்" என்னும் தொடரோடு விரோதமின்றி இருபொருளுக்கும் ஒப்ப முடிதலின் அவிரோதச் சிலேடையாயிற்று.

## 14.7 விசேடவணி:

குணந்தொழில் முதலிய குறைபடு தன்மையின்

மேம்பட ஒருபொருள் விளம்புதல் விசேடம்

விளக்கம்: குணமும், தொழிலும், சாதியும், பொருளும், உறுப்பும் முதலாயின குறைபடுதல் காரணமாக, ஒரு பொருட்கு மேம்பாடு தோன்ற உரைப்பது விசேடம் என்னும் அணியாகும்.

### 14.7.1 குணக்குறை விசேடம்

"கோட்டம் திருப்புருவங் கொள்ளா அவர்செங்கோல்

கோட்டம் புரிந்த கொடைச்சென்னி - நாட்டம்

சிவந்தன வில்லை திருந்தார் கலிங்கம்

சிவந்தன செந்தீத் தெற

விளக்கம்:கொடை நலமுடைய சோழனுடைய அழகிய புருவங்கள் கோட்டத்தைக் கொள்ளவில்லை. ஆனால் அதற்குள் அவனுடைய பகைவர்களின் செங்கோல் கோட்டத்தை அடைந்து விட்டன.



குறிப்பு

அச்சோழனுடைய கண்கள் சிவக்கவில்லை; ஆனால் அதற்குள் அவனுடைய பகைவர்களின் கலிங்கநாடு எரியுற்றுச் சிவந்து விட்டன என்பதாம்.

பொருத்தம்: சோழன் தன் பகைவர் நாட்டை அழிக்க வேண்டுமாகில், முதலில் அவனுக்குச் சினம் ஏற்பட வேண்டும். அச்சினம் உண்மையை அறிவிக்கும் குணங்களாய கோடுதலும், சிவத்தலும் சோழனுக்கு ஏற்படுவதற்கு முன்னமேயே பகைவர்நாடு அழிந்து விட்டன என்பதால் இது குணக்குறை விசேடமாயிற்று. குணத்தால் குறை விருப்பினும், செயலால் மேம்படுதலின் இது குணக்குறை விசேடமாம்.

## 14.7.2 தொழிற்குறை விசேடம்

ஏங்கா முகில்பொழியா நாளும் புனல்தேங்கும்

பூங்கா விரிநாடன் போர்மதமா - நீங்கா

வளைபட்ட தாளணிகள் மாறெதிர்ந்தார்க் கந்நாள்

தளைபட்ட தாள்தா மரை"

விளக்கம்: மழை பெய்யாத நாளும் நீரோடும் காவிரியாற்றை உடைய சோழனுடைய போரில், யானைகளின் கால்களெல்லாம் கழலாதபடி வளைத்திடப்பட்ட வீரக்கழல் பூண்டன; இவை இவ்வண்ணம் செய்ய, மாறுபட்ட மன்னவர் கால்களாகிய தாமரைகள் எல்லாம் தளையாகிய விலங்கு பூண்டன என்பதாம்.

பொருத்தம்: மேகம் மழையைச் பெய்தலாகிய தொழிலை செய்தால் அன்றி ஆற்றில் தண்ணீர் நிறையாது. அது போல யானை முதலிய படைகள் வீரக்கழல் பூண்டு போரிடுதலாகிய தொழிலை நிகழ்த்தினாலன்றிப் பகைவரைச் சிறையிலடைத்தல் என்பது இயலாது. எனினும் இப்பாடற்கண் அவ்வத்தொழில் நிகழும் முன்னமேயே, அவ்வச் செயல்கள் நிகழ்ந்துவிட்டன எனக் கூறுவதால், இது தொழிற்குறை விசேட மாயிற்று.

## 14.7.3 சாதிக்குறை விசேடம்

"மேய நிரைபுரந்து வெண்ணெய் தொடுவுண்ட

ஆயனார் மாறேற்(று) அமர்புரிந்தார் - தூய

பெருந்தருவும் பின்னுங் கொடுத்துடைந்தார் விண்மேற்

புரந்தரனும் வானோரும் போல்"

விளக்கம்: பொருந்திய ஆனிரைகளைக் காத்து வெண்ணெயைத் தோண்டி அதனை எடுத்துண்ட இடைக்குலத்தினராய கண்ணபிரான் தேவர்களுடன்

எதிர்த்துப் போர் செய்தார். அது பொழுது விண்ணுலகிலுள்ள இந்திரனும் ஏனைய தேவர்களும் அப்போருக்கு ஆற்றாது தூய பாரிசாதம் என்னும் கற்பகத்தருவையும், தமது முதுகையும் கொடுத்தர்கள் என்பதாம்.

பொருத்தம்: கண்ணபிரான் இடைக்குலத்தில் தோன்றினர் என்பதால் சாதிக்குறைவு தோன்றினும், தேவகுலம் அனைத்தையும் வென்றார் என்பதால் மேம்பாடு தோன்றலின் , இது சாதிக்குறை விசேடமாயிற்று

## 14.7.4 பொருட்குறை விசேடம்:

“தொல்லை மறைதேர் துணைவன்பால் ஆண்டுவரை

எல்லை யிருநாழி நெற்கொண்(டு) ஓர் - மெல்லியலாள்

ஓங்குலகில் வாழும் உயிரனைத்து ஊட்டுமால்

ஏங்கொலிநீர்க் காஞ்சி யிடை”

விளக்கம்: நீர்வளம் மிக்க காஞ்சீபுரத்தில், மென்மைத்தன்மை உடைய ஒப்பற்ற பெருமையுடைய உமையம்மையார், பழமையான வேதங்களும் அறிதற்கரிய தன்னுடைய தலைவனான சிவபெருமானிடத்தே இருநாழி நெல்லைப்பெற்று அது கொண்டு ஓராண்டு அளவும் உலகுயிர்கள் அனைத்திற்கும் உணவூட்டிப் பாதுகாப்பளாயினள் என்பதாம்.

பொருத்தம்: இப்பாடலில் இருநாழி நெற்கொண்டு என்பதால் பொருட் குறைவு தோன்றிடினும், உயிரனைத்திற்கும் ஊட்டும் என்பதால் மேம்பாடு தோன்ற உரைத்திருப்பதால் அது பொருட்குறை விசேடமாயிற்று.

## 14.7.5 உறுப்புக்குறை விசேடம்

“யானை இரதம் பரியாள் இவையில்லை

தானும் அனங்கன் தனுக்கரும்பு - தேனார்

மலரைந்தி னால்வென் றடிப்படுத்தான் மாரன்

உலகங்கள் மூன்றும் ஒருங்கு”

விளக்கம்:மன்மதனுக்கு யானை, தேர், குதிரை, காலாள் ஆகிய நால்வகைப் படைகளும் இல்லை. அவனும் உடம்பு இல்லாதவன். அவனுடைய வில்லோ வலிமையற்ற கரும்பு. அங்ஙனம் இருந்தும் தேன் நிறைந்த ஐந்து மலர்களினாலேயே மூவுலகையும் ஒருங்கே வென்று அடிப்படுத்தினான் என்பதாம்

பொருத்தம்: உலகம் மூன்றையும் ஒருங்கு அடிப்படுத்தற்கான உறுப்புகள் ஒன்றும் இல்லாத குறையிருப்பினும், அவற்றை வென்று அடிப்படுத்தான் என மேம்பாடு கூறினமையின் இது உறுப்புக்குறை விசேடமாயிற்று.

குறிப்பு

## 14.8 ஒப்புமைக் கூட்டவணி - விரி

கருதிய குணத்தின் மிகுபொருள் உடன்வைத்(து)

ஒருபொருள் உரைப்ப(து) ஒப்புமைக் கூட்டம்.

புலவர் ஒரு பொருளைச் சொல்லுமிடத்தில் தான் கருதிய குண முதலாயினவற்றால் மிக்க பொருளைக் கூடவைத்துச் சொல்லுவது ஒப்புமைக் கூட்டம் என்னும் அணியாகும்.

**ஒப்புமைக் கூட்டவணியின் விரி**

புகழினும் பழிப்பினும் புலப்படும் அதுவே.

இவ் அணி ஒன்றனைப் புகழ்தற்கண்ணும், பழித்தற்கண்ணும் தோன்றும்.

### 14.8.1 புகழ் ஒப்புமைக்கூட்டம்

"பூண்தாங்கு கொங்கை பொரவே குழைபொருப்பும்

தூண்டாத தெய்வச் சுடர்விளக்கும் - நாண்தாங்கு

வண்மைசால் சான்றவரும் காஞ்சி வளம்பதியின்

உண்மையால் உண்டிவ் வுலகு"

விளக்கம்: உமையம்மையின் மார்புகள் அழுந்துவதால் மேனி குழைந்த திருவேகாம்பர நாதரும், தூண்ட வேண்டாத தெய்வத்தன்மை பொருந்திய திருநந்தா விளக்கும், பிறர் நாணத்தக்க கொடைத்தன்மை வாய்ந்த சான்றவரும், காஞ்சீபுரம் என்னும் வளம் பொருந்திய நகரில் உள்ளமையால் இவ்வுலகம் நிலைபெற்றிருக்கின்றது.

பொருத்தம்: புகழத்தக்க இப்பொருள்கள் மூன்றும் ஒருங்கு தொகுத்துக் கூறப்பட்டிருத்தலின் இது புகழ் ஒப்புமைக் கூட்டமாயிற்று .

### 14.8.2 பழிப்பு ஒப்புமைக்கூட்டம்

"கொள்பொருள் வெ.்.கிக் குடியலைக்கும் வேந்தனும்

உள்பொருள் சொல்லாச் சலமொழி மாந்தரும்

இல்லிருந்(து) எல்லை கடப்பாளும் இம்மூவர்

வல்லே மழையருக்கும் கோள்”

விளக்கம்: பொருளுக்கு ஆசைப்பட்டுத் தன்கீழ் உள்ள குடியை துன்பம் செய்யும் அரசனும், உண்மை சொல்லாது சலம் பற்றி வெல்ல வழக்குச் சொல்லுவாரும், ஒருவன் இல்லிருந்து அவ்வெல்லை கடக்கின்ளற இல்லாளும் ஆகிய இம்மூவராலும் இவ்வுலகத்துக் காலமழை அருகும்.

பொருத்தம்: இப்பாடற்கண் பழிக்கத்தக்க பொருள்கள் மூன்றும் ஒருங்கு தொகுத்துக் கூறப்பட்டுள்ளமையின், இது பழிப்பு ஒப்புமைக் கூட்டமாயிற்று.

## 14.9 விரோதவணி:

மாறுபடு சொற்பொருள் மாறுபாட்(டு) இயற்கை

விளைவுதர உரைப்பது விரோத மாகும்.

மாறுபட்ட சொல்லானும், பொருளானும் மாறுபாட்டுத் தன்மை விளைவு தோன்ற உரைப்பது விரோதம் என்னும் அணியாகும்.

## 14.9.1 சொல் விரோதம்

“காலையும் மாலையும் கைகூப்பிக் கால்தொழுதால்

மேலை வினையெல்லாம் கீழவாம் - கோலக்

கருமான்தோல் வெண்ணீற்றுச் செம்மேனிப் பைந்தார்ப்

பெருமானைச் சிற்றம் பலத்து”

விளக்கம்: அழகிய கருமையான யானைத் தோலையும், வெண்மையான திருநீற்றையும், சிவந்த திருமேனியையும், பசுமையான கொன்றை மாலையையும் உடைய சிவபெருமானைச், சிற்றம்பலத்தில் காலை,மாலை ஆகிய இரண்டு வேளைகளிலும் கைகளைக் கூப்பித் தொழுதால் முன்செய்த வினைகள் யாவும் கீழ்மைப்படும்

பொருத்தம்: இப்பாடற்கண் காலை,மாலை; கைகூப்புதல், கால் தொழுதல்; மேல் கீழ்; கருமை, வெண்மை; செம்மை, பசுமை என்ற சொற்கள் ஒன்றோடொன்று மாறுபட்டு விரோதப்பட இருத்தலின், இது சொல் விரோதமாயிற்று.



குறிப்பு

குறிப்பு

## 14.9.2 பொருள் விரோதம்

"சோலை பயிலுங் குயில்மழலை சோர்ந்தடங்க
ஆலும் மயிலினங்கள் ஆர்த்தெழுந்த - ஞாலம்
குளிர்ந்த முகில்கறுத்த கோபஞ் சிவந்த
விளர்ந்த துணைபிரிந்தார். மெய்"

விளக்கம்:சோலைகளில் குயில்களின் அழகிய சொற்கள் சோர்வுற்று அடங்க, மயில் கூட்டங்கள் ஆராவரித்து எழுந்தன; நிலத்தின் குளிர்தற்குக் காரணமான முகில்கள் கறுத்தன; இந்திர கோபம் என்னும் பூச்சிகள் சிவந்தன; தம் துணைவரைப் பிரிந்த மகளிரின் உடல்கள் வெளுத்தன என்பதாம்.

பொருத்தம்: இது கார்கால வருணனை ஆகும். இப்பாடலில் முன் இரண்டடிகளில் பொருள் விரோதம் அமைந்துள்ளது. குயில் சொல் சோர்ந்தடங்கலும், மயிலினங்கள் ஆராவரித்து எழுதலும் ஒன்றற்கொன்று மாறுபட்ட பொருள் ஆதலின் பொருள் விரோதமாம். பின் இரண்டடிகளில் கறுப்பு, சிவப்பு, வெளுப்பு என்ற சொற்கள் ஒன்றற்கொன்று மாறுபட்டிருத்தலின் சொல் விரோதமும் ஆகும்.

இனி, இவ் அணி பிற அலங்காரங்களோடு கூடியும் வரும்

## 14.9.3 சிலேடை விரோதம்

சிலேடை அணியுடன், விரோதஅணி கூடிவரின் அது சிலேடை விரோதமாம்.

"இனமான் இகல வெளிய வெனினும்
வனமேவு புண்டரிகம் வாட்டும்-வனமார்
கரியுருவங் கொண்டும் அரிசிதறக் காயும்
லிரிமலர்மென் கூந்தல் விழி"

விளக்கம்: காட்டில் வாழும் மான் புலிகளை வருத்த வல்லவாயின; காட்டுயானை தன் வடிவைக் கொண்டும் சிங்கம் இரிந்தோடக் காயும்.இனிக் கண்களின் மேல் செல்லுங்கால், இனமாயுள்ள மான்விழி போன்று வெண்மையை உடையவாய் நீருடனே பொருந்திய தாமரை மலரை அழகழித்து, அழகமர்ந்தமை மதர்ப்புடையவாய் அரிசிதற வெம்மை செய்ய வல்லன,மலரையுடைய மெல்லிய கூந்தலையுடைய இவளுடைய விழிகள் என்பதாம்.

இது சிலேடை விரோதம் ஆகும்.

இகலுதல்-பகைத்தலும், ஒத்தலும்.

வெளிய-எளிய, வெளிய.

வனம்-காடும், நீரும்.

புண்டரிகம்-புலியும், தாமரையும்.

வனம்-காடும், அழகும்.

கரி-யானையும், மையும்.

அரி-சிங்கமும், செவ்வரியும்.

சிதறல்- அழித்தலும், பரத்தலும்.

காய்தல்-கோபித்தலும், வருத்தலும்.

என்பதாய்ச் சிலேடை விரதம் அமைந்தது.

மான் எளியது எனினும் புலியை வாட்டும் என்பதும், யானை தன் வடிவைக் கொண்டும் சிங்கம் பயந்தோடுமாறு காயும் என்பதும் இப்பாடலில் காணப்படும் பொருள் விரோதம் ஆகும். இப்பாடலில் அமைந்த சொற்கள் பலவும் சிலேடைப் பொருள்பட அமைந்துள்ளமையின் சிலேடையுமாயிற்று. இவ்வாற்றான் இது சிலேடை விரோதமாயிற்று.

## 14.10 மாறுபடுபுகழ் நிலையணி:

கருதிய பொருள்தொகுத்(து) ஆங்கது பழித்தற்கு

வேறொன்று புகழ்வது மாறுபடு புகழ்நிலை.

புலவர், தான் கருதிய பொருளை மறைத்து அதனைப் பழித்தற்கு வேறொன்றனைப் புகழ்வது மாறுபடு புகழ்நிலை என்னும் அணியாகும்.

“இரவறியா யாவரையும் பின்செல்லா நல்ல

தருநிழலும் தண்ணீரும் புல்லும் - ஒருவர்.

படைத்தனவும் கொள்ளாவிப் புள்ளிமான் பார்மேல்.

துடைத்தனவே யன்றோ துயர்.

விளக்கம்:மான்கள் பிறரிடம் சென்று இரத்தலை அறியமாட்டா, எவரிடத்தும் குறையுற்றுச் செல்லமாட்டா, ஒருவரால் நல்ல மரத்தின் நிழலையும், குளிர்ந்த நீரையும், புல்லையுமே தங்கும் இடமும், உணவுமாகத் தான் கொள்ளும்;எனவே இவை இவ்வுலகில் துன்பத்தினின்றும் நீங்கியனவன்றோ? என்பதாம்.

பொருத்தம்: இப்பாடற்கண் கவிஞன் பழிக்கக் கருதிய பொருள் இரவலரையாகும். ஆனால் அதனை மறைத்து மானைப் புகழ்ந்திருப்பதால், இது மாறுபடு புகழ்நிலை யாயிற்று.

## 14.11 புகழாப்புகழ்ச்சியணி:

பழிப்பது போலும் பான்மையின் மேன்மை

புலப்பட மொழிவது புகழாப் புகழ்ச்சி.

பழித்தல் போலும் தன்மையான், ஒன்றற்கு மேம்பாடு தோன்ற உரைப்பது புகழாப் புகழ்ச்சி. என்பதாகும்.

**குறிப்பு**

போர்வேலின் வென்றதூஉம் பல்புகழால் போர்த்ததூஉம்

தார்மேவு திண்புயத்தால் தாங்குவதூஉம் - நீர்நாடன்

தேரடிக்கூர் வெம்படையால் காப்பதூஉம் செங்கண்மால்

ஓரடிக்கீழ் வைத்த வுலகு”

விளக்கம்: சோழன் வேலினால் வென்றி கொண்டதும், பல்வேறு வகைப்பட்ட புகழால் முடியதும்,மாலையையணிந்து தோளினால் தாங்குவதும், சக்கரப்படையால் காப்பதும், சிவந்த திருக்கண்களையுடைய திருமால் தனது ஒரு திருவடியின்கீழ் அடக்கிய நிலவுலகமே யாகும் என்பதாம்.

பொருத்தம்: திருமால் தன்னுடைய ஓரடியால் அளந்த உலகையே சோழன் வேலின் வென்றும், புகழால் போர்த்தும், புயத்தால் தாங்கியும்காக்கின்றனன் என்பதால்,அவனால் காக்கப்படும் உலகம் பழிக்கப்படுவது போல் தோன்றினும், அவன் உலக முழுவதையும் காக்கின்றான் என்ற மேன்மை புலப்படுதலின், இது புகழாப் புகழ்ச்சியாயிற்று.

## 14.12 நிதரிசனவணி:

நிதரிசனம் என்பது நன்கு காண்பது . நிதரிசன அணியைத் தமிழ் நூலார் “காட்சியணி” என்பர்.

ஒருவகை நிகழ்வதற்(கு) ஓத்தபயன் பிறிதிற்குப்

புகழ்மை தீமை யென்றிவை புலப்பட

நிகழ்வ தாயின் நிதரிசன மதுவே.

ஒருவகையால் நிகழ்வது, ஒன்றற்குப் பொருந்தியதொரு பயனைப் பிறிதொன்றற்கு நன்மை புலப்பட நிகழ்வதாதல்,அல்லது தீமை புலப்பட நிகழ்வதாதல், செய்வதெனச் சொல்லுவது நிதரிசனம் என்னும் அணியாகும்..

## 14.12.1 புகழ்மை



"பிறர்செல்வம் கண்டால் பெரியோர் மகிழ்வும்
சிறியோர் பொறாத திறமும் - அறிவுறீஇச்
செங்கமல மெய்மலர்ந்த தேங்குமுத மெய்யயர்ந்த
பொங்கொளியோன் வீறெய்தும் போது"

விளக்கம்:: பிறர்தம் செல்வத்தைக் கண்டால் பெரியோர் மகிழ்வதையும், சிறியோர் அதற்குப் பொறாமை கொள்வதையும் விளக்க, கதிரவன் தோன்றும்பொழுது செந்தாமரை மலர்கள் மலர்ச்சியடைந்தன; ஆம்பல் மலர்கள் குவிந்தன என்பதனைக் காட்டிக் கூறல்,இப்பாடற்கண் இருவகை நிதரிசனம் உள்ளன.

பொருத்தம்: கதிரவனின் ஒளியைக் கண்டு தாமரை மலர்வதானது பிறர்செல்வத்தைக் கண்டால் பெரியோர் மகிழ்வர் என்பதைக் காட்டுகின்றது. இங்ஙனம் ஒரு நிகழ்ச்சியைக் கொண்டு அதன் பயனாக நன்மையான கருத்துப் பெறப்பட்டதாகக் கூறுவது. புகழ்மை நிதரிசனமாகும்.கதிரவனின் ஒளியைக் கண்டு ஆம்பல் குவிதலானது, பிறர் செல்வத்தைக் கண்டால்சிறியோர் பொறார் என்பதைக் காட்டுகின்றது . இந்நிகழ்ச்சியைக் கொண்டு இதன் பயனாகத் தீமை புலப்படக் கூறுதலின், இது தீமை நிதரிசன மாயிற்று.

## 14.12.2 தீமை

"பெரியோ ருழையும் பிழைசிறிதுண் டாயின்
இருநிலத்துள் யாரும் அறிதல் - தெரிவிக்கும்
தேக்கும் கடலுலகில் யாவர்க்குந் தெள்ளமுதம்
வாக்கு மதிமேல் மறு"

நிலவின் மீது உண்டாகிய மறு, பூமியில் பெரியோரிடத்துக் குற்றங்கள் மறைத்தற்கு அரிதாய் அனைவருக்கும் புலப்படும் என்பது தெரியச் சொல்லுவது போல் இருந்தது என்பதாம்.

பொருத்தம்: இப்பாடற்கண் மதியத்தில் உள்ள மறு யாவர்க்கும் தெரியும் என்ற நிகழ்ச்சியைக் கொண்டு மிகப் பெரியோரிடத்தும் தவறு சிறிது ஏற்படின் அதனை எல்லோரும் அறிவர் என்ற தீமைப் பயனைக் கூறலின், தீமை நிதரிசனமாயிற்று.

## 14.13 புணர்நிலையணி:

வினைபண்பு எனஇவை இருபொருட்(கு) ஒன்றே

புணர மொழிவது புணர்நிலை யாகும்.

வினையாலும் பண்பாலும் இரண்டு பொருளுக்கு ஒன்றே பொருந்தச் சொல்லுவது புணர்நிலை என்னும் அணியாகும். இது இரண்ட வகைப்படும், அவை முறையே வினைப் புணர்நிலை, பண்புப் புணர்நிலை என்பதாகும்.

### 14.13.1 வினைப்புணர்நிலை

"வேண்டுருவங் கொண்டு கருகி வெளிபரந்து

நீண்ட முகிலுடனே நீர்பொழிந்த - ஆண்டகையோர்

மேவல் விரும்பும் பெருநசையான் மெல்லாவி

காவல் புரிந்திருந்தோர் கண்"

விளக்கம்: தான் வேண்டிய உருவத்தைக் கொண்டு கறுத்த நிறத்தையுடையதாய் ஆகாயத்திலே பெரிதாய் இருக்கப்பட்ட மழை முகிலுடனே நீர் பொழியாநின்றன. பிறர் விரும்பும் தன்மையை உடைத்தாகிய உருவத்தை உடைத்தாய் அலங்கரித்து எழுதப்பட்ட மையோடு கூடிய வெண்மையான் நீண்டிருக்கப்பட்ட கண்கள் என்பதாய் வரும்.

பொருத்தம்: இப்பாடற்கண் கூறப்பட்ட பொருள் இரண்டு. (1) முகில். (2) கண். இவையிரண்டிற்கும் "நீர் பொழிந்த " என்னும் தொழில்பற்றிய ஒரு சொல்லே முடிக்கும் சொல்லாக அமைந்திருத்தலின் இது வினைப் புணர்நிலை யாயிற்று.

### 14.13.2 பண்புப்புணர்நிலை

"பூங்காவிற் புள்ளொடுங்கும் புன்மாலைப் போழ்துடனே

நீங்காத வெம்மையவாய் நீண்டனவால் - தாங்காதல்

வைக்குந் துணைவர் வருவமதி பார்த்தாவி

உய்க்குந் தமியார் உயிர்"

விளக்கம்: காதலிக்கப்பட்ட துணைவர் வருங்காலம் பார்த்திருந்த பெண்களுடைய உயிரானது, பூம்பொழிலில் பறவைகள் ஒடுங்கப்பட்ட

மாலைப் பொழுதுடனே, நீங்காத துயரஞ் செய்து, தானும் கழியாதே நின்றது..

பொருத்தம்: இப்பாடற்கண் கூறப்பட்ட பொருள்கள் இரண்டு. (1) மாலைப்பொழுது. (2) தமியார் உயிர். இவை யிரண்டிற்கும் "நீண்டன" என்னும் பண்புபற்றிய ஒரு சொல்லே முடிவாக அமைந்திருத்தலின், இது பண்புப் புணர்நிலை யாயிற்று.

## 14.14 பரிவருத்தனையணி:

பொருள்பரி மாறுதல் பரிவருத் தனையே.

பொருள்கள் ஒன்றற்கு ஒன்று கொடுத்து, ஒன்று கொண்டனவாகச் சொல்லுவது பரிவருத்தனை என்னும் அணி ஆகும்.

"காமனை வென்றோன் சடைமதியும் கங்கையும்
தாம நிழலொன்று தாங்கொடுத்து - நாமப்
பருவா ளரவின் பணமணிகள் தோறும்
உருவா யிரம்பெற் றுள"

விளக்கம்: காமனை வென்ற முக்கட் கடவுளுடைய சடைமீது இருக்கும் மதியும், கங்கையும், வருத்தம் செய்யும் தன்மை கொண்டதாய்ப் பெரிதாய் இருக்கும் ஒளியினை உடைத்தான அரவின் படங்களில் உண்டாகிய மணிகள் தோறும் தத்தம் உருவத்தைக் கொடுத்து, ஆயிரமாயிரம் உருவத்தைப் பெற்றன.

பொருத்தம்: சிவபெருமான் தலையிலுள்ள கங்கையும் மதியும், அரவின் மணிகளுக்கு முன்னே தாந்தாம் கொடுத்த நிழல் ஒவ்வொன்றே ஆயினும் அரவின் மணிகள்தோறும் அவ்வொவ்வொரு உருவமும் ஆயிரம் ஆயிரமாகக் காட்சியளித்தன என்று கூறப்படுகின்றது. இங்ஙனம் கொடுத்தது ஒன்றாய்க், கொண்டது ஆயிரமாய்ப் பரிமறிக்கொண்டிருத்தலின், இது பரிவருத்தனையாயிற்று.

## 14.15 வாழ்த்தணி:

இன்னார்க்(கு) இன்ன(து) இயைக வென்றுதாம்
முன்னியது கிளத்தல் வாழ்த்தென மொழிப .

இன்ன தன்மையை உடையார்க்கு இன்னது நிகழ்க என்று கவிகள் தாம் கருதியதனை விதிப்பது, வாழ்த்து என்னும் அணி என்று சொல்லுவர் புலவர்.

"மூவாத் தமிழ்பயந்த முன்னூல் முனிவாழி !
ஆவாழி ! வாழி அருமறையோர் ! - காவிரிநாட்(டு)

அண்ணல் அணபாயன் வாழி ! அவன்குடைக்கீழ்
மண்ணுலகில் வாழி மழை"

விளக்கம்: அழியாத தமிழைத்தோற்றுவித்த பழைய நூல்களை உணர்ந்த அகத்திய முனிவன் வாழ்க; ஆனிரைகள் வாழ்க; அரிய வேதங்களை உணர்ந்த அந்தணர்கள் வாழ்க; காவிரி சூழ்ந்த சோழ நாட்டின் தலைவனான அனபாயன் வாழ்க; அவனுடைய ஆட்சிக்கு உட்பட்ட நிலவுலகில் மழையானது என்றும் பொய்யாது வாழ்க என்பதாய் அமையும்.

குறிப்பு

பொருத்தம்: இப்பாடலில் அனபாயனுக்கும் அவனுடைய நாட்டிற்கும் இன்றியமையாதனவான மொழி, மழை, சான்றோர்கள் ஆகிய அனைத்தும் வாழ்க என வாழ்த்தியுள்ளமையால், இது வாழ்த்தணியாயிற்று .

## 14.16 சங்கீரணவணி:

மொழியப் பட்ட அணிபல தம்முள்
தழுவ உரைப்பது சங்கீ ரணமே .

மேற் சொல்லப்பட்ட அலங்காரங்கள் பலவும் தம்முள் பொருந்த உரைப்பது சங்கீரணம் என்னும் அலங்காரம் ஆகும். .

"தண்டுறைநீர் நின்ற தவத்தால் அளிமருவு
புண்டரிகம் நின்வதனம் போன்றதால் - உண்டோ !
பயின்றார் உளம்பருகும் பால்மொழியாய் ! பார்மேல்
முயன்றால் முடியாப் பொருள்"

விளக்கம்: குளிர்ந்த துறைநீரிலே தவம் புரிந்த இதனாலே வண்டு மருவப்பட்ட தாமரை நின் முகமண்டலத்தை ஒப்பப் பெறுதலால்,அணைந்தார் உள்ளத்தைக கவரும் பால் போன்ற மொழியினை உடையாய் ! உலகத்தில் முயற்சியால் முடியாத பொருள் யாதுமில்லை .

இதனுள் , "தண்டுறை நீர் நின்ற தவம்" - தற்குறிப்பேற்றம் .

"தவத்தால்" - காரகவேது .

"அளிமருவு" - சிலேடை .

"புண்டரிகம் நின்வதனம் போலும்" - உவமை .

"உண்டோ முயன்றால் முடியாப் பொருள்" - வேற்றுப்பொருள் வைப்பு .

"உளம் பருகும் பால் மொழியாய்" - சுவை .

இப்பாட்டிற்கு இவ்வண்ணமே பல அலங்காரங்களும் காண்க .

## 14.17 உவமை உருவகங்கட்குப் புறனடை:

ஒப்புமை யில்லதும் ஐயமும் உவமையில்
செப்பிய திறமும் உவம வுருவகமும்
உருவகத் தடக்கலும் உணர்ந்தனர் கொளலே.

உவமை உருவகங்களைக் குறித்து ஒரு புறனடை உணர்த்துதல் நுதலிற்று.பொதுநீங்குவமை, ஐயவுமை, இடத்திற்கேற்றது, காலத்திற்கேற்றது, பண்பிற்கேற்றது,பொருளுக்கேற்றது, மரபிற்கேற்றது என்பதாய் வரும்.

## 14.18 பாவிகவணி:

பாவிகம் என்பது காப்பியப் பண்பே.

விளக்கம்: பாவிகம் என்று சொல்லப்படுவது பொருள் தொடர்நிலைச் செய்யுள் திறத்துக் கவியால் கருதிச் செய்யப்படுவதொரு பண்பு ஆகும். இது அத்தொடர்நிலைச் செய்யுள் முழுதும் நோக்கிக் கொள்ளப்படுவதல்லது, தனித்து ஒரு பாட்டால் நோக்கிக் கொள்ளப் புலப்படாதது ஆகும்.

பிறனில் விழைவோர் கிளையொடும் கெடுப'' என்பது இராமாயணத்திலிருந்து கொள்ளப்படுவதாகும். "பொறையிற் சிறந்த கவசம் இல்லை'' என்பது மகாபாரதத்தால் அறிய வருவதாகும்.. "வாய்மையிற் கடியதோர் வாளியில்லை'' என்பது அரிச்சந்திர புராணத்தால் தெளியப்படுவதாகும்.

## பயிற்சி வினாக்கள்:

**1.செம்மொழிச்சிலேடை – விளக்குக**

ஒருவகையாய் நின்று பலபொருள் படுவது. அதாவது சொற்கள் ஒவ்வொரு பொருள் படும் பொழுதும் பிரிவதில் மாறுபடுதலின்றி, ஒரே நிலையில் பிரிந்து பொருள் தருவது.

"செங்கரங்க ளானிரவு நீக்குந் திறம்புரிந்து
பங்கய மாதர் நலம்பயிலப் - பொங்குதயத்(து)
ஓராழி வெய்யோன் உயர்ந்த நெறியொழுகும்
நீராழி நீணிலத்து மேல்"

விளக்கம்: சூரியன் சிவந்த கரங்களால் இருள் நீக்கம் திறம் பெற்றது. தாமரை விரும்பப்படும் சிறப்ப மிக்கது. மேல் நோக்கிய தோற்றத்தினை உடையது. ஒற்றைச் சக்கரத்தால் ஆகிய தேரில் ஊர்ந்து

வருவது.கடலால் சூழப்பட்ட இவ் உலகில் மேல் அமைந்த வான வெளியில் ஊர்ந்து வருவது.

சோழன் தன் சிவந்த கரங்களால் இவ் உலகில் உள்ளோரின் வறுமையைத் தீர்ப்பவன். தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளின் செல்வத்தைப் பெற்றவன். மேம்பட்டு நின்ற செல்வத்தைப் பெற்றவன்.தனித்த ஆணைச்சக்கரத்தை உடையவன்.கடல் சூழ்ந்த உலகில் உயர்ந்த நெறியில் ஒழுகியவன்.

குறிப்பு

பொருத்தம்: இப்பாடலிலுள்ள தொடர்கள் சூரியன், சோழன் ஆகிய இருவருக்கும் பொருந்துவதா யிருப்பதால் சிலேடை யாயிற்று. இத்தொடர்கள் சூரியன் சோழன் ஆகிய இருவர்க்கும் ஒரே நிலையில் செம்மையாகப்) பிரிந்து பொருள்படுதலால் செம்மொழிச் சிலேடையு மாயிற்று.

**2.புகழ் ஒப்புமைக்கூட்டம் சான்றுடன் எழுதுக.**

“பூண்தாங்கு கொங்கை பொரவே குழைபொருப்பும்

தூண்டாத தெய்வச் சுடர்விளக்கும் - நாண்தாங்கு

வண்மைசால் சான்றவரும் காஞ்சி வளம்பதியின்

உண்மையால் உண்டிவ் வுலகு”

விளக்கம்: உமையம்மையின் மார்புகள் அழுந்துவதால் மேனி குழைந்த திருவேகாம்பர நாதரும், தூண்ட வேண்டாத தெய்வத்தன்மை பொருந்திய திருநந்தா விளக்கும், பிறர் நாணத்தக்க கொடைத்தன்மை வாய்ந்த சான்றவரும், காஞ்சீபுரம் என்னும் வளம் பொருந்திய நகரில் உள்ளமையால் இவ்வுலகம் நிலைபெற்றிருக்கின்றது.

பொருத்தம்: புகழத்தக்க இப்பொருள்கள் மூன்றும் ஒருங்கு தொகுத்துக் கூறப்பட்டிருத்தலின் இது புகழ் ஒப்புமைக் கூட்டமாயிற்று .

**3.புகழாப்புகழ்ச்சியணி – சுட்டியுரைக்க.**

பழிப்பது போலும் பான்மையின் மேன்மை

புலப்பட மொழிவது புகழாப் புகழ்ச்சி.

பழித்தல் போலும் தன்மையான், ஒன்றற்கு மேம்பாடு தோன்ற உரைப்பது புகழாப் புகழ்ச்சி. என்பதாகும்.

போர்வேலின் வென்றதூஉம் பல்புகழால் போர்த்ததூஉம்

தார்மேவு திண்புயத்தால் தாங்குவதூஉம் - நீர்நாடன்

தேரடிக்கூர் வெம்படையால் காப்பதூஉம் செங்கண்மால்

ஓரடிக்கீழ் வைத்த வுலகு"

விளக்கம்: சோழன் வேலினால் வென்றி கொண்டதும், பல்வேறு வகைப்பட்ட புகழால் முடியதும்,மாலையையணிந்து தோளினால் தாங்குவதும், சக்கரப்படையால் காப்பதும், சிவந்த திருக்கண்களையுடைய திருமால் தனது ஒரு திருவடியின்கீழ் அடக்கிய நிலவுலகமே யாகும் என்பதாம்.

பொருத்தம்: திருமால் தன்னுடைய ஓரடியால் அளந்த உலகையே சோழன் வேலின் வென்றும், புகழால் போர்த்தும், புயத்தால் தாங்கியும்காக்கின்றனன் என்பதால்,அவனால் காக்கப்படும் உலகம் பழிக்கப்படுவது போல் தோன்றினும், அவன் உலக முழுவதையும் காக்கின்றான் என்ற மேன்மை புலப்படுதலின், இது புகழாப் புகழ்ச்சியாயிற்று.

**4. விசேட அணி குறித்துக் கட்டுரைக்க**

பாடப்பகுதியில் அமைந்துள்ள விசேட அணி குறித்த செய்திகளைத் தொகுத்த உரைத்தல் வேண்டும்.

**5.வாழ்த்தணி – விளக்குக.**

இன்னார்க்(கு) இன்ன(து) இயைக வென்றுதாம்

முன்னியது கிளத்தல் வாழ்த்தென மொழிப .

இன்ன தன்மையை உடையார்க்கு இன்னது நிகழ்க என்று கவிகள் தாம் கருதியதனை விதிப்பது, வாழ்த்து என்னும் அணி என்று சொல்லுவர் புலவர்.

"மூவாத் தமிழ்பயந்த முன்னூல் முனிவாழி !

ஆவாழி ! வாழி அருமறையோர் ! - காவிரிநாட்(டு)

அண்ணல் அணபாயன் வாழி ! அவன்குடைக்கீழ்

மண்ணுலகில் வாழி மழை"

விளக்கம்: அழியாத தமிழைத்தோற்றுவித்த பழைய நூல்களை உணர்ந்த அகத்திய முனிவன் வாழ்க; ஆனிரைகள் வாழ்க; அரிய வேதங்களை உணர்ந்த அந்தணர்கள் வாழ்க; காவிரி சூழ்ந்த சோழ நாட்டின் தலைவனான அனபாயன் வாழ்க; அவனுடைய ஆட்சிக்கு உட்பட்ட நிலவுலகில் மழையானது என்றும் பொய்யாது வாழ்க என்பதாய் அமையும்.

குறிப்பு

பொருத்தம்: இப்பாடலில் அனபாயனுக்கும் அவனுடைய நாட்டிற்கும் இன்றியமையாதனவான மொழி, மழை, சான்றோர்கள் ஆகிய அனைத்தும் வாழ்க என வாழ்த்தியுள்ளமையால், இது வாழ்த்தணியாயிற்று .

**6. பாவிகம் என்றால் என்ன?**

பாவிகம் என்பது காப்பியப் பண்பு ஆகும்.பிறனில் விழைவோர் கிளையொடும் கெடுப'' என்பது இராமாயணத்திலிருந்து கொள்ளப்படுவதாகும். "பொறையிற் சிறந்த கவசம் இல்லை'' என்பது மகாபாரதத்தால் அறிய வருவதாகும்.. "வாய்மையிற் கடியதோர் வாளியில்லை'' என்பது அரிச்சந்திர புராணத்தால் தெளியப்படுவதாகும்.

**மாதிரிவினாத்தாள் - I**

**அழகப்பா பல்கலைக்கழகம்**

**தொலைதூரக் கல்வி இயக்ககம்**

**பி. லிட் - தமிழ் இலக்கியம் -- இரண்டாமாண்டு – நான்காம் பருவம்**

**தாள் - 10742 - இலக்கணம் - புறப்பொருளும் அணியிலக்கணமும்**

**காலம் : 3மணி**
**மொத்த மதிப்பெண் : 75**

**பகுதி –அ**

**I. அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடைதருக: (10 x 2 = 20 )**

1.மன்னுறு தொழில் என்றால் என்ன?

2.நெடுமொழிகூறல் என்பதனைச் சுட்டுக.

3.மகள்மறுத்து மொழிதல் - இலக்கணம் தருக.

4.பாசிநிலை – குறித்துரைக்க.

5.நாண்மங்கலம் குறித்து எழுதுக.

6.இயைபுருவகம் என்றால் என்ன?

7. கூடாவியற்கை என்பது யாது?

8. காப்பியப் பண்பாய் அமையும் அணியின் பெயரைச் சுட்டுக.

9. தான்தற் புகழ்வது எவ்வணி?

10. கருதியது கிளவாது அப்பொருள் தோன்ற பிறிதொன்றுரைக்கும் அணியைக் குறிப்பிடுக.

**பகுதி – ஆ**

**II. அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடைதருக. ( 5 X 5 = 25).**

11) (அ) விரிச்சி குறித்து எழுதுக.

( அல்லது )

(ஆ) வஞ்சினக்காஞ்சி என்பதனை விளக்குக.

12 (அ ) காந்தள் - சுட்டியுரைக்க

( அல்லது )

( ஆ ) கண்படைநிலை என்பதனை சான்றுடன் தருக.

13(அ) வாயுறை வாழ்த்து – விரித்தெழுதுக

( அல்லது)

( ஆ ) புலவராற்றுப்படை - சுட்டி எழுதுக.

14 (அ) அடையும் பொருளும் அயல்பட மொழிதல் என்பது குறித்தெழுதுக.

( அல்லது)

(ஆ) தற்குறிப்பேற்ற அணி - குறிப்பிட்டுரைக்க.

15(அ) மூவாத் தமிழ் பயந்த முன்னூல் முனி வாழி – பாடலில் இடம்பெற்றுள்ள அணியை விளக்குக

( அல்லது)

15(ஆ) மாறுபடு புகழ்நிலை அணி என்பதனை வரைக.

**பகுதி - இ**

**III. எவையேனும் மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடைதருக.**
**( 3 X 10 = 30 ).**

16.வெட்சிப்படலத்தின் செய்திகளைத் தொகுத்துரைக்க.

17.வாகைப்படலத்தின் செய்திகளைக் கட்டுரைக்க.

18.பொதுவியற்பால என புறப்பொருள் வெண்பாமாலை குறிக்கும் செய்திகளை விரித்தெழுதுக.

19. உவமை அணியின் வகைகள் குறித்து கட்டுரைக்க.

20.தீவக அணியின் சிறப்புகளை விவரி.

## மாதிரிவினாத்தாள் - II

## அழகப்பா பல்கலைக்கழகம்

## தொலைதூரக் கல்வி இயக்ககம்

**பி. லிட் - தமிழ் இலக்கியம் --**
**இரண்டாமாண்டு – நான்காம் பருவம்**

**தாள் - 10742 - இலக்கணம் - புறப்பொருளும் அணியிலக்கணமும்**

**காலம் : 3மணி** **மொத்த மதிப்பெண் : 75**

**பகுதி –அ**

**I. அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடைதருக: (10 x 2 = 20 )**

1.வேய் என்றால் என்ன?

2.பெருஞ்சோற்று நிலை என்பதனைச் சுட்டுக

3.கந்தழி - இலக்கணம் தருக.

4.அறிவன் வாகை – குறித்துரைக்க

5.துயில்எடைநிலை குறித்து எழுதுக.

6. பவளத்தன்ன மேனி - இதில் பயின்று வரும் அணி யாது?

7. எண்வகை மெய்ப்பாட்டின்கண் தோன்றும் அணி எது?

8.குறிப்பு வெளிப்படுக்குஞ் சத்துவம் பிறிதின் மறைத்துரையாடல் எவ்வகை அணி?

9. சிலேடை அணியின் வகைகள் யாவை?

10. பொருள் பரிமாறுதல் எவ்வகை அணி?



குறிப்பு

## பகுதி – ஆ

**II. அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடைதருக.**
( 5 X 5 = 25).

11) (அ) பாதீடு குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பாணாற்றுப்படை என்பதனை விளக்குக.

12 (அ) கைக்கிளை - சுட்டியுரைக்க

(அல்லது)

(ஆ ) கல்காண்டல் என்பதனைச் சான்றுடன் தருக.

13 (அ) மூதின் முல்லை – விரித்தெழுதுக

(அல்லது)

(ஆ) முன்தேர்க்குரவை - சுட்டி எழுதுக.

14 (அ) நிரல்நிரை அணி குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) நுட்ப அணியின் இலக்கணத்தைச் சான்றுடன் சுட்டியுரைக்க.

15 (அ) புணர்நிலை அணி - விளக்கி எழுதுக

(அல்லது)

(ஆ) ஆர்வமொழியணி - விளக்கியுரை

## பகுதி - இ

**III. எவையேனும் மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடைதருக.**
( 3 X 10 = 30 ).

16.வஞ்சிப்படலத்தின் செய்திகளைக் கட்டுரைக்க.

17.தும்பைப் படலத்தின் துறைகளைத் தொகுத்துரைக்க.

18.காஞ்சிப்படலத்தின் கருத்துகளை விரித்து எழுதுக.

19.உவமை அணியின் வகைகள் குறித்து விவரி.

20.ஏது அணியினை விளக்கி வரைக.